JL
NR m2u N15G4
N15.1
151294

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1915
MADRAS

1915-16

உ

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-ளு ஜூலை-மீ { NO. 1.

## இந்து ஸங்கீதம்.

உலகின்கண் ஸாக்ஷாத் பரப்ரும்மமாகிய ஸர்வேச்வரன் எங்கும் நாதப்ரும்மமாகவே விளங்குகிறார். அவரில்லாத இடமில்லை யென்று அனேக சாஸ்திரங்கள் முறையிடுகின்றன இதற்கிணங்க:—

"நாதே நவ்யஜ்யதே வர்ண:
பதம்வர்ணாத் பதாத்வச்ச:
வச்சஸோவ்யவஹாரோயம்
நாதாதீனமதோஜகத்"

இதன்பொருள்:— நாதத்திலிருந்து அக்ஷரமும், அக்ஷரத்திலிருந்து சப்தமும், சப்தத்திலிருந்து விவஹாரமும் உண்டாகின்றமையால் உலகம் பூராவும் நாதரூபமாகவே விளங்குகிறது யென்று ஆன்றோர் கூறியுள்ளார் ஆனால் இதற்கு நாதம் யென்று பெயர் வருவானேனெனில்,

"நகாரம் ப்ராண நாமானம்
த்காரமவலம்விது:
ஜாத: ப்ராணாக்னி ஸம்யோகா
த்தேனநாதோபிதீயதே"

இதன்பொருள்:— நா + த = நாத, நகாரம் பிராணனென்றும் தகாரம் அக்னியென்றும், இவை இரண்டும் அதாவது பிராணனும் அக்னியுஞ்சேருவதினின்றும் நாதம் உண்டாவதாகச் சொல்லப்படுவதால் இப்பெயரிடப்பட்டிருக்கிறது.

(2) இவ்வாறு பிராணனும் அக்னியும் உலகெங்கும் நிறைந்திருப்பதால் அதனிடமாக பகவானும் நாதப்ரும்மமென்ற பெயருடன் விளங்குகிறார். ஆனால் நாதத்தின் மூலமாக பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தை தரிசிக்கவேண்டுவதைத் தவிர வேறு உபாயமில்லையோ வெனில், இதைக் காட்டிலும் எளிதான மார்க்கமில்லை யென்றே புலப்படுகிறது. உதாரணமாக ஓர் மனிதனை நாம் பிரத்தியக்ஷத்திற் காணவேண்டியதாக வைத்துக் கொள்ளுவோம். ஆனால் அவனுடைய பெயர் இன்னதென்று நமக்கு முன்னறே தெரியும். அச்சமயமுள்ள அந்தகார இருளினால் அவனை நாம் காணமுடியவில்லை. அப்பொழுது நாம் செய்யக்கூடிய உபாயம் யாது? அவனுடைய பெயரைச் சொல்லி உறக்க கூப்பிடுவோம். அந்த நாதம் அவனுடைய செவியினுட் செல்லவே இன்னார் நம்மை அழைக்கிறார்கள் யென்பதை அந்த நாதத்தின் மூலமாக அறிந்து கொண்டு அவனும் வருவதாக ஜவாப் செய்கிறான். முன்னம் ஒன்றுமே வழிதெரியாமலிருந்த நமக்கு இன்ன திசையில் நாம் வேண்டிய மனிதனிருக்கிறானென்றும், அவன் வருவதாகச் சொல்லுகிறானென்பதையுந் தெரிந்து மனதில் ஓர்வித திருப்தியை அடைகின்றோம். இன்னும் பல தடவை வேண்டிக்கொண்டால் சற்றுநேரத்தில் கோரிய மனிதனை பிரத்தியக்ஷத்திற் கண்டுகளிக்கின்றோம். அதுபோலவே பகவான் நமது ஸமீபத்திலிருந்தும் அஞ்ஞானமாகிற இருளினால் அவரை நேரில் தரிசிக்க மார்க்கமன்னியிலிருந்துகொண்டிருக்கிறது. அதற்கு உபாயம் மேற்கண்டவாறு பகவானுடைய நாமத்தைச்சொல்லி நம்மைக் காப்பாற்றும்படிக்கும் அவனது திவ்யதரிசனத்தை நமக்களிக்கும்படிக்கும் கருணைபுரியுமாறு ஸதாகாலமும் நாதோ பாஸனை செய்யவேண்டும். இதற்கிணங்க:

(3) "நாதோபாஸனையாதேவா

ப்ரும்மா விஷ்ணு மஹேச்வரா:

161294
JL
NR m 2.11, M15, GH
N15
600 008



பவந்தியுபாஸிதா நூனம்

யஸ்மாதேதே ததாத்மகா:"

இதன்பொருள்:— ப்ரும்மா, விஷ்ணு, மஹேச்வரர்கள் நிச்சயமாக நாத உபாஸனைசெய்தவர்களாகவும், நாதப்ரும்ம ஸ்வரூபமாகவும் ஆகியிருக்கிறார்கள். இன்னும் விஷ்ணுபுராணத்தில்

"காவ்யாலாபாஸ்ச்சயேகேச்சித்

கீதானிஸகலாநிச்சா

சப்தமூர்த்திதரஸ்யைதே

விஷ்ணோரம்சாமஹாத்மன:" யென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன்பொருள்:— காவியத்தைச் சொல்லுகிறவர்களும், ஸகலமான கீதங்களைப் பாடுகிறவர்களும், நாதப்ரும்மமான சரீரத்தையுடைய விஷ்ணுவினுடைய அம்சமாகயிருக்கிறார்கள்.

(4) இந்த ச்லோகத்தினாலும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ரூபமே நாதப்ரும்மமாக விளங்குகிறதென்றேற்படுகிறது. ஆனால் அவருடைய நாமங்களைச் சொல்லி உறக்கக்கூப்பிட்டால் போதாதா? எதற்காக ஸங்கீதத்தை அப்பியாசிக்க வேண்டுமெனில், "கீதத்தைமிகப்பாடு மடியார்கள் குடியாக" என்று ஆன்றோர் கூறியிருப்பதாலும், அவர்களும் அவ்வாறே அனுஷ்டித்து பகவானை பிரத்தியக்ஷத்தில் தரிசித்து ஜீவன் முக்தியடைந்திருப்பதினாலும், முன்னோர்களின் மார்க்கத்தை யனுசரிக்கவேண்டியது நமது கடமையாகிறது. மேலும் பகவானை தரிசிக்க ஏகாக்கிரசித்தம் வேண்டும். அவ்வாறு சித்தம் ஏகாக்கிரமாவதற்கு பஞ்சேந்திரியங்கள் நிக்ரஹமாகவேண்டும். நினைத்தமாத்திரத்தில் இந்திரியங்களை வசப்படுத்த ஸாமான்ய மனிதர்களால் ஸாத்தியப்படாது. ஆகையினால் முதலில் நான்கு இந்திரியங்களை அதாவது செவிதவிர மற்றவைகளை அடக்கலின்பொருட்டு செவி இந்திரியத்தில்மாத்திரம் மனதைச்செலுத்தி நாதோபாஸனைசெய்து ஸங்கீதத்துடன் பகவானை தியானிக்கில் மற்ற இந்திரியங்கள் தானே வசப்படுவதுடன்மனமும் ஏகாக்கிரநிலையில் நிற்கும். அப்பொழுது இச்செவி இந்திரியமும் தன்தொழிலை தானே நழுவவிடும். உடன் எதார்த்த தர்சனம்பெறலாகும். ஆனால் மற்ற இந்திரியங்களைக் காட்டி

னும் செவி இந்திரியத்தை விசேஷமாக எடுத்துக்கொள்ளுவானேனெனில், "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாந்தலை" என்று ஆன்றோர் கூறியிருப்பதினுலும், முற்கூறியபடி ப்ராணனும் அக்னியுஞ்சேர்ந்து உண்டாகிற நாதத்தை அறியக்கூடிய இந்திரியமாதலாலும் செவிக்குச் சிறப்புக்கூறப்பட்டது.

(5) இன்னும் பின்னுற்கூறியபடி உலகம்பூராவும் நாதஸ்வரூபமாகவே விளங்குகிறது.

"நனுதேன விஞகீதம்
நனுதேன விஞஸ்வர:
நனுதேன விஞராகம்
தஸ்மான்னுதாத்மகம்ஜகத்"

இதன்பொருள்:— நாதமன்னியில் கீதமாவது, ஸ்வரமாவது, இராகமாவது உண்டாகக்கூடாமலிருப்பதால் உலகம்பூராவும் நாதரூபமாகவே விளங்குகிறது.

ஆனுல் இவ்வாறுள்ள நாதத்தின் ஒழுங்குகளான ஸங்கீதசாஸ்திரம் ஸாமான்ய மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதா? அவ்வாறல்ல.

"ஸாமவேதாதிதம்கீதம்
ஸம்ஜக்ராஹபிதாமஹா:" (ஸங்கீதரத்னுகரம்)

இதன்பொருள்:— ப்ருஹ்மாவானவர் ஸங்கீதத்தை ஸாமவேதத்திலிருந்து எடுத்துக்கொண்டார். வேதங்கள் நான்கினுள் ஸாமவேதத்திலிருந்து எடுத்துக்கொள்ளக் காரணம்; "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" யென்ற ச்ருதி வாக்கியத்தின்படி, நான்கு வேதங்களினுள் ஸாமவேதத்தில் நானிருக்கிறேன் யென்று பகவான்சொல்லியபடி, ஸாமவேதமே சிறந்ததாக ஏற்பட்டது.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப=பல்லவி.

2. அ=அனுபல்லவி.

3. சர=சரணம்.

4. ~~~~ =துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.

5. *=ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)

6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.

7. ○=தாளத்தின் த்ருத அடையாளம்.

8. | =தாளத்தின் லகு அடையாளம்.

9. ⌒=கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.

10. சு=சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.

ச=சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
சா=சாதாரண காந்தாரம்.
பி=பிரதிமத்திமம்.
ஷ=ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
கை=கைசகிநிஷாதம்.
அ=அந்தரகாந்தாரம்.
கா=காகலிநிஷாதம்.

11. ஆ=ஆரோஹணம்.
அவ=அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

# தீக்ஷிதரவர்களின் கீர்த்தனை.

## இராகம் காம்போஜி—ரூபகம்—கால்க்களைச்சவுக்கம் திருதம் ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ=ச, ச—ரி, அ—க, சு—ம, ப, ச—த,

அவ=ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப=ஸ்ரீஸுப்ரமண்யாய நமஸ்தே, நமஸ்தே

மனஸிஜகோடிகோடி லாவண்யாயதீன சரண்யாய.

அ=பூஸுராதி ஸமஸ்தஜன—பூஜிதாப்ஜ சரணாய

வாஸுகிதக்ஷகாதி ஸர்ப்பஸ்வ ரூபதரணாய

வாஸவாதி ஸகலதேவவந்திதாய வரேண்யாய

தாஸஜனாபீஷ்டப்ரத—தக்ஷதராக்ரகண்யாய.

ச=தாரகஸிம்ஹமுகசூர—பத்மாஸுர ஸம்ஹர்த்ரே

தாபத்ரயஹரணநிபுண—தத்வோபதேசகர்த்ரே

வீரனுதகுருகுஹாயா—க்ஞானத்வாம்தஸவித்ரே

விஜயவல்லீபர்த்ரே—சக்தாயுததர்த்ரே

தீராயநதவிதாத்ரே—தேவராஜஜாமாத்ரே

பூராதிபுவனபோக்த்ரே—போகமோக்ஷப்ரதாத்ரே=

| த்ருதம் | லகு |
|---|---|
| ப=தா * * | சா * * ரீ * * |
| ஸ்ரீ * * | ஸு * * ப்ரம் * * |
| பமகா | கரிகரி—சசநிப |
| ம்——— | ண்ய——ய—ந— |
| தா * * | சா * *—* * கா |
| ம * * | ஸ்தே * *—* * ந |
| ரீகமகா * ம | கரிசா—சநிதப |
| ம——— | ஸ்தே——எ—— |
| (1) தா * த | சா * ச—ரீ * பம |
| ஸ்ரீ * இ | ஸு * உ—ப்ர * ம |
| கா * *—* * | கரிகரி—சா—சநிபா |
| ண் * *—* * | யா———ய—ந—— |
| தா * * | சா * *—* * கா |
| ம * * | ஸ்தே * *—* * ந |
| ரீகா— ரிகமா | கா * *—மாகா |
| ம——— | ஸ்தே * *—மன |
| ரீசா | பா * *—மாதா |
| ஸிஜ | கோ * *—டிகோ |



| 0 | \| |
|---|---|
| * * பா | பாதசா * தா—ச்தாதபா * * |
| * * டி | லா———வ————* * |
| பா * * | மாரீகாரீ |
| ண்யா * * | யதீ—ன |
| சா ரிசா * | * தா * * சநீபா * |
| சரண் * | * யா * *———ய * |

திரும்பவும் பல்லவியை எடுத்துப் பாடிக்கொண்டு வரும்பொழுது கா ந

| | |
|---|---|
| ரீகாரிகமா | கா * *—* * மக |
| ம——— | ஸ்தே * *—* * மன |
| ரிசபா | ம தா ப—ச்நி த ப |
| ஸிஜகோ | டிகோடி லா—வண் |
| பாமக | * ரி ரிசா நிதப |
| யாயதீ | * ன சரண்யாய |
| அ=மா * க | பம பா—* * தா |
| பூ * உ | ஸு—ரா—* * தி |
| பா * தப | மாபா—காமா |
| ஸ * ம— | —ஸ்த—ஜன |
| பா தநீ * | தாபா தாபா |
| பூ—— * | ஜிதா ப்ஜ |
| மா மகா * | * * மா—பாபா |
| ச ர —* | * * ணா — —ய |
| தா * * | நீதா—பா * * |
| வா * * | ஸுகி—த * * |
| மா மககா | * ரீ சா—* * * |
| க்ஷகா——— | * தி ஸர்—* * * |
| பா * * | மாகா—மாபா |
| ப * * | ஸ்வரூ —ப |
| தா தா | தாநித தாநித—தாபா |
| த ர | ணா——— — ———ய |
| * * ச்ா | ச்ா ச்ாரீச்நீ * *—ச்த |
| * * வா | ஸ வா———* *—தி— |
| ச்நீ * பா | தாச்ா—ரீக்ா |
| ஸக *— | லதே— வ |
| க்ரீப்ம் | க்ாக்ரீ—க்ரீச்ா |
| வ——— | ந்திதா——ய |

| 0 | \| |
|---|---|
| ச்ா ச்நிபா | தாச்ா—* * ச்ா |
| வரே— | ண்யா—* * ய |
| * * தா | ச்ா ச்நிதா * * |
| * * தா | ஸஜ—ஞ * * |
| பமபா | பமபா—ச்ததப |
| பீ—— | வ்ஷ்டா—ப்ர—தஅ |
| பதச்நி | தபமக—ரீகா |
| த—— | க்ஷ—தஅ—ரக்ர |
| சா * * | * * சநி—தநிபா |
| கண் * * | * * யா — —ய=ஸ்ரீ |
| சர=சா * * | ரீமா—கா * * |
| தா * * | ர க — வலிம் * * |
| மாபா | மாதா—* * பா |
| ஹமு | க கு—* * ர |
| பா * * | மககரி—சாநீ |
| ப * * | த்மா——ஸுர |
| பா * * | தா * *—சா * * |
| ஸம் * * | ஹா * * த்ரே * * |
| * * தா | பா * *— மாகா |
| * * தா | ப * *— த்ரய |
| மாபா | தாநீ—தாபா |
| ஹர | ணநி—புண |
| தா * * | தா * *—பா * * |
| த * * | த்வோ * *—ப * * |
| பமமா | காமா—பாபா |
| தே—— | ச கா—த்ரே |
| * * சா | மாகா—மா * * |
| * * வீ | ரணு—த * * |
| பாதா | நீநிதா *—* * தா |
| குரு | கு ஹா *—* * ய |
| பாபா | * * தா—ரீச்ா |
| அக்ஞா | * * ன—த்வம் |
| ரீநீ | * * தா—தா * * |
| த ஸா | * * வி—த்ரே * * |
| பாபா | தாக்ரீ—க்ரீச்ா |
| விஜ | ய வல்— ——லி |
| ச்நிதா | * * நித—பா * * |
| ப—— | * * த்ரே— —* * |
| மமமா | பதச்ா—ச்நிதப |
| ச—— | க்தா—யு—த |
| பமகா | மகரீ—ரிகசா |
| த—— | த்ரே—— |



| 0 | \| |
|---|---|
| ரீசா | நிதநிப—தாசா |
| தீரா | யனதவி—தாத்ரே |
| சாமகா | * மபத—மகமா |
| தேவரா | * ஜஜஅ—ம—த்ரே |
| தாநீ | தபதரீ—ச்நிதப |
| பூரா | திபுவன—போக்திரே |
| பாமகா | * ரிரிசா—சநிப |
| போகமோ | * க்ஷப்ரதாத்ரே=ஸ்ரீ |

அனுபல்லவியை பல்லவியாக வைத்துக்கொண்டு அதற்கு கற்பனை ஸ்வரங்கள் பாடவேண்டிய மாதரியை இதனடியிலெழுதியிருக்கிறது.

| | |
|---|---|
| மா * க | பமபா—* * தா |
| பூ * உ | ஸு—ரா * * தி |
| பா * தப | மாபா காமா |
| ஸ * ம— | —ஸ்த—ஜன |
| (1) * *—பா | * * மா—* * கா=பூ= |
| (2) * *—மா | பாதா—மாகா=பூ= |
| (3) * *—சா | ரீகா—மாகா=பூ= |
| (4) * *—தா | பாச்நி—தபநித=பூ= |
| (5) * *—மக | பமதப—நிதபத=பூ= |
| (6) தப—தச் | ரிக்ச்நீ—தபத=பூ= |
| (7) தரி—ச்நி | தபாம—கசரிக=பூ= |
| (8) தாநிப | தநிமப—நிதபத |
| மாபக | மரிகச—தசரிக=பூ= |
| (9) தப நித | ரிச்க்ரீ—ச்நித |
| மக பம | தபநீதா—பமக=பூ= |
| (10) நித—பம | தபமகா—மரிக |
| சா—* ச | ரிகமப—தபநித |
| பம கப | தச்ரிக்—ம்க்ரிக் |
| ச்ா—* ரி | ச்க்ரிச்—நிதபத=பூ= |
| (11) நீ தத | பமதப—மகாம |
| ரிக சரி | கமபம—கமரிக |
| சா * * | * * பத—சரிகம |
| பத நித | * பமக—மபதச் |
| பத ச்ரீ | * தச்ரி—க்ச்ாரி |
| க்ம் க்க் | ரிரிச்ச்ா—நிதப |
| தரி ச்க் | ரிம்க்ம்—ரிக்ச்ரி |
| தக் ரிச் | நிதபச்—நிதபத=பூ= |

(பத) ப = ஸ்ரீஸுப்ரமண்யாய = ஸ்ரீஸுப்ரமண்ய ஸ்வாமியாகிய உமக்கு
நமஸ்தே நமஸ்தே = நமஸ்காரம் நமஸ்காரம்
மனஸிஜ கோடிகோடி லாவண்யாய = கோடானுகோடி மன்மத [னுடைய காந்தியைப்பெற்றவரும்
தீனசரண்யாய = ஏழைகளைக் காப்பாற்றுகிறவரும்

அ = பூஸுராதி = பிராமணாள் முதலான
ஸமஸ்தஜன = எல்லா ஜனங்களாலும்
பூஜித = வணங்கப்பட்டதான
அப்ஜசரணாய = தாமரைபோன்ற பாதங்களுடையவரும்
வாஸுகி தக்ஷகாதி = வாஸுகி, தக்ஷகன் முதலான
ஸர்பஸ்வரூப = பாம்புகளை
தாரணாய = ஆபரணமாக அணிந்துகொண்டிருக்கப் பட்டவரும்
வாஸவாதி = இந்திரன் முதலான
ஸகலதேவ = சகல தேவர்களாலும்
வந்திதாய = தொழப்பட்டவரும்
வரேண்யாய = சிறந்தவரும்
தாஸஜன = தன்னுடைய அடியார்களின் வேண்டுதல்களை
அபீஷ்டப்ரதா = கொடுக்கிறவராகவும்
தக்ஷதர = மிகசாமர்த்திய முடையவருள்
அக்ரகண்யாய = முதன்மையானவரும்

சர = தாரக = தாரகாசுரன்
ஸிம்ஹமுக = சிங்கமுகத்தையுடைய ஓர் அசுரன்
சூரபத்மாஸுர = சூரபத்மாசுரன் இவர்களை
ஸம்ஹர்த்ரே = சம்ஹரித்தவரும்
தாபத்ரய* = உலகத்தில் மனுஷனுக்குண்டாகும் 3-வித துன் [பத்தையும்
ஹரணநிபுண = போக்கடிப்பதில் சாமர்த்தியமுடையவரும்
தத்வோபதேசகர்த்ரே = தத்துவத்தை உபதேசஞ்செய்கிறவரும்
வீரனுத = வீரர்களால் வணங்கப்பட்ட

* ஆதிபௌதிகம், ஆதியாத்மிகம், ஆதிதைவிகம்.



குருகுஹாய = குருகுஹனாகவும்
அக்ஞானத்வாந்த = அஞ்ஞானமாகிற பேரிருளிற்கு
ஸவித்ரே = சூரியன் போன்றவரும்
விஜயவல்லீபத்ரே = ஜெயத்தோடுகூடிய வள்ளிமணாளனும்
சக்தாயுததத்ரே = சக்தி ஆயுதத்தை தரித்தவரும்
தீராய = தைரியமுடையவரும்
நதவிதாத்ரே = வணங்கப்பட்டவரைக் காப்பாற்றப்பட்டவரும்
தேவராஜ = தேவர்கோனின்
ஜாமாத்ரே = மருமகனும்
பூராதி = பூமி முதலான
புவனபோக்திரே = லோகங்களில் சந்தோஷத்தை யனுபவிக்கிற [வரும்

போகமோக்ஷ = போகத்தையும், மோக்ஷத்தையும்
ப்ரதாத்ரே = கொடுக்கத்தகுந்தவருமான

(பொழி) கோடானுகோடி மன்மதனுடைய காந்தியைப்பெற்றவரும், ஏழைகளைக் காப்பாற்றுகிறவரும், பிராமணாள் முதலான சகல ஜனங்களாலும் வணங்கப்பட்டதான தாமரைபோன்ற பாதங்களுடையவரும், வாஸுகிதக்ஷகன் முதலான பாம்புகளை ஆபரணமாக அணிந்துகொண்டிருக்கப்பட்டவரும், இந்திரன் முதலான சகல தேவர்களாலும், தொழப்பட்டவரும், சிறந்தவரும், தன்னுடைய அடியார்களின் வேண்டுதல்களைக் கொடுப்பவரும், மிகவும் சாமர்த்தியமுடையவருள் முதன்மையானவரும், தாரகாசுரன், சிங்கமுகத்தையுடைய அசுரன், சூரபத்மாசுரன் இவர்களை ஸம்ஹரித்தவரும், உலகத்தில் மனிதர்க்குண்டாகும் மூன்றுவித துன்பங்களையும் போக்கடிப்பதில் சாமர்த்தியமுடையவரும், தத்துவத்தை உபதேசஞ் செய்கிறவரும், வீரர்களால் வணங்கப்பட்ட குருகுஹனும், அஞ்ஞானமாகிற பேரிருளுக்கு சூரியன் போன்றவரும், ஜெயத்தோடு கூடின வள்ளிமணாளனும், சக்தியாயுதத்தை தரித்தவரும், தைரிய முடையவரும், தன்னை வணங்கப்பட்டவரைக் காப்பாற்றப்பட்டவரும், தேவர்கோனின் மருமகனும், பூமி முதலான லோகங்களில் ஸந்தோஷத்தையனுபவிக்கிறவரும், போகத்தையும், மோக்ஷத்தையும் கொடுக்கத்தகுந்தவரும், ஸ்ரீஸுப்ரமண்ணியருமாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

# இராக லக்ஷணம்.

## 1. நாட்ட-ராகம் 36-வது மேளம்-சலநாட்ட ராகத்தில் ஜன்யம்-

ஆ=ச, ஷ—ரி, அ—க, சு—ம, ப, ஷ—த, கா—நி,
அவ=ச, கா—நி, ப, சு—ம, ஷ—ரி,

"நாட்டாஷட்ஜ க்ரஹோபேதா–
வரோஹேகதவர்ஜிதா"—

இதன் பொருள்:— நாட்டராகத்திற்கு ஷட்ஜகிரஹம். அவரோஹணத்திற்கு க, த, இந்த இரண்டு ஸ்வரங்களையுந் தள்ளுபடிசெய்து பாடவேண்டும்.

### இராக ஸஞ்சாரம்:—

(1) சா****ரீ**கமபா******—பமபதா****
நிசா****-சநிபா****ம–கம பாநிப மா**** மரீ******சா—

(2) கமபா ****பா**பமபதபா****பமமா**—
மக மாபம கா****—கமபதபம—கமரீ****சா—

(3) பமபா****பதா**நிநிசா**—பமபநிபதா**
நிநிசா**—பமகமபநிபமபதா**நிநிசா**
சநிநிசா**சநிபமபதா**நிசா**—சநிபம
கமபதா**நிசா**—சநிபமரிச*நிசரீகமபதா**நிசா****—

(4) சநிசரீ**ரிசா**—சநி சாரிசநீ**—
சரீ**சரிகமா**—மரீ**மரிமரிசா**
சநிசரிசரிமரிசா**—சநிசரீ–
சநிசாரிசநீ**—ரிசநிபா**—பமகமபதா**
பமபமரீ**மகமாபம ரீ**ரிசா**



## 2. கௌள ராகம் 15-வது மேளம் மாயாமாளவ கௌள ராகத்தில் ஜன்யம்.

ஆ—ச, சு—ரி, சு—ம, ப, கா—நி,
அவ—ச, கா—நி, ப, சு—ம, சு—ரி, க, ம, ரீ, சா—

### இலக்கணம்.

"கௌளஸ்து–ஷாடவோராகோ
நிக்ரஹோ–தைவதோஜ்ஜித:
ஸதாவக்ரிதகாந்தார
ஸர்வகாலேஷு–கீயதே"

இதன் பொருள்:— கௌளராகம் ஷாடவராகத்தைச் சேர்ந்தது. நிஷாதக்ரஹம்–தைவதம் வர்ஜிதம்—எப்பொழுதும் காந்தாரத்தை வக்கிரமாகப் பாடவேண்டும். இந்த ராகம் எல்லாக்காலங்களிலும் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா****ரிமபநீ****சா**—சநிசரீ****
சா**—சநி சாரிசநீ****பமா**மகமரீ****சா**

(2) பமபா**பா**பம பாநிபபமமா **மா**—
மக மாபமகமரீ**—சநிசரீ**சநிப—நிசரி கமரீ****சா**–

(3) ரிமபா**பா**—பமபநிபா**பா**—
பமகமரீ****மபநிபா**பா**—பமகமபநிசரீ******சநிபநிபா**பா**—
பமகமபநிசரி கமரீ******சநிபநிபா**பா**—பமபநீ****பமகமரீ****சா****–

(4) பாநிபாநிமா****காமகாமரீ****சநீசரீ****சா—ரிமபநீ****பா—
பநிசரீ****—மபநிசரீ**—ரிமபநிசரீ**—சரிசரிகமரீ**சா—
சநிசாரிசநீ****பா—மபநிசா****நி—பமபநிபா******—ம
கமபமகமரீ****சா—

## 3. வராளி ராகம் † 39-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ = ச, சா—க, சு—ரி, க, பி—ம, ப, சு—த, கா—நி
அவ = ச, கா—நி, சு—த, ப, பி—ம, சா—க, சு—ரி,

குறிப்பு † :— தற்காலம் அனுஷ்டானத்தில் 45-வது மேளகர்த்தாவின் ஜன்யராகமாகப் பாடிவருவதால் அதற்கேற்பட்ட ஸ்வரஸ்தானங்களையே இங்கு ஆரோஹண அவரோஹணங்களுக்கு எழுதியிருக்கிறது.

### இலக்கணம்.

"பூர்ணவராளீஸததம்
கீயதேஸக்ரஹோந்விதா"

இதன்பொருள்:— வராளி ஸம்பூர்ணராகம், ஷட்ஜகிரஹம், இந்தராகம் எல்லாக்காலங்களிலும் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்

(1) கரிகமா******—பதநீ******நிச்ா****—
ச்நி ச்ாரீச்நீ**தநீ****தபம—கரிகா****ரிசா****—

(2) கரிரிகா****ரி—கமபா****—பம பாதபமா****பதபதநீ******தபம—
பமதபா****தபம—ககரிக—மபதபா****தபம—
நிசககரிக—மபதநீ****தபம—கா******ரிசா******—

(3) கரிகமபா****பா****—பம பாதபமா ****பமதபமகா****கா****ரி—
சநிசரீ**ச—ககரிரிகா******ரி—கமபதா******பம—பமதபா****நிதப—
பமபதநீ******தநிச்நிதபமா**—பமநிதா**பம—பமதபா**தபமகா**—
கமபதநீ**தபமகா**—கரிபமதபநிதபமகா**—கரிரிகா****ரி—
சநி சாரிசநீ****ரிசா****—

(4) கரீ** பமா **—தபா **—நிதா ** சநீ ** க்ரீரீக்ா ****—க்ரீச்ா **—
ச்நிச்ரீ **** ச்ா—ச்நி ச்ாரீச்நிசா ** ரீச்நி—தநீ ** தபம—பமதப—



நீ ** தபம—பமதபா **** தபம—ககரிகமபதமா ****—பமதமா **—
பமநிதா ** பமா **—பமதபநிதச்நிதநீதபம—பமதபநிதச்நிச்கா ** ரீ—
ச்ரீநிச்நிதநீ ** தபம—ககரிகமபதநீ ** தபம—பமதபா ** நிதபமகா ** ரி—
ரீரிகா ** ரிசா ******—

(5) நிசககரிகமபத—மபதநிச்—பதநிச்ரீ—ச்நிச்க்ரீரீக்ா **** ரீ—
ச்ாரீச்—நீச்நி—தாநித—பாதபமா **—மபதநிச்ா ** ரீ—
நீச்நி—தாநித—பாதப—மாபம—கா ** கரிகமபா **த—
மாபம—காமக—ரீகரி—சாரிசநீ **—சநிககரிகமபா ******—பமதபா **—
பமபதநிநிதபா **—பமபதநிச்ாநிதநிநிதபா **—
பமபதநிச்க்க்ரீரீக்ா ** ரீச்ரீ—நிச்நிதநீ ** தபா **பமநிதபா **—
பமதபா ** மபா **பமகா ****ரி—ரிரிகா **ரி—ரிககரிசா ****—

## 4. ஆரபி ராகம் 29-வது மேளம் தீரசங்கராபரணத்தில் ஜன்யம்.

ஆ = ச, ச—ரி, சு—ம, ப, ச—த, ச,
அவ = ச, கா—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி, ச,

"ஆரபி ஸ்ஸர்வதாகேயோ—ஆரோஹேகநிவர்ஜித:
க்வசிதாரோஹஸம்யுக்த—நிஷாதோநிக்ரஹோபவேத்"

இதன்பொருள்:— ஆரபி ராகம் எந்தக்காலத்திலும் பாடத்தகுந்தது. ஆரோஹணத்தில் க, நி, இந்த ஸ்வரங்களை வர்ஜிக்க வேண்டியது. ஆனல் ஆரோஹணத்தில் சில ஸந்தர்ப்பங்களில் நி. யென்ற ஸ்வரத்தை அடக்கி மெதுவாக உபயோகிக்கலாம்.

குறிப்பு:— இப்பொழுது அனுஷ்டானத்தில் சரிமபதச—சநிதபமகரிச யென்று பாடிவருகிறார்கள். அவரோஹண ஸ்வரத்தை வாத்தியங்களில் வாசிக்கும் பொழுது பல ஸந்தர்ப்பங்களிலும் சசதபமகரிச யென்று பிடிக்கவேண்டியதாகிறது.

## இராக ஸஞ்சாரம்.

(1) சா **** ரிமபதா ** ப—பமபதச்ா ******—ச்நிதா **** ப—மபதப—
மகரீ ******—ரிசா ******—

(2) ரிமபா ** பா **—தபமப தாநிதபா ** பா தபமகரீ ** ரீ **—
சரிமகரீ ** சாரிக—சரீ **ச—சத சாரிசதா****
தசரீ **** பமகரீ ****—ரிசா ******—

(3) பமதா ****—ச்ாரிச்தா **** நிதபா ****—பமபதா ** ப—
ரிமபதா ** ப—மகரிமபதா ** ப—ச்ச்தப—மகரிமபதா ** ப—
ச்ச்தபமகரிசநித—சரிமபதா ** ப—பமபாதப மா ** ப—ரிமபா **** —
பாதப மகரீ—சநிதா **** ரிசா ******—

(4) தா ** தா **—தச்தச்ரீ ** ச்—ச்ரிம்க்ரீ **—
ச்ா ரிக்ரீ **—ம்க்ரிச்ா **—ச்ாதா— ச்ாரிச்தா ** **—
தநீதபா ** மபதச்தா ** பா—மப தாநிதபா **—ரிமபா **—மகரிமபா **—
தபமாபத பாதபமா **** கரீ **—சரீ ****—பமகரீ ****—
சாரிகரீகா —சா ****** —நிதா **** ரிசா ****—

இன்னும் வரும்

பத்திராதிபர்.

# நீதி

## பர்த்ருஹரி யோகீந்திரரின் ஜீவ்ய சரித்திரம்

மாளவதேசத்தில் தேவலோகத்தைக்கூட தோற்கடிக்கக்கூடிய சகல ஐசுவரியங்களும் நிறைந்த உஜ்ஜயினி என்று பெயருள்ள நகரம் ஒன்றுளது. அந்நகரில் 7-வது நூற்றாண்டில் பல சத்துருக்களின் மனைவிகளது ஸீமந்தமென்ற தலை வகுடு பிளப்பிலுள்ள குங்குமத்தினால் சிவந்த பாதங்களையுடைய பர்த்ருஹரியென்று பெயருள்ள ராஜன் ஒருவர் இருந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் கலைகளையும் நன்குணர்ந்தவர். அவருக்கு விக்ரமன் என்று பெயருள்ள தம்பி ஒருவனுண்டு. அவன் சத்ருக்களை யடக்கக்கூடிய வல்லமை வாய்ந்தவன். அந்நகரத்தில் சகல சாஸ்திரங்களில் வல்லவரும் சகல மந்திர சாஸ்திரங்களையும் அறிந்தவருமான பிராமணன் ஒருவர் உளர். அவர் மிகவும் ஏழை அவர் ஓர் சமயத்தில் மந்திரோபாஸனையினால் புவனேச்வரியை வேண்டித் தவஞ்செய்தார். அவள் மனமிரங்கி பிராமணனைப் பார்த்து ஓர் பழத்தை அவர் கையிற் கொடுத்து ஓ! பிராமணா! இந்தப் பழத்தைப்புசி. இதனால் கிழத்தனம், மரண முதலியவை யில்லாமலிருப்பாயென்று கூறி மறைந்தனள். பிராமணன் அந்தப் பழத்தை யெடுத்துக்கொண்டு தன் இல்லத்திற்கேகி ஸ்நானஞ்செய்து தேவ பூஜைகளை முடித்துக்கொண்டு அப்பழத்தை சாப்பிட எத்தனிக்கும் பொழுது அவர் மனதில் பின்வருமாறு ஓர் தோற்றமுண்டாயிற்று. "நானோ மிகவும் தரித்திரன் நரை, திரை, மூப்பு இல்லாதவனாக யிருந்து யாருக்கு என்ன உபகாரம் செய்யப்போகிறேன்? எவ்வளவு நாள் நான் ஜீவித்திருந்தாலும் பிச்சையெடுத்துப் பிழைக்கவேண்டியதேயொழிய வேறில்லை. பரோபகாரியாயிருக்கும் புருஷன் கொஞ்சநாளிருந்தாலும் அவனால் உலகத்திற்கு எவ்வளவோ நன்மைகளுண்டாகும் இதற்கிணங்க"

"யஜ்ஜீவதிக்ஷணமபிப்ரதிதைர்மனுஷ்யோ
விஜ்ஞான சௌர்யவிபவாதி குணைஸ்ஸமேத:"

"தத்தஸ்யஜீவிதபலம்ப்ரவதந்திஸந்த:
காகோபிஜீவதிசிரா த்ருபலிஞ்சபுங்தே"

அதாவது:— மிகுந்த பராக்ரம முதலிய பிரசித்தமான குணங்களுடன் எந்த மனிதன் ஒரு கணப்பொழுதாவது ஜீவித்திருக்கின்றானோ அவனுடைய பிறவியே பலனுடையதென்று பெரியோர் கூறுகின்றனர். ஏனெனில்காக்கைகூட பல வீடுகளிலும் போடுகிற சிறிது சோற்றை யுட்கொண்டு வெகுகாலம் ஜீவித்திருக்க வில்லையா?

யஸ்மின்ஜீவதிஜீவந்தி
பஹவஸ்ஸது ஜீவது
பகோபிகிம்நகுருதே
சஞ்ச்வாஸ்வோதர பூரணம்.

எந்த ஒரு மனிதனால் வெகுபேர்கள் பிழைக்கிறார்களோ அவன் பிறவி மிகவும் மேலானது. கேவலம் ஒரு பறவையாகிய கொக்கும் தன் மூக்கினால் வயிற்றை நிறப்பிக்கொள்ள வில்லையா?

2. "க்ஷுத்ரா ஸ்ஸந்தி ஸஹஸ்ரச ஸ்வபரண வ்யாபார பூர்ணோதா:
ஸ்வார்த்தாத்யஸ்து பரார்த்த ஏவஸபுமானேகஸ்ஸதாமக்ரணீ:
துஷ்பூரோதரபூரணய பிபதிஸ்ரோத: பதிம்பாடபோ
ஜீமூதஸ்து நிதாக ஸம்ப்ருதஜகத்ஸந்தாபவிச்சித்தயே"

உலகத்தில் பிறருக்கு அணுவளவேனும் பிரயோசனமின்றி தன் காரியத்தையே பெரிதாக எண்ணித் தன் வயிற்றை மட்டும் நிறப்பிக்கொள்ளுமற்பர்கள் ஆயிரக்கணக்காயிருக்கிறார்கள். ஆனால் எவன் அப்படியின்றி பிறருக்காகவே பிரயாசப்படுகின்றானோ அவன் ஒருவனேஸாதுக்களில் முதன்மையானவன். ஸமுத்திர மத்தியில் இருந்துகொண்டு அதன் நீரைக் குடிக்கும் வடவாநிலமானது தன் வயிற்றை நிறப்பிக்கொள்வதல்லாது பிறருக்குதவி புரிவதில்லை. அப்படிக்கல்லாமல் நீரை அருந்தும் மேகமானது உலகத்தின் தாபத்தை யடக்குகிறது. என்றிப்படிப் பலவிதமாய் யோசித்து அப்பழத்தை நமது அரசனிடங் கொடுப்போம், அவன் நரைதிரை யில்லாதவனாகி தன் ராஜ்யத்தில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்ற நாலுவர்ணங்களின் தர்மங்களைச் சரிவர நடைபெறச் செய்வானென்று நிச்சயித்து அப்பழத்தை எடுத்து அரசனிடம் சென்று "கடவுள் உனக்கு மங்களத்தை உண்டுபண்ணுவாராக" என்று ஆசிர்வதித்து அதை அரசன் கையில் கொடுத்துச் சொல்லுகிறான், ஓ ராஜனே! தேவதையின் வரப்பிரசாதத்தினால் கிடைத்த இப்பழத்தைச் சாப்பிடு. இதனால் நீ நரை திரை மூப்பில்லாதவனாகி யிருப்பாய் என்றான். அரசன் அப்பழத்தை வாங்கிக்கொண்டு பிராமணனுக்கு வெகுமதி கொடுத்தனுப்பிவிட்டு யோசிக்கிறான். நான் இப்பழத்தைப் புசிப்பதால் சாவில்லாதவனாவேன். எனக்கோ அனங்கசேனையிடம் மிகுந்த பிரியமிருக்கிறது. நான் உயிருடனிருக்கும் போது அவள் இறந்தாளாகில் அவளது பிரிவைச் சகிக்க என்னாலாகாது. ஆகையால் இப்பழத்தை என் பிராண பாரியையான அனங்கசேனைக்கே கொடுப்பேன் என்று அவளை அழைத்து அவளிடம் கொடுத்தான். அவளுக்கு குதிரைக்காரன் ஒருவனிடம் மிகவும் பிரியம் ஆகையால் அதை அவள் அவனிடம் கொடுத்தாள். அவனுக்கு இவளைக்காட்டிலும் வேறொரு தாஸியிடம் பிரியமாகையாலவனதை அத்தாசிக்குக் கொடுத்தான். அவளதை இவனிலும் தனக்கு பிரியமுள்ள ஒரு இடையனுக்குக் கொடுக்க, அவனதை இவளிலும் தனக்கு பிரியமுடையவளான ஒரு சாணிவாருபவளுக்குக் கொடுத்தான். அவள் அப்பட்டணத்திற்கு வெளியிலிருந்து கூடையில் சாணியை வாரிக்கொண்டு அதன்மீது இப்பழத்தை வைத்துக்கொண்டு இராஜவீதி வழியாக வந்தாள். அப்பொழுது பர்த்ருஹரி ராஜாவானவர் ராஜகுமாரர்களுடன் வெளியிற் போகும் பொழுது அவள் தலையிலுள்ள கோமயத்தின் மீதிருந்த அப்பழத்தைப் பார்த்துவிட்டு அரண்மனை வந்து சேர்ந்து முந்திப் பழங்கொடுத்த பிராமணனை வருவித்து நீர் எனக்குக் கொடுத்த பழத்தைப்போன்றவை இன்னமிருக்கின்றனவாவென்று வினவினான். அதற்கு அம்மறையோன் "அரசே! அக்கனி தேவதையின் வரப்பிரஸாதத்தினால் கிடைத்தது, அம்மாதிரியான பழம் இப்பூவுலகிலெங்குமில்லை. இது சத்தியம் அரசர்கள் கடவுளுக்குச் சமானமாகையால் அவர்களுக்கெதிரில் பொய் பேசுவது தகாது, அவர்களைக் கடவுளாகவே பார்க்கவேண்டுமென்று முன்னோர்கள் கூறியுள்ளார்" என்றார்.

3. அரசன்:— அவ்விதமான பழத்தை இப்பொழுதுதானே நான் ராஜ வீதியில் பார்த்தேன்.

அந்தணன்:— நான் கொடுத்த பழத்தை சாப்பிட்டீர்களா அல்லவா?

அரசன்:— நானதைச் சாப்பிடவில்லை ஆனால் எனது இன்னுயிர்க் காதலியான் அனங்கசேனைக்குக் கொடுத்தேன்.

அந்தணன்:— அப்படியானால் அவளைக்கேளுங்கள்.

அரசன் உடனே அவளைவருவித்து உண்மையைக்கூறும்படி கேட்கும்பொழுது அவள் தானதைக் குதிரைக்காரனுக்குக் கொடுத்ததாகவும், அவன் ஒரு தாசிக்கும், அவள் ஒரு இடையனுக்கும், அவன் ஒரு சாணி வாருபவனுக்கும் அதைக்கொடுத்ததாக வெளியாயிற்று. பிறகு அரசன் மிகவும் கோபித்து அச்சாணிவாருபவனை வருவித்து பழத்தைவாங்கிக் கொண்டு பின்வருமாறு சில சுலோகங்களைக் கூறினான். மனதைக்கவரக் கூடிய மங்கையரின் ரூபத்திலும் யௌவனத்திலும் புருஷர்களுக்கு அபிமானபுத்தி ஏற்படுவதுவீணே. பெண்களின் மனதில் மன்மதன் தன்னிஷ்டம்போல் எதையுஞ் செய்கிறான்.

"அச்வப்லுதம் வாஸவகர்ஜனம்ச
ஸ்த்ரீணாம்ச சித்தம் புருஷஸ்யபாக்யம்
அவர்ஷணஞ்சாப்யதி வர்ஷணஞ்ச
தேவோநஜாநாதி குதோமனுஷ்ய:"

குதிரையின் கனைப்பையும், மேககர்ச்சனையும், ஸ்திரீகளின் சித்தத்தையும், புருஷர்களினது பாக்கியத்தையும், மழையில்லாமையும், அதிக மழைபெய்வதையும் தேவர்களாலேயே அறியமுடியாதெனில் மனிதர்களால் எப்படியறியக்கூடும்?

"க்ருண்ஹாதிவி பினேவ்யாக்ரம்
விஹங்கம் ககனேஸ்திதம்
ஸரின்மத்யகதம் மீனம்
நஸ்த்ரீணாம் சபலம்மன:"



காட்டிலுள்ள புலியைப்பிடிக்கலாம், ஆகாயத்திற் பறக்கும் பறவைகளையும் பிடிக்கலாம், தண்ணீருக்குள்ளிருக்கும் மீன்களையும் பிடிக்கலாம், ஸ்திரீகளுடைய சஞ்சலமனதைக் கண்டுபிடிப்பது அசாத்தியம்.

"ஸுகதுக்கஜயபராஜய ஜீவிதமரணானியேவிஜானந்தி
முஹ்யந்திதேஹி நூனம் தத்வவிதச்சாபி சேஷ்டிதைஸ்தரீணாம்"

சுகம், துக்கம், ஜயம், அபஜயம், ஜீவனோடிருத்தல், மரணம் இவைகளின் தத்துவங்களை அறியக்கூடியவர்கள்கூட ஸ்திரீகளின் நடப்பைக் கண்டு மோஹிக்கிறார்கள்.

"ஸ்மரோபமமபிப்ராப்ய
வாஞ்சந்தி புருஷாந்தரம்
நார்யஸ்ஸர்வாஸ்வ பாவேன
நோச்யந்தே ஹ்ய மலாசயா:"

ஸ்திரீகள் மன்மதனுக்குச் சமானமான கணவனையடைந்திருப்பினும் வேறு புருஷனை இச்சிக்கிறார்கள். ஆகையால் எவ்விதத்திலும் ஸ்திரீகள் சுத்தமான மனதுள்ளவர்களென்று சொல்லமுடியாது.

"விநாயந்த்ரேண மந்த்ரேண
தந்த்ரேண விநயேநச
வஞ்சயந்தி நரம்நார்ய:
பாக்ஞாதன மபிக்ஷணாத்:"

யந்திரம், மந்திரம், தந்திரம் முதலியனயில்லாமல் வினயத்தினாலேயே ஸ்திரீகள் புருஷர்களின் புத்தியைக் கெடுத்துவிடுகிறார்கள். குலம் ஜாதி இவைகளில் தாழ்ந்தவனாகவும், யாவராலும் நீக்கப்பட்டவனாகவும், துஷ்டசுபாவமுள்ளவனாகவும், தொடக்கூடாதவனாகவு மிருக்கும் புருஷனையே ஸ்திரீகள் மேலானவனாக மதிக்கிறார்கள். ஆகையால் நற்குலத்தினுதித்த புருஷன், சுடுகாட்டிற்கும் கட்குடிப்பவர்களுக்கும் சமமாய் ஸ்திரீகளை விலக்கவேண்டும்,

"நவைராக்யாத் பரம்பாக்யம்
நபோதாத பரம்ஸுகம்

நஹரேசபாஸ்த்ராதா
நஸம்ஸாராத் பரோரிபு:"

வைராக்கியத்தினுமுயர்ந்த பாக்கியமில்லை, அறிவின்மிக்க சுகமில்லை, ஹரியினுமுயர்ந்த இரக்ஷகனில்லை, ஸம்ஸாரத்தினுமுயர்ந்த சத்துருவில்லை இவ்விதமாகச்சொல்லி இராஜ்ய சுகங்களில் மிகவும் வெறுப்படைந்து விக்கிரமார்க்கனிடம் இராஜ்யத்தை ஒப்புவித்து அந்தணனளித்த கனியை விக்கிரமார்க்கனுக்குக் கொடுத்து பர்த்ருஹரி அரசன் வனமடைந்தான். அங்கு துறவறம் பூண்டொழுகுநாளில் அநேகம் பெரியோர்களை தரிசித்து அவர்களநுக்கிரகத்தினுல் யோகசித்திபெற்று பர்த்ருஹரி யோகீந்திரர் என்று பெயரடைந்து விளங்கினுர். அவரால் லோகோபகாரமாக அநேக விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் "பர்த்ருஹரி" என்ற தன் பெயரமைத்தே செய்திருப்பது ஓர் நூல். அது நீதிசதகம், சிருங்காரசதகம், வைராக்கிய சதகம் என்று ஒவ்வொன்றும் வடமொழியில் தனித்தனி நூறு சுலோகங்களடங்கிய முந்நூறு சுலோகங்கள் கொண்டது. அதில் நீதிசதகத்தில் அறம் பொருளிரண்டையும், சிருங்கார சதகத்தில் இன்பத்தையும், வைராக்கிய சதகத்தில் வீட்டையும் விவரித்திருக்கின்ருர்.

# நீதிசதகம்

## மூர்க்கரியல்பு.

இந்நூலினுல் லோகோபகாரமாக சில விஷயங்களைச் சொல்ல உத்தேசித்து அவற்றுள் முதலில் சொல்ல நினைத்த மூர்க்கரியல்பு, கற்ருேரியல்பு இவ்விரண்டில் அசோகவனிகா நியாயத்தினுல் அதாவது அநேக விருக்ஷங்களுள்ள வனத்தில் அசோக விருக்ஷமொன்றையே பிரதானமாக வைத்துக்கொண்டு அசோகவனம் என்று சொல்வது போல முதலில் மூர்க்கரியல்பைச் சொல்ல ஆரம்பித்து தன் நல்ல வார்த்தைகளைக் கேட்கத்



தக்கவர்கள் இல்லாமற் போவதால் அவைகளைச் சொல்வதற்கே அவகாசமில்லை என்று முதல் சுலோகத்தில் சொல்லுகிருர்.

போத்தாரோமத்ஸ ரக்ரஸ்தா:
ப்ரபவ: ஸ்மயதூஷிதா:
அபோதோபஹ தாச்சான்யே
ஜீர்ணமங்கே ஸுபாஷிதம்: (1)

மிகுந்த அறிவாளிகள் இதரர்களது பெருமையைப்பார்த்து சகிக்க முடியாதவர்களாகியும் அதாவது பொருமையுள்ளவர்களாகியும், பிரபுக்கள் மிகுந்த ஐசுவர்யத்தினுல் கர்வமுடையவர்களாகியும், மற்றவர்கள் கொஞ்சமேனும் அறிவில்லாதவர்களாகியும் அதாவது சொல்வதைத் தெரிந்து கொள்ளும் சக்தியில்லாதவர்களாகியு மிருக்கிருர்கள். ஆகையால் நல்ல வார்த்தைகள் அந்தரங்கத்திலேயே ஜீர்ணமாய்விடுகின்றன.

அஞ்ஞஸ்ஸுகமாராத்ய:
ஸுகதரமாராத்யதேவிசேஷஞ்ஞ:
ஞ்ஞானலவதுர்விதக்தம்
ப்ரம்மாபிநரம்நரஞ்சயதி. (2)

இந்த சுலோகத்தினுல் மூர்க்கரது ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிருர். அறிவில்லாதவனைச் சுலபமாய்ச் சமாதானப்படுத்தலாம். நல்லறிவுள்ளவனை இன்னம் சுலபமாய்ச்சமாதானப் படுத்தலாம். சிற்றறிவுள்ளவன் அதாவது கொஞ்சமறிந்த மாத்திரத்திலேயே தன்னைப்பண்டிதனென நினைப்பவனுக்குச் சமாதானமுண்டுபண்ண பிரம்மாவினுலும் முடியாது.

ப்ரஸஹ்யமணிமுத்தரேன்மகரவக்த்ர தம்ஷ்ட்ராந்தராத்
ஸமுத்ரமபிஸந்தரேத் ப்ரசலதூர்மிமாலாகுலம்
புஜங்கமபிகோபிதம் சிரஸிபுஷ்பவத்தாரயேத்
நதுப்ரதி நிவிஷ்டமூர்க்கஜன சித்தமாராதயேத். (3)

இது முதலிரண்டு சுலோகங்களால் மூர்க்கர்களது மனதைச் சுவாதீனப்படுத்துவது மிகவும் அசாத்தியம் என்று தெரிவித்திருக்கிருர். சிம்சுமாரமென்ற பெயருள்ள முதலையின் வாயிலிருக்கும் இரத்தினத்தை

பலாத்காரமாய் வெளியே எடுப்பினுமெடுக்கலாம், மிகப்பெரிய அலைகளுடன்கூடிய சமுத்திரத்தைக் கடப்பினும் கடக்கலாம், மிகக்கோபமாயிருக்கும் ஸர்ப்பத்தையும் புஷ்பம்போல் சிரசில் தரிக்கலாம். துரகங்காரமுள்ள மூர்க்கர்களது மனதை ஸ்வாதீனப்படுத்துவது மாத்திரம் யாவராலும் முடியாதகாரியம்.

லபேதஸிகதாஸு தைலமபியத்நத: பீடயன்
பிபேச்சம்ருகத்ருஷ்ணிகாஸு ஸலிலம்பிபாஸார்த்தித:
கதாசிதபிபர்யடன்ச சவிஷாணமாஸாதயேந்
நதுப்ரதி நிவிஷ்டமூர்க்கஜன சித்தமாராதயேத். (4)

மணலை ஒரு இயந்திரத்திலிட்டுப் பிரயாசைப்பட்டுப் பிழிந்து அதிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். தாகத்தினால் கஷ்டப்படுபவன் மிகப் பிரயாசையுடன் கானல்நீரை அருந்தி தன் தாகத்தைத்தீர்த்துக் கொள்ளலாம். காட்டிலலைந்து திரிந்து ஒருவேளை முயற்கொம்பு சம்பாதித்தாலும் சம்பாதிக்கலாம். மூர்க்கர்களது மனதைச் சமாதானப்படுத்துவது அசாத்தியம். அதாவது,

ம்ருகத்ருஷ்ணாம் பஸிஸ்நாத:
கபுஷ்பக்ருதசேகர:
ஏஷவந்த்யா ஸுதோயாதி
சசச்ருங்க தநுர்த்தர:

இந்த மலடிமகன் கானல்நீரில் மூழ்கி ஆகாயப்பூவைத் தலையிற் சூடிக்கொண்டு முயற்கொம்பினாற்செய்த அம்பைக்கையிற் பிடித்துச்செல்கின்றான், என்றால் மேற்கண்டவைகளெல்லாம் இல்லாதன என்று கருத்து.

இன்னும் வரும்.

Ramachandra Iyer.

# அஞ்ஞான குருவின்கதை.

தர்மாபுரம் யென்ற ஓர் நகரத்தில் சந்திரசேகரன் யென்ற ஓர் அரசன் சந்தான உற்பத்திக்காக, அனேக நோன்புகள் நோற்றும், அனேக விரதங்கள் ஆசரித்தும், அனேக தீர்த்தயாத்திரைகள் செய்தும், அனேக தேவதைகளைப் பிரார்த்தித்தும் எந்த விதத்திலும் தன்னுடைய மனோரதம் நிறைவேறாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில், ஒரு நாள் முத்துஸ்வாமி யென்ற ஓர் சந்நியாஸி அவ்வரண்மனைக்கு வந்துசேர்ந்தார். அது தெரிந்த அவ்வரசன் எதிர்கொண்டு போய்க்கூட்டி வந்து, அர்க்கியபாத்திய ஆசமனங்கள் முதலான சோடசோபசாரங்கள் செய்து பூஜித்துப் பிட்சைசெய்து களைதீர்த்துக்கொள்ள வேண்டிக் கொண்ட பொழுது.

சந்நியாசி:— அரசனே! உன் புத்திரர்கள் எங்கே?

அரசன்:— சுவாமி! பகவான் யெல்லாப் பாக்கியத்தையுங்கொடுத்து இந்தக்குறையொன்று மாத்திரம் வைத்திருக்கிறார். பெரியோர்கள் அநுக்கிரகத்தால், அதை யோர்நாள் அடைவேனென்ற நம்பிக்கையுள்ளவனாய் சதாகாலமும் ஈஸ்வரனை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

சந்நியாசி:— அப்படியாகில் பாவியாகிய உன் வீட்டில் ஜலபானம் பண்ணக்கூடாது. இது யெனக்கு முன்னமே தெரிந்திருக்குமாகில் இந்த அரண்மனையின் வாசல்படியையும் மிதித்திருக்கமாட்டேன்.

அரசன்:— இடிவிழுந்த சர்ப்பம்போல் நடுநடுங்கி ஐயோ! சுவாமீ! தேவரீர் இப்படிச் சொல்லுவீர்களாகில் ஏழையாகிய யான் யென்ன செய்கிறது. தாங்கள் இந்த இடத்தில் பிட்சைசெய்து களைதீர்த்துக்கொள்ளாவிடில் நான் யெனது உயிரை இப்பொழுதே மாய்த்துக் கொள்வேன்.

சந்நியாசி:— சந்திரசேகரா! நான் உன் வீட்டில் பிட்சைசெய்யாவிடில் உன் உயிரை மாய்த்துக்கொள்வேனென்கிறாயே? அது உண்மைதானா? நான் உன் வீட்டில் பிட்சை செய்யவேண்டுமா அல்லது உனக்கு சந்தான உற்பத்தி வேண்டுமா? சொல் பார்ப்போம்.

**அரசன்:—** தேவரீர் இப்படிக் கேட்டால் யான் யென்ன சொல்லுகிறது?

**சந்நியாசி:—** இரண்டில் எதை அதிகமாக விரும்புகிறாய்? சொல். உள்ளதை உள்ளபடி சொல்லேன்!

**அரசன்:—** சுவாமி, தாங்கள் பிட்சைசெய்ய வேண்டுமென்பதே யெனது விருப்பம். ஆனால் தாங்கள் முதல் முதல் கேட்டீர்களே அதே மாதரி பெரியோர் இனி வருங்கால் கேட்பார்களாகில் யென்ன செய்கிறது யென்று உத்தேசிக்குங்கால், தாங்கள் இரண்டாவதாக கேட்ட கேழ்வியும் நிறைவேருவது நலம் யென்று யோசிக்கிறேன்.

**சந்நியாசி:—** வேந்தே! மானிட வாழ்க்கையை பெரிதென்று நீ நினைக்கின்றமையால், நீ இந்த மாம்பழத்தை உனது பாரிக்குக்கொடு அவளதை புசிப்பாளாகில் இன்னும் பத்து மாதங்கள் கழித்து ஒருபெண்மகவு பெருவாள். ஆனால் உன்னால் மகளுக்கு அனேக கஷ்டங்கள் நேரிடும். அதின் உண்மையை நீ பின் அறிந்து அதினாலே நீ மரணமடைவாய். ஆனால் அவளால் உனக்கு பின்னும் உயிருண்டாகும். இப்படிச் சொல்லி பழத்தை அரசன் கையில் கொடுக்கவே சந்நியாசி காணாமற்போயினார். உடனே அவன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம்செய்து அந்த சுவாமிகள் நின்ற இடத்தை பிறக்கும் குழந்தைக்கு பள்ளியறையாக சமர்ப்பிக்கும்படி கட்டளையிட்டான். சந்நியாசியின் கட்டளைபடி அவ்வரசன் பாரி பழத்தைப்புசித்து, பத்து மாசங்கழித்து ஒரு பெண்குழந்தையைப்பெற்றாள். சந்நியாசி சொல்ப்படி அந்த குழந்தையால் அவ்வரசனுக்கு மருஜனனமாகும் பென்றபடியால் அந்த மகவுக்கு தாயம்மை யென்று பெயரிட்டான். அந்த தாயம்மையை மிக்கசெல்வத்துடன் வளர்த்துவந்து, சமஸ்த சாஸ்திரங்களையும் கற்பித்து, பெண்மக்களுக்குச் சங்கீதமே அலங்காரம் யென்று உத்தேசித்து பரதசாஸ்திரம் சொல்லிவைக்கும்படி தன் குலகுருவாகிய சின்னத்தம்பி பாகவதரை கட்டளையிட்டிருந்தான்.

அந்தப்பாகவதரும், பறவைகளுள் உத்தமஜாதியான குயில்களும், வானம்பாடிகளும்கூட அவளிடத்துக்கூடிப் பாட்டுக்கற்றுக்கொள்ள வருமாறு, செவிக்கினிப்பமுதூட்டச் சர்வராகங்களையும் சாஸ்திரோக்தமாய்க்



காத்திரத்தினால் பாடுவதிலும், வீணை, பிடில், ஆர்மோனியம், மிருதங்கம், கிஞ்சிரா, ஜலதரங்கம் முதலிய வாத்தியங்களை வாசிப்பதிலும், நாரதர் தும்புரு முதலிய தெய்வபாடகர்களும், தியாகராஜய்யரவர்கள், தீட்சதர், சாமாசாஸ்திரிகள் முதலான பூதேவ சங்கீதவித்வாம்சர்களுங்கேட்டு வியக்குமாறு அக்கன்னிகாதிலகத்தை தயார்செய்துவிட்டார். அப்பெண்மணி ராகாலாபனையும், பல்லவி கற்பனையும், ஜாவளி பாட்டுகளும் பாடுவதில் இந்திரசபையிலுள்ள தேவகன்னிகைகளையும் தோற்கடிக்கக்கூடியவளாகயிருந்தாள். அவள் பாடுகிறதையும், ஆர்மோனியம் 'வாசிப்பதையும் கேட்கும்பொழுதெல்லாம் குருவினுடைய மனம்பிரமித்துச் சஞ்சலித்துக் கொண்டிருந்தது.

ஐம்பது வருஷத்திற்குமுன் போய்விட்டபால்யம் மீண்டுவந்தாற்போல் அவர் தினம்தினம் முகக்ஷவரஞ்செய்துகொண்டும், தலைக்கு வாசனைத்தைலங்கள்போட்டு சீவிமுடித்துக்கொண்டும், கொண்டையில் மல்லிகை, முல்லை, இருவாட்சி, செம்பகம் முதலிய புஷ்பங்களை நாடோறும் ஒவ்வொன்றாக மாற்றிமாற்றிவைத்து முடித்துக்கொண்டும், குட்டிகாரா, பீயர்ஸ், வைட்ரோஸ் முதலிய சோப்புகள்போட்டுக் குளித்து தினந்தினம் வெளுத்த மல்வேஷ்டி உடுத்திக்கொண்டும், சலவைசெய்த ஜரிகைவேஷ்டியை மேலே போட்டுக்கொண்டும், விதவிதமான ஷர்ட்டுகளும் போட்டுக்கொண்டும், பட்டுக்கைக்குட்டைகளில் அத்தர், இகோ, ரோஸ்வாட்டர் முதலிய வாசனாதிகள் போட்டுக்கொண்டும், நெற்றியில் ஜவ்வாதுப்பொட்டு வைத்துக்கொண்டும், காலில் விலையுயர்ந்த ஸ்டாக்கிங்கும், பூட்ஸ்ம், ஒரு கையில் விலையுயர்ந்த குடையும், மற்றொருகையில் பெண்கள்விசிறி யென்றுசொல்லப்பட்ட ஒரு லேடீஸ்ப்வானும் வைத்துக்கொண்டு போவது வழக்கம். ஆனால், அவர் தன்மனதில் தன்னைவிட சுந்திரபுருஷன் வேரு யாருங்கிடையாது யென்று யோசித்தபோதிலும் அவரிடத்திலுள்ள இரண்டு குறைவுகளை நிவிர்த்திக்கச் சக்தியற்றிருந்தார். பாலியமுதற்கொண்டே புகையிலை மூக்குத்தூள் முதலியது உபயோகித்து அப்பியாசப்படுத்திவிட்டபடியால் நாசியின் நரம்புகள் உணர்வற்றுப்போய் எப்பொழுதும் நாசியிலிருந்தும் வாயிலிருந்தும் துர்நாற்றம் வந்துகொண்டேயிருந்தது. அதுவுந்தவிர அவருக்கு வயதாகிவிட்டபடியால் பல்லுதிர்ந்துபோயிருந்ததினால் மாடுகளைப்போல அசைபோட்டுக் கொண்டிருப்

பது வழக்கம். ஆனல், இந்தவிஷயத்தில் மாத்திரம் ஒருவாறு அவர் தன்மனதைத் திருப்திசெய்துகொண்டார். பல்லில்லாததினுல் இராஜ குமாரத்தியானவள் முத்தமிடும்பொழுது என்னுடைய கன்னம் அவ ளுக்கு மிகவும் மிருதுவாயிருக்கும். தவிறவும் வெற்றிலேபோடுகிறதிலி ருந்து எனது உதடுகள் செம்பவளம்போலிருக்கும். மிகவும் ஆவல்கொள் வாள், ஆனுலுமென்ன சுந்தரமுள்ளவர்களுக்கும் ஒருகுறைவாவது இருக் காமல் இராது. மேலும் நான் பிராமணனல்லவா? அவள் ஓர் க்ஷத்திரி யப்பெண்தானே! இதற்குமேல் நான் அவள் குருவல்லவோ! ஆகையால் அவள் என்னை விரும்புவாளென்று "ஆகாயத்தில் ஊஞ்சல்போட்டு அம் பலமாடுவதுபோல்" நினைத்துக்கொண்டு, கண்களினுலும் கைகளினுலும் தன் அபிப்பிராயங்களை வெளியிட்டுப்பார்த்தார். அதில் யாதொரு பிர யோஜனமுமில்லாமல் போயிற்று. பின் வாய்விட்டுச்சொல்லிப் பார்த்தார் அதுவும் பயனற்றுப்போயிற்று. அடக்கமுடியாக் காமாக்கினியில் மூழ்கி யவராக மனங்கலங்கி, மதிமயங்கி தன் நிலைமையறியாதவராய், தன் பரு வத்தையுமறந்து, மன்மதனுடைய பாணங்களில் அகப்பட்டு சகிக்கமுடி யாதவராய் சித்தஞ்சஞ்சலித்துத் தடுமாற்றமுற்றவராக தன்னுடைய அங்கக்குறைவுகளை மறந்துவிட்டு மோகசாந்திசெய்யும்படி அந்த சின்னத் தம்பி அவளைப்பார்த்து பெண்மணி! நிஷ்கபடமாய் மர்மமுடைத்து உனக் குக்கற்பித்த வித்தைக்குக் குருதக்ஷிணையாக உன்னிடத்து ஒருதரம் சம் போகசௌக்கியத்தை நானனுபவிக்கும்படி அனுக்கிரகித்து மன்மதசாஸ் திரத்தில் என்னை உனக்குச் சிஷ்யனுக்கிப் பரதசாஸ்திரத்தில் உனக்கு நான் குருவாயிருக்கும்படிசெய்து கடனைத் தீர்த்துக்கொள்.

தாயம்மை:— ஐயா! உபாத்தியாயர்கள் தகப்பனுக்குச் சமானர்க ளென்று உங்களைப்போன்ற நிகரற்ற பண்டிதவுத்தமர்கள் பலகாலும் முறையிடுவார்கள். யுக்தாயுக்தங்களை விசாரிக்காமல் இப்படிப்பட்ட அவி விவேக காரியத்தைச் செய்யத்தகுமா?

சின்னத்தம்பி:— என்னுடைய உயிரை உன்னிடத்தில் ஒப்பித்து விட்டேன். நீரட்சித்தாலும் சரி, பட்சித்தாலும் சரி.

தாயம்மை:— குருவே, உங்களுக்குத் தெரியாத சாஸ்திரங்கள் ஒன்றுமில்லையென்ற போதிலும் தருமநூல்களில் படிப்பித்த ஆசரியன்



தகப்பனையொற்றிருக்கிறுன். ஆகையால் நான் தங்கள் புத்திரியென்று எண்ணுங்கள். எங்கேயாவது, புத்திரியின்மேல் ஒருவன் மோகங்கொண் டானென்று கேட்டிருக்கிறீர்களா? அல்லது யெழுதப்பார்த் திருக்கிறீர் களா? இனி இப்பேர்ப்பட்ட வார்த்தை யென்னிடம் செலவழிக்காதபடி தங்களை பலதடவை வேண்டிக்கொள்கிறேன்.

சின்னத்தம்பி:— நீ சொல்வதுசரியே. ஆனல் பண்டைநாளைய பெண்களாகிய அகலிகை, மேனகை, சத்தியவதி, தாரை முதலியவர் களைப்பற்றி நான் உனக்கு எத்தனையோதடவை சொல்லியிருக்கிறேன் அவைகளை மறந்துவிட்டாயா! அவர்களைக்காட்டிலும் நீ மேலானவளு மல்ல, இதற்கு நீ சம்மதிக்காவிடில் என்னுடைய ஆவி நிலைத்திரா. உயிர் துறந்துவிடுவேனுகில், ப்ரும்மஹத்தி தோஷமும், குருவதாதோஷமும் உன்னைச்சுற்றும்.

தாயம்மை:— சுவாமீ! இந்த வார்த்தையை இனியென்னிடம் உச் சரிக்கவேண்டாம். இனி இதைப்பற்றி பேசுவீர்களாகில் என் மாதாபிதாக் களுக்குத்தெரிவிக்க வேண்டியதுவரும். நீங்கள் இதுவரைபேசியதை அறியாத்தன்மையென்று மறந்துவிடுகிறேன்.

சின்னத்தம்பி:— சீ சண்டாளி, உனது மனம் கல்லாயிருக்கு மென்று நான் கண்டிலனே! நீ புத்திசாலி யென்றும் நீதி சாஸ்திரம் அறிந் தவள் யென்றும் உனக்குண்டான மமதையினுலல்லவா என் வார்த்தையை தடுத்துப் பேசினுய்; உன் கர்வத்தை அடக்குகிறேன் பார். அடி சிறுக்கி! யென்னைவிட நீ அழகுள்ளவளென்று நினைத்தாயோ? உன் தகப்பனுரிடம் நீயும் சொல் நானும் சொல்லுகிறேன். யென்ன நடக்கிறது யென்று பார்ப் போம்; உன்னிடம் ஒரு நாளாவது கூடிக்கலவாமலிரேன். யென்று சொல்லி விட்டு உடனே சின்னத்தம்பி அவ்விடமிருந்து போய்விட்டார்.

தாயம்மை:— (உடனே கீழேவிழுந்து) ஐயோ! தெய்வமே கிணறு வெட்ட பூதமாயிற்றே! இந்த சண்டாளன் யென்ன சொல்வானே தெரிய வில்லையே! என் தகப்பனுரும் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறுர் களே! சற்று தெளிந்து சரி ஆகட்டும் வந்தது வரட்டும் சத்தியமே ஜயம்! யென்று சொல்லிக்கொண்டு அவளும் தன் பள்ளியரைக்குட்ச் சென்றுள்.

அவள் தன் சப்ரமஞ்சத்தில் நித்திரை செய்கையில் ஏதோ ஒரு வாள் தன் தலைக்குமேல் தொங்கவிட்டிருந்ததாயும் அது அறுந்து தன்னைக் கொல்ல வந்த பாம்பின் தலையில் விழுந்தும் அதிலிருந்து உண்டான விஷத்தினால் தன் அருமையான நாயானது செத்துக்கிடக்கக்கண்டு அதை யெடுத்து முத்தமிட திரும்பவும் குலைக்கக்கண்டாள். இந்த சப்த்தத்தினால் திடுக் கிட்டு எழுந்திருந்து தன் நாயைப்பார்க்க, அது நித்திரை செய்துகொண்டி ருந்தது. இது கனவு என்றறிந்து திரும்பவும் நித்திரை போயினாள். பூராவும் நித்திரை தெளிந்தெழுந்த பிறகு யென்ன நேரிடுமோ யென்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில், சின்னத்தம்பி வெகுவேகத்தில் அர சன் சந்நிதானத்தை காணவேண்டி உடனே லிகிதம் மூலமாய் யெழுதி யனுப்பினான். இவன் குலகுருவாகியபடியால் எதை உத்தேசித்து எமர் ஜென்ட் யென்று யெழுதியனுப்பியிருக்கிறானோ தெரியவில்லையே யென்று நினைத்து அரசன் உடனே கூட்டிவரும்படி கட்டளையிட்டான். ஆசாரியன் அரசனுடைய சமுகம் சேர்ந்ததும், அரசன் குருவை ஓர் ஆசனத்தில் உட்காரவைத்து ஐயா! சுவாமி! தாங்கள் இதுவரை இப்பேர்ப்பட்ட நேரத் தில் என்னைக் காணவந்ததில்லையே! இன்று யென்னவிசேஷம்? நான் காலை யிலும் தங்களைப் பார்த்தேனே! சின்னத்தம்பி வேந்தே! சும்மாதான் வந் தேன் உன்னை இரண்டுதடவை பார்க்கக்கூடாதா? அப்படியானால் சொல் யான் இதோ போகிறேன் யென்றால் உன் ஜோலிகள் முடங்கவேண்டாம்.

சந்திரசேகரன்:— குருவே! அப்படியல்ல. ஒருநாளுமில்லாத் திரு நாளாக யிருக்கிறதே யென்று உத்தேசித்துக் கேட்டேனேயொழிய வேறொன்றல்ல. தங்களை சதாகாலமும் என் அருகே வைத்து பூஜிக்க மிகவும் ஆவலுள்ளவனாயிருக்கிறேன். தங்களைக் காணுகிறதைவிட ஜோலி பெரிதா? அப்படியாகில் உடனே தங்களைக் கூட்டிவரும்படி கட்டளையிடு வேனா? தாங்கள் யென்னை யென்ன இப்படி நினைத்தீர்கள்?

சின்னத்தம்பி:— ராஜனே! நீ சொன்னாபல்லவோ அதேமாதரி இன்று ஒரு திருநாள்த்தான், உன்னிடம் சொல்லவும் வேண்டும் சொல்ல வுங்கூடாது. ஆகிலும் சொல்லுகிறேன் கேள்! உன் புத்திரிக்கு ஸங்கீத சாஸ்திரமுழுவதும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிவிட்டேன்.

இன்னும் வரும்

சிவஞானம்.

# ஸமாசாரக் குறிப்பு.

## கட்குடி விலக்கு

கட்குடியினாலுண்டாகும் கெடுதலை ஐரோப்பியரே நன்றாக உணர்ந்து அதை அடியோடு நீக்கிவிடும்படியாக, ருஷ்யா, பிரான்ஸ் தேசங்களின் பார்லிமெண்டில்ப்பேசி முடிவுசெய்துவிட்டார்களாம். இதனால் அவர்களின் ராஜ்யத்திற்கு 65-லக்ஷம் பவுண் நஷ்டமென்று தெரிகிறது. வேலை செய்யும் ஜனங்கள் குடியினால் பலஹீனமடைந்து கெட்டுப்போவதைக் கவனித்துவந்த கவர்ண்மெண்டார்கள் தங்கள் இராஜ்யத்திற்கு ரிவினி யூவில் ஏற்படுகிற பெரும் நஷ்டத்தைக்கூட சிறிதேனும் மதிக்காமல்ச் செய்த விஷயம் மிகவும் பாராட்டத்தக்கது.

சீதளமிருந்த நாட்டிலேயே குடியினாலவ்வாறு தீங்குவிளைந்தால் உஷ்ணம் மிகுந்த இந்தியாவர்சிகளுக்கு குடி பெருங்கேட்டை விளைவிக்கு மென்பது சொல்லவும் வேண்டுமோ?

*
* *

## திருநெல்வேலி-திருச்செந்தூர் இருப்புப்பாதை

திருநெல்வேலி திருச்செந்தூர் இருப்புப்பாதைக்கு ரூ. 1677706 போடப்பட்ட மதிப்புத்திட்டத்தை கவர்ண்மெண்டாரவர்கள் ஒப்புக் கொண்டு அதை ரெயில்வே போர்டுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரியவரு கிறது.

*
* *

வெள்ளத்தினால் ரெயில்வேபாதையில் சேதமுண்டாகுமோவென்று சந்தேகித்து அதிக பூமிவாங்க சம்மதமாவென்று டிஸ்டிரிக்ட் போர்டார வர்களைக்கேட்டதில் அவர்களும் அப்படியே ஒப்புக்கொண்டு S. I. R. ஏஜண்டுக்கு எழுதிவிட்டார்களாம்.

## குரங்கணி முத்துமாலையம்மன் கோவில்கொடை (திருவிழா).

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலூகா தென்திருப்பேரை கிராமத்திற்கு வடக்கும், பெருங்குளம், மங்கலக்குரிச்சி கிராமங்களுக்குத் தெற்கேயுமுள்ள தாம்பிரபர்ணிநதியின் தென்கரையில் குரங்கணி முத்துமாலையம்மன்கோவில் ஒன்றிருக்கிறது. அந்தக்கோவிலில் பிரதிவருஷமும் ஆனி-மீ கடைசி செவ்வாய்க்கிழமையில் கொடை வழக்கமாக நடந்துவருகிறது. அதுபோல சென்ற 13–7–15 செவ்வாய்க்கிழமையன்று நடந்த கொடையிலும் பலான ஊர்களிலிருந்து ஏராளமான வண்டிகளும் ஆயிரக்கணக்கான ஜனங்களும்வந்து பொங்கல்முதலியது நடத்தி கிடாய்களைப் பலிகொடுத்தார்கள். ஷை ஆட்டுக்கிடாய்கள் சுமார் 15000 இருக்கலாம் இம்மாதிரி ஒரேகாலத்தில் அனாவசியமாக இப்பெரும் ஜீவவதை ஏற்படுவதும் ஓர்பரிதாபமே. செவ்வாய்க்கிழமையன்று சுமார் ரூ 400 வரை செலவுசெய்து வாணவேடிக்கைகளும், அலங்காரமான பந்தல்களும் போட்டிருந்தார்கள். இதைத்தவிர வேறுவிதமான செலவுகளிருப்பதாகத் தெரியவில்லை. எக்காலமும் வெள்ளியும் செவ்வாயும் பூஜை செய்வதைத்தவிர மற்றநாள்களில் பூஜையுமில்லையாம். ஷை பூஜைக்கு சாம்பிராணி சூடனைத்தவிர நைவேத்தியமுதலிய யாதொரு செலவும் கிடையாதாம்.

ஷை கோவிலுக்கு வருஷம் ஒன்றுக்கு ஆதாயம் வருகிற சுமார் ரூ 2000-மும் என்னசெலவுசெய்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் சிலர் அம்மன்பேருக்கே நிலம்வாங்கி வருகிறார்கள் என்றும் சொல்கிறார்கள் எப்படியிருந்தபோதிலும் தற்காலத்தின் நாகரீகத்தைக் கவனித்தும் நம்முடைய இந்தியா முன்னேற்றமடைவதைக் கருதியும் அக்கோவிலின் மானேஜர்கள் பரோபகாரமாக கல்விச்சாலைமுதலிய வித்யா அபிவிர்த்திகளுக்கு அந்தப்பண்டின் உதவியைக்கொண்டு நடத்திவரும்படி முயற்சிப்பார்களாயின் யாவராலும் புகழற்குரியதாகும். அத்துடன் முற்கூறிய ஜீவஹிம்சையை நிறுத்தும்படி முயற்சிப்பதும் புகழற்பாலதாம்.

புதன்கிழமையன்று நடந்த ஆட்டுக்கிடாய் ஜீவஹிம்சையின் மத்தியில் (கள்ளுள்ளி) என்ற ஓர் பிச்சைக்காரன் அங்குள்ள கடைகளில் ¼-அணா பிச்சை வேண்டுமென்று இரக்க அவர்கள் ஒரு பைசுக்கு ஜாஸ்தி கொடுக்கமுடியாதென்று மறுக்க அதைப்பொறுக்க முடியாதவனாய் கையிலிருந்த கத்தியைக்கொண்டு தன் சரீரமெங்கும் பலமாய்க் குத்திக்கொண்டு யாவருங்கண்டு திகிலடையும்படியான ரக்தப்பெருக்குடன் விளங்கினான். அதைக்கண்ட நமது காருண்ய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஜனங்களின் அமைதியைக்கருதி அவனை உடன் அப்புறப்படுத்திக்கொண்டுபோனதும் மெச்சத்தக்கதே.

உ

பரமகுருப்யோநம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 AUG 1915
MADRAS

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-ஹு ஆகஸ்டு-மீ { NO. 2.

## இந்து ஸங்கீதம்

(6) இவ்வாறு நாதவித்தையாகிய ஸங்கீதமானது ஸாக்ஷாத் ப்ரும்மாவினாலேயே முதன் முதல் வேதத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதினால் ஸகல வித்தைகளிலும் மேன்மைபெற்று விளங்குகிறது. இன்னும் "யாக்ஞவல்கியஸ்மிருதி" யில்.

"வீணாவாதனதத்வக்ஞ–ச்ருதிஜாதிவிசாரத:
தாளக்ஞஸ்ச்சாப்ரயாஸேன–மோக்ஷமார்க்கம்ஸகச்சதி"

இதன்பொருள்:— வீணாகானஞ் செய்வதின் தன்மையைத் தெரிந்தவர்களும், ச்ருதியின் ஜாதியைத் தெரிந்தவர்களும், தாளத்தினுடைய விவரத்தையறிந்தவர்களும், பிரயாசையன்னியில் மோக்ஷமார்க்கத்தையடைகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மோக்ஷமார்க்கத்திற்கு இச்சங்கீதத்தைக் காட்டிலும் எளிதான உபாயம் வேறில்லை யென்று ஏற்படுவதால் ஒவ்வொருவரும் ஸங்கீதத்தின் நுட்பங்களை பூராவுந் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால்

"சிசுர்வேத்தி பசுர்வேத்தி–வேத்திகானரஸம்பணி:
ஸயேவசங்கரோவேத்தி–ஸமக்ரம்வேத்திநாபர:"

அதாவது பகுத்தறிவில்லாத பசுவும், சிசுவும், பாம்பும், கானரஸத்தைத் தெரிந்துகொள்ளுகிறது. ஆனால் பூரணமாகவுள்ள கானரஸத்தை ஸாக்ஷாத் சங்கரனைத்தவிற ஏனையோர் தெரிந்துகொள்வது அரிதுயென்றிருப்பதால் கூடியவாறு தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியத்திலும் அவசியமாகும்.

(7) இனி ஸங்கீதமென்பது இன்ன பொருளடங்கிய தென்பதையும் அதை எவ்வாறு அப்பியாசிக்கும்படி ஸங்கீத சாஸ்திரங்கள் கூறுகின்றனவென்பதையும் விவரிப்போம்.

"கீதவாத்யோபயம்யத்ர
ஸங்கீதமிதிகேச்சன"

கீதம், வாத்தியம், ஆகிய இவையிரண்டுமே ஸங்கீதமென்று சிலர் சொல்லுகிறார்களென்று பொருள்.

"கீதம் வாத்யம் ததா நிருத்யம்
த்ரயம் ஸங்கீதமுச்யதே"

(ஸங்கீதரத்னாகரம்)

இதன்பொருள்:— கீதம், வாத்தியம், நிருத்தம், ஆகிய இவை மூன்றும் ஸங்கீதமென்று சொல்லப்படுகிறது.

(8) ச்ருதி, ஸ்வரம், இராகம், கீதம், கீர்த்தனங்கள் முதலியவை எதினின்றும் உண்டாகிற தென்பதை இதனடியிற்கண்ட ச்லோகத்தினால் தெரிந்துகொள்ளலாம்.

"நாதாத்ச்ச ச்ருதயோஜாதா
ஸ்தாப்யாம் ஷட்ஜாதயஸ்வரா:
தேப்யோராக ஸமுத்பன்னோ
கீதம் தஸ்மாச்சஜாயதே
அதோநாதாத்மகம் கீதம்
வாத்யம் கீதானு வர்த்திச்சா"



இதன்பொருள்:— நாதத்திலிருந்து ச்ருதியும், ச்ருதியிலிருந்து ஷட்ஜ முதலான ஸ்வரங்களும், ஸ்வரங்களிலிருந்து இராகமும், இராகத்திலிருந்து கீதமும் உண்டாகிறது. இன்னும் கீதம் நாதரூபமாதவும், வாத்யம் கீதத்தை யனுசரித்துமிருக்கிறது. அதாவது நிழலானது எதார்த்த ரூபத்தை யனுசரித்திருப்பதுபோல் வாத்தியத்தில் வாசிப்பது வாய்ப்பாட்டை யனுசரித்தே யிருக்கவேண்டுமென்பது ச்லோகத்தின் கருத்து. இப்பொழுது சில நவீனவித்வான்கள் வாத்தியங்களில் தங்களுக்கு சிரமமன்னியில் எந்த ஸங்கதிகளை உபயோகப்படுத்தக்கூடுமோ அவைகளை ஓர் சிட்டாவாகப் பழக்கப்படுத்திக்கொண்டு அதே உண்மையான ஸங்கீதமென்றும், அவ்வாறே பாடகர்களும் தங்களைப்பின்பற்றிப் பாடவேண்டுமென்றும் சொல்லத் தலைப்பட்டு விட்டார்கள். அந்த ஸங்கதிகளை வாயினால்ப் பாடும் விஷயத்தில் கேழ்க்க ரஸாபாஸமுண்டாகுமென்பதை விதரணையான ஞானமுடையோர் ஒப்புவது திண்ணம்.

(9) இனி பாடுவதற்கு அதிகாரமுடையவனின் லக்ஷணத்தைப்பற்றி இதனடியிற்கண்ட ச்லோகத்தினால் தெரிந்து கொள்வோம்.

"வாங்மாதுருச்யதேகேயம்
தாதுரித்யபிதீயதே
வாச்சம்கேயம்தகுருதே
யஸ்ஸவாக்கேயகாரக:"

இதன்பொருள்:— சப்தரூபமாகயிருக்கப்பட்ட ஸாஹித்யங்கள், மாதா, பாட்டுக்களின் வர்னமெட்டுகள்யாவும் தாது, இவை இரண்டின் பொருளையுமறிந்து பாடுகிறவனே பாடுவதற்கு அதிகாரமுடையவன். இதனால் ஒருவன் ஸங்கீதத்தில் ஸ்வரஞானம், தாளஞானம், இவைகளை தெரிந்துகொள்வதினால் மாத்திரம் பாட்டின் தொழிலுக்கு அதிகாரியாகிறானில்லை. பாடுகிறபாட்டின் பொருளையும் அவசியமறிந்திருக்க வேண்டுமென்றுகிறது. இக்காலத்திய வித்வான்களுள் இந்த ச்லோகத்தின் கருத்தையனுசரித்து நடப்போர் மிகச்சிலரேயாகும்.

(10) ஆனால் வாய்ப்பாட்டிற்கு இனிமையான குரல் பெரும்பாலும் சிலருக்கே அமைந்திருக்கிறது. அவ்வாறு குரல் இனிமையாகயிருப்பதற்கு நம்முன்னோர் கூறியிருப்பதை அடியிற்கண்ட ச்லோகத்திற் காண்க.

"வித்யாதானேனதபஸா
பக்தியாவா பார்வதீபதே:
ப்ராபூதபாக்யவிபவை:
ஸுசாரீரமவாப்யதே"

இதன்பொருள்:— வித்தையைத் தானஞ்செய்வதினாலும், தபசு செய்வதினாலும், சிவபக்தி செய்வதினாலும், பூர்வஜன்ம புண்ணிய விசேஷத்தினாலும், கேழ்க்க இனிமையான சாரீரம் (குரல்) உண்டாகிறது.

குறிப்பு:— மேற்கண்ட ச்லோகத்தின் பொருள் ஒவ்வொன்றையும் கவனிக்கும்பொழுது (1) வித்தையைத் தானஞ்செய்வதினால் அதைக்கற்றுக்கொள்ளும் மாணாக்கரின் மனது திருப்தியடைந்து ஆனந்தப்படுகிறது. (2) குரல் அடிக்கடி பாடப்பாடத் தெளிவாகுமாதலால் சிஷ்யர்களுக்கு நல் மனதோடு சிரமப்பட்டு அடிக்கடி தானே பாடிக்காட்டி சொல்லிக்கொடுப்பதால் தன்குரல் நன்றாகிறது. (3) தபசுசெய்வதினாலும், சிவபக்திசெய்வதினாலும்யென்று சொல்லப்பட்டிருப்பதால் இவை இரண்டிற்கும் ஸ்திரீ சம்போகத்தை வர்ஜிக்கவேண்டியதுடன் இந்திரிய நிக்ரஹமும் அவசியம் வேண்டும் இல்லையேல் சித்தியாது. குரல் அதாவது சாரீரம் இனிமையாகயிருக்கவேண்டில் முற்கூறியவைகளை திட்டமாக அனுசரிக்கவேண்டும். (4) பூர்வஜன்ம புண்ணிய விசேஷத்தினாலும் யென்று சொல்லப்பட்டிருப்பதால் ஒவ்வொரு பிறவியிலும் முன்செய்த கர்மத்தையனுசரித்தே சரீரம் உண்டாகின்றமையால் மேற்கண்ட அனுட்டானங்கள் முன்ஜன்மங்களிலிருந்தே தொடர்ந்து வந்திருக்கவேண்டும். தவிறவும் சாரீரம் யென்ற பதமானது, சரீரத்திற்கு சம்மந்தப்பட்டதினாலேயே பேர் உண்டானது பற்றி சரீரத்தையும், மனதையும் எப்பொழுதும் நல்லஸ்திதியில் வைத்துக்காப்பாற்றி வரவேண்டுமென்றாகிறது.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. ~~~~ = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## த்யாகராஜய்யரவர்களின் கீர்த்தனை

இராகம்-நடபைரவி-ஆதிதாளம். 1-களைச்சவுக்கம் லகு ½ இடத்தில் எடுத்துக்கொள்ளவும்.

ஆ=ஸ, ஸ–ரி, ஸா–க, ஸ–ம, ப, ஸ–த, கை–நி,
அவ=ஸ, கை–நி, ஸ–த, ப, ஸ–ம, ஸா–க, ஸ–ரி,

ப=சேத்துலார ச்ருங்காரமுஜேஸி
ஜூத்துரோ–ஸ்ரீராம=

அ=ஸேதுபந்தன–ஸாரபதிஸா
ஸீருஹபவாதுலு–பொகடநா=சேத்து=

ச=மெருகுபங்காரெந்தெலுபெட்டி
மேட்டிபௌஸரிக–வல்வலுகட்டி
ஸாரதருஸாமமுல–ஸிகநிண்டஜாட்டி
ஸாந்தரமகுமோமுன–முத்துபெட்டி=சேத்து=

(2) மொலனுருந்தனபு–கஜ்ஜெலுகூர்ச்சி
முத்துகானுதுட்டனு–திலகமுதீர்ச்சி
அலகலபைராவி–ரேகயுஜார்ச்சி
அந்தமைனநின்னு–ரமுனஜேர்ச்சி=சேத்து=

(3) ஆணிமுத்யால–கொண்டெவேஸி
ஹௌஸாகா–பரிமளகந்தமுபூஸி
வாணிஸாரட்டிசே–விஸாகவாஸி
வாஸியனுச்சுத்யாக–ராஜனுதான்னிரோஸி=சேத்து=

| லகு. | த்ருதம். | த்ருதம். |
|---|---|---|
| ப=* * * * ச்ரா * * ச்ரா * *–ச்ரா நீதாபாமா * *–பாதாநீ * * | தாநிதபா * *–* * தாபா * * | * * * * * * * *–மாபாதாநீ |
| * * * * சே * * த்து * *–லா———–ர * *–ஸ்ரீம்—* * | கா———–* *–* * ரமு * * | * * * * * * * *–உ——— |
| 1. ச்ரா = ஷை | ஷை | மாபமமா * *–கா * * ரீகரி |
| ———= ஷை | ஷை | ஜே——— * *–ஏ * * சீ—— |
| நீ * * சா–ரீ நீ * * சா * *–* * * * * * * * பாதாநீ * * | ஷை | ஷை |
| ஈ * * இ–ஜூத்து * * சோ * *–* * * * * * * * ஸ்ரீவ்— * * | ஷை | ஷை |
| 2. ஷை ஷை –* * * * * * * * பாதாநீச்ரா | பாதாநீதா–பாமா காமா | பாதாபாபா–மாமாகாகா |
| ஷை ஷை –* * * * * * * * ஸ்ரீவ்—— | க——ர——–மு--- | உஜே——–ஏ சீ—— |
| 3. நீநீ சா–ரீ நீ * * சா * *–* * * * * * * *–பாதநிதாநிச் | நீச்ரா–பாதநிதாநீபாதா | மாபதபா–சாபாமா–தபபம |
| ஈ——ஜூத்து * * சோ * *–* * * * * * * *–ஸ்ரீவ்—— | ——கா——–ர—– | மு——ஜே——சி—— |
| 4. மககரிரிச–ரீ நீ * * சா * *–* * * * * * * *–ரிகமபதநிச்ரி | ச்ரச்ரா–பாதநிதாநீ பாபா | மகரீ–தபாமகரி–பமாகரிச |
| இ———ஜூத்து * * சோ * *–* * * * * * * *–ஸ்ரீவ்—— | ——கா——ர—– | மு---ஜே——–சி—— |
| மககரிரிச–ரீ நீ * * சா * *–* * * * * * * *–ரீகாமபா | தாநீ–தாதாபா–மாமாகா | மககரிரீ * *–* * * * சா * * |
| இ———ஜூத்து * * சோ * *–* * * * * * * *–ஸ்ரீ—— | ரா———— | ம—— * *–* * * * ஆ * * |
| அ=* * * *–பாதாநீ * *–தாநிதபாதாபா * *–பாமாகாரீ | காமாபாதாநீதாபா * * | தாநீ–தநிச்ரா * * நீச்ரா * * |
| * * * *–ஸேது * *–பந்——— * *–த—— | ந—ஸா—ர ப * * | தீ——— * * ஸர * * |
| 1. * * * *–நீ * * நீ * *–தநிச்நிநிததாபா * *–மபதபகமபம | காமா–பாதாநீதாபா * * | ஷை |
| * * * *–ஸே * * து * *–பந்——— * *–த—ந—— | ———ஸா—ர ப * * | ஷை |

| வகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| **-ரீசா **-நீ ** தா **-பா ******-தா ** மா ** | கா ** ரீ **-கா ** மா ** | பா ** தா **-மாபாதாநீ |
| **-வீ- **-ரு ** உ **-ஹ ******-ப ** வா ** | து ** உ **-லு ** பொ ** | க ** ட **-நா—— |
| சாரீ = சா = | | |
| ——-= சே = | | |
| ச = ****-பபபா ** பா **-பாதநிதாநீ-தாநித-பாநித | பா **-மாபமமா ****** | கா ******-ரீகரீரீ ** |
| ****-மெருகு ** பங் **-கா——வெர——ந்து | லு **-வெ—— ****** | எ ******-ட்டி- ** |
| 1. ****- ஷை | பா **-மபதப-கமபமகாரீ | தபபம-மககரிசா ****** |
| ****- ஷை | லு **-வெ——எ—— | ட்டி—— ****** |
| ******-பாமா ** பமகா-காரீசாரீநீ ** சா ** | ******-ரீகாமாபா ** | ********-**** பாமா |
| ******-மேட்டி ** யெள——ஸரி ** க ** | ******-வ-ல்வலு ** | ********-**** உ— |
| 1. காமாகா-பாமா **-மபதப-பமமகரிச-ரீநீ ** சா ** | ஷை | பாதநிதாநீ-பாதாமாபா- |
| உ——மேட்டி **-யெள——ஸரி ** க ** | ஷை | க——அ—ட்டி— |
| 2. காமாகா- ஷை | ஷை | தநிசா-நிதபமகாமா-தபபம |
| இ—— ஷை | ஷை | க——ட்டி— |
| காமாகா- ஷை | ஷை | பாதநிதாநீ-தா ** பா ** |
| இ—— ஷை | ஷை | க—— ட்டி ** |
| ******-நீதாநீசா **-நீ ** சா ****-நீசா ** | **** ரீகா **-ரீ ரீ ** | சா ** நீ **-தா ** பாதப |
| ******-ஸாரதரு **-ஸா ** ம ****-மூல ** | **** விக **-நிண்ட ** | ஜா ** உ **-உ ** ட்டி— |
| 1. மாபாமா- ஷை | ஷை | சாரீச-நீசநி-தாநித-பாதப |
| இ—— ஷை | ஷை | ஜா—— —— —— ட்டி— |
| மாபாமா-சா ** சாசா **-சாநீதா ** பா ****** | தாபா-மாகா ** கா ரீ ** | ரீகாமாபா-மாபாதாநீ- |
| இ——ஸா ** ந்தர **-மஅகு ** மோ ****** | ஒ——முன ** முத்து ** | வெ——எ——ட்டி— |
| சாரீ = சா = | | |
| இ-- = சே = | | |



| வகு. | திருதம். | திருதம். |
|---|---|---|

"ஸாரதருஸாமூல". வென்றதை பல்லவி பாகமாவைத்துக்கொண்டு அதற்கு கற்பனை ஸ்வரங்கள் பாடவேண்டிய மாதிரியை இதனடியில் எழுதியிருக்கிறது.

| வகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ******-ஸாரதருஸாமூல | ****** நீ-****** தா | ****** பா-****** மா |
| 2. ******= ஷை | ****** சா-** ரீ ** சா | ** நீ ** நீ-** தா ** பா |
| 3. ** மா **= ஷை | ****** ரீ --சா ரீசா—நீ | ரீசாநீ-தாநீசா--பாநீ |
| 4. தாபாமா = ஷை | ****** பா --நீ பா சா நீ | ரீசகா-ரீகாசா-ரீநீ க |
| 5. தாபாமா = ஷை | ****** பத--பநிதமபதநிச் | நிகரிசநித-சரீசமகரிசநி--கரீ |
| 6. சநீ தபம = ஷை | ****** சம்--கா * ரீசநி-சக் | ரீ * சநித--நிரீசா * நிதப--நிச் |
| 7. நீ * தபம = ஷை | ****** கரீ--சரீ நிசதநிச் | ரீசா--நிசபதநிசநீ--சநிசதநி |
| 8. பதாதபம = ஷை | ** சம்கா--க ம ரீ-ரீ க சா-ச ரீ | நீ-நிசதா-தநிபா--பநிதா-சநி |
| 9. தாதபாம = ஷை | ரீ ச நி சா--ரீசநிச-தநிசநிதபம | பதாபதநி--தநீதநிச-ரீசாக் |
| 10. ரீசநிதபம = ஷை | நிநிததாநி-ததநிததநிததபம | பதபபா-தபபதப-பதபமகம |
| பா ***** ம-நிதபமபதநித-நீநிசாசரீரீ-காகம்கரீச் | நி நீ ரீ ரீ-பபா-சசா-க ரீ சரீ | நிசாதநீபதா-மபதநிசரீச் |
| ** நிதபம = ஸாரதரு = | | |

(பத) ப = சேதுலார = கைகளினால்
ச்ரிங்காரமுசேஸி = (உன்னை) அலங்காரஞ்செய்து
ஜூத்துனோ = பார்ப்பேனோ?
ஸ்ரீராம = ஸ்ரீராமனே!
அ = ஸேதுபந்தனா = ஸமுத்திரத்தில் அணைகட்டியவனே!
ஸுரபதி = தேவேந்திரன்
ஸரஸீருஹபவாதுலு = தாமரைமலரில் உற்பவித்த ப்ரும்மா [முதலானவர்கள்
பொகட = புகழ
நா = என்னுடைய
ச = மெருகு = மெதுவிட்டு பிரகாசிக்கின்ற
பங்காரு = தங்கத்தினால்செய்த
அந்தெலு = காலிற்போடும் ஆபரணங்களை
பெட்டி = பூட்டி
மேட்டியௌ = விலையுயர்ந்த
ஸரிகவல்வலு = ஜரிகைபோட்ட மெல்லிய வஸ்திரங்களை
கட்டி = கட்டி
ஸுரதரு = தேவலோகத்திலுள்ள கற்பகவிருக்ஷத்தின்
ஸுமமுல = புஷ்பங்களை
ஸிகநிண்ட = தலைமுடி பூராவிலும்
ஜுட்டி = சூடிமுடித்து
ஸுந்தரமகு = அழகுநிறைந்த
மோமுன = முகத்தில்
முத்துபெட்டி = முத்தமிட்டு
(2) மொலனு = இடுப்பில்
குந்தனபு = இழைத்த
கஜ்ஜெலு = கெஜ்ஜைகளை
கூர்ச்சி = கோர்த்துக்கட்டி
முத்துகா = அழகாக
நுதுட்டனு = நெற்றியில்
திலகமு = பொட்டு
தீர்ச்சி = வைத்து



அலகலபை = சுருண்ட முன்நெற்றிமயிர்களில்
ராவிரேகையு = தலையாபரணங்களை
ஜார்ச்சி = அணிந்து
அந்தமைன = அழகான
நின்னு = உன்னை
உரமுன = மார்புடன்
ஜேர்ச்சி = ஆலிங்கனஞ்செய்து
(3) அணிமுத்யாலு = உயர்ந்தநல்முத்துக்களால்
கொண்டெவேஸி = கொண்டைமுடித்து
ஹௌஸுகா = சிறந்த
பரிமளகந்தமு = நறுமணமுள்ள சந்தனாதிகளை
பூஸி = பூசி
வாணிஸுரட்டிசே = சிறந்த சுருட்டியால்
விஸரக = விசிறுவது
வாஸிவாஸியனுச்சு = மேல், மேலென்று
த்யாகராஜநுதா = த்யாகராஜனால் துதிக்கப்பட்டவனே!
அன்னி = எல்லாவற்றையும்
ரோஸி = ஒழித்து.

(பொழி) ஸ்ரீராமா! ஸேதுபந்தனஞ் செய்தவனே! தியாகராஜனால் துதிக்கப்பட்டவனே! தேவேந்திரன் ப்ரும்மா முதலானவர்கள் புகழும்படி. மெதுவிட்ட தங்கத்தினால்செய்த கால் ஆபரணங்களைப்பூட்டி விலையுயர்ந்த ஜரிகைபோட்ட மெல்லிய வஸ்திரங்களைக்கட்டி. தேவலோகத்திலுள்ள கற்பகவிருக்ஷத்தின் புஷ்பங்களை தலைமுடிபூராவிலும் சூடிமுடித்து அழகுநிறைந்த முகத்தில் ஒருமுத்தமிட்டு இடுப்பில் இரத்தனங்களிழைத்த கெஜ்ஜைகளைக் கோர்த்துக்கட்டி. அழகான நெற்றியில் ஓர் பொட்டுவைத்து முன்நெற்றிமயிரில் ஜடைபில்லை முதலான தலையாபரணங்களை அணிந்து அழகான உன்னை மார்போடு ஆலிங்கனஞ்செய்துகொண்டு உயர்ந்த நல்முத்துக்களினால் கொண்டைமுடித்து சிறந்த நறுமணமுள்ள சந்தனாதிகளைப் பூசி சுருட்டியால் வீசுவது மேலான. சுகத்திலும் சுகமென்று வேறுவிஷயங்களெல்லாவற்றையும் ஒழித்து என்னுடைய கைகளினால் உன்னை அலங்கரித்துப் பார்ப்பேனோ?

# இராக லக்ஷணம்.

## 5. ஸ்ரீராகம் 22-வது மேளகர்த்தா கரஹரப்ரிய ராகத்தின் ஜன்யம்.

ஆ=ச, ச—ரி, சு—ம, ப, கை—நி,
அவ=ச, கை-நி, ப, ச-த, நி, ப, சு-ம, ச-ரி, சா-கா, ரி,

### இலக்கணம்.

"ஸ்ரீராகஸ்ஸ க்ரஹப்பூர்ண ஸ்ச்சாரோஹே அல்பதைவத:
அவரோஹேகவக்ரம்ஸ்யாத் ஸாயங்கேயசுபாவ:"

இதன்பொருள்:— ஸ்ரீராகம் ஷட்ஜக்ரஹம், ஸம்பூர்ணம், ஆரோஹணத்தில் அல்பதைவதம், அவரோஹணத்தில் காந்தாரம் வக்ரம் இந்த ராகம் ஸாயங்காலம் பாடத்தக்கது.

குறிப்பு:— ஆரோஹணத்தில் அல்பதைவதம் என்று சொல்லப்பட்டிருப்பதற்கு மாறாக அனுஷ்டானத்தில் அவரோஹணத்தில்ப் பாடிவருவதாலும் இன்னும் ஆரோஹணத்தில் காந்தார தைவதங்கள் பூராவும் வர்ஜிப்பதாலும் அவ்வாறே அனுஷ்டானப்படிக்கு இதில் ஆரோஹணவரோஹண ஸ்வரங்கள் எழுதியிருக்கிறது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா ****** ரிமபநிச்ா ****** ச்ா ******
ச்நிச்ரி ** ச்—ச்நிசாரிசநீ ****** ச்ா-பாநிச்ாநிபா-****—
பாதநிதாநி-பமரீ ******-ரிகா**ரிசா** =

(2) ரிமபா**பா**—பமபநீ**பா—பம பாநிபமபநீ**பா-
ரிமபநிபா**—பநிச்நிபா**—பாரிச்ா****ரிச்நி
பா****-பமபநீ**பா-பமபதா****நி-பமரீ****ரிபம
ரீ******-சரிபமரீ****-நிசரிமரீ******ச-
சநிசரிசரிகா****ரிசா****** =



(3) சரிமா******ப—ரிமபா******—பமநீ******ப-
பமபநிச்ா******—ரி**ச்ா**—ரிக்ரிரிச்ா-நிச்ரி**ச்ா
ச்நிரிச்-நிச்ா**-பநிச்ரிச்நிச்ா**-மபமப
நிச்ரிச்நிச்ா**-ரிமரிமபநி-மபநிச்ரிச்நிச்ா**-

ச்நிச்ரிம்ரி******ச்-ச்ரிச்ரிக்ா**—க்ரி**—ரிச்ா**-
ச்நிரிச்நீ******பா—பமபநிச்ா******நிபா**-
பதா**நிபமரீ**—ரிகா**ரிசா****** =

(4) நீ**பா**—நிப—மபநீசநிபா**நிப-மபநிச்ரி****
ச்ா—ச்நிச்ாரிசநீ**ச்ா—பாநிச்ா**நி
மபநிச்ாநி-பமபநிச்ாநி-ரிமபநிச்ாநி-
நிசரிசரிமரிமபமபநிபநிச்ாநி—மபநிச்ரிச்ாநி-

பமபநீ******பம—தபமரீ**—பமா**பரீ—ரீபமரீ**

ரிகா**கரி—ரிசநிசரிகரிசா****ரி—நிச-பநீ******சா** =

(5) நிசரிமா******ப-ரீகரிரிசநிசா**ரிரிபமபா******-
பமப
பமபநீ****பா-மபாச்ாநீச்ா******-
ச்நிச்ரி******—ச்ாரிம்ரி******—ரிம்பா**ம்-
ரிம்ரிம்ரி******—ச்நிச்ரிச்ரிக்ாரிரி****-ரிச்

நிச்ரிக்ரிச்ா**ரி—ச்நிபநிச்ாரிச்நீ** ச்-நிப

மபநீச்நிபா**நி—பமரிமபதா**நிபம—ரீபமரீ**
ரிசநீசரிமா****ப—ரீமபா**மரீ**ச்-சநீ

சரிசரிமரீ******ச-நிசரீகரிசா**ரி-நீச
பநி-மபநீ******சா**** =

## 6. சங்கராபரண ராகம் 29-வது மேளகர்த்தா தீரசங்கராபரணம்.

ஆ=ச, ச—ரி, அ—கா, சு—ம, ப, ச—த, கா—நி,
அவ=ச, கா—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

## இலக்கணம்.

"சங்கராபரணம் பூர்ணம்–ஸாயங்கேயஞ்ச ஸக்ரஹம்"

இதன்பொருள்:— சங்கராபரணம் ஸம்பூர்ணம், ஷட்ஜக்ரஹம், ஸாயங் காலத்தில் பாடத்தக்கது.

## இராக ஸஞ்சாரம்.

(1) சரிகமபா****** தாநிச்ா******–ச்நிரிச்
நிதா****பா****மகமபரீ**சா****–

(2) மாகா**கா**கரிகமகா**கரி காமகரீ**ச
நிசரிகமகா******–கமபதா**ப:மக–ரிகமாபம
காம ரிகசரிகமா******–பநிதா**பமக-
மபதநீ******-ச்ாரிச்நிச் தநீப-தநிச்ா******-
ச்நிரிச்தா****ப-மபநிதா**ப-மகரிகமக
கரீ**ச-நிசரிகா**ரி-சநிசாரிசநீச-
தநீ**சா******=

(3) ரிகமா**மா**-மாபமகா**கா**கரிநிரி
நிரிகமா******-காமகரிக சா******-
ரிகமப-பமமா****-கமபா******-பமகமபா******-
பமகசரிகமபா******-மபாநிதா**நிபா**-
தநிச்ா******-ச்ா******-ச்ரிக்ாம்க் ரிச்
ச்ா**-ச்நிச்ரீ******ச்-ச்நிரிச்நிச்ா**நிதா**-
தநிச்ா**நிதா**மபநிதநிச்ா**நிதா**
மபநிதா**–பமபாதபபமமா******-மா****
மாபம கா**க்ா**-கரிகமரீ**சா******=

(4) கமபா**பா**-பமபதா****பா-பமபாதபமா**
மா**-கரிகமகா**கா**-கமபமகா**



கரிகாமகரீ**சா-சரிகமபா**பா**-தாநிதபா**
பதநீச்நீச்நீச்நீச்நிதபா**-பதநீச்நிதாநீபா**-
தநிச்ா**ச்ா**-பதநிச்ா**-மபதநிச்ா**-கமப
தநிச்ா**-பமகசரிகமபதநிச்ா**-ச்ரிக்ச்ா**
ச்ரி க்ம்ா**க்–ரீக்ரீக்–ச்ா**-ச்நிச்ரீ******-
ச்ாரிச்-நீச்நி-தாநித-பாதபமா**-பதநிச்ா**
நீச்நி-தாநித-பாதப-மாபமகா**-கமபதா******-
பாதப-மாபம–காமக-ரீகரிசா**-
சநிசரிகரிகமா**க–ரீபமகா**ரிசநி-
சநிசதநீ**ப–தாநிசா******=

(5) கமபாதா**நீ**பா**–தா**நீச்ா******-
நீ**ச்ாரிக்ா******ரி-ச்ாரீக்ச்ா**
ச்நிநீ**-ச்நிச்ரீ******ச்-ச்ரிக்நிரிச்-நிரிச்நி
ச்தா******பா–மபமபச்ா******நிதா****பா-
கமக-மபம-பதப-தநித-நிச்நிதா******பா-
சரிச-ரிகரி-கமக-மபம-பதப-தநித-நிச்நி-
ரிச்நிச்தா******பா–தநிச்ரிக்ா******ரி
ச்நிதா****பா-ச்நிச்ரிக்ம்ா******–க்ாம்க்
ரீக்ரி-ச்ாரிச்–நீச்நி-தாநித-பாதப-மாபம–காமக-ரீகரி
சா**நி-சரிகமபதா**பமகரிசநி-சரிகம
பா******-கரீ****சா******=

## 7. பைரவி ராகம் 20-வது மேளகர்த்தா நட்டபைரவி ராகத்தில் ஜன்யம்.

ஆ=ச, ச–ரி, சா–க, சு–ம, ப, ச–த, கை–நி,
அவ=ச, கை–நி, சு–த, ப, சு–ம, சா–க, ச–ரி,

## இலக்கணம்.

"பைரவீ ராகஸம்பூர்ணஸ்
ஸாயங்காலேப்ரகீயதே-
பஞ்சச்ருதிதைவதஞ்ச
க்வசித்ஸ்தானேப்ரயுஜ்யதே"

இதன்பொருள்:— பைரவி ராகம் ஸம்பூர்ணம், ஸாயங்காலத்தில் பாடத் தக்கது. சில இடங்களில் பஞ்சச்ருதி தைவதம் உபயோகப்படுத்தப்படுகிறது.

குறிப்பு:— பஞ்சச்ருதி தைவதம் என்றபேர் 22 ச்ருதிக்கணக்கில் ஏற்பட்டது. அதே ஸ்தானத்திற்கு 12 ச்ருதி ஏற்பாட்டில் சதுர்ச்ருதி தைவதமென்று சொல்லப்படுகிறது. இந்தப் பெயரே தற்காலம், அனுஷ்டானத்தில் வழங்கிவருவதுந்தவிர சில இடங்களில் பஞ்சச்ருதி தைவதம் உபயோகிக்கவேண்டுமென்று ச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பதை ஆதாரவாக வைத்துக்கொண்டு ஆரோஹணத்தில் மட்டிலும் சதுர்ச்ருதி தைவதத்தை உபயோகப்படுத்தியும் வருகிறார்கள். ஆனதால் தற்காலம் அனுஷ்டானத்தில் உள்ளபடி இதில் ஆரோஹணவரோஹண ஸ்வரஸ்தானங்களை எழுதியிருக்கிறது. இதேமாதிரி "விரிபோணி" வர்ணமும் எல்லோராலும் பாடப்பட்டுவருகிறது. இவ்வாறுள்ள ச்ருதிபேதங்களின் விவரங்கள் பூராவும் இதில் "இந்து ஸங்கீதம்" என்ற தலைப்பில் பின்னால் வரும்.

## இராக ஸஞ்சாரம்.

(1) சா******ரிகரிகமபதநீ****த-நிச்ா******-
ச்நிரீச்நீ******தாபா-மாகா
மாபமகா ******ரீசா****** =

(2) ரிகமபதபா****தபம-பமநீ******
நிதநீ**தப-மபதபா**நிதபம-
பமதபமகா**ரி-கமபதநீ******-
தபாதமபகமக-பமகா**ரிச-ரீ**
காமப மாபமகா **ரிசா****** =

இன்னும்வரும்

பத்திராதிபர்.

# நீதி

## 8-வது பக்கத்தொடர்ச்சி.

வ்யாளம்பாலம்ருணாளதந்து பிரஸௌரோத்தும் ஸமுஜ்ஜ்ரும்பதே:
பேத்தும்வஜ்ரமணிம் சிரீஷகுஸுமப்ராந்தேந ஸன்னஹ்யதி
மாதுர்யம்மதுபிந்துநாரசயிதும் க்ஷாராம்புதேரீஹதே
மூர்க்கான்ய: ப்ரதிநேதுமிச்சதி பலாத்ஸூக்தைஸ் ஸுதாஸ்யந்திபி: (5)

மூர்க்கர்களைச் சமாதானப்படுத்த முயலுவது மதியற்றகாரியமென்று தெரிவிக்கிறார். உலகத்தில் எந்தமனிதன் நல்லவார்த்தைகளால் ஸமாதானப்படுத்த முயலுகிறானோ அவன் தாமரைத்தண்டின் நூலினால் யானையைக்கட்ட முயல்பவனுக்கும், வாகைப்பூவின் தாதுக்களால் வைரமணியை உடைக்கமுயல்பவனுக்கும் ஒரு சொட்டுத்தேனினால் உப்புக்கடலை தித்திக்கச்செய்ய முயல்பவனுக்கும் ஒப்பாவான். அதாவது, அறிவில்லாதவன் என்பதே.

ஸ்வாயத்தமே காந்தஹிதம் விதாத்ரா
விநிர்மிதம் சாதனமஜ்ஞதாயா:
விசேஷதஸ்ஸர்வ விதாம்ஸமாஜே
விபூஷணம்மௌனம பண்டிதாநாம் (6)

மூர்க்கர்கள் பேசாமலிருப்பதே மேன்மை என்கிறார். எல்லாம்வல்ல பண்டிதர்கள் சபையில், மூடர்களுக்கு தன்மூடத்தனத்தை வெளிக்காட்டாது மறைப்பதும், தன் சுவாதீனமானதும் அதாவது, பிறரால் தெரிந்துகொள்ளாமல் தானாகவே தெரிந்துகொள்ளக்கூடியதும் தனக்கு அதிக நன்மையைச் செய்யக்கூடியதுமான ஓர் உயர்ந்த ஆபரணம் பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மௌனமே.

யதாகிஞ்சித்ஜ்ஞோஹம் கஜஇவமதாந்தஸ்ஸமபவம்
ததாஸர்வஜ்ஞோஸ்மீத்ய பவதவலிப்தம்மமன:
யதாகிஞ்சித் கிஞ்சித்புதஜன ஸகாசாதவகதம்
ததாமூர்க்கோஸ்மீதி ஜ்வரஇவமதோமேவ்யபகத: (7)

மூடத்தனத்தை அநுபவித்தவர்கள் தங்கள் அநுபவத்தை மூடர்களுக்குத் தெரிவிப்பது:- நான் சிற்றறிவினனாய் மதம்பிடித்த யானைபோல் கொழுப்பினால் கண்தெரியாதவனாயிருந்தபொழுது எல்லாம் தெரிந்தவன் என்று எனது மனதுமிகுந்த கர்வமுடையதாயிருந்தது. வித்துவான்களுடைய சேர்க்கையால் கொஞ்சங்கொஞ்சமாய் எனக்கறிவுண்டாக உண்டாக இதுவரையில் யானறிந்திருந்தது எம்மாத்திரம் என்று தெரிந்தவுடன் என்மனதிலிருந்த மதமானது ஜ்வரம்போல் விட்டுப்போய்விட்டது.

க்ரிமிகுலசிதம்லாலாக்லின்னம் விகந்திஜுகுப்ஸிதம்
நிருபமரஸப்ரீத்யாகாதன் கராஸ்திநிராமிஷம்
ஸுரபதிமபிச்வாபார்ச்வஸ்தம் விலோக்யநசங்கதே
நஹிகணயதிக்ஷுத்ரோஜந்து: பரிக்ரஹபல்குதாம் (8)

மூர்க்கன் மிகஇழிவான காரியத்தைச்செய்வான் என்று திருஷ்டாந்தத்தால் தெரிவிக்கிறார். நாயானது புழுக்கள் நிறைந்ததாயும் தன்வாயிலூறிய நீரால் நனைக்கப்பட்டதாயும், சகிக்கக்கூடாத துர்நாற்றமுடையதும் கொஞ்சமேனும் மாமிசமேயில்லாததுமான கழுதையின் எலும்பைக் கடிக்குங்காலத்தில் சமீபத்தில் தேவேந்திரனிருப்பதைப் பார்த்துங்கூட வெட்கத்தையடையாது. அதுபோல மூடர்கள் தங்கள் மனம்போல் நடிப்பதில் மிகுந்த பிரியமுடையவர்களாயிருப்பார்களேயன்றி அது சரியா, தப்பா வென்பதைக் கொஞ்சமேனும் யோசியார்கள்.

சிரச்சார்வம்ஸ்வர்க்காத் பசுபதிசிரஸ்த: க்ஷிதிதரம்
மஹீத்ராதுத்துங்கா தவனிமவனேச்சாபிஜலதிம்
அதோகங்காஸேயம்பதமு பகதாஸ்தோகமதவா
விவேகப்ரஷ்டாநாம் பவதிவிநிபாதச்சதமுக: (9)

அவிவேகத்தினால் அனர்த்தம் விளையுமென்றும் விவேகத்தை அவசியம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கிறார். பூர்வத்தில் கங்கையானது பகீரதனால் ஸ்வர்க்கத்தினின்றும் பூமிக்குக்கொண்டு வரப்பட்டது. எப்படியெனில், அதுமுதலில் ஸ்வர்க்கத்தினின்றும் சிவபெருமானுடைய சிரசில் விழுந்தது. அங்கிருந்து இமயமலைமீது விழுந்தது. மிகவுன்னதமான அம்மலையினின்றும் பூமிக்குவந்தது, பூமியிலிருந்து ஸமுத்திரத்திற்குட்சென்றது. அங்கிருந்து பாதாளத்திற்குட்புகுந்தது. இவ்விதமாகவே விவேகமில்லாதவர்கள் நாளடைவில் மிகுந்த தாழ்ந்த ஸ்திதியையடைவார்கள்.



சக்யோவாரயிதும்ஜலேன ஹுதபுக்சத்ரேண ஸூர்யாதபோ
நாகேந்த்ரோநிசிதாங்குசேன ஸமதோ தண்டேனகௌர்கார்தப:
வ்யாதிர்பேஷஜஸங்க்ரஹைச்சவிவிதைர் மந்த்ரைப்ரயோகைர்வி
[ஷம்
ஸர்வஸ்யௌஷதமஸ்தி சாஸ்த்ரவிஹிதம் மூர்க்கஸ்ய நாஸ்த்யௌ
[ஷதம் (10)

நெருப்பு முதலியவைகளைத் தடுப்பதற்குபாயங்களிருக்கின்றனவேயன்றி மூடத்தனத்தை நீக்கமருந்தில்லை என்கிறார். அக்கினியைத் தண்ணீரால் அணைக்கலாம், வெயிலைக் குடையினால் தடுக்கலாம், கூரிய அங்குசம் என்னுமாயுதத்தினால் பெரிய யானையையடக்கலாம், மதம்பிடித்த எருதையும் கழுதையையும் தண்டத்தினாலடிக்கலாம், வைத்தியர்கள் கொடுக்கும் மருந்தினால் வியாதியை நீக்கலாம், பலவிதமான மந்திரங்களினாலும் மருந்து முதலியவைகளாலும் விஷத்தைப் போக்கடிக்கலாம். எல்லாவற்றிற்கும் ஔஷதங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மூர்க்கர்களுக்கு மருந்து எங்கும் சொல்லப்படவில்லை.

## கற்றோரியல்பு

சாஸ்த்ரோபஸ்க்ருத சப்தஸுந்தரகிர: சிஷ்யப்ரதேயாகமா:
விக்யாதா: கவயோவஸந்தி விஷயேயஸ்யப்ரபோர்நிர்தனா:
தஜ்ஜாட்யம்வஸுதாதி பஸ்யஸுதியஸ்த்வர்த்தம் விநாபீச்வரா:
குத்ஸ்யா:ஸ்யு: குபரீக்ஷகைர்நமணயோ யைரர்க்கத: பாதிதா: (1)

(பொருள்) உலகத்தில் எந்தப்பிரபுவினுடைய தேசத்தில் சாஸ்திரத்தினுல் அலங்கரிக்கப்பட்டும், சப்தத்தினுல் அழகானதுமான வாக்கியங்களுடையவர்களும், சீடர்களுக்குக் கொடுக்கத்தகுந்த சாஸ்திரங்களுடையவர்களும், பிரசித்தர்களுமான வித்துவான்கள் தரித்திரர்களாயிருக்கிருர்களோ அந்தக்குறைவானது அப்பிரபுவினுடையதேயன்றி வித்துவானுடையதன்று. வித்துவான்களோ அசாசுவதமான பொருட்செல்வமில்லாதவர்களாயினும் சாசுவதமான கல்விச்செல்வம் நிறைந்துள்ளவர்கள் ஆகையால் தனிகர்கள் என்றே சொல்லப்படுவார்கள். இரத்தினப்பரீக்ஷைதெரியாதவர்கள் விலைமதிக்கக்கூடாத ஒரு இரத்தினத்தைக் குறைவாய் மதித்தார்களெனில் அதனுல் அந்த இரத்தினத்திற்கு ஒரு குறைவும்நேராது. ஆகையால் பண்டிதர்கள் தரித்திரர்களாகார்கள். கல்விச்செல்வமானது வேறுசெல்வங்களைவிடச் சிறந்ததென்று தெரிவிக்கிருர்.

ஹர்த்துர்யாதி நகோசரம்கிமபிசம் புஷ்ணுதியத்ஸர்வதா
ப்யர்த்திப்ய: ப்ரதிபாத்யமானமநிசம் ப்ராப்ஞோதிவ்ருத்திம்பராம்
கல்பாந்தே ஷ்வபிநப்ரயாதிநிதனம் வித்யாக்ய மந்தர்த்தனம்
யேஷாம்தான்ப்ரதிமான முஜ்ஜதந்ருபா: கஸ்தைரிஹஸ்பர்த்
[கதே. (2)

(பொருள்) கல்விச்செல்வமானது திருடர்களால் அபகரிக்கமுடியாதது. மிதமில்லாத சுகத்தையடைவிக்கும். இடைவிடாமல் யாசகர்களுக்குக்கொடுத்துக் கொண்டேயிருந்தாலும் கொஞ்சமேனும் குறையாமல் அவ்வளவும் விருத்தியாகக்கூடியது. ப்ரளயகாலத்திலுங்கூட நாசத்தையடையாதது. மேலும் அச்செல்வம் பிறருக்குத்தெரியாமல் மறைத்து வைத்துக்கொள்ளக்கூடியது. ஆகையால் ஓ! அரசர்களே அவ்வளவு சிறந்த தனத்தையுடைய கல்விமான்களைக்குறித்து நீங்கள் கோபிக்க வேண்டாம். அவர்களோடு யார்விரோதிப்பார்கள். மேலும் அச்செல்வம் இன்னும் எப்படிப்பட்டதெனில்:— "நபோகஹார்யா நசபந்துஹார்யா நப்ராத்ருஹார்யா நசராஜஹார்யா ஸ்வதேசமித்ரம் பரதேசபந்துர்வித்யாஸ‐தாம்யேபுருஷா: பிபந்தி" அதாவது:— கல்விச்செல்வம் அநுபவிப்பதால் குறையாது. பந்துக்களால் அபகரிக்கமுடியாது. சகோதரர்களால் பிரித்துக்கொள்ளமுடியாதது. அரசனுல் கவரப்படாதது. தன்தேசத்தில் நண்பனைப்போலவும் வேறுதேசத்தில் பந்துக்களைப்போலவும் உதவக்கூடியது. கல்விச்செல்வத்திற்கும் பொருட்செல்வத்திற்கும் வித்தியாசமென்னவெனில், பொருட்செல்வமானது "அர்த்தானுமார்ஜனே துக்கம் ஆர்ஜிதானுஞ்சரக்ஷணே நாசேதுக்கம் வ்யயேதுக்கம் கிமர்த்தம் துக்கபாஜனம்" என்றபடி, பொருளைச்சம்பாதிப்பதிலும், சம்பாதித்ததைக் காப்பாற்றுவதிலும், அப்பொருள் நாசத்தையடைவதிலும், அதைச்சிலவு செய்வதிலும் துக்கமே குடிகொண்டிருப்பதால் பொருட்செல்வத்தினும் கல்விச்செல்வமே சிறந்ததென விளங்குகிறது.



அதிகதபரமார்த்தான் பண்டிதான்மாவமம்ஸ்தா:
த்ருணமிவலகுலக்ஷ்மீர் நைவதான்ஸம்ருணத்தி
அபிநவமதரேகாச்யா மகண்டஸ்தலானும்
நபவதிபிஸதந்துர் வாரணம் வாரணுநாம் (3)

(பொருள்) ஓ அரசனே! பரதத்துவமின்னதென்றறிந்த பண்டிதர்களை அவமதிக்கவேண்டாம். ஏனெனில், சம்பத்தானது மிகவும் அற்பமான ஒரு துரும்புபோல அந்தப்பண்டிதர்களை எவ்விஷயத்திலும் தடைப்படுத்தாது. எப்படியெனில், புதியமதஜலத்தினுல் கருத்த கன்னங்களையுடைய யானைகளை தாமரைத் தண்டினுள்ளிருக்கும் நூலானது கட்டுப்படுத்ததல்லவா?

அம்போஜினீவனவிஹார விலாஸமேவ
ஹம்ஸஸ்யஹந்திநிதராம் குபிதோவிதாதா
நத்வஸ்யதுக்தஜலபேத விதௌப்ரஸித்தாம்
வைதக்த்யகீர்த்திமபஹர்த்து மஸௌஸமர்த்த: (4)

(பொருள்) பிரம்மாவானவர் ஒருசமயத்தில் தன்னைச்சுமக்கும் அன்னத்தினிடம் கோபித்து அதற்கு விளையாடுவதற்குத் தாமரைவனமேயில்லாதிருக்கும்படி செய்துவிட்டார் எனினும், தாமரையே உண்டாகாதிருக்கும்படி செய்தார் எனினும், அதனிடமிருக்கும் விசேஷ கீர்த்தியுடையதாகிய பாலையும் நீரையும் வேறுபிரிக்கும் சக்தியைமாத்திரம் போக்கடிக்க முடியவில்லை அதுபோல, பண்டிதர்களிடமுள்ள திரவியத்தை

பிறர் அபகரித்தாலும் அவர்களுக்குத் திரவியத்தைக்கொடுக்கா விட்டாலும் அவர்களுக்குள்ள பாண்டித்தியத்தை மாத்திரம் போக்கடிக்க முடியாது.

கேயூராணிநபூஷயந்திபுருஷம் ஹாராநசந்த்ரோஜ்வலா
நஸ்நானம்நவிலேபனம்நகுஸுமம் நாலங்க்ருதாமூர்த்தஜா:
வாண்யேகாஸமலங்கரோதிபுருஷம் யாஸம்ஸ்க்ருதா தார்யதே
க்ஷீயந்தேகிலபூஷணானிஸததம் வாக்பூஷணம்பூஷணம் (5)

(பொருள்) புஜபந்தம் முதலிய ஆபரணங்கள் புருஷனை அலங்கரிக்காது. சந்திரனைப்போல் பிரகாசிக்கும் ஹாரங்கள் அலங்கரிக்காது. பன்னீர் முதலிய சுகந்த ஸ்நாநங்கள் அலங்கரிக்காது. சந்தனம் முதலிய கலவைப்பூச்சுக்கள் அலங்கரிக்காது. அதிகவாசனையுள்ள புஷ்பங்கள் அலங்கரிக்காது. அழகாய் முடியிடக்கூடிய கூந்தலும் அலங்காரமல்ல. சாஸ்திரஸம்மதமான அழகியவாக்கொன்றே மனிதனை அலங்கரிக்கிறது. வேறுவிதமான சகல ஆபரணங்களும் நசித்துப்போகின்றன. ஆகையால் வாக்கென்ற ஆபரணமே சிறந்தது.

வித்யாநாமநாஸ்யரூபமதிகம் ப்ரச்சன்னகுப்தம்தனம்
வித்யாபோககரீயசஸ்ஸுக கரீவித்யாகுருணாங்குரு:
வித்யாபந்துஜனோவிதேசகமனே வித்யாபராதேவதா
வித்யாராஜஸுபூஜ்யதே நஹிதனம் வித்யாவிஹீன: பசு: (6)

(பொருள்) குண்டலம் முதலிய ஆபரணங்களில்லாமலே வித்தையானது மனிதனுக்கு நல்லரூபத்தைபுண்டு பண்ணுகின்றது. பிறருக்குத்தெரியாமல் புதைத்துவைக்கப்பட்ட தனமாகவிருக்கிறது. பலவிதமான போகங்களையும் அநுபவிக்கச் சாதகமாயிருக்கிறது- யசஸ்ஸைக் கொடுக்கிறது. சுகத்தைக்கொடுக்கிறது. குருக்களுக்கெல்லாம் குருவாயிருக்கிறது. இதரதேசங்களுக்கு நாம் செல்லும்பொழுது நமக்குப்பந்துக்களைப்போல உதவுகிறது. ஸர்வோத்தமமான தேவதையாகவுமிருக்கிறது இராஜாக்களால் பூஜிக்கப்படுகிறது இவ்விதமாக இதரதனங்கள் கௌரவத்தையடையா. ஆகையால் வித்யையில்லாத மனிதன் கேவலமான பசுவுக்குச்சமானம்.



க்ஷாந்திச்சேத்கவசேனகிம்கிமரிபி: க்ரோதோஸ்திசேத்தேஹினாம்
க்ஞாதிச்சேதனலேனகிம்யதி ஸுஹ்ருத்திவ்யௌஷதை: கிம்பலம்
கிம்ஸர்ப்பைர்யதிதுர்ஜனா: கிமுதனைர்வித்யாநவத்யாயதி
வ்ரீடாசேத்கிமுபூஷணைஸ் ஸுகவிதாயத்யஸ்தி ராஜ்யேனகிம் (7)

(பொருள்) உலகத்தில் ஜனங்களுக்குப் பொறுமையிருந்தால் கவசத்தினால் பயனில்லை. கோபமிருப்பின் சத்துரு வேறுவேண்டியதில்லை. தாயாதிகளிருந்தால் வேறு நெருப்புவேண்டியதில்லை. நல்லசினேகிதனிருந்தால் வேறு மருந்துகள்வேண்டாம். துஷ்டர்களிருந்தால் வேறு ஸர்ப்பம்வேண்டாம். நல்லவித்யையிருந்தால் அதனால் எல்லாகாரியங்களையும் சாதிக்கலாமாகையால் வேறுதனம் வேண்டியதில்லை. லஜ்ஜையிருந்தால் வேறு ஆபரணம்வேண்டாம். நவரஸங்களுடன் கவிபாடுந்திறமையிருந்தால் வேறு இராஜ்யம் வேண்டாம்.

தாக்ஷிண்யம்ஸ்வஜநே தயாபரிஜனே சாட்யம்ஸதாதுர்ஜனே
ப்ரீதிஸ்ஸாதுஜனேநயோந்ருபஜனே வித்வஜ்ஜனேசார்ஜவம்
சௌர்யம்சத்ருஜனே க்ஷமாகுருஜனே காந்தாஜனே த்ருஷ்டதா
யேசைவம்புருஷா: களாஸுகுசலாஸ் தேஷ்வேவலோகஸ்திதி (8)

(பொருள்) தன்னைச்சேர்ந்த பந்துக்களிடம் தாக்ஷிண்யம், பரிவாரஜனங்களிடம் கிருபை, எப்போதும் கெட்டவர்களிடம் பிரியமில்லாத வார்த்தை, குருஜனங்களிடம் பொறுமை, சாதுஜனங்களிடம் பிரியம், அரசர்களிடம் நீதி, வித்வான்களிடம் உறுதியான மதிப்பு, சத்துருக்களிடம் சூரத்தனம், ஸ்திரீ ஜனங்களிடம் தைரியம் இவ்விதமாக வித்தையில் சிறந்தவர்கள் யாரோ அவர்களிடமே இவ்வுலகம் நிலைத்திருக்கிறது.

ஜாட்யம்தியோஹரதி ஸிஞ்சதிவாசிஸத்யம்
மானோன்னதிம்திசதி பாபமபாகரோதி
சேத:ப்ரஸாதயதி திக்ஷுதநோதிகீர்த்திம்
ஸத்ஸங்கதி:கதயகிம் நகரோதிபும்ஸாம் (9)

(பொருள்) நல்லோரிணக்கமானது புத்தியின் கெடுதலைத்திருத்துகிறது. வார்த்தையில் சத்தியத்தை நிலைநிறுத்துகிறது, மிகவும் கௌரவத்தைக்கொடுக்கிறது. பாபத்தைப் போக்கடிக்கிறது. மனதை நிர்மலமாக்குகிறது. எத்திக்கிலும் கீர்த்தியை விருத்திசெய்கிறது. அது மனிதர்களுக்கு இன்னும் எதைத்தான்செய்யாது!

ஜயந்திதேஸு—க்ருதிந:ரஸ
ஸித்தா: கவீச்வரா:
நாஸ்திதேஷாம்யச:காயே
ஜராமரணஜம்பயம்: (10)

(பொருள்) புண்ணியாத்துமாக்களாயும், நவரஸத்துடன் வார்த்தை பேசுபவர்களுமான கவிச்சிரேஷ்டர்கள் ஸர்வோத்தமர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய கீர்த்தியாகிற சரீரத்திற்கு கிழத்தனம், மாணம் முதலியவைகளாலான பயமில்லை.

## சௌரியத்தினியல்பு·

க்ஷு—த்க்ஷாமோபிஜராக்ருசோபி சிதிலப்ராயோபிக்ருஷ்ணாம்தசா
மாபன்னோபிவிபன்னதீதி திரபிப்ராணேஷு—நச்யத்ஸ்வபி
மத்தேபேந்த்ரவிபின்னகும்பபி சிதக்ராஸைகபத்தஸ்ப்ருஹ:
கிம்ஜீர்ணம்த்ருணமத்தி மானமஹதாமக்ரேஸர:கேஸரீ. (1)

(பொருள்) மதம்பிடித்தயானையின் மத்தகத்தைப்பிளந்து அதிலுள்ள மாமிசத்தைத்தின்பதிலேயே பிரியமுள்ளதும், மிகவும் பசித்திருப்பினும் கிழத்தனத்தினால் இளைத்திருப்பினும், மிகவும் வயதுசென்றதாயினும், மிகவும் சிரமதசையை யடைந்திருந்தாலும், மிகவும் ஆபத்தையடைந்திருந்தாலும் உயிர் போவதாயிருந்தாலும் அற்பமான புல்லைத் தின்னாது. ஆகையால் பிராணனைக்காட்டிலும் மானமே மேலானது.

இன்னும் வரும்

Ramachandra Iyer.

## அஞ்ஞான குருவின்கதை

6-வது பக்கத்தொடர்ச்சி.

சந்திரசேகரன்:— குரோத்தமா! அது இருக்கட்டும் அவள் சங்கீதம் படிக்கிறாளா இல்லையா யென்கிறதா யெனக்குக்கவலை? அவளைத்தான் தங்கள் பொறுப்பில் விட்டுவிட்டேனே தாங்கள் நினைத்து வந்ததை அடியேனுக்கு தெரிவிக்கவேண்டும்.

சின்னத்தம்பி:— பிரபோத்தமா! சொல்வதற்கு நாக்கெழவில்லையே! உதடு தடுமாறுகிறதே! யென்று கொஞ்சநேரம் சும்மாயிருந்தான்.

சந்திரசேகரன்:— குலகுருவே! சமுசயமில்லாமல் அவை எப்படிபட்டதாயினும் உள்ளதை உள்ளபடி எனக்கு அறிவிக்கவேண்டும். ஒளிக்கக்கூடாது. தங்கள் மனவருத்தத்திற்கு யான் காரணமாகும் பட்சத்தில் தாங்களென்னை சிரசாக்கினை செய்யவும் அனுமதி கொடுத்திருக்கிறேன். இதோ செங்கோலை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். தாங்களே நியாயாதிபதியாகயிருந்து நீதிசெலுத்துங்கள்.

சின்னத்தம்பி:— ராஜாதிராஜனே! நீ இப்படிச் சொல்லியபடியால் உள்ளதொன்றுமொளிக்காமல் சொல்லுகிறேன். நீ சத்தியவேந்தனாகியபடியால் பட்சபாதமின்றி விசாரித்துத் தண்டனை விதிக்கக்கடவாய்.

சந்திரசேகரன்:— சுவாமீ! அப்படியே செய்கிறேன் அதற்கு என்ன தடையிருக்கிறது சொல்லுங்கள்? தங்களுக்கு வருத்தம்வேண்டாம்.

சின்னத்தம்பி:— ராஜேந்திரா! பத்துத்தலைமுறையாக நாங்கள் உன்னுடைய ஆதரவினாலுபசரிக்கப்பட்டுக் காலங்கழித்து, மானங் காப்பாற்றிக்கொண்டு வருகிறோம். இதுவரைக்கும் உங்களுடைய வம்சபரம்பரைக்கு எள்ளளவும் குறைவுவந்ததாகக் கண்டுமறியோம், கேட்டுமறியோம்.

சந்திரசேகரன்:— ஆம், அதற்கு யென்ன சந்தேகம்? தங்களைப் போன்ற உத்தம குருக்களை ஆசிரியராகக்கொண்ட எங்கள் ராஜவம்சத்திற்கு யாரால் குறைவுசொல்ல முடியும்?

சின்னத்தம்பி:— அரசனே! யான் சொல்லுகிறதில் உனக்குக் கோபம் வரவேண்டாம். உனது குமாரி இன்றைக்கு "உதரமகிமைக்கு ஊனம்வரக் குலத்தைக் கெடுக்கும் கோடாரிக்காம்பாய்" வந்து உற்பவித்தாள். பிள்ளைகள் மேல் குற்றங்கூறிப் பெற்றவர்களிடம் கோள்மூட்டுதல் ஏற்காததென்று அறிந்தவனாயினும், உன்னுடைய சொத்தைச் சாப்பிட்டுப் பிழைத்து வருமுயிராதலின், உண்டவீட்டிற் கிரண்டகஞ் செய்யத்தகாதென்று இதை யொளித்து வைக்கச் சக்தியற்றுச் சத்தியத்தை வெளிப்படுத்த வந்தேன்.

சந்திரசேகரன்:— ஆஹாஹா! என்ன நம்முடைய கருமம்! இது வென் தலைவிதியா?

சின்னத்தம்பி:— மகாராஜாவே! இது மாத்திரமல்ல என் வீட்டுக்கு வந்து, கற்பித்த கல்விக்குக் குருதட்சணையாகத் தன்னை யங்கீகரிக்க வேண்டுமென்றும், நான்கூறிய நீதிகளுக்கு செவிகொடாமல் தேவேந்திரன், விசுவாமித்திரன் முதலியவர்களை திருஷ்டாந்தமாகக் கூறினாள். எவ்வளவோ விதமாயெனக்குப் போதனை செய்தாள். அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடத் தகாதாதலால் நானுடன்படாதது கண்டு ஆகட்டும் உன்னுடைய கொட்டத்தைக் கட்டுகிறேன்பார் யென்று சொல்லிப் போயினாள். நான் திடுக்கிட்டுப்பயந்து யென்னவருமோ ஓ கடவுளே! நீயேகதி சத்தியமே ஜபம் கேட்டவார்த்தைகளைக் கேட்டவாறே சொல்லிவிட்டால் வந்தது வரட்டும் தெய்வமே கதியென்று உத்தேசித்து உன்னிடம் வந்தேன்.

சந்திரசேகரன்:— ஆ! அப்படியா! சீ பாதகத்தீ! நீ குருவை நிந்தித்தாயா? இதுவும் யென் தலைவிதியா! அருமையாக என்னுடைய வயிற்றிலுதித்த இந்தக் கொடும்பாவி, அபாஞ்சிக்குச் சமானமான குலத்தை அழித்துப்பாழாக்கப் புகுந்தாளல்லவா! குருபரனே! தத்துவஞ்ஞர்களாகிய தாங்களே இதற்குத் தகுந்த தண்டனையை விதித்தருளுங்கள்.

சின்னத்தம்பி:— வேந்தே! நகத்தால்களைந் தெறியவேண்டிய முளையைக் கோடாரியால் பிளக்கவேண்டி வந்தாலும்வரும். நான்தான் முன்னமே உன்னை நீதிசெலுத்தும்படி கேட்டுக்கொண்டேனே உன் இஷ்டம்போல் செய்.



சந்திரசேகரன்:— தாங்கள் சொல்வது உண்மையே. இன்று வெண்டைக்காய் திருடியகை நாளைக்கு வெள்ளரிக்காய் திருடச்சொல்லும். மேன்மேலும் குலத்துக்கு அபகீர்த்தியே உண்டாகிக்கொண்டிருக்கும். ஆதெய்வமே! என்ன செய்வேன்! யெவ்வளவோ கஷ்டப்பட்டு ஓர் குழந்தையைப் பெற்றேனே! குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பாய் விட்டதே! கொல்லவும் மனம் துணியவில்லையே சுவாமீ! இவளைக் கொல்லாது இந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி மிருகங்கள்சஞ்சரிக்குமிடத்தில் கொண்டு போய் விட்டுவரச் சொல்லுகிறேன். அவள் பிழைத்தாலுமோ மாண்டாலுமோ! இதில் தங்களுக்கு யாதாவது தடையுண்டோ?

சின்னத்தம்பி:— நீதிவானே! அதுவே யென் அபிப்பிராயமும். ஆனால் அவளையும் கூப்பிட்டு அவள் வாய்மொழியையும் விசாரித்துக் கொள்ளுங்கள்.

சந்திரசேகரன்:— குலகுருவே! அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? தங்கள் வார்த்தையில் அவநம்பிக்கை யுண்டாயிருந்தாலல்லவோ அதைக் கேட்கவேண்டும். தங்கள் வார்த்தையே போதுமானது. ஒருவன் சாட்சிக்குப்போனால் அவன் பேரீஜ்பென்ன? குடும்பமென்ன? யென்று எதற்காக கேட்கிறது. தக்கபேரீஜ் உள்ளவர்களும், பெரிய குடும்பத்திலுள்ளவர்களும் மெய்யன்றி பொய்பேசார்கள் யென்றல்லோ கோர்ட்டில் சாக்ஷிபத்தை ஒப்புக்கொண்டு முடிவுசெய்கிறார்கள். ஆகையால் நானும் தங்கள் வார்த்தையே போதுமானதென்று முடிவுசெய்துவிட்டேன். அவளை இக்கணமே காட்டிற்கு அனுப்பிவிடுகிறேன்.

சின்னத்தம்பி:— அரசனே! உன்னைப்பற்றி அதிகமாக மெச்சினேன். தன் குழந்தை யென்றும் பாராமல் நீ நீதி செலுத்தினாயே! கடவுள் உன் குடும்பம் முழுவதுக்கும் கருணைபுரிவார். அவள் வேறு ஏதாவது தப்பிதம் செய்திருப்பாளாகில் நானுன்னிடம் வந்துதெரிவிக்கும்படி ஏற்பட்டிருக்கமாட்டாது. உன்னிஷ்டப்படியே கட்டளையிடுயென்று சொல்லி சின்னத்தம்பி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு உடனே யெழுந்து போய்விட்டான்.

அரசன் கடுஞ்சினங்கொண்டு அடங்காவருத்தத்துடன் "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டென்றபடி" சேடிகளைவரவழைத்து, நீங்கள் என் குமாரத்தியாகிய தாயம்மையின் பள்ளியறைக்குட் சென்று அவள் அயர்ந்து நித்திரைசெய்யும் சமயம்பார்த்து உடனே இந்தப் பெட்டியில் வைத்துப்பூட்டி என்னெதிரில் கொண்டுவந்து வையுங்களென்று உத்திரவு செய்தான். சேடிகள் அரசன் கட்டளைப்படி பள்ளியறைக்குட் சென்று பார்க்கையில் ராஜகுமாரத்தி அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது அவர்களுக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல் "எழுதிய சித்திரம்போல்" திக்பிரமைகொண்டு வெகுநேரம்வரை மௌனமாக நின்றார்கள். சிறிதுநேரம் சென்றவுடன் ஆராத்துயரங்கொண்டு இவள் என்ன குற்றம்செய்தாள்? இப்படிப்பட்ட தண்டனை வரக்காரணமென்ன? இதின் மர்மம் ஒன்றும் விளங்கவில்லையே யென்று திகைத்து அரசன் கட்டளையை மறுத்துநடந்தால் நமக்கு சிரசாக்கினை கிடைக்குமென்றெண்ணி, ராஜகுமாரத்தியை மெதுவாக எடுத்து பெட்டிக்குள் வைத்துப்பூட்டி ராஜசமுகத்தில்க் கொண்டுவந்து வைத்தார்கள். அரசன் சரி, இனிமேல் உங்களிருப்பிடம் செல்லலாமென்று செலவுகொடுத்து அனுப்பிவிட்டு, சேவகனை அழைத்து கொலையாளிகளை சீக்கிரமாக இவ்விடத்திற்கு அழைத்துவா யென்று உத்திரவுசெய்தார். உடனே சேவகன் கொலையாளிகளை அரசன் முன்பாக கொண்டுபோய்நிறுத்தினான்.

அரசன் கொலையாளிகளைப்பார்த்து, அடே கொலையாளிகாள்! நான் உங்களுக்குக்கொடுக்கிற உத்திரவின்படி செய்யத்தவறினால், உங்களுடைய கண்களைப்பிடுங்கி காட்டில் விட்டுவிடுவேன் ஞாபகமிருக்கட்டும். அதாவது இன்றைய ராத்திரி நடுச்சாமவேளையில் இந்தப்பெட்டியை எடுத்துக்கொண்டு, நமது அரண்மனைக்கு வடக்கேயுள்ள அடர்ந்தகாட்டில்க் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்துவிடுங்கள் என்று ஆஞ்ஞாபித்தான். உடனே கொலையாளிகள் மகராஜ் உத்திரவுப்படி செய்கிறோமென்று பெட்டியை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு வெளியில் வந்தார்கள். உடனே குலகுருவாகிய சின்னத்தம்பி பாகவதர் அதிசீக்கிரமாக வெளியில்வந்து அடே பயல்காள்! அரசன் கட்டளை ஞாபகமிருக்கட்டும் நீங்கள் இந்தப் பெட்டியை காட்டில் வைத்தீர்களா இல்லையா யென்று நான் கூடவந்து பார்ப்பேன் உஜார், செல்லுங்கள் என்று அனுப்பினார்.



அதற்கு கொலையாளிகள் எஜமான்களே கட்டளைப்படிநடக்கிறோம் என்று சொல்லிக்காட்டை நோக்கிச்சென்றார்கள். காட்டிற்குச்சமீபத்தில்ச் செல்லும்பொழுது திடீரென்று ஓர்விதமான சப்தம் உண்டானது, இதென்னடாயிது! பொம்மனாட்டி கூச்சலைப்போலேதோணுது, நீயும் பாரடா! மறுபடியும் பெட்டிக்குள்ளிருந்து, அடியே தாதி செண்பகம் அடியே செண்பகம் என்று சப்தங்கேட்கவே, ஓகோ! என்னமோ அதிசயமாயிருக்குடா இதுக்குள் பேயோ, காளியோ என்னமோயிருக்குது இதைப் பாக்கவேணுமப்பா! பொட்டியைக் கீழேயிறக்கடா யென்று பெட்டியைக் கீழேவைத்து கல்லுகளினாலும், கட்டைகளினாலும் பெட்டியை உடைத்தார்கள். அதற்குள் ராஜகுமாரத்தி இருக்கக்கண்டு அம்மா! நீங்கயேன் இதுக்குள்ளே பூந்துகொண்டீங்கோ! உங்களுக்கென்ன தலைவிதியா! நீங்க ராசாபிள்ளையார்ச்சே, என்ன சங்கதிங்கோ! சொல்லுங்கோ.

தாயம்மை:— அப்பா! சேவகர்களே! உங்களுக்குத் தெரியாமலாயிருக்கும், என்னையேன் கேட்கிறீர்கள்?

கொலையாளி:— அம்மா! என்ன இப்படிச்சொல்ரீங்கோ, எங்களுக்கு ஒண்ணுமே தெரியாதுங்கோ, ராசா அனைச்சு இந்தப்பொட்டியை காட்டிலே வச்சுட்டுவாங்கடா எண்டு சொண்ணாங்கோ, சரியெண்ணு தூக்கிட்டுவந்தோம். வர்ரப்போ நம்பவாத்தியார்கூட இருந்தாங்கோ, நானும் அங்கேவந்து பாப்பண்டா எண்டு சொண்ணாங்கோ, வேறொண்ணும் எங்களுக்கு தெரியாதுங்கோ.

தாயம்மை:— அடே படர்காள்! இதெல்லாம் அந்த வாத்தியாருடைய செய்கையாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

கொலையாளி:— அப்படித்தான் இருக்கோணும், ஆனா உங்க மேலே அவருக்கு ஏனம்மா இம்பிட்டுகோவம்? அந்த சங்கதியைசொல்ல மாட்டீங்களா?

தாயம்மை:— அடே சொல்லுகிறேன் கேளுங்கள்! என் தகப்பனார் எனக்கு சகல சாஸ்திரங்களும் கற்றுக்கொடுத்து, அதின்பின் சங்கீத சாஹித்தியமும் சற்பிக்கவேண்டுமென்ற ஆவல்கொண்டு சங்கீதத்திலும்,

அநேக சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்த சின்னத்தம்பிபாகவதரைக் கொண்டு எனக்கு வீணையை கற்றுக்கொடுக்கும்படி உத்திரவு செய்தார்.

கோலையாளி:— ஆமாம்மா, நாங்ககூட அரமணைக்கு வர்ரப்போ நல்லபாட்டு படிச்சுக்கிட்டு இருந்தீங்கோ பலே சோக்காயிருந்திச்சு. நாங்க நம்ப ராசாத்தியம்மே ரொம்பநாளைக்கு பொளச்சிகடைக்கிட்டுமிண்ணு எங்க மாரியாத்தாளே கும்பிட்டுக்கிட்டே யிருந்தோம். பொறகு சொல்லுங்கோ.

தாயம்மை:— நானும் அந்த வாத்தியத்தைவாசித்து அதிகதேர்ச்சியடைந்தேன். நான் வாசிப்பதைப்பார்த்து அவரும் சந்தோஷப்படுவார், ஒருநாள், உனக்கு சொல்லிக் கொடுத்ததற்கு தக்ஷிணையாக எனக்கு பாரியாளாகவேண்டுமென்று கேட்க நான் தடுத்தேன், நான் எவ்வளவு சொல்லியும் நீ கேளாததினால் உன் பிதாவிடத்தில் போய் உனக்கு தகுந்த சிக்ஷைசெய்விக்கிறேன் பார் என்று வற்புருத்திச் சென்றார். இதுதான் நடந்தசங்கதி மற்றவிபரங்கள் நீங்கள் சொல்லத்தான் தெரியும். அதுவுமன்னியில் மறுபடியும் அவன் வருவதாகவும் சொல்லுகிறீர்கள், ஆகையால், என்னைவிட்டுவிடுங்கள், நான் எங்கேயாவது ஓடிப்போய்விடுகிறேன். நீங்கள்செய்த உதவிக்கு என்னுடைய நகைகளையெல்லாம் தருகிறேன், வாங்கிக்கொண்டு சுகமாகயிருங்களென்று நகைகளை கழட்டினாள்.

கோலையாளி:— ஆகா! அந்தச் சண்டாளப்பயல் ராசா பிள்ளை பெண்ணுகூட பாக்காமல் தேவடியாள் எண்ணு நினைத்து பெண்டாட்டியாக கூப்பிட்டானே அவனை பெண்ணசேஞ்சாத்தான்பெண்ண, அம்மணீ, நீங்க சொல்றது சரிதாங்கோ அவனை சரியானபடி உசிரை எடுக்கணுங்கோ நீங்கோ ஓடத்துக்கும் போகவேண்டாங்கோ, இந்த காட்டுக்கு பக்கத்திலே மாரியாத்தாகோவில் இருக்குதுங்கோ, அதிலே நம்ப கருப்பணே ஒங்களுக்கு தொணையிருப்பான் போயிருங்கோ, நான் உங்கமாதரி வேசம் போட்டுக்கிட்டு அந்தப் பொட்டிக்குள்ளே படுத்துக்கிடக்கேன், அவண் பொட்டிக்குள்ளே வருவான், அவனை, ஒதே, ஒதேயிண்ணு ஒதைச்சி ராசா கிட்டத்திலே கொண்டு தள்ளிடுரேங்கோ, நீங்க பயப்படாமே, நம்ப கருப்பணங்கூட கோயில்லேபோயிருங்கோ என்றுசொல்லி அனுப்பிவிட்டு,



வீராசாமி யென்பவன் இராஜகுமாரியைபோல் வேஷம் தரித்துக்கொண்டு பெட்டிக்குள் இருந்தான் இங்ஙனமிருக்க.

சின்னத்தம்பி பாகவதர் அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு இல்லத்திற்கேகி நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்து போஜனமருந்தி தாம்பூலம்தரித்துக்கொண்டு சந்தோஷமாக தன்னுடைய சீடர்களை அழைத்து, சீடர்காள்! மாதா, பிதா, குரு, தெய்வம் என்றவாக்கியத்தின்படி குருவாயிருக்கிற என்னை தெய்வமென்று நினைத்து நான் சொல்வதை கேட்டு மிகவும் பக்தியுடன் நடக்கவேண்டும். அதாவது, நேற்றிரவு நான் நித்திரைசெய்யும்பொழுது கனவில் சாஸ்வதிதேவிதோன்றி, அப்பா! உனக்கு இன்னும் சங்கீதத்தில் கொஞ்சம்குறையிருக்கிறது. அதை நிவர்த்திசெய்ய நாளையிரவு நடுச்சாமவேளையில் உனது அரசன் அரண்மனைக்கு வடக்கேயுள்ள காட்டுக்குவருவாயாகில் நான் ஒரு பெட்டியில் வந்திருப்பேன், என்னைவந்து காண்பாயானால் உன் குறையைத்தீர்த்து இவ்வுலகில் உன்னை யாவராலும் வெல்லமுடியாதபடி என்னுடைய பாதச்சிலம்பையுங்கொடுக்கிறேன் அவசியம்வரவேண்டும்என்று சொல்லிமறைந்தனள். ஆகையால் நான் இன்றிரவு அக்காட்டுக்குப்போகவேண்டும், கொஞ்சம் அச்சமாயிருக்கிறது நீங்கள் எல்லோரும் என்பின்னே வரவேண்டும். நான் அந்தத்தேவியிடத்தில் கற்றுக்கொண்டு உங்களுக்கும் சம்பூர்ணமாக கற்பிக்கிறேன் வாருங்கள் என்றழைத்துக்கொண்டு காட்டிற்குச்சென்று பெட்டியைதேடிப்பார்க்கையில் அங்கோர் ஆலமரத்தடியில் பெட்டியிருக்கக்கண்டு புளகாங்கிதராகி, ஆனந்தமடைந்து, அடங்காமகிழ்ச்சியுடன் சீடர்களைப் பார்த்து, நீங்கள் எல்லோரும் சற்றே மறைவாக ஒருபக்கத்திலிருங்கள். இப்பெட்டிக்குள் நுழைந்த பிற்பாடு ஏதாவது சப்தங்கேட்டால் திறந்து பார்க்கவேண்டாம் அதோ தெரிகிற சிற்றோடைக்குச்சமீபத்தில் போயிருங்கள் என்றுசொல்லி அனுப்பினார். சீடர்களும்குருவின் உத்திரவு பெற்று அவ்விடத்தில் போயிருந்துகொண்டு தங்களுடைய பாடங்களைப்படித்துக்கொண்டும், சிற்சில சம்பாஷணைகளைச் செய்துகொண்டுமிருந்தார்கள்.

சீடர்களை அனுப்பிவிட்டு பெட்டிக்குள் நுழைந்து, அரசகுமாரி வேஷம்போட்டுக்கொண்டிருந்த வீராசாமியைப்பார்த்து, அடியே, சண்

டாளி! உனக்கு இவ்வளவு தண்டனைவிதித்தும், நான் வந்தவுடன் வார்த்தையாட மாட்டேனென்கிறாயே, உனக்கு ஏன் இவ்வளவு கர்வம் இப்பொழுது என்னிடத்தில் அகப்பட்டுக்கொண்டாய் உன்னுடைய எண்ணங்கள்பலிக்காது என்று கோபக்குறிபுடன் பேசினார். அதற்கும் மௌனமாகயிருக்கக்கண்டு, இவள் நம்மீது வருத்தமாயிருக்கிறாள் போலும், இவளை சந்தோஷப்படுத்தி நம்முடைய காரியத்தைச் சித்திபெறுவோம் என்று நினைத்து, அடியே, உன்னைப்போல் இவ்வுலகில் யாரிருக்கிறார்கள் என்மீதுயேன் கோபம்? உனக்கு நான் என்ன குற்றம்செய்தேன்? அப்படி செய்திருந்தபோதிலும், என்னை மன்னித்து. ஆட்கொள். என்று சொல்லிக்கொண்டு அவனுடைய தோளின்மீது கையை வைத்தார் உடனே.

வீராசாமி:— அடே சண்டாளா! நான் ராசாமகளின்னு நினச்சுகிட்டா கையேபிளுக்கவாரே, நாந்தான் வீராசாமி, உன் உசிரைகொண்ணு போடுரேன்பாரு, குருவிண்ணு பேரெவச்சுகிட்டு எங்க ராசாத்தியம்மையவா உனக்கு பெண்டாட்டியாக வச்சுகிடப்பாத்தே "உண்டவீட்டுக்கு தொரோகம் நெனைக்கிறபாவி" யென்று அடிமேல் அடியாக நய்யப்புடைத்தான். அடிபொறுக்கமாட்டாமல் என்னுயிர் போகிறதேயென்று சிஷ்யர்களுடைய பெயர்களைச்சொல்லிக்கொண்டு குரு கதறினார்.

சுந்தரம்:— அடே ரகுபதி! நம்முடைய குருபிருக்கிற பெட்டியினுள் ஏதோ உறத்தகூக்குரல் கேழ்க்கிறதே அதென்ன? சற்றேகவனித்துப்பார்!

ரகுபதி:— ஆம் வாஸ்தவந்தான் நம்முடைய குருவின் சத்தமாகத்தானிருக்கிறது. சிறிது சமீபத்தில்ப்போய்க் கேட்போம் வா.

சுந்தரம்:— சமீபத்தில்ப்போய்க் கேட்போம் என்று சொல்லுகிறாயே பெட்டியினுள்ப் போகுமுன்னமே நம்முடைய குரு நமக்குக்கட்டளையிட்டதை நீ மறந்துவிட்டாயா என்ன?

இன்னும்வரும்

சிவஞானம்.

# ஸமாசாரக் குறிப்பு.

---

இவ்வருஷத்தில் பெய்த சாரலைப்போல் எக்காலத்திலும் இருந்திராதென்றே சொல்லலாம். திருநெல்வேலி, தாம்பரபர்ணிநதியில் சுமார் 1½-மாதகாலமாக மிகுதியான பிரவாகம். சென்ற ஜுலை-மீ கடைசி வாரம்வரையிலும் போயிக்கொண்டேயிருந்தது. இன்னும் சாரலுக்குள்ள தோற்றங்கள் மாறினதாகத் தெரியவில்லை.

*
* *

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து ஆறுமுகமங்கலத்திற்குப் போகிற ரோட்டானது பேரூர், செவலை, பெருங்குளம் இவ்வூர்க்குளங்கரைகளின் மேலேயேபோகின்றன. செவலை, பெருங்குளம் குளத்தின்கரைகளில் சென்ற வருஷத்திலேயே உடைப்புகள் விழுந்து பல இடங்களிலும் கரைகள் எடுபட்டுப்போய்விட்டதிலிருந்தும் பிரயாணிகளும், வண்டிகளும், இன்னும் கால்நடை முதலானதும் படும்கஷ்டத்திற்கு அளவேயில்லை. ரிப்பேர் செய்யும்படிக்கு கவர்ண்மெண்டிலிருந்து கண்டிராக்டர்களிடம் விட்டுவிட்டார்கள். காண்டிராக்டர்களுக்கு அதுவிஷயத்தில் சிரத்தையாவது அல்லது மேலான உத்தியோகஸ்தர்கள் கண்டிப்பார்களேயென்ற பயமாவது சிறிதேனுமில்லை. இந்த ரோட்டில் அடிக்கடி கவர்ண்மெண்டு ஆபீஸர்களும் கஷ்டப்பட்டுக்கொண்டு காம்புகளுக்குப்போய் வருகிறார்கள். இக்கஷ்டம் நிவிர்த்தியாகிற காலம் எப்பொழுதோ? தெரியவில்லை.

போலீஸ் ஹெட்கான்ஸ்டேபிள் ஸ்ரீவைகுண்டம் பாப்பய்யா நாயுடு என்றவரும், கர்ணம் இராமசுவாமியாபிள்ளை என்ற மற்றொருவருமாகச் சேர்ந்து வள்ளியம்மை அம்மாள் என்ற ஓர் கைம்பெண்ணின் வீட்டிற்கு ஓர்நாள் இரவு நடுவேளையிற்போய் அவளிடத்தில் நீ கற்பமுண்டாகியிருப்பதாக உன்பேரில் மனுவுவந்திருக்கிறது ஸ்டேஷனுக்குவா, உன்னை லாக்கப் செய்யப்போகிறோமென்று பயமுறுத்த, அதற்கு அந்த அம்மாள் பயந்து ஏதேனும் பிரதிபிரயோஜனம் தருவதாகவும் தன்னைவிட்டுவிடவேண்டுமென்றும் தன்சகோதரனுடன் அவர்களிடம் பலமுறை வேண்டிக்கொள்ள அதற்கு அவர்கள் ரூ 100-க்கு குறைந்தால் வாங்கமாட்டோமென்று மறுதளித்து ஸ்டேஷனுக்கு வரச்சொல்லி பலாத்காரம் பண்ணியதாகவும், அதன்பேரில் அந்தம்மாள் பிராதுகொடுத்து கேசுவிசாரணையானதில் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்ஜெட்ஜு அவர்கள் இருவரையும் குற்றவாளிகளென்று தீர்மானித்து அவர்களுக்கு 2-௵மும் 1½-வருஷமுமாகக் கடினதண்டனை விதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஆஸாமில்நேரிட்ட மிகுந்த வெள்ளத்தினால் உணவு தானியங்கள் பூராவும் அழிந்துபோய் நிலங்களை திரும்பசாகுபடிசெய்ய லாயக்கில்லாத நிலைமையிலிருப்பதாகவும் அதனால் தற்சமயம் பஞ்சம் நேரிட்டு ஜனங்கள்படும் கஷ்டத்தை நிவிர்த்திக்க கவர்ன்மெண்டாரவர்கள் தக்க முயற்சி செய்துவருவதாகவும் ஸமாசாரம் எட்டுகிறது.

உ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1_ SEP 1915
MADRAS.

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-௵ செப்டம்பர்-௴ { NO. 3.

## இந்து ஸங்கீதம்

(11) இதற்கு உதாரணமாக நமது தென்னிந்தியாவில் சொற்பகாலத்திற்கு முன்பு யாவரும் ஆச்சரியப்படும்படியான சாரீரசம்பத்துடன் கந்தர்வகானமாகப் பாடிவந்த ஸங்கீத மஹா வித்வானான ப்ரும்ம ஸ்ரீ மஹா வைத்தினாதய்யரவர்களின் அனுஷ்டானத்தை அனைவரும் கேள்விப்பட்டிருக்கக்கூடும். தற்காலம் நமது தென்னிந்தியாவில் ஸங்கீத ஞானம் விருத்தியடைந்தபோதிலும் முற்கூறிய வைராக்கிய அனுஷ்டானங்களை அடியோடு விட்டுவிட்டதினாலே சரீரபலஹீனமும், அதனால் சாரீரங் கேட்க விரஸமுண்டாகும்படி கெடுதலடைந்தும், தங்களுக்குள்ள ஞானத்தை வெளியிட வேறு வழியில்லாததால் அதற்காக பல வாத்தியங்களை அப்பியாசித்தும் கடைசியாக வாய்ப்பாட்டு மிகவும் க்ஷீணதசைக்கு வந்துவிட்டது. ஆகையினால் நமது சங்கீதாபிமானிகள் இனியாவது சற்று கவனித்து சாரீரத்தைப் பேணிக்கொண்டால் இன்னும் சொற்பகாலத்திற்குள் நமது தென்னிந்தியாவில் முன்னிலும் பன்மடங்கு மேலான சாரீரத்துடன் பாடுவோரை நாம் கேட்டு ஆனந்திக்கலாகும்.

(12) இவ்வாறுள்ள குரலின் நாதம் எவ்விதம் சரீரத்தினின்றும் வெளியாகிறதென்பதைக் கவனிப்போம்.

"ஆத்மாவிவக்ஷமாணோபம்மன:ப்ரேரயதேமன:
தேஹஸ்தம்வஹ்னிமாஹந்திஸப்ரேரயதிமாருதம் =
பாவகப்ரேரிதஸ்ஸோத-க்ரமாதூர்த்வபதேச்சரன்
நாபிஹ்ருத்கம்டமூர்த்தாஸ்யே-ப்ராதுர்பவதிஸத்வனி: =
நாதோதிஸூக்ஷ்மஸ் ஸூக்ஷ்மஸ்ச்ச-புஷ்டோ புஷ்டஸ்ச்சக்ரு
[த்ரிம,
இதிபம்ச்சாபிதாதத்தே-பம்ச்சஸ்தானஸ்தித:க்ரமாத் =
அதிஸூக்ஷ்மத்வனிம்நாபௌ-ஹ்ருதிஸூக்ஷ்மங்களேபுன:
புஷ்டம்சீர்ஷேத்வபுஷ்டம்ச்ச-க்ருத்ரிமம்வதனேததா- =
ஆவிர்பாவயதீத்யேவம்-பம்ச்சதாகீர்த்யதேபுதை:
கதம்கம்ட்டஸ்திதம்புஷ்டம்-ஸ்யாதபுஷ்டம்சிரஸ்திதம் =
உச்சியதேதத்ரசிரஸிஸம்-சார்யாரோஹவர்ணயோ:
ஸம்பூதிர்நபவேத்தஸ்மா-தபுஷ்டம்சிரஸிஸ்திதம்." =

இதன்பொருள்:— ஆத்மாவானது தனக்கு பிரியம் உண்டானவுடன் மனதை ஏவுகிறது. மனது சரீரத்திலிருந்தும் அக்னியை உண்டுபண்ணுகிறது. அந்த அக்னியானது வாயுவை ஏவுகிறது. அந்த வாயுவானது ஊர்த்வமுகமாக ஸஞ்சாரஞ்செய்ய கிரமமாக நாபி, ஹிருதயம், கண்டம்: சிரஸு, வாய் இவைகளின் வழியாக சப்தம் வெளியாகிறது. நாதமானது நாபியில் அதிசூக்ஷ்மமாகவும், ஹிருதயத்தில் சூக்ஷ்மமாகவும், கண்டத்தில் பூர்ணமாகவும், சிரஸில் பூர்ணமில்லாமலும், வாயில் கருவியின் சேர்க்கையாலும் உண்டாகிறது. இவ்விதமாக பெரியோரால் ஐந்துவிதமாக உற்பத்தியாகிறதென்று விவகரிக்கப்படுகிறது. சிரஸில் ஸஞ்சாரவர்க்கமாவது ஆரோஹவர்க்கமாவது உண்டாகாததால் சிரஸில் பூர்ணமில்லாததென்றும், கண்டத்தில் பூர்ணமென்றும் சொல்லப்பட்டது.

(13) இந்த நாதத்தை 3 பாகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றனவென்பதை இதனடியிற்கண்ட ச்லோகத்தினுல்த் தெரிந்துகொள்ளலாம்.



"வ்யவஹாரேத்வஸௌத்ரேதா-ஹ்ருதிமந்திரோபிதீயதே
கண்டேமத்யே மூர்த்னிதாரோ-த்விகுணஸ்ச் சோத்தரோத்த
[ரம்
ஏவம்சரீரவீணாயாம்-தாரவ்யாம்துவிவர்யய:" =

இதன்பொருள்:— இந்த நாதத்தை விவகரிக்கில் மந்திரம், மத்யம் தாரம் என்று மூன்று விதங்களாகிறது. அது உத்திரோத்தரமென்று இரண்டு குணங்களாகும். ஹ்ருதயத்திலிருந்து உண்டாகப்பட்டதை மந்தரமென்றும், கண்டத்திலிருந்தும் உண்டாகிறதற்கு மத்யமென்றும், சிரஸிலிருந்து உண்டாவதற்கு தாரமென்றும் சொல்லப்படுகிறது. இவை சரீர வீணையின் லக்ஷணம், மாத்திறுற் செய்திருக்கிற வீணைக்கு இதற்கு எதிரடையாக பொருள்படுத்தவும். அதாவது வீணையின் சிரசுப்பக்கத்தில் மந்தரஸ்தாயியும், கழுத்துப்பக்கத்தில் மத்யஸ்தாயியும், வயிற்றுப்பக்கத்தில் தாரஸ்தாயியுமென்று ஊகிக்கவும்.

(14) இன்னும் நாதத்தை இரண்டுவிதமாக வகுக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறெனில்:—

"ஆஹதோநாஹதஸ்ச்சேதி-த்விதாநாதோநிகத்யதே
த்யானமேகாக்ரசித்தைக-ஸாத்யம்நஸுகரம்ந்ருணாம்
தஸ்மாதத்ரஸுகோபாயம்-ஸ்ரீமன்னுதமனுஹதம்.
குருபதிஷ்டமார்க்கேண-மனயஸ்ஸமுபாஸதே-
ஸோர்பிரக்திவிஹீனத்வா-ந்நமனோரஞ்சகோந்ருணாம்
தஸ்மாதாஹதநாதஸ்ய-ச்ருத்யாதித்வாரதோகிலம்
கேயம்விதனுதேலோக-ரஞ்சனம்பவபஞ்சனம்."

இதன்பொருள்:— ஆஹதம் யென்றும் அனுஹதம் பென்றும் நாதத்தை இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கிறதி. த்யானமானது ஏகாக்ரசித்தமுடையோர்க்கு ஸாத்தியமே தவிற இதரஜெனங்களுக்கு சுலபமாகாது. ஆகையினுல் இன்னும் அனுஹத நாதத்தை குருவின் உபதேசமார்க்கமாக முனீச்வரர்கள் ஸுக உபாயமாக உபாஸிக்கிறுர்கள் அதானது பற்றுதலுக்கிடமில்லாமையால் ஜெனங்களுக்கு மனோரஞ்சனையில்லை. ஆஹத நாதம் ச்ருதிகளின் வழியாக வெளிப்படுவதால் உலகி

ளுள்ள ஜெனங்களுக்கு மனோரஞ்சனையையுண்டாக்கி உலகபவவினைகளைப் போக்கடிப்பதாகயிருக்கிறது.

(15) ச்ருதியின் விவரமாவன:—

"ப்ரதமச்ரவணச்சப்த—ச்ருயதே ஹ்ருஸ்வமாத்ரக:
ஸாச்ருதிஸ்ஸம்பரிக்ஞேயா—ஸ்வராவயவலக்ஷண =

இதன்பொருள்:— முதன்முதல் காதுக்குக்கேட்கக்கூடியதான குற்றெழுத்தின் கால அளவாயிருக்கிறது. ச்ருதியோடு கூடிய, ஸ, யென்றது ஸ்வரத்தினது முக்கியாம்சத்தின் லெக்ஷணமாகிறது.

(16) ஸ்வரங்களின் விவரமாவன:—

"ச்ருத்யநந்தரபாவீய—ஸ்நிக்தோனுரணநாத்மக:
ஸ்வதோரஞ்சயதிச்ரோதுஸ்—சித்தம்ஸஸ்வரஉச்சியதே" =
"ச்ருதிப்யஸ்யு:ஸ்வராஷ்ஷட்ஜர்—ஷபகாந்தாரமத்யமா:
பஞ்சமோதைவதஸ்ச்சாத—நிஷாதஇதிஸப்ததே" =

இதன்பொருள்:— ச்ருதிக்குப்பின்னால் உண்டாகும் மெல்லிய நாதமானது நாம, லக்ஷண, அடையாளங்களின் சம்மந்தமில்லாமலும், கேட்போருடைய சித்தத்தைத்தானே ரஞ்சிக்கும்படி செய்வதாலும் ஸ்வரமென்று சொல்லப்படுகிறது. ச்ருதியிலிருந்தும் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் யென்று ஏழு ஸ்வரங்கள் உண்டாகின்றன.

(17) ஸப்த ஸ்வரங்களுள் முதலாவது ஸ்வரமான ஸ, யென்றதற்கு ஷட்ஜமென்று பேர்வரக் காரணமின்னதென்பதை இதனடியிற்கண்ட ச்லோகத்தினால் தெரிந்துகொள்ளலாம்.

"நாஸாகீ்ட்டமுரஸ்தானு—ஜிஹ்வதந்தாம்ஸ்ச்சஸம்ஸ்ப்ருசம்
ஷட்ஜஸ்ஸம்ஜாயதேயஸ்மாத்—தஸ்மாத்ஷட்ஜஇதீரித:" =

இதன்பொருள்:— நாசி, கண்டம், ஹிருதயம், அண்ணுக்கு, நாக்கு, பல்லு ஆகிய இவை ஆறுடன் ஸம்மந்தப்பட்டு வெளிப்படுவதால் ஷட்ஜமென்று பேர்வந்தது.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. ～～～ = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி=தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.

2. மேல்ஸ்தாயி=உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.

3. ஆரோஹணம்=ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.

4. அவரோஹணம்=இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.

5. ஸஞ்சாரம்=ஏற்றி யிறக்கிப்பாடுதல்.

6. வர்ணமெட்டு=இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு.



## த்யாகராஜய்யரவர்களின் கீர்த்தனை

இராகம்—நாட்டக்குரஞ்சி—ஆதிதாளம். 1-களைச்சவுக்கம் லகு அரையிடத்தில் எடுத்துக்கோள்ளவும்.

ஆ=ச, ச—ரி, அ—க, சு—ம, ப, ச—த, கை—நி
அவ=ச, கை—நி, ச—த, சு—ம, அ—க,

ப=மனஸா விஷய் நட்ட விடுல் கொஸங்கிதே
மாராமுனி க்ருபாகல்குனே மனஸா=

அ=தனதனு பொகரிண்டிக்கி தீஸிபெட்டி
தாகுக்கனு தோனு ரீதிகாதோ=

ச=தவிட்டிக்கிரம்காடபோயி கூட்டி
தபிலகோதி கொம்போயி நட்டுகாதோ,
செவிட்டிக்கு பதேசிஞ்சி நட்டுகாதோ
ஸ்ரீ த்யாகராஜனு துனிதலஞ்சக=

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=* * * * நீ சா ரீ * * சா * *--சநிநீநிதநா * * நீ சா * * | * * * * நீ சாரீ காமா * * | மாகாமாரீ—காமாகாரீ |
| * * * * மனஸா* * வி * *—ஷ—ய—— * * நட்ட * * | * * * * விட்டுல—கொ* * | ஸங்——--கி—-தே- |
| 1. காசா = நீசாரிகாரிசா * *—சநிநீநிதநா * * நீ சா * * | ஷை | ஷை |
| எ—— = மனஸா—வி * *—ஷ—ய—— * * நட்ட * * | ஷை | ஷை |
| 2. காசா = நீசாரிகமகசா * நி—த நிசநிசநிதப—தாநீசா * * | ஷை | மாகாமாரீ—காமபகா *ம |
| எ—— = மனஸா—வி * ---ஷ-ய————-அநட்ட * * | ஷை | ஸங்——--கி—-தே*— |
| 3. ரிகசா = ஷை | ஷை | காமாமககரி—கா * * மா * * |
| எ—- = ஷை | ஷை | ஸங்———-கி * * தே* * |
| * * * * = மாகாமாநிநிதா * *—நீதாநீபா—தாநீசா * * | * * * * நிச்நிச்நீதாமா * * | மா * *-மகமபகமரிக சா* * |
| * * * * = மா—ரா—— * *—மு—ளி--க்ரு-பா * * | * * * * க——–லகு * * | ஞெ* *-மஅன——ஸா* * |
| * * * * = நீ சா ரீ * * = | | |
| * * * * = மனஸா * * = | | |
| அ=* * * * மாகா—மா * * மா * *—நீ * * தா * *—நீதாநீபா | தா * *—தா * நிசா * * நீ * * | நீ * *-சநிசரீ*-ரிச்சா * * |
| * * * * த ந—த * * து * *—பொ * * க * *—ரிம்—— | டி * *—கி * —— * * தீ * * | வி* *-பெ—* ட்டி---* * |
| * * * * ரி * * சா * *—சாநீசாநீதா * *—நீதாநீபா | தா * * நீசாநீதாமா * * | மாகா-ரீகமகா*ம-ரிகசா |
| * * * * தா * * கு * *—க்க——ல * *—தோ—— | லு * * ரீ——-தி * * | கா---ஆ———-தோ- |
| * * * * = நீ சா ரீ * * = | | |
| * * * * = மனஸா * * = | | |
| ச=* * * * நீ சாரீ காமா * *—காமக ரீகரிசா * * * * * * | * * * * நீ சா ரீ * * சா * * | தா * நிசா * * தா * நிபா * * |
| * * * * த விட்டி-க்கி * *—ரம்-- ——க * * * * * * | * * * * அடபோ* * யி * * | கூ*—— * * ஊ* ட்டி * * |
| * * * * நீ ரீ சா * *—சாநீசாதாநீ * * சா * * * * * * | * * * * நீசா ரீகாமாகா | மா * * மா * *-* * * * மா * * |
| * * * * த பி ல * *—கோ——-தி * * கொம் * * * * * * | * * * * போ-யி—ந—- | ட்டு* * கா * *-* * * * தோ* * |
| * * * * மா கா மா * *—நீ * * நீநீதா * *—நீதாநீபா | தா * * தாநீசா * * நீ * * | சா * *சா * *-* * * * சா * * |
| * * * * செவிட்டி * * க்கி * * யுஉ ப * *—தே—— | கிம் * * கி—— * * ந * * | ட்டு* *கா * *-* * * * தோ* * |



| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| * * * * நீசாக்ரீசா * *—சாநீசாநீ—நீதாநீபா | தா * * நீசாநீதாமா * * | மாகா-ரீகமகா*ம-ரிகசா = |
| * * * * ஸ்ரீ——-- * *—த்யா——க--ர— | ஜ * * ஞு—து—னி * * | த——லம்——*--ச அக = |
| * * * * = நீ சா ரீ * * = | | |
| * * * * = மனஸா * * = | | |

## பல்லவிக்கு கற்பனஸ்வரங்கள்.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| 1. * * * * மனஸா—விஷய நட்ட | * * * * கா * * * * * * * * மா | * * * *-கா * * * * * *-சா * * |
| 2. * * * * = ஷை | * * * * கா * * மா * * தா * * | மா * * கா * * மா * *-கா * * |
| 3. சா * * = ஷை | * * * * தா * *-மா * * தா * * | மா * *கா * * ரீ * *கா* * |
| 4. சா * * = ஷை | * * * * நீ * * தாமா-தா * * | மாகா-மா * * காரீ-கா* * |
| 5. ரீசா = ஷை | * * * * சாநீ-தாநீ* *சா | நீதாபாதா-நீதா * * மா |
| 6. காசா = ஷை | * * * * ரீசா-* *நீ-தாநீ | சாநீதா நீ * * தா மாகா |
| 7. ரீசா = ஷை | * * * * சாமாகாமாநீதா | நீபா-தாநீசாநீதாமா |
| 8. காசா = ஷை | * * * * சா * * * * சாநீதா | பாதாநீ* *-* *நீதாமா |
| 9. காசா = ஷை | * * * * சமாகமநிதநி—பதாப | தநிச்ரிநிச்ரி—க்ரிச்நி—தநீத |
| 10. மகரிச = ஷை | * * * * மகரிசநிதபதநீசமக | மநிதநி-பதநிச்ரிச்-க்ரிச்நிதநி |
| 11. தமகச = ஷை | கரிசரீச-நிரிசநிச-தநிசசநி | சா * * * * * த—நிசரிகமகாம |
| கமநிதாநி—பதநிச்நிதநிபதநி—தநிதா்ரிதநிநிச்சாச்தநிச்ரி | க்மாக்ரிக்ச்ரி—க்ரிச்நிதநிச் | ரிக்ரிச்நித—ரிச்நிதமத—நிநிதம |
| * கரிச = மனஸா = | | |

(பத) ப=மனஸு=மனதை

விஷய, நட்ட, விட்டலகு=பஞ்சேந்திரயங்களின் விஷயங்களி[லும், நடித்தல், சிற்றின்பங்களுக்கு

ஓஸகிதே=கொடுத்துவிட்டால்

மாராமுனி=நம்முடைய ராமனின்

க்ருப=கிருபை

கல்குனோ=உண்டாகுமோ?

மனஸா=ஓ! மனதே!

அ=தன தலுபு=தன்னுடைய (வீட்டின்) கதவை

ஒகரு=ஒருவனுடைய

இண்டிக்கி=வீட்டுக்கு

நீஸிபெட்டி=கொடுத்துவைத்து

தாகுக்கலு=தான் நாயை

தோலு=ஓட்டுகிற

ரீதிகாதோ=மாதிரி அல்லவோ?

ச=தவிட்டிக்கி=தவிட்டிற்கு

ரம்காடபோயி=வியபிசாரஞ்செய்யப்போய்

கூட்டிதபில=கூழ்வைத்த தவலையை

கோதி=குரங்கு

கொம்போயினு=கொண்டுபோச்சுது

அட்டுகாதோ=அவ்வாறல்லவோ?

செவிட்டிக்கி=செவிடிற்கு

உபதேசிஞ்சினு=உபதேசித்தது

அட்டுகாதோ=அவ்வாறல்லவோ?

ஸ்ரீ த்யாகராஜ=ஸ்ரீ த்யாகராஜனால்

நுதுனி=துதிக்கப்பட்டவனை

தலஞ்சக=நினைக்காமல்

(பொழி) தன் வீட்டுக்கதவை வேறொருவனுக்கு கொடுத்துவைத்து தான் நாயை ஓட்டுகிற மாதிரியும், தவிட்டிற்கு வியபிசாரஞ் செய்யப் போய் கூழ்வைத்த தவலையைக் குரங்கு கொண்டுபோன மாதிரியும், செவிட்டிற்கு உபதேசஞ்செய்த மாதிரியும் ஸ்ரீ த்யாகராஜனால் துதிக்கப் பட்டவனை நினைக்காமல் மனதை பஞ்சேந்திரியங்களின் விஷயங்களி லும், சிற்றின்பத்திற்கு கொடுத்துவிட்டால் ஓ! மனதே! நம்முடைய இராமனின் க்ருபையுண்டாகுமா?



பைரவிராகம்—ஆதிதாளம்—அரைக்களைச்சவுக்கம். லகு ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ=ச, ச—ரி, சா—க, சு—ம, ப, ச—த, கை—நி,

அவ=ச, கை—நி, சு—த, ப, சு—ம, சா—க, ச—ரி,

ப=ஸ்ரீரகுவரஸுகுணாலய—ஸரஸிஜலோசன—விரோசநாப=ஸ்ரீ=

அ=தானலேனி—பாகுவடிதி
ப்ரானநனுப்ரோவக—ராதாவாதா=ஸ்ரீ=

ச=1. கமலாஹிதத—கமலாஹிததர
மமதகெலிஸிநனு—மன்னிஞ்சராதா=ஸ்ரீ=

2. கனிகாமுனநனு—கனிகாமுனநிடி
சனுவுனனெக்கமன—வினிபல்காராதா=ஸ்ரீ=

3. ஆகமமூல—அவனிஜாலோல
வேகமேதெலிஸிகோ—த்யாகராஜார்ச்சித=ஸ்ரீ=

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=நீ ** தாபா–தாபா–மா பா | ப ம க மா–க மா | பா **–பாதா |
| ஸ்ரீ ** ரெகு--வ ர–ஸூகு | ஊ————-ல | யா **–ராமா |
| (1) நீ ** தநிச்ாரிச்நீ **–தபா–மா பா | ஷை | ஷை |
| ஸ்ரீ ** ரெகு---- **–வ ர–ஸூகு | ஷை | ஷை |
| த ப ப ம ம க–ப ம ம ககரி–ரிகசா | ** ரி ச ரி கமப– | பதநீ–தா–தபமா |
| ஸஅரஅவிஇ–ஜஆலோச்ச–அனு | ** விஇரோ—-- | ச்ச---நா--ப—— |
| =நீ ** தாபா= | | |
| =ஸ்ரீ ** ரெகு= | | |
| அ=பாநீ ** தா பா **--பாதாதபமா | பாநீ ** நிததா | நீ ** ச்ாச்ா |
| த ரா ** னலே **———னி— | பரா ** கு—— | ஏ ** டி தி |
| ர்ச்ா **–க்ரிச்ா **–க் ரி ச்ா | ச்ரி நீ **–தாநிச் | நீ **–நிதப ம- |
| பிரா **–னஅந **–னுஉப்ரோ | வஅக **–ரா--- | தா **வா–தாஅ- |
| =நீ ** தாபா= | | |
| =ஸ்ரீ ** ரெகு= | | |
| ச=1. ** பபபாபத–நி நி தநி ச்ாச்ா | ** ச்ரிக் ம்க்ம்க்ரிச்ா | ச் நிநித–தா பா |
| ** கமலா——ஹிஇசஅந த | ** கமலா———— | ஹி–த---த ர |
| ** நிக்ாரி ச்ா–ச் நி நி த தாபா | ** நீ * த ா ப | பாதாதபபம–பாதா |
| ** ம ம ததெ–விஇவிஇந னு | ** ம * ன்னிஞ்ச | ரா—————தா |
| =நீ ** தாபா= | | |
| =ஸ்ரீ ** ரெகு= | | |

மற்றும் சரணங்களையும் இம்மாதிரியாகவே பாடவும்.

# இராக லக்ஷணம்.

32-வது பக்கத்தின் தொடர்ச்சி.

(3) ரிகமா**மா**மகபமகா**கரி–மகபம
கபமகா**கரி–கமபா**தமா**தப-மகா**ரி
ரிகா**மாபத பாதபம–கா**ரி–ரிககம
மப–மகா**ரி--சாரிசாரி–நிநிதா**
நீச-ரிகமபதநீ******–பதநீ**–மபத
நீ**கமபதநீ**–தபதநீ****தபம-
பமதபா**நிதப–மபகமபா******-
மகபமகா******ரிச–ரீ******-
கமரிகா****ரிசா******=

(4) பமநீ****** நிததா **நிச்ா******
நிச்நிரீ ****ச்–ச்நிச்ாரிச்நிச்-
பாத பாதமபம–பதநீ****நிதா**-
நிச்ரிச்ரிக்ா**ரி–தநிச்நிச்ரிச்ரி
க்ா**ரி–பதநிதநிச்நிச்ரி–ச்ரிக்ா**ரி
மபதபதநிதநிச்–நிச்ரிச்ரிக்ா**ரி-
ரிச்ரிக்ா**ரி–ச்ரிக்ரிச்நீ**நிதா**
நிச்ரிச்ா**ரி–நிச்–மபதபா**தமப-
தநி ச்ாரிச்நீ******தப–மகபமதப
தநீ****தப–மகபமகா**ரிச
ரிகமப–ரிகா** ரிசா******=

(5) நீ**நிதா**–நீச்ா******-
ச்நிரீ******–ரிச்க்ா******-
ரீக் ரிச்ா ரிச் நீச் நிதா**–தநிச்ா******
ச்ா******–ச்ாரிச்நீச்நிதாநிதபா**

தநிதநிச்ரீ******–பதபதநித

நிச்ரீ**–மபமபதபதநிதநிச்ரீ**

ரீச்க்ா******–க்ம்ரீக்ச்ரீநிச்நித-

நிச்ரீக்ம்ா******–க்ரீச்நிதபமா**

****-பதநிச்ரீ******–க்ரீச்நித

பமகரி–கமபதநீ******–தநி ச்ாரீச்நீ

****-தபா****–தமபதநீ****தபம

காரி–காமபமாபமகா**ரிரீ**-

ரீசரிகா**ரிச–நீ**நிதா**-

சநீ****–ரிசா****** =

## 8. தோடி ராகம் 8-வது மேளகர்த்தா ஹனுமதோடியில் ஜன்யம்.

ஆ = ச, சு–ரி, சா–கா, சு–ம, ப, சு–தை, கை–நி,

அவ = ச, கை–நி, சு–த, ப, சு–ம, சா–கா, சு–ரி,

### இலக்கணம்.

“தோடிஷ்ஷட்ஜக்ரஹப்பூர்ண
ஸ்ஸாயம்காலேப்ரகீயதே”.

இதன்பொருள்:— தோடி ராகம் ஷட்ஜக்ரஹம், ஸம்பூர்ணம், ஸாயங்காலத்தில் பாடத்தக்கது.

குறிப்பு:— இந்த ராகத்திற்கு பஞ்சமம் ஏற்படவில்லை யென்றும், பஞ்சமம் சேர்த்துப்பாடினுல் ஹனுமதோடிராகமாகிவிடுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனுல் முன்னோர்களான ஸ்ரீ த்யாகராஜய்யரவர்கள் முதலானோரால் செய்திருக்கப்பட்ட பல கீர்த்தனங்களுக்கும் இன்னும் அனேக வர்ணங்களுக்கும் பஞ்சமம் சேர்த்துப்பாடியிருப்பதை நாம் தினம் அனுபவத்தில்க் கேழ்க்கிறோம். அவைகளுக்கு தோடிராகம் என்று ஆதிமுதல் சொல்லிவருவதைத்தவிற ஹனுமதோடி யென்றுசொல்லி நாம் கேழ்விப்பட்டதில்லை. ஆனுல் தற்காலத்துப் பாடகர்கள் அவ்வாறு தப்பாகப்பாடுகிறார்கள் யென்று சொல்லுவதும் பொருந்தாது. முன்னோர்களின் சிஷ்ய பரம்பரையிலேயே அவ்வாறு அவர்களுக்குப் பாடமாகிப்பிறகு பலருக்கும் சொல்லிவைத்திருப்பதாகவே தெரிகிறது. வேறு சில வித்வான்களால்



சொற்ப வர்ணங்கள் மாத்திரம் பஞ்சம மன்னியில் பாடப்பட்டிருக்கிறது. அதன் காரணம் தெரியவில்லை. ச்லோகத்தின் கருத்தும் ஸம்பூர்ண ராகமென்று சொல்லப்பட்டிருப்பதால் பஞ்சமம் சேர்ந்திருக்கிறதென்றே ஏற்படுகிறது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சரிகா****மாபா****–நிதா****–ச்நீ****-
ச்ா******–ச்நிரீச்நிதா****–பமகா****–
ரீசா**** =

(2) மகமா**பா****பா****–பாதநிதாநிபா****–
பா****–பாதபமா**–மா****–மாபமாப–
கா**கா**–கரிரீ**–ரீ****–ரிகமக
ரீகரீக சா****–சநிசாரிசநிதா**–
நிசரிகமா**–காமபா**மகா**–
ரீ**சா** =

(3) கமதா**தா**–தாநிதநிச்நிதா**–தாநி
தநிச்ா****ரீ–நிச்ரீச்நிதா**–தநிச்ரீ
க்ரீச்நிதா**–க்ா**ரீச்நிதா**–தநி
ச்ரீ******–ச்நிதா**தநிச்நிதபமகா**
கமபா****தநீ****தபமகா****–மகபம
தபகா****–கரிரிகமா****மககரிரீ****
ரீகம காமரீ**–ரீகரீகா**ரிசா**** =

(4) கரிகா****–ரிசா****ரி–சரிககரிசநிதா****–
நிசரிசரிகமகா**–தநிசநிசரிசரிகமகா****–
மகபமகா****–மகபமதபமகா****–
மகபமதபநிதபமகா****–மகமப
தநீ******தபமகா****–கமபதநிச்ா****–
நிதபமகா**–கமபாதநிதாநீ–பதமப–

கமா—கதபமகா**—ரிசரீகமகா****ரி—

சாரிசாரி—ழ**ரிசா****--ழிதா**ழ**

சா****** =

(5) மா**மா**பாதபமா**—மாபமாபகா****—

கமபா**பா**—பமதா**தா**—கமதா**தா**—

ழிரிகமதா**தா**—தாநிச்நீச்நி

தா**தா**—தநிச்ரிச்நீ****—ச்தநி

தநிச்ர******—ச்நிரி**ரி**—நிரிநிரி

க்ர**க்ர**—க்ரிரிக்ம்ர****—ம்ரப்ம்—

க்ரம்க் —ரீக்ரி—ச்ரிச்நீ**—க்ரம்க் —ரீக்ரி

ச்ரிச் —நீச்நிதா**—ரீக்ரி—ச்ரிச்—

நீச்நி--தாநிதபா**—நீச்நி தாநித—

பாதப—மாபமகா**—பாதப—மாபமகாமக

ரீகரிசா** =

### 9. காம்போஜி ராகம் 28-வது மேளகர்த்தா ஹரிகாம்போஜி ராகத்தில் ஜன்யம்.

ஆ = ச, ச—ரி, அ—க, சு—ம, ப, ச—த,

அவ = ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

### இலக்கணம்.

"காம்போஜீராகஸ்ஸம்பூர்ண-
ஸ்ச்சாரோஹேகநிவக்ரித:

இன்னும் வரும்

**பத்திராதிபர்.**

## நீதி

16வது பக்கத்தொடர்ச்சி.

ஸ்வல்பஸ்னுபுவஸாவஸேகமலினம் நிர்மாம்ஸமப்யஸ்திகௌ
ச்வாலப்த்வாபரிதோஷமேதி நசதத்தஸ்யக்ஷுதாசாந்தயே
ஸிம்ஹோஜம்புகமங்கமாகதமபி த்யக்த்வாநிஹந்தித்விபம்
ஸர்வ:க்ருச்ரகதோபிவாஞ்சதி ஜனஸ்ஸத்வாதுரூபம்பலம். (2)

(பொருள்) நாயானது கொஞ்சம் நரம்புகளையும், கொழுப்புகளையும் உடைய பசுவின் எலும்பை அடைந்து அதில் சிறிதேனும் மாமிசமில்லா விடினும் அதனாலேயே சந்தோஷமடைகிறது. ஆனால், அதனால் நாயின் பசிதீருவதில்லை. சிங்கமோவெனில் சமீபத்தில் ஒரு நரியானது இருந்தாலும் அதைச்சிறிதும் இலக்ஷ்யம் செய்யாமல்விட்டுவிட்டு யானையைத் தேடிக் கொன்றுதின்கின்றது. ஆகையால் உலகத்தில் யாவரும் கஷ்டதசையை அடைந்தாலும் அவரவர்கள் சக்திக்குத்தகுந்த பயனை இச்சிக்கிறார்கள்.

லாங்கூலசாலனம தச்சரணாவகாதம்
பூமௌநிபத்யவதனோ தா தர்சனஞ்ச
ச்வாபிண்டதஸ்யகுருதே கஜபுங்கவஸ்து
தீரம்விலோகயதிசாடு சதைச்சபுங்க்தே. (3)

(பொருள்) நாயானது தனக்கு ஆஹாரம்கொடுப்பவன் முன்னிலையில் வாலையாட்டி பூமியில் காலால்கிழித்து கீழேவிழுந்து முகத்தையும் வயிற்றையும் காட்டுகிறது. யானையானது அப்படிச்சொய்யாமல் மிகவும் கம்பீரமாய்ப் பார்க்கிறது, அநேகவிதமான பிரியவசனங்கள் சொன்ன பிறகு ஏதோ ஒன்றை வாங்கித்தின்கின்றது.

பரிவர்த்தினி ஸம்ஸாரே
ம்ருத:கோவாநஜாயதே
ஸஜாதோயே நஜாதேந
யாதிவம்சஸ்ஸ முன்னதிம். (4)

(பொருள்) ஜனனமரணம் ஸ்வபாவமாயுள்ள ஸம்ஸாரத்தில் இறந்தவன் எவனும் பிறப்பது நிச்சயம். ஆனால், எவனுடைய பிறவியினால்

வம்சமானது மிகவும் கீர்த்தியுடையதாய் விளங்குகிறதோ அவனது பிறவியே பிறவி.

குஸுமஸ்தபகஸ்யேவ<br>
த்வயீவ்ருத்திர் மனஸ்விந:<br>
மூர்த்நி வாஸர்வலோகஸ்ய<br>
சீர்யதே வனயேவவா. (5)

(பொருள்) பூங்கொத்துகளைப்போல வித்வான்களுக்கு இரண்டுவிதமான வியாபாரங்களுண்டு. அதாவது: புஷ்பமானது ஸர்வஜனங்களுடைய சிரஸிலாயினும் அல்லது காட்டிலாவதிருக்கும். அதுபோல, வித்வான்கள் வெளியில் ஏல்லோராலும் நன்குமதிக்கப்பட்டாகிலும் அல்லது அவர்களது வீட்டிலேயேயாகினு மிருப்பார்கள்.

ஸந்த்யன்யேபிப்ருஹஸ்பதி ப்ரப்ருதயஸ்ஸம்பாவிதா:பஞ்சஷாஸ்<br>
தான்ப்ரத்யேஷவிசேஷவிக்ர மருசீராஹுர்னவைராயதே<br>
த்வாவேவக்ரஸதே திவாகரநிசாப்ராணேச்வ ரௌபாஸ்வரௌ<br>
ப்ராத: பர்வணிபச்யதானவபதிச் சீர்ஷாவசேஷாக்ருதி:. (6)

(பொருள்) இதரர்களான பிருகஸ்பதி முதலிய ஐந்தாறுபேர்களிருக்கிறார்கள். ஆயினும் மேலோர்களிடமே பாராக்ரமத்தைக் காட்டுவதில் பிரிமுடைய இந்த இராகுவானவன் அவர்களிடம் விரோதமுடையவனுயில்லை. அமிருதத்தைப் பருகும்போது விஷ்ணுவினல் தலையைமட்டும் மிகுதியாய்விடப்பட்ட இராகுவானவன் பிரகாசம் பொருந்தியவர்களான சூரிய சந்திரர்களிருவரையே பூர்ணிமையன்று விழுங்குகின்றான் பார்!

வஹதிபுவனச்ரேணீம்சேஷ: பணுபலகஸ்திதாம்<br>
கமடபதினுமத்யேப்ருஷ்டம் ஸதாஸசதார்யதே<br>
தமபிகுருதேக்ரோடாதீனம் பயோதிரநாதரா<br>
தஹஹமஹதாம் நிஸ்ஸீமானச்சரித்ரவிபூதய: (7)

(பொருள்) ஆதிசேஷன் பலகைபோன்ற தன்படவரிசைகளில் பதினான்குலகங்களையும் வஹிக்கின்றான். அவ்வாதிசேஷனை ஆமையரசான விஷ்ணுவானவர் தன்முதுகின்மேல் வஹிக்கின்றார். அவ்விஷ்ணுவை



ஸமுத்திரராஜன் அலக்ஷ்யமாய்த் தன்தோளில் வஹிக்கிறான், எவ்வளவு ஆச்சரியம்! பெரியோர்களது சரித்திரங்கள் எல்லையற்றன.

வரம்ப்ராணோச்சேதஸ்ஸமதமகவன் முக்தகுலிசப்ரஹாரை<br>
ருத்கச்சத்பஹுள தஹனோத்காரகுருபி:<br>
துஷாராத்ரேஸ்ஸுனோரஹஹ பிதரிக்லேசவிவசேநசா<br>
ஸௌஸம்பாத: பயஸிபயஸாம்பத்யுருசித:. (8)

(பொருள்) கொழுந்துவிட்டெரியும் நெருப்பைக்கக்குவதும், மதம் பிடித்த இந்திரனுல் பிரயோகிக்கப்படுவதுமான வச்சிராயுதத்தால் இமயமலையானது அடிபடுங்காலத்தில் அதன் புத்திரனுகிய மைனுகமலையானது சமுத்திரத்தினுள் புகுந்தொளித்தது நியாயமல்ல. சௌரியமுள்ளவர்கள் பிராணனைவிட்டாவது மானத்தையே காப்பாற்றுவார்கள். அதில்லாதவர்கள் வேறொன்றையும் கவனியாமல் தன்னைமட்டும் காப்பாற்றிக் கொள்வார்கள்.

யத்சேதனோபிபாதைஸ் ப்ருஷ்ட:<br>
ப்ரஜ்வலதிஸவி துரினகாந்த:<br>
தத்தேஜஸ்வீபுருஷ: பரக்ருதி<br>
நிக்ருதிம் கதம்ஸஹதே. (9)

(பொருள்) அசேதனமாகிய சூரியகாந்தமணியானது சூரியனது கிரணமானது தன்மீதுபட்ட மாத்திரத்திலேயே எப்படி எரிகின்றதோ அப்படிப்போல தேஜஸ்வியான புருஷன் பிறரால் செய்யப்படும் அபாதத்தைச்சகிக்கமாட்டான்.

ஸிம்ஹச்சிசுரபி நிபததிமதமலின<br>
கபோலபித்திஷு கஜேஷு<br>
ப்ரக்குதிரியம் ஸத்வவதாம்நகலு<br>
வயஸ்தே ஜஸாம்ஹேது:. (10)

(பொருள்) சிங்கமானது குட்டியாகவிருப்பினும் மதத்தினுல் மலினமானதும் சுவர்போன்றதுமான கன்னங்களையுடைய யானைகளின்மீது பாய்கின்றது. இதுவே பலசாலிகளின் சுபாவம். தேஜஸ்விகளுக்குத் தன்பராக்ரமத்தைக் காட்டுவதற்கு பாலியம் முதலியன காரணமன்று.

## பொருளினியல்பு.

ஜாதிர்யாது ரஸாதலம்குணகண—ஸ்தத்ராப்யதோகச்சதாம்
சீலம்சைலதடாத்பதத்யபிஜன—ஸ்ஸந்தஹ்யதாம்வன்ஹிநா
சௌர்யேவைரிணிவஜ்ரமாசுநிபதத்—வர்த்தோஸ்துன:கேவலம்
யேனைகேனவிநாகுணாஸ்த்ருணலவ—ப்ராயாஸ்ஸமஸ்தாஇமே. (1)

(பொருள்) பிராமணத்துவம் முதலிய ஜாதிகள் பாதாளலோகத்தையடையட்டும், தைரியம், ஔதார்யம் முதலிய குணங்களெல்லாம் அதற்கும் கீழுலகமடையட்டும். சீலமானது (நன்னடக்கை) மலையினின்றும் கீழ்விழுந்து நாசமடையட்டும். தன் வம்சமானது அக்னியினால் தகிக்கப்படட்டும். தனத்துக்குச் சத்துருவான பராக்ரமத்தில் இடிவிழட்டும். எது எப்படிப்போனாலும் நமக்குப்பணம் ஒன்றுமட்டுமே வேண்டியது, எல்லாவற்றையும் விட்டுப்பொருளைமட்டும் விரும்பும் காரணம் என்னவெனில், பொருளில்லாவிடில் ஸகலமும் திருணப்ராயமாய்ப் போய்விடும். மேலும்; பணமில்லாதவர்களுக்கும் உயிரில்லாதவர்களுக்கும் பேதமில்லை. இராமனைப்பார்த்து இலக்ஷ்மணன் கூறியுள்ளான். ஆனால், பொருளைத் தேடுவது, காப்பாற்றுவது முதலியனவெல்லாம் துக்கம் என்று சொன்னது அசமர்த்தர்களுக்காம்.

யஸ்யாஸ்திவித்தம்ஸநர: குலீன:
ஸபண்டித:ஸச்ருதவான் குணக்ஞ:
ஸயேவவக்தாஸ சதர்சனீய
ஸ்ஸர்வேகுணா: காஞ்சனமாச்ரயந்தி. (2)

(பொருள்) இவ்வுலகில் எவனுக்குப் பணமிருக்கிறதோ அவன்தான் மனிதன், அவனே நற்குலத்திலுதித்தவன், அவன்தான் ஸர்வமுமறிந்த பண்டிதன், தர்மசாஸ்திரம் முதலியவைகளை நன்கறிந்தவன், மஹாகுணசாலி, பெரியோர்கள் சபையில் அழகாய்ப் பேசத்தெரிந்தவன், எல்லாராலும் பார்க்கத்தகுந்தவன்.. ஆகையால் பூமியில் எல்லாக்குணங்களும் திரவியத்தை ஆசிரயித்திருக்கின்றன.

தௌர்மந்த்ராந்நுபதிர்விநச்யதி—யதிஸ்ஸங்காத்ஸுதோலாலனாத்
விப்ரோனத்யயனாத்குலம்குதந—யாத்சீலம்கலோபாஸநாத்



ஹ்ரீர்மத்யாதனவேக்ஷணாதபிக்ருஷி:—ஸ்னேஹ:ப்ரவாஸாச்ரயாத்
மைத்ரீசாப்ரணயாத்ஸம்ருத்திர—நயாத்யாகாத்ப்ரமாதாத்தனம்.

(பொருள்) நல்ல மந்திரிகளால் இராஜாக்களுக்கு க்ஷேமமும், துர்மந்திரிகளால் கெடுதியுமேற்படும். ஸர்வஸங்க பரித்யாகம்பண்ணின ஸன்யாசிகள் சேர்க்கையில் கெட்டுப்போவார்கள். அதாவது: ஒருசன்யாசி தன்கௌபீனத்தை எலிகள் கடித்துவிடுகின்றன வென்றதற்காக ஒரு பூனை வளர்த்தார், அந்தப் பூனைக்குப் பாலுக்காக ஒரு பசுவாங்கினர், அப்பசுவை மேய்க்க ஒருபையனை நியமித்தார், அப்பையனது க்ஷேமத்தைக்கோரி அவனுக்கு கல்யாணம் பண்ணிவைத்தார், அவன் பெரியஸம்ஸாரியாய்விட்டான். பிறகு அவனது குடும்பத்தைத் தனதாகவே பாவிக்கவேண்டிய அவசியம் சன்யாசிக்கு ஏற்பட்டுவிட்டது. "இராமேசுவரம் போனாலும் சனீசுவரன் பின்னாலே" என்பதுபோல சன்யாசியாய்ப்போயும் ஸம்ஸாரம் விடவில்லை. ஆகையால் சேர்க்கையால் துறவிகள் கெடுவார்கள். குழந்தைகளுடன் எப்போதும் விளையாடிக்கொண்டே யிருந்தால் அவர்களுக்குப் பெற்றோரிடம் கொஞ்சமேனும் பயமின்றி துன்மார்க்கர்களாய் விடுவார்கள். ஆகையால் பிள்ளைகளிடம் மட்டுமல்ல சீடர்களிடத்திலுங்கூட அதிக விளையாட்டால் கேடேவிளையும். ஆகையால் ஒருவாறு அவர்களிடம் கண்டிப்பு அதிகமாயிருந்தாலும் இருக்கலாமேயன்றி லாலனை அதிகம்கூடாது. வேதாத்யயனம் செய்யாமையால் அந்தணன் கெடுகிறான். அதாவது: அந்தணனுக்கேற்பட்ட கொடுத்தல், வாங்கல், வேள்விசெய்தல், வேள்விசெய்வித்தல், வேதம்ஓதல், வேதமோதுவித்தல் என்ற ஆறுகாரியங்களுக்கும் வேதமே ஆதாரமாகையால் அது இல்லாத அந்தணன் கெடுவான். துஷ்டப்பிள்ளைகளால் வம்சமானதுகெடும், ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களைப்போல துர்க்குணமுள்ள பிள்ளைகள் எவ்வளவிருப்பினும் பயன்யாதுமில்லை. சந்திரனைப்போல் ஒருவனிருப்பினும் அவனது குலம் விளங்கும். நற்குணமானது துற்குணமுள்ளவர்கள் சேர்க்கையால் கெடும். லஜ்ஜையானது கள்ளுண்டலால் கெடும். அதாவது: குடிவெறியால் தன்னைமறந்து பிறர்பழிக்கும்படியான இழிவான காரியங்களைச்செய்யத்தொடங்கி நாளடைவில் தெரிந்தே அப்படிச்செய்யத் துணிவுண்டாகின்றது. கிருஷியானது உடையவன் கண்ணோட்டமில்லாவிடில் கெடும். அதனால் ஏற்படும் இலாபநஷ்டத்திற்கு பாத்தியப்பட்டவன்

உடையவனேயாதலின், "தன்கையே தனக்குதவி" என்பதுபோல தன்னைப்போல பிறர் கவலையெடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகையால் "உடையவன் கண்ணோடாப்பயிர் பாழ்". ஒருவரிடமுள்ள நேசமானது இடம் மாறி இருவரும் வெவ்வேறிடத்திலிருப்பின் கெடும். அதாவது கொஞ்சங் கொஞ்சமாய் அவர்கள் ஞாபகமே இல்லாமற்போய்க் கடைசியில் முற்றிலும் மறந்துவிடநேருகிறது. மேலும் சிநேகமானது விசுவாஸமின்மையாலும் கெடுகின்றது. சம்பத்தானது நீதியின்மையால் கெடுகின்றது. தனமானது சூதாட்டத்தினாலும் சண்டையினாலும் கெடும்.

*தானம்போகோநா சஸ்திஸ்ரோ*
*கதயோபவந்தி வித்தஸ்ய*
*யோநததாதிந புங்க்தேதஸ்ய*
*த்ருதீயாக திர்பவதி.* (4)

(பொருள்) தனத்துக்கு தானமென்றும், போகமென்றும், நாசமென்றும் மூன்றுவிதமான கதிகளுண்டு. தானமாவது ஸத்பாத்திரங்களுக்குக் கொடுப்பது. போகமாவது தானே நியாயமாய் அநுபவிப்பது. நாசமாவது அனியாயமாய் அழிந்துபோவது. இம்மூன்றில் எவன் தன் தனத்தை நல்லோர்களுக்குக் கொடுக்காமலும், தானனுபவிக்காமலுமிருக்கிறானோ அவனது தனம் மூன்றாவது கதியையடையும். அல்லாமலும் தனத்திற்கு தர்மம், அக்னி, அரசர், திருடர் என்று நால்வர் தாயாதிகள் உளர். இவர்களுள் மூத்தவனாகிய தர்மத்தை ஒருவர் அவமதித்தால் அத்தனமாவது மற்ற மூவர்கள் பங்காகின்றது.

*மணிச்சாணோல்லீடஸ்ஸ மரவிஜயீஹேதிதளிதோ*
*மதக்ஷீணோநாகச்சரதி ஸரிதாச்யானபுலிநா*
*களாசேஷச்சந்த்ரஸ்ஸுரதம் ருதிதாபாலவளி*
*தாதநிம்னோசோபந்தேகளி தவிபவாச்சார்த்திஷுநரா:* (5)

(பொருள்) கொடையாளிகள் கொடையினால் தனமானது சிலவழிந்து அதனால் மெலிந்துபோனாலும் அப்போதும் அவர்களது காந்தியதிகப்படுகிறது. அதாவது: கடைசலிலிட்டுக் கடைந்த இரத்தினமும், ஆயுதங்களாலடிபட்டுக் கடைசியில் ஜயமடைந்த வீரனும், மதஜலப்பெருக்கினால் இளைத்த யானையும், சரத்காலத்தில் கொஞ்சம் காய்ந்த மணல்மேடுகளையுடைய நதியும், ஒரு கலைமட்டும் மிகுதியாயுடைய சந்திரனும், ஸம்போகத்தில் மர்த்தனம் செய்யப்பட்ட பாலஸ்திரீயும், யாசகர்களுக்குக் கொடுத்துச் செலவான தனமுடைய மனிதர்களும் இளைத்துப்போனதினால் விளங்குகிறார்கள் (பிரகாசிக்கிறார்கள்).



*பரிக்ஷீண:கச்சிதஸ்ப்ருஹயதி யவாநாம்ப்ரஸ்ருதயே*
*ஸபச்சாத்ஸம்பூர்ண: கலயதிதரித்ரீம் த்ருணஸமாம்*
*அதச்சானேகாந்தாருருலகுத யார்த்தேஷுதநிநா*
*மவஸ்தாவஸ்தூநிப்ரதயதிச ஸங்கோசயதிச.* (6)

(பொருள்) உலகத்தில் ஒருமனிதன் வறுமையால் வருந்தும்போது சிறு தான்யங்கள் சிந்திக்கிடப்பதையும் சேர்க்க அபேக்ஷிக்கிறான். அதே மனிதன் பிறகு ஒருசமயத்தில் ஸம்பூர்ணனாய் (தனிகனாய்) ஆகும்போது பூமியை திருணத்திற்குச் சமமாய் நினைக்கிறான். ஆகையால் வஸ்துக்களில் சிறுமை பெருமை என்றபேதமில்லை. தனிகர்களது நிலைமையானது வஸ்துக்களை அதிகமாயும் கொஞ்சமாயும் செய்கிறது.

*ராஜன்துதுக்ஷஸிய திக்ஷிதிதேனுமேனாம்*
*தேனாத்யவத்ஸமிவ லோகமும்புஷாண*
*தஸ்மிம்ச்சஸம்யகநிசம் பரிபுஷ்யமாணே*
*நாநாபலம்பலதி கல்பலதேவபூமி:*

(பொருள்) ஓ அரசனே! பசுபோன்றவிப்பூமியை கறக்கவேண்டுமென்று இச்சித்தாயாகில், அதனால் பசு கன்றைப் போஷிப்பதுபோல நீ இந்த உலகத்தைப் போஷிக்கக்கடவாய். அப்படி உலகத்தை நீ நன்றாய்ப்போஷித்துவந்தால் பூமியானது கற்பகத்தருவைப்போல் நாநாவிதமான பலங்களைக்கொடுக்கும்.

*ஸத்யாந்ருதாசபருஷா ப்ரியபாஷிணீ*
*சஹிம்ஸ்ராதயாளுரபிசார்த்த பராவதான்யா*
*நித்யவ்யபாப்ரசுர நித்யதனாகமாச*
*வாராங்கனேவந்ருபநீ திரநேகரூபா.* (8)

(பொருள்) இராஜநீதியானது, வேசிகளைப்போல மெய்பேசுவது, பொய்யாக நடப்பது, பிரியமாய்ப்பேசுவது, கடுஞ்சொற்பேசுவது, தயையுடையது, திரவியத்தில் ஆசை, தானங்கொடுப்பது, எப்போதும் திரவியத்தைச்சிலவிடுவது, எப்போதும் மிகுந்த தனத்தைச் சம்பாதிப்பது, என்றிவ்விதம் பலவிதமான நிலைமையுடையது.

ஆக்ஞாகீர்த்தி: பாலனம்ப்ராம்மணாநாம்
தானம்போகோமித்ரஸம் ரக்ஷணஞ்ச
யேஷாமேதேஷட்குணா ப்ரவ்ருத்தா:
கோர்த்தஸ்தேஷாம் பார்த்திவோபாச்ரயேண. (9)

(பொருள்) பிரஜைகளைக் காப்பாற்றவேண்டிய அதிகாரங்கள், கீர்த்தி, அந்தணர்களைக் காப்பாற்றுதல், சற்பாத்திரத்தில் கொடை, உலக சுகங்களையநுபவித்தல், மித்திரர்களைக் காப்பாற்றுதல் ஆகிய இவ்வாறு குணங்களும் எந்த அரசர்களிடமில்லையோ அவ்வரசர்களை ஆசிரயிப்பதால் யாதுபயன்?

யததாத்ராநிஜபாலபட்டலிகிதம்—ஸ்தோகம்மஹத்வா தனம்
தத்ப்ராப்னோதிமருஸ்தலேபிநிதராம்—மேரௌசநாதோதிகம்
தத்தீரோபவவித்தவத்ஸ—க்ருபணாம்—வ்ருத்திம்வ்ருதாமாக்ரு [தா:
கூபேபச்யபயோநிதாவபிகடோ—க்ருஹ்ணாதிதுல்யம்ஜலம். (10)

(பொருள்) தனமானது, கொஞ்சமானாலும் அதிகமானாலும் நமது லலாடத்தில் பிரமாவினால் எழுதப்பட்டபடி மருபூமியிலிருப்பினும் மனிதன் அதிகமாய் அடைகின்றான். ஆகையால் ஒவ்வொருவரும் தைர்யமாயிருக்கவேண்டியது. தனவான்களெதிரில் கேவலம் தரித்திரர்களைப்போல் திரியவேண்டாம். ஏனெனில், ஒருகுடத்தை கிணற்றில் அமுக்கினாலும் கடலில் முக்கினாலும் ஒரே அளவான ஜலத்தையே மொள்ளும்பார்!

இன்னும் வரும்

Ramachandra Iyer.

# அஞ்ஞான குருவின்கதை.

14-வது பக்கத்தொடர்ச்சி.

ரகுபதி:— இல்லை, மறக்கவில்லை, ஆகிலும் ஏதோ அபாயஸ்திதியில் கஷ்டப்படுவதுபோல் கூப்பிடுவதாகத் தெரிகிறதே! அப்படி ஏதாவது சங்கடப்படுவதாக யிருந்தால் நாம் சும்மாயிருக்கலாமா?

கணபதி:— அட அப்பா ரகுபதி! சுந்தரம் சொல்லுகிறபடி சும்மாயிருப்பதுதான் சுகம். நம்முடைய குருவின் குணம் தெரியாதா? "முன்னால் வந்தால் கடிக்கும் பின்னால் வந்தால் எறியும்" ஒருசமயம் சமீபத்திலபோய் விசாரித்தால் உங்களுக்குச் சொல்லியிருந்த பாடங்களைப்படிக்காமல் வீணாக இங்கேவந்து தொந்தரவு செய்கிறீர்களா? பயகாள் நாளை உதைச்சுப்போடிரேன் பாருங்கோயென்று கோபிப்பார். நம்மபாடத்தைப் படிப்போம் வாங்கடா!

ரகுபதி:— சுந்தரமும், கணபதியும் எப்பவும் தன்காரியக்குட்டிகள் தாங்கள் பாடத்தை பாடமபண்ணிப் போட்டுத்தான் மறுவேலைபார்ப்பார்கள் சுந்தரம்! சங்கராபரணவர்ணம் பாடம்போட்டிருந்தாரே பூராவும் முடிஞ்சுபோச்சா?

சுந்தரம்:— ரகுபதி! நம்முடைய குருவின் எண்ணமெல்லாந் தெரிந்திருந்தும் கேலியாபண்ணுகிறாய்!

கணபதி:— சென்ற மாதத்திலேயே சிட்டாஸ்வரம் சொல்லிக்கொடுத்தாரே! இன்னும் பூராவும் முடியாமலாயிருக்கும்!

சுந்தரம்:— உங்களுக்கு வாஸ்தவத்தில் தெரிந்திருந்தாலுமோ அல்லது தெரியாதிருந்தாலுமோ சொல்லுகிறேன். நான் சிக்ஷைக்குவந்து 6-வருஷகாலமாகிறது. இதுவரையிலும் இவர் சொல்லிக்கொடுத்திருப்பது ஸ்வராவளி, ஜண்டைவரிசை, அலங்காரம், கீதமாகிற அப்பியாசப் பாடங்களும், சங்கராபரணவர்ணத்தில் சிட்டஸ்வரம் வரைக்கும் சொல்லியிருக்கிறார். இந்தவர்ணம் ஆரம்பித்து சுமார் 6-மாதக்காலமாகிறது ஒவ்வொரு பாடத்தையும் நான் 2-தினத்தில் சரியாய் அவரிடத்தில் சொல்

விவிடுகிறதில் குறையுமில்லை, அவர்புதுப்பாடம் சொல்லுகிற வழக்கமுமில்லை. ஆனால், பணிவிடைகள் வேண்டியமட்டும் செய்துவருகிறேன்: பொழுதுபூராவும் அவருக்குத்தொண்டு செய்வதில்த்தான் போகிறது. ஆனால்,ரகுபதியின்பேரில் அவருக்குப்பிரியம் அதிகந்தான். ரகுபதீ! உனக்கு கல்யாணிவர்ணம் முடிந்து விட்டதல்லவா?

ரகுபதி:— சுந்தரம்! எனக்கும் கோட்டாக்கொடுக்கிறாயா என்ன நான் நீவருவதற்கு 2-வருஷத்திற்குமுன்னமே இவரிடத்தில் சிக்ஷைக்குவந்திருக்கிறேனே! நமக்கு குருவாகப்போய்விட்டார். இல்லையானால் இந்த சண்டாளப்பாவியை எவ்வளவு வைதாலும், என்னசெய்தாலும் என் வயிற்றெரிச்சல் தீராது. தினம் நான் அவருக்குச்செய்யும் பணிவிடைகளைக்கேள்! காலை 6-மணிக்கு உறங்கிவிழித்தவுடன் அவருடைய படுக்கைக்குச்சமீபத்தில்ப்போய் நிற்கவேணும், உறங்கிவிழிக்கும்போதே ரகுபதீ! என்று கூப்பிடுவார் உடனே அண்ணா இதோ வந்துவிட்டேன் என்று சமீபத்தில்ப்போகவேணும். கொண்டுவா வெத்திலைப்பெட்டியை என்பார் உடன் கொண்டுகொடுக்கவேணும் அதில் எல்லா சாமான்களும் இருக்கிறதாவென்று ஒரு ஸமயம் பார்க்காமல் மறந்துபோய்விட்டால் அடே தரித்திரப்படவா! வரவர உனக்கு அகம்பாவம் பிடித்துவிட்டதா! பாக்கு இதில் இருக்கிறதா பாரடா! என்று பெட்டியை முகத்தில் எறிந்துவிடுவார். புகையிலை இல்லாமற்போச்சுதானால் வெத்திலையென்ற தம்பலத்தை முகத்தில் உமிழ்ந்துவிடுவார். உடனே தண்ணீரைவிட்டு முகத்தைக் கழுவிவிட்டு பாக்கு புகையிலை வகையறா சாமான்களை எடுத்துக்கொண்டு வந்து பெட்டியில் வைப்பேன். படுக்கையில் உட்கார்ந்துகொண்டே வெத்திலை புகையிலை போட்டுக்கொண்டு படுக்கையைவிட்டு எழுந்திருப்பார். உடனே படுக்கைகளை சுருட்டிவைத்துவிட்டு அவர் கக்கூசுக்குள் போயிருக்கும்பொழுது செம்பில் தண்ணீர் வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருப்பேன். பிறகு பற்பொடியும் ஜலமும் கொண்டுகொடுக்கவேணும், அவர் பல்விளக்கிக் கொண்டிருக்கும்பொழுதே வீட்டில் காப்பி போட்டாகிவிட்டதாவென்று ஜல்தியில் பார்த்துவாயென்று விறட்டுவார். அங்குபோனால் அடுப்பில் நெருப்பே இராது. அவருடைய பெண்ஜாதி அம்மாளோ குணத்தில் இவருக்கு இருமடங்கதிகம். அம்மா! சீக்கிரம் காப்பிபோடவேணுமென்று அண்ணா உத்திரவுகொடுத் திருக்கிறார்களென்று சொல்லுவேன்.



அதற்கு அவள் "அடே கட்டயிலே போவா! கார்த்தாலே 7-மணியாகிறதுக்குமுந்தி என்ன காப்பியும் கோப்பியும் வேணுமானா போட்டுக்குங்கோ இல்லையானா எப்படியேன் தொலையுங்கோ, என்னாலேயாகாது, எனக்கு பிராணன் போகிறாப்போல வரது" என்பாள். இதற்குள்ளாக நம்முடைய குரு அண்ணா வந்துவிடுவார், வந்ததும் அடே ரகுபதீ! எங்கே காப்பி! இன்னும் தயாராகவில்லை? என்று பெருஞ்சத்தம்போடுவார், எனக்கு அதற்குள் ஒருதரம் வயிற்றைக்கலக்கிவிடும். என்னசெய்யலாம் தலைவிதியே என்று அண்ணா இதோ தயாராகிவிட்டதென்று நானே காப்பியைப்போட்டுக்கொடுப்பேன். அதில் சிறிது பாகக்குறைவாக இருந்துவிட்டால் சூட்டுடன் என் தலைக்கே அபிஷேகமாகிவிடும். அவருக்கு ஓர் ஒற்றைமாட்டு வண்டியுண்டு. அதில் தான் உட்கார்ந்துகொண்டு இராஜகுமாரத்திக்கு சங்கீதசிக்ஷை சொல்லிக்கொடுப்பதற்காக அரண்மனைக்கு என்னை வண்டியோட்டிக்கொண்டு போகச்சொல்வார். அங்கு சிக்ஷைசொல்லி முடிந்து வெளியில் வரும்வரை மணி 11-ஆகும், அதுவரையில் நான் அரண்மனை வாசலில் காத்திருக்கவேண்டும். உடனே வண்டியைப்பூட்டி வீடுபோய்ச் சேருவோம். வீட்டுக்குப்போனதும் நானே வென்னீர்போட்டு அண்ணாவுக்கு ஸ்நானம்பண்ணி வைத்துவிட்டு அண்ணா, அம்மா இவர்கள் உடுத்துக்களைந்த வஸ்திரமூட்டைகளை எடுத்துக்கொண்டு அண்ணாவிடம் விடைபெற்றுக்கொண்டு ஸ்நானத்திற்கு கிளம்புவேன், மணி 12-க்கு மேலாகிவிடும், நானோ பால்யம், காலையில் ஆகாரங்கிடைக்காது அத்துடன் காலைமுதல் இடைவிடாதவேலையும் செய்துவிட்டு இந்த வஸ்திரங்களைத்துவைக்கும்பொழுது களைப்பினால் பிராணன்போகிற ஸமயமாகவே தோன்றும். இவ்வளவு கஷ்டமடைந்து வீட்டிற்குப் போனவுடனாவது தாயார் அல்லது ஸம்ஸாரம் சமயல்செய்து வைத்திருக்கிறாள் பசியைத்தணித்துக் களைப்பாறலாமென்பதற்குமிடமில்லை. நானே சமயல்செய்து சாப்பிடவேண்டும். சாப்பாடுமுடிய தினம் 2-மணிக்கு மேலாகும். 3-மணிக்குள்ளாக திரும்பவும் நமது அண்ணாவிடம் ஆஜராகவேணும். சிலநாட்களில் அந்த ஸமயம் நித்திரையிலிருப்பார், சிலநாள் நித்திரைவிட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டு வெத்திலைபோட்டுக் கொண்டிருப்பார். அந்த ஸமயத்தில்ப்போனால் எனக்கு வேண்டியமட்டில் ஆசீர்வாதம் கிடைக்கும். ஏண்டா வரவா உனக்குக்கொழுத்துப் போச்சோ? இன்னேரமா உனக்கு? எங்கே சிரைக்கப்போனாய்? என்று கேட்பார், நான் ஒன்றுமே பதில்ச்சொ

ல்லாமல் நிற்பேன். சற்றுநேரத்திற்கெல்லாம் காப்பி தயாராகயிருக்கிறதா பார்! சீக்கிரம் அரண்மனைக்கு வண்டிபோடவேணுமென்பார். உடனே வீட்டினுள்ப்போய் அம்மாவிடம் கேட்டால் அவளுக்குண்டாகும் கோபத்திற்கு அளவேயிராது. ஏண்டா ரகுபதீ! மத்தியானம் சமயல் சாதம்சாப்பிட்டு இன்னும் 2-மணி நேரமாகல்லையே அதுக்குள்ளே பசியெடுத்துட்டுதா? வயித்திலே எலி, பெருச்சாளிகளாயிருக்கு? என்வழிக்கு வாராதே நீங்கள் எப்படியேன் தொலைஞ்சு போங்கோ என்று சென்னாப்போல அலறுவாள். அதற்குள்ளாக அண்ணா காப்பியெங்கேயென்று திரும்பவும் கூப்பிடுவார். உடனே நானே காப்பியைத் தயார்செய்து கொடுப்பேன் அதைக்குடித்துவிட்டு சீக்கிரமாக வண்டியைப்போடு என்று சொல்வார். 4-மணிக்கெல்லாம் வண்டியை ஓட்டிக்கொண்டு அரண்மனைபோய்ச் சேருவோம், இரவு 6-மணிவரைக்கும் அவிடத்தில் பாடங்களைச்சொல்லிக்கொடுத்துவிட்டு திரும்பவும் வீடுவந்துசேர 7-மணியாகும். உடனே வெளியேபோய்வந்து இரவு போஜனமாகி அவருக்குப்படுக்கையை விரித்துக்கொடுத்தவுடன் அதில் உட்கார்ந்துகொண்டு வெத்திலை போட்டுக்கொண்டிருக்கும்பொழுதே அடே ரகுபதீ! ரொம்பவும் சிரமமாகயிருக்கிறது சரீரமெல்லாம் வாதஉபத்திரவமாதிரி நோவுகிறது நன்றாக ஒருதடவை அழுத்திப் பிடித்துவிடு என்று உத்திரவாகும். அந்த ஸமயத்தில் அண்ணா! எனக்கு புதுப்பாடஞ் சொல்லவேயில்லை கொஞ்சம் கிருபை பண்ணினால் என்னுடைய பாக்கியம் என்று மெதுவாகக்கேட்பேன். அதற்கு அவர் பழயபாடங்களையே இன்னும் சரியாகச்சொல்லத் தெரியவில்லை அதற்குள்ளாக புதுப்பாடம் வேணுமாம் போடா உலக்கைக்கொழுந்தே! வேணுமானால் பழயபாடத்தைச் சொல்லித்தொலை யென்பார். பழயபாடங்களை நான் தவறன்னியில் சரியாகவே சொல்லிமுடிப்பேன் அதைக் கேட்டுவிட்டு ரொம்பவும் சிரமமாகயிருக்கிறது நாளை பார்த்துக்கொள்ளலாம், கொஞ்சநேரம் வீசிவிட்டு நீ வீட்டுக்குப்போ என்று கொஞ்சமும் தாக்ஷண்யமின்றிச் சொல்லிவிடுவார். அவர் நெஞ்சுதான் கல்நெஞ்சோ! எப்படியோ! ஆனால் ஸங்கீதஞானமுள்ளவர்களின் மனது இரக்கமுடையதாகயிருக்குமென்று பெரியோர்களால் சொல்லிக்கேழ்விப் பட்டிருந்தும் இவர்மனது இவ்வாறிருப்பது என்னுடைய முன்ஜன்மத்தின் வினைப்பயனைத்தவிற வேறில்லையென்று என்மனதில் நானே உறுதிபண்ணிக்கொண்டு வீட்டிற்குப்புறப்படுவேன் அப்பொழுது இரவு 9-மணி ஆகிவிடும்.



அதன்பிறகு வீடுபோய்ச்சேர்ந்ததும் பகலிற்செய்து வைத்திருந்த மீதம் ஆகாரத்தை சாப்பிட்டுவிட்டு என்னுடைய கதியைப்பற்றியும், வாத்தியாருடைய அநீதியான நடவடிக்கைகளைப்பற்றியும் சிறிதுநேரம் பகவானிடத்தில் அறியப்படுத்திவிட்டு அப்படியே படுக்கையில் தூங்கிவிடுவேன். இம்மாதிரி தினந்தோறும் அனுபவித்துவருகிறேன். இதுவரையில் உங்களைத்தவிற வேறு ஒருவரிடமும் இதுவிஷயத்தைப்பற்றி நான் சொல்லியிருப்பதில்லை. இம்மாதிரி குருக்களை நாம் அடைவதைக்காட்டிலும் வேறுகெடுதல் நமக்குத்தேவையுண்டோ?

கணபதி:— ரகுபதீ! நீ சொல்லுவது பூராவும் சரியாகவேயிருக்கலாம். நானும் சிலஸமயங்களில் கவனித்திருக்கிறேன். ஆனால், நமக்கு இப்பெருந்துன்பம் நீங்கும்படிக்கு பகவான்கிருபை சிறிது உண்டாயிருக்கிறது. அது இன்னதென்பது உனக்குத்தெரியுமோ?

ரகுபதி:— அப்படியும் ஓர்காலம் ஏற்படவாபோகிறது! நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே! விவரமாகச்சிறிது சொல்லேன் ஆனந்தமாகக் கேட்டு என்மனங்கொஞ்சமாவது திருப்தியடையட்டும்.

கணபதி:— சுமார் ஒருவாரத்திற்கு முன்னதாக வைக்கீல் வைத்தீசுவரமய்யர் வீட்டிற்குப்போயிருந்தேன் அவருடைய பெண்குழந்தை ஸங்கீதம் படிக்கிறாளாம். அவளுக்கு சொல்லிக்கொடுக்கிற வாத்தியாருக்கு போதனாசக்தி போதாதென்று நினைத்து அதற்காக ஓர் ஸங்கீதப்புஸ்தகம் வரவழைத்து அதிற்கண்டபடி சொல்லிவைக்கும்படி வாத்தியாருக்கு ஏற்பாடுசெய்திருந்தார்களாம். அந்தப் புஸ்தகம் நானிருக்கும்பொழுதுதான் தபாலில் வந்துசேர்ந்தது. அதைவாங்கி அந்த வைக்கீலும் அச்சமயம் அவர்கூடயிருந்த அவர் சிநேகிதர்களும் படித்துப்பார்த்தார்கள். அதனால் அவர்களுக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஸங்கீதத்தில் ஆரம்ப அப்பியாசிகளுக்கும் சிறிது அனுபவத்திற்குவந்து இன்னும் அனேக விஷயங்களைத் தெரிந்துக்கொள்ளக் கூடாமலிருப்பவர்களுக்கும் இதைப்போல் உபயோகமான நூல் எதுவுமில்லையென்றும், தாளத்திற்கு வேண்டும் அடையாளங்கள் இம்மாதிரி ஒழுங்குபடுத்தி இதற்குமுன் ஒருவரும் எழுதியிருப்பதில்லையென்றும் ரொம்பவும் புகழ்ந்தார்கள். எனக்கு அதில் ஆசையுண்டாகி அந்தப்புஸ்தகத்தை நானும் சிறிது பார்த்துவிட்

டுத்தருகிறேன் தயவுசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். அவர்களும் அவ்வாறே கொடுத்தார்கள். அந்தப்புஸ்தகத்தின் பெயர் தலைப்பில் "ஸங்கீதானுபவ ஸார ஸங்கிரகம்" என்று எழுதப்பட்டு 2-பாகங்களாகக்காணப்பட்டன. சில பக்கங்களை மத்தியில் திருப்பிப்பார்த்தேன் எனக்குண்டான ஆனந்தம் அவர்களிலும் பதின்மடங்கு அதிகமாச்சுது. ஸ்வராவளி முதல் அப்பியாசப் பாடங்களையும் அவைகளை ஹார்மோனியம் வீணை முதலான வாத்தியங்களில்ப் பழகுவதற்கு பிறருதவியை விரும்பாமலிருக்கும் பொருட்டு படங்களில் அடையாளங்களைக்கொண்டு விவரித்தும், கீர்த்தனைகளை கமகங்கள், தாளங்களுடன் வாசிக்குமாறு லகு த்ருதங்களை வியக்தமாகப்பிரித்தும் மிகவும் தெளிவான தமிழ்நடையில் எழுதப்பட்டிருந்தது. இன்னும் 2-ம் பாகத்திலுள்ள தாளக்கணித முறைகளிற் சிலவற்றைப் பார்க்கும்பொழுது நம்முடைய குருவிற்குக் கூட அந்த விஷயங்களிற் சிலபாகம் தெரிந்திருக்குமோ அல்லவோவென்று ஸந்தேகமுண்டாச்சுது. இன்னும் அதைப்பூராவும் பார்க்க எனக்கு ஸாவகாசமில்லாமற் போய்விட்டது. உடனே புஸ்தகத்தை என்னிடமிருந்து அவர்கள் வாங்கிக்கொண்டார்கள். கடைசியாக நம்போன்றவர்களின் கஷ்டத்தை நிவர்த்திபண்ணக் கருதியே எத்தனையோ கியாதிபெற்ற பெரிய வித்வான்களெல்லாமிருக்க ஸாக்ஷாத் பகவான் ஓர் சாதாரண மனிதனை இவ்வாறு தூண்டிவிட்டு இந்நூலை வெளியிட்டாரென்றே நினைத்தேன். ஆகையினால் இனி நமது கவலைகள் ஒருவாறு நீங்கி மனதிருப்தியடையலாம்.

ரகுபதி:— நானும் சென்றவருஷத்திலேயே நீ சொல்லுகிறமாதிரி ஓர் சங்கீதநூல் வெளியாகியிருக்கிறதென்று கேழ்விப்பட்டேன். ஆனால், நீ சொல்லியபடி அவ்வளவு விவரங்கள் அதிலடங்கியிருக்குமென்று நான் நினைக்காததால் அதை அலக்ஷியமாக நினைத்துவிட்டேன். இப்பொழுது நீ சொல்லுவதைப் பார்க்கும்பொழுது நான்செய்தது ரொம்பவும் தப்பிதமென்று தெரிகிறது. மேலும் நம்முடைய கஷ்டகாலம் நிவிர்த்தியாகிறபோது தானே அதற்குத்தக்க நல்ல புத்தியுண்டாகும்.

சுந்தரம்:— அந்தப்புஸ்தகத்தை நீங்கள் வரவழைத்தாலுமே வரவழைக்காவிட்டாலுமே இன்னும் 4-தினத்திற்குள் கட்டாயம் நான் வாங்கிப்



படிக்கப்போகிறேன். அடே ரெகுபதி! நம்முடைய குருவின் குரலைக்கவனித்துப்பார்! வரவர தீனஸ்வரமாகக்கேட்கிறதே! பாம்பு தவளையைப்பிடித்துக்கொண்டால் தவளையின்தொனி எவ்வாறிருக்குமோ அதுபோல கேழ்க்கிறது. இனி நாம் அதைக்கவனியாமலிருப்பது அழகல்ல.

ரகுபதி:— கணபதி! சுந்தரம் சொல்லுவது வாஸ்தவந்தான். குருவின்குரல் ஓர் அபாயஸ்திதியைத் தெரிவிக்கிறது. நம்மிடம் அவர் எவ்வளவு கெட்ட எண்ணத்தோடிருந்தபோதிலும் அந்தபாபத்தை அவர் அனுபவிக்கட்டும். நாம் அவரிடம் ஒரு அக்ஷரமாவது சொல்லிக்கொண்டவர்களாகயிருப்பதினால் இந்த ஸமயத்தில் கவனக்குறைவாகயிருப்பது நமக்குப்பொருந்தாது. புறப்பட்டு பெட்டியண்டை போவோம்.

இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டு சீடர்கள் மூவரும் அவ்விடம் விட்டுப்புறப்பட்டு குருவிருக்கிற பெட்டியின் பக்கம்வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சிறிதுநேரம் கவனித்ததில் பெட்டியினுள் ஓர் அன்னியன் குருவை அடித்து இம்சைசெய்ய அதைப்பொறுக்கக் கூடாதவராக குரு தீனஸ்வரத்துடன் பிரலாபித்துக் கொண்டிருப்பதான சப்தமாகக் காணப்பட்டது. ஆனால், பெட்டியைத் திறந்துபார்க்க அவர்களுக்குப் பயமாகவுமிருந்தது. ரெகுபதியைப்பார்த்து சுந்தரமும் கணபதியும் பெட்டியைத் திறந்தால் அந்த ஆபத்து நமக்கும் வந்துவிடுமென்றும், ஆகையினால் நாம் இப்பொழுதே வீட்டிற்குப்போய்விடுவது உத்தமமென்றும் சொன்னார்கள். ஆனால், ரெகுபதி மட்டிலும் அதற்கிணங்கவில்லை.

ரேகுபதி:— சுந்தரம்! இச்சமயத்தில் என்ன வார்த்தை சொன்னீர்கள்! நமக்கு குருவில்லாத ஓர் அறிமுகமுள்ள மனிதனாகவேயிருக்கட்டும் இவ்வாறு அவன் கஷ்டப்படுவதை நேரில்ப்பார்த்துவிட்டு நம்முடைய உயிரே பெரிதென்று நினைத்து ஓடிப்போவது நியாயமாகுமா? அப்படியிருக்க குருவென்றும், நாம் சீடர்களென்றும் பேரையும்வைத்துக்கொண்டு அவரிடம் ஏதேனும் சிலநாளாவது நாலக்ஷரமும் கற்றுக்கொண்டு நாம் அவரை இந்தப்பரிதாபநிலையில் விட்டுப்போவது தர்மமுமல்ல, நியாயமுமல்ல.

சுந்தரம்:— கணபதி! ரெகுபதி சொல்லுகிற தர்மநியாயங்களைக் கேட்டாயா? இவன் இந்தமாதரி தர்மநியாயங்களை அனுசரித்துத்தான் குருவிடம் நல்ல உதைபட்டான். காரியத்தில் பிரயோஜனமுமில்லை, இன்னும் அவனுக்குப்புத்தி வரவில்லையே!

கணபதி:— சுந்தரம்! நீ சொல்லுவது வாஸ்தவந்தான். ஆகிலும் இந்த ஸமயத்தில் நம்மால் கூடியவரை பார்ப்போம். நமக்கும் ஆபத்துவருவதாகயிருந்தால் உடனே வீட்டிற்கு ஓடிப்போய்விடலாம்.

ரேகுபதி:— சுந்தரம்! நீ சொல்லுகிறபடியே செய்யலாம் பெட்டியின்கதவை நீங்கள் ஒருபக்கமாகவும் நான் மற்றொரு பக்கத்திலும் நின்றுகொண்டு திறப்போம்.

இவ்வாறு அவர்கள் யோசனைசெய்து பெட்டியின்மூடியைத் திறந்தார்கள். உடனே பெட்டியினுள்ளிருந்த வீராசாமியென்பவன் உறத்த குரலுடனும் கோபாவேசத்துடனும் அடே தடிப்பயகளா! நீங்க ஏண்டா பொட்டியைத் திறந்தீங்கோ? நீங்கயாரு? இங்கெ ஏன்வந்தீங்க? சத்தியா சொல்லலையானால் ஒங்க உசிரைத்தொலைச்சுப் போடுவேன் என்றான்.

சீடர்கள்:— அடேயப்பா? உன்னைப்பார்க்கிறபோதே எங்களுக்குப் பயமாகயிருக்கிறது. இந்த கிழட்டுப்பிராமணனை ஏன் வீணாக உபத்திரவப்படுத்துகிறாய்? அவரிடத்தில் பணமேது? காசேது? வேறு எங்கேயேனும் தனம், ஆபரணங்களுடன் வருகிற வழிப்பிரயாணிகளைப்பார்த்து இம்மாதிரி இம்சை செய்தால் ஏதாவது நீ பலனை அடையலாம் இவரை விட்டுவிடு.

இன்னும் வரும்

**சிவஞானம்.**

# ஸமாசாரக் குறிப்பு.

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப்போகிற ரோட்டின் மத்தியிலிருக்கிற ஆழ்வார்திருநகரியென்ற கிராமத்தில் ஓர் ஹிந்துஸெக்கண்டரி பள்ளிக்கூடம் நடந்துவருகிறது. அதற்குத்தகுந்த கட்டிடமில்லாமலிருந்தது. அதுவிஷயமாகத் மிகுந்தசிரத்தையுடன் அவ்வூரிலுள்ள பிரமுகர்களான ஸ்ரீமான் ரெங்கய்யங்காரவர்களும் ஸ்ரீமான் பொன்னப்ப ஆதிநாதய்யங்காரவர்களும் முயற்சிசெய்து தற்காலநாகரீகமுடைய தர்மசிந்தனையுடையோர் பலரிடமும் பல இடங்களிற்போய் பொருளுதவியைப் பெற்று பள்ளிக்கூடத்தின் கட்டிடத்தை மிகவும் நேர்த்தியாக கட்டி முடித்து வித்யாதர்மத்தை விர்த்திசெய்திருப்பது மிகவும் புகழற்பாலது. சென்ற ஆகஸ்டு-மீ 27-உ யன்று தூத்துக்குடி ஸப்கலெக்ட்டர் மிஸ்டர் எஸ். ஆர். பேட் துரையவர்களால் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு பள்ளிப் பையன்களால் 3 நாடகங்களை விதரணையாக கண்டோர்களிக்கும்படி நடித்துக்காண்பிவித்தும், அன்று தினம் கிரகப்பிரவேச விசேஷத்திற்கு வந்திருந்த ஸகலருக்கும் அன்னதானமும் தாம்பூலமும் வழங்கியும் யாவரும் ஆனந்திக்குமாறு விசேஷமாக நடைபெற்றது. ஆனால் அவ்வூரில் பல பிராமண பிரபுக்களிருந்தும் அவர்களில் சிலருக்கு சந்ததிகூடயில்லாமலிருக்க அனுவசியமாக தங்கள்பொருளை செலவிட அவர்கள்மனம் துணிவதைத்தவிர இவ்வாறு கல்வியபிவிர்த்தியின் தர்மத்திற்கு அவர்களுடைய தனத்தின் சிறிது பாகத்தையேனும் உதவ மனமில்லாதவர்களாகி அசலிடங்களிற்போய் பணஉதவியை பெறும்படி ஏற்பட்டது விசனிக்கத்தக்கது.

*
* *

8-9-915-ல் மாலை சுமார் 6-மணிக்கு:—

பெருங்குளத்திற்கும் ஏறல் என்ற ஊருக்கும் மத்தியில் பெருங்குளம் ஊருக்கு கிழக்கே சுமார் 2 பர்லாங்குக்குட்பட்ட இடத்தில் 2 பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் திருச்செந்தூருக்குப் போய்விட்டு பெருங்குளத்திற்கு பிரயாணமாக வந்துகொண்டிருக்கும்பொழுது ஓர் திரு

டன் தலையில் துணியால் முக்காடிட்டுக்கொண்டு இவர்களின் எதிரில் வந்ததும் அப்பெண்பிள்ளைகளில் ஓர் அம்மாளை கீழே ரோட்டில் தள்ளி காதையறுத்து நகைகளை கைப்பற்றிக்கொண்டு ஓட்டம்பிடித்தான். கூடயிருந்தவர் சிறிது வயதுசென்றவராகயிருந்தும் திருடனின் காலை பெலமாகப் பிடித்து ஓடிப்போகவொட்டாமல் தடைசெய்துபார்த்தார் அவரையும அடித்துத்துறத்திவிட்டு 2 நகைகளையும் தவறி கீழேபோட்டுவிட்டு ஓடிப் போய்விட்டான்.

மறுதினத்தன்று ஏரலிலும் இதேமாதரி ஓர் மூப்பனின் வீட்டில் ஓர் திருடன் கள்ளச்சாவிபோட்டு கதவைத்திறந்து உள் நுழைந்து அங்கிருந்த ஓர் பெண்பிள்ளையின் காதுகளையும் அறுத்து கழுத்திலுள்ள தாலியையும் கைப்பற்றி ஓடிப்போய்விட்டான். திருடர்களைக் கண்டுபிடிக்க போலீஸார்கள் வேண்டும் சிரத்தையுடன் முயற்சித்து வருகிறார்கள் இன்னும் நபர்கள் அகப்படவில்லை.

இக்காலத்தில் மற்றும் பிரதேசங்களில் எவ்வளவோ நாகரீகமடைந்திருக்க இன்னும் திருநெல்வேலி ஜில்லாப்பக்கங்களில் மட்டிலும் காதுகளில் சுமார் 2 அங்குலத்திற்கு துவாரங்களை அகலித்து வளர்ப்பதும் அவைகளில் ரூ 500-க்கு மேற்பட்ட பெறுமதியுள்ள தங்கங்களில் நகைகளைச்செய்துபோட்டு தோள்களில் அவைகள் அசைந்தாடும்படிக்கு செய்தும் ஆனந்திக்கிறார்கள். இவ்வாறு ஒருதடவை காதுகள் திருடர்களால் அறுக்கப்பட்டுப்போன போதிலுங்கூட மறுபடியும் அந்த அலங்காரத்தில் ஆசைவிடாமல் அந்தக்காதுகளையே ஒட்டவைத்து அதே நகைகளைப் பூட்டிக்கொள்ளுகிறார்கள். பொருளையுமிழந்து சரீரதுன்பத்திற்குமிடந் தருகிற இந்த அநாகரீகமான செய்கை எக்காலம் அவர்களின் மனதைவிட்டு நீங்குமோ தெரியவில்லை.

*

* *

---

161294
உ
THE REGISTRAR OF BOOKS
0 OCT 1915
MADRAS

பரம்குருப்யோநம:

# கான வித்யாப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-ஞ அக்டோபர்-மீ { NO. 4.

## இந்து ஸங்கீதம்

(மற்றோர் விதம்)

"யதஸ்வராஸ்துஜாயந்தே—ஷடேதேரிஷபாதய:
தேனஷட்ஜ இதிப்ரோக்த:—ஸ்வரோயம்ஸ்வரவேதிபி:"

இதன்பொருள்:— ரிஷபமுதலான ஆறு ஸ்வரங்களும் எதிலிருந்துண்டாகியிருக்கிறதோ அந்த ஸ்வரத்தையே ஷட்ஜமென்று அறிந்தோர்களால் சொல்லப்படுகிறது.

(18) இனி ஏழு ஸ்வரங்களின் தொனியைப்பற்றி இதனடியிற் கண்ட ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஷட்ஜம்மயூரோவத்தி—காவோரிஷபபாஷிண:
அஜாவிகந்துகாந்தாரம்—க்ரௌஞ்ச: க்வணதிமத்யமம்
புஷ்பஸாதாரணேகாலே—பிக:கூஜதிபஞ்சமம்.
தைவதம்ஹேஷதேவாஜீ—நிஷாதம்ப்ரும்ஹதேகஜ:"

N.R.M2U, N15AH
N15.1

இதன்பொருள்:— ஷட்ஜம் மயிலின் தொனியையும், ரிஷபம் காளை மாட்டின் தொனியையும், காந்தாரம் வெள்ளாட்டின் தொனியையும், மத்தியமம் க்ரௌஞ்சபக்ஷியின் தொனியையும், பஞ்சமம் வஸந்தகாலத் துக்குயிலின் தொனியையும், தைவதம் குதிரையின் தொனியையும், நிஷாதம் யானையின் தொனியையும் ஒத்திருக்கும்.

(1) முற்கூறிய ஸப்த ஸ்வரங்களையும் பூர்வாச்சாரியர்களுள் பலருடைய சித்தாந்தப்படி த்வாவிம்சதி அதாவது இருபத்திரெண்டு ச்ருதி பேதங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அதன் விவரத்தை இதனடியிற் கண்ட ச்லோகத்திற்காண்க.

"தீவ்ராகுமத்வதீமந்தா—சந்தோவத்யஸ்துஷட்ஜகா:
தயாவதீரஞ்சனீச்ச—ரதிகாச்சர்ஷபேஸ்திதா: ==
ரௌத்ரீக்ரோதீச்சகாந்தாரே—வஜ்ரிகாத்தப்ரஸாரிணீ.
ப்ரீதிஸ்சமார்ஜநீசைவ—ச்ருதயோமத்யமேஸ்திதா: ==
க்ஷிதீரக்தாச்சஸந்தீபி—ந்யாலாபின்யபிபஞ்சமே
மதந்திரோஹிணீரம்யே—த்யேதாஸ்திஸ்ரஸ்துதைவதே ==
உக்ராச்சக்ஷோபிணீதித்வே—நிஷாதேவஸதச்ருதீ" ==

இதன்பொருள்:— ஷட்ஜமத்திற்கு தீவ்ர, குமுத்வதி, மந்த, சந்தோவதி யென்ற 4 ச்ருதிபேதங்களும், ரிஷபத்திற்கு தயாவதி, ரஞ்சனி, ரதிக, யென்ற 3 பேதங்களும், காந்தாரத்திற்கு ரௌத்ரி, க்ரோதி யென்ற 2 பேதங்களும், மத்யமத்திற்கு வஜ்ரிக, ப்ரஸாரிணி, ப்ரீதி மார்ஜனி யென்ற 4 பேதங்களும், பஞ்சமத்திற்கு க்ஷிதி, ரக்த, ஸந்தீபினி, ஆலாபினி யென்ற 4 பேதங்களும். தைவதத்திற்கு மதந்தி, ரோஹிணி, ரம்ய, யென்ற 3 பேதங்களும், நிஷாதத்திற்கு உக்ரா, க்ஷோபிணி யென் 2 பேதங்களுமாகின்றன.

"ப்ரதமாதிசதுர்க்காந்தம்—ஷட்ஜஸ்யஸ்தானமுச்யதே
பஞ்சமாத்ஸப்தமாந்தஞ்ச—ரிஷபஸ்யபதம்விது: ==



அஷ்டமம்நவமம்சாத்த—காந்தாரஸ்யநிகேதனம்
மத்யமஸ்தானமாக்யாதம்—தசமாதாத்ரயோதசம் ==
சதுர்தசாத்பஞ்சமஸ்து—ச்ரயேத்ஸப்ததசாவதி
அஷ்டாதசாச்சவிம்சாந்தம்—தைவதஸ்தானமீரிதம் ==
சரமேத்வேநிஷாதஸ்ய—ஸ்தானேகாயகஸம்மதே"

இதன்பொருள்:— ஒன்றுமுதல் நாலு ச்ருதிகள் வரையிலும் ஷட்ஜமஸ்தானம், ஐந்துமுதல் ஏழு ச்ருதிகள் வரையிலும் ரிஷபஸ்தானம், எட்டு, ஒன்பதாவது ச்ருதிகள் காந்தாரஸ்தானம், பத்துமுதல் பதின்மூன்று வரையிலுமுள்ள ச்ருதிகள் மத்யமஸ்தானம், பதினான்குமுதல் பதினேழு வரையிலுமுள்ள ச்ருதிகள் பஞ்சமஸ்தானம், பதினெட்டுமுதல் இருபது வரையிலுமுள்ள ச்ருதிகள் தைவதஸ்தானம், மீதம் இரண்டு ச்ருதிகள் அதாவது இருபத்தி ஒன்று இருபத்திரெண்டு ச்ருதிகள் நிஷாதஸ்தானமென்று ஸங்கீத வித்வான்களுடைய ஸம்மதம்.

(20) முற்கூறிய ச்ருதி பேதங்களில் ஒவ்வொரு ஸ்வரத்திற்குமுரிய வரம்பு, அல்லது ஆளுகையின் எல்கையைப்பற்றி இதனடியிற்கண்ட ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு நியதச்ருதியென்றுபெயர்.

"சதுர்த்தீநியதாஷட்ஜே—ரிஷபேஸப்தமேச்ருதி:
நவமீகிலகாந்தாரே—மத்யமேச்சத்ரயோதசீ ==
பஞ்சமேஸ்யாத்ஸப்ததசீ—விம்சீதைவதகோச்சரா
த்வாவிம்சீச்சநிஷாதஸ்ய—ச்ருதயோநியதஸ்திதி:" ==

இதன்பொருள்:— ஷட்ஜமத்திற்கு 4-வது ச்ருதியும், ரிஷபத்திற்கு 7-வது ச்ருதியும், காந்தாரத்திற்கு 9-வது ச்ருதியும், மத்யமத்திற்கு 13-வது ச்ருதியும், பஞ்சமத்திற்கு 17-வது ச்ருதியும், தைவதத்திற்கு 20-வது ச்ருதியும், நிஷாதத்திற்கு 22-வது ச்ருதியும் நியதச்ருதிகள்.

## த்வாவிம்சதி ச்ருதிபேத சக்கரம்

| ஸப்தஸ்வரங்களின் பெயர் | ச்ருதிபேத வரிசை நம்பர் | ச்ருதி பேதங்களின் பேர் |
|---|---|---|
| 1. ச | 1 | தீவ்ர |
| ,, | 2 | குமுத்வதி |
| ,, | 3 | மந்த |
| ,, | 4 | சந்தோவதி |
| 2. ரி | 5 | தயாவதி |
| ,, | 6 | ரஞ்சனி |
| ,, | 7 | ரதிக |
| 3. க | 8 | ரௌத்ரி |
| ,, | 9 | க்ரோதி |
| 4. ம | 10 | வஜ்ரிக |
| ,, | 11 | ப்ரஸாரிணி |
| ,, | 12 | ப்ரீதி |
| ,, | 13 | மார்ஜனி |
| 5. ப | 14 | க்ஷிதி |
| ,, | 15 | ரக்த |
| ,, | 16 | ஸந்தீபினி |
| ,, | 17 | ஆலாபினி |
| 6. த | 18 | மதந்தி |
| ,, | 19 | ரோஹிணி |
| ,, | 20 | ரம்ய |
| 7. நி | 21 | உக்ர |
| ,, | 22 | க்ஷோபிணி |

(21) இவ்விருபத்திரெண்டு ச்ருதிகளையும் ஐந்து ஜாதிகளாகவகுக்கப்பட்டிருக்கின்றன வென்பதை இதனடியிற் கண்ட ச்லோகத்தினால் தெரிந்துகொள்ளலாம்.

"தீப்தாயதாச்சகருணா—ம்ருதுர்மத்யேதிஜாதய:
ச்ருதீநாம்பஞ்சதாஸாஞ்ச—ஸ்வரேஷ்வேவம்வ்யவஸ்திதி:—



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. ～～～ = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)

6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.

7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்·

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



## பல்லவிக்கு கற்பனாஸ்வரங்கள்·

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| 1. ஸ்ரீரெகுவர–ஸுகு | * * தா * * மா | * * பா * * தா = |
| 2. ஷை | * * தா பா மா | பாமாபாதா = |
| 3. ஷை | * * மாகாரீ | காமாபாதா = |
| 4. ஷை | * * நிநிதபமக | ரிநிசரிகமபத = |
| 5. ஷை | * * ரீச்க்ரீம்க் | ரீச்நிதபமபத = |
| 6. ஷை | * * ம்க்ாரீச்நி | தபமபா மபத = |
| 7. ஷை | * * சநிரிசகரி | மகபமநிதபத = |
| 8. ஷை | * * தநிச்பாத | நிநிதப–மகரிக |
| மபநிதாபமபதநிச்பதநிச்ரீ | நிச்நிக்ாரீச்ரீ | நிச்ா–பதமபத = |
| 9. ஸ்ரீரெகுவர–ஸுகு | தநிபதமபகம | ரிகசரிநிசதநி |
| சநிரிசகரிமக–பமதப–நிதச்நி | ரீச்க்ரீம்க்ரீச் | *ச்நிதபமபத = |
| 10. ஸ்ரீரெகுவர–ஸுகு | தபமகாரிபம | கரிசமகரிசநி |
| தநிசநீச–நிசரிசாரீ–கரிகம | பதநிச்ாரீக்ரீ | ச்நீதபமபத = |

(பத) ப = ஸ்ரீ ரெகுவர = ஸ்ரீ ரெகுகுலத்தில் சிலாக்கியமானவனே!
ஸுகுண = நல்லகுணங்கட்கு
ஆலய = இருப்பிடமானவனே!
ஸரஸிஜ = தாமரைமலர்போன்ற
லோச்சன = கண்களுடையவனே!
விரோச்சனுபா = எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் [காந்தியையுடையவனே!

அ = தரான = தலைமுறைதலைமுறையாக
லேனி = இல்லாத
பராகு = பராமுகம்
ஏடிதி = ஏனிது
பிரான = வேகமாக
நனு = என்னை
ப்ரோவக = காப்பாற்றுவதற்கு
ராதா = வரக்கூடாதா?
வாதா = (என்னுடன்) வழக்கா?

ச = (1) கமலாஹிதா = இலக்குமிக்கு இன்பமானவனே!
நதா = வணங்கப்பட்டவனே!
கமலஅஹிததர = தாமரை மலருக்கு சத்துருவை (சந்திரனை) [தரித்தவனால்
மமத = எனது அகங்காரத்தை
தெலிசி = தெரிந்துகொண்டு
நனு = என்னை
மன்னிஞ்ச = மன்னிக்க
ராதா = வரக்கூடாதா?

(2) கனிகாமுன = கருணையுடன்
நனுக = என்மனத்தை
நிகாமுனநிடி = சுத்தமாகச்செய்து
சனுவுன = அழகாக
ஒக்கமனவினி = ஒருவார்த்தை
பல்காராதா = சொல்லவரக்கூடாதா?



(3) ஆகமமூல = ஆகமசாஸ்திரங்களுக்கு மூலாதாரமானவனே!
அவனிஜலோல = பூமியிற் பிறந்தவளிடத்தில் (ஜானகியிடம்) [விளையாடப்பட்டவனே!
வேகமே = சீக்கிரமாக
தெலுஸுகோ = தெரிந்துகொள்! (என்குறைகளை)
த்யாகராஜ = தியாகராஜனால்
அர்ச்சித = பூஜிக்கப்பட்டவனே!

(பொழி) ஸ்ரீ ரெகுகுலத்தில் சிலாக்கியமானவனே! நல்லகுணங்கட்குயிருப்பிடமானவனே! தாமரைமலர்போன்ற கண்களுடையவனே! எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் காந்தியையுடையவனே! இலக்குமிக்கு இன்பமானவனே! சந்திரனைத்தரித்த பரமசிவனால் வணங்கப்பட்டவனே! ஆகமசாஸ்திரங்களுக்கு மூலாதாரமானவனே! ஜானகியிடம் விளையாடப்பட்டவனே! த்யாகராஜனால் பூஜிக்கப்பட்டவனே! எனது அகங்காரத்தைத் தெரிந்துகொண்டு என்னை மன்னிக்கவரக்கூடாதா? என் குறைகளைத் தெரிந்துகொண்டு சீக்கிரமாக கருணையுடன் என் மனதை சுத்தப்படுத்தி அழகாக ஒருவார்த்தைசொல்ல வரக்கூடாதா? தலைமுறை தலைமுறையாகயில்லாத பராமுகம் எதற்காக? வேகமாக என்னைக்காப்பாற்றவரக்கூடாதா? என்னுடன் உனக்கு வழக்கா?

---

கரஹரப்ரியராகம்—ஆதிதாளம். 1-களைச்சவுக்கம் லகுத்தட்டிற்குப்பின் அரையிடத்தில் எடுப்பு.

ஆ = ச, ச—ரி, சா—க, சு—ம, ப, ச—த, கை—நி,
அவ = ச, கை—நி, ச—த, ப, சு—ம, சா—க, ச—ரி,

ப = சக்கனிராஜமார்க்கமுலுண்டக—ஸந்துலுதூரனேல ஓமனஸா =

அ = சிக்கனிபாலுமீகடயுண்டக—சீயனுகங்காஸாகரமேலே =

ச = கண்டிகிஸுந்தரதரமகு—ரூபமே—மு
க்கண்டிநோட்டசெலகே—நாமமேத்யாகரா
ஜிண்டனேபாகநெலகொன்னதி—தைவமேயிட்டு
வண்டி ஸ்ரீஸாகேதராமுனி—பக்தயனே =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=**** ரீ **** கா ** ரீ-சா ******-நீ ** நிததா-<br>**** ச **** க்க ** நி-ரா ****** ஆ ** ஜ—--- | **** சநீ ***** சாரீ **<br>**** மார் ***** க்கமு ** | சா******_********<br>லு******_******** |
| (1) **** கா ** ரீகா ** ரீ-சா ******-ரீசாநீ **<br>**** ச ** க்க ** நி-ரா ******——-ஜ ** | நிததா சநீ *-**** சாரீ **<br>—--- மார் *-**** க்கமு ** | ரீகாரிகமா ** கா -ரீகரி<br>லு——— ** ண்ட-க--- |
| (2) ரீ **=கா ** ரீ கா ** ரீ-நீசநீ ***-சாரிசா ***- ரீகரீ ***<br>——=ச ** க்க ** நி-ரா-- ***——- ***- ஜ—*** | | |
| கா **<br>ஆ ** | ரிசநித-சநீ *-**** சாரீ **<br>அ——-மார் *-**** க்கமு ** | ரீகாரிகமா-கமபம மாகா<br>லு———ண்ட——-க |
| (3) கரிரீ=கா ** ரீ கா ** ரீ-பாமாதாபா- மாகாரீசா<br>அ—=ச ** அக்க ** நி-ரா——— ——ஜ— | நீதா— ஷை<br>ஷை | ஷை<br>ஷை |
| (4) கரிரீ=கா ரீ கா மாபா **-பதமா-மபகா-கமரீ-ரிகசா<br>அ—=ச———க்கநி **-ரா— —— —— ஜ—— | ஷை<br>ஷை | ஷை<br>ஷை |
| (5) கரிரீ=கா ரீ கா மாபா **-பதநீதாபா-மாகாரீசா<br>அ—=ச———க்கநி **-ரா——- ——-ஜ— | ஷை<br>ஷை | ஷை<br>ஷை |
| (6) கரிரீ=கா ரீ கா மாபா **-பதநிச்தநிபத-மாகாரீசா<br>அ—=ச———க்கநி **-ரா———————ஜ-- | ஷை<br>ஷை | ஷை<br>ஷை |
| கரிரீ=கா ரீ கா மாபா **-ரீகாமாபா-தாநீதநிச்ா<br>அ—=ஸ—ந்து லு **-து———உ——--- | ** நீ-தா ** நீதாபா **<br>** ர-நே ** வல ஓ ** | *******-மா ** கா **<br>*******-ம ** ன ** |
| (1) கரிரீ= ஷை<br>ஸ—= ஷை | ** நீ-தாநிச்நீதா-பதநித<br>** ர-நே——ல-ஓ——- | நீ ** ச்நிதபமா ** மகரி<br>ஓ ** ம——ன **—— |
| ரீ **=காரீபாமாதாபா-தாமா மாகா-கா ** ரீசா<br>ஸ**=ச--க்க—நி—- ரா— —— ஜா ** —- | நீதா--சநீ *-**** சாரீ **<br>——-மார் *-**** க்கமு ** | சா******_********<br>லு******_******** |



| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (1) ****=ச்ா **** ச்ா ச் நீ *-** ச்ா ****** ச்நிநீ-நிததா<br>****=ச **** க்கநி— *-** ரா ****** அ—ஜ— | **** தா **** நீதா **<br>**** மார் **** க்கமு ** | பா ******-** பாபா **<br>லுண் ******_** ட க ** |
| (2) ****=ச்ா **** ச்ா ச் நீ *-** ச்ாரீச்ச்ாரீச்ச்ா ** நீச்நி<br>****=ச **** க்கநி-- *-** ரா——— ** ஜ--- | நீ ** ஷை<br>ஆ ** ஷை | பாதபபாதப-ப ப பா **<br>ப ப<br>லு———-உண்டக ** |
| (3) ****=தாதாபா-தாதாமா-பாமாகாரீ--கா ** ரீசா<br>****=ச———க்க—-நி-ரா———ஆ ** ஜ— | நீதாநீ **** சாரீ **<br>——-மார் **** க்கமு ** | ரீகாரிகமா-கமபமமககா<br>லு———-ண்டக——- |
| (4) கரிரீ=ச்ா **** ச்ா ச்நீ *-** ச்ாரீச்ச்ாரீச்ச்ா ** நீச்நி-<br>——=ச **** க்கநி- *-** ரா——— ** ஜ—— | நீ ** தாநீதாநீ ச் ா **<br>ஆ ** மா——ர்க்கமு ** | ச்ாரீச்நீச்நி-தாநிதபாதப<br>லு———-ண்ட——-க-- |
| (5) மா **=ச்ா **** நீதா பா-ச்ா ****** நிதபமகா **<br>---**=ச் **** க்க--நி-ரா ******———-ஜ ** | ரிசநித-நீசா நீசாரீ **<br>அ——-மார்-க்கமு ** | ரீகாரிகமா-கமபமமககா<br>லு———-ண் ட---க- |
| (6) கரிரீ=க்ா **** க்ாக்ா **-க்ாம்க்க்ாம்க்க்ா ** ரீக்ரீ<br>——-=ச **** க்கனி **-ரா——— ** ஜ— | ரீ **-நீச்ா நீச்ாரீ **<br>ஆ **-மார் க்க-மு ** | ரீக்ரீச்ாரீச்-நீச்நிதாநித<br>லு———-ண்ட—-க-- |
| பாமா=ச்ா **** நீதாபா-ச்ா ****** நிதபமகா **<br>——-=ச **** க்க-ணி-ரா ****** ——-ஜா ** | ரிசநித-நீசா நீசாரீ **<br>அ——-மார் க்கமு ** | ச்ா ******_********<br>லு ******_******** |
| அ=****-தா **** நீ தா **-பா ******-**** பமமா<br>****-ஸி **** க்கனி ; *-பா ******-**** லு—- | ****-தா **** நீ தா **<br>****-ஸி **** க்கனி ** | பாதநிதா **-நீ ** தாபா<br>பா——- **-லு ** —--- |
| (1) மா **=தா **** நீ தா **-பாதநிதா ** ச்ா ** நீதா<br>---**=ஸி **** க்கனி **-பா——- ** ஆ ** லு-- | பாமா— ஷை<br>உ——- ஷை | பாதநிதா **-ச்ா ** ச்நிநித<br>பா——- **-ஆ ** லு—— |
| (2) தாபம=தா **** நீ தா **-பதநிச் க்ரீரீச் ச்நிநித தபபம<br>உ——-=ஸி **** க்கனி **-பா— —-- ——- லு---- | மா ** பா **** தாநீதா<br>உ- ** மீ **** கட—— | தாநீதநிச்ா ** நீச்ா **<br>யு——-ண் ** டக ** |
| ****=ரீ **** க்ா ரீ **-ச்ாரீச்நீச்நி நீதா நீச்ா<br>****=ஸீ **** ய ஹு **-கங்——-——— கா— | நிச்ரீ-ச்ா **** நீதா **<br>——-ஸா **** க ர ** | பாதப-மாபம-காமக-ரீகரி<br>மே--- —--- —— லே- |

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (1) ரீ **=ரீ **** க்ாரீ **—ச்ரீக்ரீநிச்ரீச்—க்ரீரீச்நீதா | ஷை | பதநிச்நித—நிதபதப:ம—கமபத |
| ஏ **=ஓ **** ய னு **—கவ்—— ——க— | ஷை | மே————ஏ————லே-- |
| பமகரி=காரீபாமாதாபா= | | |
| ஏ——=ச--க்க---நி——= | | |
| ச=****=பா **** தாநீதா—பாமா காரீ—காமபமாகா | கரிரீ—பா **** தாநீதா | நீதாநீபா—நிததப மாகப |
| ****=கண் **** டிகி—— ஸ—— உ——ந்த | ர——கண் **** டிகி--- | ஸ——உ——ந்த |
| கரிரீ=பா **** தாநீதா—பதநிச்க்ரீரீச்—நிததபபமமக | கரிரீ—ரீகா ** மாபா ** | மாகா—ரிகமபதநீதபமகா |
| ர——=கண் **** டிகி——ஸ——உ——ந்த | ர——கர ** மகு ** | உ——ரு——பமே-- |
| கரிரீ=காரீபாமாதாபாதாமா—மககாரீ **** ரீ | நீசா **—ரீ காமாபா ** | ரீகாமாபா—தாநீநிதபம |
| மு---=க்கண்டிஇநோஓ——ஓ--ட்ட ****செ | லகே **—நா--மமே ** | த்யா--கா—ரா—— |
| பா**=தா **** நீதா **—பா*தநீ**—ச்ா **நிததப | மா **—பா **** தாநீதா | தாநீதநிச்ா ** நீ ச்ா ** |
| ---**=ஜிம் **** டனே ** பா*--க **—னே** ல—— | கொ **—ன்ஞு**** திதை— | வ--மெ--- ** இட்டு ** |
| ****=ரீ **** க்ாரீ **--ச்ரீக்ரீநிச்ரீச்—க்ரீரீச்நீதா | நிச்ரீ—ச்ா **** நீதா ** | பதநிச்நிதநித—பதபமகமபத |
| ****=வண்**** டி ஸ்ரீ ** ஸா—— ——கே-- | த——ரா **** முனி ** | ப————க்தியனே--- |
| பமகரி=காரீபாமாதாபா= | | |
| ——=ச---க்க--நி——= | | |

# இராக லக்ஷணம்.

48-வது பக்கத்தின் தொடர்ச்சி.

நிஷாத: க்காகலீயுக்த:

க்வசித்ஸ்தானேப்ரயுஜ்யதே"

இதன்பொருள்:— காம்போஜிராகம் ஸம்பூர்ணம் ஆரோஹணத்தில் க, நி, இந்த 2 ஸ்வரங்களையும் வக்ரமாகப் பிடிக்கவேண்டும். சில ஸ்தானங்களில் காகலி நிஷாதத்தை உபயோகப்படுத்தப்படுகிறது.

குறிப்பு:— ச்லோகத்தின் கருத்துப்படிக்கு ஆரோஹணத்தில் "சரிமகபதநி பதசா" யென்று வாசிக்கவேண்டியதாகிறது. வெகுகாலமாக முற்கூறியவாறு ஆரோஹணத்திலுள்ள நிஷாதஸ்தானத்தை காகலி நிஷாதமாகவும் அவரோஹணத்திலுள்ள நிஷாதத்தை கைசிகி நிஷாதமாகவும் உபயோகிக்கப்பட்டுவருகிறது. அதாவது சநிப, என்று பாடும்பொழுது காகலி நிஷாதமும், சநிதப, என்று பாடும்பொழுது கைசகி நிஷாதமுமாகப் பாடவேண்டியதாகிறது.

## இராக ஸஞ்சாரம்.

(1) சரிகமபா****பா****—பாதபமக—

பமா**** பாதச்ா****—ச்நி ச்ாரீச்நீ****—

தா-**ப—மகரீ****கசா******—

(2) கமபா**பா**— தாநிதபா**—பமபதபதநீ****தா**பா**—

மாபதபாதப மா****—மகபமக—ரிகசா ****—சரிகமபதநீ****—

ச்நி தா**—பதபதச்ா****நி—பா**தா****ரீச்ா******—

தாதாரீச்ரீ******ச்—ச்த ச்ா ரீச் நீ**—நிதா **—

பமபதபதச்ா****ச் நீ ** நி தா ** பம பாத நிதா நிபா**—

பமபதா****ப–மதபமகா****ரி–சாரி கரிக–
சா**நிபா**தா**ரிசா****** =

(3) மகா**கா**–கரிகமகா****–கரிகமகரிசா****சநிதபதசரிகா****–
ரிகா**சரிகா**–தசரிகா**–பதசரிகா**–மகரிசநிதப–
தசரிகமகா**மகமரிக–சரிகமா****–மகபமா****–கமபதா**ப–
மதபமகசா****ரிகமபா****பா****–பமதா**தா**–
தபதநீ**** நித தா**–மபதாநித பா**–பாதபாத மா**** மக கா**–
பாதா** ரீச் ச்ா****–ச்ா ****–ச்ாரீ ச்ாரீ நீ**நிதா**–
பமபதபதநீ**நிதா**பா**–பாதநிதா நிபா****–மகா**ரி–
சாரி கரீகசா**நிபா**–தசா**** =

(4) தசதசரி–சரிசரிக–ரிகரிகம–கமகமப–மபமபத–பதநி–
மபத–கமப–ரிகம–சரிச–ரிகரி–கமக–மபம–பதப–தநீ****தபமா**–
பாதநிதா**–ச்ா**ச்நிச்ாரீ ச்நீ**ட–தாரீச்ா****–பதச்ரீக்ா**க்ா**–
க்ரீக்ம்க்ா****–க்ாம்க்ரீக்ரீக்ச்ா**–ச்ாரீ ச்ாரீ நீ**நிதா**–தச்ரீ****ச்–
ச்தச்ாரீ ச்நீ**நிதா**–பமபதபதச்ா**ச்நீ**** நிததா****–
பாதநிதா நிபா**ம–காமா–தபதா**பபமகா****ரி–சாரிகரீகசா** =

(5) சரிகமா**கரி–சரிகமபா**மகரி–சரிகமபதா**பமகரி–
சரிகமபதச்ா**நிதபமக–மபதச்ரீக்ா**ரீச்நிதப–தச்ரீக்ம்ப்ா**ம்க்ரீ–
ச்ம்ா**க்ரீச்–தக்ா**ரீச்நி–தரீ**ச்நித–பச்ா**நிதப–மதா**பமக–
சாரிசா–ரீகரீ–காம கா–மாபமா–பாதபா–தாச் தா–ச்ாரீ ச்ா–
ரீக்ரீ–க்ாம் க்ா–ம்ாப்ம்க்ா ம்க்–ரீக்ரீச்ா**–க்ாம்க்ரீக்ரீ–ச்ாரீச்நீ**–
ரீக்ரீச்ாரீச்–நீச் நிதா**–ச்ாரீச்நீச்நி–தாநிதபா**–தாநிதபாதப–
மாபமகா**–பாதபமாபம–காமகரீ**–மாபம காமக–ரீக ரிசா****–



சரிகமபதச்–பதபா**ம–கரிரீ**சாரி கரீக–சா**நிபா**–
தா**ரிசா****** =

## 10. நாட்டக்குரஞ்சி ராகம் 28-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்

ஆ = ச, ச–ரி, அ–க, சு–ம, ப, ச–த–கை–நி
அவ = ச, கை–நி, ச–த–சு–ம, அ–க,

### இலக்கணம்.

"பரிவர்ஜ்யாவரோஹேது
ராகோநாட்டகுரஞ்சிகா
ஷட்ஜக்ரஹஸமாயுக்தா
கீயதேலக்ஷ்யவேதிபி:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

இதன்பொருள்:— நாட்டக்குரஞ்சி ராகத்திற்கு ப, ரி, இந்த ஸ்வரங்களை அவரோஹணத்தில் விலக்கவேண்டும். இது ஷட்ஜகிரஹம், இதைப் பாடும்பொழுது லக்ஷியத்தையனுசரித்து தெரிந்து பாடவேண்டியது.

குறிப்பு:— லக்ஷியத்தைத் தெரிந்து பாடவேண்டுமென்று ச்லோகார்த்தமிருப்பதால் ஆன்றோர் பாடியிருக்கும் கீர்த்தனங்கள், வர்ணங்கள், இவைகளின் ஆரோஹத்தில் "சரிகமபதநிபதநிச்ா". யென்றும் "சரிகமநிதநிபதநிச்ா" யென்றுமிருப்பதால் அவ்வாறே பாடவேண்டுமென்றாகிறது. அவரோஹத்தில் லக்ஷிய பேதமில்லை லக்ஷியமென்றால் அனுபவம் அல்லது தொன்று தொட்டு வழக்கமாக நடந்துவரும் விஷயம்.

### இராக ஸஞ்சாரம்

(1) சரிகமா****நிதநிப–தா**நிச்ா****–ச்நீ**–நிதா**–தமா****–
மகசா**** =

(2) மக்மா****நிதா**–நிபா**–தநிச்ா****–ச்ா****–ச்நிச்ாரீச்ச்நிநீ****–
நிதா****–பதபதநீ****–நிதமா****–மகசா**** =

(3) சரிகமா****—நிதா****—நிச்ாநிதாநிதாநிபா****—தநிதநிச்ா****—

ச்நிச்ரி***ச்ா**—ச்நிரிச்நிதா**நி—பதபதநீ** நிததா****—மகமாபமகா**ம—

ரிகசா****—சநிதநீ****சா**** =

(4) கரிகமா****மா****—மகமாபமகா**மகசா****—நிதநிசரிகமா****—

கமநிதா**நி—பதபதநீ****—ச்நிதநீ****—பதநீ****—மபதநீ****—

மகமநிதா**நிபதநீ****—ச்நிச்ரி****ச்ா**ச்ரிக்ச்ா****—

ச்நிச்ாரிச்ச் நிநீ** நிதா****—பதபதநீ****ச்நிதமா****—

மகமாபம கா****—சா****நிதநீ****ரிசா**** =

(5) மநீ****நித தா****—நிச்ா****ச்ா****—தநிச்ரிக்ம்ா******—க்ா ம்க்ச்ாரிச்—

நீச்நிதா****—தநிச்ரி****—ச்ாரிச்நீச்நிதாநிதமா****—மகமதா****—

தாநித மாதம காமக சா****—சநிசமா**கமநீ**த—நிச்ரி****—

ச்நிரிச்நிதா**நி—பதபதநீ****நிச்நிதமா****—மகசா****நிதா**நீ****—

ரிசா****** =

(6) தநிச்ா**ச்ா**ச்ாரிச்ச்நிநீ**—நிதா**—தநிச்நிச்ரிக்ா**ம்ா—

க்ாம் க்ாம்—ரிக்ரிக்ச்ா****ச்நிதா**—தநிச்நிதா**நிபதநிச்நித—

நிதமா****—மகமாபமகா****ம—ரிகசா****—

நிதநீ****சா****** =

இன்னும் வரும்

பத்திராதிபர்.

# நீதி

24-வது பக்கத்தொடர்ச்சி.

## துர்ச்சனரியல்பு.

அகருணத்வமகாரணவிக்ரஹ: பரதனே
பரயோஷிதிசஸ்ப்ருஹா
ஸுஜநபந்துஜனேஸ்வஸஹிஷ்ணுதாப்ரக்ருதி
ஸித்தமிதம்ஹி துராத்மநாம். (1)

(பொருள்) தயை இல்லாமை, காரணமில்லாமல் கலகம், பிறருடைய சொத்திலும் பிறருடைய ஸ்திரீயினிடமும் ஆசை, நல்லோர்களிடமும் பந்துக்களிடமும் பொறையின்மை, ஆகிய இக்குணங்கள் எல்லாம் துர்ச்சனருக்குக் கூடப்பிறந்தவையாம்.

துர்ஜன: பரிஹர்த்தவ்யோ
வித்யயாலங்க்ருதோபிஸன்
மணிநாபூஷிதஸ்ஸர்ப:
கிமஸௌநபயங்கர: (2)

(பொருள்) துர்ச்சனர்கள் வித்தையால் அலங்கரிக்கப்பட்டவர்களாயினும் நீக்கத்தக்கவர்களேயன்றி சேர்க்கத்தக்கவர்களல்ல. எப்படியெனில் ஸர்ப்பமானது ரத்னத்தாலலங்கரிக்கப்பட்டதாயினும் பயத்தையுண்டுபண்ணக்கூடியதேயன்றி ரசிக்கத்தக்கதல்லவன்று!

ஜாட்யம்ஹ்ரீமதி கண்யதே வ்ரதசுசௌ தம்பச்சுசௌ கைதவம்
சூரேநிர்க்ருணதாமு நௌவிமதிதா தைன்யம்ப்ரியாலாபினி
தேஜஸ்வின்யவலிப்ததாமுகரதா வக்தவ்ய சக்திஸ்திரே தத்
கோநாமகுணோபவேத ஸகுணினாம் யோ துர்ஜனைர்நாங்கித: (3)

(பொருள்) துர்ஜனரால் தூஷிக்கப்படாத குணம் உலகத்திலொன்றுமில்லை; அதாவது, அவர்கள் பிறர்நிந்திக்கக் கூடிய காரியத்தைச் செய்ய இலச்சைப்படுமவர்களை மந்தர்களென்றும், தபஸ், சாந்திராயணம், முதலிய விரதங்கள் இவைகளால் பரிசுத்தமானவர்களைப் பார்த்து அவர்கள்

டாம்பீகர்களென்றும், சுத்தமாயிருப்பவர்களைக் கபடமுள்ளவர்களென்றும் சூரனைத் தயையில்லாதவன் என்றும், மௌனிகளாய் ஆத்மாநுஸந்தானம் செய்பவர்களை புத்தியீனர்களென்றும், பிரியமாய்ப் பேசுபவர்களைத் தரித்திரரென்றும், தேஜசுள்ளவனைக் கர்வி என்றும் சபாமத்தியில் நன்றாய்ப் பேசக்கூடியவனைத் தூர்க்ககூஷி பேசுபவரென்றும் சொல்வார்கள். ஆகையால் யோசிக்குமிடத்து துர்ச்சனர்கள் உலகத்திலுள்ள குணவான்களெல்லோரையும் நிந்திப்பார்களாகையால் அவர்களால் கொண்டாடத் தகுந்தகுணமொன்றுமேயில்லை.

லோபச்சேத குணேநகிம்பிசுன தாயத்யஸ்திகிம்பாதகை
ஸ்ஸத்யம் சேத்தபஸாசகிம் சுசிமனோ யத்யஸ்திதீர்த்தேனகிம்
ஸௌஜன்யம் யதிகிம்பலேனமஹிமா யத்யஸ்திகிம்மண்டனை
ஸ்ஸத்வித்யாயதிகிம்தனைரபயசோ யத்யஸ்திகிம்ம்ருத்யுநா. (4)

(பொருள்) லோபம் என்னும் ஒரு குணமிருந்தால் வேறு துர்க்குணங்கள் வேண்டியதில்லை, கோட்சொல்லுதல் பிறரை நிந்தித்தல் இருந்தால் வேறுபாயம் வேண்டாம்: ஸத்தியம் ஒன்றிருப்பின் வேறுதவத்தினால் பயனில்லை, பரிசுத்தமான மனமிருந்தால் புண்யதீர்த்தங்கள் வேண்டாம். சௌஜன்யமிருப்பின் அதைவிட மேலான பலம் வேறில்லை, மகிமையிருந்தால் வேறு அலங்காரம் வேண்டாம். நல்ல வித்தையிருந்தால் வேறுதனம் வேண்டாம். அபகீர்த்தியிருந்தால் வேறுமிருத்யு வேண்டாம்.

சசீ திவஸதூஸரோகளிதயௌவனாகாமினீ
ஸரோவிகதவாரிஜம் முகமனக்ஷரம் ஸ்வாக்ருதே:
ப்ரபுர்த்தனபராயணஸ் ஸதததுர்கதிஸ்ஸஜ்ஜனோந்ருபாங்
கணகத: கலோமனஸிஸப்த சல்யானிமே. (5)

(பொருள்) பகலில் ஒளிமங்கிய சந்திரன், யௌவனப் பருவங்கடந்த மங்கை, தாமரையில்லாத ஓடை, அழகிய புருஷனுடைய அக்ஷரமில்லாத முகம், பணத்தாசையுள்ள பிரபு, எப்போதும் வறுமையையே அநுபவிக்கும் நல்லோர், ராஜகிரஹத்தையடைந்துள்ள துஷ்டர், ஆகிய இவ்வேழும் என் மனதிற்குக் கஷ்டத்தையுண்டுபண்ணுகின்றன.



நகச்சிச்சண்டகோபானாம்
ஆத்மீயோ நாமபூபுஜாம்
ஹோதாரமபி ஜுஹ்வானம்
ஸ்ப்ருஷ்டோதஹதிபாவக: (6)

(பொருள்) பயங்கரமான கோபமுடைய இராஜாக்களுக்கு தன்னைச் சேர்ந்தவர்களென்றொருவருமில்லை. எப்படியெனில் அக்கினியானது தனக்கு ஆஹுதிகொடுப்பவனைக்கூட தொட்டவுடனே தகிக்கவில்லையா?

மௌனான்மூக: ப்ரவசனபடுர்வாசகோ ஜல்பகோவா
த்ருஷ்ட: பார்ச்வேபவதிசவஸன் தூரதோப்யப்ரகல்ப:
க்ஷாந்த்யாபீருர்யதி நஸஹதேப்ராயசோ நாபிஜாதஸ்
ஸேவாதர்ம: பரமகஹனோ யோகிநாம் பயகம்ய: (7)

(பொருள்) இராஜசேவையானது மிகவும் கஷ்டமானது. எப்படியெனில் எந்தக்காரியத்திலும் பிரவேசியாமல் மௌனமாயிருப்பவனை ஊமையனென்றும், நன்றாய்ப் பேசத்தெரிந்தவனை அதிகப்பிரஸங்கி என்றும், வீண்பேச்சுப் பேசுபவனென்றும், எப்போதும் பக்கத்திலேயே சஞ்சரிப்பவனை பயமில்லாதவன் என்றும், தூரத்திலிருப்பவனை சாமர்த்தியமில்லாதவனென்றும், பொறுமையுள்ளவனை பயப்பட்டவனென்றும், கெட்டகாரியங்களைக் கண்டு சகிக்காதவனை நற்குலத்திலுதித்தவனல்லவென்றும், சொல்வார்களாகையால் அரசர்களைச் சேவிப்பது யோகிகளுக்குக்கூட மிகவும் அஸாத்தியமாம்.

உத்பாஸிதாகில கலஸ்யவிச்ருங்கலஸ்ய
ப்ரோத்காடவிஸ்ம்ருதி நிஜாதமகர்மவ்ருத்தே:
தைவாதவாப்தவிபவஸ்யகுணத்விஷோஸ்ய
நீசஸ்யகோசரகதைஸ்ஸுகமாஸ்யதேகை: (8)

(பொருள்) எல்லா துர்ச்சனரையும் ப்ரகாசிக்கச் செய்பவனும், விதிநிஷேதமில்லாதவனும், தன்னிடமுள்ள கெட்ட நடத்தையை மறப்பவனும், தைவ வசத்தால் கிடைத்த ஸம்பத்துள்ளவனும், நற்குணத்தில் வெறுப்புள்ளவனுமாகிய நீசர்களெதிரில் யார்தான் சுகமாயிருப்பார்கள்?

ஆரம்பகுர்வீக்ஷயிணீக்ரமேண
லக்வீபுராவ்ருத்தி முபைதிபச்சாத்
தினஸ்யபூர்வார்த்தபரார்த்தபின்ன
சாயேவமைத்ரீகல ஸஜ்ஜனானாம். (9)

(பொருள்) தீயவர் நல்லவருடைய நட்பானது முறையே பகலின் முற்பாதியிலும் பிற்பாதியிலும் ஏற்படும் நிழல்போல முதலில் பெரிதாயும் வர வரக் குறைந்தும், முதலில் குறைந்தும் பிறகு பெரிதாயும்வரும்.

ம்ருகமீனஸஜ்ஜனானாம் த்ருணஜல
ஸந்தோஷவிஹித வ்ருத்தீனாம்
லுப்தகதீவரபிசுனா நிஷ்காரண
மேவவைரிணோஜகதி. (10)

(பொருள்) உலகத்தில் வேடர்கள், செம்படவர்கள், கோட்சொல்லுபவர்கள், இம்மூவரும், பிறருக்கு எவ்விதமான இம்சையும் செய்யாமலும், திருணங்களாலும், ஜலத்தினாலும், ஸந்தோஷத்தாலும், ஜீவிக்கும் மிருகங்கள், மீன்கள், நல்லோர்கள், இம்மூவரிடமும் காரணமின்றி வைரத்துடன் பலவிதமான உபாயங்களால் அவர்களை உபத்திரவப்படுத்துவார்கள்.

## நல்லோரியல்பு.

வாஞ்சாஸஜ்ஜனஸங்கமே பரகுணே ப்ரீதிர்குரௌநம்ரதா
வித்யாயாம்வ்யஸனம் ஸ்வயோஷிதிரதிர்லோகாபவாதாத்பயம்
பக்திச்சூலினிசக்திராத்மதமனே ஸம்ஸர்கமுக்தி:கலே
ரேதேயேஷுவஸந்திநிர்மலகுணா ஸ்தேப்யோ மஹத்ப்யோ
[நம: (1)

(பொருள்) நல்லோர்களிடமுள்ள குணங்களில் முதன்மையானது நல்லோரிணக்கத்திலாசை, ஏனெனில் மோக்ஷவாயிலுக்கு சாந்தம், உபநிஷத்விசாரணை, ஸந்தோஷம், ஸஜ்ஜனசேர்க்கை, இந்நான்கையும் துவாரபாலகர்களாய் கூறப்பட்டிருப்பதாலும் அதுவே மனதை நிர்மலமாக்குகிறது, கீர்த்தியை எங்கும் பரவச்செய்கிறது, இன்னும் எதைத்தான் செய்



யாது? எல்லாவற்றையும் செய்யுமென்று சொல்லப்பட்டிருப்பதாலும் அதை முதலாவதாகக்கூறினது (2) பிறரிடமுள்ள நல்ல நடவடிக்கைகளில் சந்தோஷம். நல்லோர்கள் சுபாவம் என்னவெனில் பிறரிடம் அணுவளவு குணமிருப்பினும் அதை மலைபள்வாகக் கொண்டாடுவது. (3) குருவினிடம் வணக்கம் இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும் வேண்டிய காரியங்கள் எதுவும் ஆசிரியனில்லாது முடியாதாதலாலும், குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே ஈசுவரன், குருவே பரப்பிரம்மம், என்றேறப்பட்டிருப்பதாலும் குருவை வணங்கவேண்டியதவசியம். (4) வித்தையில் விசனம் அதாவது "தம்மினும் கற்றாரை நோக்கிக்கருத்தழிக" என்றிருப்பதால் தம்மினும் படித்தவர்களைப்பார்த்து நாம் அவ்விதமாய்ப் படிக்கவில்லையே என்ற விசனம் ஒவ்வொருவருக்கும் உண்டாகவேண்டியது. (5) பிறன் மனைவியைத் தாய்போல் கருதவேண்டுவதாகையால், தன் சொந்த மனைவியிடம் விருப்பம் இருக்கவேண்டியது. காதல் என்பது செம்மை நினையாமை பூண்டார் நெறிகளுளொன்றாயிருப்பினும் அது தன்சொந்த மனையாளிடம் காதல் கொண்டவர்களுக்குக் கூறியதல்ல. (6) லோகத்திலுள்ளவர்கள் நம்மிடம் ஒரு விதமான அபவாத வார்த்தைகளை ஏற்படுத்தினால் அதில் பயம் யாவருக்குமிருக்க வேண்டியது. பாவத்தொழில்களைச் செய்து அதனால் கெட்டவன் என்ற பெயர்படைத்து எவ்விடத்திலும் மதிப்பின்றி திரிவது மானக்கேடாகையாலும் "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றபடி மானமென்பது பிராணனிலும் மேலானதாதலாலும் உலகத்திற்குப் பயப்படுதல் அவசியம். (7) சூலத்தைத் தரித்த கடவுளிடம் அன்பு. (8) தன்னைத் தானடக்கியாளும் சக்தி, அதாவது "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று பெரியோர் கூறியிருப்பதுபோல நமது இந்திரியங்களைத் தங்களிஷ்டம்போல கெட்டவழிகளில் செல்லவிடாது நல்வழிகளிற் செல்லும்படி அடக்கியாளவேண்டும். (9) துஷ்டர்களுடன் கூட்டுறவை நீக்குதல் பனையடியிலிருந்து பாலைக்குடித்தாலும் கட்குடித்தானென்பார்களாகையால் துஷ்டர்களுடன் கூடுவதே தீது. மேலும் நம்மை நாளாவட்டத்தில் பெரிய துஷ்டனாகவும் செய்துவிடும். ஆகையால் அவர்களுடைய நட்பை வேருடன் களைந்துவிடவேண்டும். மேற்சொன்ன மேலான குணங்கள் எவர்களிடமிருக்கின்றனவோ அவர்களுக்கு நமஸ்காரம்.

விபதிதைர்யமதாப்யுதயேக்ஷமா
ஸதஸிவாக்படுதாயுதிவிக்ரம:
யசஸிசாபிரதிர்வ்யஸனம்ச்ருதௌ
ப்ரக்ருதிஸித்தமிதம்ஹிமஹாத்மநாம். (2)

(பொருள்) ஆபத்துக் காலத்தில் தைரியத்தைக்கைவிடாமையும், ஸம்பத்து வந்தபோது அடக்கமும், அரசர்கள் சபையிலும் வித்துவான்கள் சபையிலும் கசடறப்பேசுதலும், யுத்தகளத்தில் பராக்கிரமத்தைக் காட்டுவதும், கீர்த்தியைச் சம்பாதிப்பதில் ஆசையும், வேதசாஸ்திரங்களை அப்பியாசியாதிருப்பதில் துக்கமும், ஆகிய இவைகள் மஹான்களுக்குச் சுபாவமானவைகள்.

கரேச்லாக்யஸ்த்யாகச்சிரஸி குருபாதப்ரணயிதா
முகேஸத்யாவாணீ விஜயிபுஜயோர்வீர்யமதுலம்
ஹ்ருதிஸ்வச்சாவ்ருத்தி: ச்ருதிமதிகதம்சச்ரவணயோர்
விநாப்யைச்வர்யேண ப்ரக்ருதிமஹதாம்மண்டனமிதம். (3)

(பொருள்) நல்லோர்களது அலங்காரத்தைக் கூறுகிறார்:— கைகளுக் கல்ங்காரமாவது எல்லோராலுங் கொண்டாடப்படும் உத்தமமான தானங்களைக் கொடுப்பது. சிரசுக்கு அலங்காரம் குருக்களுக்கும் பெரியோர்களுக்கும் வணங்குவது. முகத்திற்கலங்காரம் உண்மையே பேசுவது. புஜங்களுக்கலங்காரம் எதிரில்லாதவெற்றி. இருதயத்திற்கலங்காரம் நிர்மலமான மனது, காதுகளுக்கலங்காரம் வேதசாஸ்திரங்களைக் கேட்பது, ஆகையாலிவைகளெல்லாம் பெரியோர்களுக்குப் பணச்செலவில்லாத அலங்காரங்களாகவேயிருக்கின்றன.

ப்ராணாகாதாந்நிவ்ருத்தி: பரதனஹரணே—ஸம்யமஸ்ஸத்யவாக்
[யம்
காலேசக்த்யா ப்ரதானம்யுவதிஜனகதாமூகபாவ: பரேஷாம்
த்ருஷ்ணாஸ்ரோதோவிபங்கோ குருஷுசவினய ஸ்ஸர்வபூதா
[நுகம்பா
ஸாமான்யம் ஸர்வசாஸ்த்ரேஷ்வநுபஹதவிதிச்ரேயஸாமேஷபந்
[தா:. (4)



(பொருள்) ஜீவகாருண்யம், அதாவது ஜீவப்பிராணிகளைக் கொல்லாமை, பிறருடைய பொருளைக்கவராமை, உண்மையுரைத்தல், சமயம் வந்தபொழுது ஏழைகளுக்குத் தன்னாலியன்றளவு கொடுத்தல், பரஸ்திரீகளைப் பற்றிப்பேசுவதின்றி ஊமையாயிருத்தல், அதிக ஆசைக்கிடங்கொடாதடக்கல், குருஜனங்களைவணங்குதல், சகலப்பிராணிகளிடத்திலும் இரக்கம்,எல்லோரையும் சமமாக நினைப்பது, எல்லாசாஸ்திரங்களையும் அப்பஸித்து அவைகளை அநுஸரித்து நடப்பது, ஆகிய இவைகள் மனிதர்களுக்கு மேன்மையைக் கொடுக்கக்கூடிய உத்தமமான மார்க்கங்களாம்.

ஸம்பத்ஸுமஹதாம் சித்தம்
பவேதுத் பலகோமலம்
ஆபத்ஸுச மஹாசைல
சிலாஸங்காத கர்க்கசம். (5)

(பொருள்) நல்லோர்களுடைய மனமானது தனதான்யவஸ்துவாஹனங்கள் முதலியவைகளையடைந்த காலத்தில் துஷ்டர்களது இருதயம்போல கடினமாயிராமல் கருநெய்தற்புஷ்பம்போல மிருதுவாயிருக்கும் அதாவது, ஈவு, இரக்கம், முதலிய குணங்களுடையதாயிருக்கும். அப்படியன்றி ஆபத்து வந்துற்ற காலத்திலோ மேற்சொன்ன துஷ்டர்களது நெஞ்சம்போல மிகவும் அதைர்யமடையாமல் பெரிய பர்வதம்போல கடினமுடையதாயிருக்கும், எனில் தைரியத்தைக் கைவிடார்கள் என்று கருத்து.

ப்ரியந்யாய்யாவ்ருத்திர்மலின மஸுபங்கேப்யஸுகரம் த்வஸந்
[தோநா
ப்யர்த்யாஸ்ஸுஹ்ருதபிநயாச்ய: க்ருசதன:
விபத்யுச்சை: ஸ்தைர்யம்பதமனுவிதேயம் சமஹதாம்
ஸதாம்கேநோத்திஷ்டம் விஷமமஸிதாராவ்ருதமிதம். (6)

(பொருள்) ஜனங்களுக்குப் பிரியமும் நியாயவிரோதமில்லாததுமான மார்க்கத்தால் ஜீவித்தல், பிராணனை இழக்கக்கூடிய காலம் வந்தாலும் கெட்டகாரியம் செய்யாதொழிதல், நல்லோர்களல்லாதாரிடம் இரவாதிருக்

தல், ஏழையான நண்பனிடமும் யாசியாதிருத்தல், ஆபத்துக் காலத்தில் மிகுந்த தைரியத்தோடிருத்தல், நல்லோர்களுடைய மார்க்கத்தை யநுசரித்தல், என்ற இந்த “அஸிதாரா” வ்ருதம் நல்லோர்களுக்கு யாரால் ஏற்படுத்தப்பட்டது.

ப்ரதானம்ப்ரச்சன்னம்க்ருஹமுபகதேஸம்ப்ரமவிதி: ப்ரியம்
க்ருத்வாமௌனம் ஸதஸிகதனம் சாப்யுபக்ருதே:
அநுத்ஸேகோலக்ஷ்ம்யாம் நிரபிபவஸாரா: பரகதாஸ்ஸதாம்
கேநோத்திஷ்டம் விஷமமஸிதாராவ்ருதமிதம். (7)

(பொருள்) ஏழைகளுக்கு தானம்கொடுத்து பிறகு அதைத்தானேசொல்லிக்கொள்ளாமல் மறைத்துக்கொள்ளுதலும், அதிதிகள் வீட்டிற்கு வந்துவிட்டால் மிகுந்த பரபரப்புடன் எழுந்து அவர்களை எதிர்சென்றழைத்துவந்து அவர்களுக்குப் பூஜை நமஸ்காரம் முதலிய உபசாராதிகள் செய்து அவர்களை உயர்ந்ததோராசனத்திருத்தி அவர்களுடன் பிரியமாய் வசனித்திருந்து, இவ்விதம் தான் பெரியோர்களுக்குபசாரம்செய்த விஷயத்தை பெருமையாய் வெளியேதானே சொல்லிக்கொள்ளாமல் மௌனமாயிருத்தலும், அநேக ஜனங்களுக்கு மத்தியில் தானிருக்குங்கால் பிறரால் தனக்குச்செய்யப்பட்ட எள்ளளவு உபகாரத்தை மலையளவாகச்சொல்லி அவ்வுபகாரியைக் கொண்டாடுதலும், தனக்குக்கிடைத்துள்ள சம்பத்தால் கர்வங்கொள்ளாமையும், இதரர்களைப்பற்றிப் பேசுங்கால் அவர்களுக்கு நிந்தனையாக ஒருவார்த்தையேனும் கூறாமையும் ஆகிய இந்த மிகக்கஷ்டமான “அஸிதாரா” வ்ருதமானது நல்லோர்களுக்கு யாரால் ஏற்படுத்தப்பட்டது?

இன்னும் வரும்

Ramachandra Iyer.

# அஞ்ஞான குருவின்கதை.

22-வது பக்கத்தின் தொடர்ச்சி.

வீராசாமி:— அடேதடிப்பசங்கா! ஒங்களைக் கேட்ட கேழ்விக்குப் பதில் சொல்லாமே எனக்கு யோசனையா சொல்ரீங்கோ வந்த சங்கதியைச் சொல்ரியளா ஒங்களுக்கும் ஒதைவேணுமா?

சீடர்கள்:— நீ எங்கள் பேரில் கோபிக்கவேண்டாம். உன்னிடத்தில் நியாயத்தைச் சொன்னோம். இம்மாதிரி உன்னிடம் வேண்டிக் கொள்ளுவதற்கு காரணம் இந்த பிராமணன் எங்களுக்குகுரு, நாங்கள் அவருடைய சீடர்கள். இன்றையத்தினம் இவ்விடத்தில் ஸரஸ்வதி வரப்போகிறதாகவும் அவளிடம் சிலவரங்கள் வாங்கப்போவதாகவும் தனியாக இவிடம் வருவதற்கு பயந்து எங்களைத் துணைக்காக தன்கூடவே வரும்படி கட்டளையிட்டார். அவ்வாறு நாங்களும் கூடவே வந்தோம். இன்னேரம்வரையில் அவர் உத்திரவுப்படி சிறிது தூரத்திற்கப்பால் போய் உட்கார்ந்திருந்தோம் இங்குண்டான கூக்குரலைக்கேட்டு இவ்விடம்வந்தோம். அவர் இம்மாதிரி பரிதாப நிலைமையிலிருப்பதைபற்றி எங்களுக்கு வருத்தமாகயிருப்பதினால் உன்னிடம் அவரை விட்டு விடும்படி தயவாகக் கேட்டதைத் தவிர வேறில்லை, என்றார்கள்.

இதைக் கேட்ட வீரசாமி பாம்பு போல்ச்சீறி அடேபாவிப்பசங்கா! ராசாபெண்ணை பெண்டாட்டியாக்கப் பாத்த இந்தப்பாவிப்பயல் குருவுக்கு நீங்களும் சிசாக்களா? நீங்களும் உசிரோடேயிருந்தாக்கி இன்னம் எத்தனை பொண்ணை இந்த மாதிரி கெடுக்கப்போரீங்களோ? ஒங்க உசிரையும் இப்பவே போக்கிப் போடரேன்பாரு என்று சொல்லிக்கொண்டே அவர்கள் தலைக்கு நேராக தன்கையிலிருந்த தடியை ஓங்கினான். இதைக் கண்ட சீடர்கள் அறிவு கலங்கி நம்முடைய உயிருக்கும் சனியன்பிடித்துவிட்டான் யென்று பயந்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்கள். ஓடிப்போகும்பொழுது சிற்சில சம்பாஷணை செய்து கொண்டேபோனார்கள்.

ரேதுபதி:— அடேசுந்தரம்! உன் கக்ஷிதான் ஜயித்தது.

சுந்தரம்:— ரெகுபதி! இந்தப் பாவிகுருவின் கெட்ட எண்ணத்தை பல தடவைகளிலும் கவனித்தே நான் அவ்வாறு சொன்னேனேயொழிய வேறில்லை, நீ உத்தம புருஷாளுக்குச் சொல்லுகிற நியாய மெல்லாம் இவர் விஷயத்துக்குப் பேசினாயே? பெட்டியினுள்ளிருந்த திருடன் சொன்னதை கவனித்தாயா? நம்முடைய ஞானகுருவின் நடத்தைகளைப் பார்! எவ்வளவு கேவலஸ்திதியிலிருக்கிறது.

கணபதி:— சுந்தரம்! இப்பேர்க்கொத்த குருவை நாம் அடைந்திருப்பதிலிருந்தும் நமக்கு கிடைக்கிற கவுருவத்தைப்பார்த்தாயா! உயிருக்கே ஆபத்துத்தான். மேலும் பிச்சை யெடுக்கப் போனாலும் இவர் நம்முடைய குருவென்று தெரிந்தால் அந்த ஊர்க்காரர் நமக்குத்தகுந்த ஸன்மானஞ்செய்து அக்கணமே உதைத்து ஊரைவிட்டு ஓட்டிவிடுவார்கள்.

ரேகுபதி:— கணபதி! இனி நாம் செய்யவேண்டிய தென்ன?

கணபதி:— நாம் இப்போழுதே அரசனிடம்போய் நடந்த விருத்தாந்தங்கள் முழுமையும் அறிவிக்கவேண்டும். பின்பு நடக்கப்போவதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டாம்.

சுந்தரம்:— கணபதி! நீ சொல்லுவது சரிதான் ஆகிலும் அரசனுடைய குமாரத்தியை நம்முடைய குரு வியபசரிக்கக்கருதி கொலையாளியிடம் சிக்கிக்கொண்டு இவ்வாறு நடுக்காட்டில் ஆபத்திலிருக்கிறாரென்றும், ராஜகுமாரத்தியைக் காணவில்லையென்றும், அரசனிடம் நேரில் நாம் எவ்வாறு சொல்லுவது யென்றுதான் யோசனை!

ரேகுபதி:— இதற்கு யோசித்தால் முடியுமா? நாம் இப்பொழுதே தெரிவித்தாலும் சிறிது அனுகூலம் பெறக்கூடும். சொல்லாமலே சும்மாயிருந்து விட்டால், இராஜகுமாரத்தியைத் தேடிப்பார்க்கவும் முடியாது. குருவின் பிராணாபாயத்திற்கும் ஸந்தேகமேயில்லை. இவ்வாறு ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டு ஊருக்குள்ப்போய்ச் சேர்ந்ததும் அரசனின் அரண்மனையை நோக்கிச் சென்று அரண்மனை வாயலிற்கார்த்துக் கொண்டிருந்த சேவகர்களிடத்தில் தாங்கள் ஓர் அவசரகாரியத்தை அரசனிடம் தெரிவிக்க விரும்பி வந்திருப்பதாகவும் உடனே தங்களைப்பற்றி



அரசனிடம் தெரிவிக்கும்படிக்கும் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு சேவகர்கள் இன்னும் மஹாராஜா நித்திரைதெளிந்து படுக்கையிலிருந்தே எழுந்திருக்கமாட்டார் நீங்கள் அவசரப்படுவதினால் பயனில்லை, சற்று நேரம் பொருங்களென்று சொன்னார்கள். இதைக்கேட்ட சீடர்கள் சேவகர்களே! நாங்கள் அறிவிக்கவேண்டிய விஷயம் அரைநிமிஷமேனும் பொருக்கத்தக்கதன்று. இப்பொழுதே அரசனது அந்தப்புரஞ்சென்று அரசனை நித்திரையிலிருந்தும் எழுப்பி நமது குருவின் சீடர்கள் ஓர் அவசர விண்ணப்பஞ்செய்ய வாசலில் வந்து கார்த்திருக்கிறார்கள். விஷயம் வெகு அவசரமாம் என்று தெரிவியுங்கள்! உடனே அரசனும் அவ்வாறு அனுமதி கொடுப்பதில் தடையிராது அவ்வாறன்னியில் அதனால் அரசனின் கோபத்திற்கு நீங்கள் உட்படவேண்டி வந்தால் நாங்களந்த தண்டனைக்குள்ளாகிறதாக உங்களுக்கு வாக்குத்தத்தம் செய்கிறோம் யென்றார்கள். இவ்வாறு சீடர்கள் வற்புறுத்துவதைப்பார்த்து ஒருவேளை ஏதேனும் அவசர காரியங்களாகயிருக்கலாம் இதைத் தெரிவிக்காமல் காலதாமதப் படுத்தினால் அதனால் ஏதேனும் கெடுதல் நேரிடும்பொழுது உடனே ஏன் என்னிடம் அறிவிக்கவில்லை யென்று நாமும் அரசன் கோபத்திற்குள்ளாகும்படி நேரிடுமென்று நினைத்து அந்தப்புரத்தின் பக்கத்தில் நின்றுகொண்டு மெதுவாக மகாராஜ்! என்று ஒருதரம் சொல்லவே. அரசனும் நித்திரை விட்டெழுந்திருக்கும் ஸமயமாகயிருந்தமையால், யாரங்கே! என்றுகேட்டார். சேவகர்கள் நமது அரண்மனை வாசலில் நமது குருஸ்வாமிகளின் சீடர்கள் ஸன்னிதானத்தில் ஏதோ ஓர் அவசர விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அரைநிமிஷங்கூட பொறுக்கமுடியாதென்றும், ஸன்னிதானத்தில் உடன் தெரிவிக்கும்படி எங்களை வேண்டிக்கொண்டார்கள் என்று தெரிவித்தார்கள். உடன் அரசன் அவ்வாறு அவசரம் இப்பொழுது என்ன ஏற்பட்டிருக்கலாமென்று தனக்குள்ளே சற்றுநேரம் யோசித்தும் ஒன்றும் புலப்படாமல் எதுவாயிருந்தாலுஞ்சரி அவர்களை இங்கு வரச்சொல்லுங்களென்று அரசன் கட்டளையிட்டார். சேவகர்களும் அவ்வாறே சீடர்களுக்கு அறிவித்து உள்ளே அரசனிடம் போகும்படி அனுமதிகொடுத்தார்கள். வெகுவிரைவில் சீடர்கள் அரசன் ஸமுகம் வந்ததும், அஞ்சலிஹஸ்தர்களாக மஹாராஜாவே! ஓர் விண்ணப்பம் என்றார்கள். அரசனும், அவர்களை பிரியமாக நோக்கி சீடர்காள்! அதிகாலை

யில் என்னிடம் வந்த அவசரமென்ன? உங்கள் குரு நம்மிடம் ஏதேனும் ஸமாசாரம் தெரிவிக்கும்படி உங்களுக்கு உத்திரவு கொடுத்தனுப்பினரா? என்று வினவ அதைக்கேட்ட சீடர்கள் கை கால்கள் பதற நாக்கு குழறி பதிற் சொல்லமுடியாமல் தடுமாறுவதை அரசன் பார்த்து ஏன் பதில்ச் சொல்ல இவ்வாறு தடுமாறுகிறீர்கள்? நீங்கள் வாலிபர்களானதினாலும் இதற்குமுன் நமது சமுகத்தில் வந்திராததினாலும் மிதமிஞ்சிபயப்படுகிறீர்களென்று நினைக்கிறேன். அவ்வாறு பயப்படவேண்டாம். தைரியமாக வந்த காரியத்தை தெரியப்படுத்துங்களென்று அரசன் தைரியப்படுத்தியதைப்பார்த்து, சீடர்களுள் சிறிது மனத்துணிவுள்ளவனான ரெகுபதி கீழேவருமாறு அரசனிடம்சொல்லத்தொடங்கினன். மஹாபிரபுவே! ஸன்னிதானத்தில் உத்திரவாகிறபடி மஹாராஜாவை புதிதாகத் தெரிசித்து விண்ணப்பம் செய்வதினால் எங்களுக்கு இவ்வாறு தடுமாற்றம் உண்டாகவில்லை. ஆனால் நடந்திருக்கிற விஷயங்களை சமுகத்தில் எவ்வாறு தெரியப்படுத்துகிறது? அந்த விஷயமான வருத்தத்தை ஸமுகத்தில் எவ்வாறு பொருக்க முடியும்? என்றதை நினைத்தே எங்கள் மனம் தடுமாறிற்று. அதாவது நேற்று இரவு சுமார் 10-மணிக்கு எங்கள் குரு நமது பட்டணத்துக்கு வடக்கேயுள்ள அடர்ந்த காட்டில் ஸரஸ்வதி வரப்போவதாகவும், அவருக்கு ஸங்கீத விஷயமாகவுள்ள பலஇரகசியங்களையும் அத்தேவி உபதேசம்பண்ணப் போவதாகவும், இரவில் காட்டுமார்க்கமாகத் தனியே போக பயமாகயிருப்பதால் நாங்களும் துணைக்காக கூடவேவரவேண்டுமென்றும் கட்டளையிட்டு எங்களையும் அழைத்துச்சென்றார். நடுக்காட்டிற் போனவுடன் அவ்விடத்தில் ஓர் பெட்டியிருக்கக்கண்டு அதில் தேவியிருப்பதாகவும் அதனுள் தான் போயிருந்து வேண்டும் வரங்களைப்பெற்று வெளியே திரும்ப வருவதாகவும், அச்சமயத்தில் ஏதாவது தனக்கும் தேவிக்கும், விவாதங்கள் யேற்பட்டு அதனால் உறத்தசப்தம் கேழ்விப்பட்டபோதிலும், நாங்கள் பெட்டியின் கதவைத்திறந்து பார்க்கக்கூடாதென்றும் கட்டளையிட்டருளினர். அவ்வாறே நாங்கள் பக்கத்திலிருந்த ஓர் சிற்றோடையினருகேபோய் உட்கார்ந்துகொண்டு சில சம்பாஷணைகள் செய்துகொண்டிருந்தோம். சுமார் 2 மணிநேரத்திற்கப்பால் பெலமான கூக்குரல்கேட்டது. அதைக் கவனிக்கையில் பெட்டியினுள் நமது குரு பெருந்துன்பமடைவதாகவும், அதைப் பொறுக்கமுடியாதவராக எங்களை உத



விக்கு அழைப்பதாகவும் அறிந்தோம். முன்னமே அவர் அவ்வாறு நேரிடினும் பெட்டியைத் திறந்துபார்க்கக்கூடாதென்று எங்களுக்கு கட்டளையிட்டிருந்தபோதிலும் அச்சமயம் அவர் படுந்துயரமான குரலை நாங்கள்கேட்டு எங்கள் மனம் சகியாதவர்களாக சமீபத்திற் சென்று மெதுவாகப்பெட்டியின் கதவைத்திறந்தோம். திறந்தநிமிஷமே அதினின்றும் பெரும் பூதம் போன்ற ஓர் திருட்டுத்தடியன் எங்களைப்பார்த்து ஓடிப்போகிறீர்களா? உங்கள் உயிரையும் மாய்த்துவிடட்டுமாவென்று கேட்டான் நாங்கள் அவனை ஏதோ ஓர் திருடனென்று நினைத்து மிகவும் நயவசனங்களால் இந்தக் கிழப்பிராமணனை இவ்வாறு ஏன் இம்சிக்கிறாய்? இவரிடம் பணங்காசு ஒன்றுமில்லையே வேறு பிரயாணிகள் யாரேனும் பொருளுடையோராக வருகிறவர்களைப்பார்த்து இவ்வாறு துன்பப்படுத்தினால் நீ ஏதேனும் லாபம் பெறலாம் இவரை விட்டுவிடுயென்று வேண்டிக்கொண்டோம். அதற்கொன்றும் அவன் சரியான விடை கூறாமல் இந்தப் பிராமணனுக்கு நீங்கள் யார்? யென்று வினவ நாங்கள் சீடர்களென்றோம். உடன் அவனுடைய கண்கள் சிவந்து சரீரம் நிமிர்ந்து உதடுகள் துடிக்க கையில் ஓர் பெருந்தடியைத்தூக்கி எங்கள் தலைக்குமேல் ஓங்கினவனாக சிற்சில வார்த்தைகள் பகர்ந்தான். அதை மட்டிலும் சமுகத்தில்த் தெரிவிக்க இன்னும் நாவு தடுமாறுகிறது என்றான். உடனே அரசன் குருவுக்கு நேர்ந்த துன்பத்தினாலுண்டான வருத்தமும் ஆனால் பெட்டியினுள் குருபிருக்கக்காரணமென்னவென்றதில் ஸந்தேகமுடையவனாக அந்த விருத்தாந்தம் முழுமையும் தெரிந்துகொள்வதில் ஓர் பேராவலுள்ளவராகவும், ரெகுபதியைப் பார்த்து நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்! உள்ளது உள்ளபடி முழுமையும் ஒளியாமல்ச் சொல்லிவிடுயென்று பரபரப்பாக உத்திரவுகொடுத்தார் அதைக்கேட்ட ரகுபதி தைரியத்துடன் கீழேவருமாறு கூறுகின்றான். அந்த முரட்டுத்திருடன் எங்களைப்பார்த்து எங்கள் ராஜாவின் மகளைப் பெண்டாளவந்த இந்தப்பாவிப்பயல் குருவின் சீடர்களா நீங்கள்? உண்டவீட்டுக்கு இரண்டகம்நினைத்த இந்த மகாதுரோகியான குருவுக்கு நீங்கள் சீடர்களானால் உங்கள் யோக்கிதையும் அப்படித்தானிருக்கும். உங்கள் உயிரையும் இப்பொழுதே மாய்த்துவிடுகிறேனென்று தடியைத் தலையிற் போடும் சமயத்தில் வெகுவேகமாக நாங்கள் ஓடிவிட்டோம். குருவின் நிலைமையும் பிழைப்பது ஸந்தேகந்தான். அங்கு வேறு எவருமில்லை. திரு

டன் சொன்ன விருத்தாந்தத்தின் உண்மை எப்படியோ! எங்களுக்குத் தெரிந்தவரை இவ்வளவுதான் என்று சீடன் ரெகுபதி சொல்லிமுடிக்கவும், அரசனானவன் குருசெய்திருக்கும் மித்திருபேதத்தையும், தன் அருமைக் குழந்தையிடம் நேரில் விசாரித்து உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் குருவின் வார்த்தையையே எதார்த்தமாக நம்பி மூடத்தனமாக தான் தன்னுடைய மகளுக்கு விதித்த தண்டனையையும், இவ்வாறு அருமையாகப் பெற்றெடுத்த மகா புத்திசாலியான குழந்தையை இழக்கத் தானே காரணமாக நேர்ந்ததற்கு தன்னுயிர் இனி புவியிலிருப்பதைவிட இறப்பதே மேலானதென்ற நினைப்புடையவனாகி மனது ஏங்கி சோகத்தில் மூழ்கினவனாகி "நான் மகா பாவியானேனே" என்ற ஒரே சொல்லுடன் ஸிம்மாதனத்திலிருந்தபடியே மூர்ச்சித்து வேரற்ற மரம்போல் சாய்ந்துவிட்டான்.

இனி நமது ராஜகுமாரத்தி தாயம்மையின் கதியைக் கவனிப்போம்.

தாயம்மை:— கருப்பணே! இந்தக்காட்டில் வெகுதூரம் வந்தாகிவிட்டதே! இன்னும் காளிகோவிலைக் காணவில்லையே! இந்த அர்த்தராத்திரியில் இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்? பல மிருகங்களுடைய சப்தமும், இன்னும் பலவிதமான குரல்களும் கேட்கிறது. என் மனதுக்குண்டாகும் பயத்தினால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை.

கருப்பண்ணன்:— ஏனம்மா பயப்படிரீங்கோ? நான் கருப்பணன் இருக்கிறபோது உங்ககிட்டத்திலே என்ன வந்தாலும் உசிரைவச்சிட்டு லேசா போயிடுமா? ஒருமாதிரி அழுகுராப்போலே கூப்பிடுது பாத்தீங்களா? அதுதான் அழுகுண்ணிப்பேய்கள். இதெல்லாம் செத்த பிணங்களை தின்னுபோட்டு சத்தம் போட்டுகிண்ணுதிரியுங்கோ. நம்ம மாரியாத்தா பெறப்பட்டு வந்தாங்கன்னா இந்தப் பேயெல்லாம் ஓட்டம்புடிச்சுடுங்கோ.

தாயம்மை:— அடே கருப்பணா! நான் உன்னை நம்பி கூடவந்ததற்கா எங்கேயோ பிசாசுக் கூட்டங்களிருக்கிற பக்கத்தில்க் கொண்டுவந்துவிட்டாய்? எனக்குண்டாகும் பயத்தினால் நெஞ்சும் மார்பும் படபட



வென்று அடித்துக்கொள்ளுகிறதடா! என்உயிர் போய்விட்டாலும் கவலையில்லையே! இந்தமாதிரி துன்பத்தையனுபவிக்க ஈசன் என்தலையிலெழுதினானா? இம்மாதரி கஷ்டம் அனுபவிக்க ஓர் அரசனது குடும்பத்திலும் நான் ஜெனிக்கவேணுமோ?

கருப்பண்ணன்:— நீங்க ராசாத்தியம்மையாயிருக்கங்காட்டி இப்படி பதறதீங்கோ. எங்கவீட்டு பொம்மனாட்டி கொளுந்தயளெல்லாம் இந்த பேயுங்கூட விளையாடுவாங்கோ. நீங்கபயப்படாமே எங்கூட சும்மா வாங்கோ அம்மா! எனக்கு மந்தரம்கூடப் போடத்தெரியும். திருநீரெடுத்துக்கிட்டுப்போட்டேன்னா எந்தப் பேயும் ஓட்டம் புடிச்சுப்புடும்.

தாயம்மை:— இதுதானா காளிகோவில்?

கருப்பண்ணன்:— இது காளிகோவிலில்லைங்கோ மாரியாத்தா தாயிகோவிலு.

தாயம்மை:— நான் கோவிலுக்குள்ளே போய் கதவை அடைத்துக்கொண்டு அரைமணிநேரமாவது நித்திரை செய்யவேணும். உள்ளே விளக்கு ஏதேனும் இருக்கிறதா? கதவைத்திறக்க முடியுமா?

கருப்பண்ணன்:— என்னம்மா இப்படி கேக்கிறீங்கோ? குருக்க வந்து தினம் ரவு பூசைபண்ணி விளக்குப்போட்டுப் போவாங்கோ. நாங்கயெல்லாம் பூசைக்கு வரிப்பணம் கொடுக்கல்லையா? கதவு ஓட்டையிலே பாருங்கோ முணுமுணு முணுமுணு இன்னு விளக்கு வெளிச்சம் தெரியிது.

தாயம்மை:— அப்படிக்கானால் கதவை திறந்துவிடு.

கருப்பண்ணன்:— அம்மணீ! கதவை இந்த மரக்கொம்பைப்போட்டு திறந்து போட்டேன். சவுக்கமா உள்ளேபோயி கதவை அடச்சுக்கிட்டுப் படுத்து உறங்குங்கோ.

தாயம்மை:— அவ்வாறு கதவைத்திறந்து உள் நுழைந்ததும் தேவி ஸன்னிதானத்தண்டையிற்போய் கண்குளிர தரிசித்து தன்னுடைய துன்பம் முழுவதையும் அறிவித்து தன் மனக்கவலையை நீக்குமாறு

பிரார்த்தித்துவிட்டு பாதத்தில் அர்ச்சித்திருந்த வில்வம், குங்குமம், இவைகளையும் விபூதி பிரஸாதத்தையும் எடுத்து சிரஸிலும் நெற்றியிலும் தரித்துக்கொண்டு. வாசற் கதவினுட் புறத்திலுள்ள இரண்டு தாள்களையும் போட்டுவிட்டு அங்கு ஓர் பக்கத்தில் சயனித்துக்கொண்டாள். ராஜகுமாரத்தியாகயிருந்து அன்றிரவெல்லாம் நடுக்காட்டில் அவளடைந்திருக்கும் துன்பத்திற்கு சற்று அயர்ந்து நித்திரை செய்துவிட்டாள் என்று சொல்லவாவேண்டும்? இரவுசுமார் 4-மணிக்கு அந்தக்கோவிலின் மாரியாத்தாள் தேவியானவள் வனதேவதையாகையினால் வழக்கம்போல் தனது வனமுழுமையும் சுற்றிப்பார்த்துவிட்டு கோவிலுக்குவந்ததும் கதவின்மேல் பாகத்திலுள்ள தாளைத்திறந்தும் கதவு திறக்கப்படாமையால் உள்ளே யாரிருக்கிறார்களென்று தாளின் துவாரத்துவழியாக உற்றுப்பார்க்கும்பொழுது ராஜகுமாரத்தியென்று தெரிந்து, தனது ஞானதிருஷ்டியால் இவள் இங்குவரக்காரணத்தையுந் தெரிந்துகொண்டாள். அப்பால் தேவி கதவைத் தட்டி கோவிலினுள்ப் படுத்திருக்கும் பெண்ணை நோக்கி உள்ளே படுத்திருப்பது யார்? கதவைத் திறவென்று கூப்பிட்டாள். உடனே ராஜகுமாரத்தி திடுக்கிட்டெழுந்து கண்ணை விழித்துப் பார்த்து பக்கத்தில் யாவருங் காணாமையால் இன்னுமொருமுறை சப்தத்தைக் கவனித்தாள். வெளிப்பக்கமிருந்து யாரோ கூப்பிடுவதாகத் தெரிந்தது.

**தாயம்மை:**— நீ யாரென்பதைத் தெரிவித்தால் பட்டிலும் கதவைத் திறப்பேன்.

**தேவி:**— நானிந்த கோவிலில் வசிக்கும் தேவதை. நானில்லாத சமயத்தில் இரவு நடுவேளையில் இந்த நடுகாட்டிலுள்ள எனது கோவிலினுள் தைரியமாக கதவைத்தாளிட்டு உட்கார்ந்து கொண்டிருப்பவள் நீ யார்.? சீக்கிரம் தெரிவிக்கவேணும்!

இன்னும் வரும்

சிவஞானம்.

# ஸமாசாரக் குறிப்பு.

---

ஸ்ரீவைகுண்டம் தாலூகா ஏரலில் சுமார் 2 வருஷத்துக்கு முன்னால் யூனியன் சேர்மென் உத்தியோகமும் கிராமமுன்சீபு வேலையும் பார்த்துவந்த அருணாசல நாடாரென்பவர், ஜனங்களுக்கு உபகாரியாயும், சத்யவந்தனும், குணசீலராயும் சுமார் 20, 000 ரூபாய் பூஸ்திதியுடையவராகவுமிருந்துவந்தார். அவர் இறக்கும்பொழுது வயது 28 அவருக்கு விஷகடி மந்திரம் நன்றாய்த்தெரியும் அதனால் அவர் பிரக்யாதியடைந்ததுந்தவிர தன்னிடத்தில் வயல் உழுது ஜீவனஞ்செய்துவந்த பள்ளி ஒருத்திக்கு விஷங்கடித்து தேகமெங்கும் நமைச்சலுண்டாகி ரொம்பவும் கஷ்டமடைந்துவந்ததைக்கண்டு, வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் நம்மிடம் மந்திரம் ஜெபித்து ஜலம் உட்கொள்ளுவாயாகில் குணமாகும் என்று சொன்னார். அதன்படி செய்வதற்குமுன், ஷெ. யாருக்குத் திடீரென்று பேதிகண்டு இறந்து போய்விட்டார். அவரை ஏரலுக்கடுத்த மேல்புரம் திருவழுதிநாடான் விளையென்ற ஓர் சிற்றூரின் பக்கத்தில் தாம்பரபர்ணி நதியின் வடகரையோரமாயுள்ள சமாதிகளோடு ஷெ. யாரையும் சமாது வைக்கப்பட்டது.

அதன் பிறகு சுமார் 10 தினங்கள் சென்றபின் முன் விஷந்தீண்டிய பள்ளிக்கு நோய் அதிகப்பட்டு துன்பம் பொறுக்கமுடியாமல் எஜமானனை நினைந்து அழுதனள். அன்றிரவு பள்ளிக்கு கனவில் சேர்மேனுடைய உருவம்போல்வந்து, உனக்குரிய வியாதிக்கு எனது சமாதுக்குழியின் பக்கமாயுள்ள மண்ணைக்கரைத்து சாப்பிட்டும், தேகமெங்கும் பூசியும் வருவாயாகில் விஷகடிநோய் தீர்ந்துவிடுமென்று சொன்னதாயும் பள்ளியானவள் மறுதினமே நதியில் ஸ்நானஞ்செய்து சமாதை மூன்று தரம் சுற்றிவந்து சமாதியின் கால்பக்கமாயுள்ள மண்ணைக்கரைத்து சாப்பிட்டும் தேகமெங்கும் பூசியும் வந்ததினால் விஷகடிநோய் தீர்ந்துபோய்விட்டதாம்.

அதை அக்கம்பக்கமுள்ளவர்கள் கேட்டு அதுமுதல் வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் ஜனங்கள் கும்பலாய்க்கூடி. முன் பள்ளி செய்தமாதி

ரியே செய்துவந்தார்கள் வரவர ஜனங்களும் அதிகரித்தது: சேர்மேனுடைய குடும்பத்தார்கள் சமாதிவைத்த இடத்தில் செங்கல் சுண்ணாம்பினால் சமாதிகட்டி, வெள்ளியினால் முகமும் செய்துவைத்து சுற்றிலும் இரும்புக்கம்பிகளால் அழிசெய்து ஷை யிடத்திற்கு அருணாசல ஈச்வரர் கோவில் யென்றும், சேர்மேன்கோவில் என்றும், இருவகைப்பெயர் கொடுத்து ஷை செலவுக்காகவும், பூஜைக்காகவும், உண்டியலும் வைத்தார்கள்.

அதன் பின்பு ஆடி, தை-மீ அமாவாசை முதலிய நாட்களில் சுமார் 10, 000 கணக்கான ஜனங்கள்கூடி அதில் 500 பெண்பிள்ளைகள் வரையிலும், பேயாடுவதும், குறிசொல்வதும் தவிர ஒருமாதம் வரைக்கும் அந்த இடத்திலேயே அனேகம் ஜனங்கள் வசனமுமிருக்கிறது.

ஒரு ஆடி-மீ அமாவாசைக்கு, ரூ 1000 மும், தை-மீ அமாவாசைக்கு ரூ 1000 மும், மற்றுங்காலங்களில் மாதம் ஒன்றுக்கு சராசரி ரூ 100 வரையிலும் உண்டியலும் கிடைக்கிறது. ஷை பணத்தை ஆடி, தை, அமாவாசைகளில், அலங்காரமான பந்தல்களுக்கும், வாணவேடிக்கைகளுக்கும் செலவுசெய்வதும் தவிர சமாதிப்பக்கத்தில் ஜனங்கள் பசனமிருக்கும்படிக்கு சுமார் 20 வீடுகள் வரையிலும் கெட்டியிருக்கிறார்கள். மீதப்பணத்தை யென்ன செய்கிறார்களென்பது தெரியவில்லை. இதுவிஷயமாக ஜெனங்களுக்குண்டான மிகுந்த நம்பிக்கையே இவ்வாறு வேலைசெய்கிறது உண்மையான நம்பிக்கையின் பெருமையை யாரால் அளவிடக்கூடும்?

---

161294
REGISTRAR OF BOOKS
NOV 1915
MADRAS

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-ஷ நவம்பர்-மீ { NO. 5.

### இந்து ஸங்கீதம்

"தீவ்ராரௌத்ரீவஜ்ரிகோக்ரே-த்யுக்தா தீப்தாச்சதுர்விதா
குமுத்வத்யாயதாயாஸ்ச்ச-க்ரோதீச்சாதப்ரஸாரிணீ =
ஸந்தீபினீரோஹிணீச்ச-பேதா:பஞ்சேதிகீர்த்திதா:
தயாவதீதாலாபீ-ந்பதப்ரோக்தாமதந்திகா =
க்ரயஸ்தேகருணாபேதா-ம்ருதோபேதசதுஷ்டயம்
பந்தாச்சரதிகாப்ரீதி:-க்ஷிதிர்மத்யா துஷட்விதா: =
சந்தோவதீரஞ்சனீச்ச-மார்ஜனீரக்திகா ததா =
ரம்யாச்சக்ஷோபிணீத்யாஸாமதப்ருமஸ்வரேஷ்விதிம்" =

இதன்பொருள்:— தீப்த, ஆயத, கருணா, ம்ருது, மத்ய என்று ஐந்து ஜாதிகளாக ச்ருதிகளை வகுக்கப்பட்டும் அந்தச்ருதிகளை ஸப்த ஸ்வரங்கள் * வ்யவஸ்திசெய்து கொண்டுமிருக்கின்றன. தீவ்ர, ரௌத்ரி, வஜ்ரிக, உக்ர, என்ற நான்கும் தீப்த ஜாதியைச்சேர்ந்தது. குமுத்வதி,

NR ... (N15-1)

க்ரோதி, ப்ரஸாரிணி, ஸந்தீபினி, ரோஹிணி, இவ்வைந்தும் ஆயத ஜாதியைச் சேர்ந்தது. தயாவதி, ஆலாபினி, மதந்தி, இம்மூன்றும் கருண ஜாதியைச்சேர்ந்தது. மந்த, ரதிக, ப்ரீதி, க்ஷிதி, இந்நான்கும் ம்ருது ஜாதியைச்சேர்ந்தது, சந்தோவதி, ரஞ்சனி, மார்ஜனி, ரக்த, ரம்ய, க்ஷோபிணி, இவ்வாறும் மத்ய ஜாதியைச்சேர்ந்தது.

"தஸ்யத்வாவிம்சதிர்பேதா:
ச்ரவணாத்ச்ருதயோமதா:
ஹ்ருத்யூர்த்வநாடீஸம்லப்தா
நாட்யோத்வாவிம்சதிர்மதா:"

(ஸங்கீதரத்நாகரம்)

22. இதற்கு சதுரகல்லி நாதருடைய வியாக்கியானம்:— அப்படிக் கேழ்ப்பதினால் அறியக்கூடிய ச்ருதிகள் 22 என்று சொல்லப்படுகிறது. அவ்வாறன்னியில் தொகையில் இன்னும் ஜாஸ்தியாகவாவது குறைவாகவாவது சொல்லக் கூடாதோவெனில், அவை சரீரதத்துவத்திற்கு விரோதப்படும். ஒருவர்க்குப்போதுமான ச்ருதிஞானமும், ஜாதிஞானமும் தேவையாகில் முதலில் சரீரதத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதாவது:— 1. மூலாதாரம், 2. ஸ்வாதிஷ்டானம், 3. மணிபூரகம், 4. அநாஹதம், 5. ஸஹஸ்ராரம், 6. ப்ரும்ஹரந்திரம், என்று சரீரத்தினுள் ஏற்பட்டிருக்கும் ஆதாரசக்கரங்களுள் ப்ரும்ஹக்ரந்தி அதாவது மணிபூரகமென்ற உந்திச்சக்கரத்தைச் சுற்றி மேலே வருகிற நரம்புகள் 22. இருக்கின்றன. அந்த நாடிகள் தான் இடை, பிங்கலை என்ற நாடிகளில் ஸம்மந்தப்பட்டவைகள். அவ்வாறே குறுக்கேயும் 22. நரம்புகளிருக்கின்றன. இவைகளுக்குத்தான் ச்ருதியென்று பெயர். உந்திச்சக்கரத்தின் மேல்நோக்கும் நாடிகள் இன்னும் பலவுளவாயினும் அவைகள் இவற்றைப்போல் பெருநரம்புகளல்ல. ஆகையினால் இந்த பெருநரம்புகள் 22-யும் ச்ருதியென்று சொல்லப்படுகிறது. குறுக்கு நரம்புகளில் சிலது விட்டு 1. வீதம் அதன்பின் வருவனவாகும்.

* வ்யவஸ்தி = ஒழுங்கு



"திரஸ்ச்சஸ்தாஸ—தாவத்ய:
ச்ருதயோமாருதாஹதா:
உச்சோச்சதரதாயுக்தா:
ப்ரபவந்த்யுத்தரோத்தரம்"

(ஸங்கீதரத்நாகரம்)

23. (வ்யா) அந்த நரம்புகளில் குறுக்காகவுள்ள 22. நரம்புகளிலும் காற்றடிபட்டு நாதம் ஒன்றிர்க்கொன்று அதிகமாகவும், குறைந்தும் உண்டாகின்றன. அந்த நாதத்திற்குத்தான் ச்ருதியென்று பெயர். மந்திரஸ்தானம் 1-வது நரம்புமுதல் ச்ருதியை 1-வது நரம்புக்கு அதிநீச்சமென்றும், 2-வது நரம்பின் நாதம் உச்சமென்றும், 3-வது நரம்பின் நாதம் உச்சதரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போலவே மந்திரஸ்தானத்தை 2-வது நரம்பு முதலாகவைத்துக்கொண்டால் 3, 4-வது நரம்புகளின் ஸ்தானம் உச்சம், உச்சதரமென்று முறையே ஆகின்றன. இதைப்போலவே மற்றவைகளுக்கும் கணக்கிட்டுக்கொள்ளவும். ஆனால் 1-வது நரம்பிற்கும் கீழ் காற்றுப்போவதில்லையோ? அவ்வாறு காற்றுப் போனால் நாதம் உண்டாகாதோ? எனில் ப்ரும்மகிரந்தியின்கீழ் அதாவது உந்திக்குக்கீழ் காற்றை ஸஞ்சாரப்படுத்துவது யோகீச்வராளாலேயே கூடுமாதலாலும் தவிறவும் செவிக்கு அதன் ஓசை புலப்படாதாகையினாலும், அதைப்பற்றிச் சொல்லாமல் விடப்பட்டது.

"ஏவம்கண்டேதசாசீர்ஷே
ச்ருதித்வாவிம்சதிர்மதா"

(சங்கீதரத்நாகரம்)

24. இதைப்போலவே கண்டத்திலும், சிரஸிலும் மேலுள்ள நரம்புகளுக்கு குருக்கு நரம்புகள் 22. ஏற்பட்டிருக்கின்றன.

"வ்யக்தயேகுர்மஹேதாஸாம்
வீணாத்வந்த்வேநிதர்சனம்
த்வைவீணௌஸத்ருசௌகார்யா
யதாநாத:ஸமோபவேத்"

(சங்கீதரத்நாகரம்)

25. (வ்யாக்யானம்) இப்பொழுது சொல்லிவந்த ச்ருதியின் இலக்கணம் பரோக்ஷம். அதாவது கட்புலனுக்குத் தோன்றாது. இதை பிரத்தியக்ஷமாகப் பார்க்கவேணுமானால் காட்டுகிறேன். எப்படியெனில் இரண்டு வீணைகள் வேண்டும். அவைகள் ஒன்றோடொன்று மாறுபடாத அளவும் நரம்புகளும் உடையனவாக இருக்கவேண்டும்.

"தயோத்வாவிம்சதிஸ்தந்திரா:
ப்ரத்யேகம்தாஸுசாதிமா"

(ஸங்கீதரத்னாகரம்)

26. (வ்யா) இவ்விரண்டு வீணைகளையும் ஸமமாகச்செய்து கொண்டு வாசிக்கவேண்டியவர்கள் தங்களுக்கு ஸமீபத்திலிருக்கிற 1-வது வீணையினுடைய 22. நரம்புகளில் 1-வது நரம்பை

"கார்யாமந்திரதமத்வானு
த்விதீத்யோச்சத்வநிர்மனாத்
ஸ்யாந்திரந்தரதாச்ருத்யோ:
மத்யேத்வநிந்தராச்ருதே:"

(ஸங்கீதரத்னாகரம்)

27. (வ்யா) எவ்வளவு ஓசையுடனிருக்கில் செவிக்குக்கேட்குமோ அவ்வளவு குறைந்த ஓசையுடையதாகச்செய்து கொள்ளவேண்டும். இதன் அடுத்த தந்தியை அல்லது நரம்பை முதற்தந்திக்கு இருமடங்கு ஜாஸ்தியுள்ள நாதமாகச்செய்து கொள்ளவேண்டும். 3-வது தந்தியை 2-வது தந்தியின் நாதத்திற்கு இருமடங்கு ஜாஸ்தியாகச்செய்து கொள்ளவேண்டும். 4-வது தந்தியை 3-வது தந்தியின் நாதத்திற்கு இருமடங்கு ஜாஸ்தியாகச்செய்து கொள்ளவேண்டும்; இவ்வாறு செய்து வந்தால் 1 உயர்ந்த ஸ்வரத்திற்கு 4 ச்ருதி, அதாவது 1-வது தந்தியின் நாதத்திற்கு 15 மடங்கு ஜாஸ்தியுள்ள ச்ருதியே பெரிது, இதைக்காட்டிலும் பெரிய ச்ருதியுடைய ஸ்வரமாவது அல்லது 7 ச்ருதிக்குக்குறைந்த ஸ்வரமாவது கிடையாது. ஸ்வரங்கள் மேலே செல்லச்செல்ல கீழுள்ளவைகளை மந்திரமென்று சொல்லப்படும். இவ்வண்ணம் இரண்டு வீணைகளின் ஓசையையும் நரம்புமூலமாகக் கணக்கிட்டு நிறுத்தினால்



# இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

## உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. 〰〰 = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



### "சக்கனிராஜ" கீர்த்தனையின் சரணத்தை பல்லவிபோல்ப் பாடவேண்டியதற்கு கற்பனாஸ்வரங்கள்

| லகு. | | | த்ருதம். | த்ருதம். |
|---|---|---|---|---|
| 1. | கண்டிகி | ஸுந்த | ர * * *–நீ * * * * * * *–தா * * | * * * *–பா * * * * * *–மா * * |
| 2. * * * * = | | டை | ர * * *–நீ * * ச்ா * *–தா * * | நீ * * பா * *–தா * * பா * * |
| 3. மா * * = | | டை | ர * * *–ரீச்ா நீச்ா–தாநீ | பாதா–நீச்ாதாநீ–பாதா |
| 4. பாமா = | | டை | ர * * *–தாநீச்ா பாதாநீ | மாபா–தாநீச்ாநீ * * தா |
| 5. பாமா = | | டை | ர * * *_* * க்ாரீம்ாக்ாரீ | ச்ாநீ–ரீச்ா * * ச்ாநீதா |
| 6. பாமா = | | டை | ர * * *_* * சாநீரீசாகா | ரீமா–காபாமாதாபாநீ |
| 7. தாமா = | | டை | ர * * *_* * ரீகாமா பாதா | நீச்ா நீதா பாமா காரீ |
| 8. காமா = | | டை | ர * * *_* * மாகாரீ-பாமா | கா-நீதாபா-ச்ாநீதா-தா |
| 9. பாமா = | | டை | ர * * *_* * பநிதநிபத–மதபத | மப–கபமபகம–ரிமகமரிகசநி |
| 10. சரிகம = | | டை | ர * * *–சமகரிசநிதநிதநிசரி | கமபதநிச்–ரிக்ாரிச்நி–ரிச்ாநி |
| தபாம = | | டை | | |

(பத) ப = சக்கனி = அழகான

ராஜமார்க்கமுலு = ராஜபாட்டைகள்

உண்டக = இருக்க

ஸந்துல = சந்துகளில்

தூரனு ஏல = புகுவது ஏன்?.

ஓமனஸா = ஓ! மனமே!

அ = சிக்கனிபாலு = கெட்டியானபால்

மீகட = பாலேடு

உண்டக = இருக்க

சிய்யனு = மாமிசம்

கங்காஸாகரமு = கள்ளு

ஏல = எதற்காக?

ச = கண்டிக்கி = கண்ணுக்கு

ஸுந்தரதரமகு = விசேஷ அழகுபொருந்திய

ரூபமே = உருவத்துடன்கூடியதும்

முக்கண்டி = திரிநேத்திரனுடைய

நோட்ட = வாயில்

செலகே = விளங்குகின்ற

நாமமே = பெயருடையதும்

த்யாகராஜு = த்யாகராஜனுடைய

இண்டிகி = கிரகத்திற்கு

பாகநெலகொன்ன = நன்றாக நிலைகொண்டிருக்கிற

தெய்வமே = தெய்வமும்

இட்டுவண்டி = இப்பேர்ப்பட்ட

ஸ்ரீஸாகேத = ஸ்ரீஅயோத்தியில் (அவதரித்த)



ராமுனி = இராமனுடைய

பக்தியனே = பக்தியென்ற

(பொழி) ஓ! மனமே! கெட்டியானபால், பாலேடு இவைகளிருக்க மாம்சம், கள்ளு இவைகள் எதற்காக? கண்ணுக்கு விசேஷ அழகு பொருந்திய ரூபமும், திரிநேத்திரனுடையவாயில் விளங்குகின்ற நாமமும், த்யாகராஜனுடைய கிரகத்தில் நன்றாக நிலைகொண்டிருக்கிற தெய்வமுமான இப்பேர்க்கொத்த அயோத்தியில் அவதரித்த ஸ்ரீராமனுடைய பக்தியென்ற அழகான ராஜபாட்டையிருக்க சந்துகளில் புகுவது ஏன்?

---

ஜயந்த ஸ்ரீராகம்—ஆதிதாளம். அரைக்களைச்சவுக்கம் லகு 2-வது அக்ஷரத்திற்குப்பின்னுள்ள அரையிடத்தில் எடுப்பு.

ஆ = ச, சா—க, சு—ம, சு—த, கை—நி

அவ = ச, கை—நி, சு—த, ப, சு—ம, சா—க,

ப = மருகேலரா ஓராகவா =

அ = மருகேலசரா—சரூபபராத்

பரஸூர்யஸுதா—கரலோசன = மரு =

ச = அன்னிநீவனுச்சு—அந்தரங்கமுன

தின்னகாவெதகி—தெலிஸிகொண்டிநய்ய

நின்னேகானிமதி—நென்னஜாலநொருல

நன்னுப்ரோவவய்யா—த்யாகராஜநுத = மரு =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=******–பாமாபா ** மா | கா * சா *–நீ | சாகா ** மா |
| ******–ம ருகே ** ல | ரா * ஆ *–ஓ | ஓ ரா ** க |
| (1) தா ****= ஷை | கமபமகச–நீ | ஷை |
| வா ****= ஷை | ரா———ஓ | ஷை |
| (2) தநி ச்நி தா= ஷை | கா * சா | |
| வா——-= ஷை | ரா *--- | |
| அ=******=தாதாதா ** தா | தமதா ** தா | நீச்ா ** நீ |
| ******=ம ருகே ** ல | ச—ரா ** ச | ர ரு ** ப |
| (1) தநி ச்நி தா= ஷை | ஷை | ஷை |
| ப——-ர= ஷை | ஷை | ஷை |
| (2) நிச்க்ா **=க்ாக்ா ** க்ா | ச் க் ச்ா ** ச்ா | ச்ா ச் நி ச் க் ச்நி |
| ப–ராத் **=பரஸஒ் ** ய | ஸ–தா ** க | ர வோ–ச்சஅ– |
| தா ****=பாமாபா= | | |
| ஓ ****=ம ருகே= | | |
| ச=******=பா பா பா ** பா | மாமா ** மா | காசகமபமக |
| ******=அன்னிநீ ** வ | ஞுச்சு ** அ | ந்தர——ங்க |
| சா சா **=நீ நீ நீ **–ச ா | நிசகா ** ச ச | கா ச கமா கா |
| மு ன **=தின்னகா ** வெ | த–கி ** தெலி | வலிகொ–ண்டி |
| மா மா **= | | |
| னயா **=(அனுபல்லவிமாதரி) நின்னேகானி | மதி——நெ | ன்னஜால |
| னொருல =நன்னுப்ரோவ | வய்யா–த்யா | கரா ஜனு |
| தா =மருகேலரா | | |



## பல்லவிக்கு கற்பனஸ்வரங்கள்.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (1) மருகேல | ரா **** நீ | ** சா ** கா |
| (2) ** மா **= ஷை | ரா **** நீ | ** தா ** தா |
| (3) ** மா **= ஷை | ரா **** ச்ா | ** நீ ** தா |
| (4) ** மா **= ஷை | ரா **** நீ | சா நீ சா கா |
| (5) சா கா மா = ஷை | ரா **** தா | மா பாமா கா |
| (6) சா கா மா = ஷை | ரா **** ச்நி | தமபமகமகச |
| (7) கச நிச கம= ஷை | ரா **** தா | நிச்நிதநிதமத |
| (8) மப மக கம= ஷை | ரா **** நிநி | * ததமகமதத |
| (9) * மகச கம= ஷை | ரா **** தத | நிச்ாநிதமபம |
| (10) கச நிச கம= ஷை | ரா **** தநி | ச்நித–மபமகம |
| கா * ம கச—நிசகசகமகமதம | தா * தநிச்நிச் | க்ா * ம்க்ச்ா |
| * ச்நி தா ம=மருகேலரா= | | |

(பத) ப=பருகு=ஒளிப்பு (சொல்லா தொளித்தல்)
ஏலரா=ஏனய்யா?
ஓராகவா=ஓ!ரெகுவம்சத்திலுதித்தவனே!

அ=மருகேல=ஒளிப்பு எதற்காக?
சராசரரூபா=ஸ்தாவரஜங்கம வஸ்துக்களின் ரூபமானவனே!
பராத்பரா=மேலானதுகளில் மேலானவனே!
ஸூர்ய=சூர்யனையும்
ஸுதாகர=சந்திரனையும்
லோசன=கண்களாகவுடையவனே!

சர=அன்னி=எல்லாம்
நீவுஅனுச்சு=நீயே என்று
அந்தரங்கமுன=அந்தரங்கத்தில்
தின்னகா=நேர்வழியாக
வெதகி=தேடி(கண்டுபிடித்து)
தெலிஸிகொண்டினய்யா=தெரிந்து கொண்டேனயயா!
நின்னேகானி=உன்னையல்லாமல்
மதினி=மனது
என்னஜாலனு=எந்தக்கூட்டத்தையும்(பார்க்க)
ஒருல=வருந்துகிறது
நன்னு=என்னை
ப்ரோவவய்யா=காப்பாற்றய்யா!
த்யாகராஜனுதா=த்யாகராஜனல் துதிக்கப்பட்டவனே!

(பொழி) ஓ! ரெகுவம்சத்திலுதித்தவனே! த்யாகராஜனல் துதிக்கப்பட்டவனே! மேலானதிலும் மேலானவனே! சூர்ய சந்திரர்களை இரு கண்களாகவுடையவனே! ஸ்தாவரஜங்கம வஸ்துக்களின் ரூபமானவனே! அந்தரங்கத்தில் நேர்வழியாகத் தேடியதில் எல்லாம் நீயே யென்று தெரிந்துகொண்டேனய்யா! என் மனது உன்னையல்லாமல் மற்றெவையும் பார்க்க வருந்துகிறது. என்னிடம் ஒளிப்பு ஏனய்யா? என்னைக் காப்பாற்றய்யா!

# இராக லக்ஷணம்.

61-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## 11. ஸஹானா ராகம் 28-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்

ஆ=ச, ச-ரி, அ-க, சு-ம, ப, ச-த, கை-நி,
அவ=ச, கை-நி, ச-த, ப, சு-ம, அ-க, ச-ரி,

### இலக்கணம்.

"ஸஹானாராகஸ்துஸம்பூர்ண
ஷ்ஷட்ஜக்ரஹஸமன்வித:
ஆரோஹேதுபவக்ரஸ்ச்ச
ஙீயதேலெக்ஷ்யவேதிபி:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

இதன்பொருள்:— ஸஹானாராகம் ஸம்பூர்ணம், இது ஷட்ஜக்ரஹம், ஆரோஹத்தில் ப யென்ற ஸ்வரத்தை வக்ரமாகப் பாடவேண்டியது. லெக்ஷியத்தை யனுசரித்துத்தெரித்து பாடவேண்டியது.

குறிப்பு:— லெக்ஷ்யத்தைத்தெரிந்து பாடவேண்டியது என்று ச்லோகார்த்தமிருப்பதால் பெரியோர் பாடியிருக்கும் கீர்த்தனைகளின் ஸஞ்சாரப்படி இதற்கு ஆரோகத்தில் "ஸரிகமபமதாநிசா" யென்றும் அவரோகத்தில் "ஸநீதபமகமரிகரிச" யென்றும் பாடவேண்டியதாகிறது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சரிகமபமதா******நிச்ா****-ச்நீ****தபமகமரீ******கரிசா****=

(2) ரிகமதா****ப-மகமரீ****-கமதபமகமரீ****கமபா****-
பமதா****நிச்-ரீச்நீ****தபமகமரிசா******=

(3) பமதா******தாநிதாநி--பாதபாத-பமதநிச்ா****-

ச்நிரீ****ச்--ச்ாரீச்ாரீச்நீ******தப—தநிச்ாரீச்நீ******தபம—

ரிகமபதநீ****தபம--கா****மரீ****--ரீகரீகரிசா****=

(4) நிசரீக மகா****மரீ****கமபா****—நிதபா****—

பமதா****நீ****** ததபா****பமதா****தநிச்ாரீச்நிச்தா**நிதபா****—

பமதா****தநிச்ரீ****ச்—நீச்நீச்நிதபா****—பமதா****தநிச்ரீ******—

ரீக்ம்க்ா ****ம்ரீக்ரீச்—ச்நீ****ச்தபம—பமதபநிதபமகா****மரீ****—

பமகமரீ******கரிசசநீ******ரிசா******=

(5) ரிகமா****மா****—மாபமகா ****மரீ****பமபா****பா****—

பாதபபமமா****—மா****--மாபமாப ககா**மரீ****—
க

கமபா****தநீ**தபா****—பமதா****தா****தாநிதாநி—பாத பாத—

மபமதா****ச்நீ****ச்ாரீச்நிச்தா****—தநிச்ா******ரீநிச்தா****—

தநிச்ரீ****--ரீக்ரீக்--ச்ரீச்ரீக்மா****பம் க்ா****—க்ாமக் ரீக்ரீச்ா****—

ச்ாரீச்நீச்நிதா****—பாதபமாபமகா****--காமக ரீகரிசா****—

நீசரீக மகா****மரீ****—கரிசநீ****—தநீ****ரிசா******=

## 12. முகாரி ராகம் 20-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்

ஆ=ச, ச—ரி, சு—ம, ப, ச—த,

அவ=ச, கை—நி, சு—த, ப, சு—ம, சா—க, ச—ரி,

### இலக்கணம்.

"முகாரீராகஸ்ஸம்பூர்ணஸ்ச்சாரோஹேகநிவர்ஜித:
ஷட்ஜக்ரஹஸ்ஸமாயுக்தஸ்ஸர்வகாலேஷுகீயதே"

(சதுர்தண்டிப்ரகாசிகா)



இதன்பொருள்:— முகாரிராகம் ஸம்பூர்ணம், ஆரோஹத்தில் க, நி, இந்த ஸ்வரங்களை நீக்கவேண்டியது ஷட்ஜக்ரஹம், எல்லாக்காலங்களிலும் பாடத்தக்கது.

குறிப்பு:— இந்த ராகம் 20-வது மேளகர்த்தாவில் ஜன்யமானதினல் சுத்த தைவதம் எப்பொழுதும் உபயோகப்படுத்தவேண்டியதிருக்க, ஆரோஹணத்தில் சதுர்ச்ருதி தைவதமும் அவரோஹணத்தில் சுத்ததைவதமுமாக வெகுகாலமாக எல்லோரும் அனுபவத்தில்ப் பாடிவருவதால் அதையனுசரித்து இங்கு ஆரோஹண, அவரோஹண ஸ்வரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா******ரிமப தச்ா****ச்ா****—ச்நிச்ாரீச்நீ**** தபா******—

பமதபமகா****ரிரீ****—சாரிக ரீகசா******=

(2) ரிமபதநீ******தபா******—பமதபா******நிதப—பமபாத பமா******—

மாபமாபமகா****ரிரீ****—சாரிக ரீகசா****—சாரிசநீ****—

நிதா****சா******=

(3) சரிமா****மா****—மபதபபமகா****ரிரிமபா****பா****—

பமநீ****நிததா****—பமபாதபமா ****ப—மநிதபமகரீ******—

ரிமபதச்ா****—ச்தரீ**ச்நிதபா****பமநீ**தபமகா**ரி—

சாரிக ரீகசா****நிதா**சா******=

(4) பமநிதநீ****நிததா**ப—மபதபா****நிதப—பமபாதப பமமா****கரி—

ரிமபதநீ****மபதநீ****தபதநீ****—பதநீ****தபநிதா****ப—

பமதபா****நிதபமகரி—ரிமபதச்ா******—ச்நிதா****—தச்தச்ரீ****க்—

ச்ாரீக்ரீக்சா ****ச்ாரீச்நீ**நிதா**—பதச்ா****ரீ—ச்ாரீச்நீ****தபா****—

மபதபா****த—மநிதபமகா****ரிரீ****சாரிகரீகசா****—
நிதா**சா****** =

(5) ரீ****கரிச—மகரிச—பமகரிச—தபமகரிச—நீ**தபமகரிச—
ச்ா****நிதபமகரிச—ரீ****ச்நிதபமகரிச—க்ரிம்க்ர**ரிச்நிதபமகரிச—
ரிசமரிபமதபநிதரிச்க்ரிம்ா******க்ரிரிச்ச்நிநிததபபமமககரிரிச—
ரிமபதநீ*த—பதச்ரிம்ா*க்—ரிக்ச்ரிநீ*த—பதமபகா*ரி—
சரிசா****ரிநீ**நிதா**சா****** =

### 13. மாயாமாளவகௌள—15-வது மேளகர்த்தா ராகம்.

ஆ = ச, சு—ரி, அ—க, சு—ம, ப, சு—த, கா—நி,
அவ = ச, கா—நி, சு—த, ப, சு—ம, அ—க, சு—ரி,

### இலக்கணம்.

"பூர்ணோமாளவகௌளாக்ய
ஸ்ஸக்ரஹோகீயதேஸதா"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

இதன்பொருள்:— மாயாமாளவகௌளராகம் ஸம்பூர்ணம், ஷட்ஜக்ரஹம், இந்த ராகம் எந்தக்காலத்திலும் பாடத்தக்கது.

குறிப்பு:— இதைத்தவிர மற்றும் ராகங்களின் ஸ்வரஸ்தானங்களில் அன்னிய ஸ்வரஸ்தானங்கள் கலப்பு உண்டாவதினால் அதாவது சதுர்ச்ருதி ரிஷபத்திற்கு சுத்தகாந்தார ஸ்தானமும், ஷட்ச்ருதி ரிஷபத்திற்கு ஸாதாரண காந்தார ஸ்தானமும், சதுர்ச்ருதி தைவதத்திற்கு சுத்த நிஷாதஸ்தானமும், ஷட்ச்ருதி தைவதத்திற்கு கைசகி நிஷாதஸ்தானமுமாக ஏற்படுவதினால் ஆரம்ப அப்பியாசிகளின் மனதிற்குக் குழப்பமுண்டாகுமென்று கருதி கலப்பில்லாத ஸ்வரஸ்தானங்களைப்பெற்ற இந்த ராகத்தில் ஸ்வராவளி, ஜெண்டைவரிசை, அலங்கார முதலான அப்பியாச பாடங்களை ஆன்றோர் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

இன்னும்வரும்

பத்திராதிபர்.

## நீதி

### 32-வது பக்கத்தின் தொடர்ச்சி.

ஸந்தப்தாயஸிஸம்ஸ்திதஸ்யபயஸோநாமாபிநச்ரூயதே
முக்தாகாரதயாததேவநளினீபத்ரஸ்திதம்த்ருச்யதே
அந்தஸ்ஸாகரசுக்திமத்யபதிதம்தன்மௌக்திகம்ஜாயதே
ப்ராயேணாதமமத்யமோத்தமஜுஷாமேவம்விதாவ்ருத்தய: (8)

(பொருள்) நன்றாய்ப் பழுக்கக்காய்ந்த இரும்பில் ஒருதுளி தண்ணீர் விட்டால் அந்தத்தண்ணீரின் பெயர்கூடத் தெரியாமல் போய் விடுகிறது. அந்தத் துளியே ஒரு தாமரையிலையின் நடுவிலிருந்தால் பார்வைக்கு ஒரு முத்துப்போல காணப்படுகிறது. அதே துளியானது சமுத்திரமத்தியிலுள்ள ஒரு முத்துச்சிப்பிக்குள் விழுந்தால் உண்மையான முத்தாகவே ஆகிவிடுகிறது. ஆகையால் அதம, மத்யம, உத்தம குணங்களையடைந்தவர்களின் நடைகளிவ்விதமாக இருக்கின்றன. (மனிதர்களுக்கு மேற் சொன்ன குணங்களுண்டாவது சேர்க்கையாலேயேயன்றி வேறல்ல).

ய: ப்ரீணயேத்ஸுசரிதை: பிதரம்ஸபுத்ரோ
யத்பர்த்துரேவஹிதமிச்சதிதத்களத்ரம்
தன்மித்ரமாபதிஸுகேசஸமக்ரியம்யதேதத்
ரயம்ஜகதிபுண்யக்ருதோலபந்தே. (9)

(பொருள்) உலகத்தில் (பெற்றதெல்லாம் பிள்ளையாமா) தன்னுடைய நன்னடவடிக்கைகளால் தகப்பனைச் சந்தோஷப்படுத்துபவனே பிள்ளை. தன் நாயகனுக்கு நன்மையையே எப்போதும் விரும்புபவளே குலமகள். "குலமகட்கழகு தன் கொழுநனைப்பேணுதல்" ஆபத்துக்காலத்திலும், சுகமுண்டானகாலத்திலும், நம்மிடம் சமமாய் நடந்துகொள்பவனே உண்மையான நண்பன். ஆகையால் இம்மூன்றையும் உலகத்தில் புண்ணியவான்களே அடைகிறார்கள்.

நம்ரத்வே நோன்னமந்த: பரகுணகதனைஸ்வான் குணான்க்யா
[பயந்த

ஸ்வார்த்தான்ஸம்பாதயந்தோவிதத ப்ரதுதராரம்பயத்நா: பரார்த்தே
க்ஷாந்த்யைவாக்ஷேபருக்ஷாக்ஷரமுகரமுகான் துர்ஜனான்
துக்கயந்தஸ்ஸந்தஸ்ஸாச்சர்யசர்யாஜகதிபஹுமதா: கஸ்யநாப்யர்ச்சநீயா: (10)

(பொருள்) நல்லோர்கள் உலகத்தில் எல்லோரிடமும் மிகுந்த வணக்கமுடையவர்களாயிருப்பதால் இவர்களையும் எல்லோரும் வணங்குகிறார்கள். "பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்" என்றபடி பிறரிடமுள்ள தீக்குணங்களை எல்லாம் மறைத்து அவர்களிடமுள்ள அணுவளவு நற்குணத்தையும், மலையளவாய்க் கொண்டாடுவதால் தங்களைப்பிறர் கொண்டாடும்படி நடந்து கொள்ளுகிறார்கள். இதரர்களுக்கு ஆக வேண்டிய அரிய பெரியகாரியங்களைத் தங்களுடையதாக நினைத்துத் தங்களால் கூடிய பிரயத்னங்களுஞ்செய்து அக்காரியத்தை முடித்துத் தங்கள் சொந்த காரியம் முடிவுற்றதுபோல உள்ளங்களிக்கிறார்கள். கெட்டவர்கள் தங்களைக்குறித்து ஏதாவது நிந்தையான வார்த்தைகள் பேசினால் அதைத் தாங்கள் கேட்டுக்கொண்டு பொறுமையாயிருப்பதினாலேயே அக்கெட்டவர்களைத் துக்கிக்கும்படி செய்கிறார்கள். ஆகையாலிவ்விதமான ஆச்சரியப்படத் தக்க குணங்களுடன் கூடிய நல்லோர்களை இவ்வுலகில் யார்தான் கொண்டாடமாட்டார்கள்! யார்தான் பூஜிக்கமாட்டார்கள்!.

## பரோபகாரம்.

பவந்திநம்ராஸ்தரவ: பலோத்கமை:
நவாம்புபிர்தூரவிலம்பினோகனா:
அநுத்ததாஸ்ஸத்புருஷாஸ்ஸம்ருத்திபி:
ஸ்வபாவஏவைஷபரோபகாரிணாம். (1)

(பொருள்) நல்லோர்களது சுபாவம் பரோபகாரத்தையே பலனாகவுடையதாதலின் நல்லோரியல்புக் கடுத்துப் பரோபகாரத்தைச் சொல்லுகிறார். பலா, மா, முதலிய விருக்ஷங்கள் விசேஷமான பழங்களையுடையவைகளாயிருந்து அப்பழங்களைத் தாங்கமுடியாது வளைந்து மிகுந்த



வணக்கத்துடன் இதரர்களுக்கு அப்பழங்களையுதவுகின்றனவே யன்றித் தாங்களே தின்றுகளிப்பதில்லை. நீருண்ட கார்மேகமானது ஆகாயத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு ஜனங்களுக்கு மழையை வருஷித்து உலகத்தைக் களிப்பிக்கின்றதேயன்றிதான் ஒன்றும் பயனடைவதில்லை. அதுபோலவே நல்லோர்கள் மிகுந்த ஸம்பத்தையடைந்தாலும் யாசகர்களுக்குதவுவதிலேயே நோக்கமுடையவர்களே யன்றி சுயநலத்தைக்கருதார்கள். இதுதான் பரோபகாரிகளின் சுபாவம்.

ச்ரோத்ரம்ச்ருதேநைவநகுண்டலேன
தானேநபாணிர்நதுகங்கணேந
விபாதிகாய: கருணாகுலாநாம்
பரோபகாரேணநசந்தனேந. (2)

(பொருள்) தயாளுக்களது செவிகள் வேதசாஸ்திரங்களைக் கேட்பதால் அலங்கரிக்கப்படுமேயன்றி குண்டலம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்படமாட்டா. அவர்களது கைகள் தானத்தால் அலங்கரிக்கப்படுமேயன்றி, கங்கணம் முதலிய நகைகளால் பிரகாசியா. அவர்களுடைய சரீரம் பரோபகாரத்தால் பிரகாசிக்குமேயன்றி, சந்தனம், புஷ்பம் முதலியவைகளால் பிரகாசியாது.

பத்மாகரந்தினகரோவிகசீகரோதி
சந்த்ரோவிகாஸயதிகைரவசக்ரவாகம்
நாப்யர்த்திதோஜலதரோபிஜலந்ததாதி
ஸந்தஸ்வயம்பரஹிதேவிஹிதாபியோக: (3)

(பொருள்) சூரியன் பிரார்த்திக்கப்படாமலே தாமரை ஓடையைப் பிரகாசிக்கச் செய்கிறான். சந்திரன் ஒருவராலும் வேண்டப்படாமல் நெய்தற் பூவையும், சக்ரவாளபக்ஷிகளையும் களிப்பிக்கின்றான். மேகமானது யாராலும் வேண்டப்படாமலே உலகத்திற்கு வேண்டிய நீரைத்தருகின்றது. அதுபோல நல்லோர்கள் பிறரால் வேண்டப்படாமலே உலகத்திற்குத் தங்களாலான உதவியைச் செய்வார்கள்.

ஏதேஸத்புருஷா: பரார்த்தகடகாஸ்வார்த்தான்பரித்யஜ்யயே
ஸாமான்யாஸ்து பரார்த்தமுத்யமப்ருதஸ்வார்த்தாவிரோதேன [யே
தேமீமானுஷராக்ஷஸா: பரஹிதம்ஸ்வார்த்தாயநிக்னந்தியே
யேதுக்னந்திநிரர்த்தகம்பரஹிதம்தேகேஜாநீமஹே. (4)

(பொருள்) உலகத்தில் தன் சொந்தகாரியத்தையே கவனியாமல் பிறருக்குதவி செய்வதையே பெரிதாய் நினைத்து நடப்பவர்கள் உத்தமர்களெனப்படுவர். தன்காரியத்தையும் கெட்டுப்போகாமல் கவனித்துக் கொண்டு அன்னியர்கள் காரியத்தை நிறைவேற்றுபவர் மத்திமரெனப் படுவர். தன்காரிய நிமித்தம் பிறருடைய காரியத்தைக் கெடுப்பவர்கள் மனிதருக்குள் இராட்சதரெனப்படுவர். தனக்கு யாதொரு பயனுமில்லாமலே பிறருக்குக்கெடுதி செய்பவர்கள் யாரோ அவர்கள் பெயர் தெரியவில்லை. அதாவது, அவர்கள் பரமீசர்களாம்.

பாபான்னிவாரயதியோஜயதே ஹிதாய
குஹ்யம்நிகூஹதிகுணான்ப்ரகடீகரோதி
ஆபத்கதஞ்சஜஹாதிததாதிகாலே
ஸன்மித்ரலக்ஷணமிதம்ப்ரவதந்திஸந்த: (5)

(பொருள்) நல்ல நண்பர்களின் இலக்ஷணமாவது, தன்னுடைய நண்பன் ஏதாவது பாபமான காரியத்தைச் செய்யப்புகின் அதுபாபம் என்பதை அவனுக்குத் தெரிவித்து அக்காரியத்தை அவன் செய்யாதிருக்கும்படி செய்வான். அதோடு அவனுக்கு நன்மையைக்கொடுக்கும் காரியம் இன்னதென்பதையும் தெரிவித்து அதையே செய்யும்படி தூண்டுவான். தன் நண்பனிடம் வெளியிட்டுக் காட்டக்கூடாத துர்க்குணங்கள் யாதேனுமிருப்பின் அவைகளை வெளியிடாது காப்பாற்றுவதுடன் அவனிடமுள்ள நற்குணங்களைப்பற்றிப் பலரிடம் கொண்டாடுவான். அவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால், அச்சமயத்தில் நமக்கென்னவென்று விட்டுக்கொடுக்காமல், அவனுக்கு வேண்டிய உதவியும் புரிவான். பணவிஷயமாய்த்தன் நண்பனுக்குதவி செய்யவேண்டியதருணம் வாய்த்தபோதும் தன்னிடமுள்ளதை ஒளித்துவைக்காமல் வேண்டுபளவு கொடுத்துதவுவான். இவைகளே நல்ல நண்பர்களது அடையாளங்களாம்.

க்ஷீரேணாத்மகதோதகாயஹிகுணாதத்தா: புராதேகிலா:
க்ஷீரோத்தாபம வேக்ஷ்யதேன பயஸாஸ்வாத் மாக்ருசாநௌ [ஹுத:
கந்தும்பாவகமுன்மனஸ்ததபவத்த்ருஷ்ட்வாதுமித்ராபதம்
யுக்தம்தேநஜலேனசாம்யதிஸதாம்மைத்ரீபுனஸ்த்வீத்ருசீ. (6)

(பொருள்) பாலானது தன்னுடன் சேர்ந்த தண்ணீருக்கு முதலில் வெண்மைநிறம், மாதுர்யம் முதலிய தன்னுடைய குணங்களைக்கொடுக்கிறது. பாலை அடுப்பிலிட்டுக் காய்ச்சும்பொழுது அதைப்பார்த்துத் தண்ணீர் தானும் நெருப்பில் காய்கிறது. அப்போது தன்னால் தன்னுடன் கூடிய தண்ணீரும் நெருப்பில் காய்கிறதே என்று நினைத்துப் பாலானது அந்தவருத்தம் பொறுக்காமல் தான் நெருப்பில்விழ எத்தனிக்கிறது. அப்போது மறுபடியும் தன்னுடன் தண்ணீர் வந்துசேருவதைப் பார்த்துத் தான் அடங்கிவிடுகிறது. உலகத்தில் நல்லோர்களது நட்பு இவ்விதமேயாம். பாலைக்காய்ச்சுமுன் தண்ணீர்கலந்து காய்ச்சுவதும் அப்போது தண்ணீர் சுண்டியவுடன் பால் பொங்குவதும், அப்படிப்பொங்கும் பால் அடங்குவதற்காக அதில் தண்ணீர் தெளிப்பதும் உலகத்தில் பிரஸித்தம்.

இதிஸ்வபிதிகேசவ: குலமிதஸ்ததீயத்விஷாம்
இதச்சசரணார்த்திநாம்சிகரிணாம்கணாச்சேரதே
இதோபிபடபாநலஸ்ஸஹஸமஸ்தஸம்வர்த்தகை
ரஹோவிததமூர்ஜிதம்பரஸஹம்சஸிந்தோர்வபு: (7)

(பொருள்) ஸமுத்திரத்தில் ஓரிடத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் யோகநித்திரை புரிகின்றார். இன்னொரிடத்தில் அம்மகாவிஷ்ணுவின் விரோதிகளான ஹிரண்யாக்ஷன் முதலியவர்களின்கூட்டம் வசிக்கின்றது. வேறோரிடத்தில் சரணமடைந்தவர்களான மைநாகம் முதலிய பர்வதங்கள் நித்திரை புரிகின்றன. மற்றோரிடத்தில் புஷ்கலாவர்த்தம் முதலிய மேகங்

களும் படபானலம் முதலியவைகளுமிருக்கின்றன. ஆகையால் சமுத்திரம் மிகவும் விஸ்தாரமாயும், ஊர்ஜிதமாயும், பாரங்களை வஹிப்பதாயுமிருக்கின்றது. இவ்விதமே பெரியோர்களும் பலவிதமாய் உலகத்திற்குதவுவார்கள்.

ஜாத: கூர்மஸ்ஸஏக: ப்ருதுபுவனபாராயார்ப்பிதம்யேநப்ருஷ்டம்
ச்லாக்யம்ஜன்மத்ருவஸ்யப்ரமதிநியமிதம்யத்ரதேஜஸ்விசக்ரம்
ஸஞ்சாதவ்யர்த்தபக்ஷா: பரஹிதகரணே நோபரிஷ்டான்னசா [தோ
ப்ரம்மாண்டோதும் பராந்தர்மசகவ தபரேஜந்தவோ ஜாதநஷ் [டா: (8)

(பொருள்) உலகத்தில் எத்தனையோ ஆமைகள் பிறந்தாலும் எந்த ஆமையின் முதுகானது பெரிய உலகத்தைத் தாங்குவதற்குதவிற்றோ அதன் பிறவியே மேலானது. எத்தனையோ மனிதர்கள் பிறந்தாலும் எந்தத்துருவனுடைய ஆதீனத்தில் சிம்சுமாரசக்கரமானது இருந்து சுழன்றுகொண்டிருக்கின்றதோ அந்தத் துருவனதுபிறவியே பிறவி. பிறருக்குதவி செய்ய மனமில்லாதவர்களுக்கு மேலுலகத்திலும் கீழுலகத்திலும் பெருமையேயில்லை. அப்படியிருப்பவர்கள் பிரம்மாண்டம் என்னும் அத்திப்பழத்திற்குள்ளிருக்கும் ஜந்துக்களைப்போல் உபயோகமில்லாதவர்களே.

த்ருஷ்ணாம்சிந்திபஜக்ஷமாம்ஜஹிமதம்பாபேரதிம்மாக்ருதா
ஸ்ஸத்யம்ப்ருஹ்யநுயாஹிஸாதுபதவீம் ஸேவஸ்வவித்வஜ்ஜ [னம்
மான்யான்மானயவித்விஷோப்யநுநயப்ரக்யாபயப்ரசாயம்
கீர்த்திம்பாலயதுக்கிதேகுருதயாம்ஏதஸ்ஸதாம்சேஷ்டிதம் (9)

(பொருள்) பரதாரம், பரதனம் முதலியவைகளில் ஆசைவையாமல் வைராக்கியத்துடனிரு. எவ்விதமான ஆபத்துக்கள் வரினும் பொறுமையுடனிரு. கோபங்கொள்ளாதே! வித்தை, தனம் முதலியன மெத்தவுண்டென்று மதங்கொள்ளாதே! நரகத்திற்குக் காரணமான பாபங்களைச் செய்யாதே! எப்போதும் உண்மையே பேசு. தர்மசாஸ்திரங்களில் கூறியுள்ள மார்க்கத்தை அநுஸரித்துநட! தேசசஞ்சாரம் செய்பவனது அறிவும், வித்துவான்களைச் சேவிப்பவர்களுடைய அறிவும், தண்ணீரில்விழுந்த எண்ணெய்த் திவலையைப்போல விஸ்தாரமாய்ப் பரவுமாதலின் பண்டிதர்களைச்சேவி! பூஜ்யர்களைப் பூஜியாதவர்களுக்கும் பூஜிக்கத்தகாதவர்களைப்பூஜிப்பவர்களுக்கும், தனம் தர்மம் முதலியன குறைந்து அபகீர்த்தியுமேற்படுமாதலால் பூஜிக்கத்தக்கவர்களைப் பூஜித்து கௌரவப்படுத்து! சத்துருவையும் மித்திரனுய்நினை! பிறவிக்குப்பயனாகிய கீர்த்தியைச்சம்பாதி! துக்கப்படுபவர்களிடம் இரங்கு! மேற்கண்டவைகளெல்லாம் நல்லோர்களினிலக்கணம்.



## தைர்யபத்ததி.

மனஸிவசஸிகாயேபுண்யபீயூஷபூர்ணா
ஸ்த்ரிபுவனமுபகாரச்ரேணிபி: ப்ரீணயந்த:
பரகுணபரமாணூன்பர்வதீக்ருத்யநித்யம்
நிஜஹ்ருதிவிகஸந்தஸ்ஸந்திஸந்த: கியந்த: —. (1)

(பொருள்) மனோவாக்காயங்களில் புண்யமாகிய அம்ருதம் நிறைந்தவர்களும், தாங்கள் செய்யுமுபகாரங்களால் மூன்றுலோகங்களையும் களிக்கச்செய்பவர்களும், பிறரிடமுள்ள அணுவளவு குணத்தையும் மலையளவாய் நினைத்துள்ளங்களிப்பவர்களுமான நல்லோர்கள் உலகத்தில் மிகச்சிலரே.

ரத்னைர்மஹாப்தேஸ்துதுஷுர்நதேவா:
நபேஜிரேபீமவிஷேணபீதிம்
ஸுதாம்விநாநப்ரயயுர்விராமம்
நநிச்சிதார்த்தாத்விரமந்திதீரா: —. (2)

(பொருள்) பெரிய கடலிலுள்ள ரத்னங்களால் தேவர்கள் சந்தோஷமடையவில்லை. பயங்கரமான விஷத்தைக்கண்டு பயமடையவுமில்லை. அம்ருதத்தையடையும் வரையில் சலிப்பின்றி கடலைக்கடைந்து கடைசியில் அதைப்பெற்றார்கள். ஆகையால் தீரர்கள் ஒரு காரியத்தில் பிரவேசித்

தால் அது முடிவுபெறுகிறவரையில் அக்காரியத்தைக் கைவிடமாட்டார்கள்.

ப்ராரப்யதேநகலுவிக்னபயேனநீசை:
ப்ராரப்யவிக்னநிஹதாவிரமந்திமத்யா:
விக்னைர்முஹுர்முஹுரபிப்ரதிஹன்யமாநு:
ப்ராரப்தமுத்தமகுணாபரித்யஜந்தி॥. (3)

(பொருள்) நீசர்கள், ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அதற்குமத்தியில் ஏதாவது இடையூறுகள் நேறுமோவென்ற பயத்துடன் அதை ஆரம்பிக்காமலே யிருந்துவிடுவார்கள். மத்திமர்கள் காரியத்தையாரம்பித்து மத்தியில் ஏதாவது விக்கினங்கள் நேரிடின் உடனே அதை விட்டுவிடுவார்கள். உத்தமர்கள் தாங்கள் உத்தேசித்த காரியங்களுக்கு எவ்விதமான இடையூறுகள் நேரினும் கொஞ்சமேனும் மனச்சோர்வின்றி அக்காரியம் முடிவுபெறும் வரையில் விடாமுயற்சியுடனிருப்பார்கள்.

க்வசித்ப்ருத்வீசய்ய: க்வசிதபிசபர்யங்கசயன:
க்வசிச்சாகாஹார: க்வசிதபிசசால்யோதனருசி:
க்வசித்கந்தாதாரீக்வசிதபிசதிவ்யாம்பரதரோ
மனஸ்வீகார்யார்த்தீநகணயதிதுக்கம்நசசுகம்॥. (4)

(பொருள்) ஆரம்பித்த காரியத்தை எப்படியேனும் முடிப்பதென்றும் உறுதியுள்ளவன் சில சமயத்தில் வெறுந்தரையிலும் சில சமயம் உயர்ந்த பஞ்சுமெத்தையிலும் படுப்பான். சில சமயம் காய்கறிகளையும் சில சமயம் உயர்ந்த சம்பா அரிசிச்சாதத்தையும் புசிப்பான். சில சமயம் கிழிந்த கந்தைகளையும் சில சமயம் உயர்ந்த வஸ்திரங்களையும் தரிப்பான் இவ்விதமாக கார்யத்திற் கண்ணாயிருப்பவன் சுகதுக்கங்களைக் கவனியான். இவ்விஷயமானது "மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார், செவ்வி, அருமையும்பாரார் அவமதிப்புங்கொள்ளார் கருமமே கண்ணாயினர்" என்ற செய்யுளாலும் தெற்றென விளங்குகின்றது.

இன்னும் வரும்

Ramachandra Iyer.

# அஞ்ஞான குருவின்கதை.

## 30-வது பக்கத்தின் தொடர்ச்சி.

தாயம்மை:— ஹே! தேவி! அம்பிகே! உனக்கு அனேக நமஸ்காரஞ்செய்கிறேன். நானும் உன்னுடைய கோவிலுக்குப் பாத்தியப்பட்ட ஓர் ஸ்திரீ என்னுடைய விருத்தாந்தங்கள் யாவும் ஞானக்கண்ணால் நீயேயறிந்துகொள்ளக்கூடிய தேவதையானபோதிலும் பிறகு நான் சொல்லுகிறேன். எனக்கு ஓர் வரம் தருவதாக வாக்களிக்கவேண்டும்.

தேவி:— ஏ பெண்ணே! நான் கேட்ட கேள்விக்கு யாதொரு உத்தரமும் சரியாகச்சொல்லாமல் வரம் தரவேணுமென்று யட்டிலும் வற்புறுத்துகிறாயா? ஸஹபாஷ்! என்னதைரியம்! ஜல்தியாகக் கதவைத்திறக்கிறாயா அல்லது என்னுடைய சொரூப விசேஷத்தை ஒரு நொடிப்பொழுதில் காண்பிவிக்கட்டுமா?

தாயம்மை:— ஹே தேவீ! இச்சென்மத்தில் இச்சொற்பவயதிற்குள்ளாக உலகத்திலுள்ள கொடுந்துயரமுழுவதும் 2 தினத்திற்குள் அநுபவித்தாகிவிட்டது. இனி எனக்கு உலகத்தில் பயந்தரத்தக்கது எதுவுமில்லை. பிராணனை விடவும் தற்சமயம் சித்தமாகயிருக்கிறேன் கடைசியாக உயிரினும் பெரிது வேறொன்றுளதோ? உன்னால் என்னை எவ்விதத்திலும் பயமுறுத்த இயலாது. என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி நீ நடவாத விஷயத்தில் உன்னுடைய தண்டனைக்கு முன்னாடியே எனது உயிரை உன்னுடைய ஸன்னிதானத்தில் இப்பொழுதே பலிகொடுக்கத் தயாராகயிருக்கிறேன்.

தேவி:— ஆஹா! பெண்மணீ! உனது மனோ நிலையையறிந்தேன் உன்னுடைய விருத்தாந்தங்கள் முழுமையும், நீ யாரென்பதும் எனக்குத் தெரியும் நீ சொல்லுவது முற்றிலும் சரியே, உனக்குவேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம்!

தாயம்மை:— ஹே தேவீ! பக்தர்களின் மனோரதங்களை பூர்த்தி செய்பவளே! ஆபத்துக்காலத்தில் காப்பாற்றப்பட்டவளே! அனாதைகளை

ரக்ஷிக்கப்பட்டவளே! துஷ்டர்களை சங்கரிப்பவளே! மனமிறந்தவிடத்தே உண்டாகும் அருட்ஜோதியே! கருணைக்கடலே! யான் கேட்கும் வரம் ஒன்றே உளது அதாவது எனக்குண்டாகும் ஆபத்துக்காலங்களில் நீ முன்னின்று அவையனைத்தும் தீர்த்து என் மனங்குளிரச் செய்யவேண்டுவது ஒன்றேயாகும்.

தேவி:— பக்திபுட் சிறந்த பெண்மணீ! அவ்வாறே செய்கின்றேன். இன்னும் ஓர் வார்த்தை உன்னிடம் ஜல்தியில் சொல்லவேண்டும் சீக்கிறமாகக்கதவைத்திறந்துவிடு! தாயம்மை உடனே கதவின் தாளைத்திறந்து தேவியின் இருபாதங்களையும் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு தன் மனம் உருகி தேவியை துதித்து ஆனந்தித்து எழுந்திருந்தாள். தேவி தாயம்மையை நோக்கி குழந்தாய்! இனி உனக்கு க்ஷேமமுண்டாகும்! நீ இச்சென்மத்திலடையவேண்டிய துன்பம் முழுமையும் அனுபவித்தாகிவிட்டது. ஆனால் தற்சமயம் உன்னுடைய பிதா அரசன் உன்னைப்பற்றிய சோகத்தினால் மூர்ச்சித்து கீழேவிழுந்து கிடக்கிறான். என்னுடைய விபூதி பிரசாதத்தையும் இந்த பிரம்புக்கழியையும் கொண்டுபோய் அவனுடைய சரீரத்தில் விபூதியைப்பூசி கழியினால் பாதாதிகேசம்வரை மூன்றுதடவை தடவிக்கொடுப்பாயேயாகில் உறங்கி விழித்தவன்போல் எழுந்திருப்பான், நீ பயப்படவேண்டாம், என்று சொல்லி விபூதியையும் பிரம்புக்கழியையும் தாயம்மையிடம் கொடுத்துவிட்டு தேவி அந்தர்த்தானமானாள். உடனே தாயம்மை தேவி மறைந்துவிட்டதை நினைத்து சிறிதுநேரம் திக்பிரமைகொண்டவளாகயிருந்து பிறகு மனதை ஸமாதானஞ்செய்துகொண்டு இனிமேல் நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றியும் தன்னுடைய அருமை பிதா தன்னிமித்தமாக இவ்வாறு மூர்ச்சித்துப்போகும்படி நேர்ந்ததைப்பற்றியும் ஆலோசித்துக் கொண்டிருந்தாள். இச்சமயம் காலை 8 மணியாகிவிட்டது கொலையாளி கருப்பண்ணனும் வெய்யிலின் உஷ்ணத்தால் சரீரத்தில் காந்தலெடுத்தபிறகு உறக்கந்தெளிந்து எழுந்து தாயம்மையிடம் கோவிலுக்கு வந்துசேர்ந்தான். தேவநகர் என்ற நாட்டை அரசாண்டுவந்த மயூரனென்ற ஓர் சிற்றரசனின் குமாரனாகிய கோலாஹலன் என்று பெயருடைய இளவரசன் வேட்டையாடிக்கொண்டு அவ்விடம் கோவிலுக்கு வந்துசேர்ந்தான். அதிசுந்தர ரூபத்துடன் விளங்கும் இப்பெண்மணி இந்தக் காட்டுக்கோவிலினுள் தனிமையாகயிருப்பதைக்கண்டு



பலவாறு யோசனை செய்தான். கடைசியாக இவள் ஏதோ ஓர் ராஜகன்னிகையாக யிருக்கவேண்டுமென்றும், ஆனாலிவ்வாறு இந்த இடத்திற்கு வரத்தகுந்த காரணமேதேனுமிருக்கக்கூடுமென்றும், அதை அவளிடம் நேரில்க் கேட்டாலொழிய எதார்த்தத்தைத் தெரிந்துகொள்ள சாத்தியப்படாதென்றும் தீர்மானித்தான். பிறகு தாயம்மையை நோக்கி ஏ பெண்ணே! உன்னைப்பார்க்கும்பொழுது ஓர் ராஜவம்சத்தைச் சேர்ந்தவளாகவும் ஆனால் மிகவும் கஷ்டத்தை யனுபவித்து அதனால் வியாகூலத்தையடைந்திருப்பதாகவும் காணப்படுகிறதே? நீ வசிக்குமிடம் யாது? இந்த இடத்தில் நீ ஒண்டியாக வரக்காரணமென்ன? அதன் விவரத்தை எனக்குத் தெரிவிப்பாயாகில் என்னால் செய்யக்கூடிய உதவியைச் செய்ய சித்தமாயிருக்கிறேனென்றான். அதைக்கேட்ட தாயம்மை அரசனை நோக்கி தாங்கள் என்மீது கருணையுடன் இவ்வாறு சொல்வதற்காக தங்களுக்கு அனேக வந்தனம் செய்கிறேன். ஆனால் தாங்கள் இன்னாரென்பதை முதலில் அறிந்துகொள்ளுவதில் நான் மிகுந்த ஆவலுடையவளாகயிருப்பதால் தயவுசெய்து அதன் விவரத்தைத் தெரிவித்தால் உடன் எனது விருத்தாந்தங்கள் முழுமையும் தெரிவிக்கிறேனென்றாள். அதற்கு அரசன் நான் தேவநகரென்ற ஓர் நாட்டை அரசாண்டுவரும் மயூரனென்ற பெயருடைய ஓர் சிற்றரசனின் புதல்வன் எனது பெயர் கோலாஹலனென்று சொல்வார்கள் சுமார் ஒருவாரமாக வேட்டையாடுவதற்காக இக்காட்டினிடமாக சஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன். நேற்றுதினம் சாயங்காலத்தில் புலிவேட்டைக்காக ஓர் மலைக்குன்றின் சார்பில் ஓர் புலியைக் கண்டு நானும் என்னுடைய சிப்பாய் வேட்டைக்காறருமாக நாலு பக்கங்களிலும் தனித்தனியே பிரிந்திருந்து விரட்டிச்சென்றதில் புலி வெகுதூரம் ஓடி மறைந்துவிட்டதால் இரவில் காட்டிலேயே ஓர் பக்கத்தில் படுத்து நித்திரைசெய்துவிட்டு இக்கோவில் சமீபத்திலிருப்பதைக்கண்டு இங்கு வந்தேன். எனது சிப்பாய்களும் இன்னும் சிறிது நேரத்தில் என்னைத்தேடிக்கொண்டு இவிடம் வந்து சேருவார்களென்றான். அதைக் கேட்ட தாயம்மையின் மனம் ஓர்வாறு திருப்தியடைந்து இனி தனக்கு பயமில்லை யென்றும், வேண்டும் சவுக்கியத்துடன் இந்த ராஜகுமாரன் தன்னை அரண்மனையில் பிதாவிடம் கொண்டு சேர்ப்பாரென்றும், நம்பிக்கையுடன் தன்னுடைய விருத்தாந்தங்கள் முழுமையும் ராஜகுமார

ணிடம் விவரமாக அறிவித்தாள். ராஜகுமாரன் தாயம்மை அடைந்திருக்கும் துன்பங்களைக்கேட்டு மனம் வருந்தி அம்மா! இனி நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்னுடைய சிப்பாய்களையனுப்பி பெட்டியினுள்ளிருக்கும் அந்த மஹா பாவியான குருவையும், கொலையாளியான வீராசாமியையும் உடன் உமது அரண்மனைக்கு கூடவே அழைத்துவரும்படி செய்கிறேன். உமது தகப்பனாரின் தற்கால நிலைமையை உத்தேசிக்க இனி ஒரு வினாடிநேரமும் நாமிங்கு தாமசிப்பது நியாயமில்லை. இக்கணமே உமது அரண்மனைக்கு நாம் புறப்படவேண்டியது அவசியமாகும் அங்கு போய் தமது பிதாவின் சவுக்கியத்தைத் தெரிந்தபிறகு குருவிற்கு ஏற்படுத்தவேண்டிய தண்டனையை உம்முடைய பிதாவே விதிப்பார் மேலும் அதுதான் கவுரவமான முறையாகும். அதன்னியில் நானே சிக்ஷிக்கக்கூடிய சக்தியையடைந்திருந்த போதிலும் அவ்வாறு செய்வது உலகத்திற்கு ஒவ்வாதென்று நினைக்கிறேன். ஆகிலும் உமது அபிப்பிராயம் எவ்வாறென்பதை எனக்குத் தெரிவித்தால் அவ்வாறு நான் நடந்து கொள்ள ஆக்ஷேபமில்லை யென்றான். அதனைக்கேட்ட தாயம்மை ராஜகுமாரனின் புத்திசாலித்தனத்தையும், அவனுடைய கருணைநிறைந்த கபடற்ற குணத்தையும், அவனது திவ்ய சௌந்தர்யத்தையுங்கண்டு மனதில் அடங்கா மகிழ்ச்சியுடன் தனக்கு இவனே பிராணநாயகனாக ஏற்படில் இதுவரை யடைந்த துன்பம் ஒருபொழுதும் மனதிற் தோன்றாமலே மறைந்துவிடுமென்றும் அந்தரங்கத்தில் காதலுற்றாள். ஆகிலும் தன்னுடைய பெற்றோரின் அபிப்பிராயம் எப்படியிருக்குமோவென்று சிறிது லெஜ்ஜையடைந்து அம்பிகையின் க்ருபை நமக்கு பூர்ணமாகயிருப்பதினால் நமது இஷ்டத்தை தேவி நிறைவேற்றுவாளென்பதாக ஓர் நம்பிக்கையுடன் அரசகுமாரனைப் பார்த்து சதுர்வித உபாயங்களையும் நன்கறிந்த தங்களைப்போன்றவர்களுக்கா கேவலம் அபலையாகிய நான் யோசனை சொல்லப் போகிறேன்! அவ்வாறு தாங்கள் நினைக்கவேண்டாம் தாங்கள் கூறியவாறே நான் தங்களுடன் இக்கணமே புறப்படத்தயாராகயிருக்கிறேன் தாங்கள் எனக்காக எம்மாதிரி அனுகூலத்தைத் தேடினாலும் அதற்கு நான் கட்டுப்பட்டிருக்கிறேனென்றனள். இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது இளவரசனின் சிப்பாய்களும் இவர்களிருக்கும் கோவிலுக்கு வந்துசேர்ந்தார்கள். உடனே அரசகுமாரன் சிப்



பாய்களைப்பார்த்து இக்காட்டின் மத்தியில் சிறிது தூரத்தில் ஓர் பெட்டி தோன்றும் அதனுள் இருவரிருப்பார்கள். அவர்களில் ஒருவன்பேர் வீராசாமி மற்றொருவன் ஓர் பிராமணன் அவர்களிருவரையும் யாதொரு இம்சையுஞ்செய்யாமல் பந்தோபஸ்தாக தர்மபுரம் மஹாராஜா அவர்களின் அரண்மனையில்க் கொண்டுவந்து சேர்க்கவேணும் நீங்கள் வருவதற்கு முன்னதாக நானும் அவ்விடத்திலிருப்பேன். உஷார்! சீக்கிரம் செல்லுங்களென்று உத்திரவளித்தான். சிப்பாய்கள் மஹாராஜா ஆக்ஞைப்படி யென்று வந்தனஞ்செய்து அரசனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். அதே நிமிஷத்தில் தாயம்மையும், கருப்பண்ணனும், ராஜகுமாரனுமாக தர்மபுரத்தை நோக்கி பிரயாணமானார்கள். இவை இங்ஙனமிருக்க தர்மபுரி அரசன் சந்திரசேகர மஹாராஜா தன்னுடைய புத்திரியின் சோகத்தினால் மூர்ச்சித்து விட்டானென்றும் இனி பிழைப்பது அரிதென்றும் ராஜகுமாரத்தி காட்டில்ப்போனவிடம் தெரியவில்லையென்றும், மஹாராஜாவுக்கு சந்ததியில்லாததால் இனி ராஜ்யம் யாரை யடையப்போகிறதோவென்றும், ராஜ்யத்திலுள்ள பல ஜெனங்களும் கூட்டக்கூட்டமாகக்கூடி நின்றுகொண்டு பற்பல விதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மந்திரி இம்மாதிரி நடந்துவிட்டதைத் தெரிந்து இனி ராஜ்யவிஷயம் எவ்வாறு முடியுமென்பதைப்பற்றிய கவலை ஓர் பக்கமிருக்க மஹாராஜாவின் அபரக்கிரியைகளை எவ்வாறு நடத்துவது யென்பதைப்பற்றியும் பெருங்கவலைகொண்டவராக அனேக சேவகர்களை காட்டின் பல பக்கங்களிலும் ராஜகுமாரத்தியைத்தேடி அழைத்துவரும்படிக்கு கட்டளைகொடுத்தனுப்பிவிட்டு அரண்மனையின் கதவுகளைத்தாளிட்டு மஹாராஜாவின் சரீரத்தை பந்தோபஸ்தாகப் பாதுகாத்துவந்தா. இவ்வாறு சம்பவங்கள் நேர்ந்த காலத்தில் ராஜ்யத்தில் ஜெனங்களுக்குள்ளுண்டாகும் குழப்பங்களை சொல்லவும் வேண்டுமோ? இரவு 7 மணியானவுடன் திடீரென அரண்மனை வாயிலில் இருவர் குதிரையின் மீதிருந்து கீழே இறங்கினர். அதைக்கண்ட அரண்மனையின் காவலாளிகள் திடுக்கிட்டு நீங்கள் யாவர் என்று இவர்களை வினவ, அவர்கள் காவலாளிகளைப்பார்த்து ராஜகுமாரத்தி வந்திருக்கிறாளென்று உடனே அரண்மனையில் அரசனிடம் தெரிவிக்கும்படி சொல்ல உடனே காவலாளிகள் பரபரப்புடன் தங்கள் மந்திரியிடம் அறிவிக்க அதைக்கேட்ட மந்திரி அடங்கா மகிழ்ச்சியுடன் அரண்மனை வாயிலில்

வந்து அங்கிருந்த ராஜகுமாரத்தியையும், இளவரசரையும் பரிவுடன் அரண்மனைக்குள் அழைத்துச்சென்று தகப்பனார் அரசனின் பக்கத்தில் நின்றுகொண்டு அரசன் இவ்வாறு மூர்ச்சித்திருப்பதின் விருத்தாந்தங்கள் முழுமையும் தாயம்மையிடம் அறிவித்ததுந்தவிர இனிமேல் நடக்கவேண்டிய விஷயங்களுக்கும் கட்டளையிடும்படிக்கு வேண்டிக்கொண்டார். ராஜகுமாரத்தி தாயம்மை தனக்கு தேவி உத்திரவுகொடுத்த பிரகாரம் விபூதி பிரஸாதத்தை தன்னுடைய பிதாவின் சரீரத்திற் பூசி பிரம்பால் மூன்று தரம் பாதாதிகேசபரியந்தம் தடவிக்கொடுத்தாள். உடன் அரசன் உறங்கி விழித்தவன்போல் எழுந்திருந்து தன்னுடைய அருமைப்புதல்வி பக்கத்தில் நிற்பதைப்பார்த்து ஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி புத்திரியை தன்னுடைய மடிமீது உட்காரவைத்துக்கொண்டு உச்சிமுகந்து தான் குருவினுடைய வார்த்தையை நம்பி மோசம் போனதையும் காட்டிலிருந்து தப்பி இங்கு சுகமாக வந்துசேர்ந்த வரலாற்றையும் விவரமாகத் தெரிவிக்கும்படி தன் குமாரத்தியிடம் சொல்ல, அவளும் நடந்த விருத்தாந்தங்கள் முழுமையும் தவறாமல் தன் பிதாவிடம் அறிவித்ததுந்தவிர தன் பக்கத்திலிருக்கும் இளவாசர் இன்னாரென்பதையும் அவர் இங்குவந்துசேர மிகவும் தனக்கு உதவி புரிந்ததையும் அறிவித்தாள். அரசன் ராஜகுமாரனுக்கு வேண்டும் மரியாதை செய்ய அதைப் பெற்றுக்கொண்டு ராஜகுமாரன் தான் வந்தகாரியம் முடிந்ததென்றும் இனி தன் நகருக்கு சீக்கிரஞ்செல்லவேண்டுமாகையால் விடைகொடுக்கவேண்டுமென்றும் அரசனை வேண்ட அரசன் அதற்கு சிறிதும் இணங்காமல் சிலநாள் தன் அரண்மனையில் வசித்தபிறகே போகவேண்டுமென்று அரண்மனையின் ஓர் பாகத்தில் ஜாகைக்கு வேண்டும் ஸவுகரியங்கள் செய்து ராஜகுமாரனை அதிலிருக்கும்படி ஏற்பாடுசெய்தார். இவ்வாறு சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும் மத்தியில் ராஜகுமாரன் காட்டிற்கு அனுப்பியிருந்த சேவகர்கள் குருவையும், கொலையாளி வீராசாமியையும், பெட்டி சகிதம் அரண்மனை வாயிலிற் கொண்டுவந்திருப்பதாக சேவகர்கள் அறிவித்தார்கள். மந்திரியுடன் அரசன் யோசனைசெய்து தற்சமயம் அவர்களை தனித்தனியே சிறைச்சாலையில் அடைத்துவைக்கும்படிக்கு உத்திரவளித்தார். அவ்வாறு சேவகர்கள் உடன் அவர்களை சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்றார்கள். இவ்வாறு நடந்துள்ள ஸமாசாரங்கள் நகரெங்கும் பரவ பல ஜனங்கள் குருவை நிந்



தித்தும் அவனை இப்பொழுதே கழுவிலேற்றவேண்டுமென்றும், பலர் ராஜகுமாரத்தி சிறு பெண்ணாயிருந்தும் அவளுடைய கற்பையும், மனோதைரியத்தைப்பற்றியும், மூர்ச்சை அடைந்த அரசன் ஈசுவரகிருபையால் திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்டு எழுந்திருந்ததையும்பற்றி பலவாறாகப் புகழ்ந்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்தவர்களாகி புது அரசனுக்கு முடிசூட்டு வைபவம் நடக்கிறமாதிரியே நகரமுழுவதையும் தோரண முதலியவற்றால் அலங்கரித்து ராஜபக்தியை விசேஷமாகக் கொண்டாடினார்கள். இவ்வாறு இரண்டு தினங்கள் கழிந்தபிறகு அரசன் தன்னுடைய மந்திரி, தாயம்மை இவர்களிடம் குருவிற்கு விதிக்கவேண்டிய தண்டனையைப்பற்றி ஆலோசித்தார். அரசனுக்கும் மந்திரிக்கும் குருவை சரீர தண்டனைக்குட்படுத்த வேண்டுமென்ற அபிப்பிராயமிருந்தது. ஆனால் மஹாபுத்திசாலியும், கருணைநிறைந்த குணமுமுடைய தாயம்மைக்கு அவ்வாறு செய்ய இஷ்டமில்லை. ஆகையினால் தகப்பனாரைப்பார்த்து பிதா! நான் தங்களுக்கு ராஜரீக விஷயமாகயுக்திசொல்ல எவ்விதத்திலும் தகுதியற்றவள், மேலும் கேவலம் அபலையாகிய பெண்பால், அதினும் சிறிதுகூட உலக அனுபவந் தெரியாத பால்யவயதுடையவள், ஆகிலும் நமது குருவிற்கு தண்டனை விதிப்பதைப்பற்றி எனக்குத் தோன்றுவதை சிறிது சொல்லப்பிரியப்படுகிறேன். அதனைத்தாம் கேட்டபிறகு அதிலுள்ள சாதகபாதகங்களை கவனித்து தம்முடைய அபிப்பிருயம்போல் நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேனென்றனள். அதற்கு அரசன் மிகவும் ஸந்தோஷித்து தாயம்மையைப்பார்த்து என் அருமைக்குழந்தாய்! உனது இஷ்டத்தைத் தெரிவி அதன் பிரகாரமே நான் வேண்டும் ஏற்பாடு செய்கிறேனென்று சொல்ல தாயம்மை சொல்லுகிறாள் பிதா! குருவினுடைய கெட்ட நடத்தையைப் பற்றி நமக்கு மட்டிலுமல்ல நமது நாடு முழுமையும் ஒருமனதுடன் மரண தண்டனைவிதிக்கக்கூட சம்மதத்துடனிருப்பாகள் யென்பதில் ஆக்ஷேபமில்லை, ஆகிலும் நமது குடும்பத்திற்கு வெகு நாளாக குருஸ்தானத்திலிருந்தும், எனக்கும் வேண்டியவளவு வித்தை கற்றுக்கொடுத்துமிருப்பதால் அவரை சரீர இம்சைசெய்வது உசிதமாகயில்லை. அவர் செய்த தீமைக்குரிய பலன்களை அவரே பின்னால் அனுபவிப்பார். மேலும் என்னைக்காட்டிற்கு அனுப்பும்படி செய்ததற்குப் பதிலாக அவரையும் நமது இராஜ்யத்திற்கு வெளியே அப்புறப்படுத்தி காட்டிற் கொண்டு

போய் விடும்படி உத்திரவு செய்வதே நலம். தவிரவும் இத்தெண்டனை தற்காலத்து நாகரீகத்தையும் அனுசரித்ததாகும். அப்பால் தங்கள் யுக்தம்போல் செய்யுங்களென்று சொன்னாள். இதைக்கேட்ட அரசன் அவளுடைய புத்திக்கு வியந்து மந்திரியைப்பார்த்து மந்திரீ! நமது குழந்தையின் அபிப்பிராயத்தைக் கேட்டீரா! உமது அபிப்பிராயம் என்ன? யென்று கேட்க மந்திரியும் அவ்வாறு செய்வதே உசிதமென்று தோன்றுகிறது. ஆனால் நாமே அவ்வாறு தீர்ப்புச்செய்வதைக் காட்டிலும் ஓர் பெரிய சபைகூட்டி அதில் நமதுநாட்டு ஜனங்கள் முழுமையும் வரவழைத்து ஒழுங்காக கொலையாளி முதலானவர்களை வரவழைத்து விசாரணைசெய்து ஜெனங்களுடைய சம்மதத்தையுந்தெரிந்து குழந்தை தாயம்மையின் அபிப்பிராயப்படி தீர்ப்புச்சொல்வது மிகவும் சிலாக்கியமாயிருக்குமென்று சொன்னார். அரசனும் அதற்கிணங்கி சீக்கிரம் ஓர் சபைகூட்ட கட்டளையிட்டார். மந்திரி அவ்வாறே மறுதினம் நாடெங்கும் பறை சாற்றிவித்து குருவினுடைய தப்பான நடத்தையைப்பற்றி விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எல்லா ஜெனங்களும் வந்தாஜராகவேணுமென்றும் விளம்பரப்படுத்தினார். இவ்விளம்பரத்தைக் கேட்டதும் இதன் முடிவைத் தெரிந்துகொள்வதில் ஜெனங்களுக்குண்டான ஆத்திரத்தைப் பற்றி நாம் இங்கு விசேஷமாகக்கூற வேண்டிய அவசியமில்லை. நகரிலுள்ள ஜெனங்கள் முழுமையும் வாயிதாவன்று அரண்மனையில் வந்து குவிந்தார்கள். அனேக ஜெனங்களுக்கு உட்காரக்கூட இடங்கிடைக்கவில்லை. அச்சபையில் மகாராஜாவும் மந்திரி முதலானவர்களுடன் ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தார். தேவநகரின் இளவரசரான கோலாஹலனும் ஓர் ஆஸனத்திலுட்கார்ந்திருந்தான். அரசன் மந்தரியைப்பார்த்து குற்றவாளியாகிய குருவையும், மற்றும் குலையாளிகள், சீடர்கள் முதலான சாக்ஷிகளையும் சபையின் முன்பு கொண்டுவரச்செய்து விசாரணை செய்யும்படிக்கு மந்திரிக்கு கட்டளையிட, அவ்வாறே அவர்களை அழைத்து வந்து முதலில் குருவினிடம் சில கேள்விகளை மந்திரி கேட்டார்.

இன்னும் வரும்

சிவஞானம்.

# ஸமாசாரக் குறிப்பு.

## ஓர் கைத்தொழில் வித்தியாசாலை

---

நமது காருண்ய கவர்மெண்டாரவர்கள் ஏழை ஜனங்களிடத்தில் கருணைகூர்ந்து ஒவ்வொரு ஜில்லாவிலும் கைதொழில் வித்தியாசாலை ஏற்படுத்தி வருவதில். திருநெல்வேலி ஜில்லாவிற்காக ஸ்ரீவைகுண்டம் தாலுகாவைச்சேர்ந்த மங்கலக்குறுச்சியென்ற கிராமத்தில் ஓர் கைதொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசிருப்பதாக தெரியவருகிறது. அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கிராமமானது தாம்பிரபர்ணி நதிக்கரையின் பக்கமாக ஜெலவசதியுடையதாகயிருப்பதினாலும், பக்கத்துக் கிராமங்களில் கைத்தொழிலுக்கு லாயக்கான பல ஏழை ஜனங்கள் வசித்துவருவதாலும் மிகவும் பொருந்தமுள்ளதாகவே கருதவேண்டும். மேலும் தொழிற்கலாசாலைக்குக் குறிப்பிட்டிருக்கிற கட்டிடமும் போதுமான பெரிதுதான். இந்தக்கட்டிடத்திற்கு சொந்தக்காரரான கனம். லெ. க. கந்தப்பபிள்ளை என்பவரும் உதாரகுணமும், தர்மசிந்தனையுமுள்ளவரான தால்தன்னுடைய சவுகரியத்தைக்கூடப் பெரிதாக நினைக்காமல் தொழிலபிவிர்த்தியின் தர்மகாரியத்திற்காக சொற்பவாடகைக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப்பது தற்கால நாகரீகத்தையனுசரித்துப் பாராட்டத்தக்கதாகும்.

---

அமிர்தபஜார் பத்திரிகை எழுதுகிறது:— கருவிகளின் உதவியைக் கொண்டு மழைபெய்யும்படி செய்கிறதென்ற ஓர் அருமையான விஷயத்தை வெகுநாளாக பரீக்ஷை செய்து கடைசியில் செய்துமுடிக்க ஆஸ்டிரேலியாவுக்குப் போயிருக்கிறது. இது விஷயமாக ஆராச்சி செய்து வருகிற மிஸ்டர் ஜெ. ஜி. மால்ஸில்ஸி என்பவரால் இதைப் பரீக்ஷை செய்யவேண்டியவகைக்கு கணக்கிடப்பட்டிருக்கும் மிகுந்த பணச்செலவை ஸவுத்வேல்ஸ் கெவர்மெண்டு கொடுத்து உதவுவதாகத் தெரிவிக்கிறது. கண்டுபிடித்திருக்கும் வழியாவது:— ஆகாயத்தில் சுமார் 6,000 அல்லது 7,000 அடி உயரத்தில் ஓர் சிறந்த புகைக்கூண்டை யனுப்பி இரண்டு விதமான மின்சாரசக்தியை உபயோகப்படுத்தவேண்டுமென்பது. இதனால் மேகங்களின் ஈரத்தின்மேல் மழையின் கருக்களை உண்டுபண்ணப்போதுமானதாகயிருக்குமென்றும், இப்போர்க்கொத்த ஸ்டேஷன்களை பிரபலமான காற்றுண்டாகும் பாதைகளில் அமைத்தால் அவைகளால்

கொண்டுவரப்பட்ட மேகங்களிலுள்ள தண்ணீரை இழுத்து வெளிப்படுத்துமென்றும், மிஸ்டர் ஜெ. ஜி. மால்ஸில்லி என்பவர் நம்புகிறார் மற்றொரு சிறந்த பிரோணையுங் கொண்டுவரப்படுகிறது. அதாவது இயற்கையிலுள்ள இடிமின்னல்களையும் நிறுத்திவிட இது காரணமாகுமென்பதே. இதுவிஷயம் பரீக்ஷையில் சித்தியடைந்தால் ஜெனங்களுக்கு அளவுகடந்த நன்மையுண்டாகுமென்று சொல்லவாவேண்டும்!

## ஐரோப்பிய யுத்தம்.

**மேற்கரங்கம்—** சாம்பேன் பிரதேசத்தில் டாஹூர் என்னுமிடத்தில் எதிரிகள் இரண்டுதடவை உக்கிரமாக எதிர்த்ததிலும் நேசக்கக்ஷியாரால் திருப்பியடிக்கப்பட்டார்கள். வேறோரிடத்தில் பீரங்கிச் சண்டையும் நடந்தது.

* *

**கிழக்கரங்கம்:—** ட்வின்ஸ்க் நாடுகளில் ஸமாதானமாகயிருக்கிறது. தென் போர்முனையில் உக்கிரமான சண்டைக்கு ஆரம்பம். கோல்க்கிக்கு வட பக்கம் ருஷ்யர்கள், எதிரிகளைத் துரத்தியும் புட்கியென்ற ஊருக்கு தென்கிழக்கு முனையிலிருந்து வந்த எதிரிகளின் மத்தியில் நுழைந்து சுமார் 2000 எதிரிகளைப்பிடித்துச் சிறைப்படுத்தினார்கள். அனேக எதிரிகள் சொர்னியாவ்கா என்ற நதியில் அமிழ்ந்துபோனார்கள். ருஷ்யருடைய வெற்றிக்கு பீரங்கிப்படை மிகுந்த உதவியாகயிருந்தது.

**பால்கன் நாட்டில் யுத்தம்:—** பூபுனுப் பக்கத்தில் ஸெர்வியர்களின் துன்பத்தை நீக்குவதற்காக பக்கவாட்டத்தில் வந்துகொண்டிருக்கிற பிரஞ்சுப்படைகளுக்கு அனுகூலமாகயிருக்கும்படிக்கு ப்ரிட்டிஷ்லேன் உதவி செய்கிறது.

* *

உஸ்கப்பிலிருந்து ப்ரிஸிரண்டு வரைக்குமுள்ள முனையில் பல்கேரியர்களின் முன்னேற்றத்திற்கு விரோதமாக ஸெர்வியர்கள் ஓர் முக்கியமான வெற்றியடைந்திருக்கிறதாகத் தெரிகிறது. தெற்கேயிருந்து பிரான்கோ ஸெர்வியர்களுடைய எதிர்ப்பை உத்தேசிக்க குப்ருலுவில் பல்கேரியர்களுடைய நிலைமை மிகவும் அபாயகரமாகயிருக்கிறது.

குப்ருலுவை பிரஞ்சு திரும்பக்கைவசப்படுத்திக்கொண்டது. இந்த இடம் வெகுமுக்கியமானதாகையினால் தெற்கேயிருந்து ஸெர்வியர்களைச்செய்த சூழ்ச்சிக்கு பல்கேரியரின் உபாயம் பழுதாகிவிட்டது.

OFFICE OF THE REGISTRAR OF JOINT ... 20 DEC 1915 MADRAS

உ

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1915-ஆம் டிசம்பர்-மீ { NO. 6.

## இந்து ஸங்கீதம்

"அதாதரதீவ்ராஸ்தா
தக்ஞோநாத:ச்ருதிர்மத:"

(ஸங்கீதரத்னாகரம்)

28. (வ்யா) நாதம் ஒன்றுக்கொன்று மேல் நோக்கப் பெரிதும், கீழ் நோக்கச் சிறிதும் எப்படியாகின்றதோ அவ்வாறே சரீரத்திலும் கண்டு கொள்ளவேண்டியது. முன் 8-வது ச்லோக உரையில் சில நரம்புகள் பெரிதும், சில நரம்புகள் சிறிதுமாக சரீரத்திலமைக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லியபடி இங்கு வீணைக்கு அம்மாதிரி பெரு நரம்புகள் வேண்டாமோவெனின் சரீரத்தைப் பார்த்து சிருஷ்டிசெய்த வஸ்து விசேஷமாதலின் வீணைக்கு வேண்டாமென்று சொல்லப்பட்டது. சரீரத்தில் நரம்புகள் எப்படியிருக்கிறதென்றால் 4-ல் 1, 3-ல் 1, 2-ல் 1, இவ்வாறிருக்கிறது பெருநரம்புகள், அப்பெருநரம்பின் ஓசையைத்தான் ஸ்வரமென்று சொல்லப்படுகிறது.

"வீணாத்வயேஸ்வராஸ்தாப்ய
தத்ரஷட்ஜச்சதுச்ருதி:

ஸ்தாப்யஸ்தம்த்யாம்துரீய்யாயாம்
ரிஷபஸ்திரிச்ருதிஸ்தித:"

29. (வ்யா) முன் சொல்லியபடி இரண்டு வீணைகளிலும் ஸ்வரங்களை அமைக்கும் விதமாவன:— 1. ஷட்ஜமென்ற ஸ்வரம் 4 ச்ருதியுடன் கூடியது. அதற்குமேல் ரிஷபமென்ற ஸ்வரம் 3 ச்ருதியுடன் கூடியது.

"பஞ்சமீதத்ரிதீயாயாம்
காந்தாரோத்விச்ருதிர்மத:
அஷ்டமீதோத்விதீய்யாயாம்
மத்யமோதசதுச்ருதி:
தசமீதச்சதுர்த்தாம்ஸ்யாத்
பஞ்சமோதசதுச்ருதி:"

30. (வ்யா) 8-வது தந்தியிலிருந்து காந்தாரஸ்வரம் ஆரம்பம் அதற்கு 2 ச்ருதி. 10-வது ச்ருதியிலிருந்து மத்யமம் ஆரம்பம் அதற்கு 4 ச்ருதி 14-வது ச்ருதிக்குமேல் பஞ்சமம் ஆரம்பம் அதற்கு 4 ச்ருதி.

"சதுர்த்தசீதக்துர்யாயாம்
தைவதஸ்திரிச்ருதிர்மத:
அஷ்டாதச்யாத்ருதீய்யாயாம்
நிஷாதோத்விச்ருதிர்மத:"

31: (வ்யா) 18-வது தந்தி முதல் தைவதம் ஆரம்பம் இதற்கு 3 ச்ருதி, 21-வது தந்திமுதல் நிஷாதம் ஆரம்பம் இதற்கு 2 ச்ருதி அந்தந்த நரம்புகளிலிருந்து உண்டாகிய நாதத்தை ச்ருதியென்று சொல்லப்படுகிறது.

மதங்கரென்பவரின் மதம் அதாவது அபிப்பிராய பேதமாவன:—
"ச்ரவணார்த்தஸ்யதாதோக்தி:
ப்ரத்தியேச்சஸமுச்ரிதே
ச்ருதிசப்தப்ராஸாத்யோயம்
சப்தக்ஞை:கர்மஸாதனே:"

(மதங்கபாதம்)



32. (வ்யா) ச்ருயந்த இதிச்ருதய:, ச்ருதியென்றால் கேழ்க்கிறதென்பது பொருள். அந்த ச்ருதி ஒன்றுதான், அங்கு முதலில் காற்றின் சேர்க்கையினாலே புருஷ பிரயத்தனத்தாலுண்டாகிய அணுத்திரள்களின் முதன்மைத்தான ஓசையையே ச்ருதியென்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த ச்ருதிக்கு ஆரோஹண அவ்ரோஹண முதலிய யாதொரு அவஸ்தாவிசேஷமுமில்லை. ஏனெனில், கேவலம் பரமாகாயவாயுவின் சேர்க்கையால் சதுச்ருதி முதலிய அந்தர்ப்பூதஸ்வரங்களெல்லாம் முன் சொல்லிய ச்ருதியிலேயே ஐக்கியம். இதுதான் மதங்கருடைய அபிப்பிராயம். இதரர்கள் இது விஷயமாக இரண்டு வகையான அபிப்பிராயப்படுகிறார்கள்.

விச்வாவஸுவினுடைய மதமாவன:—

"ச்ரவணேந்திரியக்ராஹ்யத்வாத்
த்வநிரேவச்ருதிர்பவேத்
ஸாச்சைகாத்விவிதாக்ஞேயா
ஸ்வராந்தரவிபாகத:"
"நியதச்ருதிஸம்ஸ்தாநாத்
கீய்யதேஸப்தகீதுஷு
தஸ்மாத்ஸ்வரகதாக்ஞேயா
ச்ருதய:ச்ருதிவேதிபி:"

சுத்தஸ்வரூபேஇத்யர்த்த:

"அந்தரஸ்வரவர்த்திநோ
அந்தரச்ருதயோமத:"

விக்ருதஸ்வரூபேஇத்யர்த்த:

"ஐதாஸாமபிவைத்ஸர்யம்
க்ரியாக்ரமவிபாகத:"

(ராகலக்ஷணம்)

33. (வ்யா) ச்ரவண இந்திரியத்திற்குப் புலனாகும் த்வனியை அதாவது முதல் ஓசையை ச்ருதியென்று சொல்லவேண்டும். அந்த ச்ருதி இருவகைப்படும். ஸ்வரங்களென்றும், அந்தரஸ்வரங்களென்றும் பேதம் உண்டாகியதால் சுத்த ச்ருதியென்றும், விக்ருதிச்ருதியென்றும் இருவ

கைப்பட்டது. இதில் சுத்தச்ருதியை நியதிச்ருதியென்று சொல்லவேண்டும். அந்த ச்ருதியானது பேதமில்லாத ஸ்வரங்களுக்கேற்றதென்று ச்ருதிவேத்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள். அல்லாமலும் அந்தரஸ்வரங்களுக்கு ஏற்ற ச்ருதியை (அந்தரச்ருதி) விக்ருதி ச்ருதியென்று வேதாந்திகள் சொல்லுகிறார்கள். இவை விசுவாவஸு—வின் அபிப்பிராயம்.

சிலர் மூன்று ஸ்தானமானதால் மந்திர, மத்யம, தாரமென்று மூன்று ச்ருதிகள் வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். சிலர் இந்திரியத்தைப்பொருந்தியதாதலால், இந்திரியத்தைப்பொருந்திய மூன்றுச்ருதி இருக்கவேண்டு மென்கிறார்கள். அதாவது

"இந்திரியவைகுண்யம்த்ரிவிதம்
ஸஹஜம்தோஷஜம்அபிகாதஜம்சேதி"

34. (வ்யா) (1) ஸஹஜம், இயற்கையாகவுள்ளது. (2) தோஷஜம், கெடுதலாற்சம்பவிப்பது. (3) அபிகாதஜம், அடித்துவெளிப்படுத்துவது. இந்த மூன்று ஓசையும் இந்திரியத்தைப்பொருந்தியது. இங்கு இந்திரியமென்றது மனதைப்பற்றி யாகையினால் மனமானது ஸத்வ குணத்தோடுகூடிய ஓசை இதுவே ஸஹஜம், ரஜோ குணத்தோடும், தமோ குணத்தோடும் கூடி வெளிப்படும் ஓசை தோஷஜம், ஆம்லாதி ரஸங்களினால் அடிபட்டு வெளிவருவதினாலுண்டாகும் ஓசை அபிகாதஜம், என்ற 3 வித பேதங்களென்று சொல்லுகிறார்கள்.

இன்னும் சிலர் வேறு வகையாக அபிப்பிராயப்படுகிறார்கள். அதாவது.

"வாதபித்தகபஸன்னிபாதபேதபின்னாம்
சதுர்விதாம்ச்ருதிம்ப்ரதிபேதிரே"

35. (வ்யா) வாதம், பித்தம், சிலேத்துமம், ஸன்னிபாதம், என்ற நால்வகைப் பண்பினால் நான்கு விதமான ச்ருதிகளாகின்றனவென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. 〰〰 = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. ○ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளதின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசிகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



## வீணை, குப்பய்யரவர்களின் கீர்த்தனை.

காம்போஜி ராகம்—ஆதிதாளம். 1-களைச்சவுக்கம், லகு ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ = ச, ச—ரி, அ—க, சு—ம, ப, ச—த,

அவ = ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப = கொனியாடின நாபை—கோபமுலேயமோ =

அ = நின்னுமிஞ்சினதைவமுலேதனி
நிரந்தாமுநீகீர்த்தினியெந்தோ =

சர = பானுடௌமார்க்கண்டேயுனி
பக்திகிஸந்ததஸில்லிவேகமே
கானுநிஜக்கபாதமுனதுனிமி
கருணிஞ்சிதிவதிகாகனு
காலகூட்டபாதஸைரிம்பக
க்ரதுபுஜ‿லெல்லனுகூடி
சாலநீதோமொரலிடிவேடுகொன்ன
லீலகனுகாளமு ம்ருங்கின
நீலகண்டஸ்ரீகாளஹஸ்தீச
நிகிலலோகபுதஜனபாலன—கோ
பாலதாஸதுரிதவனகுட்டார
பாத்பராதயாகராயனிநினு =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=பாமாமாகா-காரீ ரீசா-கரீ* * * ரீ * *-ரிகாரிசா * * | சநீ*-* *தா* *-த நீ *-* * * *பா | * *தாசா* *ரீ* *கா* * |
| கொ ஒநிஇ-ய——·——. * * ஆ* *-அ——. * * | டி-*-* *ந * *-ஞெ--*-* * * *--- | * *பை--* *-* *-* * |
| (1) ஷை ரிகமக-ரிகமக-ரிகாரிசா * * | ஷை | ஷை |
| ஷை அ—- —— —— * * | ஷை | ஷை |
| (2) பாமாமாகா-காரீ-சாரிக-ரீகம காமப-கமரிகசா * * | ஷை | ஷை |
| கொ ஒநிஇ-ய——. —————-- * * | ஷை | ஷை |
| (3) ஷை——·சரி கமபா* *மகரீ-பமகரிசா * * | ஷை | ஷை |
| ஷை அ——-* *—-- ——.* * | ஷை | ஷை |
| (4) ஷை சரிகமபா பாமகரீ-பமகரிசா * * | ஷை | * *தாசா* *-ரீகாமாபா |
| ஷை அ—— ——--- * * | ஷை | * *பை--* *-இ—— |
| (5) தா * *நிதபா-மாபதபாதநிபா* *மகரீ-பமகரிசா* * | ஷை | ஷை |
| கொ* *நி—- ய——..* *—-- ——--* * | ஷை | ஷை |
| (6) தா * *நிதபம-பதநித-மபதப-நிததப மகரீ-பமகரிசா* * | ஷை | ஷை |
| கொ* *நி—-- ய—— —— ——. ——--* * | ஷை | ஷை |
| (7) தா * *நிதபா-ச்நிதப-நிதபம-தபமக-பமகரி-மககரிசா* * | ஷை | * *தாசா* *-சரிகமபதச்ா |
| கொ* *நி—- ய—-- ——. ——. ——. ——--* * | ஷை | * *பை--* *-இ—— |
| (8) பதச்ா பாதா-மபதரீச்ா * நிதப-தபாமகரி-பமகரிசா* * | ஷை | ஷை |
| கொ—நி—- ய——.. * அ--- ——·——* * | ஷை | ஷை |
| (9) பதச்ா பாதா-பதச்ரீக்ம்க்க்-ரீரீச்ச்நிநிதத-பபமம ககரிரி | ஷை | * *தாசா* *-ரீரீகா* * |
| கொ—நி--- ய——-- ——- ——. | ஷை | * *பை--* *-இ---* * |
| மாகாமாபாபாமா-தபமபதா * * பா * * நீநீதா * * | மாபாதா * ச்பா * * * * மா | மாகா* *ரீ-ரீசாரீ * * |
| கோ——--- ப——.. * * — * * மு—. * * | ஸே---- * ய-- * * * * அ | மே--* *ஏ —-ரா* * |
| (1) ஷை | மாபாதாச்ா-ச்நிதாநிதபா | பமகாமகரீ-காசாரீ கா |
| ஷை | ஸே——- ய——-- | மே——- ஏ---ரா--- |



| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (2) மேற்படி | மாபாதச்ரீக்ச்ா * * நிதபத | பா * *மகரிகசா* *ரீ * * |
| மேற்படி | ஸே——.. * * ய—-- | ஆ * *மே——* *ரா* * |
| =பாமாமாகாகாரீ= | | |
| =கொ--நி—ய--= | | |
| அ=நீநீ தா* *பா * * * * * *-பா* * * * * *-தாமாமகசா | பா * * * * * *-தா* *ச்நீ*-*நி | பா * *தா* *-ச்ா* *ச்ா * * |
| நிஇனு* *மிஞ்* * * * * *----* * * * * *-ஏ—-ந—- | தை* * * * * * வ * *மு-*-*-- | லே* *---* *-த * *ணி* * |
| (1) நீநீ தா* *பா * * * * * *-தாபாதாபா-தாமா மககசா | மேற்படி | மேற்படி |
| நி இனு* *மிஞ்* * * * * *——---சி—-ந—— | மேற்படி | மேற்படி |
| (2) மேற்படி -பதநித பதநித-தபமாமககா | மேற்படி | மேற்படி |
| மேற்படி —— ——··சி—ந—— | மேற்படி | மேற்படி |
| (3) நீநீ தா* *தாநிததாநித-தாநிதபா * *-தபமா மககா | மேற்படி | மேற்படி |
| நிஇனு* *மிஞ்——·—— --- * *-சி—--ந—- | மேற்படி | மேற்படி |
| (4) நீநீ தா* *மாபாதாபா-தாநிதபா * *-தபமா மககா | மேற்படி | மேற்படி |
| நிஇனு* *மிஞ்——. —— * *-சி—--ந—— | மேற்படி | மேற்படி |
| (5) நீநீ தா* *மாபாதாச்ா-ச்நிதா நிதபா-தபமா மககா | மேற்படி | மேற்படி |
| நிஇனு* *மிஞ்——. —— ——--சி—--ந—- | மேற்படி | மேற்படி |
| (6) நீநீ தா* *மபதாபதச்ா-தச்ரீச்நிதபா-பதநித-பமகா | மேற்படி | மேற்படி |
| நிஇனு* *மிஞ்——-- —— —— --சி——·ந—- | மேற்படி | மேற்படி |
| (7) நீநீ தா* *பதநிதமபதப-தரீச்நிதபமப-தநிதபமகரிக | மேற்படி | பா * *தா* *-ச்ாரீக்ாக்ா |
| நிஇனு* *மிஞ்——--- ——·—— -சி——-ந—-- | மேற்படி | லே* *---* *-தாஆனி- |
| (8) ரீச்ா ச்நிதா-பதச்ா மபதரீச்ா* *நிதபா-ச்நிதப மகரிக | மேற்படி | மேற்படி |
| நி—னு—--மிஞ்- ——---* *——··சி——ந—-- | மேற்படி | மேற்படி |
| (9) ரீச்ா ச்நிதா-பமகமபதச்ரீ-க்ம்க்ரீச்நிதப-ச்நிதபமகரிக | மேற்படி | பா * *தா* *-ச்ா* *ரீ * * |
| நிஇனு—--மிஞ்——··· ——---- சி—--ந—-- | மேற்படி | லே* *---* *-தா* *ணி* * |
| க்ா* *ரீ * *-ரீக்ாரீச்ா* *-ச்ாநீதா* *-மாபா தாரீ | ச்ா* * * * * *_* * * * * * * | ச்நிதபமகரிச-சரிகம பதச்ரீ |
| நி * *ர * *-அம்—த* * ர---மு* *-நீ—— | நீ* * * * * *_* * * * * * * | இ——-- ——--- |

| லகு. | திருதம். | திருதம். |
| --- | --- | --- |
| (1) க்ா* *ரி* * *—ரிக்ாரிச்ா* *—ச்ாநீதா* *—பதச்ரிக்ாக்ா' | ரீ ச்ா ச்நி தா—ப த ச்ா மபதச் | தாபாபமகரி—சரிகமபதச்ரி |
| நி * *ர * *—அம்—த* * ர---மு* * நீ———— | இ———— ர்த்தி——நி—-- | எம்————தோ———— |
| க்ா* *ரி* * *—ரிக்ாரிச்ா* *—ச்ாநீதா* * மாபாதாரீ | ச்ா* * * * * *—மாபா தாச்ா | தாபா* *மா—காரீசாரீ |
| நி * *ர * *—அம்—த* * ர---மு* * நீ——— | இ * * * * * *—ர்த்திநி—-- | எம்--* *---தோ—— |
| (சிட்டாஸ்வரம்) கா* * * * * *_* * * *கமககரீ—ரிகரிரிசா-ரிகரிச நிதபத | சா* * * * * *_* * * *ரிகரிரி | சாரிசாநிதாநி—பாதபதசரி |
| கமகரிமகரிச—பமகரிதபமக—நிநிதபச்நிதப—மகபதச்ரிக்ம் | க்ரி ச்ரி ச்ா* *—* *மபதநிபத | மதபா* * * *—சசாநிபதசரி |
| ═பாமாமாகா═ | | |
| ═கொஞ்சி═ | | |
| ச═மா* * * * * *—மா* *மா கா—மா* *மா* *—பா* * * * * * | பாமாபாதா—பா* * * * * * | பாதநிதாநீ* *தாதா* * |
| பா* * * * * *—லு* *டௌ---* *---* *—மா* * * * * * | ர்க்கம்———ம் * * * * * * | டே———* *யு னி* * |
| (1) தா பா மா* *—மா* *மா கா—மா* *மா* *—பா* * * * * * | மேற்படி | மேற்படி |
| பா———-* *—லு* *டௌ ---* *---* *—மா* * * * * * | மேற்படி | மேற்படி |
| (2) நீதாநீபா—தா பா நீதா—தாபாமாகா—மா * * பா * * | மேற்படி | மேற்படி |
| பா——- லு—டௌ—————- * * மா * * | மேற்படி | மேற்படி |
| (3) பதநிதமபதப—நிததபமா* *—மாகாமா* *—மா* *பா* * | மேற்படி | மேற்படி |
| பா———— ——-லு* *—டௌ--* *---* *மா* * | மேற்படி | மேற்படி |
| தா* * * * * *—ச்ாதாதாபா—பா மா பாதா—பா* *தாபா | தாமாகா* *—மாபாதா* * | தாபாதாச்ா—நீ* *தா * * |
| பக்* * * * * *—தி—-கி— ஸம்——-- த * *வி--- | —-ல்வி* *—வே——* * | ————- க* *மே* * |
| நீ பா த ா * *—ச்ாதாச்ா* *—* * * * * * *—* * நீநீதா | தா* * * * * *—ச்ாதாதாபா | பா* *தாமா—பா* *தா* * |
| க அ லு * *—நி—---* *—* * * * * * *—* * ஒ க் க | பா* * * * * *—த—-மு— | ந * *து—--நி * *மி* * |
| ச்ா தா தா பா—பாமாமாகா—காரீ ரீ* *—* * * * *ரீகா | சா* * * * * *—* * * *சா* * | ரிகமகரீ* *—ரிகாரிசா* * |
| க அ ரு உ—ணிம்—— சிஇதி* *—* * * *வதி | இ* * * * * *—* * * *கா* * | க——-* *—அ——னு* * |
| * * * *நீ * *—தா* *பா* *—* * *மாபா—மாகா* *மா | பா * * * * * *—* * * *தாபா | தா * * * *—நீநீ தாமா |
| * * * *கா * *—ல * *கூ* *—* * * *ட—- ---பா* *தா | ஸை* * * * * *—* * * *இ இ | ரிம்* * * *—பஅக --- |

| லகு. | திருதம். | திருதம். |
| --- | --- | --- |
| (1) பாமா═ ஷை | ஷை | தா* * * *—நீநீ தா* * |
| அ---═ ஷை | ஷை | ரிம்* * * *—பஅக * * |
| * * * *தாதா--ச்ாதாதாபா—தாபாபா* *—தாமாமகாகா | பா * *தா * *—நிபா *-* *தா * * | ச்ா* * * * * *—* * * * * * * * |
| * * * *க்ருது—பு உ ஜ உ—லெ——* *—ல்லஅனு -- | கூ * *ஊ * *—உ--- *-* *ஊ * * | டி * * * * * *—* * * * * * * * |
| தா பா தா* *—ச்ா* *ரீ* * *—க்ா * * * * * *—க்ம்க்ா* * | ரீ க்ாரீக்ா—ரீ * *ச்ா* * | ச்ாநீ தா * *—தாபாதா * * |
| சா——-ல* *—நீ * *இ* *—தோ * * * * * *—மொஓர* * | வி இ நி இ-வே* *எ * * | டி உகொ* * ஓ ஓ ன்ன* * |
| தா ரீ ச்ா* *—ச்ாநீதா * *—நீ தா பா* *—தாமாமககா | பா*தச்ா* *—தாபா* *மா | மாகா* *ரீ —ரீசாரீ* * |
| லீ இ ல * *—க---னு * *—க——--* *—ர———- | ள *அமு* *—ம்ரு--* *ங் | கி---* *இ—ன---* * |
| சா நீ தா பா—* *தாசா* *—ரீ மா கா சா—ரீமகாமா | மாகாமா பா —தாபாச்ாநீ | தாபாமாகா—பாதாச்ா * * |
| நீ ல க ண்—* *ட ஸ்ரீ* *—க அ ள ஹ—ஸ்தீ—-ச | நி கி ல லோ—ஒ க பு த | ஜ னபா--- ல ன கோ* * |
| தா * * ச்ா ரீ—ம்ா க்ா ச்ா ரீ—ம்ாக்ா ரீ ச்ா—நீதாபாதா | ரீ ச்ா* *நீ—தாபாதாபா | * *மாகாரீ—ரீகாசாரீ ═ |
| பா * * லதா—ஆ ஸ து ரி—த வ னரு—ட——ா | பராத்* *ப—ரா—த யா | * *க ரா— யதி நி னு ═ |
| ═பாமாமாகா═ | | |
| ═கொ-ணி--═ | | |

(பத) ப=கொனியாடின=புகழ்ந்த
நாபை=என்மீது
கோபமுஸேய=கோபஞ்செய்வது
மேர=ஒழுங்கா?

அ=நின்னுமிஞ்சின=உன்னைக்காட்டிலும் மேன்மையான
தைவமு=தெய்வம்
லேதனி=இல்லையென்று
நிரந்தரமு=எந்தநேரமும்
நீகீர்த்தினி=உன்னுடையகீர்த்தியை
எந்தோ=எவ்வளவோ

சர=பாலுடௌ=பாலனை
மார்க்கண்டேயுனி=மார்க்கண்டேயனுடைய
பக்திகி=பக்திக்கு
ஸந்தஸில்லி=அனுகூலமாகஇசைந்து
வேகமே=சீக்கிரமாக
காலுனி=நமனை
ஒகபாதமுன=ஒருகாலால்
துனிமி=உதைத்துத்தள்ளி
கருணிஞ்சிதிவி=கருணைசெய்தாய்
அதிகாகனு=அதல்லாமலும்
காலகூட்ட=விஷத்தின்
பாத=கஷ்டத்தைப்பற்றி
ஸைரிம்பக=வருத்தமடையாமலிருக்க
க்ரதுபுஜுலு=யாகத்தைப்புஜிக்கிறவர்கள்(தேவர்கள்)
எல்லனு=எல்லோரும்
கூடி=ஒன்றுசேர்ந்து
சால=நன்றாக
நீதோ=உன்னிடம்
மொரலிடி=முறையிட்டு
வேடுகொன்ன=வேண்டிக்கொள்ள

# இராக லக்ஷணம்.

80-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## இராக ஸஞ்சாரம்.

(1) சரிகமபதா****நிச்ா****-ச்நீ****தபமகா****ரிசா****=

(2) ரிகா**மபதநிதா****நிச்ா****-ச்நிச்ரி****ச்நிதநீ****தபம-கமபதநிதாபமக-
பமதபமகாரி-கமகரிசா****=

(3) மகபமதபநிதா**-நிச்ரி-தநிச்பதநிமபதகமப-ரிகம-
சகரிமகபமதபநிதச்நிரி-நிக்ரிநி-தநிச்ரி****ச்நிதநீ****தபம-
கமபதநிதா**பமக-கமதபமகா**ரி-கமா****கரிசா****=

(4) ரிகமா****மா****-பாதப பமகா**கா**கமகமபா**பா**-
பாதநிதாநிபா** பா**-மாபதபாதப.மா** மா**-காமபமாபமகா**கா**-
கமகமபதநீ**தநீ**தநிதநிச்ா**** ச்நிச்ாரிச்ச்நிநீ**-
தநிச்ரிக்ா**ரிக்ரிக்ம்க்ரி**ச்-நிச்நிச்ரிச்ா**ரிச்நிதநிச்நீ**தபமகா**-
கமபா**தநிதபமகா**-மகபமதபமகா**ரிகரிகமாபம கா**ரிசா****=

(5) மகரிசா**-பமகரிசா**-தபமகரிசா**-நிதபமகரிசா**-
ச்ா****நிதபமகரிசா**-சரிசரிகரிகமகமபமபதப-தநிதநிச்நி-
ச்ரிச்க்ரி**க்ம்க்ரிச்ா**-ரிக்ரிச்நீ**ச்-ரிச்நிதா**நி-ச்நிதபா**தமப-
கமபதநிச்ரிக்ம்ா****க்-ரிக்க்ரிச்நிதநீ**தப-மதபமபகா****-
மகபமதபமகா****-கரிநிரிநிரிகமா**க-ரிககரிசா****-
நிதநீ****ரிசா****=

## 14. பிலஹரிராகம்– 29-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ=ச, ச-ரி, அ-க, ப, ச-த, ச
அவ=ச, கா-நி, ச-த, ப, சு-ம, அ-க, ச-ரி

## இலக்கணம்.

"ஆரோஹேமத்யமோவக்ர:
க்வசித்யோகோநிஷாதக:
பிலாஹரீராககத்யா
ஸர்வகாலேஷுகீயதே"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

இதன்பொருள்:— ஆரோஹணத்தில் மத்யமம் வக்ரம், சில ஸமயத்தில் நிஷதம் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. பிலாஹரிராகமானது எந்தக்காலமும் பாடத்தக்கது.

குறிப்பு:— ஆரோஹணத்தில் மத்யமத்தை வக்ரமாகவும், சில ஸமயங்களில் நிஷாதத்தைச் சேர்த்தும் பாடவேண்டுமென்று ச்லோகத்தில் சொல்லப்பட்டிருப்பதால் சரிமகபதநிசா என்று சில சந்தர்ப்பங்களிலும், சரிமகபதசா என்று பெரும்பாலும் உபயோகப்படுத்தவேண்டுமென்ருகிறது. ஆனல் இவ்வாறு தற்காலத்தில் விசேஷமாக அனுபவத்திலில்லை. அனுபவத்திலுள்ளபடி ஆரோஹண அவரோஹண ஸ்வரங்களும் ஸஞ்சாரங்களும் இதில் எழுதப்பட்டிருக்கிறது. அவரோஹணத்தைப்பற்றி ச்லோகத்தில் ஒன்றும் சொல்லப்படாததால் ஸம்பூர்ணமென்றே ஊகிக்கவேண்டும்.

## இராக ஸஞ்சாரம்.

(1) சரிகபா****தச்ா****–ச்நீ****தபமகரிகரிசா**** =

(2) கரிகபா**பா**–பாதபபமமா****–மகரி–கபதா**தா**–
பாதநிதநிபா**பா**–மகபதச்ா**ச்ா**–ச்நிரீச்நிதா**–
பதநிகபதபா****மகரி–கபமகா**ரி–சாரிகரீகசா** =

(3) கதபதா****பமக–ரிகபா****–சரிகபா****–தசரிகபா****–
பமதபமகாரிசரிகபா****–தநிபா****–தரீச்நிதபா****–ரச்ரீக்ா****ரீ–
ச்ாரீக் ரீக்ச்ா****நி–தநிபா****–தரீரீ****ச்நிதபா****–
தநிபதா**பமகரி–கபதச்ா****–கபதபா****மகரி–கதபமகரி–
கபரிகபமா****க–ரீகரீகசா****நிதா**சா**** =



(4) கரிகா****கா****–காபமமககா** –கரிரீ**சாரி கரிகசா**சநிதா**–
சரிகரிகா**கா**–ரீகரிகபா**பா**–பாதநிதாநிபா**–
பா**பமதபமகா****–கபதநிதா**நி–பதச்நிதா**–பதபா****நிதபமக–
பதச்ா****ச்ா****–ச்நிரீச்ா****நிதா–தநிதரீ****ச்–
நிரீச்நிதபா****–தச்ரீக்ா**ரீ–க்ரீச்நிதரீ**ச்நித–ச்நிதபதபா**மகரி–
கபதா**நிபதகதபமகரி–கபரிகபமா**க–ரிககரிசா**** =

(5) சரிசகரிபகதபநிதரீ–ச்க்ரீக்ப்ம்ா**க்–ரீக்ம் க்ாம்–ரீக்ச்ா****நிதா**–
பதச்ரீ**கபதச்ரீ**–ச்நிச்தநி–பதநி–கபதநி–சரிகபதநிபா****மகரி–
கதபா****நிதபமகரி–கபரீ****கபமா****க–ரீகரீகசா****–
நிதா**கரிசா**** =

## 15. கேதாரம்– 29-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ=ச, அ–க, சு–ம, ப, கா–நி,
அவ=ச், கா–நி, ப, சு–ம, அ–க, ச–ரி,

## இலக்கணம்.

"கேதாரஷ்ஷாடவோராகோ
தைவதஸ்வரவர்ஜித:
ஆரோஹேவக்ரகாந்தாரஷ்
ஷட்ஜக்ரஹஸமன்வித:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

இதன்பொருள்:— கேதாரமென்ற ராகமானது ஷாடவராகத்தைச்சேர்ந்தது அதாவது ஆறு ஸ்வரங்களையுடையது. தைவதமென்ற ஸ்வரத்தை வர்ஜிக்கவேண்டும். ஆரோகணத்தில் காந்தாரமென்ற ஸ்வரத்தை வக்ரமாகப்பிடித்துப் பாடவேண்டும். இந்த ராகம் ஷட்ஜக்ரஹத்தைச்சேர்ந்தது.

குறிப்பு:— ச்லோகத்தின் கருத்துப்படிக்கு இந்த ராகத்தின் ஆரோஹண அவரோஹண ஸ்வரங்கள் சரிமகமபநிசா–சநிபமகரிசா யென்ருகிறது. அனுபவத்தில் சம்கமபநிசா யென்று ஆரோஹணத்தில் ரிஷப ஸ்வரத்தையும் வர்ஜித்தும,

அவரோஹணத்தில் சிற்சில சந்தர்ப்பங்களில் அபூர்வமாக சதுர்ச்ருதிதைவதத்தைக்காண்பித்தும் பாடிவருகிறார்கள். ஆன்றோர் பாடியிருக்கிற கீர்த்தனைகளில் பெரும்பாலும் தைவத ஸ்வரஞ்சேர்த்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஆரோஹணத்தில் மட்டிலும் ரிஷபஸ்வரத்தை வர்ஜித்திருப்பதாகத் தெரிகிறது.

## இராக ஸஞ்சாரம்.

(1) சமகமபநீ**நிச்ா****—ச்நிபா**மகா****ரி—சரிசா**** =

(2) மகமபா**பா**— பாநிப பமமா**—மா**மகா**ரிரீ****—சாரிகரீகசா**—
சநிபா****சநிசமகரிசரிசா**** =

(3) பமா**மகரிசநிபா****—சநிசமா**மக மபா****—பாநி பமா****ப—
கமபா**—நிநிச்ா****—ச்நிச்க்ா****ரீ—ச்ாரீக்ரீக்ச்ா****—
நிபா****—பநிச்ா****ரீச்நிபா**ம—கமபநீ****நிபமகா**ரி—சரிசா**** =

(4) மகரிசா**—பமகரிசா**—நிபமகரிசா**ச்ா**நிபமகரிசா**—
ரீச்க்ரீ**ச்நிபமகா**ரிசா**—மகமபா**நிமப—நிநிச்நிநிச்ா******—
ச்நிச்ரீச்நிச்பாநி—மபகாம—ரிகசாநி—பநிசமகமபநீபமகாரி—சரிசா**** =

(5) கமபநிநிச்ா**—மகமபநிநிச்ா**—ச்நிச்க்ா**ரீ—ச்ாரீக்ரீ க்ச்ா**—
ச்நிச்ரீ**ச்—ச்நிபா****ம—கமபாநி பாநி—பமமா—மாப மாப—
பமகா**ரி—சாரிகரீகசா****—சநிரிசநிபா****—பநிசமகரி—
சபமகரிச—நிபமகரிச—ச்ா**நிபமகரிச—க்ரீம்க்ா**ரீச்நிபநிபா**மகரி—
சரிசா**** =

இன்னும் வரும்

பத்திராதிபர்.

# நீதி

## 40-வது பக்கத்தின் தொடர்ச்சி.

நிந்தந்துநீதிநிபுணாயதிவாஸ்துவந்து
லக்ஷ்மீஸ்ஸமாவிசதுகச்சதுவாயதேஷ்டம்
அத்யைவவாமரணமஸ்துயுகாந்தரேவா
ந்யாய்யாத்பத: ப்ரவிசலந்திபதம்நதீரா: (5)

(பொருள்) தீரர்கள், நீதிசாஸ்த்ரங்களில் நிபுணர்களாயிருப்பவர்கள் தங்களை நிந்தித்தாலும்சரி, புகழ்ந்தாலும்சரி, லக்ஷ்மியானவள் தன்னிடம் வந்தாலும்சரி, வராமல் விலகினாலும்சரி, இப்பொழுதாவது யுகாந்தரத்திலாவது மரணம் வந்தாலுஞ்சரி, எவ்விதமான கஷ்டசுகங்களை அநுபவித்தாலும் நியாய மார்க்கத்தினின்றும் கொஞ்சமேனும் விலகார்கள்.

காந்தாகடாக்ஷவிசிகாநலுனந்தியஸ்ய
சித்தம்நநிர்தஹதிகோபக்ருசாநுதாப:
தர்ஷந்திபூரிவிஷயாச்சநலோபபாசா
லோகத்ரயம்ஜயதிக்ருத்ஸ்னமிதம்ஸதீர: (6)

(பொருள்) உலகத்தில் எந்த மனிதர்களுடைய மனதை ஸ்திரீகளது கடைக்கண்பார்வை என்ற அம்பானது பிளக்காதோ, எவனது மனதை கோபாக்கினியானது எரிக்காதோ, அநேக விஷயங்களும் லோபமென்ற பாசமும் எவனை ஆசையுள்ளவனுக்காதோ, அப்படிப்பட்டவன் மூன்றுலகங்களையும் ஜயிக்கின்றான்.

கதர்த்திதஸ்யாபிஹிதைர்யவ்ருத்தேர்
நசக்யதேதைர்யகுண: ப்ரமார்ஷ்டும்
அதோமுகஸ்யாபிக்ருதஸ்யவன்ஹேர்
நாதச்சிவாயாந்திகதாசிதேவ (7)

(பொருள்) தைர்யசாலியாயிருப்பவன்தான் நாநாவிதமான கஷ்டங்

களால் பிடிக்கப்படினும் தன் தைரியத்தைக் கைவிடமாட்டான். அக்கினியைத் தலைகீழாகப்பிடித்தாலும் ஜ்வாலையானது தலைகீழாகப்போகாதன்றே!

வரம்ச்ருங்கோத்ஸங்காத்குருசிகரிண:க்வாபிவிஷமேபதித்
வாயம்காய:கடினத்ருஷதம்தேவிகளித:
வரம்ந்யஸ்தோஹஸ்த:பணிபதிமுகேதீக்ஷ்ணதசனே
வரம்வன்ஹௌபாதஸ்ததபிக்ருதச்சீலவிலய: (8)

(பொருள்) தங்கள் நற்சுபாவங்களினின்றும் விலகுவதிலும், உன்னதமான மலையினின்றும் காடு முரடான பூமியில் விழுந்து இச்சரீரம் சின்னபின்னமாவதுமேல், மிகக்குரூரமான பற்களுள்ள ஆதிசேஷனது வாயில் கையிடுவதும்மேல், நெருப்பில் விழுவதும்மேலாகும்.

வன்ஹிஸ்தஸ்யஜலாயதேஜலநிதி:குல்யாயதேதத்க்ஷணாந்
மேருஸ்வல்பசிலாயதேம்ருகபதிஸ்ஸத்ய:குரங்காயதே
வ்யாளோமால்யகுணாயதேவிஷரஸ்:பீயூஷவர்ஷாயதே
யஸ்யாங்கேகிலலோகவல்லபதரம்சீலம்ஸமுன்மீலதி (9

(பொருள்) ஸகல லோகத்திலும் கொண்டாடப்படும் நற்குணமென்பது எவனிடமிருக்கின்றதோ அவனுக்கு அக்கினியானது தண்ணீருக்குச் சமமாகும். விரிந்த கடல் சிறு குட்டையாகும். மகமேருமலையானது சிறுகல்லாக ஆய்விடும். சிம்மமானது மான் போலாகிவிடும் ஸர்ப்பமானது பூமாலையாய்விடும். காளகூட விஷமும் அமுதமாகும். அதாவது அவனுக்கு ஒன்றும் அசாத்தியமில்லை.

சின்னோபிரோஹதிதரு:க்ஷீணோ
ப்யுபசீபதேபுனச்சந்த்ர:
இதிவிம்ருசந்தஸ்ஸந்தப்யந்தே
நவிச்லதேஷு லோகேஷு (10)

(பொருள்) விருக்ஷங்கள் வெட்டப்பட்டாலும் மறுபடி துளிர்க்கின்றன. சந்திரன் குறைந்தாலும் மறுபடி வளர்கிறது என்பதை



யோசித்து நல்லோர்கள் தாங்கள் கஷ்டமநுபவிக்கும்போதும் மனம் வருந்தார்கள்.

ஐச்வர்யஸ்யவிபூஷணம்ஸுஜனதாசௌர்யஸ்யவாக்ஸம்யம:
ஜ்ஞானஸ்யோபசமச்ருதஸ்யவிநயோவித்தஸ்யபாத்ரேவ்யய:
அக்ரோதஸ்தபஸ:க்ஷமாப்ரபவிதுர்த்தர்மஸ்யநிர்வ்யாஜதா
ஸர்வேஷாமபிஸர்வகாரணமிதம்சீலம்வரம்பூஷணம் (11)

(பொருள்) ஐசுவர்யமுடையவனாயிருப்பதற்கு நல்லோனாயிருப்பதும், சௌர்யத்திற்கு மௌனமும், ஞானமுடையவனாயிருப்பதற்கு விவேகமும், சாஸ்திரமறிந்திருப்பதற்கு அடக்கமும், தனத்திற்கு நல்ல பாத்திரத்தில் செலவிடுதலும், தவத்திற்குக் குரோதமின்மையும், பிரபுத்துவத்திற்குப் பொறுமையும், தர்மத்திற்குக் கபடமின்மையும் (பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராமை) எல்லோருக்கும் எல்லா ஸம்பத்திற்கும் நல்லசுபாவமும், அலங்காரமாகும்.

## தெய்வபத்ததி.

நேதாயஸ்யப்ருஹஸ்பதி:ப்ரஹரணம்வஜ்ரம்ஸுராஸ்ஸைநிகா:
ஸ்வர்கோதுர்கமநுக்ரஹ:கலுஹரேரைராவணோவாரண:
இத்யாச்சர்யபலான்விதோபிபலபித்பக்ன:பரைஸ்ஸங்கரே
தத்யுக்தம்நநுதைவமேவசரணம்திக்திக்வ்ருதாபௌருஷம் (1)

(பொருள்) தேவேந்திரனுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரியோ வியாழபகவான், ஆயுதமோ வஜ்ஜிரம், சேனைகளோ தேவதைகள், கோட்டையோ சுவர்க்கம், ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்ரஹம், ஏறும் யானையோ ஐராவதம், இப்படி ஆச்சர்யமான பலமுடையவனாயிருந்தாலும் அவ்விந்திரன் சத்துருக்களால் தோற்கடிக்கப்பட்டான். ஆகையால் புருஷப்பிரயத்னம் எவ்வளவிருப்பினும் தெய்வபலமில்லாவிடில் கொஞ்சமும் பயனில்லை.

பக்நாசஸ்யகரண்டபிண்டிததனோர்ம்லாநேந்த்ரியஸ்யக்ஷுதா
க்ருத்வாகுர்விவரம்ஸ்வயம்நிபதிதோநக்தம்முகேபோகின:

த்ருப்தஸ்தத்பிஸிதேனஸத்வரமஸௌதேனைவயாத:
பதாஸ்வஸ்தாஸ்திஷ்ட தைவமேவஹிந்ருணாம் வ்ருத்தௌ
[க்ஷயேகாரணம் (2)

(பொருள்) ஒரு பாம்புப்பிடாரன் ஒரு பாம்பைப்பிடித்து ஒரு பெட்டியிலடைத்து வைத்திருந்தான். அது தன் ஆசைகளையெல்லாம் ஒழித்து தான் இனி இவனிடமிருந்து தப்பமாட்டோமென்று தன்உடலை மண்டலாகாரமாய்ச் சுற்றிக்கொண்டு மிகுந்த பசியுடன் அப்பெட்டிக்குள் படுத்திருந்தது. அப்போது ஒரு எலியானது அப்பெட்டிக்குள் ஏதோ தின்பண்டமிருக்கின்றது அதைத்தின்று தன் பசியைத்தீர்த்துக் கொள்ளலாமென்ற எண்ணத்துடன் அப்பெட்டியைத் துவாரம்செய்து அதற்குள் நுழைந்தது. இதைப் பார்த்த பாம்பானது மிகுந்த பசியோடிருந்தமையின் அவ்வெலியைத்தின்றுவிட்டு அது செய்துகொண்டுவந்த துவாரத்தின் வழியாய்த்தான் வெளிச்சென்று பிடாரன் கையினின்றும் தப்புவித்துக்கொண்டது. பிடாரனானவன் இப்பாம்பைக் கொண்டுபோய் வெளியில் வேடிக்கைகாட்டிப் பிழைக்கலாமென்ற நம்பிக்கையுடன் அப்பெட்டியை எடுக்கும்போது அதில் ஒன்றுமில்லை. இவ்விஷயத்தை யோசிக்கும்போது என்னவேற்படுகிறதென்றால் புருஷப்பிரயத்னம் எதுவும் பயன்படுவதில்லை.

யதாகந்துகபாதேநோத்
பதத்யார்ய:பதன்னபி
ததாத்வநார்ய:பததிம்
ருத்பிண்டபதனம்யதா (3)

(பொருள்) தெய்வபக்தியுள்ளவன் யாதேனுமொரு காரணத்தால் தாழ்மையையடைந்தாலும், பந்தானது கீழேவிழுந்து எப்படி மேலே கிளம்புமோ அவ்விதமாக மறுபடியும் மேன்மையடைவான். தெய்வ பக்தியில்லாதவனோ மண்ணாங்கட்டிபோல ஒருபோதும் மேன்மையடையமாட்டான்.

கர்வாடோதிவஸேச்வரஸ்யகிரணைஸ்ஸம்தாபிதேமஸ்தகே
கச்சன்தேசமனாதபம்த்ருதகதிஸ்தாளஸ்யமூலம்கத:



தத்ராப்யஸ்யமஹாபலேனபததாபக்னம்ஸசப்தம்சிர:
ப்ராயோகச்சதியத்ரதைவஹதகஸ்தத்ரைவயாத்யாபத: (4)

(பொருள்) மயிரற்றதலையன் (வழுக்கைத்தலைய) னொருவன் ஒரு சமயம் வெயிலில் சஞ்சரிக்கும்போது உஷ்ணம் சகிக்கமுடியாமல் எங்கேயாவது கொஞ்சம் நிழலிருந்தால் சௌகரியமாயிருக்குமென்று நினைத்து நாற்புறமும் நோக்குங்கால் ஓர் பனைமரம் கண்ணிற்குத் தென்பட்டது. அதனடியில் சற்றுத் தங்கலாமென்றங்கு சென்றான். இவன் அதனடியிலடைந்ததும் அம்மரத்தினின்றும் ஒரு பெரிய பனம்பழம் இவன் தலையில் விழுந்து தலையைச்சுக்கலாய்ச் செய்துவிட்டது. ஆகையால் தெய்வீகமான ஆபத்துக்களினின்றும் நாம் எப்படியும் தப்புவதரிது.

கஜபுஜங்கவிஹங்கமபந்தனம்
சசிதிவாகரயோர்க்ருஹபீடனம்
மதிமதாஞ்சவிலோக்யதரித்ரதாம்
விதிரஹோபலவானிதிமேமதி: (5)

(பொருள்) தரையில் வசிக்கும் பிராணிகளுள் மிகப்பெரிதும் மிகுந்த பலமுள்ளதுமான யானையும், கடுமையான விஷத்தையுடைய ஸர்ப்பமும், ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளும் மனிதர்கையில் கட்டுப்படுவதையும், சூரியசந்திரர்களுக்கு இராகு கேதுக்களால் பீடை ஏற்படுவதையும் மிகுந்த அறிவுள்ளவர்களும் வறுமையில் துன்பப்படுவதையும் யோசித்தால், விதிதான் மிகுந்த பலமுள்ளதென்பது எனதபிப்பிராயம்.

ஸ்ருஜதிதாவதசேஷகுணாகரம்
புருஷரத்னமலங்கரணம்புவ:
ததபிதக்ஷணபங்கிகரோதிசே
தஹஹகஷ்டமபண்டிததாவிதே: (6)

(பொருள்) பிரமனானவன், உலகத்தில் சகல குணங்களுக்கும் இருப்பிடமாயும், பூமிக்கே ஒரு ஆபரணம் போன்றவனான ஓர் புருஷரத்னத்தைச் சிருஷ்டித்து, அந்த ரத்னமானது க்ஷண காலத்திலேயே

அழியும்படிக்கும் செய்துவிட்டால் அப்பிரமனது அறிவின்மையை என்னென்று சொல்வது, மிகவும் கஷ்டம்.

அயமம்ருதநிதானம்நாயகோப்யோஷதீனும்
சதபிஷகநுயாதச்சம்புமூர்த்னேவதம்ஸ:
விரஹயதிநசைனம்ராஜயக்ஷ்மாசசாங்கம்
ஹதவிதிபரிபாக:கேனவாலங்கனீய: (7)

(பொருள்) அமிருதத்திற் கிருப்பிடமும், மூலிகைகளுக்கு எஜமானனும் "சதபிஷக்" என்ற வைத்தியனாலநுசரிக்கப்பட்டவனும், பரமசிவனது சிரசுக்கு ஆபரணமானவனுமாகிய சந்திரனையே "ராஜயக்ஷ்மா" வென்ற க்ஷயரோகமானது விடவில்லையாகையால் விதியைவெல்லலரிதாம்.

ப்ரியஸகிவிபத்தண்டாகாதப்ரவாதபரம்பரா
பரிசயபலேசிந்தாசக்ரேவிதாயவிதி:கல:
ம்ருதமிவபலாத்பிண்டீக்ருத்யப்ரகல்பகுலாலவத்
ப்ரமயதிமனோனோஜாநீம:கிமத்ரவிதாஸ்யதி (8)

(பொருள்) என்னருமைத் தோழா! துஷ்டனை பிரம தேவனானவன், மிகவும் சாமார்த்தியசாலியான குயவன்போல என்மனதை மண்மொத்தையைப்போல் பலாத்காரமாய்ப் பிண்டமாகப்பிடித்து, தண்டத்தினலடிப்பதுபோல ஆபத்துக்களாகிற பெருங்காற்றுடன் கூடிய சிந்தை என்னும் சக்கிரத்திலிட்டுச் சுற்றுகிறுன். இவ்விதமாகச்சுற்றி பிறகு என்மனதை என்ன செய்வானே!

விரமவிரமாயாஸாதஸ்மாத்துராத்யவஸாயதோ
விபதிமஹதாம்தைர்யத்வம்ஸம்யதீக்ஷிதுமீஹஸே
அயிஜடவிதேகல்பாபாயேப்யபேதநிஜக்ரமா:
குலசிகரிண:க்ஷுத்ராநைதேநவாஜலராசய: (9)

(பொருள்) அறிவிலியான பிரம்மதேவா! ஆபத்துக் காலங்களில் மஹான்கள் தங்கள் தைரியத்தை இழந்துவிடுவார்கள் என்று வேடிக்கை பார்க்க நினைக்கிருயே! இந்தப் பயனற்ற எண்ணத்தைவிட்டுவிடு. அது



ஒருபோதும் முடியாது. ப்ரளயகாலத்தில் குலபர்வதங்களும் ஸமுத்திரங்களும் தங்கள் எல்லையைவிட்டு விலகினாலும் அவைகள் நிசமானவைகளல்ல. (அவைகளுடைய பெருமை ஒருக்காலும் குறைவுறாது)

தைவேநப்ரபுணாஸ்வயம்ஜகதியத்யஸ்யப்ரமாணீக்ருதம்
தத்தஸ்யோபநமேன்மனாகபிமஹான்னைவாச்ரய:காரணம்
ஸர்வாசாபரிபூரகேஜலதரேவர்ஷத்யபிப்ரத்யஹம்
ஸூக்ஷ்மாஏவபதந்திசாதகமுகேத்வித்ரா:பயோபிந்தவ: (10)

(பொருள்) சாமர்த்திய சாலியாகிய தெய்வத்தினால் எந்த மனிதனுக்கு எந்த சமயத்தில் எது கிடைக்குபடியாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதோ அது அவ்விதமாக யேற்படுமேயொழிய வேறு விதமாய் மாறாது. பெரியோர்களை ஆச்ரயிப்பது காரணமாகாது. எல்லா திக்குகளிலும் பரவியிருக்கும் மேகமானது ஒவ்வொரு நாளும் மழையை வர்ஷித்துக் கொண்டேயிருந்தாலும் சாதகபக்ஷியின் வாயில் மிகச்சிறிய நீர்த்துளிகள் ஒன்றிரண்டுதான் விழுமேயொழிய அதிகமாய் விழாது. ஆகையால் பெரிய இடத்தை அண்டுவதால் பிரயோசனமில்லை.

ஏனைவாம்பரகண்டேனஸம்வீதோநிசிசந்த்ரமா:
தேனைவசதிவாபாநுரஹோதௌர்கத்யமேதயோ: (11)

(பொருள்) இரவில் எந்த வஸ்திரத்தினால் சந்திரன் மூடப்படுகிறானோ அதே வஸ்திரத்தினாலேயே பகலில் சூரியனும் மூடப்படுகிறான் இவர்களது துர்கதியானது எவ்வளவாச் சரியமாயிருக்கின்றது.

## கர்மபத்ததி.

நமஸ்யாமோதேவான்னனுஹதவிதேஸ்தேவிவசகா
விதிர்வந்த்யஸ்ஸோபிப்ரதிநியதகர்மைகபலத:
பலம்கர்மாயத்தம்யதிகிமபரை:கிஞ்சவிதிநாநம
ஸ்தத்கர்மப்யோவிதிரபிநயேப்ய:ப்ரபவதி (1)

(பொருள்) தேவதைகளுக்கு நமஸ்காரம் செய்கிறேன். அந்த தேவதைகளும் பிரம்மாவுக்குள்ளடங்கி நடப்பவர்களாகையால், அந்த

தேவர்களைவிட்டுப் பிரமனுக்கு நமஸ்கரிக்கிறேன். அந்த பிரம்மாவும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்த கர்மங்களுக்குத்தக்க பலனைக் கொடுக்கக்கூடியவரேயன்றி அதிகமாகவாவது குறைவாகவாவது கொடுக்கமுடியாது. ஆகையால் பலனைக்கொடுக்ககூடியது கர்மமேயன்றி வேறில்லையாதலின் மற்ற தேவதைகளால் யாதுபயன்? பிரமனால்தான் யாதுபயன்? ஒன்றும் பயனில்லை. ஆகையால் எல்லாவற்றையும் விட்டு கர்மத்திற்கு நமஸ்கரிக்கிறேன்.

ப்ரம்மாயேனகுலாலவந்நியமிதோப்ரம்மாண்டபாண்டோதரே
விஷ்ணுர்யேநதசாவதாரகஹனேக்ஷிப்தோமஹாஸங்கடே
ருத்ரோயேநகபாலபாணிபுடகேபிக்ஷாடனம்ஸேவதே
ஸூர்யோப்ராம்யநித்யமேவககனேதஸ்மைநம:கர்மணே (2)

(பொருள்) எந்தக் கர்மாவினால், பிரம்மாவானவர் பிரம்மாண்டமாகிய பாண்டத்தின் மத்தியில் குயவன்போல் நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ விஷ்ணுவானவர் மிகவும் கஷ்டமான தசாவதாரமென்னும் காட்டிற்குள் பிரவேசிக்கும்படி நேர்ந்ததோ, பரமசிவன் கையில் பிரமகபாலமேந்திப் பிச்சை எடுக்கும்படியாயிற்றோ, சூரியனானவன் அரை நிமிஷமேனும் ஓய்வின்றி ஆகாயத்தில் எப்போதும் திரிந்து கொண்டேயிருக்கும்படி நேர்ந்ததோ, அந்தக் கர்மத்திற்கு நமஸ்காரம்.

யாஸாதும்ச்சகலான்கரோதிவிதுஷோமூர்க்கான்ஹிதான்த்வே
ஷிண:
ப்ரத்யக்ஷம் குருதேபரோக்ஷம ம்ருதம்ஹாலஹலம் தத்க்ஷ
[ணாத்
தாமாராதயஸத்க்ரியாம்பகவதீம்போக்தும்பலம்வாஞ்சிதம்
ஹேஸாதோவ்யஸனைர்குணேஷுவிபுலேஷ்வாஸ்தாம்வ்ருதா
[மாக்ருதா: (3)

இன்னும்வரும்

Ramachandra Iyer.

## அஞ்ஞான குருவின்கதை.

38-வது பக்கத்தின் தொடர்ச்சி.

மந்திரி:— சின்னத்தம்பி வாத்தியாரே! தாம் இந்த கொலையாளி வீரசாமியுடன் இந்த பெட்டியினுட் புகுந்துகொண்டு நடுக்காட்டிலிருக்கக்காரணமென்ன?

சின்னத்தம்பி:— மஹாபிரபோ! நானோ ஏழை பிராமணன். இந்த ஸமஸ்தானத்தில் பூர்வீகாள் காலமுதல் குலகுருவாக என்னை ஆதரித்து வந்தார்கள் இப்பொழுது சாப்பிடுகிறதும் மஹாராஜாவின் அன்னமேயன்றி வேறில்லை. அப்படியிருக்க இந்த மஹா சபையில் மகாராஜா ஸன்னிதானத்தில் எதார்த்தமாக நடந்ததைச் சொல்லுகிறேன். அதில் ஏதேனும் கூட்டிக் குறைத்துச்சொல்ல என் மனம் துணியாது. சென்ற ஐந்து தினங்களுக்குமுன் ஒருநாள் இரவில் ராஜகுமாரத்தி தாயம்மையின் தப்பு நடத்தைக்காக ஓர் பெட்டியுனுள் அவளை வைத்துப் பூட்டி நடுக்காட்டிற் கொண்டுபோய் அவளை விட்டுவரும்படி மகாராஜா உத்திரவாச்சுது. அவ்வாறு அவளை கொலையாளிகள் கொண்டுபோனார்கள். அது விஷயம் எனக்கும் தெரியுமாகையினால் கொலையாளிகளின் பேரில் எனக்கு சந்தேகமுண்டாகி அதைக்கவனிக்கும் பொருட்டு நானும் சென்றேன் காட்டில் சிறிது தூரத்திற்கப்பால் பெட்டியை கீழேயிறக்கி வைத்துக்கொண்டு அதன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கொலையாளி வீரசாமியைக்கண்டேன் பெட்டியின் பூட்டெல்லாம் உடைக்கப்பட்டிருந்தது. ராஜகுமாரத்தியையும் அதிற்காணவில்லை. ஏதோ மோசம் செய்துபோட்டான்பென்று தீர்மானித்து அவனிடம் நீ என்ன காரியம் செய்தாயடாபபலே! என்று கோபித்துக்கேட்டேன். உடனே அவன் என்னைப்பேசிய பேச்சும் அடித்த அடியும் சொல்ல ஸாத்தியப்படாது. இன்னும் சிறிது காலம் இப்பூமியிலிருக்க வேண்டிய பிராப்தமிருப்பதால் என் பிராணனிருக்கிறதேதவிர இல்லையாகில் அப்பொழுதே உயிர் போயிருக்கும். எனக்கு ஆகாரமும் கிடையாது. ஏதோ காட்டிலுள்ள சிலகிழங்குகளைக் கொண்டு வந்துபோட்டு இதைத்தான் தின்ன வேண்டுமென்று அடித்தான். அடியும் பசியும் பொறுக்க முடியாததினால் அதையே தின்று

தண்ணீரைக் குடித்தேன். இதன் மத்தியில் சில சிப்பாய்கள் வந்து எங்களை உடனே அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வரும்படி மகாராஜா உத்திரவாகியிருப்பதாகச் சொன்னார்கள் அவ்வாறு வந்து சேர்ந்தோம். இதைத்தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது.

மந்திரி:— வீராசாமீ! நீ பெட்டியைக் கொண்டுபோனது முதல் இதுவரையிலும் நடந்த விஷயங்கள் முழுமையும் ஒளியாமற் சொல்ல வேண்டும்!

வீராசாமி:— சாமிங்கோ! நாலஞ்சு நாளைக்கு முந்தி ஒருநாள் ராத்திரி மகாராஜா ஒரு பெட்டியைக் குடுத்து நடுக்காட்டிலே கொண்டு போயி வச்சிட்டு வாங்கடாயின்னு உத்திரவு கொடுத்து கருப்பனையும் கூட அனுப்பிச்சாங்கோ. நாங்க போறப்போ பொட்டிக்குள்ளே ஆளு சத்தங் கேட்டிச்சு கீளே இறக்கி உடைச்சுப் பார்த்தோம். அதிலே நம்ம ராசாத்தியம்மாயிருந்துக்கிட்டு என்னை எங்கடா கொண்டு போறீங்கள்யின்னு கேட்டாங்க. நாங்க ஒன்னுந்தெரியாதம்மா மகாராசா உத்திரவாச்சுங்க அந்தப்படி தூக்கிக்கிண்ணு வந்தோம் ஆனா நம்ம குரு சாக்கிறதையாகப்போ நானும் வந்து பாப்பேனின்னு சொன்னாங்க இன்னு சொன்னோம் அந்தம்மா இது குரு செஞ்ச வேலைதானின்னு சொன்னாங்கோ ஏனம்மா ஒங்க மேலே அவருக்கு இந்த கோபம் என்னு கேட்டேன் அதுக்கு அந்த அம்மா குருதச்சணைக்குப் பதிலாக என்னைப் பெண்டாட்டியாயிருக்கச் சொன்னாரு நான் முடியாது இன்னு சொன்னேன். அப்படியானால் மகாராசாயிடத்திலே சொல்லி உன்னைத் தொலைச்சுப் போடுரேன் பாரு இன்னு சொல்லிப்போனாரப்பா எண்டு சொன்னாங்கோ. இன்னம் உனக்கு என்னோடு நகை யெல்லாம் கழத்திக் கொடுத்துடரேன். என்னை எங்கேயாவது பத்திரமாய்க் கொண்டுவிட்டுவிடு இன்னு சொன்னாங்க நான் நீங்க ஒன்னும் எனக்குக் குடுக்கவேண்டாம் அம்மணீ! நம்ம கருப்புன்ணேகூட மாரியாத்தா கோவிலிலேபோயி சவுக்கியமாயிருங்கோ. குரு இங்கே வந்து பொட்டிக்குள்ளே வந்தாக்கா நான் பொட்டிக்குள்ளேயிருந்துக்கிட்டு உதைச்சுபோடுரேனின்னு சொல்லி அம்மாளை கருப்பண்ணேகூட அனுப்பிட்டு பெட்டிக்குள்ளே ஒரு சேலையை முக்காடு போட்டுக்கிட்டு உக்காந்திருந்தேன். கொஞ்ச நேரத்துக்கு பிறகு குரு பொட்டியைத் திறந்துக்கிட்டு என் கிட்டத்திலே வந்து அந்த அம்மா இன்னு நினைச்சுக்கிட்டு என் மேலே கையைப்போட்டுக் கூப்பிட்டாரு. எனக்கு கோபம் ரொம்ப வந்து நீ யாரு என்னு நினைச்சாயடா? சண்டாளா! இன்னு அடிச்சேன். அவரு அடி பொறுக்க முடியாமே கூப்பிட்டாரு அவரோட சீசாக்களின்னு ரெண்டு மூனு பேரு அங்கே வந்து பொட்டியைத் திறந்துக்கிட்டு அவரை விட்டிடும்படிக்குச் சொன்னாங்க அவானையும் விறட்டி ஓதைக்கப் போனேன் அவங்களும் ஓடிப்போயிட்டாங்க. மறுநாள் ரெண்டு மூனு சேவுகரு வந்து மகாராஜா உத்திரவாயிருக்கு நீங்க உடனே அரமனைக்குவரணுமின்னாங்க. அப்படியே பிறப்பட்டு வந்தோம். இதுதான் மகாராசா! நடந்த சத்தியமான சமாசாரம். நீங்க ரெச்சித்தாலும்சரி! பச்சித்தாலும்சரி!

மந்திரி:— சீடர்களான, ரெகுபதீ! கணபதீ! சுந்தரம்! உங்கள் குரு விஷயமாக இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற கேசில் உங்களுக்குத் தெரிந்த வரையிலுள்ள எதார்த்த சங்கதியைச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

ரேகுபதி:— மஹாபிரபோ! இது விஷயமாக நடந்த சங்கதிகளை முன்னமே மஹாராஜா அவர்களிடம் நாங்கள் உடனே வந்து விவரமாகத் தெரிவித்திருக்கிறோம். இப்பொழுதும் சொல்லும்படிக்கு உத்திரவானால் எதார்த்தத்தை தெரியப்படுத்தக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

மந்திரி:— ரெகுபதீ! நீ முன்னமே மஹாராஜா அவர்களிடத்தில் விவரமாக அறிவித்ததாகச் சொல்லுவது முற்றிலும் சரியே. ஆகிலும் இப்பொழுது இச்சபையோர் பலரும் அதை யறிந்திரார்களாகையினாலும், பகிரங்கமான விசாரணைக் காலத்தில் உங்களிடமும் ஒழுங்குப்படி விசாரணை செய்ய வேண்டுமானதாலும் விஷயங்கள் பூராவையும் நீயே சொல்!

ரேகுபதி:— பிரபோ! உத்திரவுப்படி சுருக்கமாகச் சொல்லுகிறேன். சுமார் நாலு அல்லது ஐந்து தினத்திற்குமுன் ஒருநாள் இரவு எங்களுடைய குரு சின்னத்தம்பிபாகவதர் கணபதி, சுந்தரம், இவர்களையும் என்னையும் அழைத்து தான் சிறிது தூரத்திலிருக்கிற வனத்திற்கு அன்றிரவேபோக வேண்டியிருப்பதாகவும், அந்த வனத்தில் ஸரஸ்வதி

தேவி தனக்கு சில வரமளிக்கப் போகிறதாக வாக்களித்திருப்பது போலவும், எங்களையும் துணைக்காககூடவே வரவேண்டுமென்று கட்டளையிட்டார் அவ்வாறு நாங்களும் அவருடன் கூடவே போனோம். சிறிது தூரம் வனத்திற்குள் சென்ற பிறகு ஓர் மரத்தினடியில் ஓர் பெட்டியிருந்தது. அதைக் கண்டவுடன் அதற்குள் ஸரஸ்வதியிருப்பதாகவும் தான் அந்தப் பெட்டியினுட்சென்று அவளுடன் சம்பாஷிக்கும்பொழுது ஏதேனும் கூக்குரல் கேட்டாலும் பெட்டியைத் திறந்து நாங்கள் பார்க்கக்கூடாதென்றும் அவராக எங்களை அழைக்கும்வரையிலும் ஓர் பக்கத்தில் எங்களைப் போயிருக்கும்படி உத்திரவு கொடுத்தார். அவ்வாறு நாங்களும் ஓர் சிற்றோடையினருகிற் போய் உட்கார்ந்துகொண்டு சிற்சில சம்பாஷணை செய்துகொண்டிருந்தோம். சிறிது நேரத்திற்கெல்லாம் பெட்டியினுள் குருவின் சப்தம் தீனசுரத்துடன் கேட்டது. அவர் முன்னதாகப் பார்க்கக் கூடாதென்று கட்டளையிட்டிருந்தபோதிலும், அச்சமயத்தில் அவருக்கு ஏதோ ஆபத்து நேரிட்டு மிகவும் வருத்தத்துடன் கூப்பிடுவதாகத் தெரிந்ததால் உடன் அங்குசென்று பெட்டியைத் திறந்தோம். வீராசாமி யென்ற பேருடைய ஓர் வீரன் அவரைபலமாக அடித்துத்துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். எங்கள் மனம் பொறுக்காமல் அவரைவிட்டு விடும்படிக்கு அவனிடம் மன்றாடிக் கேட்டோம். அவன் எங்களை நீங்கள் யாரென்று கேட்க நாங்கள் இந்த குருவின் சீடர்களென்றோம். இதைக் கேட்டதும் அடே பாவிகளா! ராஜாவின் மகளை பெண்டு பிடிக்க நினைத்த இந்தப் பயலுக்கு நீங்கள் சீடர்களா! அப்படியானால் உங்களையும் இப்பொழுதே மாய்த்து விடுகிறேனென்று கையிலிருந்த தடியை ஓங்கினான். உடனே நாங்கள் ஓடிப்போய் அரண்மனையில் மஹாராஜா அவர்களிடம் நடந்த விருத்தாந்தங்களை அறிவித்தோம் இதைத் தவிர எங்களுக்கு வேறொன்றும் தெரியாது. நடந்த சத்தியம் இதுதான்.

மந்திரி:— சபையோர்களே! மஹாராஜா அவர்கள் இதன் நியாய முழுமையும் முன்னமே அறிந்திருந்தபோதிலும் தன்னுடைய சொந்த கேசு ஆனதால் ராஜ்யத்திலுள்ள பிரஜைகளுக்கும் அறிவித்து அவர்களுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டு சிக்ஷை விதிக்கவேண்டுமென்று நினைத்து ராஜஸன்னிதானத்தில் சபையோராகிய உங்கள்



முன்னிலையில் விசாரணை செய்தார்கள். இனி உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்!

சபையோர்கள்:— மஹாபிரபோ! இந்த தர்ம ராஜ்யத்தில் நாளது வரை மஹாராஜா அவர்கள் நீதி தவறாது செங்கோல் நடத்தி எங்களை அருமையாகவே பாதுகார்த்து வருகிறார்கள். அவருடைய தர்ம நீதிக்காகவே மலைபோல் வரும் ஆபத்துக்களை பகவான் பனிபோல் தீர்த்து வைக்கிறார். நாங்களும் மஹாராஜா அவர்களின் க்ஷேமத்தையும் ராஜநீதியையும் ஓங்கிவளரச் செய்யுமாறு கடவுளிடம் ஸதாகாலமும் பிரார்த்தித்து வருகிறோம். அவ்வாறிருக்க இந்த மஹா பாவியான சின்னத்தம்பி பாகவதன் மஹாராஜாவின் அன்னத்தை தலைமுறை தலைமுறையாக புஜித்துக்கொண்டு இம்மாதிரி கொஞ்சமும் இரக்கமற்று ராஜகன்னிகையை துரோஹஞ் செய்ய நினைத்த சண்டாளனை இப்பொழுதே கழுகு முதலான பறவைகள் கொத்தித் தின்னும்படியான கழு மாத்திலேற்றும்படிக்கு சிக்ஷை விதிக்கவேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறோம்.

அரசன்:— சபையோர்களே! உங்களுக்கு என்னிடமுள்ள மிகுந்த விசுவாசத்திற்கு நான் எப்பொழுதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சின்னத்தம்பி பாகவதராகிய குருவிற்கு உங்கள் அபிப்பிராயப்படி தண்டனை விதிக்கவேண்டியது நியாயமானாலும் அவர் வெகு நாளாக நமது அரண்மனைக்கு குருவாகவும், நமது குழந்தைக்கு வித்தியாப்பியாசஞ்செய்து வைத்தவராகவுமிருப்பதால், அவ்வாறு தண்டனை விதிக்காமல் நமது ராஜ்யத்திற்கு வெளியே அவனை அப்புறப்படுத்தி விடும்படிக்கு உத்திரவு செய்ய அபிப்பிராயப்படுகிறோம். அவ்வாறே நமது குழந்தையும் மந்திரி முதலானவர்களும் வேண்டிக் கொள்கிறார்கள் நீங்களும் அப்படியே சம்மதிப்பீர்களென நம்புகிறேன் என்றார். இதைக் கேட்டதும் சபையிலுள்ள சகல ஜனங்களும் காகோஷம் செய்து மஹாராஜாவினுடையவும் அவருடைய குழந்தை தாயம்மையுடையவும் கருணை நிறைந்த சிந்தைக்கு மிகவும் சந்தோஷித்து மஹாராஜா அவர்களின் உத்திரவுப்படியே நாங்களும் சம்மதிக்கிறோம் என்றார்கள். உடனே சபை கலைந்தது. அரசன் இரண்டு படைவீரரை அழைத்து அடே சேவகர்காள்! நீங்கள் இந்த க்ஷணமே இதோ நிற்கிற சின்னத்தம்பி பாகவதரை

நமது ராஜ்யத்திற்கு வெளியே அப்புறப்படுத்திவிட்டு வரவேண்டும். இனி நமது ராஜ்யம் உள்ள வரையில் அவர் நமது இலாக்காவில் நுழைந்ததாகத் தெரிந்தால் நீங்கள் தகுந்த சிக்ஷைக்குள்ளாவீர்கள் ஜாக்கிறதை! என்று உத்திரவு கொடுக்கவே சேவகர்கள் ஆக்ஞை மஹாராஜ்! என்று வந்தனஞ் செய்துவிட்டு பாகவதராகிய குருவைக் கூடவே அழைத்துச் சென்றார்கள். அரசன் வீராசாமி, கருப்பண்ணன் இவர்களுடைய நல்நடத்தைக்காக வெகுமதி கொடுத்து சம்பளம் பிரமோஷன் செய்தும் சீடர்களான ரெகுபதி, சுந்தரம், கணபதி இவர்களுக்கும் வெகுமதி கொடுத்து அரண்மனை பாடகர்களாக்கி தக்க சம்பளம் ஏற்படுத்த உத்திரவளித்தார். மறுநாள் அரசன் தன் மகள் தாயம்மைக்கு விவாகமாக வேண்டியதைப் பற்றியும் ராஜ்ய பாரத்தை இனி தன்னால் வகிக்க முடியாதென்றும் மறுமகனாக வரப்போகிறவரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துத் தான் வனத்திற்கேகித் தவஞ்செய்ய ஆவலுடையோனாகயிருப்பதாகவும், மந்திரியிடம் சொல்லி இதற்கு யோசனை யென்னவென்று கேட்டார். அதற்கு மந்திரியும் மஹாராஜா அவர்கள் உத்திரவு கொடுப்பதுசரியே நமது தாயம்மைக் கிசைந்த நாயகனை வேறிடங்களிற் போய்த்தேடிக் கண்டு பிடிப்பதைக் காட்டிலும் தற்சமயம் தாயம்மையை வனத்திலிருந்துகூட அழைத்துவந்த கோலாஹலனென்ற ராஜகுமாரன் நற்குண நற்சிந்தையுடையவனாகவும், பார்ப்பதற்கு நமது குழந்தைக்கு இசைந்த ரூப சவுந்தரியமுடையவனாகவும், ராஜவம்சத்தி லுதித்தவனாகவுமிருப்பதாகக் காணப்படுவதால் இவனுக்கே விவாஹத்தைச் செய்து முடித்து ராஜ்யத்தையும் ஒப்புவிக்கலாமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன் என்றார். அரசன் மந்திரி சொல்லியவனைத்தையும் அங்கீகரித்து மந்திரீ! நீர் சொல்லியபடியே செய்வது எனக்கும் மிகுந்த திருப்திதான். முன்னமே நான் இம்மாதிரி மனதில் குறிப்பிட்டுக் கொண்டுதான் உம்முடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ள எண்ணங்கொண்டு கேட்டேன் என்றனர். மந்திரி மிகவும் சந்தோஷித்து நம்முடைய அபிப்பிராயம் ஒத்துமையாயிருப்பதுசரியே. ஆனால் நமது தாயம்மையின் மனதையறிய வேண்டியது இது விஷயத்தில் அவசியமல்லவா? என்றான். அதற்கு அரசனும் அவ்வாறு தெரியவேண்டியது அத்தியாவசியந்தான். ஏனெனில் பல இடங்களிலும் விவாகஞ் செய்துகொள்ளுகிற பெண்ணின் மனதிற்கு ஒவ்வாத



புருஷனை தாய் தந்தையர் ஏதோ அதிகப் பணமிருக்கிறது அல்லது இங்கிலிஷ் படித்திருக்கிறான் யென்ற காரணங்களைக்கொண்டு நிர்ப்பந்தித்துக் கல்யாணத்தை செய்து முடித்துவிடுகிறார்கள். பின்னால் தம்பதிகளின் மனதிற்குப் பிடித்தமன்னியில் ஒருவரோடொருவர் மிகுந்த சண்டைபோட்டுக் கொண்டு அவர்களின் வாழ்நாள் பூராவும் துன்பமாகவே முடிகிறது. இம்மாதிரி எவ்வளவோ இடங்களில் நாம் பார்த்திருக்கிறோம் ஆகையினால் குழந்தையின் ஸம்மதத்தைத் தெரிந்து கொள்ளாமல் இது விஷயத்தில் நாம் தலையிடுவது முற்றிலும் மதியீனமாகும். ஆனதால் அவளுடைய மனதைத் தெரிந்து செய்வதே நலம் என்றார். பிறகு மந்திரி விடை பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்திற்குச்சென்றார். அன்றிரவு அரசனும் தாயம்மையும் போஜனஞ்செய்த பின்னர் தாம்பூலம் அருந்திக் கொண்டிருக்கும்பொழுது, அரசன் தாயம்மையைப் பார்த்து குழந்தாய்! வனத்திலிருந்து உன்னை இவ்விடத்திற்கு கூடவே அழைத்துவந்த கோலாஹலன் யென்ற ராஜகுமாறனுடைய குணம் எப்படி? அவனுடைய யோக்கியதை பராக்கிறமம் முதலியன எவ்வாறென்பது உனக்குத் தெரிந்திருக்கக் கூடுமே! சிறிது சொல்லு பார்க்கலாம் என்றார். அதைக் கேட்டதும் தாயம்மைக்கு ஓர் ஸந்தோஷமும், சிறிது நாணமும், உண்டானவளாகி தலையைக் குனிந்துகொண்டு பிதா கேட்பதைப் பார்த்தால் நமக்கு விவாஹஞ் செய்யக்கருதிக் கேட்டிருக்கலாமோ! அப்படியானால் எனக்குப் “பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல்” ஆகுமே, அல்லது எனக்கு ராஜகுமாரனிடமுண்டான பிரியத்தினால் இவ்வாறு தோற்றுகிறதோ என்றதாக மனதில் சிறிது ஆலோசனை செய்துவிட்டு எப்படியிருந்தாலும்சரி நமக்கு காளி தேவியிருக்கிறாள். நான் நினைத்தபடி முடித்துவைப்பாளென்று மனதில் உறுதி பண்ணிக்கொண்டு பிதாவைப்பார்த்து அப்பா! அவருடைய குணத்தையும், பராக்கிரமத்தையும், யோக்கியதையையும் பற்றிப்புகழ நான் தரமல்ல. அதிகநாள் அவரிடம் எனக்குப் பழக்கமில்லையாகிலும், அவரைக்கண்ட நிமிஷமே என்னிடம் சில சம்பாஷணை செய்ததிலிருந்து அவருடைய கருணை நிறைந்த குணமும், பராக்கிறமமும், அனாதைகளிடத்திலிருக்கும் அன்பும் இவ்வாறிருக்கிறதென்பதை சிறிது தெரிந்து கொண்டேன். இன்னும் விசேஷமாகத் தெரியப் போதுமான காலமும், அறிவும் எனக்கில்லாமையாற் சொல்ல

சாத்தியமில்லை என்றனள். இதைக் கேட்ட அரசன் தாயம்மைக்கும் அனேகமாக அவரிடத்தில் பிரியம் உண்டாகியிருக்கிறதென்பதை அவளுடைய வார்த்தைகளினாலும் தோற்றத்தினாலுமறிந்து தாயம்மையைப் பார்த்து குழந்தாய்! உன்னிடம் ஓர் காரித்தைப் பற்றிக்கேழ்க்க ஆவல்ப் படுகிறேன். நீ ஸங்கோசப்படாமல் உள்ளதை என்னிடம் தெரிவிப்பாயா? என்றனர். தாயம்மை அப்பா! அவ்வாறு என்ன விஷயம்? என்றாள். அரசன் வேறு விசேஷமொன்றுமில்லை. உனக்கு விவாஹஞ்செய்ய வேண்டியதைப்பற்றித்தான் என்றார். தாயம்மை ஆம் அதற்கென்ன? என்றாள். அரசன் உனக்கு ஓர் நாயகன் குறிப்பிடவேண்டுமே இந்த கோலாஹலனை நாயகனாக அடைய உனக்கு சம்மதமிருக்குமா? என்பதுதான் என்னுடைய கேழ்வி? என்றார். அதற்கு தாயம்மை வெட்கமுடையவளாகத் தலையைக்கீழே குனிந்து கொண்டு ஒன்றும் பதிற் சொல்லாமல் மௌனமாக நின்றாள். அரசன் இக்குறிப்பைக்கண்டு இவள் மனம் இவனை நாயகனாகக்கொள்ள முற்றிலும் இசைந்திருக்கிறதென்று தீர்மானித்து தாயம்மை! நீ ஒன்றும் பதிற் பேசாமல் கீழே குனிந்துகொண்டு மௌனஞ்சாதிப்பதைப்பார்க்கில் "மௌனம் ஸர்வார்த்தஸாதகம்" என்றபடி உன் எண்ணம் முற்றிலும் நிறைவேறி விட்டது என்று மௌனஞ்சாதிக்கிறாய்? என்றார். இதைக்கேட்ட தாயம்மை இன்னும் அதிக வெட்கப்பட்டவளாக புன்னகையுடன் தனது அந்தப் புரத்திற்குள் சென்றாள் மறுநாள் காலையில் அரசன் மந்திரியை அழைத்து நடந்த விருத்தாந்தங்களை மந்திரியிடம் சொல்ல மந்திரியும் இனி ஸம்சயமில்லை தாயம்மையின் மனம் முழுமையும் கோலாஹலனிடத்திலேயே பற்றியிருக்கிறதாகத் தெரிகிறது ஆனால் கோலாஹலனிடத்தில் விஷயத்தைத் தெரிவித்து அவனுடைய ஸம்மதத்தின் பேரில் விவாஹத்துக்கு வேண்டிய காரியங்களில் பிரவர்த்திக்க வேண்டியதுதான் என்றார். உடன் கோலாஹலனிருக்கும் ஜாகைக்கு மந்திரியே நேரிற்போய் அரசனுடைய எண்ணத்தை அறிவித்து அம்மாதிரியே ராஜகுமாரத்தி தாயம்மையும் தம்மை நாயகனாக அடைவதில் மிகுந்த ஆவலுடனிருக்கிறாள் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் விவாஹத்திற்கு வேண்டிய காரியங்களில் முயற்சிக்கலாம். ஆகையினால் தாங்கள் இது விஷயத்திற்குத்தடை சொல்லமாட்டீர்களென்று நம்புகிறேன் என்றார். இதைக்கேட்ட கோலாஹலனும்



தாயம்மையுடைய புத்திசாலித்தனத்தையும், அவளுடைய ரூபலாவண்யத்தையும் முன்னமே கவனித்து அவளிடம் ஆசையுடையவனாக இருந்தமையால் தனக்கு அவ்வாறு செய்துகொள்ளுவதில் யாதொரு ஆக்ஷேபமில்லையென்றும் ஆனால் தன்னுடைய பிதாவுக்குத் தெரிவித்து அவருடைய ஸம்மதத்தைத்தெரிந்து கொண்டு நடத்துவதே உசிதமாகுமென்றும் மந்திரியிடம் அறிவித்தான். மந்திரியும் அதற்கிணங்கி அவ்வாறே செய்கிறேனென்று சொல்லி அரண்மனைக்கு வந்து கோலாஹலனிடம் தான் தெரிவித்ததையும் அதற்கு அவன் மிகவும் நியாயமாகவே சொன்ன ஜவாபையும் அரசனிடம் அறிவிக்க, அரசன் அவ்வாறே செய்வோமென்று ஸகல விஷயங்களையுங்கண்டு உபசாரமாக மயூர அரசனுக்கு ஓர் பத்திரிகை எழுதி மந்திரியிடம் கொடுத்து சில விருதுகளுடன் தேவ நகருக்குப் போய் காரியத்தை அனுகூலமாக முடிவுசெய்து கொண்டு வரும்படிக்கு மந்திரியை அனுப்பினார். மந்திரி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தேவ நகருக்கு பரிவாரங்களுடன் பிரயாணமானார். அந்நகருக்கு தர்மபுரத்து மந்திரி புறப்பட்டு வருகிற சங்கதியை முன்னாடித் தெரிந்து கொண்ட தேவநகர் அரசன் தனது ராஜ்யமெங்கும் தோரணங்களால் அலங்கரித்து தன் பரிவாரங்களுடன் எதிர் கொண்டுவந்து தனதரண்மனைக்கு மந்திரியை அழைத்துச் சென்றார். மந்திரிக்கு வேண்டும் உபசாரங்கள் செய்து விருந்து நடத்தி தாம்பூலம் அருந்திக் கொண்டிருக்கும்பொழுது க்ஷேமலாபங்களை ஒருவர்க்கொருவர் விசாரித்துக் கொண்டார்கள். பிறகு மந்திரி அரசனைப் பார்த்து தங்களுடைய இளைய மஹாராஜாவும் தற்சமயம் தர்மாபுரத்தில் நமது அரண்மனையில் க்ஷேமமாகயிருக்கிறார். தாங்களும் இதுவரை கேழ்விப் பட்டிருக்கலாமென்று நினைக்கிறேன் என்றார். அதற்கு மயூர அரசனும் நானும் முன்னமே கேழ்விப்பட்டேன் அவ்விடத்தில் தங்களிடமிருப்பதைப்பற்றி எனக்கு என்ன கவலை? மிகவும் ஸந்தோஷமே என்றார். மந்திரி மேலும் தங்களிடம் ஓர்

சுபகாரியத்தை அறிவிக்க நமது மஹாராஜா எண்ணங்கொண்டு ஓர் பத்திரிகை தங்களுக்குக் கொடுத்துப் பதில் தெரிந்து வரும்படியாக என்னை அனுப்பினார்கள் என்று சொல்லிப் பத்திரிகையை அரசனிடங் கொடுத்தார். அதை அரசன் வாங்கிப் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்து நமது மஹாராஜா அவர்கள் என்னை ஒரு பொருட்டாக நினைத்து இவ்வாறு எழுதியிருப்பது என்னுடைய பூர்வ ப்ராக்கியமேயென்று நினைக்கிறேன். தங்களபிப்பிராயப்படி நடந்துகொள்ள என்னதடையிருக்கிறது! விவாஹத்திற்கு தினங்குறிப்பிட்டு வேண்டுங்காரியங்கள் முறையே நடக்கட்டும் எனக்கு முகூர்த்தப் பத்திரிகை கிடைத்தவுடன் புறப்பட்டு வரத் தயாராகயிருக்கிறேனென்று சொல்லி அவ்வாறு ஓர் கடிதமும் சந்திர சேகர மஹாராஜாவுக்கு எழுதிக்கொடுத்து மந்திரியை வழியனுப்பினார். மந்திரி தன் பரிவாரங்களுடன் தர்மபுரம் வந்து தனது அரசனிடம் பத்திரிகையும் கொடுத்து நடந்த ஸமாசாரங்களையும் அறிவிக்க உடனே அரசனும் ஸந்தோஷித்து புரோஹிதரை அழைத்து விவாஹத்திற்கு ஓர் சுபதினங்குறிப்பிடச் சொல்லி நாடெங்கும் அலங்கரித்து முன்னடி தேவநகர் அரசனுக்கு முகூர்த்தப் பத்திரிகையும் அனுப்புவித்தார் இன்னும் மற்ற அரசர்களுக்கும் பல பிரபுக்களுக்கும் மந்திரி மூலமாகப் பத்திரிகைகள் அனுப்பும்படிக்கு உத்திரவுகொடுத்தார். முகூர்த்தத்திற்கு தேவநகர் அரசன் உள்பட மற்ற தேசத்து அரசர்களும் பிரபுக்களும் வந்திருந்து தேவ நிர்மாணமோவென்று அதிசயிக்கத்தக்க அலங்காரமான மேடையில் பதினெண்வகை வாத்தியங்களும் முழங்க, திவ்யமான ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தாயம்மைக்கும் கோலாஹலனுக்கும் விவாஹ முகூர்த்தம் நடந்தேறியது. பிராமணர்களுக்கு சொர்ணதான முதலிய பல தானங்களும் இன்னும் சபையிலுள்ள எல்லோருக்கும் தாம்பூலம், சந்தனம், புஷ்பம், பழம் முதலானதும் அவரவர்கள் தகுதிக்குத் தக்கவாறு கொடுத்து உபசரித்து ஷட்ரஸத்துடன்



நளபாகமான அன்னமுமளிக்கப்பட்டது. கந்தர்வாளுக்கு நிகரான ஸங்கீதவித்வான்களின் கானமும் தேவ கன்னிகைகளுக்கு நிகரான தாசிகளின் சதிர்கச்சேரிகளும் விசேஷமாக நடந்தேறியது. அங்கு நடந்த விமரிசையைப் பற்றிப் புகழாதாரில்லை. இவ்வாறு விவாஹமஹோற்சவம் நடந்தேறிய பிறகு அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு அவரவர்கள் வசிக்குமிடங்களுக்கு பிரயாணமானார்கள். சிறிதுநாள்ச் சென்றபிறகு அரசன் தன் மந்திரியை அழைத்து வரச்சொல்லி தான் முன் சொல்லியிருந்தபடி வனத்திற்கேக வேண்டுமென்றும் ராஜ்யத்தை தன் மருமகனான கோலாஹலனிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் அதற்காக தன்னுடைய பிரஜைகளை அழைத்து ஓர் சபை கூட்டவேண்டுமென்றும் கட்டளையிட மந்திரியும் அவ்வாறு நாடெங்கும் பறை சாற்றுவித்து ஓர் தினத்தில் சபையைக்கூட்டினார் அன்று தினம் அரசன், மந்திரி, மருமகனான கோலாஹலன் மூவரும் தங்கள் ஆஸனங்களில் வீற்றிருக்க அரசன் தன் பிரஜைகளைப் பார்த்து சதாகாலமும் என் க்ஷேமத்தையே நாடுகிற எனது பிரஜைகளான சபையோரே! உங்களிடம் ஓர் அனுமதி கேட்கப்போகிறேன் அதற்கு உங்களபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்! அதாவது எனக்கு வயதாகிவிட்டது இனி இராஜ்ய பாரத்தைப் பொறுப்பது வருத்தமாகயிருப்பதால் சாக்ஷாத் பகவானை நோக்கித் தவஞ்செய்ய வனத்திற்கேகலாமென்று நினைக்கிறேன், ராஜ்யத்தை இதோ இருக்கிற எனது மருமகனான கோலாஹல ராஜாவுக்கு முடிசூட்ட உத்தேசிக்கிறேன் என்றார். சபையோர்கள் அரசனை நோக்கி மஹாப்ரபோ! தங்கள் உத்திரவுக்கு மாறாகத் தெரிவிக்க நாங்கள் சக்தியுடையவர்களல்ல. ஆகிலும் எங்களை ஒரு பொருட்டாக நினைத்துக் கேட்டபடியினால் எங்களுக்குத் தெரிந்த வரையில் எங்களெல்லோர் மனதிற்கும் ஸந்தோஷத்தையுண்டு பண்ணவேண்டுமானால் தாங்களே இன்னும் சிறிதுகாலத்திற்கு இராஜ்ய பரிபாலனஞ்செய்து ராஜகுமாரத்தியாகிய நமது அம்

மையும் கோலாஹல ராஜாவும் மிகவும் சுகமான வாழ்வடைந்து புத்திரப்பேறு அடைவதை தாங்களும் அடியோங்களும் பார்த்து ஸந்தோஷித்த பிறகு தாங்கள் உத்திரவு கொடுத்த பிரகாரம் கோலாஹல மஹாராஜாவுக்கே பட்டாபிஷேகஞ்செய்து வைப்பது எங்களுக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்குமென்று உறக்கக்கூவி ஆர்ப்பரித்தார்கள். இதைக் கேட்ட அரசனின் மனமும் பிரஜைகளின் நோக்கத்தை மறுக்கமுடியாமல் அவ்வாறே செய்கிறேன் என்றனர். உடன் பிரஜைகள் கரகோஷம் செய்தார்கள் பேண்டு வாத்தியங்கள் முழங்கின சபைகலைந்தது.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்
தீயொழுக்கமென்று மிடும்பைதரும்"

முற்றிற்று.

# ஸமாசாரக் குறிப்பு.

சென்ற நவம்பர்-மீ 19-உ கல்லிடைக்குறிச்சியில் நடந்த சீட்டு சூதாட்டத்தில் 9 பேர்கள் பிடிக்கப்பட்டு அம்பாசமுத்திரம் ஸப்மேஜிஸ்ட்ரேட்டாரவர்களால் நபர் ஒன்றுக்கு ரூ 100 வீதம் அபராதம் விதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

*
* *

திருநெல்வேலி ஸெஷன்ஸ்ஜட்ஜ் அவர்கள் முன்பு நடந்த கள்ளக் கையெழுத்துப்போட்ட தஸ்தாவேசு கேஸில் ஷை தஸ்தாவேசு பிரதிபிரயோஜனமில்லாமல் சூதாட்டத்திற்காக எழுதிக்கொடுக்கப்பட்டதென்று ருஜுவானதின் பேரில் தஸ்தாவேஜு எழுதிவாங்கினவருக்கு 3 வருஷமும் அதில் அறிவுசாக்ஷிபோட்ட இருபேர்களுக்கு 18 மாசமுமாக கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவை மூலமாகவாவது இனிமேலாக இதுபோன்ற கெட்டநடவடிக்கைகள் நடக்காமலிருக்குமென்று நம்பப்படுகிறது.

*
* *

கனம் T. S. வைகுண்டம்பிள்ளையவர்கள் B. A. திருநெல்வேலி முனிஸிபல் சேர்மனாக நியமிக்கப்பட்டு நாளது மாசம் 7-ம்உ சார்ஜு எடுத்துக்கொண்டார்கள். கனம் V. A. பூமிநாதமுதலியாரவர்களும் கனம் சாவடி சுப்பிரமணியபிள்ளை அவர்களும் 4-வது வார்டு முனிஸிபல் கவுன்சிலர்களாக மேற்படி வார்டு வோட்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

*
* *

# நமது சந்தாநேயர்களுக்கு

## ஓர் விக்ஞாபனம்

---

நமது சந்தாநேயர்களில் ஆறுமாதத்திய சந்தாதார்களுக்கு இந்த மாதத்தோடு பத்திரிகை அனுப்பப்படவேண்டியகாலம் முடிவாகின்றதால் இனிமேலனுப்பவேண்டிய பத்திரிகைக்குரிய சந்தாப்பணத்தை மணியாடர் மூலமாகவேனும் அல்லது வி. பி. யிலனுப்பும்படிக்கேனும் தெரிவிக்கக்கேட்டுக்கொள்ளுகிறோம்

இவ்வரிய சங்கீத சாஸ்திரஸம்பந்தமான பத்திரிகை நமது தமிழ்நாட்டில் மிகவும் குறைவாகயிருப்பது பற்றியும் இப்பத்திரிகையை இன்னும் விசேஷித்து விருத்தி செய்யக்கருதி மிகுந்த சிரம்மப்பட்டு வடமொழியிலுள்ள பல நூல்களை ஆராய்ந்து கண்டுபிடித்து எழுத ஆவலுடன் முயற்சிப்பதாலும் நீடித்தகாலம் இப்பத்திரிகை நமது தமிழ்நாட்டில் உலாவி வருமாறு நமது சந்தாநேயர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப்போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பராசரஹோரா, ப்ருஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:—(1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ. 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்களம், திருநெல்வேலி ஜில்லா..

# உங்கள் ஜாதகபலனைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷ மாதம் தேய்தி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவறாமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வோரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சொல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சொல்லுவது அனாவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

### சார்ஜின் விவரம்.

| | |
|---|---|
| புத்திரபாவத்திற்கு ... | ரூ 5–0–0 |
| களத்திரபாவத்திற்கு ... | ரூ 3–0–0 |
| தொழில் அல்லது யோகபாவத்திற்கு | ரூ 5–0–0 |
| ஆயுர்பாவத்திற்கு | ரூ 5–0–0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கோடுக்கவேண்டில் | ரூ 25–0–0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கோடுக்கில் | ரூ 2–0–0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கோடுக்கில் | ரூ 3–0–0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கோடுக்க | ரூ 4–0–0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கோள்ளலாம்.

---

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.



# பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை

## பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)
(தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகெம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும். மனோ உற்சாகத்தைத்தரும். 1–சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வபடை சம்ஹாரன்:—** மேகப்படை, சொரியானைப்படை, தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முதன்மையான அவுஷதம்.
விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வதந்தரோக நிவாரண பரிமளப்பற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சுரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.
விலை சீசா 1.க்கு அணா 2 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுப்பராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம், இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்குமிகவும் அற்புதமான சஞ்சீவி
விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள தேவகாந்திதைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேரி ஓங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.
விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. சிலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் பொடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கரப்பான், வெடிப்பு, சரீரவரக்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷமிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

விலாசம்:— ☞ பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை தென்னார்க்காடு ஜில்லா.

# க்ஷேமம்!

ஒருவரை யொருவர் சந்திக்கும்போது க்ஷேமலாபத்தை முதலில் விசாரிப்பது வழக்கமாயிருக்கிறது. சிலர் தாங்கள் வியாதியோடிருந்தும் க்ஷேமம் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏன் அப்படி ஒப்புக்கொள்ள வேண்டும். உங்கள் சரீரத்தில் எவ்வித மாறுபாடு ஏற்படினும் உடனே உலகப் பிரசித்திப்பெற்ற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகப் படுத்துங்கள். இம்மருந்து முதலாவது ஜீரண சக்தியை விருத்திசெய்கிறது. அநேக வியாதிகளுக்கு காரணமாயுள்ள மலபந்தத்தை நிவர்த்தி செய்கிறது. வெள்ளை வெட்டை முதலிய மேகரோகங்களைக் குணப்படுத்துகிறதுமன்றி தேகத்திற்கு பலத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது.

நீங்கள் எங்கள் காமசாஸ்திர புத்தகத்தைப் பார்த்ததுண்டா? இல்லையானல் இன்றைக்கே விலாசத்தைத் தெரிவித்து இனமாகவும் தபாற் செலவில்லாமலும் வாங்கி வாசியுங்கள். இதில் நீதி வாக்கியங்கள், நல்லொழுக்கம், தீர்க்காயுள் முதலிய சிறந்த விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157–158, பிராட்வே மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 19 JAN 1916 MADRAS

உ

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1916-ஆு ஜனவரி-மீ { NO. 7.

## இந்து ஸங்கீதம்

36. தும்புருவின் அபிப்பிராயம்:—

“உச்சைஸ்வரோத்வனீரூக்ஷோ
விக்ஞேயாவாதஜோபுதை:
கம்பீரோக்கநாதஸ்து
க்ஞேயோஸௌபித்தஜோபுதை:
ஸ்நிக்தஸ்ச்சஸுகுமாரஸ்ச்ச
மதுர: கபஜோத்வநி:
த்ரயாணாம்குணஸம்யுக்த:
விக்ஞேய: ஸன்னிபாதஜ:”

(கந்தர்வகல்பம்)

(வ்யா) உறத்த ஓசையை வாத ஓசையென்றும், கம்பீரமான மேக கர்ஜிதம் போன்ற ஓசையை பித்த ஓசையென்றும், மிருதுவும் அழகும் பொருந்திய மதுரமான ஓசையை கப ஓசையென்றும், இம்மூன்று குணங்களுடன் கூடியது ஸன்னிபாத ஓசையென்றும், ஆகின்றமையால். அந்

தந்தக் காலத்தினியல்பும், தேகத்தினியல்புமறிந்து முன் சொல்லிய ச்ருதிகளைச்செய்து கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

37. வைணுதி முனிகளின் அபிப்பிராயமாவன:—

"த்விச்ருதிஸ்திரிச்ருதிஸ்ச்சைவ
சதுச்ருதீகஏவஹி
ஸ்வரப்ரயோக: கர்த்தவ்ய:
வம்சச்சித்ரகதோபுதை:"

(வ்யா) இரண்டு ச்ருதிகளும், மூன்று ச்ருதிகளும், நான்குச்ருதிகளுமான ஒன்பது ச்ருதிகளடங்கிய ஸ்வரஸஞ்சாரங்களை மூங்கிற் குழியில் துவாரமிட்டு அதினின்றும் ஓசை முதலியன உண்டு பண்ண வேண்டுமென்று புத்திசாலிகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

38. நந்திகேச்வாருடைய அபிப்பிராயம்:—

"த்விகத்ரிகச்சதுஷ்காஸ்து
க்ஞேபாவம்சகதாஸ்வரா:
கம்பமானர்த்தமுக்தாச்ச
வ்யக்தமுக்தாங்குளிஸ்வரா:
இதிதாவன்மயாப்ரோக்த:
ஸமிஸ்ச்சை: ச்ருதயோநவ"

(நந்திபரதம்)

(வ்யா) புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களை அடைந்திருக்கிற ஓசை இரண்டுச்ருதி, மூன்றுச்ருதி, நான்குச்ருதி, அந்த ச்ருதிகளை கைலாகவத்தினல் அசைப்பதனுலும், பாதிக்காற்றை வெளிவிடுதல், பூராக்காற்றை வெளிவிடுதல் முதலான கார்யங்களினுலும் ஸ்வரங்கள் அறியத்தக்கதுகள். இவ்வாறு என்னுற் சொல்லப்பட்ட ஒன்பது ச்ருதியுமே மிகச்சிறப்புடையன.

"சாரீரவீணவம்சானும்
ஏகீபாவ: ப்ரசஸ்யதே"

(நந்திபாதம்)



(வ்யா) இப்பொழுது நான் சொல்லிய ச்ருதிகள் புல்லாங்குழலுக்கு மட்டிலுமல்ல. சாரீசம், வீணை, ஆகிய இவைகளுக்கும் சம்மந்தப்படும்.

39. முற்கூறிய ஆறு மதங்களையும் அனுஸரித்து ஸ்வரங்களென்பதும், ச்ருதியென்பதும் ஒன்றென அறியவும். சில மீமாம்ஸகர்கள் இவைகளுள் 22. ச்ருதிதான் சிறப்புடையதென்கிறார்கள். மற்றும் சில மீமாம்ஸகர்கள் 22 ச்ருதிகளிருப்பதுடன், 66 ச்ருதிகளுமுண்டென்கிறார்கள்.

இது விஷயமாக கோஹலிரின் அபிப்பிராயமாவன:—

"த்வாவிம்சதிம்கேச்சிதுதாஹரந்தி
ச்ருதிச்ருதிக்யானவிச்சாரதக்ஷ:
ஷட்சஷஷ்டிபின்னு: கனுகேச்சிதாஸாம்
ஆனந்தியமேவப்ரதிபாதயந்தி"

இதிதத்ர:—

"ஆநந்தியம்ஹிச்ருதீனுஞ்ச
ஸூச்சயந்திவிபஸ்ச்சித:
யதாத்வனிவிசேஷாணும்
அமானம்ககனேதரே"

"உத்தாலபவனேத்வேல்ல
ஜலராசீஸமுத்பவ:
இபத்தி: ப்ரதிபத்யந்தே
நதரங்கபரம்பரா:"

(வ்யா) சிலர் 22 ச்ருதிகளென்றும், மற்றும் சில ச்ருதிக்ஞானவேத்தாக்கள் 66 ச்ருதிகளென்றும், மற்றும் சில மேதாவிகள் ச்ருதிகள் அனந்தமென்றும், சொல்லுகிறார்கள். அனந்தச்ருதிகளென்பது எப்படியென்றால் ஓசையின் விசேஷமானது ஆகாயத்தையடைவதினல் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ச்ருதி என்று சொல்லப்படும். அதாவது தும்மல், இருமல், அழுதல், கூப்பிடுதல், முதலிய மனிதர்களால் வெளிவரும் ஓசைகட்கும் மற்றும் விலங்கு, பறவை முதலிய உயிருள்ள ஜந்துக்களால் உண்டாகும் நாதங்கட்கும் கல், மரம் முதலிய ஸ்திர

வஸ்துக்களாலுண்டாகும் நாதங்கட்கும் வெவ்வேறு தனிச்ருதிகளுள்ளன. அதானது ஸமுத்திரத்தினின்றுண்டாகும் அலையும், ஜலமும் போன்ற நியாயப்படி ச்ருதிகளாகின்றன என்கிறார்கள். தவிரவும் இவர்கள் சொல்லுகிற ச்ருதிகளுக்கும், ஸ்வரங்களுக்குமுள்ள பேதமானது ரணந—அநுரணந— நாமங்களுடையன. அதாவது அநுரணந ஓசையை ச்ருதியென்றும், ப்ரதான ஓசையை ஸ்வரமென்றும், சொல்லவேண்டும். அவைகளில் அதிஸூக்ஷ்மமான பிரதித்வனியின் அவயவபூதங்கள் பல வகையாகயிருத்தலினால் முன் நாம் வீணையின் ச்ருதியை நிதர்சனமாகச் சொல்லும் பொழுது மந்திரஸ்தாயை 1-வது தந்தியின் ஓசையைவிட்டு பிறகு ஷஸ்தாயை 2-வது தந்தியின் ஓசையைக் கொண்டுவந்து நிறப்புவதற்குள் இடையே ஓர் ஓசை உண்டு. அவ்வோசையானது நமது செவிவழிப்புலனாகாததால் அதை "அச்ராவ்ய" ச்ருதியென்றோம். அதைத்தான் இவர்கள் "விசிதரங்க" நியாயமென்று சொல்லுவது. ஆதலின் முற்கூறிய ஆறு மதங்களுட் சிறந்ததும் வேதோக்தமானதும், ஹனுமான், மதங்கர், பரதர், முதலிய முதலாசிரியர்களால் கையாளப்பட்டதும், அதுவே அநுபவத்திற்கும் வந்து கொண்டிருப்பதால் 22 ச்ருதிகளே மேன்மையுடையதென்று ஸ்ரீ நிச்சங்கசார்ங்கதேவரின் அபிப்பிராயம். ஆகையினாலேதான் இரண்டு வீணைகள் நிதர்சனம் செய்யவேண்டுமென்கிறார்கள்.

ஏகவிம்சாத்விதீய்யாயாம்
வீணாகாத்ரத்ருவாபவேத்"

அந்த வீணைகளில் 1-வது வீணை "த்ருவ வீணை."

"சலவீணாத்விதீய்யாது
தஸ்யாம்தந்திரிஸ்ஸாராயேத்"

இரண்டாவது வீணை "சலவீணை."

ச்ருதிஸ்வரங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக ஸ்வரங்களின் அசைதலுண்டாவதால் அதன்பேர் "சலவீணை" யென்று சொல்லப்பட்டது. முன்சொல்லிய வீணை அசைவற்றதினால் "த்ருவவீணை" யென்று சொல்லப்பட்டது.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அநுபல்லவி.
3. சர = சரணம்.
4. ~~~~ = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.

7. அ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளதின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.

    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.

    சா = சாதாரண காந்தாரம்.

    பி = பிரதிமத்திமம்.

    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.

    கை = கைசகிநிஷாதம்.

    அ = அந்தரகாந்தாரம்.

    கா = காகலிநிஷாதம்.

11. ஆ = ஆரோஹணம்.

    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

600 008.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை
   ப
   ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



லீலகனு = விளையாட்டாக
காளமு = விஷத்தை
ம்ரிங்கின = விழுங்கின
நீலகண்டா = நீல நிறமுள்ள கழுத்தையுடையவனே! (பரமசிவனே!)
ஸ்ரீகாளஹஸ்தீசா = ஸ்ரீகாளஹஸ்தி என்ற க்ஷேத்திரத்திற்கு ஈசனே!
நிகிலலோகபுதஜன = எல்லா உலகங்களிலுமுண்டான ஜனங்களை
பாலனு = காப்பாற்றப்பட்டவனே!
கோபாலதாஸ = கோபாலதாஸனுடைய
துரிதவன = பாபமாகிற காட்டிற்கு
குட்டார = கோடாரி போன்றவனே!
பராத்பரா = மேலானதிற்கும் மேலானவனே!
தயாகரா = தயையுடையவனே!
அனி = என்று
நினு = உன்னை

(பொழி) உன்னைக்காட்டிலும் மேலான தெய்வமில்லை யென்றும் பாலனான மார்க்கண்டேயனுடைய பக்திக்கு சீக்கிரத்தில் அனுகூலமாக இணங்கி ஒரு காலால் நமனை உதைத்துத்தள்ளி நீ கருணை செய்ததல்லாமலும், திருப்பாற்கடலில் அமுதங்கடையும் பொழுது உண்டான விஷத்தின் கஷ்டத்தைப் பொறுக்கமுடியாமல் தேவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து உன்னிடம் மிகவும் முறையிட்டு வேண்டிக்கொள்ள அவர்கள் வருத்தமடையாமலிருக்குமாறு ஓர் விளையாட்டாக அந்த விஷத்தை விழுங்கின நீலகண்டா! ஸ்ரீகாளஹஸ்தீசா! எல்லா உலகிலுமுள்ள ஜனங்களைக் காப்பாற்றுகிறவனே! கோபாலதாஸனுடைய பாபமாகிற காட்டிற்குக் கோடாரி போன்றவனே! மேலானதிற்கு மேலானவனே! தயையுடையவனே! யென்று எந்தநேரமும் உன்னுடைய கீர்த்தியைப்பற்றி எவ்வளவோ புகழ்ந்துகொண்டிருக்கிற என்மீது கோபங்கொள்ளுவது ஒழுங்கா?

"கொனியாடின" கீர்த்தனையின் சரணத்திலுள்ள "காலகூடபாத" என்றதைப் பல்லவியாக வைத்துக்கொண்டு கற்பனாஸ்வரம் பாடவேண்டிய மாதிரி.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| * * * * காலகூடபாத | ஸை* * * * * *_* * * *மா* * | * * * *பா* *_* * * *தா* * |
| (1) * * * *= ஷை | ஸை* * * * * *_* * * *தா* * | * * * *பா* *_* * * *மா* * |
| (2) * * * *= ஷை | ஸை* * * * * *_* * * *தா* * | பா * *நீ * *—தா * *பா* * |
| (3) மா * *= ஷை | ஸை* * * * * *_* * * *மா* * | கா * *மா* *—பா * *தா* * |
| (4) மா * *= ஷை | ஸை* * * * * *_* * * *தாபா | நீ தா நீ பா—தா மா பா மா |
| (5) பா தா= ஷை | ஸை* * * * * *_* * * *நீதா | பா மா கா ரீ—சா ரீ கா மா |
| (6) பா தா= ஷை | ஸை* * * * * *_* * * *ச்ாநீ | தா பா நீ தா—பா மா கா மா |
| (7) பா தா= ஷை | ஸை* * * * * *_* * * *ரீச்ா | க்ா ரீ ம்ா க்ா—ரீ ச்ா நீ தா |
| (8) பா தா= ஷை | ஸை* * * * * *_* * * *க்ரீம்க் | ரீச்க்ரீச்நிதரீ—ச்நிதபநிதபம— |
| (9) கமபத= ஷை | ஸை* * * * * *—தபமகாரிகரி | கமபதாபமப—தச்ரீச்ாச்நித |
| (10) பதாம= ஷை | ஸை* * * * * *—ரீச்ாக்ாரீச்நி | தபாரீச்நித—பதாச்ாநிதப |
| நிதாம= ஷை | ஸை* * * * * *_ | |



கேதார கௌளராகம்—ஆதிதாளம் 1-களைச்சவுக்கம் லகுத்தட்டிற்குப்பின் அரையிடத்தில் எடுப்பு.

ஆ = ச, ச—ரி, சு—ம, ப, கை—நி

அவ = ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப = துளஸீபில்வமல்லிகாதி
ஜலஜமுலபூஜலகைகொனவே =

அ = ஜலஜாஸன ஸனகாதிகரார்ச்சித
ஜலதாபஸுபவிபாகரஹ்ரு
ஜ்ஜலேசஹரிணம்கஸுகந்த =

சர = உரமுனமுகமுன—சிரமுனபுஜமுன
கரமுனநேத்ரமுன—சரணயுகம்முன
கருணதோனொருதோ—பாமானந்தமுதோ
நிரதம்முன ஸ்ரீ த்யாகராஜு
நிருபாதிகுடையர்ச்சிஞ்சு =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப=* * * *சாரீமா * * * * * *–காமகரீ* *காரீசா* * | * * * *நீசாரீ* *சா * * | சாரிசநீதா* *நீ* *பா* * |
| * * * *துளவி* * * * * *–பி—–* *ல்—வ* * | * * * *ம—–* *ல்லி* * | கா———–* *தி* *–* * |
| (1) * * * *ரீ ரீ ரீ* *மாகா–ரீ* *காரீசா* *சா* * | * * * *நீசாநிசரீசா* * | நிசரீ–சாரிசநீதாநீபா* * |
| * * * *துளவி* *—– பி* *ல்—–* *வ* * | * * * *ம——ல்லி* * | கா–– ———————–தி* * |
| * * * *பாபாபா* *ரீ * *–ரீ * *ரீ* *ரீமாபா* * | * * * *நீ தாபா* *தா பா | மாகாரீ* * * * * *காரீ |
| * * * *ஜ ல ஜ * *மு* * ல * *பூ* *ஜ—–ல* * | * * * *தை——* *லெதா– | ன்ன–* * * * * *வே– |
| சா நீ= | | |
| ——= | | |
| அ=* * * *ச்ாநீச்ா * * * * * *–நீ * *தா* *நீ * *பா* * | * * * *ச்ா* *நீச்ாரீ* * | ரீ * * * * * *ரீ* *ரீச்ா |
| * * * *ஜலஜா * * * * * *–ஸ* *ன* *ஸ* *ன* * | * * * *கா* *–திக* * | ரா* * * * * *ர* *ச்சி– |
| ச்ாநீ–ச்ாரீக ச்ா* * * * * * *–ச்ாநீதா* *நீ * *பா * * | ஷை | ஷை |
| த–– ஜ ல––ஜா* * * * * * *–ஸ––ன* *ஸ* *ன * * | ஷை | ஷை |
| ச்ாநீ–ச்ாரீக ச்ா* * * * * * *–நீச்ாரீ* *ச்ாரீச்நீ* *–தா* *நிபா* * | ஷை | ரீ * * * * * *ரீ * *ரீ* * |
| த––ஜ ல––ஜா* * * * * * *–ஸ––* *ன—–* *–ஸ *–ன* * | ஷை | ரா* * * * * *ரஸி* *த* * |
| ரீ ரீச்ா* *ரீ ரீ ச்ாரீ–ச்ாச்ாரீச்ா––நீ நீ ச்ா* * | ரீ ரீ * *ச்ா* * * *நீ தா | பா * * * *மாகாரீகாரீ |
| ஜலதா* *பஸுந––– பவிப–– காஹ்ரு* * | ஜ்ஜூலெ* *சா* * * *ஹரி | ஹைம்* * * *கஸு–––கந் |
| சாநீ=சாரீ மா= | | |
| த––=துளவி= | | |
| ச=* * * *பாபா* *பாபா* *–பாகாரீமாரீ மாபா* * | * * * *ரீ * *மாபா நீதா | பா* *மாகாரீ காரீ * * |
| * * * *உ ர * *மு ன* *–மு உக அமுன* * | * * * *ஸி * *ர முனஅ | பு * *ஜ–––அமுன* * |
| * * * *தாபா* *மாகா* *–ரீ * *காரீகாரீ சா* * | * * * *நீசா* *ரீ மா* * | காமகரீமா–ரீமாபா* * |
| * * * *க ர * *மு ன* *–டு* *த் ரஅமுன* * | * * * *ச ர * *ண பு * * | க————–முன* * |

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| * * * *ச்ாச்ா* *ச்ா ச்ா * *–ச்ா* *ச்ாரீச்நீ* *–* *ச்ாச்ா * * | * * * *நீச்ாரீக்ரீச்ா* * | நீதாபா * *–* *நீ ச்ா * * |
| * * * *க ரு* *ணதோ* *–டு* *ந——* *–* *ருதோ* * | * * * *பா மா–––* * | ந––ந்த * *–* *முதோ* * |
| ரீரீம்ாக்ாரீ ரீக்ாரீ––ச்ாச்ாரீச்ா ச்ாநீச்ா * * | ரீரீ ச்ா* *–* * * *நீ தா | பா * * * * * *–மாகாக ா ரீ |
| நிரதம்–––முனுஸ்ரீ–த்யா–––கா–ரா–ஜு* * | நிருபா* *–* * * *திரு | தை–* * * * * *–அ––ர்ச்சிம் |
| சாநீ =ச் ரிமா = | | |
| ச உ=துளவி= | | |

கற்பனஸ்வரம்.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (1) * * * *—உரமுன—முகமுன | * * * *மா* * * * * *கா* * | * *ரீ * * * * * *மா* * |
| (2) * * * *= ஷை | * * * *நீ * * * * * *தா* * | * *பா* * * * * *மா* * |
| (3) * * * *= ஷை | * * * *ச்ா* *நீ* *தா* * | பா* *மா* *கா* *ரீ* * |
| (4) மா * *= ஷை | * * * *பா* *நீ* *சா* * | ரீ * *மா* *கா* *ரீ* * |
| (5) மா * *= ஷை | * * * *நீச்ாரீச்ா* *நீ | தாபாதாபா* *பாமாகா |
| (6) ரீமா* *= ஷை | * * * *சாநீசாரீ* *மா | காரீ மாபா* *சாநீ தா |
| (7) பா மா= ஷை | * * * *ச்ாரீக்ாரீ* *ச்ா | நீச்ாரீச்ா* *ச்ாநீதா |
| (8) பா மா= ஷை | * * * *சாநீரீசாகாரீ | பாமாதாபாச்ாநீதாபா |
| (9) தா மா= ஷை | * * * *ரீமக்ரீக்க்ரீச்நிச் | ரீக்ரீச்ரீநிரீ–ச்நிதபச்ா* *ச் |
| (10) நிதபம= ஷை | * * * *மக்ரீச்நிச்ரீக்ரீச் | நிதபநி–ச்ரீச்நித–நிதாபமக |
| ரிசரிம= ஷை | | |

(பத) ப = துளிஸி = துளஸி

பில்வ = வில்வம்

மல்லிகாதி = மல்லிகை முதலிய

ஜலஜமுல = தாமரைபுஷ்பங்களால்

பூஜல = பூஜைசெய்ய

கைகொனவே = கைக்கொள்ளேன்

அ = ஜலஜாஸன = தாமரைபுஷ்பத்தை ஆஸனமாகவுடைய (பிரமன்)

ஸநகாதிகரு = ஸநகாதி முனிகளால்

அர்ச்சித = அர்ச்சிக்கப்பட்ட

ஜலதாப = மேக காந்தியையுடையவனே

ஸுநாப = நல்ல நாபீக மலத்தையுடையவனே

விபாகர = ஸூரியனுடைய

ஹ்ருஜ்ஜலேச = ஹிருதயத்தில் சஞ்சரிக்கும் ஈசனே

ஹரிணம்கஸுகந்த = சந்தனமுதலான நல்ல வாஸனையுள்ள

சர = உரமுன = மார்பிலும்

முகமுன = முகத்திலும்

சிரமுன = சிரஸிலும்

புஜமுன = புஜத்திலும்

காமுன கைகளிலும்

நேத்ரமுன = கண்களிலும்

சரணயுகம்முன = இருபாதங்களிலேயும்

கருணதோ = கருணையோடும்

நெருதோ = அன்போடும்

பரமானந்தமுதோ = பரமானந்தத்தோடும்

நிரதம்முனு = எந்நேரமும்

# இராக லக்ஷணம்.

96-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## 16. ஆனந்தபைரவி— 20-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ = ச, சா-க, சு-ம, ப, கை-நி

அவ = ச, கை-நி, சு-த, ப, சு-ம, சா-க, ச-ரி

### இலக்கணம்.

"ஆரோஹேரிஷபம்த்யக்த்வா
தவக்ரஞ்சஸமாச்சரேத்
ஸம்பூர்ணஸ்ரோஹேபேதா
பவேதானந்தபைரவி"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) ஆனந்தபைரவி ராகம் ஷட்ஜகிரகம், ஸம்பூர்ணராகம், ஆரோஹணத்தில் ரிஷபத்தை வர்ஜித்தும், தைவதத்தை வக்ரமாகவும், பாடப்படுகிறது.

குறிப்பு:— ச்லோகத்தின் கருத்துப்படிக்கு இந்தராகத்தை ஆரோஹணத்தில் சகமதபநிசா— யென்றும் அவரோஹணத்தில் ஸம்பூர்ணமென்று சொல்லப்படுவதால் சநிதபமகரிசா— யென்றும் பாடவேண்டியதாகிறது. தற்காலம் அனுபவத்தில் ஆரோஹணத்தில் சகரிகமபநிசா— யென்று தைவதம் சேர்க்காமலும் ரிஷபத்தை வக்ரமாகச் சேர்த்தும் அவரோஹணத்தில் சில சந்தர்ப்பங்களில் சுத்த தைவதத்திற்குப்பதிலாக சதுச்ருதி தைவதம் சேர்த்தும் இன்னும் ஆரோஹணத்தில் சில ஸமயம் ரீ*காமபாபமா** என்று பாடும்பொழுது அந்தரகாந்தாரம் சிலர் பாடிவருகிறார்கள்.

## இராக ஸஞ்சாரம்.

(1) சகரிகமபா****நிச்ா****—ச்நிதபா**மகா**ரிசா****—

(2) கரிகமா**மா**மகமாபமகா**ரி—கமபா****பநிநிச்ா****ச்ா****—
ச்நிரிச்ா****—ச்ாரிச்நீ****தப—மகமா****தபமகாரி—கமபா**த—
மபமகா**ரி—ரீ**கரிசா****—

(3) நிசகரிகமா**மா**—மகா**ரி கமபா**பாபாதபாதபமா**—மாபமாபமகா**—
காமகாமகரீ**—ரீகரீகரிசா**—நிசநிகா**ரி—கமபநீ****நிச்ா****—
நிச்ா****—ச்நிக்ா**ரீ—ரீக் ரீ ச்ா**ச்நிச்ரீ**ச்--ச்ாரிச்ச்நிநீ****தப—
கமதபா**த--மபமாபகா**ரி--கம பமகா**ரிரீ****கரிசா****—

(4) கமபா**பா**—பச்நிதபா****—பநிச்ாரிச் ச்ா**ரீ—ச்ாரிச்ச்நிநீ****தபா**—
பநிச்நிக்ா****ரீ—ச்ாரி ச்ாரி நீ****தபா**—மபநிச்ா****ச்நிதபா****ம—
கமபதபதா**ப--மகரிகா****—கமதபமகரிகா**—மகபமதபமகா**ரி—
கமபகமகா****ரி—ரிரிகா**ரிசா****—

(5) மபநீ****நீ****நிச்ா**ச்ா**—நிச்க்ா**ரீரீ****க்ம்ா**ம்ா**—க்ாம்ப்ா*ம்க்ா**ரீ—
ரீக்ம்ாப்ம் க்ா****ரீ—ரீரிக்ா**ரீச்ா****ச்ரீநீ**நீ**நிச்ா****ச்க்க்ம்ா****ம்க்ரீ—
நிச்ம்க்ரீ—நிச்க்ரீ—நிக்ரீநிரீநிச்ா****பநிச்ரீச்ா****ச்நிதபா****—
மபநிச்ா****ச்நிதபா****—கமபமபநிபநிச்ா****ச்நிதபா****—
கமபா****மகரிசா****நிசகா****ரிசரிநீ****—நிசகரிகமா****—
ம்கரிரிகா****ரிசா******=



## 17. ஸ்ரீரஞ்சனிராகம்— 22-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ=ச, ச–ரி, சா–க, சு–ம, ச–த, கை–நி
அவ=ச, கை–நி, ச–த, சு–ம, சா–க, ச–ரி,

### இலக்கணம்.

"ஸ்ரீரஞ்சனீஷாடவீச்ச
பவர்ஜாஸார்வகாலீகா"
(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) ஸ்ரீரஞ்சனி ராகம் ஷாடவராகத்தைச் சேர்ந்தது அதாவது ஆறு ஸ்வரங்களுடன் கூடினது. ப–என்ற ஸ்வரத்தை வர்ஜிக்கவேண்டும் இந்தராகம் எல்லாக் காலங்களிலும் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சரிகமா****தா****நிச்ா****—ச்நிதமா****மகா****ரிரீ****சா****—

(2) ரிகமதா**நி—ததநிதநீ****ததமா****கமதமா****க—கரிரீ****—
சரிகரீ****கரிரிசா****—ரிசநிதா**நிசா****—

(3) மகமா**மா**—கமதமா**மகரி—ரிகமதா**நி—கமதா**நி—தநித,தநீ**நிதத—
மதநிச்ா****—ச்நிச்ரிரிக்ா****ரீக்ரிரீ****—ச்நிச்ரீச்ா****ச்நிதா****—
தநிச்நீச்நிநீ****ததா**ம—கமநிதா**ம—கமதமா**மகரி—
கமரிகா**ரிசரிசா****—

(4) நிசநிகா**ரி—கமகநீ**த—மதமதா**நி—தநிச்நீ**ச்—நிக்ரிக்ா**ம்ரிக்ச்ரிநிச்தநி—
மதகமதநிச்ா****—ச்ாரிச்நீ****—நிததா****ம—கமநிதாமகரி—
கமதரிகமசரிகநிசரிதநிச—நிகரிகமதநீ****நிதம—கமதமா****மகரி—
ரிகா**ரிசாரி சாரிநீ****நிசா******—

(5) மாநீநிததா****நிச்ா****-ச்நிரீ****ரீக்ா****-க்ம்ா****ம்க்ரீ-

ரீக்ா**க்ரீச்-நிச்ா**நிக்ரீநிச்ா**ரீ-நிச்தநீ****நிதா** தம-

கமநீ**நிதம-கமததா*ம-கமதமா*க-ரிகமதசரிகமத-

நிசரிகமதமகரிரீ****ககரி-சநிரிசரிகா**ரி-

சாரி சாரிநீ****நிததா** நிசா****** =

## 18. தன்யாசிராகம்— 8-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ — ச, சா-க, சு-ம, ப, கை-நி

அவ — ச, கை-நி, சு-த, ப, சு-ம, சா-க, சு-ரி

### இலக்கணம்.

"தன்யாசிராகஸம்பூர்ண
ஆரோஹேரிதவர்ஜிதா
ப்ராத: காலேப்ரகீயந்தே
கானதத்வார்த்தவேதிபி:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) தன்யாசிராகம் ஸம்பூர்ணம், ஆரோஹணத்தில் ரி, த, என்ற இரண்டு ஸ்வரங்களையும் வர்ஜிக்கவேண்டும். இந்தராகம் சூர்ய உதயகாலத்தில் பாடத்தக்கதென்று கானவித்தையின் தத்துவார்த்தங்களையறிந்த பெரியோர்களால் சொல்லப்படுகிறது.

இன்னும்வரும்

பத்திராதிபர்.

# நீதி

48-வது பக்கத்தின் தொடர்ச்சி.

* (பொருள்) ஸத்கர்மமானது துஷ்டர்களை நல்லவர்களாக்குகின்றது, மூர்க்கர்களைப் பண்டிதர்களாகச் செய்கின்றது, சத்துருக்களை மித்திரர்களாகச்செய்கின்றது, மறைந்திருப்பதை எதிரிலிருப்பதாய்ச் செய்கின்றது, விஷத்தையும் அம்ருதமாகச்செய்கின்றது, ஆகையால் இவ்விதமாக ஷட்குணைசுவர்ய ஸம்பத்துக்களையடையச் செய்யக்கூடிய நற்கருமத்தை, கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு ஆராதிக்கவேண்டும். துக்கத்தால் நிறைந்த ஸத்வராஜஸ்தமோ குணங்களில் ஆசைவேண்டாம்.

சுப்ரம்ஸத்மஸவிப்ரமாயுவதயச்வேதாதபத்ரோஜ்வலா
ல்க்ஷ்மீரித்யநுபூயதேசிரமநுஸ்யூதேசுபேகர்மணி
விச்சின்னேநிதராமனங்ககலஹக்ரீடாத்ருடத்கந்துகம்
முக்தாஜாலமிவப்ரயாதிஜடிதிப்ரச்யத்திசோத்ருச்யதாம் (4)

(பொருள்) சுபத்தையுண்டுபண்ணக்கூடிய கர்மமானது வெகுகாலம் இடைவிடாமல் ஏற்பட்டுக்கொண்டிருந்தால், மங்களகரமான வீடுகள், ஸலக்ஷணவதிகளான ஸ்திரீகள், சுவேதச்சத்திரத்தினால் (வெள்ளைக்குடை) விளங்கும் லக்ஷ்மீ முதலியவைகள் அநுபவிக்கப்படுகின்றன. அந்தச்சுப காரியங்களுக்கேதேனும் மத்தியில் இடையூறு நேர்ந்துவிடில், மன்மதக்கிரீடையில், அறுந்துவிட்டநூலையுடைய முத்துமாலையைப்போல எல்லா சம்பத்துக்களும் நாலாபக்கங்களிலும் போய்ச்சிதறிவிடுகின்றன.

குணவதகுணவத்வாகுர்வதாகார்யஜாதம்
பரிணதிரவதார்யாயத்னத: பண்டிதேந

அதிரபஸக்ருதாநாம்கர்மணாமாவிபத்தேர்
பவதிஹ்ருதயதாஹீ சல்யதுல்யோவிபாக: (5)

(பொருள்) ஒரு காரியத்தைச்செய்ய ஏற்பட்டால் அது குணமுள்ளதாயிருப்பினும், குணமில்லதாயிருப்பினும், செய்ய எத்தனித்த பண்டிதனானவன் அது முடிவுபெறும் வரையில் விடாமுயற்சியுடன் பிரயத்னம் செய்யவேண்டும். இப்படிச்செய்தால் அக்காரியமானது துக்கத்தையுண்டு பண்ணாது. மேலும், மிகவும் கஷ்டப்பட்டுச் செய்யத்தொடங்கின காரியமானது முடிவுபெறுகிறவரையில் எப்படியாகுமோவென்று மனதில் ஒரு விசாரமானது ஏற்பட்டிருக்கும்.

ஸ்தால்யாம்வைடூர்யமய்யாம் பசதிதிலகலம்சாந்தனைரிந்தனௌ [கைஸ்
ஸௌவர்ணைர்லாங்கலாக்ரைர் விலிகதிவஸுதாமர்க்க தூலஸ்ய [ஹேதோ:
சித்வாகர்ப் பூரகண்டான்வ்ருதிமிஹகுருதே கோத்ரவாணாம்ஸ [மந்தாத்
ப்ராப்யேமாம் கர்மபூமிம் நபஜதிமநு ஜோயஸ்த போமந்தபாக்ய: (6)

(பொருள்) கர்மபூமியில் பிறந்து எவன் நற்கருமங்களைச்செய்யவில்லையோ அவன் தூரதிர்ஷ்டசாலி. அவன் வைடூர்யமயமான பாத்திரத்தில் எள்ளைப்போட்டு சந்தனக்கட்டைகளை விறகாக உபயோகித்து அந்த எள்ளைப்பக்குவம் பண்ணுபவனுக்குச்சமானம். எருக்கம்பஞ்சுக்காகப்பொற்கலப்பையால் பூமியை உழுபவனுக்கும், கற்பூரவாழையை வெட்டி அத்துண்டுகளால் வரகுக்கு வேலிகட்டுபவனுக்கும் சமானமாவான்.

நைவாக்ருதி: பலதிநைவகுலம்நசீலம்
வித்யாபிநைவநசயத்னக்ருதாபிஸேவா



பாக்யானிபூர்வதபஸாகலுஸஞ்சிதானி
காலேபலந்திபுருஷஸ்யயதேவவ்ருக்ஷா: (7)

(பொருள்) ஆகிருதியினால் பயனில்லை, அது சம்பத்தைக்கொடுக்காது. நல்ல குலமும் சம்பத்திற்குக்காரணமல்ல, வேதவேதாங்கங்களைக் கற்றிருப்பதும் பயனில்லை. மிகவும் கஷ்டப்பட்டு ராஜஸேவை செய்வதும் பயனில்லை. ஆனால் பூர்வத்தில் செய்த தவத்தால் ஏற்பட்ட பாக்கியமானது மனிதர்களுக்குப் பழமரங்களைப்போல சமயத்தில் பயனைக்கொடுக்கின்றது.

மஜ்ஜத்வம்பஸியாதுமேருசிகரம்சத்ருன்ஜயத்வாஹவே
வாணிஜ்யம்க்ருஷிஸேவநாதிஸகலாவித்யா: கலாச்சிக்ஷது
ஆகாசம்விபுலம்ப்ரயாதுககவத்க்ருத்வாப்ரயத்னம்பரம்
நாபாவ்யம்பவதீஹகர்மவசதோபாவ்யஸ்யநாச: குத: (8)

(பொருள்) ஜலத்திற்குள் முழுகினும், உன்னதமான மஹாமேருவின் உச்சியிலேறினும், யுத்தத்தில் சத்துருக்களை ஜயித்தாலும், வாணிபம், விவசாயம், சேவித்தல் முதலியவைகளைச்செய்யினும், மற்றுமுள்ள அறுபத்துநான்கு வித்தைகளையும் அப்பியசித்தாலும், மிகவும் கஷ்டப்பட்டு பக்ஷிபோல் ஆகாயத்தில் பறந்தாலும் கர்மவசத்தினால் எது நடக்குமோ அதுதான் நடக்கும் அது ஒருக்காலும் குறையாது.

வநேரணேசத்ருஜலாக்னிமத்யே
மகார்ணவேபர்வதமஸ்தகேவா
ஸுப்தம்ப்ரமத்தம்விஷமஸ்திதம்வா
ரக்ஷந்திபுண்யானிபுராக்ருதானி

(பொருள்) காட்டிலும், யுத்தத்திலும், சத்துருக்கள், ஜலம், அக்கினி இவைகளின் மத்தியிலும் சமுத்திரமத்தியிலும், பர்வதத்தின்

மேலும், தூங்கிக்கொண்டும், மதம் பிடித்தும் வேறு எவ்வித அவஸ்தை யிலும் இருப்பவனை அவன் முன்செய்த நல்வினையானது காப்பாற்று கின்றது.

பீமம்வனம்பவதியஸ்யபுரம்ப்ரதானம்
ஸர்வோஜஸஸ்வஜனதாமுபயாதிதஸ்ய
க்ருத்ஸ்னாசபூர்ப்பவதிஸன்னிதிரத்னபூர்ணா
யஸ்யாஸ்திபூர்வஸுக்ருதம்விபுலம்நரஸ்ய.

(பொருள்) உலகத்தில் எந்த மனிதனுக்கு பயங்கரமான வனமானது தன் முக்கியபட்டணமாக ஆகிறதோ அம்மனிதனுக்கு ஸகல ஜனங்களும் இஷ்டர்களாயிருக்கிறார்கள். மேலும் எவன் பூர்வத்தில் நற்கருமங்களை விஸ்தாரமாய்ச் செய்திருக்கின்றானோ அவனுக்குப் பூமியானது சமீபத்திலேயே வேண்டிய இரத்னத்தைக் கொடுக்கின்றது.

நீதிசதகம் முற்றிற்று.

# நீதி

## பர்த்ருஹரி ச்ருங்காரசதகம்.

### 1. மாதரைப்புகழ்தல்.

சம்புஸ்வயம்புஹரயோஹரிணேக்ஷணாநாம்
யேநாக்ரியந்தஸததம்க்ருஹகும்பதாஸா:
வாசாமகோசரசரித்ரவிசித்ரிதாய
தஸ்மைநமோபகவதேமகரத்வஜாய (1)

(இ—ள்.) அழித்தல், படைத்தல், காத்தல் இவைகளைச்செய்பவர்களான சிவபெருமான், பங்கயத்தோன், திருமால் இவர்களை மான் விழிபோல் அழகானவிழிகளையுடைய பார்வதி, ஸரஸ்வதி, லக்ஷ்மி இவர்களுக்கு வீட்டில் ஜலங்கொட்டும் வேலையாட்களாகச் செய்தவனும், சொல்லுக்கும் மனதுக்குமெட்டாத மாஹாத்ம்யத்தால் பிறரைப்பிரமிக்கச்செய்பவனும், ஸகல ஜனங்களால் கொண்டாடத்தக்கவனும் மீன்கொடியையுடையவனுமான மன்மதனுக்கு நமஸ்காரம்.

ஸ்மிதேநபாவேநசலஜ்ஜயாபியா
பராங்முகைரர்த்தகடாக்ஷவீக்ஷணை:
வசோபிரீர்ஷயாகலஹேநலீலயா
ஸமஸ்தபாவை: கலுபந்தநம்ஸ்திரிய: (2)

(இ—ள்) மாதர்கள் யௌவனம் முதலிய மதவிகாரத்தாலுண்டாகிய புன்சிரிப்பாலும், இளமைக்கும் யௌவனத்திற்குமிடையிலுண்டாகிய சிற்றின்ப விகாரத்தாலும், குடம்போன்ற கொங்கைகளை மறைத்தல், தலைவணங்குதல், கண்களைச்சிறிது மூடிக்கொள்ளல் முதலியவைகளால் தெரிந்துகொள்ளக்கூடிய லஜ்ஜையினாலும், காரணமின்றி உண்டான பயத்தினாலும், லஜ்ஜையால் முழுவதும் தென்படாத கடைக்கண் பார்வைகளாலும், கிளிகள், கோகிலபக்ஷிகள் இவைகளின் சொற்கள்போல் மதுரமாயும் ம்ருதுவாயுமுள்ள வார்த்தைகளாலும், பிறரது பெருமை

யைப்பொறுக்காமையாலுண்டாகிய கலஹத்தாலும், வார்த்தைகளாலும் சேஷ்டைகளாலும் நாயகனை அநுஸரிக்கச்செய்யும் விலாஸ விசேஷத்தாலும், ஆனந்தம், உத்ஸாஹம் முதலியவைகளையுண்டாக்கும் மயிர்க்கூச்சல் முதலிய விகாரங்களாலும் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாயிருக்கின்றனர்.

ப்ருசாதுர்யாத்குஞ்சிதாக்ஷா: கடாக்ஷா:
ஸ்நிக்தாவாசோலஜ்ஜிதாந்தாச்சஹாஸா:
லீலாமந்தம்ப்ரஸ்திதஞ்சஸ்திதஞ்ச
ஸ்திரீணாமேதத்பூஷணம்சாயுதம்ச (3)

(இ—ள்) ஸ்திரீகளுக்கு, புருவத்தைப் பலவிதமாயசைப்பதால் கோணலாகச் செய்யப்பட்ட கண்களையுடைய கடைக்கண் பார்வைகளும், ஸ்நேஹத்தால் நிறைந்தவார்த்தைகளும், லஜ்ஜையை முதலினுடைய புன்சிரிப்புகளும், விலாசத்தால் அழகான கமனமும், இருப்பும், பூஷணமாகவும் ஆயுதமாகவும் இருக்கின்றன.

க்வசித்ஸப்ருபங்கை: க்வசிதபிசலஜ்ஜாபரிகதை:
க்வசித்பூரித்ரஸ்தை: க்வசிதபிசலீலாவிலஸிதை:
குமாரீணாமேதைர்மதநஸுபகைர்நேத்ரவலிதை:
ஸ்புரந்நீலாப்ஜாநாம்ப்ரகரபரிகீர்ணாஇவதிச: (4)

(பொருள்) ஒருசமயம் புருவத்தை நெறித்தல் முதலிய வியாபாரத்துடன் கூடினவைகளும், மற்றொருசமயம் லஜ்ஜையால் தனது எண்ணத்தை வெளிப்படுத்துகின்றவைகளும், பின்னொருசமயம் பயத்தால் நடுங்குகின்றவைகளும், ஒருசமயம் விலாஸங்களால் அழகாகக் காணப்படுகின்றவைகளும் சிற்றின்பத்தில் வெறுப்படைந்தவனுடைய மனதையும் கலக்குகின்றவைகளுமான தருணிகளுடைய கடைக்கண்பார்வைகளால் திசைகள், மலர்ந்தகருநீதல் மலர்களின் கூட்டத்தால் நிறைந்தவைகள்போல் காணப்படுகின்றன.

வக்த்ரம்சந்த்ரவிகாஸிபங்கஜபரீஹாஸக்ஷமேலோசனே
வர்ண: ஸ்வர்ணமபாகரிஷ்ணுரளிநீஜிஷ்ணு: கசாநாம்சய:



வக்ஷோஜாவிபகும்பவிப்ரமஹரௌகுர்வீநிதம்பஸ்தலீ
வாசாம்ஹாரிசமார்த்தவம்யுவதிஷுஸ்வாபாவிகம்மண்டநம்(5)

(பொருள்) மதிபோல் மனோகரமானமுகமும், தாமரைமலர்போன்ற கண்களும், பத்தரைமாற்றுத் தங்கம்போன்ற நிறமும், வண்டுகளையொத்த கூந்தலும், யானையின் கும்பங்கள்போன்ற கொங்கைகளும், பெரிதான நிதம்பமும், மனோகரமான வார்த்தையும் யுவதிகளுக்கு இயற்கையான பூஷணமாயிருக்கின்றன.

ஸ்மிதம்கிஞ்சிந்முக்தம்ஸரளதரளோத்குஷ்டிவிபவ:
பரிஸ்பந்தோவாசாம்பிநவவிலாஸோக்திஸரஸ:
கதாநாமாரம்ப: கிஸலயிதலீலாபரிகர:
ஸ்ப்ருசந்த்யாஸ்தாருண்யம்கிமிவநஹிரம்யம்ம்ருகத்ருச: (6)

(பொருள்) புன்முறுவலானது சிறிது மனோகரமாயிருக்கின்றது; பார்வையின் ஸம்பத்தானது கோணலின்றிச் சலிக்கின்றது; வார்த்தையின் வியாபாரமும் புதிதுபுதிதான விலாஸங்களையுடைய வார்த்தைகளால் இரஸம் நிறைந்திருக்கிறது; நடையும் விலாஸவிசேஷத்தால் நிறைந்திருக்கிறது; ஆதலின் தருணியின் சம்பந்தமுள்ள எதுவும் மனோகரமாயிருக்கின்றது.

த்ரஷ்டவ்யேஷுகிமுத்தமம்ம்ருகத்ருச: ப்ரேமப்ரஸந்நம்முகம்
க்ராதவ்யேஷ்வபிகிம்ததாஸ்யபவந: ச்ராவ்யேஷுகிம்தத்வச:
கிம்ஸ்வாத்யேஷுததோஷ்டபல்லவரஸ: ஸ்ப்ருச்யேஷுகிம்த
[த்வபுர்
த்யேயம்கிம்நவயௌவநம்ஸஹ்ருதயை: ஸர்வத்ரதத்விப்ரம:(7)

(பொருள்) பார்க்கத்தக்க வஸ்துக்களில் சிறந்தது எது? மான்விழியாளின் அநுராகத்தால் நிறைந்த வதனம். முகரத்தக்க வஸ்துக்களில் சிறந்தது எது? மான்விழியாளின் முகக்காற்று. கேட்கத்தக்கவஸ்துக்களில் சிறந்ததெது? மான்விழியாளின் வார்த்தை புசிக்கத்தக்கவஸ்துக்களில் சிறந்ததெது? அவளுடைய துளிர்போன்ற அதரரஸம், ஸ்பர்சிக்கத்தக்கவஸ்துக்களில் சிறந்ததெது? அவளது சரீரம். தியானிக்கத்தக்க வஸ்துக்களில் சிறந்ததெது? புதிதான யௌவனப்பருவம். இரஸ்த்

தையறிந்த ஜனங்களால் எவ்விடத்திலும் எப்பொழுதும் தருணியின் விலாஸங்கள் தியானிக்கத்தக்கவைகள்.

ஏதாச்சலத்வலயஸம்ஹதிமேகலோத்த
ஜங்காரநூபுரபராஜிதராஜஹம்ஸ்ய:
குர்வந்திகஸ்யநமனோவிவசம் தருண்யோ
வித்ரஸ்தமுக்தஹரிணீஸத்ருசை: கடாக்ஷை: (8)

(பொருள்) அங்குமிங்கும் நடமாடுதலால் அசைகின்ற கங்கணக் கூட்டம், ஒட்டியாணத்தில் கட்டிய சலங்கைகள் ஆகிய இவைகளினின்றுமுண்டாகிய சப்தத்தாலும், பாதஸரங்களின் சப்தத்தாலும் இராஜஹம்ஸங்களை அவமானஞ் செய்தவர்களான முற்கூறிய தருணிகள், பயந்த மான்பேடினுடைய பார்வைபோல் அழகான பார்வைகளால் எவன் மனதைத்தான் மோஹிக்கச்செய்யவில்லை, யாவருடைய மனதையும் மோஹிக்கச்செய்கின்றனர் என்பது கருத்து.

குங்குமபங்ககளங்கிததேஹா
கௌரபயோதரகம்பிதஹாரா
நூபுரஹம்ஸரணத்பதபத்மா
கம்நவசீகுருதேபுவிராமா (9)

(பொருள்) குங்குமப்பூ முதலிய வாசனைத்திரவியங்களால் வாசனை கட்டப்பட்ட தேகத்தையுடையவளும், சற்றுச்சிவந்த கொங்கைகளிலசைகின்ற முக்தாஸரத்தையுடையவளும், ஹம்ஸபக்ஷிகள் போன்ற பாதஸரங்களால் சப்திக்கின்ற தாமரைமலர்போன்ற பாதங்களையுடையவளுமான தையல் பூலோகத்தில் எவனை வசியஞ்செய்யவில்லை.

நாநம்ஹிதேகவிவராவிபரீதவாசோ
யேநித்யமாஹூரபலாஇதிகாமிநீஸ்தா:
யாபிர்விலோலதரதாரகத்ருஷ்டிபாதை:
சக்ராதயோபிவிஜிதாஸ்த்வபலா: சதம்தா: (10)

தொடரும்

Pandit, M. M. Narayanasamy Iyer

Mudikondan.

# கனகாவளி

## அத்தியாயம் 1.

அரசன்:— மந்திரி, இன்றையதினம் போர்க்களத்தினின்றும் கவனிக்கத்தக்க செய்திகள் யாதாவது நமக்கு அறிவிக்கப்பட்டுளதோ

மந்திரி:— அரசே, போர்க்களத்தினின்றும் செய்தி ஒன்றும் இதுவரை நமக்கு வந்துசேரவில்லை இப்பொழுது மணி ஐந்தாய்விட்டது. இன்னும் சுமார் அரைமணி நேரத்துக்குள் தூதுவர்கள் வந்துவிடுவார்கள். அவர்களிடமிருந்து விஷயங்களைத் தெளிவாயறிந்துகொள்ளலாமென்று நினைக்கிறேன்.

அரசன்:— "நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்குமென்பது" நம்முடைய அனுபவத்தில் சரியாய் முடிந்தது. இந்நெருக்கடியான சமயத்தில் வயது முதிர்ந்த நான் படுக்கையில் படுத்திருக்க அருந்தவத்தாற் பெற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அருமையாய் வளர்க்கப்பட்ட என் செல்வக்குமாரனை குருதிபெருகியோடும் கொடிய போர்க்களத்துக்கனுப்பியிருக்கின்றேனே என் செய்வது? விதியை வெல்ல வல்லார் யார்? எல்லாம் வல்லயீசா! எங்கும் நிறைந்த பரிபூரணானந்தமே! கரைகாணவொண்ணாதநினது கருணையென்னும் கடலில் என் அருமைமகனெனும் சிறுபடகைச்செலுத்தியிருக்கிறேன். கருணாநிதீ! காத்தருள்வாய் இவ்வாறு தனக்குள் தியானித்துக்கொண்டு பிறகு மந்திரியைநோக்கி மந்திரி இப்போருக்குக்காரணம் யாதாயிருக்குமென்று நினைக்கிறாய்?

மந்திரி:— அரசே இதற்குக்காரணம் தாங்களும் இளவரசருமே.

அரசன்:— அதென்ன அவ்வாறு மொழிந்தனை? மந்திரி! சமயோசிதமாய் நீ சொல்லும் ஒவ்வொரு யோசனையையும் நாம் அனுசரித்து வந்திருக்கிறோமல்லவா. அப்படியிருக்க நாம் இப்போருக்குக்காரணமாகாமலிருக்கும்படி தடுத்திருக்கவேண்டியது உன் கடமையல்லவா? மேலும் "மந்திரிக்கழகுவரும்பொருளுரைத்தல்" என்னும் பழமொழிக்கேற்ப 'தற்சமயத்தில் இப்போர் நிகழுமென்று நீ நமக்கு முன்னரே அறிவித்து

அதற்கு வேண்டிய சாதனங்களையெல்லாம் சேகரித்துவைக்கும்படி செய்திருக்கவேண்டியதும் உன் கடமையல்லவோ? நமக்கு முன் எச்சரிக்கையும் தயாரிப்புமில்லாததினாலல்லோ இப்பொழுது நமது எதிரியாகிய வீரவர்மன் இந்நாள் வரையிலும் பின்வாங்காது நம்மோடு எதிர்த்துச்சண்டை செய்துவருகின்றனன், எல்லாம் அறிந்தகருணாநிதியாகிய ஈசனும் என்னை இச்சமயத்தில் கிடத்தியிருப்பதை நினைக்கும்பொழுது இப்போர் காரணமாக எவரையுங்குறைகூறுவது சரியல்லவென்றும் இது ஈசனுடைய கட்டளையென்றுமே நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

மந்திரி:— அரசே தாங்கள் கொண்ட கருத்துடன் நான் இவ்விஷயத்தை அறிவித்தவனல்லன் என்பதை மிகவும் வணக்கமாய்த்தெரியப் படுத்திக்கொள்கிறேன். மேலும் எனக்கு என் கடமைகளைச்செய்து அதனால் தங்கள் மனதில் ஒருவிதமான கவலையுமேற்படாமல் செய்வதைக் காட்டிலும் இன்பத்தைத்தரக்கூடிய தொழில் வேறு என்ன இருக்கிறது? இப்போரானது ஒருவரும் எதிர்பாராதவண்ணமே நிகழ்ந்திருக்கிறது.

அரசன்:— இதற்கு காரணம் பின்னைவேறுயாதாயிருக்கலாமென்று நினைக்கிறாய்? நீ நாம் தான் காரணம் என்று சொன்னதின் கருத்தையும் தெளிவாயுரைப்பாய்.

மந்திரி:— இளவரசருடனும் சைன்னியங்களுடனும் தமியேனுடனும் சென்றவருஷம் கனகாபுரிக்கு அத்தேசத்து அரசர் புதிதாய்க்கட்டியுள்ள அரண்மனையில் பிரவேசஞ்செய்யும்பொழுது தாங்கள் சென்றிருந்ததையும் அங்கு நிகழ்ந்தவையொவ்வொன்றையும் கவனித்துப்பார்க்கும்பொழுது அவைகள்தான் காரணமாயிருக்கவேண்டுமென்று என் சிற்றறிவுக்குத்தோன்றுகிறது. இருப்பினும் அதன் முடிவு இவ்வாறாகுமென்று அச்சமயத்திலாவது அதற்குபின்னர் எக்காலத்திலாவது இதுவரையிலும் என் புத்திக்குப்புலப்படவில்லை.

அரசன்:— அக்காலத்தில் நடந்த சம்பவங்களென்ன அவைகளில் எது எதனால் இக்கொடிய போருக்குக்காரணமாய் நிற்கின்றது.

மந்திரி:— மன்னன் வினவியதிற்கு மறுமொழிகூறவிருக்குங்காலையில்



மனோவேகத்திலும் அதிகவிரைவாய் தனித்து ஒரு குதிரையின்மீது யாரோ சவாரிசெய்துகொண்டு அரண்மனையைநோக்கி வருவதாகத்தெரிந்தது. இவ்வாறு நினைப்பு மந்திரியின் மனதில் தோன்றியுந் தோன்றாமலிருக்கும்பொழுதே அரண்மனையில் யாரோ ஒருவர், பனிக்கட்டியினின்றும் நீர் உருகியோடுவதுபோல் வெண்மையான தன் உடலினின்றும் வேர்வையானது துளித்து இழிந்துகொண்டிருக்கும் ஒரு குதிரையினின்றும் இறங்கி அரண்மனையுள் வெகுவிரைவாய்ச்சென்று அரசனிருக்கும் அறைக்குள் புகுவாராயினர். அச்சமயத்தில் தன் குட்டியைக்கண்ட சிம்மம்போல் தன்னருகில் சவாரிசெய்துகொண்டுவந்த விரைவினால் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் தன் மகனை சொல்லவொண்ணா ஆனந்தத்துடன் தழுவி அரசன் பின்வருமாறு வினவுவானாயினன். "என் குலவிளக்கே நமது சைன்னியங்கள் தங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பெற்று மனோற்சாகத்துடனும் தீரத்துடனும் சண்டைசெய்துவருகிறார்களா? நம்முடைய சேனாதிபதிகள் தங்கள் வேலைகளைசரிவர ஊக்கத்துடன் செய்து வருகிறார்களா? நீயும் உயிருக்கு அபாயத்தை விளைக்கத்தக்க காரணங்கள் ஒன்றுமில்லாமல் தப்பி கடவுள் கிருபையால் என்னிடம் வந்து சேர்ந்தனையோ? இன்றையத்தினம் நிகழ்ந்தவைகளென்ன? அவைகளிலிருந்து இச்சண்டையினிறுதியைப்பற்றி எவ்வாறு அபிப்பிராயப்படுகிறாய்?"

இளவரசர்:— பிதா இன்று போர்நடந்த தீவிரத்தை உத்தேசிக்கும்பொழுது இந்நாளே இப்போருக்குக் கடைசிநாளாய் முடியுமென்று நினைத்தேன் திடீரென்று எதிரியரசர் போர்க்களத்தை விட்டுப்போய் விட்டபடியால் அங்குசண்டையினுடைய மும்மரம் இப்பொழுது சற்று குறைந்திருக்கிறது. அதினாலேதான் எனக்கு இப்பொழுது இங்கேவந்து போக அவகாசம் கிடைத்தது.

அரசர்:— வீரவர்மன் ரணக்களத்தை விட்டுப்போனதற்குக் காரணம் இன்னவென்று உங்களுக்கு புலப்பட்டதா?

இளவரசர்:— அவர் அவ்விடத்தை விட்டுப்போகுந் தருணத்தில் போரின் நிலைமையைக் கவனிக்கும்பொழுது அதற்குக்காரணம் மிகவும் விசேஷமானதென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

அரசர்:— அத்தருணத்தில் போரின் நிலைமை எவ்வாறிருந்தது? வீரவர்மன் போயிருக்காவிட்டால் இப்பொழுது போரின் நிலைமை எவ்வாறிருந்திருக்கும்?

இளவரசர்:— அவர் போயிருக்காவிட்டால் இத்தருணத்தில் என்னை நீங்கள் இங்கே பார்ப்பது துர்லபம் இதற்குமுன்னமே நம் நகரைச் சத்துருக்கள் வளைந்து கோட்டைகளை தகர்க்க ஆரம்பித்திருப்பார்கள்.

அரசர்:— நீ சொல்வதைக் கவனிக்கும்பொழுது இத்தருணத்தில் நீ இங்கே வந்திருப்பதற்குக் காரணமும் விசேஷமானதென்றே நினைக்கிறேன்.

இளவரசர்:— பிதா தாங்கள் சொல்வது முற்றிலும் உண்மையே நாளையதினம் மறுபடியும் போர்க்களத்தில் வீரவர்மன் காணப்படும்பக்ஷத்தில் நம் நகரின் கதியின்னவாகுமென்று இதுவரையிலும் நான் தங்களிடத்துச் சொல்லிவந்ததிலிருந்து ஊகித்துக்கொள்ளக்கூடும் ஆகையால் அதற்கு முன்னரே தங்களுடைய சௌக்கியத்துக்கும் காப்புக்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படி முன்னெச்சரிக்கை கொடுப்பதற்கே நான் நேரில் வந்திருக்கிறேன்.

இளவரசரைத் தன்னுடைய உடைகளை மாற்றி ஸ்னானபானாதிகளை முடித்து தன்னுடைய சிரமத்தைத் தீர்த்துவரும்படி விடைகொடுத்தனுப்பிவிட்டு மந்திரியை நோக்கி அரசர் "மந்திரி உனது அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறது நாம் இப்பொழுது செய்யவேண்டியது என்ன" என்று வினவினர்.

மந்திரி:— நமது இளவரசர் சொல்வதை யுக்தேசிக்கும்பொழுது தங்களுடைய திருமேனிக்கு இச்சமயத்தில் ஒருவிதமான ஹானியும் ஏற்படக்கூடாத ஓர் இடத்தை நாடிச் செல்லவேண்டியது மிகவும் அவசியமான காரியமாயிருக்கிறது. இருப்பினும் நமது முக்கிய சேனாதிபதியிடமிருந்து ஒருசமாசாரமும் வரவில்லை. அது கூடியசீக்கிரத்தில் இன்றிரவேயல்லது தவறாது நாளைக்காலையில் வந்துவிடுமென்று நினைக்கிறேன். ஆகையால் அச்சமாசாரம் வந்ததும் அதன் சாராம்சத்தையுமறிந்து பிறகு



நாம் இன்ன செய்யவேண்டு மென்பதைத் தீர்மானிக்கலாமென்று நினைக்கிறேன்.

அரசர்:— நமது இளவரசர் தளகர்த்தரிடம் கலந்துகொண்டே இங்கு வந்திருக்கவேண்டும். ஆகையால் அவர்களிடமிருந்து வரும் சமாசாரமும் நம்மிளவரசரின் அபிப்பிராயத்தையே தழுவியிருக்குமென்று நினைக்கிறேன் அவ்விஷயத்தில் நாம் செய்யவேண்டியதென்ன?

மந்திரி:— நமது நாட்டிற்குக் கிழக்கே சுமார் 20 மைலுக்கு அப்பால் இருக்கும் அபயகிரியை நோக்கிச்சென்று அங்கே கொஞ்சகாலம் வரை யாதொரு பயமுமில்லாமலிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நாம் வேட்டையாடப்போகும்பொழுது அம்மலையின் அடிவாரத்திலமைந்துள்ள விசித்திரமான குகையில் நாம் போய் மிகவும் வசதியாயிருக்கலாமென்று தோன்றுகிறது. அங்குள்ள நமது வேடுவர்களுக்கு சமாசாரத்தைதெரிவித்தோமானால் நாம் அவ்விடத்தில் மிகவும் சுலபமாய்ப் போய்ச் சேரலாம்.

அரசர்:— மந்திரி! நீ தற்சமயத்தில் சொல்லியதைக் காட்டிலும் வேறு சிறந்த உபாயம் இருக்கிறதாகத் தெரியவில்லை. நமது கண்ணுக்குக்கண்ணான அரசர்கள் எத்தனையோ பேர்கள் இருந்தபோதிலும் அவர்கள் இச்சமயத்தில் நமக்கு உதவிசெய்யவந்தார்களில்லை மேலும் வீரவர்மன் துணைப்படைகள் பெற்றிருந்தாலொழிய இந்நாள்வரைக்கும் அவன் நம்மோடு எதிர்த்துச்சண்டைசெய்திருக்கமுடியாது. இச்சண்டையானது நீ சற்றுமுன் சொன்னபடி எதிர்பாராதவண்ணம் ஆரம்பிக்கப்பட்டதால் நாமும் நம்முடைய முழுபலத்தையும் காட்டமுடியாமற் போயிற்று. நம்முடைய நேச அரசர்களுடைய உதவியை நாடாததினாலோ அல்லது வீரவர்மனால் பேதிக்கப்பட்டோ அல்லது அவனுடைய துணைப்பலங்களைக் கண்டு வெருவியதினாலோ அவர்களுடைய உதவியையும் நாம் அடையாமற் போய்விட்டோம். இனிமேல் புவனங்களனைத்தும் தன்னிடமாகக் கொண்டு ஜீவராசிகளனைத்தையும் தன்னுடைய இனியகருணையமிர்தத்தினால் ரக்ஷித்து ராஜாதிராஜனாய் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனாய் விளங்கும் பரஞ்சோதியினுடைய பரிபூர்ணகிருபையை முன்னிட்டு நீ சொல்லியவாறு அபயகிரியை அடைந்து அதைக்கோவர்த்தனகிரியென்று கருதி

இப்போர் மழையை நிறுத்தி அவனருண் மழைபொழிந்து நம்மைக்காக்குமாறு அவனைப்பஜித்துக்கொண்டிருப்போம்.

மந்திரி:— பொன்னினாற் செய்த கனிக்கு இனிப்பும் அமைந்தாற்போலும் பொன்மலர் நாற்றமுடைத்தாற்போலும் ஞானானந்தன் என்ற தங்களுடைய பெயருக்கு ஏற்றவாறு அதற்குரித்தான உத்தமகுணங்களும் தங்களிடத்தமைந்ததை நான் என்னென்று சொல்வேன். வியாதியால் வருந்தி உடல்மெலிந்து கைகாலயர்ந்துபடுத்த படுக்கையில் பிறர் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்குஞ் சமயத்திலும் தம்முடைய நாட்டின் நெருக்கடியான ஸ்திதியையுங்கூடப் பெரிதாகக்கருதாது கன்மலையையடைந்து அங்கேயும் ஈஸ்வரனைப் பஜித்துக்கொண்டிருப்போமென்று தாங்கள் திடமாயும் மனப்பூர்வமாயும் சொல்லும்பொழுது தங்களுடைய முகத்தில் ஜொலிக்கும் தேஜஸையும் நர்த்தனஞ்செய்யும் ஆனந்தத்தையும் கண்ட ஒருவன் இம்மஹானுபாவரே ஞானாமிர்தப் போஜனம் என்று இருக்கக்கூடியவர். இவரே ஞானானந்தர் இவரைத்தரிசித்தமாத்திரத்திலேயே அஞ்ஞானம் என்னும்பிணி நம்மைவிட்டுத்தலைகாட்டாதொழியும். இவரை ஈசுவராம்சமென்றே சொல்லவேண்டுமென்று பூரித்தமனத்தினனாய் புளகாங்கிதனாய் தங்களுடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாகத்தெண்டனிடத்தவறானென்று சொல்லிக்கொண்டே அரசன் படுத்திருந்த சப்பிரமஞ்சத்தினண்டைவந்து முழங்காலிட்டுத்தன்னிரு கைகளையுங்குவித்து தலை குனிந்து அரசருடைய ஆசீர்வாதம்பெற நிற்பவன் போலிருந்தனன்.

அரசன்:— மந்திரியின் இடது தோளில் தன்னுடைய வலது கையைவைத்துக்கொண்டு:— “ஹே, மந்திரி! நான் சொல்வதைச்சற்று கவனி” தன் பக்தர்களுடைய ஸ்துத்தியம் என்னும் சாகரத்தில் முழுகிக்கிடப்பதினால் ஸர்வவல்லமையுள்ள ஈஸ்வரனுடைய சித்தமுங்கூட சலனமடைகிறதென்றால், கேவலம் நரன் நரனால் ஸ்துதிக்கப்படுகிறதென்று வந்துவிட்டால் அந்நரன் கதியென்னாகுமென்று “மதிபூஷணன்” என்று பெயர்வாய்ந்த புத்திசாலியாகிய நீ நான் சொல்லாமலேயறிந்துகொள்ளக்கூடும். எங்குந் தோன்றி நிறைந்து இலங்கும் சுடரொளியை ஏகமனத்தினனாய் அர்ச்சித்தால் அம்மலர்கள் அவனுடைய திருவடிகளில் குவிந்து



அவைகள் என்றென்றும் வாடாது கமழும் நறுமணமானது அர்ச்சித்தவனுடைய மனத்திலுள்ள அஞ்ஞானமென்னும் துர்க்கந்தத்தை நீக்கி ஞானமென்னும் சுகந்தத்தைப் பரவச்செய்யும். அன்றி தோன்றியழியுந் தன்மையுள்ள ஓர் நரனை ஸ்துதித்தாலோ அம்மலர்கள் ஸ்துதிக்கப்பட்ட அந்நரனுக்கு ஏதோ பூர்வஜன்மாந்திர சுகிர்தத்தினாலமைந்து நள்ளிருளில் தோன்றிய ஓர் நக்ஷத்திரமென ஒளித்துக்கொண்டிருக்கும் ஞானமென்னும் கண்ணில் போய்விழுந்து, பூவிழுந்தகண்ணில் பார்வை மங்குவதுபோல் அந்தஞானமும் மறைந்துவிடுமானால் துதிசெய்தவன் அதனாலடையும் பலன் இன்னதென்பதையும் நாம் உனக்குச்சொல்லவேண்டுமோ? நரஸ்துதிசெய்வதற்குக்கவிகளும் வியாசகர்களும் உலகின் கண் கோடானுகோடியிருக்கிறார்கள். மந்திரி! முற்காலத்தில் தேவேந்திரன் எவ்வாறு பர்வதங்களின் சிறகுகளை தன்னுடைய வச்சிராயுதத்தினாலரிந்து அவைகளை அடக்கினானோ, அம்மாதிரியாக நீயும் உன் கூரிய புத்தியினுதித்தெழும் சமயோசிதாலோசனைகளினால் நமது நாட்டுக்கும் பிரஜைகளுக்கும் நேரும் துன்பங்களை அறுத்தெறியவேண்டுவதல்லவோ உன் கடமை. கடவுள் முன் நாமெல்லோரும் ஒன்றே ஆகையால் நாமெல்லோரும் பஜிக்கவேண்டியது அவனையே. அவனருளை முன்னிட்டு இனிமேல் நடக்கவேண்டியவைகட்குண்டான கோரிக்கைகளைக் கூடியசீக்கிரத்தில் செய்துவரக்கடவாய்.

மன்னன் இவ்வாறு சொல்லிமுடிந்ததும் குதிரையின்மீது அதிவிரைவாய்ச் சவாரிசெய்துகொண்டுவரும் மற்றொருவன் அரண்மனைவாயிலில் வந்திறங்கினன். உடனே அரண்மனைவாயிலைத்தாண்டியுட்சென்று அரசனிருக்கும் அரையின் முன் நின்று பாராக்கொடுத்துக்கொண்டிருக்கும் வாயில் காப்போனை நோக்கி “போர்க்களத்தினின்றும் முக்கிய தளகர்த்தர் செய்தியனுப்பியிருக்கிறார். இப்பொழுதுவர சௌகரியமானால் உள்ளேவர உத்தரவு அளிக்கப்பிரார்த்திக்கிறான்” என்று அரசனிடத்தில் போய் விண்ணப்பஞ்செய் என்றான், உடனே வாயில் காப்போனும் உட்சென்று அரசனிடம் தெரிவிக்க அக்ஷணமே வந்து தம்மைப்பார்க்கும்படி ஆஞ்ஞாபித்தார். இப்பொழுது மணி சுமார் 6 இருக்கும். தூதனும் உட்சென்று அரசனையும் மந்திரியையும் வணங்கிப் பிறகு அரசரின் உத்திரவின்படி தான் கொண்டுவந்த உரைக்கடிதத்தை மந்திரியிடம் கொடுத்

தனன். மந்திரி அதை வாங்கியுடைத்துப் பார்க்கையில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"மாட்சிமை தங்கிய மகாராஜா அவர்கள் சமூகத்துக்கு மிகவும் வணக்கமாய்த் தமியேன் முக்கிய சேனாதிபதி தெரிவித்துக்கொண்டது:—

சுமார் ஒருமணி நேரத்துக்குமுன்னமே இளவரசர் தங்களிடம்வந்து செய்திகளைத்தும் தெரியப்படுத்தியிருக்கலாமென்று நினைக்கிறேன். எதிரியரசர் ஏதோ காரணமாகத் திடீரென்று போர்க்களத்தை விட்டுக்கிளம்பி தங்கரை நோக்கி சுமார் 3½ மணிக்குச்சென்றதினால்தான் இளவரசர் தம்மிடம் வருவதற்கும் சிறியேன் தங்களுக்கு இக்கடிதத்தை அனுப்புவதற்குந்தருணம் வாய்த்ததுந்தவிர நம்முடைய நகருக்கும் இதுவரை யாதொரு அபாயமும் நேரிடாமலிருக்கிறது. எதிரிகளுக்கு நாங்கள் ஏராளமான சேதத்தையிழைத்தபோதிலும் அவர்களுக்குத் துணைப்படைகள் வந்துகொண்டேயிருப்பதினால் அவர்கள் மிகவும் பிடிவாதமாயும் தீவிரமாயும் சண்டைசெய்து வருகிறார்கள். நம்முடைய சைன்னியத்தில் உள்ள ஒவ்வொருவனும் ஒன்று ஜெயிக்கவேண்டுமல்லது இறக்கவேண்டுமென்ற மனோவுறுதியுடனுந் தீரத்துடனும் எதிரிகளைத்தாக்கியும் எதிர்த்தடித்தும் போர்புரிந்துவரினும் தற்சமயத்தில் அவ்வாறு போர்க்களத்தில் காட்டிவரும் மனோவுறுதிக்குந் தீரத்துக்குந் தக்கவாறு பலனை அடைவது மிகவும் துர்லபமென்ற யெண்ணமானது மென்மேலுமதிகரித்து என்மனதில் வேரூன்றிக்கொண்டுவருகிறது. எதிரிகளுக்கு எவ்வளவு துணைப்படைகள் வந்தபோதிலும் நாளையதினம் இந்நேரம்வரை இந்த இடத்தைவிட்டசையாமலும் எதிரிகள் நம்முடைய நகரை நெருங்கவொட்டாமலும் தடுத்துக்கொள்ளக்கூடுமென்று மிகவும் "தாழ்மையாய் நம்பிக்கொண்டிருக்கும்.

தங்கள் ஊழியன்
வீராபரணன்.

இன்னும் வரும்
S. Kasthuri Iyengar
School master.

## ஸமாசாரக்குறிப்பு.

லண்டனிலிருந்து பாம்பேக்கு வந்துகொண்டிருந்த "பேர்ஷியா" என்ற கப்பல் ஓர் ஸப்மேரினால் 30–12–15-ல் கடலில் ஆழ்ந்துபோய் விட்டதாகவும் அதிலுள்ள அநேக விலையுயர்ந்த சாமான்களும் சேதமாகி விட்டதுடன் சுமார் 360 பிரயாணிகள் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக கடலில் அமிழ்ந்து இறந்துபோனதாகவும் ஸமாசாரம் தெரியவருகிறது. இறந்தவர்களில் அநேகர் பம்பாய் வாசிகளென்றும் சொல்லப்படுகிறது. இவைதவிர சுமார் 160 ஜனங்கள் அந்த ஆபத்தினின்றும் தப்பிப்பிழைத்தார்களாம். மேலும் இச்சம்பவம் சுமார் 5 நிமிஷத்திற்குள்ளாக ஜடுதியில் நேர்ந்ததாகவும் அதனால் ஜனங்கள் முன் ஜாக்கிறதையாக யிருந்துகொள்ளக்கூடாமற் போயிற்றென்றும் தெரியவருகிறது. இம்மாதிரியான பரிதாப சம்பவங்கள் ஐரோப்பிய யுத்தம் காரணமாக அடிக்கடி நேர்ந்து வருவதை நமது நேயர்கள் யாவரும் அறிவார்கள். யாருடைய ஸப்மேரினால் இவ்வாறு நேரிட்டிருக்குமென்பதை விசாரித்து வருவதில் இன்னும் திட்டமாகத் தெரியவில்லையாம் எக்காலம் இக்கொடுமையான செயல்கள் நேராமலிருக்க கடவுள் கிருபை புரிவாரோ! தெரியவில்லை.

# நமது சந்தாநேயர்களுக்கு

## ஓர் விக்ஞாபனம்

---

நமது சந்தாநேயர்களில் ஆறுமாதத்திய சந்தாதார்களுக்கு சென்ற மாதத்தோடு பத்திரிகை அனுப்பப்படவேண்டியகாலம் முடிவாகின்றது இனிமேலனுப்பவேண்டிய பத்திரிகைக்குரிய சந்தாப்பணத்தை மணியாடர் மூலமாக அனுப்பாததால் இம்மாதம் பத்திரிகையை வி. பி. யிலனுப்பியிருக்கிறோம் தயவுசெய்து அவ்வாறு அங்கீகரிப்பார்களென நம்புகிறோம்.

இவ்வரிய சங்கீத சாஸ்திரஸம்பந்தமான பத்திரிகை நமது தமிழ் நாட்டில் மிகவும் குறைவாகயிருப்பது பற்றியும் இப்பத்திரிகையை இன்னும் விசேஷித்து விருத்தி செய்யக்கருதி மிகுந்த சிரமப்பட்டு வடமொழியிலுள்ள பல நூல்களை ஆராய்ந்து கண்டுபிடித்து எழுத ஆவலுடன் முயற்சிப்பதாலும் நீடித்தகாலம் இப்பத்திரிகை நமது தமிழ் நாட்டில் உலாவி வருமாறு நமது சந்தாநேயர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

நமது சந்தாநேயர்களுக்கென்றே அச்சியற்றிய புது வருஷத்து கலர் காலண்டர் இப்பத்திரிகையுடன் இனாமாக அனுப்பியிருக்கிறோம்.

பத்திராதிபர்.

# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப்போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பராசரஹோரா, ப்ருஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன்; டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

## உங்கள் ஜாதகபலனைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷ மாதம் தேய்தி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவருமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும். ஒவ்வொரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சொல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சொல்லுவது அனவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

சார்ஜின் விவரம்.

| | |
|---|---|
| புத்திரபாவத்திற்கு ... | ரூ 5-0-0 |
| களத்திரபாவத்திற்கு ... | ரூ 3-0-0 |
| தொழில் அல்லது யோகபாவத்திற்கு | ரூ 5-0-0 |
| ஆயுர்பாவத்திற்கு | ரூ 5-0-0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கொடுக்கவேண்டில் | ரூ 25-0-0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கொடுக்கில் | ரூ 2-0-0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கொடுக்கில் | ரூ 3-0-0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கொடுக்க | ரூ 4-0-0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.


161294 உ MADRAS 13 FEB 916

பரமகுருப்யோநம:


# கான வித்யா ப்ரகாசினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1916-ஞ பிப்ரவரி-மீ { NO. 8.


## இந்து ஸங்கீதம்

காகலி, அந்தரம் இவைகளின் சம்மந்தத்தை வெளிப்படுத்துவதற்காக இரண்டாவது வீணையை ஸாரணைசெய்து கொள்ளவேண்டும்.

40. இனி பரதமுனிவரால் பரதசாஸ்திரத்தில் ஜாதிலக்ஷண அத்தியாயத்தில் சொல்லப்படுகிறதாவது:—

(கத்யம்) "தத்ரவாத்வாவிம்சதிச்ருதய:" யதா

(பொருள்) அவ்விடத்தில் இருபத்திரண்டு ச்ருதிகள் எப்படியென்றால்.

(கத்யம்) "அத்ரச்லோகோபவந்தி"

(பொருள்) இவ்விடத்தில் ஒரு ச்லோகமிருக்கிறது.

(ச்லோகம்) "திஸ்ரோத்வேச்சசதுஸ்ரஸ்ச்ச
சதஸ்ரஸ்திஸ்ரவச்ச

த்வௌச்சதஸ்ரஸ்ச்சஷட்ஜாக்யே
க்ராமேச்ருதிநிதர்சனம்"

(பொருள்) ஷட்ஜ கிராமத்தில் ச—க்கு நாலு ச்ருதியும், ரீ—க்கு மூன்றுச்ருதியும், க—க்கு இரண்டுச்ருதியும், ம—க்கு நாலுச்ருதியும், ப—க்கு நாலுச்ருதியும், த—க்கு மூன்றுச்ருதியும், நி—க்கு இரண்டுச்ருதியுமாகின்றன.

(கத்யம்) "மத்யமக்ராமேதுச்ருதிபக்ருஷ்ட:
பஞ்சம:கார்ய:"

(பொருள்) மத்திம கிராமத்திற்கு ச்ருதியை இழுத்து பஞ்சமமாகச் செய்து கொள்ளவேண்டும்.

(கத்யம்) "நிதர்சனம்த்வாஸாமபிவ்யாக்யாஸ்யாம:"

(பொருள்) மத்திம கிராமத்தில் ச்ருதியை இழுத்துக்கொள்வதும், ஷட்ஜ கிராமத்தில் ச்ருதியை நிரப்புவதுமான செயல்களுக்கு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.

(கத்யம்) "த்வௌவீணௌதுல்யப்ரமாண
தந்த்ரி, உபவாதனதண்டமூர்ச்சனே
ஷட்ஜக்ராமாச்ரிதேகார்யா"

(பொருள்) இரண்டு வீணைகள் ஸமமான தந்திகளும், உபவாதன தண்டங்களும், மூர்ச்சனை சுத்தமாகவுமுள்ளவைகளை ஷட்ஜ கிராமத்தைச் சேர்ந்ததாக ச்ருதிசெய்து கொள்ளவேண்டும்.

(கத்யம்) "தயோ: ஏகதாஸ்யாம் மத்யமக்ராமிகம்க்ருத்வா,பஞ்சமஸ்யாபகர்ஷே
ச்ருதிம்தாமேவ பஞ்சமவசாத் ஷட்ஜ
க்ராமிகம்குர்யாத்"



(பொருள்) அவ்விரண்டு வீணைகளுள் ஒரு வீணையை மத்திம கிராமத்தைச் சேர்ந்ததாகச் செய்துகொண்டு பஞ்சமச்ருதியின் அபகர்ஷணத்தினால் அந்த ச்ருதியே பஞ்சமம் நிரம்பியிருப்பதால் அது ஷட்ஜகிராமத்தைச் சேர்ந்ததாகிறது.

(கத்யம்) "ஏவம்ச்ருதிரபக்ருஷ்டாபவதி"

(பொருள்) இப்படி ச்ருதியை நிறப்புவது.

(கத்யம்) "புனரபிதத்வதேவ அபகர்ஷாத்காந்தாரநிஷாத
வந்தௌ இதரஸ்யாம்தைவதரிஷபௌ ப்ரவிசதௌ
த்விச்ருதிஅதிகத்வாத்"

பொருள்) மறுபடியும் அதையே அபகர்ஷணத்தினால் காந்தார நிஷாதம் ஒன்றினும், மற்றொன்றில் தைவத ரிஷபங்களுமாகின்றன. ஏனெனில் இரண்டுச்ருதிகள் அதிகமாக இழுக்கப்பட்டது.

(கத்யம்) "புன: தத்வதேவ அபகர்ஷாத்
தைவதரிஷபௌ இதரஸ்யாம் பஞ்சம
ஷட்ஜௌப்ரவிசத: ச்ருதீதிகத்வாத்"

(பொருள்) மறுபடியும் அப்படியே பிரிவதினாலேயும், ச்ருதி அதிகமாவதினாலேயும் தைவதரிஷபங்கள் மற்றொன்றில் பஞ்சம ஷட்ஜங்கள் பிரவேசிக்கிறதுகள்.

(கத்யம்) "தத்வத்புனரபக்ருஷ்டாயாம்,தஸ்யாம்
பஞ்சம மத்யம ஷட்ஜௌ இதரஸ்யாம்,மத்யம
காந்தாரநிஷாதபந்த: ,ப்ரவேக்ஷ்யந்தி
சதுச்ருதிஅதிகத்வாத்"

(பொருள்) அப்படியே மறுபடியும் இழுத்துக் கொள்ளும் தந்தியினால் நான்குச்ருதி அதிகமாய் விட்டபடியினாலே அந்தத் தந்தியிலிருந்தே

பஞ்சம, மத்தியம, ஷட்ஜம, ஓசையுண்டாகிறது. மற்றொன்றில், மத்திம, காந்தார, நிஷாதங்கள் பிரவேசிக்கிறதுகள்.

(கத்யம்) "ஏவம்அனேனச்ருதிநிதர்சனேன,
த்வௌக்ராமிக்யௌ, த்வாவிம்சதிச்ருதய:,
ப்ரத்யவகந்தவ்யா:"

(பொருள்) இந்தப்படி முற்சொல்லிய ச்ருதிகளின் கார்வைகளினால் ஷட்ஜகிராம மத்யகிராமங்களுக்கு தனித்தனியே இருபத்திரண்டு ச்ருதிகளாகின்றனவென்று அறியவேண்டியது.

41. பாதலதாகல்ப மஞ்சரியின் அபிப்பிராயமாவன:—

(ஸ்வரப்ரகரணம் ச்ருதிபேதலக்ஷணம்)

"மந்த்ராதிகாத்தாச்ருதய:
சுத்ததந்த்ரோநவஸ்ம்ருதா:"

(பொருள்) அந்த சுத்த தந்திகளை அடைந்திருக்கிற ச்ருதிகள் மந்திரமுதலான ஒன்பதாகின்றன. (1) மந்திர மந்திரம் (2) மந்திர மத்தியம் (3) மந்திரதாரம் (4) மத்திய மந்திரம் (5) மத்திய மத்தியம் (6) மத்தியதாரம் (7) தாரமந்திரம் (8) தாரமத்தியம் (9) தாரதாரம் இவைகள் பூலோகத்திலும் தேவலோகத்திலும் மூன்று வகையாகயிருக்கின்றன.

அவையாவன:—

"ஸமா: ஸ்வரா: க்ஷயாஸ்ச்சஇதி
ச்ருதிஸ்த்ரேதாப்ரகீர்த்திதா:"

(பொருள்) ஸமச்ருதிகள், ஸ்வரச்ருதிகள், க்ஷயச்ருதிகள், என மூன்று வகைப்படும்.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. 〰〰 = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. அ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளதின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி, கணக்கிட்டுக்கொள்ளவும்.



ஸ்ரீ த்யாகராஜ = ஸ்ரீ த்யாகராஜனுடைய
நிருபாதிகுடை = நிருபாதிகனை
அர்ச்சிம்ச = அர்ச்சித்துக்கொண்டிருக்க

(பொழி) பிரமன், ஸனகாதி முனிகளால் அர்ச்சிக்கப்பட்ட மேக காந்தியுடையவனை, நல்ல நாபீகமலத்தையுடையவனை, சூர்யனுடைய ஹிருதயத்தில் சஞ்சரிக்கும் ஈசனை, ஸ்ரீத்யாகராஜனுடைய நிருபாதிகனை மார்பிலும், முகத்திலும், சிரசிலும், புஜத்திலும், கைகளிலும், கண்களிலும், இருபாதங்களிலும், கருணையோடும், அன்போடும், பரமானந்தத்தோடும், என்னேரமும் சந்தனமுதலான நல்ல வாசனையுள்ள துளஸி, வில்வம், மல்லிகை, தாமரைபுஷ்பம் முதலியவற்றால் பூஜைசெய்யக் கைக்கொள்ளேன்!

### கேதாரம்—ஆதிதாளம்—அரைக்களைச்சவுக்கம் லகு ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ = ச, அ—க, ச—ம, ப, கா—நி

அவ = ச, கா—நி, ப, ச—ம, அ—க, ச—ரி,

ப = மரச்சேவாடனு—ராமாநின்னு
மதனஜனகா—

அ = மரகதாங்கநீயொக்க—மதினிஎஞ்சவலது =

சர = காணிமானவுல—கருணலேகநாபை
லேணிநேரமு—லெஞ்சினகாணி
ஸ்ரீனிஜமுகநா செந்தஜேரினகாணி

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப= பாமாமககரி–கரீச–சாசநிநீ | பா* * * *சா | நீசாகாமா |
| மர ச்சே—வ-- ஆட— | ஞ* * * *ரா | ஆமாநின்னு |
| (1) பாமாகரி–பமகரி–சரிகரிசநிநீ | ஷை | ஷை |
| ம ரச்சே——-வ—-ட— | ஷை | ஷை |
| கமபநி–பமகரி–சரிசநி–நீசா | கா* * *ரிசரி | சா–நிபாமகரி |
| ம——த——-ன—-ஜன | கா* * *—— | ஆ–அ—— |
| = பாமா = | | |
| = ம ர = | | |
| அ= பாமாமககரிசாசா–கமபா— | பா–ச்ரக்ரீச்நி | ச்நி நீச்ரா* * |
| ம ர——க——— நா–ங்— | க --நீ——- | யொ—-க்க* * |
| பாச்நிபா–பமகமபநி–பச்ரச் | நிபபம–கமபநி | பாமாமககரி– |
| ம தி—- நி——— எம்-ச | —வ– ——- | ல—து—— |
| = பாமா = | | |
| = ம ர = | | |
| ர = பாமாமககரி–ம ஈரிசா* * | ப நிசநி சரிகரி | மாக ரிசா* * |
| காநி மா—- ந—-வுலு* * | கருணா-லே-க | நா—-லை* * |
| கம பாநிச்ரநி–பமகா * ரிசா | * *பாசாசா | கா*ரிசரிசா—- |
| லே-ணிரே—- ர–மு * உ—- | * *லெஞ்சின | கா*ணி—— |
| * *கமாபபா–ச்ரச்நிநீ* *நிச்ர | * *ம்ா *க்ச்ரா | ச்ராச்நிநீ* *–நிசா |
| * *ஸ்ரீ-நிஜ—முக—-* *ந—. | * *செ *ந்தஜே | ரி ந—-* *–காஞ |
| * *ச்ரா *நிபா–பமகமபநிபச்— | *ச்நிப–பமகம | பநிபாமகாரி—- |
| * *ரா *நிநீ –த—-பஅத்யா | *க—- ர—- | ஜ—-ஞதாஅ– |
| = பாமா = | | |
| = ம ர = | | |

## பல்லவிக்கு கற்பனஸ்வரம்.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| 1) மாசேவாட | ஞ* *–* *மா | * *கா* *மா |
| 2) ஷை | * *சா–* *மா | * *கா* *மா |
| 3) ஷை | * *பா–நீ மா | பாமாகாமா |
| 4) ஷை | * * நீ–ச்ரநீ | பாமாகாமா |
| 5) ஷை | * *பநி–ச்ரீச்நி | பமகரி–சமகம |
| 6) ஷை | * *க்ரீச்ரீச்ரா | *நிபநிபா*ம |
| 7) ஷை | * *ம்க்ராரீச்ரீ | ச்நிபா*மகம |
| 8) ஷை | பா*நி–பமகம | கரிகரி–சரிசநி |
| பா*பநிசநிசகமபமபநிச்க் | ரீ *ச்ரீக்ச்ரீ | ச்ரா*நிபநிபம |
| 9) மாசேவாட | பநிமபகமகரி | கரிசரிசசநிப |
| நிசமகமபநிப–நிச்நிச்க்ரீம்க் | ரீக்ச்ரீநிச்பரீ | ச்ராநிபாமகம |
| 10) மாசேவாட | நீபமகமபநி | பாமகரிசரிக |
| ரீசரிசநிபநிசா*சமகமப | நீபச்ராநிக்ர | ரீம்ாக்ரீச்நிப |
| நிச்க்ரீக்ச்ரீநி–ச்பநிமபகமப | நிச்ரீச்ராச்–மப | நிபாம–பமகரி |
| = மாசே = | | |

(பத) ப=மரச்சேவாடனு=நான் மறந்தவனு?

ராமா நின்னு=இராமா! உன்னை

மதனஜனகா=மன்மதனைப்பெற்றவனே!

அ=மரகதாங்க=பச்சைநிறமான திருமேனியையுடையவனே!

நீ யொக்க=உன்னுடைய

மதினி=மனதை

எஞ்சவலது=நினைக்கமுடியாது (அறியமுடியாது)

சர=கானி=பரிசுத்தமில்லாத

மானவுல=மனிதர்கள்

கருணலேக=கருணையின்றி

நாபை=என்மீது

லேனி=இல்லாத

நேரமுலு=குற்றங்களை

எஞ்சினகானி=நினைத்தார்களேயல்லாது (வேறில்லை)

ஸ்ரீ நிஜமுக=விசேஷ உண்மையுடன் கூடினவனே!

நா=என்னுடைய

செம்தஜேரினகானி=ஸமீபத்தில் சேர்ந்தாலல்லது

ரானி நீதய=உன்னுடைய தயவில்லை

த்யாகராஜனுத=தியாகராஜனல் துதிக்கப்பட்டவனே!

(பொழி) மன்மதனைப் பெற்றவனே! பச்சை நிறமான திருமேனியையுடையவனே! த்யாகராஜனுல் துதிக்கப்பட்டவனே! விசேஷ உண்மையுடன் கூடினவனே! பரிசுத்தமற்ற மனிதர்கள் கருணையின்றி என் மீது இல்லாத குற்றங்களை நினைத்தார்களேயன்றி வேறில்லை. உன்னுடைய மனதையறிய முடியாது. இராமா! நான் உன்னை மறந்தவனு? என்னுடைய ஸமீபத்தில் நீ சேர்ந்தாலல்லது உன்னுடைய தயவில்லையென்றே நினைப்பேன்.



பலஹம்ச ராகம்–ஆதிதாளம் அரைக்களைச்சவுக்கம்

லகு ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ=ச, ச–ரி, சு–ம, ப, ச–த,

அவ=ச, கை–நி, ச–த,ப, சு–ம, அ–க, ச–ரி

ப=தல்விதண்றனுகலபேருகானி

இலநீஸரிதைவமுலெவரே

அ=இனுகலச ஸமுத்ரமுகாகனுநீ

கில்லானுவிதேஹதனயபளீ

சர=கிரிசாதிவிதிந்த்ரார்க்கசசாங்க

மருகோட்டனுவா–னருலெகொனுவ

த்ரசக்ரபணீந்த்ருனுஸோதருலை

தகிவேடகத்யாகராஜவினுத=

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப= ச்ா நீ–நிததப்–பாமா–மாரீ | சரிமரி–சாரீ | சா* *–ந்தபா |
| தல்வி–தன்——று லு–க ல | பே—— —ரு | கா* *–ணி—— |
| (1) ச்ா நீ–தபசநிதப–ப மா–மரீ | ஷை | ஷை |
| தல்வி–தன்———று லு-கல | ஷை | ஷை |
| தாசா–ரீமா–மாகாசா* * | * *சரி மரி மா | பா* *–நிததப |
| இ ல–நீ--- ஸரிதை* * | * *வ அ முஉலெ | வ * *–ரே—— |
| அ= * *த ச்ா–ரீம்ா–க்ா ர்ர்* * | ச்ரீ ம்க் ச்ா* * | நீதா–தநிபா |
| * *இ லு–க ல–சஸமு* * | த்ர அமுகா* * | கனு–நீ—— |
| ர் ச்ா* *–ச்நிதாபா--ப த பா | * *பாமாரீ | சரிமரி—ம ப த ப |
| கில்லா* *———லு—-விஇதே | * *ஹதன | ய———பஅளி இ |
| ச= * *பப பா* *–ப ம ரீ–ரிமபம | ரீ * *மாகா | சா* *நிதபா |
| * *கிரி சா* *–திஇவி–தி——ந் | த்ரா* *ர்க்கச | சா* *ங்க—— |
| * *தசரீ மா–மாகா சா* * | சரி மரி ம்ாபா | நித தாபா |
| * *மருகோ–ட்லு வா* * | நஅ ருஉ லே-- | கொஒலுவ |
| (அனு பல்லவி மாதரி)=* *தரசக்ரபணீ | ந்த்ருலுஸோ | தருலே |
| தகி–வேடுகே-த்யாக | ராஜ | வினுத |
| =தல்விதன்றுலு= | | |

# இராக லக்ஷணம்.

112-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## இராக ஸஞ்சாரம்.

(1) சகாமபநீ* * * *ச்ா* *–ச்நீ* * * *தபா* *ம–கா* * * *ரிசா* * * *–

(2) மகமபா* *நி–பநிச்ா* *–ச்நிச்ாரிச்நீ* ***ச்—பநிச்நீ* *த–பமபகா* * * *ம–பநிச்ா* *நிதப–மநிதப–மபகா* *ரிசா* * * *–

(3) நிசகா* *ம–பநிபநீ* *நிதப–மபநிதப- மபநிச்ரிநிச்ா* * * *–ச்நிதப–பாநிச்–நீச்ரிச்ாரி–நிச்–மபநிச்க்ா* *ம்க்ரி–நிச்–நிக்ரீ* * * *–ச்நிதப–மபநிதா*ப–மகபமதபா* *மகா* *ரிசா* * * *–

(4) கமபநீநி–மபநீநி–சகமபநீநி–பநிபநிச்ா* * * *–ச்நிக்ா* * * *ரி–ச்ரிநிரிச்நிதபா* * * *—-பாநிச்நீச்ரிச்ா* *ரி–நிச்நிதப–மபநிதப–ரிச்நிதப–க்ாரிச்நிதப–நிநிதபத–மபகமபா* * * *–மகா* *ரிசா* * * *–

(5) பமரீ* *–மாபமகா* * * *–சமகமபா* *பா* *–பாநிச்நீ* *ச–நிச்க்ா* *ரி–ச்ரிநிரி* *ச்–நிதபா* *ரிரீச்நிதபா* *–நிச்ரி–பநிச்–மபநி–கமப–நிசகமப–நிச்க்ரிம்க்ரிச்ா* *ரி–நிக்ரிச்நிதப–நீச்ரிச்ா *ரிநிச்—மாபதபா*தமப–கமபநீ* * * *தபமகா* *–மகபமதபகா* *–கரிமகா* *ரி–ரிசா* *ரி–நிச–மபநீ* *ரிசா* * * *=

## 19. மாளவஸ்ரீ ராகம்—22-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ = ச, சா—க, சு—ம, ப, கை—நி,

அவ = ச, கை—நி—ச—த, ப, சு—ம, சா—க,

### இலக்கணம்.

"ரிவர்ஜதாமாளவஸ்ரீ
ஆரோஹே துதவர்ஜிதா:
ஷட்ஜக்ரஹாஷாடவீச்ச
ஸர்வயாமேஷுகீயதே"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) மாளவஸ்ரீ ராகத்திற்கு ரி—யென்ற ஸ்வரத்தை ஆரோஹண, அவரோஹணங்களில் வர்ஜித்தும், த—யென்ற ஸ்வரத்தை ஆரோஹணத்தில் மட்டிலும் வர்ஜிக்கவேண்டியது. அதாவது அவரோஹணத்தில் த—ஸ்வரத்தை சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பொருள். இது ஷட்ஜகிரஹம், ஷாடவராகம், இது எந்தக்காலமும் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சகா* *ம—பநிச்ா* *—ச்நிதா* *ப—மாபமகசா* * * *—

(2) கமபநீ* *நிதா* *தபமா* * * *—மகமாபமகா* *—மகசா* * * *

(3) சநீ* *ச—நிசகசா* *க—சகமகா* *ம—கமபமா* *ப—மபநிநீ* *நிதப—
நிச்க்ா* *ச்க்ச்க்ம்ா* * * *ம்க்ம்ாப்ம்க்ா* *—ம்க்ச்—ச்நிச்க்ா* *ம்க்ச்—
நிச்க்ச்ா* *ச்நிதப—மபநிதப—மபா* *பமகசா* * * *—



(4) கமபா* *பா* *——பாநிததா* *—த்ா* *—தபமபநீ* *நீ* *—நிச்ா* *—
ச்ா* *ச்நிச்பா* *நி—மபநிச்ா* * * *நிச்க்ம்ா* *ப்—க்ாம்ப்ம்ாப்—
க்ா* * * *—ம்க்ச்—நிநிச்க்ா* *ச்—நிதப—மபநிச்ா* *ச்நித—மபநிதாப—
மபமகா* *மகசா* * * *

(5) நிசநிசக—சகசகம—கமகமப—மபமபநி—பநிச்க்ா* * * *ம்க்ச்ச்நிநிதப—
மபநிச்க்ச்ா* *ச்நித—மபநிநீ* *நிதப—மபநிதப—கமபநிதப—சகமபநிதப—
மதபமப——காமடிமாபமகா* *—மகசா* * * *நிதப—நிநீ* *நிசா* * * *—

## 20. ஸாவேரிராகம்— 15—வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ = ச, சு—ரி, சு—ம, ப, சு—த,

அவ = ச, கா—நி, சு—த, ப, சு—ம, அ—க, சு—ரி,

### இலக்கணம்.

"ஸாவேரீராக: பூர்ணோயம்
ஆரோஹேகநிவர்ஜித:
கநீத்ரித்ரிச்ருதிலக்ஷ்யே
த்வசித்காயந்திகாயகா:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) ஸாவேரி பூர்ணராகம் ஆரோஹணத்தில் க, நி, இந்த ஸ்வரங்களை வர்ஜிக்கவேண்டியது. லக்ஷ்ய ஞானவான்களான சில ஸங்கீத வித்வான்களால் சில இடங்களில் க— நி— இந்த ஸ்வரங்கள் மூன்றுச்ருதியுள்ளதாகபாடப்பட்டு வருகின்றன.

குறிப்பு:— ச்லோகத்தில் சொல்லிய மூன்று ச்ருதியுள்ளயிடமென்பது "சதுர்தண்டிப்ரகாசிகா" நூலின் கிரந்தகர்த்தரான வெங்கட்டமுகியென்பவரால் ச்ருதிவிபாகத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி சாதாரண காந்தாரமும், கைசிகி நிஷாதமுமாகின்றன. இவ்வாறு சாதாரண காந்தாரத்தைச் சேர்த்து இந்த ராகத்தைப் பாடுகிறவர்கள் தற்காலத்தில் ஒருவருமில்லை. ஆனால் சிலர் பதநீ****தப— என்று பாடும் சந்தர்ப்பங்களில் நிஷாதத்தை மட்டிலும் கைசிகி நிஷாதமாகப்பாடுகிறதாக தெரிகிறது. பெரும்பான்மையோர் அந்தரகாந்தாரமும், காகலிநிஷாதமுமே சேர்த்துப்பாடி வருகிறார்கள். மேலும் ச்லோகத்தில் சில லக்ஷ்ய வித்வான்கள் சில ஸமயங்களில் அவ்வாறு சாதாரண காந்தாரம் முதலியன உபயோகித்து வருவதாக சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டும்.

## இராக ஸஞ்சாரம்.

(1) சா**ரிமபா**தச்ா****—ச்நிதா***மதபமகா****ரிசா****—

(2) சரிமா**மா**மாபமகா**——-கரிசா**—ரிமரிமபா**பா**—
பாதபபமதா**தா**பமபதச்ா**ச்ா**—ச்நிரீச்நிதா**—
பமபதபதநீ***தப—மபதபா***நிதபமபதபமா***ப—
மபா*மகா**கரிரீ**சரிபமகா**ரி—சாரிகாரி—சா****—

(3) ரிமபா**பா**—பாத்பாதபமா**—மாபமாபமகா**—காமகாமகரீ**—
சரிகரிசநிதா***சரிமபதா***பமபதபதச்ா***ச்நிரீச்நிதா**—
பமபதரீ***ச்தச்ரீச்ரீக்ா**ரீ—ச்ரீக்ரீ**க்ரீச்—ச்நிரீச்ா**ரீச்நிச்நிதபம—
பத்ரீ***ச்நிதபம—பதச்ா**மபதநீ***தபமகரி—
சரிதபா**தமதபமகரிரீ***ரீபமகா**ரி—சாரிகரீ**கரிச—
சா**நிதா**ரிசா****=

இன்னும்வரும்

பத்திராதிபர்.

# நீதி

## ச்ருங்காரசதகம்.

4-வது பக்கத்தின் தொடர்ச்சி.

(பொருள்) அடிக்கடி அசைகின்ற கருவிழிகளையுடைய கடைக்கண் பார்வைகளால் அமரர்கோன் முதலியோரை வென்றவர்களான மாதர்களை அபலைகள் (பலமற்றவர்கள்) என்று எப்பொழுதுங்கூறும் கவிசிரோமணிகள் நிச்சயமாகவேமாறான சொல்லை உடைத்தாயிருக்கின்றனர்.

நூநமாஞ்ஞாரெஸ்தஸ்யா: ஸுப்ருவோமகரத்வஜ:
யதஸ்தந்நேத்ரஸஞ்சாரஸூசிதேஷு ப்ரவர்த்ததே (11)

(பொருள்) மீன்கொடியோன், பிரஸித்தையாயும், அழகியபுருவமுடையவளுமான மங்கையர்களின் கட்டளையை நிறைவேற்றும் வேலைக்காரனாயிருக்கின்றான்; ஏனெனில், (உலகத்தில் எஜமான் கண்ணால் காட்டிய காரியங்களில் வேலைக்காரன் ப்ரவிர்த்திப்பதுபோல்) அம்மங்கையரின் கடைக்கண்ணால் காட்டப்பட்ட கார்யங்களில் மன்மதன் ப்ரவிர்த்திக்கிறான்.

கேசா: ஸம்யமிந: ச்ருதேரபிபாம்பாரங்கதேலோசநே
அந்தர்வக்த்ரமபிஸ்வபாவசுசிபி: கீர்ணம்த்விஜாநாம்கணை:
முக்தாநாம்ஸததாதிவாஸருசிரைவக்ஷோஜகும்பாவிமா
வித்தம்தந்விவபு: ப்ரசாந்தமபிதேராகம்கரோத்யேவந (12)

(பொருள்) பிடிக்குள்ளடங்குமிடையுடையவளே! உனது கூந்தல்கள் கட்டப்பட்டிருக்கின்றன; (நியமத்துடன் கூடினவைகளாயுமிருக்கின்றன;) உனது கண்களும் செவிகளின் முடிவுவரை நீண்டிருக்கின்றன; (வேதாந்த விசாரத்தின் முடிவையுமடைந்திருக்கின்றன;) முகத்தினுடைய மத்யப்ரதேசமும் இயற்கையாகவே வெளுப்பான பற்களின் கூட்டங்களால் (இயற்கையாகவே பரிசுத்தமான இருபிறப்பாளர்களின் கூட்டங்களால்) நிறைந்திருக்கிறது. இவ்வுனது கொங்கைகளும் (ஜீவன்

முக்தர்கள் எப்பொழுதும் வஸிப்பதனால்) முக்தாஹாரங்கள் தன்மீது எப்பொழுதும் வஸிப்பதனால், மனோகரங்களாயிருக்கின்றன; இவ்வாறு உனது சரீரம், நிர்மலமாயிருந்தபோதிலும் (வைராக்கியத்துடன் கூடினதாயிருந்தபோதிலும்) எங்களுக்கு ஸம்போகத்தில் விருப்பத்தை உண்டாக்குகின்றது.

முக்தேதாருஷ்கதாகேயமபூர்வாத்வயித்ருச்யதே
யயாவித்வம்ஸிசேதாம்ஸிகுணைரேவநஸாயகை: (13)

(பொருள்) ஹே ஸுந்தரி! உன்னிடம் அபூர்வமான வில்லாளியாயிருக்குகை காணப்படுகிறதே! அதன் பெருமை எவராலுமறியமுடியவில்லை; ஏனெனில், நீ அவ்வில்லாளியாயிருக்குகையால் யுவஜனங்களின் மனதுகளை (நயம் முதலிய குணங்களாலேயே) (நாண்கயறுகளாலேயே) அடிக்கிறாய்; வில்லாலடிக்கவில்லை.

ஸதிப்ரதீபேஸத்யக்னௌஸத்ஸுதாராமணீந்துஷு
விநாமேம்ருகசாபாக்ஷ்யாதமோபூதமிதம்ஜகத் (14)

(பொருள்) விஷயங்களை விளக்கும் தீபமும், தீயும், நக்ஷத்ரங்களும், பத்மராகம் முதலிய இரத்னங்களும், சந்திரனும் இருந்தபோதிலும், முன்னநுபவித்த மான்விழியாளை விட்டுப்பிரிந்த எனக்கு இவ்வுலகம் இருட்டாகக் காணப்படுகிறதே!

உத்வருத்த: ஸ்தநபாரஏஷதரளேநேத்ரேசலேப்ரூலதே
ராகாதிஷ்டிதமோஷ்டபல்லவமிதம்குர்வந்துநாமவ்யதாம்
ஸௌபாக்யாக்ஷரமாலிகேவலிகிதாபுஷ்பாயுதேவஸ்வயம்
மத்யஸ்தாபிகரோதிதாபமதிகம்ரோமாவளி: கேநவா (15)

(பொருள்) நன்குவர்த்துலமான கொங்கைகளும், அசைகின்ற கண்களும், சலிக்கின்ற கொடிபோன்ற புருவங்களும், சிவந்த துளிர்போன்ற உதடும், மனதிற்குத் துன்பத்தைச் செய்யட்டும்; ஆனால் புஷ்பாயுதன் தனது கையாலெழுதிய ஸௌபாக்யாக்ஷரமாலிகைபோன்ற இந்த ரோமங்களின் கூட்டம், இடையிலிருந்தபோதிலும் (மத்யஸ்தமாயிருந்தபோதிலும்) எக்காரணத்தால் தாபத்தைச்செய்கிறதோ, தெரியவில்லை.



முகேந்சந்த்ரகாந்தேநமஹாநீலை: சிரோருஹை:
கராப்யாம்பத்மராகாப்யாம்ரேஜேரத்னமயீவஸா (16)

(பொருள்) மதிபோல் மனோகரமான (சந்திரகாந்தக்கல் ரூபியான முகத்தாலும், மிகவும் கருத்த (இந்திரநீலரத்னரூபியான) கூந்தலாலும், தாமரைமலர்போல் சிவந்த (பத்மராகக்கல்ரூபியான) கைகளாலும், அந்நங்கை இரத்னஸ்வரூபிணியாக விளங்கினாள்.

குருணாஸ்தநபாரேணமுகசந்த்ரேணபாஸ்வதா
சநைச்சராப்யாம்பாதாப்யாம்ரேஜேக்ரஹமயீவஸா (17)

(பொருள்) அடங்காத (ப்ருஹஸ்பதிரூபியான) கொங்கைகளின் பாரத்தாலும், பிரகாசம் பொருந்திய (ஸூர்யரூபியான) முகமாகிற மதியினாலும், மெதுவாக நடக்குமியல்புள்ள (சனைச்சரரூபியான) பாதங்களாலும் அவள் நவக்ரஹரூபிணிபோல விளங்கினாள்.

தஸ்யாஸ்தநௌயதிகநௌஜகநம்சஹாரி
வக்த்ரம்சசாருபதிசித்தகிமாகுலத்வம்
புண்யம்குருஷ்வயதிதேஷுதவாஸ்திவாஞ்சா
புண்யைர்விநாநஹிபலந்திஸமீஹிதார்த்தா: (18)

(பொருள்) தருணிகளின் கொங்கைகள் பருத்திருக்கின்றன; ஜகனப்பிரதேசமும் மனோகரமாயிருக்கிறது; முகமும் அழகாயிருக்கிறது; ஓ! மனமே! நீ ஏன் துன்பப்படுகிறாய்! உனக்குக் கொங்கை முதலியவைகளில் விருப்பமிருந்தால் நல்வினையைச் செய்வாய்; ஏனெனில் நல்வினையின்றி விரும்பப்படும் பொருள்கள் கிடைப்பதில்லை.

இமேதாருண்யச்ரீநவபரிமளாப்ரௌடஸுரத
ப்ரதாபப்ராரம்பா: ஸ்மரவிஜயதாநப்ரதிபுவ:
சிரம்சேதச்சோரா அபிநவவிகாரைகுரவோ
விலாஸவ்யாபாரா: கிமபிவிஜயந்தேம்ருக்தருசாம் (19)

(பொருள்) யௌவநஸம்பத்தின் புதிதான ஸௌபாக்ய விசேஷத்தையுடையனவும், கடுங்கலவியில் ஸாமர்த்யத்தைக் கொடுப்பவைகளும்,

மன்மதனுக்கு ஜயத்தைக்கொடுப்பதில் மத்யஸ்தன் போன்றவைகளும், நெடுங்காலமாய் மனோகரங்களாயும், காரணமின்றியுண்டாகிய நடுக்கம் முதலிய யௌவநவிகாரங்களால் நிறைந்தவைகளும் தருணிகளின் ஸம்பந்திகளாயுமுள்ள ச்ருங்காரசேஷ்டைகள் ஸர்வோத்கர்ஷமாய் விளங்குகின்றன.

ப்ரணயமதுரா: ப்ரேமோதாராரஸாச்ரயதாம்கதா:
பணிதிமதுராமுக்தப்ராயா: ப்ரகாசிதஸம்மதா:
ப்ரக்ருதிஸுபகாவிஸ்ரம்பார்த்ரா: ஸ்மரோதயதாயினோ
ரஹஸிகிமபிஸ்வைராலாபா ஹரந்திம்ருகீத்ருசாம் (20)

(பொருள்) ஸ்நேஹத்தால் ஸந்தாபஹரங்களாயும், அநுராகவிசேஷத்தால் மனோகரங்களாயும், ச்ருங்காரரஸத்தால் நிறைந்தவைகளாயும், வார்த்தையில் மாதுர்யகுணங்களுடன் கூடினவைகளாயும், ஸௌகுமார்யத்தால் நிறைந்தவைகளாயும், ஸம்போகத்தில் உத்ஸாஹத்தை விர்த்தி செய்கிறவைகளாயும், ஸ்வபாவத்தால் மனோகரங்களாயும், விச்வாஸத்தால் நிறைந்தவைகளாயும், மன்மத விகாரத்தைக் கொடுப்பவைகளாயும் மங்கையர்களின் ஸம்பந்திகளாயுமுள்ள இரகஸ்யவசனங்கள் மனோகரங்களாயிருக்கின்றன.

## ஸம்போகத்தின் பெருமை.

விச்ரம்யவிச்ரம்யவநத்குமாணாம்
சாயாஸுதந்வீவிசசாரகாசித்
ஸ்தனோத்தரீயேணகரோத்ருதேந
நிவாரயந்தீசசினோமயூகாந் (21)

(பொருள்) ஓர் மங்கையானவள் வனவிருக்ஷங்களின், நிழலில் ச்ரமபரிஹாரஞ் செய்துகொண்டு கையால் தரிக்கப்பட்ட கொங்கைவஸ்திரத்தால் சந்திரனுடைய கிரணங்களை மறைத்துக்கொண்டு ஸஞ்சரித்தாள்.

அதர்சனேதர்சனமாத்ரகாமா
த்ருஷ்ட்வாபரிஷ்வங்கஸுகைகலோலா
ஆலிங்கிதாயாம்புநராயதாக்ஷ்யா
மாசாஸ்மஹேவிக்ரஹயோரபேதம் (22)



(பொருள்) எதனால் நீண்ட விழிகளையுடைய மங்கை, நாயகனைக் காணாவிடில் பார்ப்பதற்குமட்டும் விருப்பமுடையவளாயும், நாயகனைப் பார்த்தபின் ஆலிங்கனத்தாலுண்டாகிய ஸுகத்தில் ஆசையுள்ளவளாயுமிருக்கின்றாளோ; அதனால் அம்மங்கையைத் தழுவிக்கொண்டபொழுது சரீரங்களுக்கு பேதமின்மையை விரும்புகின்றோம்.

மாலதீசிரஸிஜ்ரும்பணம்முகே
சந்தநம்வபுஷிகுங்குமாவிலம்
வக்ஷஸிப்ரியதமாமதாலஸா
ஸ்வர்க்கஏஷபரிசிஷ்டஆகம: (23)

(பொருள்) தலையில் ஜாதிமல்லிகையாலாகியமாலையும், முகத்தில் ஸம்போகத்தில் உத்ஸாஹத்தை வெளிப்படுத்தும் விலாஸவிசேஷமும், சரீரத்தில் குங்குமப்பூவின் இரஸத்தால் நிறைந்த சந்தனக்குழம்பும், மார்பினில் மதத்தால் சிறிது சோம்பலுள்ள ப்ரியையும் ஸ்வர்க்கபதத்தின் பொருளாகும். இவைகளைக்காட்டிலும் வேறு ஸ்வர்க்கமிருப்பதாகக் கூறும் நூல் ஸ்வர்க்கபதத்தின் முக்கியமான பொருளைக்கூறுதமையின் அதுபொருந்தாது.

ப்ராங்மாமேதிமநாகநாகதரஸம்ஜாதாபிலாஷம்தத:
ஸவ்ரீடம்ததநுச்லதோத்யமமதப்ரத்வஸ்ததைர்யம்புந:
ப்ரேமார்த்ரம்ஸ்ப்ருஹணீயநிர்ப்பரஹ: க்ரீடாப்ரகல்பம்ததோ
நிஸ்ஸங்காங்கவிகர்ஷணாதிகஸுகம்ரம்யம்குலஸ்திரீரதம் (24)

(பொருள்) தருணதருணிகளின் முதன் முதலேற்படும் சேர்க்கையின் ஆரம்பத்தில் வேண்டாம் வேண்டாமென்று கொஞ்சந் தடுத்தலால் அநுராகமற்றதும், இவ்வாறு தடுப்பின் உண்டான விருப்பத்தையுடையதும், விருப்பமுண்டானபின் சேலையின் கட்டையவிழ்த்தல் முதலியவைகளில் மெதுவான முயற்சியாகிற லஜ்ஜையுடன் கூடினதும், லஜ்ஜையுண்டானபின் அம்முயற்சியைத் தடுத்தலில் வீண்பிரயாசையுள்ளதும், பின்பு சற்றுத்தளர்ந்த திண்மையுள்ளதும், பின்பு ப்ரணயரஸத்தால் நிறைந்ததும், பின்பு ஒவ்வொருவரும் விரும்பத்தக்கவைகளும், அளவு கடந்தவைகளுமான ஏகாந்தத்திலேற்படும் க்ரீடைகளையுடையதும், பின்பு

தனியாய் கொங்கை முதலிய அவயவங்களை ஸ்பரிசிப்பதால் மிகுந்த வின்பத்தையுடையதுமான குலமங்கையர்களின் ஸம்போகம் மிகவும் மனோகரமானது.

உபரிநிபதிதாநாம்ஸ்ரஸ்ததம்மில்லகாநாம்
முகுளிதநயநாநாம்கிஞ்சிதுந்மீளதாநாம்
உபரிஸுரதகேதஸ்விந்நகண்டஸ்தலாநா
மதரமதுவதூநாம்பாக்யவந்த: பிபந்தி (25)

(பொருள்) நாயகன் மார்பின்மீது வஸிப்பவர்களும், அவிழ்ந்த கூந்தலையுடையவர்களும், சுகாநுபவத்தால் சிறிது கண்களை மூடிக்கொண்டவர்களும் நாயகன்மீது புருஷன்போல் படுப்பதிலுண்டாகிய சிரமத்தால் வேர்த்த கன்னங்களையுடையவர்களுமான நங்கையர்களின் அதராம்ருதத்தை பாக்யவான்கள் பானஞ்செய்கின்றனர்.

ஆமீலிதநயநாநாம்ய: ஸுரதரஸோநுஸம்விதம்பாதி
மிதுனைர்மிதோவதாரிதமவிததமிதமேவகாமநிர்வஹணம்(26)

(பொருள்) "ஸுகத்தின் மிகுதியால் சிறிது மூடியகண்களையுடைய யுவாக்கள் அறிவுடன் அநுபவித்த கலவியின் பயிர்ச்சிதான் பிரயோஜனமுள்ளதாயும் காமத்திற்குக் காரணமாயுமிருக்கின்றது" என்று இரஸத்தையறிந்த ஸ்திரீபுருஷர்கள் ஒவ்வொரும் நிச்சயித்திருக்கின்றனர்.

இதமநுசிதமக்ரமச்சபும்ஸாம்
யதிஹஜராஸ்வபிமாந்மதாவிகாரா:
ததபிசநக்ருதம்நிதம்பிநீநாம்
ஸ்தநபதநாவதிஜீவிதம்ரதம்வா (27)

(பொருள்) இவ்வுலகில் பிரம்மன், ஆடவர்களுக்கு மூப்படைந்த காலத்திலும் மன்மதவிகாரங்களை யேற்ப்படுத்தியதும், மாதர்களுக்கு கொங்கைகள் நழுவும்வரை ஜீவனத்தையும் ஸம்போகத்தையுமேற்ப்படுத்தாததும் நியாயமுமன்று; மரியாதையுமன்று.

ராஜம்ஸ்த்ருஷ்ணாம் புராசேர்நஹிஜகதிகத: கச்சிதேவாவஸா
[நம்



கோவார்த்தோர்த்தைர்: ப்ரபூதை: ஸ்வவபுஷிகளிதேயௌவ
[நேஸாநுராகே
கச்சாம: ஸத்மதாவத்விகஸிதகுமுதேந்தீவராலோகிநீநா
மாக்ரம்யாக்ரம்யரூபம்ஜடிதிநஜராயா லுப்யதேப்ரேயஸீநாம் (28)

(பொருள்) ஹே! மன்னவா! இவ்வுலகில் எந்த புருஷன் ஆசையாகிறகடலின் கரையைக்கண்டிருக்கிறான். தனது சரீரத்தில் ஸம்போகத்தில் விருப்பத்தையுண்டாக்கும் யௌவனம், கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வரும்பொழுது மிகுந்த செல்வத்தால் யாதுபலன்? ஆதலின் மலர்ந்த ஆம்பல், கருநீதல் மலர்போல் மனோகரமான கண்களையுடைய மங்கைகளின் யௌவனத்திலுண்டாகிய ஸௌந்தரியம் மூப்பினால் அடிக்கடி தொடரப்பட்டு அழியுமுன் நமது வீட்டுக்குச் செல்வோம்.

ராகஸ்யாகாரமேகம்நரகசதமஹாதுக்கஸம்ப்ராப்திஹேது
ர்மோஹஸ்யோத்பத்திபீஜம்ஜலதரபடலம்ஞானதாராதிபஸ்ய
கந்தர்ப்பஸ்யைகமித்ரம்ப்ரகடிதவிவிதஸ்பஷ்டதோஷப்ரபந்தம்
லோகேஸ்மிந்நஹ்ய நர்த்தவ்ராஜகுலபவநம் யௌவநாதந்ய
[தஸ்தி (29)

(பொருள்) யௌவனமானது, துவேஷத்திற்கு இருப்பிடமாயும், பற்பலவிதமான நரகத்திலுண்டாகும் துன்பத்தையடைவிப்பதற்குக் காரணமாயும், மோஹத்தை உண்டுபண்ணுவதில் வித்தாயும், அறிவென்னும் மதியை மேகக்கூட்டம்போல் மறைப்பதாயுமிருக்கின்றது. ஆதலால் இவ்வுலகில் துன்பக்கூட்டத்தின் உத்பத்திஸ்தானம் யௌவனத்தைக் காட்டிலும் வேறில்லை. (யௌவனமும், செல்வமும், பிரபுவாயிருக்குகையும் ஒவ்வொன்றும் தனித்தனியே தீமையைவிளைவிக்கும். நான்கும் சேர்ந்தால் தீமையை உண்டாக்குவதில் தடையென்ன? என்று கூறியிருக்கின்றமையின் யௌவனம் தீமையை உண்டாக்குவதென்பது ஸித்தமானது.)

ச்ருங்காரத்ருமநீரதேப்ரஸ்ருமரக்ரீடாரஸஸ்ரோதஸி
ப்ரத்யும்நப்ரியபாந்தவேசதுரவாங்முக்தாபலோதந்வதி

தந்வீநேத்ரசகோரபார்வணவிதௌஸௌபாக்யலக்ஷ்மீநிதௌ
தந்ய: கோபிநவிக்கிரயாம்கலயதேப்ராப்தேநவேயௌவநே (30)

(பொருள்) ச்ருங்காரரஸமாகிற விருக்ஷத்தை வளர்ப்பதில் மேகம் போன்றதும், நீண்ட மன்மதக்ரீடைக்குப் பிரவாஹம் போன்றதும், மன்மதனுக்கு ஆத்மார்த்த நண்பன் போன்றதும், ஸரஸஸல்லாபங்களாகிற முத்துக்களுக்குக் கடலும், மங்கையரின் கண்களாகிய சகோரபக்ஷிகளுக்குப் பூரணசந்திரனும், ஸௌபாக்யலக்ஷ்மிக்கு இருப்பிடமுமான புதிய யௌவனம் வந்த காலத்தில் எந்த பாக்யவான்தான் மன்மதவிகாரத்தையடையவில்லை.

ஸம்ஸாரேஸ்மிந்நஸாரேகுந்ருபதிபவனத்வாரஸேவாகளங்க
வ்யாஸக்தவ்யஸ்ததைர்யம்கதமமலதியோமாநஸம்ஸம்விதத்யு:
யத்யேதா: ப்ரோத்யதிந்துத்யுதி நிசயப்ருதோநஸ்யுரம்போஜ
[நேத்ரா:
ப்ரேங்கத் காஞ்சீகலாபா: ஸ்தநபரவிநமந் மத்யபாஜஸ்தருண்
[ய: (31)

(பொருள்) களங்கமற்ற மனதையுடைய மஹான்கள், உதயத்தையடைந்த மதியின் காந்திபோன்ற காந்தியை தரிக்கின்றவர்களும், தாமரைமலர்போல் விரிந்து நீண்ட கண்களையுடையவர்களும், சத்தஞ் செய்கின்ற ஒட்டியாணங்களை ஆபரணமாகவுடையவர்களும், கொங்கைகளின் பாரத்தால் வணங்கின இடையையுடையவர்களுமான யுவதிகள் இல்லாவிட்டால் ஸாரமற்ற இந்த ஸம்ஸாரத்தில் தங்கள் மனதை தீய மன்னவர்களின் வீட்டு வாசலைக் காப்பதாகிற அபவாதத்தில் ஆஸக்தியால் குறைந்த தைர்யமுள்ளதாகச் செய்வார்களா?

ஸித்தாத்யாஸிதகந்தரேஹரவ்ருஷஸ்கந்தாவருக்ணத்ருமே
கங்காதௌதசிலாதலேஹிமவத: ஸ்தானேஸ்திதேச்ரேயஸி
க: குர்வீதசிர: ப்ரணமமலிநம்மலாநம்மநஸ்வீஜநோ
யத்வித்ரஸ்தகுரங்கசாபநயநாநஸ்யு: ஸ்மராஸ்திரம்ஸ்திரிய: (32)

தொடரும்

Pandit, M. M. Narayanasamy Iyer

# கனகாவலி

9-வது பக்கத்தின் தொடர்ச்சி.

அரசர்:— மந்திரி இக்கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் செய்தியும் நம்மிளவரசர் கொணர்ந்த செய்தியும் ஒன்றையொன்று முற்றிலும் தழுவியதாயிருக்கிறது. நாம் வீரவர்மன் துணைப்பலம் பெற்றிருக்க வேண்டுமென்று ஊகித்ததும் உண்மையாய் முடிந்தது. ஆகையால் இக்ஷணமே வேடுவர் தலைவனுக்குச் செய்தியனுப்பி நம் வரவிற்குவேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்துகொண்டு தயாராயிருக்கும்படி ஆஞ்ஞாபனம் செய்வாய்.

மந்திரி:— மிகவும் வருந்திய மனத்தினனாய் "அண்ணலே அவ்வாறே செய்துவருகிறேன்" என்று சொல்லி மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனையிலமைத்துள்ள தன் உத்தியோக அரைக்குட்சென்று ஒற்றர்க்காகக் கூட்டிவரும்படி கட்டளையிட்டதின் பிறகு பின்வருமாறு ஓர் கடிதம் எழுதுவானாயினன். வேடுவர் தலைவன் "கோடவனுக்கு" மந்திரி மதிபூஷணன் அனுப்பிய செய்தி.

இப்பொழுது நமக்கும் வீரவர்மனுக்கும் நடக்கும் யுத்தத்தில் நாம் பின்னடைய நேர்ந்ததோடுமல்லாது அபயகிரியை நோக்கிச்சென்று தற்சமயம் வியாதியால் வருந்தும் நமது அரசருடைய சௌக்கியத்தையும் பந்தோபஸ்தையும் பற்றி மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது நாம் செய்யவேண்டிய முதற் கடமையாயிருக்கிறது. ஆகையால் நாம் செல்ல நேரும் மார்க்கங்களைச் சரிப்படுத்தி ஆங்காங்கு வேடுவர்களைக் காவல் வைத்து, அபயகிரியில் நாம் வேட்டைக்கு வரும்போது தங்கும் குகையையும் சீர்படுத்தி வசிக்கத்தக்கதாக்கி நீயும் அரசருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் விபரத்துக்கு இக்கடிதம் கொண்டுவரும் தூதனிடம் பதில் உடனே அனுப்பவும்.

மேற்கூறிய கடிதத்தை எழுதிமுடிந்தபின்னர் பின்வருமாறு யோசிக்கலானான்:— நாம் இப்பொழுது அரசருடன் அபயகிரிக்குச்

சென்றபோதிலும் அங்கேயும் நம்மைப்பின்தொடர்ந்து வீரவர்மன் தொந்திரவு செய்வான் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆகையால் தற்காப்புக்கு வேண்டிய சைன்னியங்களையுமெதிரியறியாமல் முன்னரே அனுப்பவேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது. நமது பொக்கிஷங்கள் யாவையும் அபாயம்நேர்ந்தகாலத்து பத்திரப்படுத்தும் பொருட்டமைக்கப்பட்டிருக்கும் பாதாள அரையில் அவையாவையும் ஒருங்கே கொண்டுசேர்க்கவேண்டும். பிறகு நம்முடைய பிரஜைகள் யாவரிடத்தும் நம்முடைய நகரிருக்கும் நிலைமையையும் அரசர் நகரைவிட்டுச் செல்லவேண்டியிருப்பதையும் நாம் சென்றபின்னர் அறிவிக்கவேண்டும். கடைசியாக எதிரிகள் நம்முடைய நகரை நெருங்கிக் கோட்டைகளைத்தகர்க்க எத்தனிக்கும் சமயத்தில் ஜனங்களுக்காவது அவர்களுடைய பொருளுக்காவது ஒருவிதசேதமுமேற்படாமலிருக்கும் பொருட்டுச் சண்டையை நிறுத்திச் சரண்புகும்படி சைன்னியங்களுக்குக் கட்டளையிடவேண்டும்.

இவ்வாறு மந்திரி ஆலோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது அழைத்துவரும்படி உத்தரவு செய்யப்பட்ட ஒற்றர்கள் வந்து மந்திரியை வணங்கித் தங்களுக்கிடும் கட்டளையை எதிர்பார்த்து நின்றார்கள். தன்னாலோசனை முடிந்ததும் மந்திரி அவர்களை நோக்கி "இக்கணமே நீங்கள் இக்கடிதத்தை எடுத்துக்கொண்டு வெகுவிரைவாய்ச்சென்று வேடுவர் தலைவன் கோடகனிடம் கொடுத்து அவன் தரும் பதிலையும் பெற்று சீக்கிரமாக வந்து சேருங்கள்" என்று உத்திரவு செய்தனன். இங்கு இவ்வாறிருக்க அரசனிருந்த அரையில் ஸ்னானபானாதிகளை யெல்லாம் முடித்துக்கொண்டு, போர்க்களத்திலணியும் உடைகளைத் தரித்தவராய் இளவரசர் பிரவேசித்தனர். ஆங்கு அரசர் பக்கத்தில் அமைத்துள்ள ஓர் ஆசனத்தில் அமர்ந்ததும் அரசர் ராணுவத்தலைவர் அனுப்பிய கடிதத்தை அவரிடம் கொடுத்தனர். இளவரசரும் அதை வாசித்து 'அதன் சாராம்சத்தையறிந்தபின்னர் அவருக்கும் அரசருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:—

**இளவரசர்:—** பிதா, இப்பொழுது தாங்கள் எந்த இடத்தை நோக்கிச்செல்வதாக உத்தேசம்பண்ணியிருக்கிறீர்கள்.



**அரசர்:—** நம்நகருக்கருகிலிருக்கும் அபயகிரியைநோக்கிச் செல்லவேண்டுமென்று தீர்மானித்தாய்விட்டது. இதற்குள் மந்திரி நமது வேடுவர் தலைவன் கோடகனுக்கு நாம் வரும் செய்தியனுப்பியிருக்கலாமென்று நினைக்கிறேன். தற்சமயத்தில் நாம் செய்யக்கூடிய வேறு சிறந்த உபாயம் ஏதாவது உன் புத்திக்குப் புலப்படுகிறதோ?

**இளவரசர்:—** 'இதைத்தவிர வேறு நாம் யென்னசெய்யலாம். நம்முடைய நேச அரசர்களுடைய ராஜ்யங்களில் சென்று அங்கு நம்மைக் காத்துக்கொள்வதைக்காட்டிலும் நேரே காட்டிற்குச்சென்று நம்மைக்காப்பதற்குக் கடமைப்பட்டவனும் அவ்வாறு செய்வதில் மிகவும் சந்தோஷமுடையவனுமிருக்கும் கோடகனை நோக்கிச்செல்வதே சரியென்று தோன்றுகிறது. மேலும் நாம் அன்னிய அரசர்களுடைய ராஜ்யங்களில் புகுவதினால் அந்நாட்டிலுள்ளும் பரவும் சண்டைக்கும் நாமே காரணமாகக்கருதப்படுவோம். நம்முடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ளும்பொருட்டு பிறரைத் துன்பத்திற்குள்ளாக்குவதைக் காட்டிலும் நாமே அக்கஷ்டங்களை நிர்வகித்துக்கொள்வதே சிறந்த தர்மமாகும்.

**அரசர்:—** உன் மனப்பாங்கும் இவ்வண்ணமிருப்பதானது எனக்கு மிகவும் ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விஷயங்களனைத்தையும் உன்னன்னையிடம் தெரிவித்து அவள் மனோநிலைமையை அறிந்தனையோ.

**இளவரசர்:—** ஆம் எல்லாவற்றையுந் தெரிவித்தேன், அவள் மனதில் ஒருவிதமான வருத்தமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. தங்களுக்கில்லாததோ எங்களுக்கு, நான் சற்று மந்திரியிடம் சென்று இனிநடக்கவேண்டியவைகளைத் தெரிந்துவர விடையளியுங்கள்.

இவ்வாறு இளவரசர் சொல்லியரசனிடம் விடைபெற்றுக் கொண்டு அவ்வறையைவிட்டு வெளியே சென்றதும், அரசனுடைய சப்ரமஞ்சத்தின் பின்னால் கட்டப்பட்டிருக்கும் ஓர் திரையை நீக்கிக்கொண்டு, மேகங்களுக்கு நடுவே சந்திரன் தோன்றியதுபோல் அரசன் முன் வந்து வணங்கி நின்றனள். உடனே அரசன் தன் முன் வந்து நின்றுகொண்டிருக்கும் தன் மனைவியை நோக்கி "பெண்மணி உன் முகத்தில் வருத்தக்

குறிதோன்றுகிறது. நாம் நம்முடைய நாட்டையிழந்து காட்டுக்குச்செல்ல வேண்டியதாயிருக்கிறதே யென்று வருத்தப்படுகின்றனையோ? விதியை விலக்க வல்லவர் யார்? இனிக்கவலைப்படுவதினாற் பயனென். ஆகையால் உன் மனதையுமதனால் என் மனதையும் வீணே வருத்தாது தைரியமாயும் உற்சாகமாயுமிருப்பாய்.

அரசி:— ஸ்வாமி நான் தங்களுக்குப் பாரியாய் வாய்த்த பிறகு இச்சம்பவங்களையெல்லாம் என் மனது துக்கங்களாகக்கொண்டாடுமென்று நினைக்கிறீர்களா? இதிலும் கொடிய துன்பம் நேரிடினும் அக்காலத்திலும் தங்களருகில் நின்று தங்களுக்கு ஊழியஞ்செய்யப்பெறின் அத்துன்பங்களனைத்தும் கதிரோனைக்கண்ட பனியென மறைந்துபோம். இருப்பினும் தாங்கள் சற்று முன் சொல்லியவாறு என் மனதில் ஒரு வருத்தமிருந்து கொண்டிருக்கிறது.

அரசன்:— பெண்ணே! அது யாதென்று சற்றுந்தாமதமில்லாமல் செப்புவாய். அவ்வருத்தமானது நான் தீர்க்கக்கூடியதாயிருப்பின் இக்கணமே அது உன்னைவிட்டகலும்படி செய்கிறேன்.

அரசி:— ஸ்வாமி நான் ஒரு ஸ்திரீயாகையினால் என் மனதானது இச்சஞ்சலத்துக்குட்பட்டிருக்கிறது. எதினால் என்மனம் வருந்துகிறதோ அதினால் தங்கள் மனமும் வருந்தினால் மட்டுந்தான் நான் இனிமேலும் அதை ஒரு வருத்தமாகப்பாவிப்பேன் அதை நீக்குமாறும் தங்களை வேண்டுவேன்.

அரசன்:— பெண்மணி நீ சொல்வது இன்னதென்று ஊகித்துக் கொள்ள என்னால் முடியவில்லை அதை இன்னதென்று தெளிவாய்ச் சொல்வாய்.

அரசி:— நான் இப்பொழுது கவலைகொண்டிருப்பதானது நம்முடைய தர்மபாலனைப் பற்றித்தான் அவன் சற்றுமுன் தங்களிடத்தில் வந்து போனபொழுது அணிந்திருந்த உடையை கவனித்திருந்தீர்களானால் இப்பொழுது நான் எதைக்கொண்டு வருத்தப்படுகிறேனென்பதை நீங்கள் அறிந்துகொள்ளக்கூடும்.



அரசன்:— இப்பொழுது உன்கருத்தை நான் அறிந்துகொண்டேன். நம் தர்மபாலனுடைய உடையை நான் கவனிக்கவேயில்லை. அவன் போர்க்கோலங்கொண்டு போர்க்களத்தை நோக்கிச் செல்லவேண்டுமென்று தீர்மானித்துவிட்டான் போலும், அதை நினைக்கும்பொழுது கண்மணி என் மனம் பதைபதைக்கிறது. நம் சேனாதிபதியினுடைய கடிதத்தைக் கவனித்துப்பார்க்கும்பொழுது தற்சமயம் போர்க்களத்தில் காட்டும் வீரம் பயனற்றதாகும். இவ்வாறு அவன் செய்யத்துணியுங் கருமத்தின் பயன் இன்னதுதான் என்று அவனுக்கு முன்னமே தெரிந்திருந்தும் சற்றும் யோசனையில்லாமல் வீணே போரில் போய் தர்மபாலன் சிக்கிக்கொள்வதை என் மனம் சற்றும் ஒப்பவில்லை. ஆகையால் இக்கணமே நமது தர்மபாலனை நம்மிடம் தருவிக்கிறேனென்று சொல்லி வாயில் காத்துக் கொண்டிருப்போனிடம் சொல்லி இளவரசரை வரவழைக்கும்படி கட்டளையிட்டனர்.

இச்சமயம் மந்திரியை நோக்கிச்சென்ற இளவரசருக்கும் மந்திரிக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது. இளவரசர் தன்னறைக்குள் வந்ததும் அவரை வரவேற்று ஓர் ஆசனத்தில் அமர்த்தி தாங்கள் இந்நள்ளிரவில் தமியேனை நோக்கி வந்ததின் காரணமென்னவென்று மிகவும் வணக்கமாய்க்கேட்க.

இளவரசர்:— மந்திரி, நான் கொண்ட அபிப்பிராயமும் நம் சேனாதிபதி கொண்ட அபிப்பிராயமும் ஒன்றாய் முடிந்ததென்பதை சற்று முன்னர் போர்க்களத்தினின்றும் வந்த கடிதத்தினின்று அறிந்துகொண்டேன். நான் தெய்வமெனத்தொழுதுவரும் என் தந்தையை உம்முடைய பாதுகாப்பில் இன்று முதல் விட்டுவிட்டேன். இனி அபயகிரியை நோக்கிச்செல்வதற்கு வேண்டியவையெல்லாம் செய்தாயிற்றா? அக்காரியத்தில் என்னாலியன்ற உதவியைச்செய்து போவோமென்றே வந்தேன்.

மந்திரி:— தாங்கள் வருவதற்கு சற்று முன்னர்தான் நமது வேடுவர் தலைவன் கோடகனைத் தயாராயிருக்கும்படி செய்தியனுப்பினேன். இப்பொழுது மணி 11 ஆகிவிட்டது ஆனால் தற்சமயம் தாங்கள் கொண்டிருக்கும் கோலத்தையும் சொல்லும் வார்த்தைகளையுங்கவனிக்கும்பொழுது

தாங்கள் மறுபடியும் போர்முனையை நோக்கிச்செல்லத் தீர்மானித்துவிட்டதுபோல் தெரிகிறது. அவ்வாறு செய்யத்துணிவதினால் தாங்கள் அடையப்போகும் பலனையும் கீர்த்தியையும் சற்று யோசித்துப்பார்ப்பின் இப்பொழுது கொண்டிருக்கும் எண்ணத்தை விட்டுவிடுவீர்களென்று நம்புகிறேன். மேலும் தங்களை விட்டுப்பிரிந்து அரசரும் அரசியும் அரை நிமிஷங்கூட சகித்திருக்கமாட்டார்களென்று நான் நிச்சயமாய்ச்சொல்லுவேன். இக்காரணங்கள் பற்றித் தாங்கள் செய்யப்புகும் கர்மத்தின் யுக்தாயுக்தங்களையும் சாதக பாதகங்களையும் யோசித்துப் பார்க்கும்படி நம் நாட்டின் நன்மையையும் தங்களுடைய க்ஷேமத்தையுங்கருதி தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இளவரசர்:— மந்திரி, நீர் சொல்வதனைத்தையும் நான் ஒப்புக்கொண்டேன். இருப்பினும் போர்முனைக்குக் கட்டாயம் போகவேண்டுமென்ற ஓர் எண்ணமானது என்னையறியாமல் என் மனதில் வேரூன்றி விட்டது. அதை மாற்றுஞ்சக்தியும் என்னிடத்தில் இல்லையென்று தோன்றுகிறது. மிகவும் புத்திசாலியாகிய உமக்கு இதன் காரணங்கள் இன்னவென்று தெரிந்திருக்கலாம். அவ்வாறு தெரிந்திருந்தும் நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னைத்தடுக்கும் விஷயத்தில் கட்டுண்டசர்ப்பம் போல் கிடப்பேனே தவிர உங்களுடைய வார்த்தையை மீறிநடப்பவனுமல்ல. ஆகையால் நீங்கள் சமயோசிதமாய்ச் சொல்லும் புத்திமதிகளை அநுசரித்து நடக்கத்தயாராயிருப்பவனென்ற எண்ணம் மட்டும் உங்கள் மனதிலிருக்கட்டும்.

மந்திரி:— இளவரசே, என்னவோ என் மனதில் தோன்றியதை தங்களிடத்தில் விண்ணப்பம் செய்தேன். மேலும் நான் தங்களுடைய அரண்மனையன்னத்தையுண்டு அங்குவசித்துவரும் உத்தியோக முறைப்படி இந்த விஷயங்களைத் தங்களிடத்தில் தெரிவிக்கத்துணிந்தேன். உங்களுக்கில்லாத லாபநஷ்டமோ எனக்கு, போகும் பொழுது தங்களுடைய பிதாவினிடம் விடைபெற்றுக்கொண்டுதான் போவீர்கள். அச்சமயத்தில் அவர்கள் இவ்விஷயமாய் வெளியிடும் அபிப்பிராயமும் இதைப்பற்றி நான் கொண்ட அபிப்பிராயமும் ஒன்றாயிருக்குமென்றே நினைக்கிறேன்.



மந்திரி இவ்வாறு சொல்லி முடிந்ததும், அரசர் அழைத்ததாக ஒருவன் மந்திரியிருக்குமறைக்குள் வந்து இளவரசரிடம் வந்து தெரிவித்தான். உடனே இளவரசர் மந்திரியிடம் விடைபெற்றுக்கொண்டு தன் பிதாவினிடத்திற்சென்று அங்கமைத்துள்ள ஓர் ஆசனத்திலமர்ந்ததும் அரசன் அவரை நோக்கி ஹே! தர்மபாலா நீ இப்பொழுது அணிந்திருக்கும் உடையினின்றும் நீ செய்யத் துணிந்திருப்பதாக நினைக்கும் காரியமானது என் மனதிற்கு மிகவும் கவலையையுண்டுபண்ணுகிறது. மேலும் அக்காரியமானது முடிவில் பயனற்றதாகுமென்பது நாமெல்லோருமறிந்த விஷயம். நீ அவ்வாறு செய்யத்துணிந்திருப்பதினால் உன் அன்னையடைந்திருக்கும் வருத்தத்தையும் அதனால் நான் கொண்டிருக்கும் கவலையையும் இத்தன்மைத்தானது என்று நீயேயறிந்துகொள்வாய். ஆகையினால் கவலை தரும் இவ்வுடையைக் களைந்து அபயகிரிக்குச் செல்லத்தயாராயிருப்பாய்.

இளவரசர்:— பிதா, தந்தை சொல்லைத்தட்டி நடக்கும் தனயனாக நான் ஒரு நாளும் இருக்கமாட்டேனென்று நீங்கள் திண்ணமாய் நம்புங்கள். உங்களைக்காட்டிலும் என்னுடைய க்ஷேமத்தைக் கருதக்கூடியவர்களும் சமயோசிதமாய் புத்திமதி சொல்லுகிறவர்களும் வேறுயாரிருக்கிறார்கள். இதுபற்றியே பெரியோரும் "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" யென்று கூறியிருக்கிறார்கள். இருப்பினும் என்மனதில் ஒரு அவா இருந்துகொண்டிருக்கிறது அது க்ஷத்திரியர்களுக்கு குலாசாரமுங் கடமையாயுமுள்ளது. தற்சமயத்தில் தங்களுடைய தேகம் ஆரோக்கியமாயிருக்குமாயின் நம் நகருக்கு இக்கதியும் நேராது. தங்களுடைய புத்திரனாய் ஜனிக்கும் பாக்கியத்தைப்பெற்று தங்களுக்கு பிற்காலம் இந்நகருக்கேயரசனாகவிருக்கப்போகும் நான் அதற்கு அபாயம் நேரிடும் காலத்தில் திடகாத்திரனாய் இருக்கும் பொழுதும், மண்ணிற் பிறந்து மண்ணோடு மண்ணாய்போகும் இம்மாமிசத்துக்கு ஒருவிதமான அபாயமும் நேராது தப்பியோடுதல் முறையாமோ. நம்முடைய ஜனங்கள்தான் என்னை எவ்வாறு மதிப்பார்கள் சிம்மம்போல் தாங்கள் வீற்றிருந்த இச்சிம்மாசனத்தில் நரிபோல் உயிர்தப்ப ஓடியொளித்த நான் எவ்வாறு அமர்வேன். ஆகையால் தாங்கள் சற்று யோசித்து என்க்கிடுங்கட்டளையை சிரமேற்கொண்டு அதன்படி நடக்க நான் தயாராயிருக்கிறேன்.

அரசர்:— தனது அருகில் நின்றுகொண்டிருந்த மனைவியை நோக்கி:— இனி நம் தர்மபாலனிடத்தில் நாம் என்ன சொல்வது அவன் சொல்வதைக் கேட்டபின் என் மனமும் மாறுகிறது நம்முடைய மனம் பெற்றமனமாகையினால் வருந்துகிறது. அவனுடைய மனமோ க்ஷத்திரியனுடைய மனமாயிருக்கிறது. நாம் நம்முடைய மனதைமட்டும் திருப்தி செய்துகொண்டால் போதுமென்று நினைத்தால் மட்டுந்தான் இப்பொழுது தர்மபாலனை நம்முடன் இருக்கும்படி கட்டளையிடலாம். க்ஷத்திரியவம்சத்தில் பிறந்து அதிலும் ஓர் ராஜகுமாரனாய் ஜெனித்த அவனை அவ்வருணாசிரம தர்மத்தைவிட்டு விலகாமலிருக்கும்படி செய்யவேண்டியதும் நம்முடைய கடமையாயிருக்கிறது. அத்தன்மைத்தான அரசனைத்தான் பிரஜைகளும் மதிப்பார்கள். தர்மபாலன் இப்பொழுது நமக்குப்புத்திரன் நமக்குப்பின் இங்கருக்கு அரசன். அரசனுடைய முதல் தர்மம் தன்னுடைய பிரஜைகளின் நன்மையைக் கோரவேண்டியதுதான். நம்முடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டவனாயினும் அதிலும் பெரிய கடமையான தன் பிரஜைகளின் நன்மையை பாதுகாக்கவேண்டியவனாயிருக்கிறான். நாமும் ஓர் அரசனாகையால் நம்முடைய மனோபீஷ்டமும் நம்முடைய நன்மையை மட்டுந்தனித்து நாடுவதாயிருக்ககூடாது. இதையெல்லாம் கவனித்துப்பார்க்கும்பொழுது அவன் இப்பொழுது செய்யவேண்டியது யாது? மகனாயிருந்து நம்முடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றவேண்டியதா? அல்லது அரசனாயிருந்து அவனுடைய கடமையைச்செய்யவேண்டியதா?

அரசி:— ஸ்வாமி, ஸ்திரி ஜாதியிற் பிறந்த என்னிடத்தில் இவ்வரிய விஷயங்களைப்பற்றிக் கேட்டால் நான் என்ன சொல்வேன். இருப்பினும் நீங்கள் சொல்லிவந்த நியாயங்களின் சாராம்சத்தை யறிந்துகொண்டேன் என் மனதில் ஓர் அவா இருக்கிறது. அவ்வாறு நடந்து அலைந்தாடுமென்மனதை அமைதியாயிருக்கச் செய்வாயோ தர்மபாலா? என்று இளவரசரை நோக்கி மிகவும் துயரத்துடன் வினவினள்.

இன்னும் வரும்

S. Kasthuri Iyengar
School master.

# ஸமாசாரக்குறிப்பு.

மேனாட்டுப் பத்திரிகை ஒன்றில் பின்வரும் விஷயம் வெளியாகியிருப்பதைப் பற்றி சுதேசமித்ரன் பத்திரிகை எழுதுகிறது:—

பிரான்ஸ் தேசத்திலுள்ள மாண்டு மார்டிரி என்னும் குன்றின் மீது கிறிஸ்தவக் கோவிலொன்று உண்டு. தெய்வ பக்தியுள்ள சில மனிதர்கள் அக்குன்றின்மீதேறி அங்குள்ள கோயிலைப் பார்க்கப்போயினர். போகும்பொழுது வழியே தள்ளாடிக் கொண்டிருந்த ஒரு கிழஸ்திரீயைக்கண்டு அவளுக்கு உதவிசெய்து அவளையும் குன்றின்மீது அழைத்துச்சென்றார்கள். அதனால் அந்த ஸ்திரீ மிகவும் மனக்களிப்படைந்து, "நண்பர்களே! நீங்கள் எனக்குச் செய்த பேருதவிக்காக நான் உங்களுக்கு ஒரு நற்செய்தி சொல்லப்போகிறேன். அது என்னவென்றால், யுத்தம் எப்பொழுது முடிவடையுமென்பதைப் பற்றியேயாகும்" என்று சொன்னவுடனே, அம்மனிதர் அனைவரும் அடங்காமகிழ்ச்சி கொண்டு, யுத்தம் முடிவாகும் காலத்தைச் சொல்லுக என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஸ்திரீ "நண்பர்களே! இம்மகா யுத்தமானது பிப்ரவரி மாதத்திலாவது மார்ச்சு மாதத்திலாவது முடிவடையும்" என்று பதிலளித்தாள். இதை அம்மனிதர்கள் நம்பவில்லை. அது கண்ட அந்த ஸ்திரீ "நண்பர்களே! நான் சொல்லுவதை நம்புவதற்கு ஆதாரமாக ஒரு செய்தி உண்டு. அது யாதெனில், 'நீங்கள் ஏறி வந்த வண்டிக்காரன் இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் மாண்டுபோவான்" என்று உறுதி கூறினள். பின்பு சிறிது நேரத்திற் கெல்லாம் அந்தக் கிழஸ்திரீ போன விடந்தெரியவில்லை. அப்பால் அம்மனிதர்கள் குன்றை விட்டிறங்கிக் கீழேவந்து பார்க்கவே தங்களை ஏற்றிவந்த வண்டிக்காரன் ஒரு கடையில் மாண்டு கிடப்பதைக் கண்டார்கள்.

# உப்பின் விலையேற்றம்.

உலகின்கண் மனிதருக்கு உணவுப்பொருள்களுள் இன்றியமையாதது உப்பு. அதினும் ஏழை ஜனங்களுக்கு உப்பைத்தவிற வேறு கதியில்லை. இதன்விலை நாளுக்கு நாள் ஜாஸ்திப்படுவது மிகுந்த பரிதாபத்திற்கிடமாகிறது சுமார் ஒருவாரத்திற்குமுன் உப்புவியாபாரிகளுக்கு இன்னும் சிறிது காலம் வரை அதிக உப்பு சப்ளைசெய்யப்படமாட்டாதென்று உப்பு இலாகா உத்தியோகஸ்தரிடமிருந்து நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாம். இதைத்தவிற வேறில்லை. இது காரணமாக மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரிகளுக்குப் போதுமான உப்புகளை விலைக்கு கொடுக்காமல் இனி தீர்வை அதிகப்பட்டு விலை ஜாஸ்தியாகப் போகிறதாகவும் அச்சமயத்தில் தாங்கள் மிகுந்த லாபமடையலாமென்றும் கருதி உப்பு மூட்டைகளை சேகரித்துவைப்பதாகத் தெரியவருகிறது. தற்சமையம் ஐரோப்பியயுத்தத்தினிமித்தம் ஜனங்களுக்கு உபயோகமான சகல சாமான்களும் விலை ஏற்றமடைந்திருப்பதுபோல் முக்கிய உணவுப்பொருளாகிய உப்புக்கும் பஞ்சம் ஏற்படுமாகில் ஜனங்களுக்குண்டாகும் கஷ்டம் சொல்லத்தரமற்றதாகும். ஆகையினால் நமது காருண்ய கவர்ண்மெண்டாரவர்கள் ஏழைஜனங்களின் மீது கருணை கூர்ந்து போதுமான உப்பை சப்ளை செய்யும்படி. மொத்தவ்யாபாரிகளுக்குக் கண்டிப்பான உத்திரவு செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது

# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப்போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பராசரஹோரா, ப்ரஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலீஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

# உங்கள் ஜாதகபலனைத் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷமாதம் தேய்தி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவறாமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வொரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கிலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சொல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சொல்லுவது அனாவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

## சார்ஜின் விவரம்.

| | |
|---|---|
| புத்திரபாவத்திற்கு ... | ரூ 5–0–0 |
| களத்திரபாவத்திற்கு ... | ரூ 3–0–0 |
| தொழில் அல்லது } யோகபாவத்திற்கு } | ரூ 5–0–0 |
| ஆயுர்பாவத்திற்கு | ரூ 5–0–0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கொடுக்கவேண்டில் | ரூ 25–0–0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கொடுக்கில் | ரூ 2–0–0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கொடுக்கில் | ரூ 3–0–0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கொடுக்க | ரூ 4–0–0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

---

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.



# பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை

## பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)
(தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகேம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும் மனோஉற்சாகத்தைத்தரும். 1—சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வபடை சம்ஹாரன்:—** மேகப்படை, சொரியானைப்படை, தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முதன்மையான அவுஷதம்.
விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வதந்தரோக நிவாரண பரிமளபற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சுரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.
விலை சீசா 1.க்கு அணா 2 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுப்பராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம், இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்குமிகவும் அற்புதமான சஞ்சீவி
விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள தேவகாந்திதைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேறி ஓங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.
விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. சிலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் பொடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கறப்பான், வெடிப்பு, சரீரவரக்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சில்வு பிரத்தியேகம்.

விலாசம்:— ☞ பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை தென்னார்க்காடு ஜில்லா.

# க்ஷேமம்!

ஒருவரை யொருவர் சந்திக்கும்போது க்ஷேமலாபத்தை முதலில் விசாரிப்பது வழக்கமாயிருக்கிறது. சிலர் தாங்கள் வியாதியோடிருந்தும் க்ஷேமம் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏன் அப்படி ஒப்புக்கொள்ள வேண்டும். உங்கள் சரீரத்தில் எவ்வித மாறுபாடு ஏற்படினும் உடனே உலகப் பிரசித்திப்பெற்ற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகப் படுத்துங்கள். இம்மருந்து முதலாவது ஜீரண சக்தியை விருத்திசெய் கிறது. அநேக வியாதிகளுக்கு காரணமாயுள்ள மலபந்தத்தை நிவர்த்தி செய்கிறது. வெள்ளை வெட்டை முதலிய மேகரோகங்களைக் குணப்ப டுத்துகிறதுமன்றி தேகத்திற்கு பலத்தையும் ஊக்கத்தையும் கொடுக் கிறது.

நீங்கள் எங்கள் காமசாஸ்திர புத்தகத்தைப் பார்த்ததுண்டா? இல் லையானல் இன்றைக்கே விலாசத்தைத் தெரிவித்து இனமாகவும் தபாற் செலவில்லாமலும் வாங்கி வாசியுங்கள். இதில் நீதி வாக்கியங்கள், நல் லொழுக்கம், தீர்க்காயுள் முதலிய சிறந்த விஷயங்கள் அடங்கியிருக் கின்றன.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157–158, பிராட்வே மதராஸ்.


உ

பரமகுருப்யோநம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAR 1916
MADRAS.

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1916-ஸு மார்ச்சு-மீ { NO. 9.

## இந்து ஸங்கீதம்

"ஸமச்ருதிஸ்ச்சதஸ்வரா:
ஸ்வரா: வாத்யேஷு சேத்ஸமா:"

(பொருள்) ஸமச்ருதியென்றால் வாத்யங்களில் ஒரேதன்மையாக நாலுச்ருதிகள் பேசுவது.

"முக்தாயத்ருஸ்வராரம்ப:
ஸ்வரச்ருதிரிதீரிதா"

(பொருள்) முக்தாயி ஸ்வரங்களிலிருந்து ஆரம்பிக்கும் ச்ருதியை ஸ்வரச்ருதியென்று சொல்லப்படும்.

"யத்ரஸ்வரஸ்யவைஷம்யாத்
விஷமச்ருதிருச்யதே"

(பொருள்) எவ்விடத்திலாயினும் சம—பநி, சக, பத, இம்மா திரி ஒன்றேடொன்று மாறிக்கொண்டு வருகிற ச்ருதியை விஷமச்ருதி

யெனப்படும். இந்த விஷமச்ருதியை சில சாஸ்திரங்களில் க்ஷுபச்ருதி யென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இனி மற்றோர் அபிப்பிராயம் அதாவது ச்ருதிகள் 18 என்று சொல்லப்படுகிறது.

"நாபிகாதர்விணீதஸ்தா:
ஷட்ஜஸ்வரஸமாச்ருதா:"

(பொருள்) நாபிகை, அதர்விணீ, அதஸ்தா இம்மூன்று ச்ருதியும் ஸ—என்ற ஸ்வரத்தைச் சேர்ந்தவை.

"சவுத்பதீசதாச்சைவ
ரிஷபஸ்வரமாச்ருதா:"

(பொருள்) சவுதீ, அதிச்சதை, இவ்விரண்டும் ரி— யைச் சேர்ந்தவை.

"கம்பளீச்ரவிகாநாளி
காந்தாரேஸரளீதிச்ச"

(பொருள்) கம்பலம், சிரவிகை, நாளீ, ஸரளீ, இந்நான்கும் கா—வைச்சேர்ந்தவை.

"ரஸவீரஞ்சனீச்சைவ
மத்யமஸ்வரமாச்ருதே"

(பொருள்) ரஸவீயம், ரஞ்சனீயம் இவ்விரண்டும் ம— வைச்சேர்ந்தவை.

"க்ராணிநீபதநீமந்தா
பஞ்சமஸ்வரமாச்ரிதா:"

(பொருள்) கிராணிநீ, பதநீயம், மந்தம், இம்மூன்றும் ப— வைச்சேர்ந்தவை.



"மேதாவீகம்பநீச்சைவ
தைவதஸ்வரமாச்ரிதா:"

(பொருள்) மேதாவி, கம்பிநீ, இவ்விரண்டும் த— வைச்சேர்ந்தவை.

"பூஷிணீச்சஸ்வராந்தீச்ச
நிஷாதஸ்வரமாச்ரிதா:"

(பொருள்) பூஷிணீ, ஸ்வராந்திகம், இவ்விரண்டும் நி—யைச் சேர்ந்தவை.

42. "ஸங்கீதஸ்வரதாள பாரிஜாதம்" என்ற கிரந்தத்தில் ஸ்வர ப்ரகாணம் ச்ருதி அத்தியாயத்தில் அஹோபில பண்டிதஸூரியின் மதமாவன:—

"ஊர்த்வஸ்திதத்ரிநாடீஷு
நாட்யோதிர்தகஹ்ருதிஸ்தகா:
த்வாவிம்சதிமிதாஸ்சேதி
ப்ராச்சிஞமுனயோர்புவந்"

(பொருள்) மேனோக்கிவரும் இடகலை' பிங்கலை, சுழிமுனை' ஆகிய மூன்று நாடிகளுள் குறுக்குப் பாய்ந்திருக்கும் நாடிகள் 22 என்று பழமையான முனிவர்கள் சொல்லுகிறார்கள்.

"பூர்வம்நாபீததோஹ்ருத்ஸ்யாத்
பஸ்சாத்கண்ட: ப்ரகீர்த்தித:
அதமூர்த்தாததாஸ்யம்ஸ்யாத்
இதிஸ்தாநானிமேனிரே"

(பொருள்) முதலில் நாபியும், அப்பால் இருதயமும், அப்பால் கண்டமும், அப்பால் சிரசும், அப்பால் வாயும், ஆகிய இவ்வைந்து இடங்களும் ச்ருதி என்ற கணக்கில் சேரத்தக்க ஓசைகளுண்டாகும் இடங்களென்று அறிவித்திருக்கிறார்கள்.

"ஹ்ருத்யநாஹதசக்ரேஸ்மின்
அனிலாநனலயோகத:
ஆஹத: தத்ராநாதஸ்யாத்
இதிசாஸ்த்ரேப்ரகீர்த்திதம்"

(பொருள்) இருதயத்திலிருக்கும் அனுஹத சக்கரத்திலிருந் துண்டாகும் காற்றினுல் அறையப்பட்ட நெருப்பினின்றும் வெளியே வரும் வாயுவினுல் உண்டாவது ஓசையென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"கண்டேவிசுத்தசக்ரம்ஸ்யாத்
ஸஹஸ்ராரம்துமூர்த்தனி
மந்த்ரமத்யமதாரக்யா
பவேயுஸ்தேஷுக்ரமாத்"

(பொருள்) கண்டஸ்தானத்திலுள்ள விசுத்தியென்னும் சக்கரத்திலும் சிரசிலுள்ள ஸஹஸ்ராரம் என்னும் சக்கரத்திலும் முற்கூறிய காற்று அறைவதினுல் மந்திர ஓசை, மத்யம ஓசை, தார ஓசை ஆகிய மூன்று ஓசைகளும் முறையே உண்டாகின்றன.

"ச்ருதய: ஸ்யு: ஸ்வராபின்ன:
ச்ராவணத்வேநஹேதுநு
அஹிகுண்டலிவக்தத்ர
பேதோக்திசாஸ்தரஸம்மதா"

(பொருள்) காதில் கேழ்க்கிற ஓசையின் வேறுபாட்டினுல் ஸ்வரங்களின் பின்னமான பாகங்களுக்கு ச்ருதியென்று பேர் கொடுத்திருக்கிறுர்கள். பாம்பு சுருட்டிக் கொண்டு படுத்திருக்கும் நியாயம்போல வேறுபாடு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பாம்பு சுருட்டிக்கொண்டிருக்கும் காலத்தில் பார்க்கும்பொழுது ஒரு இடத்தில் பருமனுகவும் மற்ருேரிடத்தில் மெல்லியதாகவும் தோன்றும். எப்படியிருப்பினும் பாம்பு ஒன்றுதான். அதைப்போல இரண்டுச்ருதி, மூன்றுச்ருதி, நான்குச்ருதி ஆகிற பேதங்களிருந்தபோதிலும் ஸ்வரம் ஒன்றுதான்.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சா = சரணம்.
4. ~~~~ = துரிதகாலத்தில்ப் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. அ = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளதின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களே கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரிதகாலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



## பல்லவிக்கு கற்பனஸ்வரம்.

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| (1) தல்விதண்றுலுகல | **ரீ—**மா | **பா—**தா |
| (2) ஷை | **நீ—தாபா | தாபா—பாதா |
| (3) ஷை | **மா—காசா | ரீமா—பாதா |
| (4) ஷை | **கரி—மகரிக | சநிதச—ரிமபத |
| (5) ஷை | க்ரீம்க்—ச்ாநித | பமகச—ரிமபத |
| (6) ஷை | ரிமகச—ரிமபத | ச்ரீம்க்—ச்நிதப |
| (7) ஷை | ச்ரீம்—க்ச்நித | தபாப—மரிமப |
| (8) ஷை | ரீச்ாச்—நிதபநி | தபமரி—மகசரி |
| சசாநிதபதச—ரிமகசரிமபத | ச்ரீம்—க்ச்ச்நி | *நிதப—மரிமப |
| (9) தல்விதண்றுலுகல | ரிபமப—மநிதப | மரிமக—சாநித |
| பதசத—சரிசரி—மபநிததாபா | தச்ாத்—ச்ரீம்க் | ச்ாநித—பமபத |
| (10) தல்விதண்றுலுகல | பா*ம—பநிதத | பபமம—ரிரிமக |
| சா*சரிமகசா—சநிதபதசரி | மபநித—தபதச் | ரீம்க்ச்—நிதபத |
| = தல்விதண்றுலுகல = | | |

(பத) ப = தல்லி = தாய்
தண்றுலு = தகப்பன் (இவர்களே)
கல = உடைத்தாயிருப்பது
பேருகானி = பேருக்கேயல்லாமல்
இல = பூமியில்
நீஸரி = உனக்கு ஸமமான
தைவமு = தெய்வம்
வேரெவரே = வேறுயாரிருக்கிறார்கள்?

அ = இலு = வீடு
கலசஸமுத்ரமுகானு = பாற்கடலல்லாமலும்
நீகு = உனக்கு
இல்லாலு = இல்லாள்
விதேஹ = சரீரமில்லாத
தனய = புத்திரன்
பளீ! = ஸஹபாஷ்!

சர = கிரீசாதி = சிவன் முதலான
விதி = பிரமன்
இந்த்ர = தேவேந்திரன்
அர்க்க = சூரியன்
சசாங்க = சந்திரன் (முதலான)
அமருகோட்டலு = தேவ கோடிகளும்
வானருலே = வானரர்களுமாக
கொலுவ = சபைகூடியிருக்க
தர = உடைத்தாயிருக்கிற
சக்ர = சக்ரத்தையும் (சுதர்சனவதாரமான சத்ருக்னனையும்)
பணீந்த்ருலு = பாம்பின் அரசனையும் (ஆதிசேஷாவதாரமான இலக்குமணனையும்)
ஸோதருலே = ஸகோதரராகவும்
தகி = தகுந்த
வேடுக = அன்புடன்கூடின



த்யாகராஜ = தியாகராஜனால்
வினுத = துதிக்கப்பெற்றவனே!

(பொழி) தகுந்த அன்புடன் கூடின தியாகராஜனால் துதிக்கப்பட்டவனே! உனக்கு வீடோ திருப்பாற்கடல். புத்திரனோ சரீரமில்லாத மன்மதன். (அனங்கன்) ஸஹபாஷ்! இன்னும் ஸஹோதரராகோ சக்ராம்சமான சத்ருக்னனும், ஆதிசேஷாம்சமான இலக்குமணன் முதலானவர்களும், சிவன், பிரமன், இந்திரன், சூர்யன் சந்திரன் முதலான தேவகோடிகளும், வானரர்களுமாக சபைகூடி வீற்றிருக்கப்பட்ட தெய்வம் இப்பூமியில் உனக்கு ஸமானமாக வேறுயாரிருக்கிறார்கள்? தகப்பன், தாயென்று சொல்லுவது பேருக்கு மாத்திரமேயன்றி வேறல்ல.

மாளவஸ்ரீ ராகம்– ஆதிதாளம்– அரைக்களேச்சவுக்கம்

2-வது அக்ஷரத்திற்குப் பின்னுள்ள அரையிடத்தில் எடுப்பு.

ஆ = ச, சா–க, சு–ம, ப, தை–நி

அவ = ச, தை–நி, ச–த, ப,சு–ம, சா–க,

ப = எவருன்னாருப்ரோவ
இந்ததாமஸ மேலனய்யா

அ = விவரம்புக தெலுபவய்யா
விச்வேசஸ்ரீ பஞ்சனதீசா

சர = மனஸார த்யானிம்ப
மனஸு–ரநிலுவலு–மர்மம்பு தெலுபு
தனவாடனி தலச்சி–தைர்ய
மொஸகுத்யாக–ராஜனுத =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப= ******—காமாபா**நீ | தா ****தா— | பா மா**கா |
| ******—எ வரு**உ | ன்னு****ரு | உப்ரோ**ஒ |
| (1) மா****— ஷை | தாபா நீ—நித | தப—பமமாகா |
| வ****— ஷை | ன்னுஆ—ருஉ | உ --ப்ரோ— |
| (2) மா****— ஷை | தாபநிசா—சநி | நித—தபபமமக |
| வ****— ஷை | ன்னு——ருஉ | உ --ப்ரோ— |
| (3) மா****— ஷை | தா—பநிசா—க்ச் | மக்—ச் நி தநிபச் |
| வ****— ஷை | ன்னு—— ருஉ | உ —ப்ரோ—— |
| நிதபமகச—மாகாசா**சா | சநிபநிசா—சம | கம—பநிதநி பச் |
| ஓ—வ——இந்ததா**ம | ஸ————மெ | எ --ல——நை— |
| நிதபமகச= காமாபா= | | |
| ---ய்யா—= எவரு = | | |
| அ= ******—ச்ரச்ரக்ர**க்ர | ம்ர****—ம்ர | க்ர ச்ர**ச்ர |
| ******—விவரம்**பு | க****—தெ | எ ல் ப**வை |
| (1) நீ ****——ஷை | ம்ரச்க்ம்ர—ம்ர | ஷை |
| ய்யா****——ஷை | க——— தெ | ஷை |
| (2) நீ நீ**——ஷை | ம்க்ச்நிச்க்ச்நி | தநி—பநிச்ச் க்ம் |
| ய்யா**——ஷை | க———தெ | எ—ல்ப—வை |
| ப்ம்க்ர**—ம்ரம்ர க்ரக்ரச்ர | ச்நிதநிபா—நிநி | ச்ரச்நித நி—பச் |
| ய்யா**—வி—ச்வே—ச | ஸ்ரீ————பம் | ம் ச அண அ--தீ— |
| நிதபமகச=சமபா= | | |
| —ச——=எவரு= | | |
| சர=******—பபபா**நீ | நிதபதநித—ச்நி | தநிபா**மா |
| பப | | |
| ******—மனஸா**ஆ | ர———— —த்யா | —நிம்**— |

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| கா****—பாபாமா**கா | சக மக சா**கா | மாபா**நீ |
| ப****—மனஸா**நீ | லு—வ—லு**ம | ர் ம**ம்பு |
| நி த நிதபா—— | | |
| தெள லுஉபு—— | | |
| (அனுபல்லவி மாதிரி)******தனவாட | நீ———த | லச்சி—தைர் |
| ய****-மொஜஸஅகு | த்யாக—ரா | ஜனு |
| த= எவருன்னுரு= | | |

## பல்லவிக்கு கற்பனஸ்வரம்.

| | | |
|---|---|---|
| (1) ******எவரு | ன்னு****நீ | **தா**பா |
| (2) **மா**=ஷை | ஷை ****நீ | ச்ரதாநீபா |
| (3) தா பா மா=ஷை | ஷை ****நீ | சாகாமாபா |
| (4) தா பா மா=ஷை | ஷை ****க்ர | ச்ரநீதாபா |
| (5) மா கா சா=ஷை | ஷை ****க்ச் | ம்க்ச்நிதப—நித |
| (6) பமபமகச=ஷை | ஷை ****ம்க் | ச்க்ச்ச்ரச்நித |
| (7) நிதபமகச=ஷை | ஷை ****சநி | சகசகமகமப |
| (8) தபாமகச =ஷை | ஷை ****ச்க் | ச்ச்நித—நிச்நிநி |
| (9) தபநிதபம=ஷை | ஷை ****பா | மகமபாமகம |
| கசா—கசநிசகசகம—சமபமப | நீநிச்ரச்நிச் | க்ர*ம்க்ச்க்ச் |
| (10) நிதபமகச=எவரு | ன்னு****நிநி | ததபபமகமப |
| நீ*நீ*நிநிச்க்ச்ம்க்ச்க் | ச்ர*ச்நிதபநி | தா*தபமபா |
| *தபமகச=எவரு= | | |

(பத) ப = எவரு = யார்
உன்ளுரு = இருக்கிறார்கள்?
ப்ரோவ = காப்பாற்ற
இந்ததாமஸமு = இவ்வளவு தாமஸம்
ஏலனய்யா = எதற்காக ஐயா?

அ = விவரம்புக = விவரமாக
தெலுபுவய்யா = அறிவி ஐயா!
விச்வேசா = உலகத்திற்கு ஈசனே!
ஸ்ரீ பஞ்சனதீசா = ஸ்ரீ பஞ்சனதம் என்ற திருவையாற்றில் [வஸிக்கும் ஈசனே!

சர = மனஸார = முழு மனதுடன்
த்யானிம்ப = தியானிப்பதற்கு
மனஸு நிலுவலு = மனம் நெடுநேரம் அதே விஷயத்தில் நிற் [கும்படியான
மர்மம்பு = மர்மத்தை
தெலுபு = அறிவி!
தனவாடனி = தன்னவனென்று (உன்னுடைய மனிதனென் [ன்று
தலச்சி = தெரிந்து
தைர்யமு = தைர்யத்தை
ஒஸகு = கொடு
த்யாகராஜனுதா = தியாகராஜனால் தொழப்பட்டவனே!

(பொழி) உலகத்திற் கெல்லாம் ஈசனே! ஸ்ரீ பஞ்சனதீசா! தியாகராஜனால் தொழப்பட்டவனே! முழுமனதுடன் தியானிப்பதற்கு நெடு நேரம் மனம் நிற்கும்படியான மர்மத்தை தெரியப் படுத்தய்யா! என்னை உன்னுடைய வகைமனிதனென்று தெரிந்து தைரியத்தைக் கொடு! என்னைக் காப்பாற்ற வேறு யாரிருக்கிறார்கள்? இவ்வளவு தாமதம் எதற்காக? ஐயனே! விவரமாக அறிவிப்பாய்!.

# இராக லக்ஷணம்.

128-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## இராக ஸஞ்சாரம்.

(4) பமபா* *பா* *–பாதபபமமா* *மா* *–மாபமகா* *கா* *கரிசா* *–
சாரிசசநிதா* *–தசரீ* *ரீ* *–ரீபமகா* *–கரிசா* * * *–சரிமா* *–
மா* *மகரிமரிமபா* *பா* *–பமதா* *தா* *–தாநிததபபா* *–
பாதபபம–பதச்ா* *ச்ா* *–ச்நிச்ாரிச்ச்நிதா* *–பதச்ரிக்ா* *க்ா* *–
க்ரிரீ* *க்ரிச்–ச்தச்ரிக்ரிச்–ச்நிரிச்ா* *ரிச்நி–தச்நிதபமபதரீ* * * *–
ச்நிதப–மபதநீ* *தபமகா* *ரி–சரீ* *பமகா* *ரி–சாரிசசா* *–
நிதா* *சா* * * *–

(5) தபமா* *மா* *–மாபமகா* *ரிசா* *–சரிமா* *மா* *–மகரிமபா* *–
பா* *–பமதா* *தா* *–மநிதமகரி–மபதா* *தபமகரி–
பமநீ* *நிதபமகரி–மபதச்ா* *நிதபமகரி–மபதரீ* * * *ச்நிதபமகரி–
மபதபதச்ா* *– மபதச்ா* *ரிமபதச்ா* *– சரிமபதச்ா* *–
தக்ரிச்தரிச்–தரீ* *ரிச்நித–பதச்ரிம்ா* * * *க்–ரிக்க்ரிச்நித–
பதரீ* * * *ரிச்நித–மபதச்ா* * * *–மபதநீ* * * *தபமகரி–
சரிமகா* *ரிகரிசா* * * *நிதா* *ச்ா* * * * * *–

## 21. கேதார கௌளராகம் –28—வது மேளகர்த்தா ராகத்தில்ஜன்யம்.

ஆ = ச, ச– ரி, சு– ம, ப, கை– நி.
அவ = ச, கை– நி, ச– த, ப, சு– ம, அ– க, ச– ரி,

### இலக்கணம்.

“கேதாரகௌளஸம்பூர்ண
ஸ்தாரோஹேகதவர்ஜித:
நிஷாதக்ரஹஸம்யுக்த
ஸ்ஸாயங்காலேப்ரகீயதே”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) கேதார கௌளராகம் ஸம்பூர்ணம், ஆரோஹணத்தில் க, த, இந்த இரண்டு ஸ்வரங்களையும் வர்ஜிக்கவேண்டியது. நிஷாதக்ரஹத்தைச் சேர்ந்தது. ஸாயங்காலத்தில் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா* * * *ரிமபநிச்ரா* * * *—ச்நிதபமாகாரீ* * * *கரிசா* * * *—

(2) ரிமபா* *பா* *—பாதபபமமா* *—மகரிகரீ* *ரிமபநீ* *—
நிததபமகரிகரீ* * * *—ரிமபநிச்ரா* * * *நிதப—தபா* *மகரி—
ரிகரீ* *கரிசநீ* *ரிசா* * * * * *—

(3) பநிசரீ* * * *மகரி—ரிமபதா* *பமகரி—ரிமபநிச்ரா* * * *நிதபமகரி—
மபநிச்ரீ* *ச்நிதபமக—ரிமபநீ* * * *தபமக—ரிபமா* *பமக—
ரிகரீ* * * *கரிச—நிசநிகரீகசரி—நிசநிரிசா* *ரிநிசநித—
மபநீ* * * *ரிசா* * * * * *—

(4) மகசரீ* *மபா* * * *—நிததாபா—மபநீ* * * *ரீச்ரா* * * *—
ச்நிதபநிச்ரீ* *—மபநிச்ரீ* *ரிமபநிச்ரீ* *—சா* *ரிமபநிச்ரீ* *—
ம்க்ரீரீ* *—ம்ரா* *க்—ரீக்ரீக்ச்ரா* *—ச்நிரீச்ரா* * * *ரீச்நித—
மபநிச்ரா* * * *ச்நித—மபச்நிதமபநித—மபதபா* * * *மகரிரீ* * * *—
பமகரீ* *மகரிசா* * * *நிசரீகரீகசா* * * *—சநிதமபநீ* * * *சா* * * *—



(5) சரிமா* * * *மகரி—ரிமபா* * * *பா* * * *—பாதப்பமமா* * * *—
மகரி—ரிமபநீ* * * *நிதப—மபமபச்நீ* * * *ரிச்ரா* * * *—
ச்நிதபநிச்ரீ* * * *ம்க்ரீ—ரீக்ரீகா* *க்ரீச்—நிரீச்ரீ* *ச்நித—
மதபதா* *பமக—ரிமபநீ* * * *ச்—மபநிச்ரா* *ரீ—ச்ரீம்க்ரா* *ரீ—
ப்ம்க்ரீ* *க்ரீச்—நிச்ரீப்நிச்ம்பநிரிம்பநிசரிமபநிச்ரீ* *க்ரீச்நிதப—
மபரீச்ரா* * * *நிதப—மபநீநீ* * * *நிதபமகரி—ரிபமபா* * * *மகரி—
ரிமகரீ* * * *கரிச—நீ* * * *ரிசா* * * * * *—

### 22. ஸாமராகம்— 28–வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ=ச, ச–ரி, சு–ம, ப, ச–த,

அவ=ச, ச–த, ப, சு–ம, அ–க, ச–ரி,

### இலக்கணம்.

“ஷட்ஜக்ரஹோநிவர்ஜ்யஸ்யாத்
ஆரோஹேச்சகவர்ஜித:
ஸாமராகஇதிக்யாத
ஸ்ஸர்வகாலேஷுகீயதே”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) ஸாமராகம் ஷட்ஜரஹம், இதற்கு நிஷாதஸ்வரம் வர்ஜம், ஆரோஹணத்தில் மட்டிலும் காந்தாரஸ்வரத்தை நீக்கவேண்டியது. எக்காலத்தும் பாடத்தக்கது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா* * * *ரிமபதச்ரா* * * *—ச்தபமா* * * *கரீ* * * *சா* * * *—

(2) ரிமபா* * * *பா* * * *பாதபப்மதா* *தச்ரா* *ச்ரா* * * *—தச்தபா* * * *—
பமகரீ* * * *சரிசரிமகரிசா* *சதா* * * *ரிசா* * * *—

(3) பமா* * * *மகரி—ரிமபா* *பா* *—பதா* *தச்ரா* * * *தாச்தபாதபமா* *—

பாதபமாபமகா**—காமகரிகரிரி**—ரிமபதா****தச்தபமகரி**—

தபமகரி**—பமகரி**—மகரிசரிமகரிசா**சதா**—தசரிகரிசா****—

(4) சரிமபா—தபதச்ா**—தச்ரிம்ா****க்ரி—க்ரிச்தச்ரிபதச்மபத-

ரிமபச்ரிமபதசரிமபதரிச்ா****—தாச்தாச்தா**ப—

மபதமதபமகரி****—பமகரி****மகரிதசரிமகசரி****கரிசா****—

(5) தசதசரிசரிமரிமபம—பதபதச்தச்ரிச்ரிம்க்ரிச்ா****—

ச்தச்ரி**ம்க்ரி—ச்தரிச்ா**ரிச்த—பதச்தா****ப—மதபமகரிரி****—

சரிபமதபா**மகரி—சரிபமகரி**மகரி—சரிகசா******—

சதரி****—ரிசா******—

(6) ரிமா**மகரிச—ரிமபதா**ப—மகரிச—ரிமபதச்தா* பமகரி—

சரிமகா**ரிசதசரிமபத—பதச்தச்ரிச்ரிம்க்ரிரி**ப்ம்க்ம்க்ரிக்ரிச்—

ரிச்தச்தபதபமபதச்ா**தபமகரி**மகரிசா**—

சாரிசசததா****சா****—

இன்னும்வரும்

பத்திராதிபர்.

# நீதி

## ச்ருங்காரசதகம்.

### 12-வது பக்கத்தின் தொடர்ச்சி.

(பொருள்) தீரபுருஷன் எவனும், கலங்கிய மான்குட்டியின் கண்கள் போன்ற கண்களையுடையவர்களும், மன்மதனுக்கு ஆயுதங்களுமான ஸ்திரீகள் இல்லாவிட்டால், ஸித்தர்கள் வஸிக்கும் குகைகளையுடைந்தும், எப்பொழுதும் அண்டையிலிருக்கும் சிவபெருமானின் வாஹனமாகிய விருஷபத்தின் கொண்டையால் முறிக்கப்பட்ட விருக்ஷங்களையுடையதும், கங்கை நீரால் சுத்தஞ் செய்யப்பட்ட சிலைகளையுடையதும், சிறந்ததுமான ஹிமவத் பிரதேசமிருக்கும் பொழுது தனது தலையை வணங்கத் தகாதவரை வணங்கியதால் களங்கமுள்ளதாயும், உத்கர்ஷ மற்றதாயும் செய்வானு? (பழுதற்ற மன்மதன் பாணங்களாகிய ஸ்திரீகள் இருக்கின்றமையினுல் தான் தீரபுருஷர்களுக்கும் இவ்வாருன நிலைமை யேற்பட்டதென்பது கருத்து.)

ஸம்ஸார தவபார்யந்தபதவீ நதவீயஸீ
அந்தரா துஸ்தராநஸ்புர்யதிதேமதிரேக்ஷணா: (33)

(பொருள்) ஹே! ஸம்ஸார! உனக்கு மத்தியில் கங்கை முதலிய மஹா நதிகள்போல் தாண்ட முடியாதவர்களான ஸ்திரீகள் உண்டாகாவிடில் உனது முடிவான எல்லை நெடுந்தூரத்திலில்லை. (இதனுல் ஸம்ஸாரத்தின் முடிவையடைவதற்குத் தடைகள் ஸ்திரீகளே; அவர்களை விட்டு நீங்கினுல் உயர் சிறப்படையலாமென்பது கருத்து.)

திசவநஹரிணேப்யோவம்சகாண்டச்சவீநாம்
கபளமுபலகோடிச்சிந்நமூலம்குசாநாம்

*சகபுவதிகபோலாபாண்டுதாம்பூலவல்லீ*
*தலமருணநகாக்ரை: பாடிதம்வாவதூட்ய:* (34)

(பொருள்) ஓ! ஜனமே? நீ பரிசுத்தமான காட்டில் அருகில் ஸஞ்சரிக்கும் மான்களுக்கு கூரான கற்பாறையின் முனையால் வெட்டுண்ட வேர்களையுடையனவும், இரஸத்துடன் கூடினவைகளுமான தர்ப்பைகளின் கவளத்தையாவது கொடு; இல்லாவிட்டால் மங்கைகளுக்கு சிவந்த நகங்களின் நுனியால் கிள்ளப்பட்டதும், சகமென்னும் தேசத்திலுள்ள தருணிகளின் கன்னங்கள்போல் வெளுத்ததுமான வெற்றிலையையாவது கொடுக்கக் கடவாய். (இதனால் மனிதன் ஸுகத்திற்குக் காரணம் காட்டிற்குச் சென்று தவஞ்செய்வது ஒன்று; நாட்டில் நங்கையருடன் இன்பமாய் வாழ்வது மற்றொன்று என்பது கருத்து.)

*அஸாராஸ்ஸர்வேதேவிரதிவிரஸா: பாபவிஷயா*
*ஜுகுப்ஸ்யந்தாம்யத்வாநநுஸகலதோஷாஸ்பதமிதி*
*ததாப்யேதத்பூமௌநஹிபரஹிதாத்புண்மதிகம்*
*நசாஸ்மிந்ஸம்ஸாரேகுவலயத்ருசோரம்யமபரம்* (35)

(பொருள்) பிரஸித்தங்களாயும், பாவத்திற்குக் காரணங்களாயுமுள்ள மாலை, சந்தனம், மாதர் முதலிய விஷயங்கள்யாவும் ஸாரமற்றவைகளாயும், முடிவில் அநர்த்தத்தைச் செய்பவைகளாயும், இராகம் துவேஷம், மோஹம் முதலிய தோஷங்களுக்கு இருப்பிடமாயுமிருக்கின்றமையால் தள்ளத் தக்கவைகள்; ஆயினும் இம்மண்ணுலகில் பரோபகாரத்தைக் காட்டிலும் மேலான புண்யம் எதுவுமில்லை; அன்றியும் இந்த ஸம்ஸாரத்தில் கருநீதல் மலர்போன்ற கண்களையுடைய மங்கையரைக் காட்டிலும் மனோகரமான வஸ்து வேறில்லை. (இதனால் விஷயங்களைவிட்டு உள்ளிந்திரியங்களை யடக்குதல், வெளியிந்திரியங்களையடக்குதல்முதலிய நியமங்களைக் கைக்கொண்டு தவம்புரியவேண்டும். அல்லது பிறருக்குபகாரஞ் செய்துகொண்டு இல்லாளுடன் இன்பமாய் வாழவேண்டும்; வேறு விதமாயிருத்தல் கூடாது என்பது கருத்து.)



*மாத்ஸர்யமுத்ஸார்யவிசார்யகார்ய*
*மார்யா: ஸமர்யாதமிதம்வதந்து*
*ஸேவ்யாநிதம்பா: கிமுபூதராணா*
*முதஸ்மரஸ்மேரவிலாஸிநீநாம்* (36)

(பொருள்) பண்டிதர்கள் பக்ஷபாதத்தைவிட்டு, கார்யத்தை ஆலோசித்து, நல்லோர்வழியைத் தாண்டாமல், "பர்வதங்களின் நிதம்பங்கள் ஸேவிக்கத் தக்கவைகளா? அல்லது மன்மதனால் மிகுந்த மதமுடைய மங்கைகளின் நிதம்பங்கள் ஸேவிக்கத் தக்கவைகளா?" என்பதைக்கூறக் கடவர். இங்கு முன்பு கூறிய நிதம்பங்கள் என்ற பதத்திற்கு மலையின் தாழ்வரைகள் என்பது பொருள். பின்பு கூறிய நிதம்பங்கள் என்ற பதத்திற்கு மாதர்களின் கடிதடமென்பது பொருள். (இதனால் வைராக்யமிருந்தால் மலைகளின் நிதம்பங்களை ஸேவிக்கவேண்டும். இல்லாவிடில் மாதர்களின் நிதம்பங்களை ஸேவிக்கவேண்டும். இதுதான் முற்கூறிய வினாவிற்கு விடையென்பது கருத்து.)

*ஸம்ஸாரேஸ்வப்நஸாரேபரிணதிதரளேத்வேகதீபண்டிதாநாம்*
*தத்வஞ்ஞாநாம்ருதாம்ப: ப்லவலலிததியாம்யாதுகால:கதஞ்சித்*
*நோசேந்முக்தாங்கநாநாம்ஸதநகஜகநாபோகஸம்போகிநீநாம்*
*ஸ்தூலோபஸ்தஸ்தலே ஷுஸ்தகிதகரதலஸ்பர்சலீலோத்யமா*
[நாம் (37)

(பொருள்) பொய்யானதும், முடிவில் நிலையற்றதுமான பிறவிக் கடலில் பண்டிதர்களுக்கு இரண்டு அவஸ்தைகளிருக்கின்றன; அவை யாவன:— தத்துவஞ் ஞானமாகிற அம்ருதநீரில் மூழ்குவதில் ஆசையுள்ள புத்தியுள்ளவர்கள் பிரயாசைப்பட்டு அவ்வாறே காலத்தைக் கழிப்

பது ஒன்று; கொங்கைகள் விசாலமான கடிதடம் இவைகளில் ஸம்போகிப்பதில் மிகுந்த விருப்பமுள்ள புதியயுவதிகளின் விசாலமாயும் வர்த்துலமாயுமுள்ள மன்மதன் வீடுகளில் மூடிக்கொண்டிருக்கும் கையைத் தொடுவதாகிய லீலைகளில் முயற்சியுள்ளவர்கள் அவ்வாறே காலத்தைக் கழிப்பது மற்றொன்று (இதனால் அறிவாளிகள் எப்பொழுதும் ஞான நிஷ்டையிலாவது காமநிஷ்டையிலாவது காலத்தைக் கழிக்கவேண்டுமென்பது கருத்து.)

ஆவாஸ: க்ரியதாம்காங்கேபாபஹாரிணிவாரிணி
ஸ்தநத்வயேதருண்யாவாமனோஹாரிணிஹாரிணி (38)

(பொருள்) பாபத்தை நாசஞ்செய்யும் கங்கைநீரில் ஸ்நானபானம் செய்து கொண்டு வஸிக்கவேண்டியது. அல்லது மனோகரமாயும், முக்தாஸரத்தோடு கூடினதாயுமுள்ள யுவதியின் கொங்கைகளிலாவது காலத்தைக் கழிக்கவேண்டியது.

கிமிஹபஹுபிருக்தைர்யுக்திஶூந்யை: ப்ரலாபை
ர்த்வயமிஹபுருஷாணாம்ஸர்வதாஸேவநீயம்
அபிநவமதலீலாலாலஸம்ஸுந்தரீணாம்
ஸ்தநபராபரிகிந்நம்யௌவநம்வாவநம்வா (39)

(பொருள்) இவ்விஷயத்தில் அபரிமிதங்களும் ஸாரமற்றவைகளுமான வார்த்தைகளால் யாதுபயன்? ஆனால் இவ்வுலகத்தில் புருஷர்கள் புதிது புதிதான மன்மத லீலைகளில் பேராசையுள்ளதும், கொங்கைகளின் பாரத்தால் நிறைந்ததுமான தருணிகளின் யௌவனத்தையாவது பரிசுத்தமான வனத்தையாவது எப்பொழுதும் ஸேவிக்கவேண்டும்.

ஸத்யம்ஜநாவச்மிநபக்ஷபாதா
ல்லோகேஷுஸப்தஸ்வபிதத்யமேதத்



நாந்யந்மனோஹாரிநிதம்பிநீப்யோ
துக்கைகஹேதுர்நசகச்சிதந்ய: (40)

(பொருள்) ஹே! ஜனங்களே! நான் பக்ஷபாதமின்றி உண்மையைக் கூறுகிறேன். “தருணிகளைக் காட்டிலும் மனோகரமான வஸ்து வேறில்லை; அவ்வாறே துக்கத்திற்கு முதற்காரணமும் வேறில்லை’ என்பது ஏழுலோகங்களிலும் ஸத்யமானது.

## மாதரையிகழ்தல்.

காந்தேத்யுத்பலலோசநேதிவிபுலச்ரோணீபரேத்யுந்ந
த்பீநோத்துங்கபயோதரேதிஸுமுகாம்போஜேதிஸுப்ருரிதி
த்ருஷ்ட்வாமாத்யதிமோததேபிரமதேப்ரஸ்தௌதிவித்வாநபி
ப்ரத்யக்ஷாசுசிபஸ்திரிகாம்ஸ்திரியமஹோமோஹஸ்யதுச்சேஷ்
[டிதம் (41)

(பொருள்) அறிவுள்ளவனும், ஸ்திரீயானவள் ப்ரத்யக்ஷத்தில் அசுசியான தோல்பையாயிருப்பது தெரிந்திருந்தும் அவளைப் பார்த்து இவள் மனோகரையானவள், கருநீதல் மலர் போன்ற கண்களையுடையவள், பெருத்த நிதம்பமுள்ளவள், உயரக் கிளம்பிய பெருத்த கொங்கைகளையுடையவள், நல்ல முகமாகிற தாமரைப்பூவையுடையவள், அழகிய புருவமுடையவள், என்று மதத்தையடைகிறான், சந்தோஷிக்கிறான், க்ரீடிக்கிறான், ஸ்தோத்திரஞ் செய்கிறான், ஆனதால் மோஹத்தின் வியாபாரம் உண்மையில் ஆச்சரியமாகவேயிருக்கிறது.

ஸ்மிருதாபவதிதாபாயத்ருட்டாசோந்மாதகாரிணீ
ஸ்ப்ருஷ்டாபவதிமோஹாயஸாநாமதயிதாகதம் (42)

(பொருள்) ‘எவளை விரஹ காலத்தில் நினைத்தால் தாபமுண்டாகின்றதோ; பார்த்தால் சித்தப்பிரமமுண்டாகின்றதோ; ஸ்பர்சித்தால்மோஹமுண்டாகின்றதோ; அவள் எவ்வாறு ப்ரியக்கைச் செய்பவளாவள்?.

தாவதேவாம்ருதமயீயாவல்லோசனகோசரா
சக்ஷுர்வ்ஷபதாதகிதா துவிஷா தப்ப திரிச்யதே (43)

(பொருள்) மங்கையானவள் நேரில் பார்த்துக் கொண்டிருக்கும் வரையில்தான் அமிருதம்போல் இன்பத்தைக் கொடுப்பவள்; கண்க ளின் மார்க்கத்தினின்றும் மறைந்துவிட்டால் காலகூடவிஷம்போல ப்ரா ணனுக்குத் துன்பத்தைக் கொடுப்பவளாகின்றாள்.

நாம்ருதம்நவிஷம்கிஞ்சிதேகாம்முக்த்வாநிதம்பிநீம்
ஸைவாம்ருதலதாரக்தாவிரக்தாவிஷவல்லரீ (44)

(பொருள்) உலகில் மாதரைத்தவிர அம்ருதபதத்தின் பொருள் வேறில்லை; விஷபதத்தின் பொருளும் வேறில்லை; ஏனெனில், அம்மங் கையே அன்புள்ளவளாயிருந்தால் அம்ருதலதைபோல் ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறாள். அவளே அன்பற்றவளாயிருந்தால் விஷக்கொடி போல் துன்பத்தை உண்டாக்குகிறாள்.

ஆவர்த்த: ஸம்சயாநாம்விநயபுவநம்பட்டணம்ஸாஹஸாநாம்
தோஷாணாம்ஸந்நிதாநம்கபடசதமயம்க்ஷேத்ரமப்ரத்யயாநாம்
ஸ்வர்க்கத்வாரஸ்யவிக்நோநரகபுரமுகம்ஸர்வமாயாகரண்டம்
ஸ்திரீயந்த்ரம் கேநஸ்ருஷ்டம் விஷமம்ருதமயம் ப்ராணிலோ
[கஸ்யபாச: (45)

(பொருள்) ஸந்தேகங்கள் யாவற்றுக்கும் இருப்பிடமும், வணக் கமில்லாமைக்கு லோகமும், பிடிவாதங்களுக்குப் பட்டணமும், இரா கம் துவேஷம் முதலிய தோஷங்களுக்கு ஸ்தானமும், பற்பல விதமான கபடங்களால் நிறைந்ததும், அவிச்வாஸங்களுக்கு உத்பத்தி ஸ்தான மும், ஸ்வர்க்கலோகத்தையடைவதற்குத் தடையும், நரலோகத்தையடை விப்பதும் இந்திரஜாலம் முதலிய மாயைகளுக்குப் பெட்டியும், வெளிக்கு அம்ருதம்போல் தோன்றுவதும் விசாரித்துப் பார்த்தால் விஷமாயிருப் பதும் ஜனங்களின் கூட்டத்தைக் கரையேற வொட்டாமல் தடுப்பதில் கயறு போன்றதுமான ஸ்திரீ யென்னும் யந்திரத்தைப் படைத்தவன் யார்?.



நோஸத்யேநசசாங்கஏஷவதநீபூதோநசேந்தீவர
த்வந்தம்லோசநதாம்கதம்நகநகைரப்யங்கயஷ்டி: க்ருதா
இத்த்வேவம்கவிபி: ப்ரதாரிதமநாஸ்தத்வம்விஜாநந்நபி
த்வங்மாம்ஸா ஸ்திமயம்வபுர் ம்ருகத்ருசாம்மந்தோஜ நஸ்ஸே
[வதே (46)

(பொருள்) நமக்கு நேரில் காணப்படும் சந்திரன் மங்கையரின் முகமாக ஆகவில்லை; கருநீதல் மலரின் இரட்டையும் கண்களாக ஆய்வி டவில்லை; அவயவங்களும் சுவர்ணத்தாலாக்கப் படவில்லை; ஆனால் இவ் வாறு புலவர்களால் கொள்ளை கொள்ளப்பட்ட மனமுடையதாய் அறிவற்ற ஜனமானது முகம் சந்திரனன்று என்பதையறிந்தும் தோல், மாம்ஸம், எலும்பு இவைகளாகிய மான்விழியர்களின் சரீரத்தை ஸேவிக்கின்றது.

லீலாவதீநாம்ஸஹஜாவிலாஸா
ஸ்தஏவமூடஸ்யஹ்ருதிஸ்புரந்தி
ராகோநளிந்யாஹிநிஸர்க்கஸித்த
ஸ்தத்ரப்ரமத்யேவ்ருதாஷடங்க்ரி: (47)

(பொருள்) விலாஸினிகளுக்கு விலாஸங்கள் இயற்கையாய் ஏற் பட்டிருக்கின்றன; அவ்வாறிருக்க, தாமரை மலருக்கு சிகப்புவர்ணம் இயற் கையாயிருந்தபோதிலும் இச்சிகப்பு என்னைச் சேர்ந்ததென்று வண்டு வீணுயலைவதுபோல் இவ்விலாஸங்கள் என்னைச் சேர்ந்தவையென்று அறிவற்றவன் மனதில் தோன்றுகிறது.

யதேதத்பூர்ணேந்துத்யுதிஹரமுதாராக்ருதிபரம்
முகாப்ஜம்தந்வங்க்யா: கிலவஸதியத்ராதரமது

இதம்தத்கிம்பாகத்ருமபலமிதாநீமதிரஸம்
வ்யதீதேஸ்மிந்காலேவிஷமிவபவிஷ்யத்யஸுகதம் (48)

(பொருள்) எந்த முகாரவிந்தத்தில் அதராம்ருதமானது வலிக்கின்றதோ; அவ்விந்த பூர்ண சந்திரன் காந்திரன் காந்தியைக் கொள்ளை கொள்வதும், மிகவும் மனோகரமான ஆகாரத்தையுடையதுமான தருணிகளின் தாமரை மலர்போன்ற முகமானது இப்பொழுது மிகுந்த இரஸமுடையதும், சொல்லமுடியாததும் இளம் மாமரத்தின் பலன்போல் இனிப்பாயுமிருக்கின்றது. இக்காலம் சென்றபின் விஷம்போல துன்பத்தைக் கொடுப்பதாகின்றது.

உந்மீலத்திரவளீதரங்கநிலயாப்ரோத்துங்கபீநஸ்தந
த்வந்தேநோத்கதசக்ரவாகயுகளாவக்த்ராம்புஜோத்பாஸிநீ
காந்தாகாரதராநதீயமபித: க்ருராத்ரநாபேக்ஷதே
ஸம்ஸாரார்ணவமஜ்ஜநம்யதிததாதூரேணஸந்த்யஜ்யதாம் (49)

(பொருள்) வெளிக்கிளம்பின மடிப்புச் சதைகளாகிற அலைகளால் நிறைந்ததும், மிகவும் பருத்த இரட்டைக் கொங்கையால் சலிக்கின்ற சக்ரவாக பக்ஷிகளின் இரட்டையையுடையதும், முகமாகிற தாமரையால் விளங்குகின்றதும், அழகான ஆகாரத்தையுடையதும், நாலாபக்கமும் ஸஞ்சரிக்கின்ற முதலை முதலிய துஷ்டப் பிராணிகளையுடையதுமான இந்நதியை பிறவிக்கடலில் முழுகவிரும்பாவிடில் தூரத்திலேயே தள்ளிவிடலாம்.

ஜல்பந்திஸார்த்தமந்யேநபச்யந்த்யந்யம்ஸவிப்ரமா:
ஹ்ருதயேசிந்தயந்த்யந்யம்ப்ரிய: கோநாமயோஷிதாம் (50)

தொடரும்

Pandit, M. M. Narayanasamy Iyer
Mudikondan.

# கனகாவளி

16-வது பக்கத்தின் தொடர்ச்சி.

இவ்வாறு மிகவும் வருந்திய மனத்தினளாய் தன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவானோ நிறைவேற்றமாட்டானோ யென்னும் சந்தேகத்துடன் தனதன்னை கூறியமொழிகளைக் கேட்ட தர்மபாலன் தாயின் துயரத்தைக்கண்டு சகிக்காது மிகவும் துக்கத்துடன் பின்வருமாறு கூறலாயினன். "அம்மா! நீ இவ்வாறு வருந்துவதினால் என் மனம் படுந்துயரத்தை நீ யறியக்கூடாதவளல்ல. பிதாவும் இவனோடிசைந்து விட்டாரே, இனி நம்முடைய சொல்லைக் கவனிப்பானோ பென்று யோசிக்கிறாயோ? உலகில் தெய்வமாகத் தொழப்படவேண்டியவர் இருவர். அவர்கள் தாயுந்தகப்பனுமாவர். அவர் இருவருள்ளும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறுமிடத்தும், அன்னையை முதலிலும் பின்னரே பிதாவையுங் கூறியிருக்கிறது. உங்களைக் காட்டிலும் என்னுடைய நன்மையை நாடக்கூடியவர் வேறு யார் இருக்கிறார்கள். பெற்றோர்க்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் நற்கதி கிடைத்தற்கு நாம் எளிதில் செய்யக்கூடிய சிறந்த உபாயம் வேறு யாதுளது. இது பற்றியே பெரியோரும் "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை. தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்று பெற்றோரின் பெருமையைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். ஆகையால் மனதில் சற்றுஞ் சலனமில்லாது உடல், பொருள், ஆவியாகிய இம்மூன்றின் பிரயாசையாலும் உன் மனக்கவலையை நீக்கி சந்தோஷிப்பிக்கச் செய்யக் கடமைப்பட்டவனும் தயாராயிருக்கும் உங்கள் தர்ம பாலனிடத்து உன்னுடைய அவாவைத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன். என்று தாயினுடைய காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

இவ்வாறு தன்னிடத்துக் காட்டிய அன்பின் பெருக்கையும் ஒழுக்கத்தையுங் கண்டு தன் மனதில் ஒரு விதமான சந்தோஷமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. உடனே தன்னுடைய காலடியில் வேரற்ற மரம் போல் வீழ்ந்திருக்கும் தர்ம பாலனை எழுப்பி அவனைத் தன் மனப்பூர்

த்தியாய் ஆசீர்வதித்து "ஹே! தர்மபாலா! இத்தகைப் பெருந்தன்மையான குணம் வாய்ந்த உன்னை எங்களுக்குப் புத்திரனாகத் தந்த பரம்பொருளை இந்நற்குணங்கள் உன்னைவிட்டு நீங்காது நிலைபெற்றிருக்கும்படி மிகவும் வணக்கத்துடன் நமஸ்கரிக்கிறேன். நான் உன்னிடத்தில் வேண்டிக் கொள்ளப்போவது மிகவும் அற்பமான காரியமாயிருப்பினும், அதைப் பெரிதாகக்கொண்டு ஊசலாடு மென்மனதை அமைதிப்படுத்துவாயென்று நம்புகிறேன்" என்றாள். அதற்குத் தர்மபாலன் "அம்மா என்னிடத்தில் நீ யேன் வேண்டிக் கொள்ளவேண்டும். நீ கொடுக்குங் கட்டளையைத் தலைமேற் கொண்டொழுகத் தயாராயிருக்கின்றேனே. ஆகையால் சற்றுந்தாமதமில்லாது விஷயத்தை வெளியிடும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் "என்றான். அதற்கு

தாய்:— தர்மபாலா, உன்னிடம் விரும்புவது வேறொன்றுமில்லை. நீ உன் பிதாவுக்கு அளித்த உத்திரங்களைக் கேட்டபிறகும் நான் உன்னைப் போர்க்களத்துக்கு போகக்கூடாதென்று சொல்வதானது அவ்வளவு உசிதமான காரியமாகாது. ஆனால் நீ யெனக்காகக் கவனித்து நடக்கவேண்டிய விஷயம் யாதெனில், எப்பொழுது உன்னுடைய உயிருக்குத் திண்ணமாய் அபாயம் வந்து விடுமென்று தோன்றுகிறதோ அப்பொழுதே நீ போர்க்களத்தைவிட்டு நீங்கி உன்னை விட்டு அரை நிமிஷமும் தனித்திருக்க சகியாத உன்தந்தையினிடம் வந்து சேர வேண்டும். (இச்சமயத்தில் தசரதனிடம் கைகேயி வரங்கேட்டபொழுது அவர் பட்ட துயரங்கூட இதற்கொப்பில்லை யென்று சொல்லத்தகும். அவ்வளவு துயரத்துடன் தர்மபாலன் விளங்கலானான்.) இதைக் கண்ட தாய் மறுபடியுஞ் சொல்வாள்:— என் செல்வமே, வீரசிகாமணியே, நீ படும் துயரத்தை என் மனது அறியாமலிருக்கவில்லை. இந்துயரத்தை யாவது கண்டு நான் சகித்துக் கொள்வேன். நீ நான் சொன்னபடி நடவாமல் வேறு விதமாய் நடப்பதால் உண்டாகுந் துக்கம் என்றால் அரை நிமிஷங்கூட சகிக்க வொண்ணாததாயிருக்கும். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்த தாயறிவாள் பிள்ளையின் அருமை. ஆகையால் என் வார்த்தையைத் தட்டாது அதனைக்காக்கும்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்".



தர்மபாலன்:— தாயே அவ்வாறே செய்கிறேன். நீங்களெல்லோரும் அபயகிரியை நோக்கிச்சென்று ஈசனருளால் பத்திரமாய் அவ்விடத்தையடையுங்கள். உடனே பிதாவை நோக்கி "பிதா இப்பொழுது சுமார் 3 மணியிருக்கலாம் இன்னும் இரண்டு மணிநேரத்துக்குள் பொழுது புலர்ந்துவிடும். அதற்கு முன்னமே நான் போர்க்களத்தையடைந்தால் சில அனுகூலங்கள் ஏற்படுமென்று நினைக்கிறேன். ஆகையால் கிருபைசெய்து போய்வர எனக்கு விடையளிக்கவேண்டும்" என்று மிகவும் வணக்கத்தோடு சிரத்திற் குவித்தகைகளுடன் தன் பெற்றோர் அருகில் வந்து நின்றனன்.

பிதா:— தர்மபாலா! உன் தாய் உன்னிடத்தில் வேண்டிக்கொண்டதற்கும், அவ்வேண்டுகோளுக்கிணங்கி நீ யளித்த வாக்குக்கும் பழுதுவாராமல் பார்த்துக்கொள் க்ஷத்திரிய குலத்திலும் ராஜவம்சத்திலும் பிறந்த உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை. போர்க்களத்துக்குச் சென்று ஆங்கு உன்னுடைய மனோபீஷ்டத்தையும் பூர்த்தி செய்து கொள்ளுமாறு நாங்களிருவரும் விடையளிக்கிறோம். "என்று தாயுந் தந்தையுந் தனயனைத்தழுவி ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்பினர்.

தர்மபாலன் இவ்வாறு தன் பெற்றோர்களிடம் விடை பெற்று அரண்மனை வாயிலையடைந்து அங்கே சவாரி செய்யத் தயாரித்து நிறுத்தப்பட்டிருக்கும் ஓர் குதிரையின்மீதேறிப் போர்க்களத்தை நோக்கிக் காற்றினுங்கடிது சென்றனன்.

## 2-வது அத்தியாயம்.

மாலை சுமார் 5½ மணியாயிற்று உலகின்கண் அமைந்துள்ள ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் உயிர் வாழ்தற் கின்றியமையாததாயிருக்கும் உஷ்ணத்தையும், ஒளியையுந் தன்னிடமாகக் கொண்டு விளங்குஞ் சூரியன் தன் பொன்மயமான கிரணங்களை எங்கணும் பரப்பி கண்ணிற்றென்படும் ஒவ்வொன்றும் புதிய தோற்றமும் ஒளியும் பெற்றிலங்

கும்படி செய்தனன். சிறிது நேரஞ் சென்றபின்னர் மேற்குத்திசை மலைகளில் மறைந்தனன். பக்ஷிஜாலங்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டுக் கிளம்பின கூட்டங் கூட்டமாய் ஒன்றன்பின் ஒன்றாய் அணி வகுத்ததுபோல் சந்தோஷத்துடன் சப்தித்துக்கொண்டு ஆகாயமார்க்கத்திற் பறந்து சென்றன. அச்சமயத்தில் சிறுவர்கள் தங்கள் கல்விச் சாலையினின்றும் வெளியேறித் தந்தம் வீடுகளை நோக்கித் துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டு சென்றனர். ரத்னகம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறதோவென சந்தேகிக்கத்தக்கவாறு அவ்வளவு அடர்த்தியாய் வளர்ந்து நெடுந்தூரம் பாவியிருக்கும் பசும் புற்றரைகளுக்கு மத்தியில் கூட்டங் கூட்டமாய்க் குனிந்த தலைநிமிராது மேய்ந்து கொண்டிருந்த ஆடு மாடுகள் ஆபர்கள் பின் தொடர்ந்துவர குதித்து விளையாடிக் கொண்டு வரும் கன்றுகளுடன் தந்தம் இருப்பிடங்களை நோக்கி வரிசை வரிசையாகச் சென்று கொண்டிருந்தன.

அக்காலையில் பகல்முழுவதும் வேலை செய்ததினாலடைந்திருக்கும் களைப்பைத் தீர்க்கும் பொருட்டு விசிறியினால் மெல்ல விசிறியது போல் தென்றலானது வீச ஆரம்பித்தது. அம்மெல்லிய காற்றில் மரங்களும் புஷ்பச் செடிகளும் அங்கு மிங்குமசைந்தாடுவதானது "வாருங்கள், வந்து இந்நிழலில் உட்காருங்கள், உங்களுடைய சிரமத்தைத் தீருங்கள்" என்று முகமன்கூறி வரவேற்பது போலிருந்தது. எல்லைப் புறங்களிலும், அகத்திலிடையிடையே அணி வகுத்ததுபோலும் ஆகாயத்தையளாவி நிற்கும் பற்பல விருக்ஷங்களும், அவைகளினிடையே ஊடுருவிச்சென்று எங்கணும் வியாபித்திருக்கும் நானாவித வர்ணங்களும், நறுமணமும் பொருந்திய பல் வேறு புஷ்பக் கொடிகளும், பலவித ரத்னங்களைப்பதித்ததுபோல் இடையிடையே மலர்ந்திருக்கும் புஷ்பங்களும், குலை குலையாய்க் காய்த்துத் தொங்குங்கனிகளின் பாரந்தாங்கமாட்டாது கிளைகள்வளைந்து இத்தகையான செழிப்பிற்குக் காரணமாயுள்ள பூமாதேவியினிடத்து அளவளாவி வந்தனமளிப்பதுபோல் தரையின்மீதுவந்து படிந்திருப்பதும், கால்வைத்த யிடமெல்லாம் மெத்தென்றிருக்குமாறு நடை பாதைகளில் ஆங்காங்கு வளர்த்துக் கபாத்துப் பண்ணப்பட்டிருக்கும் பசும் புற்றரைகளும், வரிசை வரிசையாக நிற்கும்



கமுகு, காற்றாடி, வாழை முதலிய மரங்கள் இருபக்கங்களிலும் வளர்க்கப்பட்டு அவைகளின் மேற்றட்டில் படர்ந்திருக்கும் பசலி முதலிய கொடிகளுடன் அரசர்களுடைய கொலு மண்டபத்தை அலங்கரித்ததுபோல் தோன்றுவதும் பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமாயிருந்தது.

ஆங்குள்ள புஷ்பங்களில் ஊறித்துளிக்கும் அமிர்தத்துக்கொப்பான இனியதேனை உண்டு ரீங்காரம் செய்யும் வண்டுகளின் ஹம் என்ற சப்தமானது ஆங்குள்ள குயில்கள் கூவிக் களிப்புறும் இனிய சங்கீதத்திற்கு ஓர் சுருதிபோலிருந்தது. கிளி முதலிய பக்ஷிகள் தங்கள் உறுதியான அலகுகளினால் மரப்பட்டைகளில் தட்டுவதானது அதற்குத் தாளம்போடுவது போலிருந்தது. விருக்ஷங்கள் வானுறவோங்கி வளர்ந்திருப்பதினால் சூரிய வெளிச்சத்தையே கண்டிராத ஆங்குள்ள மயில்கள், சூரியன் அஸ்தமித்ததை அறியமுடியாமல், மாலை மங்கலை மேகமென நினைத்து தங்கள் அழகிய தோகைகளை விரித்தாடுவதானது அவ்வினிய சங்கீதத்தைக்கேட்டு ஆனந்தக் கூத்தாடுவதுபோலிருந்தது. அம்மெல்லிய காற்றில் மரக்கிளைகள் மெதுவாக சிற்சில சமயங்களில் அசைந்தாடுவது "சபாஷ் சபாஷ்" யென்று சொல்வது போலிருந்தது. இவ்வாறு ஐம்புலன்களுக்கும் அளவில்லா இன்பத்தைத் தரக்கூடிய சிறப்புயாவும் அமைந்துள்ள ஓர் பூஞ்சோலையினடுவே, மயில், குயில் மான் முதலிய ஜந்துக்கள் தங்கள் முகம் பார்ப்பதற்கு அமைக்கப்பட்ட ஓர் கண்ணாடிபோல் பள பள வென்று ஸ்படிகத்தைப் போல் அவ்வளவு தெளிவான நீரால் நிரம்பிய ஓர் தடாகமிருந்தது. அத்தடாகத்தில் விசித்திரமான வர்ணங்களையுடைய மீன்கள் இடையிடையே நீர் மட்டத்துக்குமேல்த் துள்ளித் திரும்பத் தண்ணீரில் விழுவதானது ஆகாயத்தில் மின்னல் தோன்றி மறைவதுபோலிருந்தது. ஹம்ஸபக்ஷிகள் மிகவும் உல்லாசமாயும் கம்பீரமாயும் தங்கள் தலைகளைத் தூக்கி நீந்திக் கொண்டிருந்தன. ஆங்கு படர்ந்திருக்கும் தாமரைக் கொடிகளிலுள்ள இலைகள் அக்காற்றில் அலைந்து அவைகளுக்கு மத்தியில் நீந்திக்கொண்டுபோகும் ஹம்ஸங்களுக்கு விசிறுவதுபோலும், அதிலுள்ள தாமரைப் பூக்கள் அவைகளுக்கு சாமரம் போடுவது போலுமிருந்தன:

கண்ணாடியிட்ட படத்திற்குச் சட்டம் அமைத்தாற்போல் அவ்வழகிய தடாகத்தைச் சுற்றிலும் உட்புறத்தில் சலவைக் கற்களால் படிகள் கட்டி விடப்பட்டிருந்தன. அவ்வனத்திலுள்ள மயில்களின் தோகையை வென்ற கூந்தலையும், சந்திரவதனமும், மான்விழிகளைப் பழித்த கண்களையும், வஞ்சிக் கொடிபோன்ற யிடையையும், ஆங்குள்ள அன்னங்களின் நடையை மிஞ்சியமென்னடையையுமுடைய மாதர் பலர் அத்தடாகத்தில் ஸ்நானத்திற் கென்றமைத்துள்ள ஓர் அழகிய கட்டடத்தில் வந்து நின்று கொண்டிருந்தார்கள். அம்மாதர்களின் நடையுடையிலிருந்தும் ஒருவரோடொருவர் சம்பாஷித்துவந்த மாதிரியிலிருந்தும் அவர்கள் யாரோ ஒருவர் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள்போல் தோன்றினார்கள். அவ்வனத்தில் அப்பொழுது தானலர்ந்து நறுமணங் கமழ்ந்து கொண்டிருக்கும் மலர்களைக் கொய்து அவைகளை அழகாய்த் தொடுத்துக்கட்டிச் செண்டாகவும், ஹாரமாகவும், இன்னும் பார்ப்பதற்கு ரமணீயமாயிருக்கும் பலவித வடிவங்களையுடையதாகவுஞ் செய்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் புஷ்பங்களைத் தொடுத்துக் கொண்டிருக்கும் மத்தியில் அடிக்கடி தாங்கள் எதிர் பார்த்துக்கொண்டிருப்பவள் வருகிறாளாவென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்வதிசயங்களை யெல்லாங்கண்டு களிக்கவருவதுபோல் கீழ்த்திசையில் சந்திரன் தன் ஒளி வீசுங்கிரணங்களுடன் தோன்றினான். சற்று நேரஞ் சென்றதும், அவர்களில் இருவர் ஒருவரோடொருவர் பின்வருமாறு சம்பாஷிக்கலாயினர்.

கனகம்:— கோமளம், இந்நேரமாயும் நமது ராஜகுமாரி இவ்விடம் வந்து சேரவில்லையே. தினம் இதற்கு நெடுநேரத்துக்கு முன்னமே இங்கு வந்து இதற்குள் திரும்பிவிடுவாளே. என்ன காரணமோ தெரியவில்லை.

கோமளம்:— கனகம்! என்னடி இதன் காரணம் இன்னும் உன்னால் அறிய முடியவில்லையே. எத்தனை நாள் நீ அரண்மனையில் பழகினால்தான் என்ன! உனக்கு வயசு எவ்வளவு ஆனால்தான் என்ன! என்றைக்கும் நீ ஒன்றுமறியாத குழந்தைதானா!.



கனகம்:— நான் உன்னிடத்தில் எப்பொழுது என்ன கேட்டாலும் அதற்கு நேரே பதில் சொல்லுகிற வழக்கம் ஒரு நாளுங் கிடையாதே. என்னைக் கேலி பண்ணுகிறதுதான் உனக்கு வழக்கம். நீ படித்தபடிப்பெல்லாம் கேலி பண்ணத்தான் படித்தாய் போலிருக்கிறது. காரணம் என்னதாயிருக்கலாமென்று நீ யோசிக்கிறாய்? அதைத் தயவு செய்து சொல்லம்மா.

கோமளம்:— நம்மைப்போல் ராஜகுமாரியையும் நினைத்தாயேயொழிய அவளுக்கும் நமக்குமுள்ள வித்தியாசத்தை நீ கொஞ்சங்கூட யோசித்துப் பார்த்தாயில்லை. அந்த யோசனை உன்னிடத்தில் இருக்குமானால் நீ இப்பொழுது இதற்கு என்னிடத்தில் காரணம் கேட்கவேண்டியிராது.

கனகம்:— நான் ஒன்று கேட்டால் நீ அதற்குப் பதில் கேள்வி சேட்கிறதேதவிர நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுகிறதே கிடையாது. உன்னுடைய படிப்பும் யோசனையும் எனக்கு இருக்குமானால், அதை உன் மாதிரி நான் மற்றவரை கேலிபண்ணுகிறதற்கு உபயோகிக்கமாட்டேன். உன்னிடத்தில் பேச்சுக் கொடுத்தாய்விட்டது. நீ கேட்கிறதற்குத் தெரிந்தவரை பதில் சொன்னாலொழிய என்னை விடமாட்டாய். ஆனால் நீ கேட்கிறதற்குப் பதில் சொன்னால் அதில் நான் சேட்கிறதின் காரணம் எங்கேயிருக்கென்று எனக்கு கொஞ்சங்கூடத் தெரியவில்லை. ஆகையால் தயவுசெய்து நீயே சொல்லும்படிக்கு இன்னொருமுறை உன்னைவேண்டிக் கொள்ளுகிறேனம்மா சொல்லு.

கோமளம்:— நாமெல்லோருந் தாதிகள். ராஜகுமாரியோ நமக்கெல்லோருக்கும் எஜமானி. அவளிட்ட கட்டளையை நாமெல்லோரும் சிரமேற்கொண்டு நடக்கத் தயாராயிருக்க வேண்டியவர்கள். அவளுக்கு ஏதாவது தேகத்திற்கு அசௌக்கியமோ அல்லது மனதிற்கு சஞ்சலமோ ஏற்பட்டால் உடனே அவளிருக்குமிடத்தில் அரசர், பிரதம மந்திரி, அரண்மனை வைத்தியர், மாந்திரீகம், ஜோஸ்யர் இவர்களெல்லோரையும் பார்க்கலாம். மேலும் அவளிஷ்டப்படிக்கும், சௌகரியப்படிக்கும் நடக்க சுதந்தரமுள்ளவள். இப்படியெல்லாமிருக்க அவளை நம்மி

டத்தில் குறிப்பிட்ட தருணத்தில் வந்து ஆஜராகவில்லை யென்கிறாய். உன்னுடத்தில் நான் என்ன சொல்வது! நீ தான் சொல்லேன்.

கனகம்:— தற்சமயம் நீ சொல்லுவது காரணமாயிருக்க முடியாது இன்று பகல் 2 மணி வரைக்கும் என்னுடனும், செண்பகத்துடனும் ராஜகுமாரி பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் ஆரோக்கியமுள்ளவளாயும் சந்தோஷமுள்ளவளாகவேதான் தோன்றினாள். இதற்குள்ளாக அவளுக்கு தேக சௌக்கியத்துக்காக உலாவவரும் இந்த இடத்திற்கு வர முடியாதபடி அவ்வளவு தூரம் அசௌக்கியம் ஏற்பட்டு விடும்!.

கோமளம்:— (செண்பகத்தைக் கூப்பிட்டு அவள் வந்ததும்) என்னடி செண்பகம், நீயுங் கனகமும் இன்று ராஜகுமாரியுடன் பேசிக்கொண்டிருந்தீர்களா. அப்பொழுது அவள் சௌக்கியமாயும் சந்தோஷமாயுமிருந்ததாகக் கனகம் சொல்லுகிறாள். அப்படியானால் இன்று இங்கு அவள் வாராததற்குக் காரணம் யாதாயிருக்கலாமென்று நீ நினைக்கிறாய்?.

செண்பகம்: ஆம் நாங்கள் இன்னிக்கு ராஜகுமாரியுடன் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவள் சதோஷத்துடனிருப்பதுபோல் தோன்றினாளே யொழிய உண்மையில் அப்படியில்லை யென்பதை அவள் அச்சமயம் நடந்து கொண்டதிலிருந்து அறிந்து கொண்டேன்.

கனகம்:— அதை நீ எதிலிருந்து அறிந்து கொண்டாய்?.

செண்பகம்:— அவள் நம்மிடத்தில் பேசிக் கொண்டிருந்தபொழுது அவள் கண் எங்கேயிருந்ததென்று பார்த்தாயா? அடிக்கடி ஜன்னல் வழியாக அரண்மனை வாயிலையே பார்த்துக்கொண்டிருந்தாள். மேலும் வழக்கம்போல் ஒரு விஷயத்தைப்பற்றியுந் தொடர்ச்சியாயும் விரிவாயும் நம்மிடத்தில் பேசவேயில்லை.

இன்னும் வரும்

S. Kasthuri Iyengar
School master.

# ஸமாசாரக் குறிப்பு.

## சாது வேஷம் தரித்து மோசம் செய்த ஓர் மலையாளி.

“மதராஸ்டைம்ஸ்” எழுதுவதாக “இந்துநேசன்” பத்திரிகை எழுதுகிறது:—

பம்பாய் ராஜதானியில் குங்கன்பூர் என்ற ஓர் பெரிய கிராமமுளது அக்கிராமத்தில் நாத்ஜி என்று ஓர் பையனிருந்தான். சற்றேறக்குறைய 13 வருஷங்களுக்கு முன் நாத்ஜி பக்கத்து ஊரில் வசித்துவந்த காஷி என்ற இளம் பெண்ணுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டான். விவாக பருவத்தில் நாத்ஜிக்கு வயது 13; விவாகமானவுடன் சமஸ்கிருதக் கல்வி பயிலும் பொருட்டு நாத்ஜி பம்பாய்க்கு அனுப்பப்பட்டான். சில மாதங்கள் கழிந்த பின்னர் நாத்ஜி பம்பாயைவிட்டு எங்கேயோ ஓடிப்போய்விட்டான். இன்னம் 3 வருஷகால பரியந்தம் தனது வரவை எதிர் பார்க்கவேண்டியதெனத் தாயாருக்கு நாத்ஜி எழுதிவிட்டான். அவனது இளமைப் பருவத்திலேயே தகப்பனார் விண்ணுலகேகினார். 3 வருஷம் 4 வருஷம் 5 வருஷம் இந்தப்படியாக 10 வருஷங்கள் கழிந்தன. நாத்ஜியைப்பற்றிய யாதொரு தகவலும் கிராமத்துக் கெட்டின பாடில்லை. கடைசியாக 1912-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஓர் சாது அக்கிராமம் வந்து சேர்ந்தார். தாம் தான் நாத்ஜி என்று சொன்னார். இனிச் சன்னியாஸ வாழ்க்கையைவிட்டு விலகி முன்போலவே உலக வாழ்க்கைக்கு மீண்டும் வந்து விடுவதாகச் சொல்லிக் கொண்டே தமது சாது உடையை அவர் கழற்றி வைத்தார். அக்கிராமத்திலுள்ள பற்பல குடும்பத்தாரின் நாமதேயங்களும் அவரவர்கள் இன்னின்னார் என்பதும் தமக்குத் தெரியுமெனச் சொன்னார். அவரைக்கண்டவுடன் நாத்ஜியின் அருமைத் தாயாருக்குத் தனது புதல்வனின் முகமே மாறிவிட்டதைப்பற்றி மிக்க ஆச்சரியமுண்டாயிற்று. அதற்கென்ன காரணமெனத் தாயார் அந்த சாதுவைக் கேட்க, அவர், தாம் தக்க ஆகாரமும், பானமுமில்லாமல் ஊர் ஊராய்த் திரிந்து, ஆங்காங்குள்ள கந்த மூலங்களையும், காய்கனிகளையும் புசித்து வந்ததுதான் காரணமெனக் கூறினார். அன்றியும் தாம்தான் நாத்ஜி என்று அந்த சாது ஆணையிட்டும் சொன்னார். அதன் பேரில் அந்த சாது குடும்பத்தில் முன்போல சேர்த்துக் கொள்ளப்பட்டார். அது முதல் அந்த சாது வீட்டிலேயே தங்கிக்கொண்டு சொத்துக்களைப் பாதுகாத்து நிர்வகித்து வந்தார். இஃதிப்படியிருக்க, நாத்ஜியின் மனைவியாகிய காஷி, அந்த சமயம் சூரத்தில் குடியிருந்து கொண்டிருந்தாள். அவ்வூரிலுள்ள “வனித விஷாரம்” என்ற பெண் பாடசாலையில் அவள் சில வருஷங்களாக சம்ஸ்கிருதமும், குஜராத்திப் பாஷையும் படித்துக்கொண்டிருந்தாள். உண்மையான நாத்ஜி தாம்தானென்று சொல்லிக்கொண்டு அந்த சாதுவானவர் குங்கன்பூர் வந்து சேர்ந்த 8 மாதங்களுக்குப் பிறகு

அதாவது, 1913 வருஷம் மே மாதத்தில், காஷியின் தகப்பனருக்கு தகவல் எட்டியது. அதன் பேரில் அவர் தமது புத்திரியாகிய காஷியை புக்ககத்துக்கு (மணமகன் வீடு) அனுப்பினர். 1914-ம் ௵ மே மாதத்தில் மணமகனாகிய நாத்ஜி சாதுவுக்கும் காஷிக்குமாக ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது. பிறகு லக்ஷ்மிராம் நாத்ஜி என்று பெயர் வைத்துக் கொண்ட அந்த சாதுவும், காஷியுமாக மூன்று வருஷமாக உல்லாசமாய்க் காலங் கழித்துக்கொண்டு வந்தனர். இப்படியவர்கள் கழித்து வருகையில் 1915-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் வாஸ்தவமான நாத்ஜி அக்கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். சுயமான நாத்ஜியும் சில காலம் சாதுவாயிருந்தது உண்மையே யாயினும், தாம்தான் சுயமான நாத்ஜி என்பதற்கு அநேக ஆதாரங்கள் மூலமாய் அவன் ரூபித்துக் காட்டினன். காஷியின் மனம் படபடத்தது! கள்ளப்புருஷன் என்று பிற்பாடு தெரிய வந்தது. அந்த சாது அச்சமயம் கிராமத்துக்குச் சென்றிருந்தான். அவனை வழியில் சிலர் மடக்கி, சிற்சில சாக்குப்போக்குகளைச் சொல்லிக் கிராமத்துக்கு அழைத்து வந்தார்கள். கள்ள நாத்ஜியும், சுயமான நாத்ஜியும் நேருக்கு நேராக நிறுத்தி வைக்கப்பட்டார்கள். அப்பொழுது கள்ள நாத்ஜி குற்றத்தை ஒளிக்க வழியில்லாமல் ஒப்புக்கொண்டு விட்டான். உடனே அவ்விடத்திய போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குற்றவாளியை அரெஸ்டு செய்து, அவனை விசாரித்ததில், அவன் பிராம்மணனேயல்ல வென்றும், கள்ளிக்கோட்டை ஜில்லாவைச் சேர்ந்த கிரங்கடாட் என்ற கிராமத்தில் மிக்க தாழ்ந்த ஜாதியில் உதித்தவனென்றும் தெரியவந்தது. அவன் தாய் தகப்பன்மார் இறந்து சில வருஷங்களாகின்றன. அதுமுதல் அந்தப் போக்கிரி சாது வேஷம் பூண்டு ஊர் ஊராய்த் திரிந்து கடைசியாய் குஜராத்துக்கு வந்து சேர்ந்தானும். அவனது வாஸ்தமான பெயர் குஞ்சுன்னி கிஷ்ணனும். அவன் செய்த பித்தலாட்டத்துக்காக, பரோச் நகரத்து செஷன் ஜட்ஜவர்கள், அவனுக்கு 8 வருஷம் கடின சிக்ஷை விதித்தார். மனைவியின் கற்பு அழிந்து போய்விட்டதைக் கண்ட சுயமான நாத்ஜி மிக்க வருத்தங்கொண்டவனாய்த் திரும்பவும் எங்கேயோ ஓடிப்போய் விட்டான். பால் மணமாறாத சிசுவை வைத்துக்கொண்டு பரதவிக்கும் காஷியின் துர்க்கதியைக் குறித்து யார்தான் அனுதாபப் படாமலிருப்பார்கள்! எல்லாம் விதிப்பயனே! "

"இவ்வாறான மோசக்காரர்களிடம் இனியாவது பேதை ஜனங்கள் ஏமாந்து போகாமலிருக்கவேண்டுமென்பதைக் கருதி இங்கு இதை எழுதலானேம்". [ப–ர்]


# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப் போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பராசரஹோரா, ப்ரஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

# உங்கள் ஜாதகபலனைத் தெரிந்துகொள் ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷமாதம் தேய்தி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவருமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வோரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சோல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சோல்லுவது அனுவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

### சார்ஜின் விவரம்.

| | | |
|---|---|---|
| புத்திரபாவத்திற்கு | ... | ரூ. 5-0-0 |
| களத்திரபாவத்திற்கு | ... | ரூ. 3-0-0 |
| தோழில் அல்லது யோகபாவத்திற்கு | | ரூ. 5-0-0 |
| ஆயுர்பாவத்திற்கு | | ரூ. 5-0-0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கோடுக்கவேண்டில் | | ரூ. 25-0-0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கோடுக்கில் | | ரூ. 2-0-0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கோடுக்கில் | | ரூ. 3-0-0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கோடுக்க | | ரூ. 4-0-0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தேரிந்து கோள்ளலாம்.

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.



# பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை.

## பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)
(தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகேம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும் மனோ உற்சாகத்தைத்தரும். 1-சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வப்படை சம்ஹாரன்:—** மேகப்படை, சொரியாசிப்படை, தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முதன்மையான அவுஷதம்.
விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வதந்தரோக நிவாரண பரிமளப்பற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சுரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.
விலை சீசா 1-க்கு அணா 2 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுபராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம், இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்குமிகவும் அற்புதமான சஞ்சீவி
விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள தேவநாந்திதைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேரி ஓங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.
விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. சிலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் பொடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கறப்பான், வெடிப்பு, சரீரவரக்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

விலாசம்:— ☞ பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை தென்னார்க்காடு ஜில்லா.

# க்ஷேமம்!

ஒருவரை யொருவர் சந்திக்கும்போது க்ஷேமலாபத்தை முதலில் விசாரிப்பது வழக்கமாயிருக்கிறது. சிலர் தாங்கள் வியாதியோடிருந்தும் க்ஷேமம் என்று ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஏன் அப்படி ஒப்புக்கொள்ள வேண்டும். உங்கள் சரீரத்தில் எவ்வித மாறுபாடு ஏற்படினும் உடனே உலகப் பிரசித்திப்பெற்ற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகப் படுத்துங்கள். இம்மருந்து முதலாவது ஜீரண சக்தியை விருத்திசெய்கிறது. அநேக வியாதிகளுக்கு காரணமாயுள்ள மலபந்தத்தை நிவர்த்தி செய்கிறது. வெள்ளை வெட்டை முதலிய மேகரோகங்களைக் குணப்படுத்துகிறதுமன்றி தேகத்திற்கு பலத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கிறது.

நீங்கள் எங்கள் காமசாஸ்திர புத்தகத்தைப் பார்த்ததுண்டா? இல்லையாளுல் இன்றைக்கே விலாசத்தைத் தெரிவித்து இனமாகவும் தபாற் செலவில்லாமலும் வாங்கி வாசியுங்கள். இதில் நீதி வாக்கியங்கள், நல்லொழுக்கம், தீர்க்காயுள் முதலிய சிறந்த விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157–158, பிராட்வே மதராஸ்.


OFFICE OF THE REGISTRAR OF ... 23 APR 1916 MADRAS

உ

பரமகுருப்யோநம:


# கான வித்யா ப்ரகாசினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1916-ளு ஏப்ரில்மீ { NO. 10.


## இந்து ஸங்கீதம்

"ஸர்வாஸ்ச்ருயதோதக்தத்
பாகேஷஸ்வரதாம்கத:
ராகஹேதுத்வயைதாஸாம்
ச்ருதிஸம்க்ஞேவஸம்மதா"

(பொருள்) எல்லாச்ருதிகளும் அதற்குரிய ஸ்வரங்களின் பாகங்களே தவிற வேறல்ல. ராகமுண்டாகவேண்டியதற்காக ச்ருதி என்ற காரணப்பேர் கொடுத்தது சாஸ்திர ஸம்மதம்.

"கேசாக்ரவ்யவதாநேண
பஹ்வோபிச்ருதய:ஸ்மிருதா:
வீணாயாம்ச்சததாகாத்ரே
ஸங்கீதக்யானிநாம்மதே"

(பொருள்) வீணையிலும் சரீரத்திலும் தலைமயிரினது இடைப்பாட்டைப்போல் ஸங்கீதஞானிகளால் ச்ருதிகளை அனேகவிதமாகச்சொல்லப்பட்டிருக்கின்றன.

"மத்யேபூர்வோத்தராபத்த
வீணாயாம்காத்ரயேவச்ச
ஷட்ஜமபஞ்சமபாவேன
ச்ருதிர்த்வாவிம்சதிர்ஜகு:"

(பொருள்) நடுவில் முறுக்காணிக்கோலினால் உயர்வும் குறைவுமாகச் செய்துகொள்ளும் வீணையிலும், அப்படியே சரீரத்திலும் ஷட்ஜம, பஞ்சமங்களினது உறுதியினால் ச்ருதிகள் 22 என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

"த்வாவிம்சதிச்ருதீநாம்ச்ச
வ்யவஹாரப்ரஸித்தயே
தாஸாம்நாமாநிவக்ஷ்யேஹம்
நாரதீய்யானுஸாரத:"

(பொருள்) அவ்விருபத்திரண்டு ச்ருதிகளின் பேதங்களை வியவகாரத்தில் உலகப்பிரசித்தியின்பொருட்டு "நாரதீயம்" என்ற நூலை அனுஸரித்துச் சொல்லுகிறேன்.

குறிப்பு:—முன் 22 ச்ருதிகளின் விவரங்களை எழுதியிருப்பதாலும் அதை அனுஸரித்தே இவரும் சொல்வதாலும் இங்கு குறிப்பிடவில்லை.

"ச்ருதிர்வனைகயாச்ருத்யா
யதிஷட்ஜ:ப்ரயோஜதே
ததாததா அநிதாஸித்தி:
ச்ருதய:தா:பவந்தி:"

(பொருள்) ச்ருதிகள் பலவுமின்றி ஒரே ச்ருதி வேண்டுமென்றால் ஷட்ஜஸ்வரத்தை உபயோகித்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது ஸ—வானது எல்லாச்ருதிகளினுடைய ஓசையையும் தன்னுள்ளடங்கப்பெற்றதாகின்றது.

"எவமேவ அனிதாஸித்தி:
ஸர்வத்ருச்ருதிஷ—ஸ்திதா



ஸ்வராஸ்ச்சேத்யதிஜாதோன்
ஏகச்ருத்யாகதம்பவேத்"

(பொருள்) அப்படியானால் இவ்வாறு உள்ளடக்கிக்காட்டுந்தன்மை ஒவ்வொரு ச்ருதியிலுமிருக்கிறது. ஆதலின் ஷட்ஜஸ்வரத்தை வைத்துக் கொள்வதேன்? மற்றோர் ஸ்வரத்தை வைத்துக்கொள்வோமென்றாலோ சகல ஸ்வரங்களுக்கும் முதன்மையாகவும் எல்லா ஸ்வரங்களுக்கும் தாயானது ஷட்ஜமென்ற இதன் பேரினாலேயே இதன் பொருள் விளங்குகிறது. இதைவிட்டு தனிச்ருதியான வேறொரு ஸ்வரத்தை வைத்துக்கொண்டால் எப்படி மொத்த ஸ்வரங்களும் அடங்கும்?

"ஸத்திம்ஷட்ஜஸ்ச்சதுர்த்தாஸ்யான்
ம்ருதுத்வாதிவிசேஷணை:
தத்தஜ்ஜாதீவிசிஷ்டத்வாத்
கானீயாஸித்திரம்ஜஸா"

(பொருள்) மேலும் ஷட்ஜமானது நான்கு முகங்களையும் ம்ருதத்வம் முதலிய உயர்தரமான நான்கு ஜாதிகளையுமுடையது. அந்தந்த ஜாதி விசேஷத்தினாலே மற்றைய ஜாதிகளும் உள்ளடங்குகின்றன. இதைவிட்டு மற்றொரு இடத்தில் எப்படி இந்த விசேஷமுண்டாகும்?

"அவச்சேதகபேதேன
கார்யதாயா: ப்ரத: க்ருத:
த்ருணாரணிமணிந்யாயாத்
காரணத்வம்பதோதிஹ:"

(பொருள்) ஆதலின் அதனுகள் பிளவுபட்ட காரணத்தினால் அதனின் கார்யமும் வெவ்வேறாயிருக்கின்றன. "த்ருணாரணிமணி" நியாயத்தினால் ஸ—வை ச்ருதி வைத்துக்கொள்ள காரணம்யேற்பட்டது.

குறிப்பு:—ஜாதிகளின் விவரத்தை முன் நவம்பர்மாஸத்தில் எழுதியிருப்பதை அனுஸரித்தே இவரும் சொல்வதால் இங்கு குறிப்பிடவில்லை.

ஸ்வரஸ்தானை: க்ரியாபேதை:
விசித்ரம்ஜாயதே ஹ—

ஜாதிபேதஸமவ்யாப்யம்

யத்தத்க்ஞேயம்மனீஷிபி:"

(பொருள்) ஸ்வரஸ்தானங்களில் அந்தந்த ஸ்வரங்களுக்குச் செய்கிற கிரியா விசேஷங்களினால் அநேக விசித்திரமான வேலைகள் இருக்கின்றன. ஜாதிபேதங்களின் உண்மையை அறியவேண்டியதுதான் புத்திசாலிகளின் கார்யமாக இருக்கின்றது.

"இக்ஷு—க்ஷீரகதம்யத்வத்

மாதுர்யம்சோச்யதேபுதை:

தத்வச்ருதிகதாஜாதி:

வாச்சாகோவாவதிஷ்யதி"

(பொருள்) கரும்பின் சாறிலும், ஆவின்பாலிலுமுள்ள மதுரமானது ச்ருதியிலிருக்கிறது. அந்த மாதுரியத்தை தானே அநுபவத்தால் அறியவேண்டுமேயல்லாது வாயினால் யாவராலேதான் சொல்லமுடியும்?

"ச்ரோத்ருப்ரத்யக்ஷஸித்தித்வாத்

பின்னச்ருதிஸமாச்ரிதா:

தத்வச்ருதிகதாஜாதி:

"ன்வர்த்தநாமகோபவேத்"

(பொரு... காதில் கேழ்க்கும் ஓசைகளின் வேறுபாட்டால் வெவ்வேறாக ச்ருதிக... சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தந்த ச்ருதிகளைச் சார்ந்த ஜாதிகளோ... அதன்பேரினாலேயே பொருள் விளங்குகின்றன.

"ஏவம்ஸ... தஸ்வரஸ்தானம்

ச்ருதீனாஞ்... ாதிநிர்ணய:"

(பொருள்) இ... வ்வாறு ச்ருதிகளும் ஜாதிகளுமாகிய ஏழு ஸ்வரங்களும் அறியத்தக்க... ந்தது.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

### உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப=பல்லவி.
2. அ=அனுபல்லவி.
3. சர=சரணம்.
4. ~~~~=துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. *=ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. அ=தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | =தாளதின் லகு அடையாளம்.
9. ⌒=கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு=சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், சுத்தநிஷாதம்.

    ச=சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.

    சா=சாதாரண காந்தாரம்.

    பி=பிரதிமத்திமம்.

    ஷ=ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.

    கை=கைசிகிநிஷாதம்.

    அ=அந்தராகாந்தாரம்.

    கா=காகலிநிஷாதம்.
11. ஆ=ஆரோஹணம்.

    அவ=அவரோஹணம்.
12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை ப ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரித காலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



## பட்டணம் சுப்பிரமணிய அய்யரவர்களின் கீர்த்தனை.

முகாரி— ஆதிதாளம்— ஒருகளைச்சவுக்கம்

லகுத்தட்டிற்குப்பின் முக்கால் இடத்தில் எடுப்பு.

ஆ = ச, ச—ரி, சு—ம, ப, ச—த,

அவ = ச, சை—நி, சு—த, ப, சு—ம, சா—க, ச—ரி,

ப = எப்புடுக்ருபாகல்குனோ
இனகுலதிலகா

அ = எப்புடைனநீகண்ட்ல—ஜூசிதேசாலுநனி
எஞ்சிநின்னேச்சால—நம்மியுன்னநாபைநீகு =

சா = தல்லிதண்றியுநீவே—குருதெய்வமுனு நீவே
தலச்சிஎவரைன—ப்ரோச்சுவனுச்சு
உல்லமுநந்துச்சால—நம்மிககலவாடை
யுண்டுட்டெ—ருகவேமி—வெங்கடேச்வராநாபைநீகு =

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| ப= ******பாதாபாமா**—ஸா**ரீ **ரீகாஸா ** | ******ரீரீமாமா** | பாதாதபபமபா****** |
| ******எப்புடேக்ரு**—பா**கல்**குஉணே** | ******இனகுல** | தி—ல—கா****** |
| (1) ரீமபா*— டை | டை | பாதாதபபம—பாதாபதக்ா |
| நீ———டெகப்புடி டை | டை | தி—ல———கா——— |
| (2) பதச்ா**—ச்ாநீதாபா **—மாபதபாதபமகரீ**கரிஸா ** | டை | பாதாதபபம—பாதாச்ரிக்ரி |
| நீ——**—டெகப்புடேக்ரு**—பா——க—ல் **குஉணே** | டை | தி—ல———கா——— |
| (3) ச்ா ****— டை | டை | டை |
| நீ ****— டை | டை | டை |
| (4) ச்ரிக்ரிச்ா— டை | ****—சநிதாசாரீமா** | மகரிச ரிமபத—மபதச்பதச்ரி |
| நீ——— டை | ****— இ—னகுல** | அ—தி———ல—க——— |
| ம்ா*க்ரிச்=ச்ாநீதாபா **= | | |
| நீ*——=டெகப்புடேக்ரு**= | | |
| அ= ******மாபாதா **ச்ாரீ******—ரீம்ா**க்ா | ரீ * * * * ரீ **க்ாச்ா** | ச்ாரிக்ரிக்ச்ா****நிதாச்ா** |
| ******எப்புடை**னநீ******—கண்டல**— | அ ****ஜா**ஜிதே ** | ஸா———லு****ந——னி** |
| (1) ******மாபாதா **ச்ாரீ******—ரீம்ரிம்பாம் | க்ா*ரிரீ— ரீ **க்ாஸா** | ச்ாரிக்ரீக்ச்******நீ **தா |
| ******எப்புடை**னநீ******—கண்டல— | ———ஜா**ஜிதே** | ஸா———லு*****உ** ந |
| பா****மாகாரீமா**—பாதாதபபமபா**பா** | பதபதபம—மாகாரீமா** | பாதாதபபம—பா**பதபத |
| னி****எஞ்சிகி **—ன்னே——ஸா**ல ** | அ———எஞ்சிகி** | ன்னே———ஸா**ல—— |
| (1) பதபதபம—மாகாரீமா**—பாதாதபபமபா*தச்ா** | **ச்நிதப— டை | பாதாதபபம—பாதா ச்ரிக்ரி |
| அ——— எஞ்சிகி**—ன்னே——ஸா*—ல** | **அ——— டை | ன்னே———ஸா——ல—— |
| (2) க்ாசநிதப—மாகாரீமா**—பாதாதபபம—பாதாக்ாரீ | ம்ா****—ரீ**க்ாச்ா** | ச்ரிக்ரி—தச்ரிச்நீதாபதச்ரி |
| ஆ———எஞ்சிகி **—ன்னே———ஸால— | ஆ****—ந**ம்மிபு** | ன்ன————நா—டை— |
| ம்ா*க்ரிச்=ச்ாநீதாபா **= | | |
| நீ *——=டெகப்புடேக்ரு= | | |

| லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|
| சா= ******பா **தாபா **—பாமாமாகாரீகாஸா ** | ****** ரீரீமா **மா | பாதாதபபம—பா**பா ** |
| ******தல்**விதண்**—றி—பு—நீ—வே** | ******குருதை**வ | மு——லு———நீ **வே** |
| ******மாநீதாபா **—மாதாபாமாகாரீகாரீ | ஸா**நீதாசாரீமா ** | பாதாதபபம—தா**பா ** |
| ******தலச்சின **—வ—ரை———— | ண**ப்ரோ—ச்சு ** | வ—னு———உ**ச்சு** |
| (அநுபல்லவி மாதரி) உல்லமுநந்துச்சால | நம்மிக | கலவாடை |
| யுண்டுடெருகவேமி | வெம்கடே | ச்வரநாபை |
| நீ=டெகப்புடேக்ருபா= | | |

## பல்லவிக்கு கற்பனஸ்வரம்.

| | | |
|---|---|---|
| (1) ******எப்புடேக்ருபாகல்குணே | ******தா—******ஸா | ******ரீ——******மா |
| (2) ****** = டை | ******நீ——******தா | ******பா——******மா |
| (3) ****** = டை | ******பா—**தா**ஸா | **ரீ **தா—**ஸா**ரீ |
| (4) **மா** = டை | ******தா—**பாமாகா | **ரீஸாஸா—**நீதாஸா |
| (5) **ரீமா = டை | ******தா—பாநீதாபா | மாகாரீஸா—ரிஸாநீதா |
| (6) ஸாரீமா = டை | ******மா—காரீஸாபா | மாகாரீநீ—தாபாச்ரநீ |
| (7) தாபாமா = டை | ******தப—*மகரிபமகரி | சமகரிசநிதச—*பதச்ரிமபரி |
| (8) தபமகரிம = டை | ******பா—தமபமகரிமா | பரிமகரிசரீ——கசகரிசநிதா |
| (9) சபதசரிம = டை | ******ச்நி—தபநிதபமதப | மகமகரிமக——ரிசகரிசநிரிச |
| (10) நிதநசரிம= டை | ******கா—ரிசகரிசநிதத | ஸா****ரிச——நிதபதசதசரி |
| மா*மகரிசரி—பா*நிதமபதச்ா*ச்நிதபதச்ரிம்க்ாரிச்நி | தச்தக்ாரிச்ரி—தரிச்நிதபமப | தச்ரிபதச்மபத—ரிமபமநிதப |
| மகரிசரிம=எப்புடேக்ருபா= | | |

(பத) ப=எப்புடு=எப்பொழுது
க்ருபா=கிருபை
கல்குனோ=உண்டாகுமோ?
இனகுலதிலகா=சூரியவம்சத்திற்கு திலகம்போன்றவனே!

அ=எப்புடைன=எப்பொழுதாகிலும்
நீ=உன்னுடைய
கண்ட்ல=கண்ணால்
ஜூச்சிதே=பார்ப்பதே
சாலுனு=போதுமானது
அனி=என்று
எஞ்சி=நினைத்து
நின்னே=உன்னையே
சால=மிகவும்
நம்மியுன்ன=நம்பியிருக்கிற
நாபை=என்மீது
நீகு=உனக்கு

சர=தல்லிதண்ட்ரியுநீவே=தாய் தகப்பனும் நீயே
குருதெய்வமுலுநீவே=குரு, தைவமும் நீயே (என்று)
தலச்சி=கருதிய
எவரைன=யாரையாகிலும்
ப்ரோச்சு அனுச்சு=காப்பாற்றுமற் தள்ளுபடி செய்திருக்கி
றாயா?
உல்லமுனந்து=உள்ளத்தினிடத்தில்
ச்சால=மிகவும்
நம்மிககலவாடை=நம்பிக்கையுடையவனை
உண்டெட்ட=இருக்க
எருகவேமி=(இன்னும் உனக்கு) தெரியவேண்டியதென்ன?
வெங்கடேச்வரா=வெங்கடேச்வரனே!
நாபை=என்மீது
நீகு=உனக்கு



(பொழி). சூரியவம்சத்திற்குத் திலகம்போன்றவனே! வெங்கடேச்வரனே! எப்பொழுதாகிலும் உன்னுடைய கண்ணால் பார்ப்பதே போதுமானதென்று நினைத்து உன்னையே மிகவும் நம்பியிருக்கிற என்மீது உனக்கு எப்பொழுது கிருபையுண்டாகுமோ? தாய், தகப்பன், குரு, தைவம் முதலானவர்களெல்லாம் நீயே யென்று கருதிய யாரையாகிலும் நீ காப்பாற்றுமற் தள்ளுபடி செய்ததுண்டா? நான் உன்னிடத்தில் மிகவும் நம்பிக்கையுடையவனுபிருக்க இன்னும் என்னைப்பற்றி உனக்குத்தெரிய வேண்டியவை யாவை?

பலஹம்ஸராகம்—சதுர்ச்ரரூபகதாளம்—கால்க்களைச்சவுக்கம்.

த்ருதம் ஸமயிடத்தில் எடுப்பு.

ஆ=ச, ச—ரி, சு—ம, ப, ச—த,

அவ=ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப=என்னடுதயவச்சுனோ
இனகுலதிலகா

அ=பன்னகசயனுநாது
பரிதாபமுலனுதீர்ச்சுட=

சர=கரிமொரலிடகானெவச்சி
கனிகாமுதோ—ப்ரோவலேதா
தரபடி ஹரியனி பிலச்சின
த்ரௌபதியனிப்ரோவலேதா
சிரஜீவித்யாதிஸகல
வரமுலொஸகுவாடவனுச்சு
சரணமுலனு நெரநம்மிதி
வரதவெங்கடேச்வர நீ=

| 0. | \| |
|---|---|
| ப=தாசா | தாசரீமா |
| எ— | ன்றுடுதய |
| பா** | தா பா—நிதப |
| வ** | ச்சுஜே—ஓ—— |
| மாரீ | மாகா—சாரீ |
| இன | குல—தில |
| சா ** | ** சநிநிதநப |
| கா ** | **———— |
| அ=**[illegible] | [illegible]பாமாபா |
| ** ப | ன்னகசய |
| [illegible]ாச்ா | தாச்ாச்ா |
| ஞு— | ————து |
| (1) [illegible]ாச்ா | தாச்ரிரீ |
| ஞு— | ———து |
| (2) [illegible]ாச்ா | [illegible]ாச்ாரீம்ா |
| ஞு— | ————து |
| ம்ரிம்க் | ச்ா ** நிதபா |
| ப—ரி— | [illegible]ா ** ப—மு |
| மரிமக | சா ** நிதபா = தாசா = |
| ல—ஹு— | தீர் ** ச்சு—ட = என் = |
| சர=பாமா | பாரீமாகா |
| க ரி | மொரவிட |
| சரிமரி | சாரீ ** ரீ |
| க—— | னெவ**ச்சி |
| தாசா | தாசாரீமா |
| க ளி | சரமுதோ |
| சரிமரி | சாரீசா ** |
| ப்ரோ— | வலேதா** |
| [illegible]ாபா | ம ப த ப ப ம ரீ |
| [illegible] ர | ப—டி—ஹ—ரி |
| சரிமரி | தசரிமபாதா |
| ய—நி— | பி—ல—சின |
| பதச்நி | நி த த ப்ப ம ரீ |
| த்ரொ— | ப—தி—ய—நி |
| சரிமரி | ரி ச ரீ ச ா** |
| ப்ரோ— | வ—லேதா** |
| பபமா. | பா ரீ ம ச ரி ம |
| சிரஜீ | வித்யாதிஸகல |
| சரிமப | [illegible]தபம— ப த ச் ச் |
| வரமுலொ | ஸகுவ—டவனுச்சு |
| தச்ரிம் | க் ச் ச் ச் நீ த ப |
| சரணமு | லனுமெரகம்யிதி |
| பதமப | *ரி ம ரி ம க சா = தாசா = |
| வரதவெங் | *கடெஎச்வாரீ = என் = |

# இராக லக்ஷணம்.

144-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## 23. பேகடராகம்–29–வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ=ச, ச–ரி, அ–க, சு–ம, ப, ச–த, கா–நி,

அவ=ச, கா–நி, ச–த, ப, சு–ம, அ–க, ச–ரி,

### இலக்கணம்.

"ரிவர்ஜ்யாரோஹஸம்பூர்ணு

பேகடாஸார்வகாலிகா"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) பேகடா ஸம்பூர்ணராகம், ஆரோஹணத்தில் ரிஷபத்தை வர்ஜிக்கவேண்டும். எக்காலத்தும் பாடத்தக்கது.

குறிப்பு:— இந்த ராகத்திற்கு ச்லோகத்தில் ஆரோஹணத்தில் ரி–யை வர்ஜிக்கவேண்டுமென்றும் ஆனல் ஸம்பூர்ண ராகமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நமது முன்னேர்களான மஹா வித்வான்களால் இந்த ராகத்தில் பாடப்பட்டிருக்கும் வர்ணங்கள், கீர்த்தனைகளில் ஆரோஹணத்தில் "சகரிகமபதபசா" யென்றும் ரி–யை வக்ரமாகவும், நி–யைத்தள்ளுபடி செய்தும், அவரோஹணத்தில் "சநிதபமகரிசா" யென்று ஸம்பூர்ணமாகவும் ஸ்வரஸஞ்சாரங்கள் செய்திருக்கிறார்கள். தற்காலமுள்ள வித்வான்களும் இதை அனுஸரித்தே பாடிவருவதால் இதனடியிற்கண்ட இராகஸஞ்சாரத்திலும் அனுபத்தைத்தழுவியே எழுதலாயிற்று.

### இராகஸஞ்சாரம்.

(1) சகரிகமா******பதபச்ா****ச்நீ****தப–மதபமா****கரிசா****–

(2) கரீகமா******–பாதபபமமா****–மகரிகமா******–பதபச்ா****–

பதபநீ**** தபமா****கரிசா****–

(3) மகமரிகா****மா****பதாப–மபதபச்நிரிச்ா****–க்ரிச்நிச்ரிச்ா*ரி–
நிநிதபபதநீ**தப–கமபதாப–ரிகமபதாப–சகரிகமபதபநீ****தப–
மதபமகா*மரீ****கமபமா****கரிசா****–

(4) பமதபச்ா****–ச்நிரி****–க்மா****க்ரிச்–நிச்க்ரிச்நிச்–பதபச்நிரி–
கபமதபச்–சகரிகமப–தநிநிதபம–தபமகா**மரிகமபத–கமதபமகமகரிச–
நிநிதபச்ா******–

(5) மதாப்மபமகமரிகமா****பதபச்ா****–ச்நிச்ரிச்—ச்ாரிச்ச்நிநீ****–
தப—ச்நிச்க்ாரி க்ாம்ப்மாப்க்ரிச்–நீ****தப–பதபரி****ச்நீ****தப–
பதபச்ா*ரி–மபதபச்ா*ரி–கமபதபச்ா*ரி–நிநிதப–பதநிநிதப–
மபகரிசா****சநிகரிகா****மா****நீ****தப–மா****கரிசா******–

## 24. எருகல காம்போஜி ராகம்—28-வது மேளகர்த்தா ராகத்தில் ஜன்யம்.

ஆ = ச, ச–ரி, சு–ம, ப, ச–த,

அவ = ச, கை–நி, ச–த, ப, சு–ம, அ–க, ச–ரி

### இலக்கணம்

"ஆரோஹேகநிவர்ஜ்யஸ்யாத்
ஸக்ரஹஸ்ஸார்வகாலிக:
ஸ்யாத்தெருகலகாம்போஜீ
ராகஸ்யாஹுர்மஹாத்மபி:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) எருகல காம்போஜி ராகத்திற்கு ஆரோஹணத்தில் காந்தார, நிஷாதமாகிய இரண்டு ஸ்வரங்களையும் வர்ஜிக்கவேண்டு மென்றும், இது ஷட்ஜக்ரஹத்தைச் சேர்ந்ததென்றும், எல்லாக்காலங்களிலும் பாடத்தகுந்த தென்றும் மஹாத்மாக்களால் சொல்லப்படுகிறது.

### இராக ஸஞ்சாரம்.

(1) சா****ரிமபதச்ா****நிதப–மபதபா****மகரிரீ****கரிசா****–

(2) சரிமா****மா****—மகசரிமபா****மா**** பாதபபம–



மபதா**தா**–தாநிததபபா****–பா**–பமபதச்ா****–
ச்நிதமபதபா****மகரிரீ****–சரிசரி**பமகா*ரி–சாரிகரி**கசா**நிபதா**–
சா****–

(3) மா**மகச–ரிமபா**பமகச–ரிமபதா****தபமகச–ரிமபத்சா****–
ச்நிதபநிதப–மபநிதாப–மகரிரீ**–சரிசரிபமகரீ**–தசதசரிமா*க–
ரிகரிரீ****–தசரிமபதாப–மகரிரீ–சரிதபாமகரிரீ****–சரிசரிபமகசா****–
நிபதா**சா******–

(4) பமகச–தபமகச–நிதபமகச–ச்நிதபமகச–ச்ா**ச்நிதபதபாமகச–பதபதசத-
சரிச–ரிமகமபம–பதபதரிச்க்ரிச்நித–மபநிதாபமக–ரிகரீ****–
சரிமபதா****தபமகரீ****–சரிமகரீ****சரிகசரிசா****நிபதபதா****–
ரிசா******–

(5) மபதா**தா**–தாநிததா****–நிதபா**பா**–பமபதாப–பாதபபமமா**–
மா**மகசரிமபா**டா**–பமதா**தா**–ச்தச்ாரிச்நீ**நிதா**–
தாநிததநீ**– நிதபா**–பமபதபதச்ா****–ச்ாரிச்நீ**நிதா**–
பதச்ரிச்ரிம்க்ாரிரீ–ச்ரிப்ம்க்ா**ரி–ச்தச்ரிக்–ச்ாரிக்ரிக்ச்ா**ச்நித–
மபதரிச்ா****ச்நித–மபதபா****மகரிரீ****–தசதசரிகசரீ****–பமக–
சாரிகரீக சா****நிபதா****சா******–

குறிப்பு:— முன் காம்போஜி ராகத்திற்கு சொல்லப்பட்டபடி இந்த ராகத்திற்கும் ஆரோஹணத்தில் ச்நிப—என்று பாடும்பொழுது காகலி நிஷாதத்தையும், ச்நிதப—என்று பாடும்பொழுது கைசிகி நிஷாதத்தையும் உபயோகப்படுத்த வேண்டும்.

## 25. மோஹனராகம்—28—வது மேள்கர்த்தாவில் ஜன்யம்.

ஆ = ச, ச–ரி, அ–க, ப, ச–த,

அவ = ச, ச–த, ப, அ–க, ச–ரி,

### இலக்கணம்.

"ஔடவோமோஹனோராக
ஸ்ஸக்ரஹஸ்ஸார்வகாலிக:"

(சதுர்தண்டிப்ரகாசிகா).

*(இ—ள்) மோஹனராகம் ஔடவம் அதாவது ஐந்து ஸ்வரங்களையுடையது ஷட்ஜக்ரஹம், எல்லாக்காலங்களிலும் பாடத்தக்கது.*

இராக ஸஞ்சாரம்

(1) *சாரிகா**ரி–கபதச்ர****–ச்தா****பகா****ரி–சரிகபகரிசா******–*

(2) *கரிகா**கா**–காபககரிரீ****ரிகா****–கரிசா****– சாரிகரீகசா**ரிசதா**–*
*சரிகா**ரி–கபதச்ர****–கதபதா**பகரிரீ**சரிகப–ரி–கா**ரிசா******–*

(3) *பகபரிகபா**பா**–பாதபபககா****–கரிகபதா**தா**– பாதச்தச்–*
*தாச்பதச்ர**ச்ர**சாரீச்ச்ததா****ப–கபதபா**தபகா**ரி–சரிகரிகபகா**ரி–*
*சரிகபகா**ரி–தசரிகபகா**ரி–பதசரிகபகா**ரி–சாரிகரிகா**ரி*
*சரிசா****ரிதச–பதகரிசா******–*

(4) *கதபகரிசதசரிகா**கா**–ரிகபா**பா**பகதா**தா**–தபச்ா**ச்ா**–*
*ச்தரீ**ரீ**ரீச்க்ா**க்ரீச்–தபரீ**ரீச்த–பகதா**தபக–கரிபா**பகரி–*
*சதகா**கரிச–தபசத–ரிசகரி–பகதப–ச்தக்ரீ–க்ச்ா*ரீ–தாச்பாதகாப–*
*ரீகசாரி–தாசபதசரிகபகா****ரி– சாரிகரீகசா****–*

(5) *பகரிச–தபகரிச–ச்தபகரிச–ரீச்தபகரிச–க்ரீச்தபகரிச–தசரிகப–*
*சரிகபதச்–கபதச்ரீ–பதச்ரீக்–ப்க்ரீச்–க்ரீச்த–ரீச்தப–ச்தபக–தபகரி–*
*பகரிச–சதரிசகரிபகதபச்தரீச்க்ரீ–க்ப்க்ா**ரீச்தரீச்ரீ**ச்தப–கபதச்ா**–*
*ச்தப–கதபதா****ப கரி–சரீகபகா****ரி–*
*சாரிகரீகசா****ரி–தசபதகரீ****சா******–*

இன்னும்வரும்

பத்திராதிபர்.

# நீதி

## ச்ருங்காரசதகம்.

20-வது பக்கத்தின் தோடர்ச்சி.

(இ——ள்) மாதர்கள் பரபுருஷனுடன் பேசுகின்றனர்; பிறரை விலாஸத்துடன் பார்க்கின்றனர்; மனதில் பரபுருஷனைச் சிந்திக்கின்றனர் ஆனதால் மாதர்களுக்கு எப்பொழுதுமுள்ள நாயகன் யார்?

*அபஸாஸகேதூராதஸ்மாத்கடாக்ஷவிஷாநலாத்*
*ப்ரகிருதிவிஷமாத்யோஷித்ஸர்ப்பாத்விலாஸபணாப்ருத:*
*இதரபணிநாதஷ்ட: ச்ச்யச்சிகித்ஸிதுமௌஷதை*
*ச்சதுரவநிதாபோகிக்ரஸ்தம்த்யஜந்திஹிமந்த்ரிண:* (51)

(இ——ள்) ஏ! நண்ப! கடைக்கண்பார்வைகளாகிற விஷாக்கினிஜ் வாலைகளையுடையதும், இயற்கையிலேயே வக்கிரமுள்ளதும், விலாஸங்களாகிற படங்களையுடையதுமான மாதராகிற மலைப்பாம்பைவிட்டு நெடுந்தூரம் விலகிவிடு; ஏனெனில், மற்ற சாதாரணப் பாம்புகளால் கடிக்கப்பட்டால் மூலிகை, மந்திரம் முதலியவைகளால் பரிஹாரஞ் செய்யலாம்; ஸாமர்த்தியமுள்ள ஸ்திரீயாகிற பாம்பால் கடிபட்டவனை மாந்திரிகர்களும் வைத்தியர்களும் கைவிட்டு விடுகின்றனர். (இதனால் ஸ்திரீகளின் வார்த்தைகளால் மயங்கியவனைத் திருத்துதல் முடியாதென்பது கருத்து)

*விஸ்தாரிதம்மகரகேதநதீவரேண*
*ஸ்திரீஸம்ஞ்ஞிதம்படிசமத்ரபவாம்புராசௌ*
*யேநாசிராத்ததராமிஷலோலமர்த்ய*
*மத்ஸ்யாந்விக்ருஷ்யவிபசத்யநுராகவஹ்நௌ* (52)

(இ—ள்) மன்மதனாகிற வேடன், இப்பிறவிக்கடலில் ஸ்திரீ யென்னும் வலையை வீசி, ஸ்திரீயின் அதரமாகிற மாம்ஸத்தில் விருப்

பமுள்ள மனிதர்களாகிற மீன்களைத் தாமதமின்றி இழுத்து அநுராக மாகிற தீயில் நன்கு வேகவைக்கிறான்.

காமிநீகாயகாந்தாரேகுசபர்வததுர்கமே
மாஸஞ்சரமந: பாந்த தத்ராஸ்தேஸ்மரதஸ்கர: (53)

(இ—ள்) ஓ! மனதென்னும் பாட்டைசாரியே! கொங்கைகளென்னும் மலைகளால் நுழைய முடியாத மாதர்களின் உடலென்னுங் காட்டில் சஞ்சரிக்காதே; ஏனெனில் அங்கு மன்மதனென்னுங் கள்வன் மறைந்திருக்கிறான் (அங்கு சென்றால் மனதைக் கொள்ளை கொண்டு விடுவனென்பது கருத்து)

வ்யாதீர்க்கேணசலேநவக்ரகதிநாதேஜஸ்விநாபோகிநா
நீலாப்ஜத்யுதிநாஹிநாபரமஹம்தஷ்டோநதச்சக்ஷுஷா
தஷ்டே: ஸந்திசிகித்ஸகாதிசிதிசிப்ராயேணதர்மார்த்திநோ
முக்தாக்ஷீக்ஷணவீக்ஷி தஸ்யநஹிமேவைத்யோநசாப்யௌஷ
[தம் (54)

(இ——ள்) மிகவும் நீளமானதும், சலிக்கின்றதும், கோணலாய்ச் செல்லு மியல்புடையதும், பலமுள்ளதும், படமுள்ளதும், கருநீதல் மலர் போல் கறுத்த நிறமுடையதுமானபாம்பு என்னை நன்றாய்க் கடித்து விட்டது; ஆனால் காது வரை நீண்டதும், சலிக்கின்றதும், கோணலாய் ஸஞ்சரிக்கின்றதும், பிரகாசமுள்ளதும், விசாலமானதும், கருநீதல் மலர்போன்றதுமான ஸ்திரீயின் கடைக் கண்ணால் கடிக்கப்படவில்லை. வைத்தியர்கள், பரோபகாரத்தையே பிரயோஜனமாகவுடையவர்களாய் திசைதோறும் மிகுதியாயிருக்கின்றனர்; ஆனால் அழகான விழிகளையுடைய மாதரின் கடைக் கண்ணால் கணப்பொழுது கடிபட்ட எனக்கு வைத்தியனுமில்லை; மருந்துமில்லை.

இஹஹிமதுரகீதம்ந்ருத்தமேதத்ரஸோயம்
ஸ்புரதிபரிமளோஸௌஸ்பர்சஏஷஸ்தநாநாம்



இதிஹதபரமார்த்தைரிந்திரியைர்ப்ராம்யமாண:
ஸ்வஹிதகரணதூர்த்தை: பஞ்சபிர்வஞ்சிதோஸ்மி (55)

(இ—ள்) அந்தோ! இத்தருணிகளிடமே செவிகளுக்கின்ப மூட்டுங்கானமிருக்கின்றது; இவ்வாறே இவர்களிடமே கண்களுக் கானந்த மளிக்கும் நாட்டியம் பிரகாசிக்கின்றது; நாவுக்குத் திருப்தியைக் கொடுக்கும் அதராம்ருதமும் இங்குதானிருக்கின்றது; க்ராணேந்திரத்தைத் திருப்தி செய்விக்கும் சுகந்தமுமிங்குதானிருக்கின்றது; மெய்க்குமின்ப மூட்டும் கொங்கைகளின் ஸ்பர்சமுமிங்கு பிரகாசிக்கின்றது; என்று உண்மையுணராதவைகளும், ஆத்மாவிற்கு ஹிதத்தைச் செய்வதில் மோசஞ் செய்தவைகளுமான சுரோத்திரம், சட்சு, இரசனை, கிராணம் துவக்குமென்னும் ஐந்து இந்திரியங்களாலும் வஞ்சிக்கப்பட்டேன்.

நகம்யோமந்த்ராணாம்நசபவதிபேஷஜ்யவிஷயோ
நசாபிப்ரத்வம்ஸம்வ்ரஜதிவிவிதை:சாந்திகசதை:
ப்ரமாவேசாதங்கேகமபிவிததத்பங்கமஸக்ரு
த்ஸ்மராபஸ்மாரோயம்ப்ரமயதித்ருசம்கூர்ணயதிச (56)

(இ—ள்) இது மந்திரங்களாலும் நிவர்த்திக்கமுடியவில்லை; வைத்தியம்செய்தும் தீர்க்கமுடியவில்லை; பலவிதமான சாந்திகர்மாக்களாலும் நாசமடைகிறதில்லை; ஆனால் மோஹத்தையுண்டாக்குவதால் சரீரத்தில் சொல்லமுடியாத ஜாட்யத்தை அடிக்கடிசெய்யும் மன்மதன் உண்டாக்கிய மோகமென்னும் அபஸ்மாரரோகமானது எனது கண்ணைச்சுழற்றுகின்றது; சக்கிரம்போல் சுற்றச்செய்கின்றது.

ஜாத்யந்தாயசதுர்முகாயசஜராஜீர்ணாகிலாங்காயச
க்ராமீணாயதுஷ்குலாயசகலத்குஷ்டாபிபூதாயச
யச்சந்தீஷுமனோஹரம்நிஜவபுர்லக்ஷ்மீலவச்ரத்தயா
பண்யஸ்திரீஷுவிவேககல்பலதிகாசஸ்திரீஷுராஜ்யேதக:(57)

இ—ள்). பிறந்ததுமுதல் பொட்டையான கண்களையுடையவனுக்கும், துர்க்கந்தம் நிறைந்த முகமுடையவனுக்கும், மூப்பால் தனது சக்தியையிழந்து தளர்ந்த ஸர்வாவயவங்களையுடையவனுக்கும், குலகோத்திரந்

தெரியாத கிராமாந்திரமிருந்து வந்தவனுக்கும், தீயகுலத்திலுதித்தவனுக்கும், பெருகியகுஷ்டநோயால் தீண்டத்தகாதவனுக்கும், அற்பப்பொருளிலாசையால் மிகவும் மனோகரமான தனது சரீரத்தைக்கொடுப்பவர்களும், விவேகமென்னுங் கற்பகக்கொடிக்குக் கத்திபோன்றவர்களுமான விலைமாதர்களிடம் எவன் ஆசை வைப்பன்? (ஒருவனும் வைக்கமாட்டானென்பது கருத்து).

வேச்யாஸௌமதநஜ்வாலாரூபேந்தநவிவர்த்திதா
காமிபிர்யத்ர ஹூயந்தேயௌவநாநிதநாநிச (58)

(இ—ள்) இவ்விலைமாதர், ஸௌந்தரியமென்னும் ஸமித்துகளால் விர்த்திசெய்யப்பட்ட மன்மதத்தீயாகும்; ஏனெனில் மன்மதத்தீயாகிய விலைமாதரிடம் சிற்றின்பப்பற்றுள்ளவர்கள், புதியவயதுகளையும், பொருளையும், ஹோமஞ்செய்கின்றனர்.

கச்சும்பதிகுலபுருஷோவேச்யாதரபல்லவம்மநோஜ்ஞமபி
சாரபடசோரசேடகவிடநடநிஷ்டீவசராவம் (59)

இ—ள்) நற்குலத்திலுதித்து, நீதி, ஆசாரம், தர்மமிவற்றை நன்குணர்ந்த எந்தபுருஷன், அழகாயிருந்தாலும் விலைமாதரின் தளிர்போன்ற அதரத்தைப் பானஞ்செய்வன்; ஏனெனில் அது சாரர்கள், வீரர்கள், சோரர்கள், ஸ்திரீபுருஷர்களுக்குத் தூதுசெல்பவர்கள், விடர்கள் நடர்கள், ஆகிய கடையர்களான புருஷர்களுக்கு எச்சில்துப்பும் வாணாயாயிருக்கிறது.

மதுதிஷ்டதிவாசியோஷிதாம்
ஹ்ருதிஹாலாஹலமேவகேவலம்
அதஏவநிபீயதேதரோ
ஹ்ருதயம்முஷ்டிபிரேவதாட்யதே (60)

(இ—ள்) மாதர்களின் வார்த்தைகளில் தேனிருக்கின்றது; ஹ்ருதயத்தில் முக்கியமாய் காளகூட விஷமிருக்கின்றது; இதனால்தான் அதரம் பானஞ் செய்யப்படுகின்றது; ஹ்ருதயம் (கொங்கை) முஷ்டிகளால் பிடிக்கப்படுகிறது.



## 4. ஆசையொழிந்தவனொழியாதவனைக் கூறல்.

தம்யாஸ்தஏவதவலாயதலோசநாநாம்
தாருண்யதர்ப்பகநபீநபயோதராணாம்
க்ஷாமோதரோபரிலஸத்ரிவலீலதாநாம்
த்ருஷ்ட்வாக்ருதிம்விக்ருதிமேதிமநோநயேஷாம் (61)

(இ—ள்) வெளுத்தும் நீண்டுமுள்ள விழிகளையுடையவர்களும், யௌவனத்திலுண்டாகிய மதத்தினால் இடவெளியற்றுப் பருத்த கொங்கைகளையுடையவர்களும், மிகவும் நுண்ணியதான இடையின்மீது பிரகாசிக்கின்றகொடிகள்போன்ற மடிப்புகளையுடையவர்களுமான மாதர்களின் ரூபத்தைப் பார்த்து விகாரமடையாத மனமுடைய புருஷர்களே புண்ணியசாலிகள்.

பாலேலீலாமுகுளிதமமீமந்தராத்ருஷ்டிபாதா:
கிம்க்ஷிப்யந்தேவிரமவிரமவ்யர்த்தஏஷச்ரமஸ்தே
ஸம்ப்ரத்யந்யேவயமுபரதம்பால்யமாஸ்தாவநாந்தே
க்ஷீணோமோஹஸ்த்ருணமிவஜகஜ்ஜாலமாலோகயாம: (62)

(இ—ள்) ஏ! இளம்பெண்ணே! லீலையினால் பாதிமூடிய கண்களையுடைத்தாயிருக்கும்படி மந்தமான பார்வைகளை ஏன் வாரியிறைக்கின்றாய் இவ்வாறு பார்வைகளை வாரியிறைப்பதை விட்டுவிடு; ஏனெனில் இப்பொழுது நாங்கள் உனது விலாஸத்தில் மயங்கிக்கிடப்பவர்களன்று; யௌவனம் போய்விட்டது; வனத்தில் விருப்பமிருக்கிறது; மோஹமழிந்தது; ஆகலின் இப்பொழுது லோகங்கள் முழுவதையும் துரும்பைப்போல் பார்க்கிறோம்.

இயம்பாலாமாம்ப்ரத்யநவரதமிந்தீவரதல—
ப்ரபாசோரம்சக்ஷு:க்ஷிபதிகிமபிப்ரேதமநயா
கதோமோஹோஸ்மாகம்ஸ்மரசரபாணவ்யதிகர
ஜ்வரஜ்வாலாசாந்தாததபிநவராகீவிரமதி (63)

(இ—ள்). இந்த இளம்பெண் எனக்காக அடிக்கடி கருநீதல்மலரின் காந்திதைபத்திருடிப கண்களைச்சுழற்றுகின்றனள்! அவள் எண்ணமென்ன

வோ தெரியவில்லை. (என்னுடன் ஸங்கமஞ்செய்வதற்காக இவ்வாறு செய்கிறாளெனில்) எங்களுக்கு இப்பொழுது மோஹம் நீங்கிவிட்டது; மன்மதனென்னும் வேடனுடைய பாணஸம்பந்தத்தாலுண்டாகிய ஜ்வரத்தின் வேகமும் தணிந்தது; ஆயினும் இக்கொடியவள் ஒழியவில்லை.

கிம்கந்தர்ப்பசரம்கதர்தயஸிரேகோதண்டடங்காரிதம்
ரே!ரே!கோகில!கோமலம்கலரவம்கிம்வாவ்ருதாஜல்பஸி,
முக்தே!ஸ்நிக்தவிக்தசாருமதுரைர்லோலை:கடாக்ஷைரலம்
சேதச்சும்பிதசந்த்ரசூடசரணத்யாநாம்ருதம்வர்த்ததே (64)

(இ—ள்) அடே! மன்மதா! உனது வில்லில் நாண் கயறையிழுப்பதனால் டங்கார சப்தத்தை வீணே உண்டாக்குகிறாய்? ஏ! கோகிலமே! ஏன் வீணே இன்பமாய்க் கூறுகின்றாய்! ஹே! சுந்தரி! மனோகரங்களாயும், பற்பலவிதமான விலாஸ விசேஷங்களை வெளிக்காட்டுவதில் சாமர்த்தியமுள்ளவைகளாயும், கருநீதல்மலர்போல் இயற்கையிலே பொற்பு வாய்ந்தவைகளாயும், மதுரங்களாயும், சஞ்சலங்களாயுமுள்ள கடைக்கண்பார்வைகளால் யாது பயன்? ஏனெனில், எனது மனதானது சந்திரமுடியோன் சரணத்தியானமென்னும் அம்ருதத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறது.

விரஹேபிஸங்கம:கலுபரஸ்பரம்ஸங்கதம்மநோயேஷாம்
ஹ்ருதயம்விகட்டிதஞ்சேத்ஸங்கோவிரஹம்விசேஷயதி (65)

(இ—ள்) ஒருவர்க்கொருவர் ஆசைமிகுந்த மனமுடைய ஸ்திரீ புருஷர்களுக்குப் பிரிவு ஏற்பட்டிருப்பினும், ஸங்கமுள்ளதுதான்; மனது வைராக்கியத்தைப்பற்றியிருந்தால் சேர்க்கையும் பிரிவையே உண்டாக்குகின்றது. (ஆகையால் மனதை எவ்வாற்றானுமடக்கவேண்டுமென்பது கருத்து.

கிம்கதேநயதிஸாநஜீவதி
ப்ராணிதிப்ரியதமாததாபிகிம்
இத்யுதீக்ஷ்யநவமேகமாலிகாம்
நப்ரயாதிபதிக:ஸ்வமந்திரம் (66)



(இ—ள்) எனது அன்புடையாள் (என்னைவிட்டுப்பிரிந்தமையால்) உயிர்தரிக்காதவரையில் வீட்டையடைந்த என்னால் யாது பயன்? அல்லது உயிர் வைத்திருந்தாலும் யாது பயன்? என்று விசாரித்து ஒரு வழிப்போக்கன், நீருண்டகார்முகில் கூட்டத்தைப்பார்த்து (வைராக்கியமடைந்தமனதையுடைத்தாயிருக்கின்றமையால்) வீட்டுக்குச்செல்வதை நிறுத்திக்கொண்டான்.

விரமதபுதாயோஷித்ஸங்காத்ஸுகாத்க்ஷணபங்குரா
த்குருதகருணாமைத்ரீப்ரஞ்ஞாவதூஜநஸங்கமம்
நகலுநரகேஹாராக்ராந்தம்கநஸ்தநமண்டலம்
சரணமதவாச்ரோணிபிம்பம்ரணந்மணிமேகலம் (67)

(இ—ள்). ஓ! அறிவாளிகளே! கணப்பொழுதில் மாறக்கூடிய மாதர்களின் சேர்க்கையாலுண்டாகிய ஸுகத்தினின்றும் ஒழிவையடையுங்கள்; துக்கமுள்ளவர்களிடம் தயை பாராட்டுதலென்றுங் கருணை, நல்வினையியற்றுபவர்களிடம் நட்புக்கொள்ளலென்னும் மைத்ரீ, தீவினையியற்றுபவர்களிடம் பற்று நீங்கலென்னும் பிரஞ்ஞையென்னும் மாதர்களுடன் சம்பந்தத்தைச் செய்யுங்கள்; ஏனெனில் நரகத்தில் முக்தாஹாரத்தால் விளங்கும் பருத்த கொங்கை மண்டலமாவது சத்தஞ்செய்கின்றதும் இரத்தினங்களாலாகியதுமான ஒட்டியாணத்தையுடைய நிதம்பமண்டலமாவது இரக்ஷிப்பதில்லை.

யதாயோகாப்யாஸவ்யஸநக்ருசயோராத்மமநஸோ—
ரவிச்சிந்நாமைத்ரீஸ்புரதிக்ருதிநஸ்தஸ்யகிமுதை:
ப்ரியாணாமாலாபைரதரமதுபிர்வக்த்ரவிதுபி:
ஸநிச்வாஸாமோதை:ஸகுசகலசர்சலேஷஸுரதை: (68)

(இ—ள்). யோகாப்பியாஸத்தில் பற்றால்க்ருசமான ஆத்மமனதுகளுக்கு ஒழியா நட்பு ஏற்பட்டிருக்கும்பொழுது, புண்ணியசாலியாகிய அப்புருஷனுக்கு, மனைவிகளுடையதான செவிக்கு இன்பமூட்டுவதும், ம்ருதுவானதும், மதுரமானது மானவார்த்தைகளாலும், இரசனைக்குப் பிரீதியைக்கொடுக்கும் அதராம்ருதங்களாலும், க்ராணத்திற்குத் திருப்தியைக்கொடுக்கும் வாசனையுள்ள மூச்சுக்காற்றினாலும், கண்களுக்குக் களிப்

பைக்கொடுக்கும் முகமதிகளாலும், குடம்போன்ற கொங்கைகளைத் தழுவிக் கொள்ளுதல் முதலியவைகளுடன் கூடின ஸம்போக விசேஷங்களாலும் என்ன பிரயோஜநம்?

யதாஸீதஞ்ஞாநம்ஸ்மர திமிரஸஞ்சாரஜநிதம்
ததாத்ருஷ்டம்நாரீமயமிதமசேஷம்ஜகதிதி
இதாநீமஸ்மாகம்படுதரவிவேகாஞ்ஜநஜுஷாம்
ஸமீபூதாத்ருஷ்டிஸ்திருபுவநமபிப்ரஹ்மமநுதே (69)

(இ—ள்). மன்மதனுகிற கண்ணோயின் ஸஞ்சாரத்தால், (இருட்டான காலத்தில்) அவிவேகமுண்டாயிருந்த காலத்தில் இவ்வுலகனைத்தும் ஸ்திரீரூபமாகக் காணப்பட்டது. அஞ்ஞானத்தையழிப்பதில் வல்லமையுள்ள விவேகமென்னும் ஸித்தாஞ்ஜநத்தையுடைய எங்களுடைய கண்ணனது தனதியற்கையையடைந்து இப்பொழுது மூவுலகத்தையும் ப்ரும்மஸ்வருபமாயெண்ணுகின்றது.

தாவதேவக்ருதிநாமபிஸ்புர
த்யேஷநிர்மலவிவேகதீபக:
யாவதேவநகுரங்கசக்ஷுஷாம்
தாட்யதேசடுலலோசநாஞ்சலை: (70)

(இ—ள்) மான்களின் விழிபோன்ற விழிகளையுடைய மாதர்களின் சஞ்சலங்களான கடைக்கண் பார்வைகளால் பார்க்கப்படும்வரையில் தான் விவேகிகளுக்கும் நிர்மலமான விவேகமென்னும் தீபமெரிகின்றது.

வசஸிபவதிஸங்கத்யாமுத்திச்யவார்த்தா
ச்ருதிமுகாமுகாநாம்கேவலம்பண்டிதாநாம்
ஜகநமருணரத்நக்ரந்திகாஞ்சீகலாபம்
குவலயநாநாம்கோவிஹாதும்ஸமர்த்த: (71)

(இ—ள்) எப்பொழுதும் மறையோதியதன் கருத்தையுணர்வதில் முயற்சியுள்ள பண்டிதர்களுக்கு, சொல்லில்மட்டும் "மாதரின் சேர்க்கையைத் தள்ளிவிடவேண்டு"மென்னும் வார்த்தை நிச்சயமாயிருக்கிறது; (செய்கையில் இல்லை) ஏனெனில், சிகப்பு இரத்தினங்களாலாகிய ஒட்டியாணத்தையே பூஷணமாகவுடைய மான் விழியர்களின் ஜகனத்தைவிட்டுவிட வல்லவன் யார்? (இவை போன்றவைகள் ஆசையொழியாதவர்களின் வார்த்தைகள்).

தொடரும்

Pandit, M. M. N[illegible]vanasamy Iyer,
Mudikondan.

# கனகாவளி

24-வது பக்கத்தின் தொடர்ச்சி.

அவள் கூந்தல் இன்று வாரி சடைபோடப்படாதது கவனிக்கத்தக்க விஷயம். இவைகளிலிருந்தும் அவள் எதைப்பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறுளென்று அறிந்துகொண்டேன். இவைகளையெல்லாம் கனகம், இதற்கு முன்னுல் அறிந்து கொள்ளமுடியாமற்போனுலும் இப்பொழுதாவது தெரிந்துகொண்டாயா.

கோமளம்:— ஏனடி அவளுக்குக் கவலையிராது. நமது அரசருக்கோ இவளொருபெண்ணைத்தவிர வேறு ஆண்மகவொன்றுங்கிடையாது. நமது அரசரும் இனி வேறு மணம்புரிவதில்லையென்று தீர்மானித்துவிட்டார். ஆகையால் அவருக்குப்பின் இவளே நமக்கு அரசியாவாளென்பதில் சந்தேகமில்லை. இப்பொழுது நடக்கிற சண்டையிலோ ஒன்று ஜயிக்கவேண்டும் அல்லது போர்க்களத்திலிறக்கவேண்டுமென்னும் பிடிவாதத்துடன் நமது அரசரிருக்கிறுர். அப்படி யேதாவது அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால் நமது ராஜகுமாரி எப்படியிருந்தாலும் வயதுவரும்வரை தன்னுடைய மாற்றுந்தாயின் ஆளுகைக்குள்ளிருக்கவேண்டும். மேலும் இன்றையதினம் சண்டையின் முடிவிலே இச்சண்டையில் இன்னுர் ஜெயிப்பாரென்றும் இன்னுர் தோற்பாரென்றுந் தீர்மானிக்குமென்று நேற்று அரண்மனையில் பேசிக்கொண்டிருந்தார்கள். இவைகளையெல்லாம் யோசித்துப்பார்க்கும்பொழுது அவள் கவலைப்படவேண்டியவளாகவேயிருக்கிறுள்.

சேண்பகம்:— நீ சொல்லுகிறபடி அவள் சண்டையை உத்தேசித்து கவலைப்படுகிறதற்குக் காரணம் ஒன்றுமில்லை. ஏனென்றுல் இன்று 12-மணிக்கு வந்த தூதன் இன்றையதினம் நடக்கும் சண்டையில் தடையின்றி நாமே ஜெயமடைவோமென்ற சமாசாரத்தைத் தெரிவித்தான்.

கனகம்:— நீங்கள் இரண்டுபேருஞ் சொல்லுகிறதிலிருந்து அவள் மனதில் எவ்விதமான சஞ்சலமும் இருக்கமுடியாதென்று தோன்றுகிறது. தேகத்திற்குந்தான் ஏதோ அசௌக்கியம் ஏற்பட்டிருக்குமென்று நினைப்பதற்கோ நம்முடன் இரண்டுமணிவரையிலும் பேசிக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் அவள் சௌக்கியமாயிருப்பதாகவே காணப்பட்

டாள். ஆகையால் அப்படி நினைக்கிறதற்கும் வழியில்லை. அரண்மனைக் காரியங்களெல்லாம், கோமளஞ்சொல்லுகிறபடி மூடுமந்திரமாய்த்தானிருக்கிறது.

கோமளம்:— போர்க்களத்திலிருந்து கடைசிமுடிவு என்னவருகிறதென்பதை ஒருவேளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். இதுவிஷயமாய் அரண்மனையில் எல்லோருக்குங் கவலை பெரிதாகவேயிருக்கும். ஆகையால் இந்நெருக்கடியான சமயத்தில் தினம்போல் ராஜகுமாரி நம்முடன் உல்லாசமாய்ப் பொழுதுபோக்க வருவதானது சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாகாது. நீ என்ன நினைக்கிறாய் செண்பகம்.

செண்பகம்:— சற்று பேச்சை நிறுத்துங்கள். கொஞ்சங்கவனித்துக்கேளுங்கள். யாரோ ஒருவர் அதிவிரைவாய் குதிரையேறிச் சவாரி செய்வதுபோல் கேட்கிறதில்லையா.

கனகம்:— குதிரையின் காலடியோசை எனக்கு முன்னைக்காட்டிலும் இப்பொழுது நன்றாய்க்கேட்கிறது. ஆகையால் யாரோ ஒருவர் நாமிருக்கும் திசையை நோக்கியே வருகிறாரென்று தெரிகிறது.

இவ்வாறு சொல்லிமுடிவதற்குள் யாரோ ஒருவர் ஓர் அழகிய குதிரையின்மீது அரண்மனைவாயிலை நோக்கி அதிவிரைவாய்த் தங்குதிரையைச் செலுத்திக்கொண்டுவருவதைக் கண்டார்கள். உடனே அங்குள்ள பெண்களெல்லோரும் ஒன்றுபோலெழுந்திருந்து, அத்தோட்டத்திலிருந்து அரண்மனையில் ராஜகுமாரியிருக்கும் இடத்திற்குப் போகும் வழியாய் அவ்விடத்தை நோக்கிச்சென்றார்கள். அவர்கள் சற்றுதூரஞ்சென்றதும் செண்பகம் திடுக்கிட்டுப் பின்வாங்கி, கோமளத்தின் கையைப்பிடித்துக்கொண்டு கோமளம் பார்த்தாயா. அதோ வருவது நமது அரசரென்று தெரிகிறதா உனக்கு. நமது அரசர் வருவதானால் இதற்குள்ளேயே வந்துவிடுவார். இந்நேரத்தில் அரசர் அரண்மனையை நோக்கி இவ்வளவு விரைவாக வரவேண்டுமானால் அரண்மனையில் ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டும். ஆகையால் நாமெல்லோரும் அரண்மனையை சீக்கிரம் அடைந்து விஷயத்தையறிந்துகொள்வோம் வா" என்று சொல்லவே, மற்றப்பெண்களெல்லோரும், பின்தொடர்ந்து வர இம்மூவரும் அரண்மனையை நோக்கி



முன்சென்றார்கள். இவர்கள் அரண்மனையையடைவதற்கு முன்னமே அரசன் அங்குவந்திறங்கி அரண்மனைக்குச் சென்றார். உட்சென்றதும் நேரே வைத்திய அறைக்குட்போய் அங்கே பிரக்ஞையற்று ஓர் சுவர்ணமயமான மஞ்சத்தின்மேல் ரத்னகம்பளத்தால் உடம்பெல்லாம் மூடப்பட்டு மூடிய கண்களுடன் முகம்மாத்திரந்தெரியுந் தன்னுடைய புதல்வியைக் கண்டதும் அம்மஞ்சத்துக்கருகில் அமைக்கப்பட்டுள்ள ஓர் ஆசனத்தின் மீது மூர்ச்சையாய் விழுந்துவிட்டார். உடனே அங்கே கனகாவளியின் சிகிச்சைக்காக ஆஜராயிருந்த அரண்மனை வைத்தியர் அரசருக்குவேண்டிய சிகிச்சைகளைச்செய்து ஆசுவாசப்படுத்தியதும் அவர் ஒருவாறு ஒளிந்தெழுந்து வைத்தியரை நோக்கி "ஐயா வைத்தியரே தற்சமயம் நம்முடைய புத்திரியைத் துன்புறுத்தும் நோய் எத்தன்மைத்தானது? இப்பொழுது அவளுடைய தேகஸ்திதி எவ்விதமிருந்துகொண்டிருக்கிறது? இரண்டுமணிவரைக்கும் சௌக்கியமாய்ப் பேசிக்கொண்டிருந்த என் செல்வத்தைத் திடீரென்று இந்நோய் பீடிப்பதற்குக் காரணமென்னவென்று நினைக்கிறீர்? இதைக்குணப்படுத்துகிறதற்குத் தகுந்த ஔஷதங்கள் உம்மிடத்திலிருக்கிறதா? இது இன்னம் எத்தனைநாளில் குணமாகும். தற்சமயம் அரண்மனையிலுள்ள வேலைக்காரர்களையெல்லாம் உம்முடைய ஏவலுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி கட்டளையிடுகிறேன். அவர்களுடைய உதவியைக்கொண்டு நம் குழந்தையைக் கூடியசீக்கிரத்தில் குணப்படுத்தும்.

இவ்வாறு அரசன் சொல்லிமுடிந்ததும் வைத்தியர் மறுமொழிகூற வாயெடுக்குஞ் சமயத்தில் ஊற்றில் ஜலங்கசிவதுபோல் ராஜகுமாரியின் வாயிலிருந்து உறைந்து கட்டியாய் சற்று நிறங்கருத்திருக்கும் ரத்தங்கசிய ஆரம்பித்தது. உடனே வைத்தியர் தாதிகளுக்கு ஆள் அனுப்பி அவர்கள் வந்ததும் அவர்களைக்கொண்டு ராஜகுமாரியை நேரே பிடித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தன்னுடைய பெட்டியிலிருந்து ஏதோ ஒரு திராவகத்தையெடுத்து ஒன்றோடொன்று இறுகிப்போயிருக்கும் பற்களைத் தென்னி, அத்திராவகத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய் உள்ளே செலுத்தினர். பிறகு அவளுடைய வாயை சுடுநீர்கொண்டு நன்றாய்ச் சுத்தஞ்செய்யும்படி சொன்னார். ரத்தங்கசிதலானது நின்று அவள் அயர்ந்து நித்திரைபோவதுபோல் தோன்றிற்று. இதற்குள் மந்திராதி ஜோஸ்யர்

இவர்களுடன் மந்திரியும் வந்துசேர்ந்தார். அவர்களை வரவேற்றுவிட்டு அரசர் வைத்தியரைப்பார்த்து "இம்மாதிரி ரத்தத்தைக் கக்குவதைப் பார்க்கும்பொழுது என் மனதுக்கு ஒருவிதமான சஞ்சலமும் மயக்கமும் உண்டாகிறது. இவ்வாறு ரத்தப்பெருக்கைக்கண்ட நானே மயக்கங் கொண்டால், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இக்கொடிய நோயை அனுபவிக்கும் என் செல்வம் என்னபாடுபடவேண்டும் இதைக் குணப்படுத்திவிடலாமென்று உமக்குத்தோன்றுகிறதா" என்று கேட்டதும் அதற்கு

வைத்தியர்:— பிரபு இந்த வியாதி மிகக்கொடியதாயிருப்பினும் அதைக் குணப்படுத்திவிடலாமென்ற நம்பிக்கையெனக்கிருக்கிறது. என்னால் கூடியவரை யெட்டியோசித்துத் தெரிந்தவரை தகுந்த ஔஷதங்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறேன். ஈசனருளால் இவ்வியாதியினின்றும் சௌக்கியமாய் எழுந்திருப்பாளென்று நினைக்கிறேன்.

அரசர்:— இது தேகபாதையைத்தவிர வேறு தேவதா கோஷ்டிகளொன்றுமில்லையென்று உமக்கு நிச்சயமாய்த் தெரிகிறதா?

வைத்தியர்:— ஆம் மகாராஜா இது தேகத்தையொட்டின வியாதியென்றுதான் தோன்றுகிறது. இருந்தாலும் சந்தேகநிவாரண நிமித்தம் நம்முடைய அரண்மனை மாந்திரீகரையுங் கலந்துகொண்டால் மனதுக்குச் சமாதானமாய்விடும்.

உடனே அரசன் மாந்திரீகரையழைத்துத் தேவதாபாதைகள் ஏதாவது இருக்கிறதா பாரும் என்றதும் அவர் உடனே தன்னுடன் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கும் விபூதியில் கொஞ்சம் எடுத்து அதை ஒரு தட்டுக்கொண்டுவரச்சொல்லி அதில் பாப்பி, சக்கரம் முதலியவைகளை அதில் வரைந்துவிட்டு சுமார் அரைமணிக்கூர்வரையிலும் மந்திரோச்சாடனத்திலுட்கார்ந்துவிட்டார். பிறகு ஜெபம் முடிந்ததும் எழுந்திருந்து அந்தத் தட்டிலுள்ள விபூதியை யெடுத்து, ராஜகுமாரி படுத்திருக்கும் சப்ரமஞ்சத்தினருகில் வந்து நீ யாராயிருந்தாலுஞ்சரி, இப்பொழுதே என்னிடத்தில் வந்து தெரிவித்து உனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு எங்கள் ராஜகுமாரியைவிட்டு இக்ஷணமே விலகிப்போய்விடவேண்டும்



" என்று சொல்லிக்கொண்டே அந்த விபூதியை அயர்ந்து நித்திரைபோய்க் கொண்டிருக்கும் ராஜகுமாரியின் வெளிறின முகத்தில் போட்டார். அப்பொழுது தன்முகத்தில் விழுந்த விபூதிகூடத்தெரியாமல் ராஜகுமாரி தூங்கிக்கொண்டிருந்தாளே தவிர ஒருதேவதையும் அங்குவந்து பிரசன்னமாகவில்லை. உடனே மாந்திரீகர் அரசரை நோக்கி "மகாராஜா, தங்களுடைய புத்திரிக்கு தேவதாபாதையொன்றுமேயில்லை. இது தேகத்தில் தோன்றிய வியாதிதான். அதற்குச்சந்தேகமேயில்லை" என்றார்.

பிறகு அரசர் மந்திரியை நோக்கி "மந்திரி, இப்பொழுது மாந்திரீகர் சொல்லிய பிரகாரம் நம்முடைய புத்திரிக்கு ஏற்பட்டிருப்பது தேக அசௌக்கியந்தான் என்று தீர்மானமாய்விட்டது நம் வைத்தியரோ நாம் பார்த்தவரை அவர் செய்துவந்திருக்கிற வைத்தியங்களெல்லாம் நல்ல முறைகளை அனுசரித்ததாயும் விசேஷகுணங்களைத் தரக்கூடியதாகவும் இருந்திருக்கின்றன. ஆகையால் அவர் தற்சமயம் நமக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தையும் நீக்கக்கூடியவரென்றே நினைக்கிறேன்" என்று சொன்னார்.

மந்திரி:— இப்பொழுது தங்களுடைய புத்திரி அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதால் நம்முடைய சம்பாஷணை அத்தூக்கத்திற்கு இடைஞ்சல் உண்டுபண்ணக்கூடும். ஆகையால் வேறு இடத்திற்குப்போய்ப்பேசுவது ரொம்பவும் நலமென்று நினைக்கிறேன். வைத்தியரே நீர் என்ன நினைக்கிறீர்.

வைத்தியர்:— நீங்கள் சொல்வது சரிதான். இவ்வற்பவிஷயங்களெல்லாம் தங்களுக்குத்தெரியாதா நான் சொல்லவேண்டுமாவென்று நினைத்துத்தான் நான் சும்மாயிருந்தேன்.

அரசர்:— நல்லது நாங்கள் போய்வருகிறோம் வைத்தியரே, குழந்தையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும். நமக்கு ஏதாவது சமாச்சாரம் தெரிவிக்கவேண்டுமானால் வரவேற்பு மண்டபத்திற்கு ஆள் அனுப்பும் அங்கேதானிருப்பேன்.

உடனே. அரசர் வரவேற்பு மண்டபத்துட்சென்றதும் கூடவே அழைத்துக்கொண்டுபோகப்பட்ட ஜோஸ்யருடன் மந்திரியும் பின்சென்றார் அப்பொழுது மந்திரி அரசரை நோக்கி "நீங்கள் செய்ததெல்லாம் சரிதான்

ஆனால் ஒன்றுமட்டும் நீங்கள் செய்யவில்லை. மாந்திரீகர் தேவதாபாதையொன்றுமில்லையென்று சொல்லிவிட்டதால் இப்பொழுது வைத்தியரிடத்தில் பாரத்தைப் போட்டிருக்கிறீர்கள். அந்த வைத்தியமும் சமயங்களில் நிஷ்பிரயோசனமாய்ப் போய்விடுகிறது. அதன் காரணத்தை அவரிடத்தில் கேட்டால் அவர் காலம் கெட்டகாலம் என்று பதில் சொல்லுவார். ஆகையால் தற்சமயம் நமது இளவரசிக்குக்காலம் நல்லதா கெட்டதாவென்பதைத் தெரிந்துகொள்வதோடுங்கூட வேறு ஏதாவது தோஷங்கள் இருந்தாலும், அவைகளுக்குப் பரிகாரம் இன்னது செய்யவேண்டுமென்று சொல்வதற்கு உடன் ஜோஸ்யரையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அவரையுங் கலந்துகொள்வது உசிதமென்று தோன்றுகிறது. இவ்விஷயத்தைத் தங்களிடத்துத் தெரிவிக்க வேண்டுமென்றுதான் உங்களை வேறு இடத்திற்கு வரச்சொன்னது. மேலும் வைத்தியரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஜோஸ்யரைக்கொண்டு இனிமேல் நடக்கப்போகிறதைப்பற்றிப் பேசினால், வைத்தியருக்கு ஒருவிதமாய் அசிரத்தை உண்டாய்விடும்".

உடனே அரசர் ஜோஸ்யரை நோக்கி தன்னுடைய புத்திரியின் ஜாதகப்படிக்கு இப்பொழுது அவள் திசை இன்னதிசையென்றும், அதன் காலம் இவ்வளவென்றும் பார்க்கச்சொன்னார். ஜோஸ்யர் ஜாதகத்தை முன்னால் வைத்துக்கொண்டு தன்னிடத்திலுள்ள ஏடுகளைத் திரும்பத் திரும்பத் திருப்பி நெடுநேரம் பார்த்துவிட்டுக் கடைசியாக "மகாராஜா, நம்முடைய ராஜகுமாரிக்கு இதுமுதல் இன்னும் இரண்டரை வருஷம் வரை ஆபத்துக்கள் அநேகம் சம்பவிக்கும் அவ்வாபத்துக்களெல்லாம் நயவஞ்சகர்களால் ஏற்படும். ஆனால் அவைகளெல்லாம் முடிவில் அவளுடைய பெருந்தன்மையான குணங்களை எங்கும் பரவி நன்றாய்ப்பிரகாசிக்கச்செய்யுமேயொழிய அவளுடைய உயிருக்கு ஒருவிதமான ஆபத்தையும் விளைக்காது. ஆகையால் இவ்வியாதியினின்று அவள் கட்டாயம் தப்பித்துக்கொள்வாள். அதற்குச் சந்தேகமேயில்லை" என்றார். அரசர் அரண்மனை வாயிலில் வந்திறங்கும்பொழுது சுமார் மணி 7 இருக்கலாம். இப்பொழுது 8 மணிக்கு மேலாய்விட்டது. தான் சவாரி செய்துகொண்டு வந்தபோது அணிந்திருந்த உடையை இன்னும் கழட்டிவைக்கவில்லை. வந்தபிறகு இதுவரையிலும் ஒருவிதமான சிரமபரிகாரமுஞ் செய்து



கொள்ளவில்லை ஆகையால் ஜோஸ்யர் சொல்லிமுடிந்ததும் அவருக்குவிடை கொடுத்தனுப்பிவிட்டு, மந்திரியுடன் வைத்திய அறைக்குட்சென்று இன்னொருமுறை தன்னுடைய புதல்வியின் வெளிறின முகத்தைப்பார்த்துத் துக்கித்து, அவள் அயர்ந்து நித்திரைசெய்கிறாளென்று தெரிந்துகொண்டு வைத்தியரையும் தாதிகளையும் நோக்கி "நீங்கள் எப்பொழுதும் இங்கேயே இருந்துகொண்டிருக்கவேண்டும். உங்களுக்கு அதற்காகவேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்யப்படும். வைத்தியரே உமக்குப்படுத்துறங்குவதற்காக இதற்கருகிலிருக்கும் அறை காலிசெய்யப்படும். இங்குள்ள சிப்பாய்களில் இருவர் எப்பொழுதும் உம்முடைய அறையில் பாராக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். நமக்கு ஏதாவது சமாச்சாரங்கள் தெரிவிக்கவேண்டுமானால் அவர்கள் மூலமாய்த்தெரிவிக்கலாம். அல்லது உம்முடைய இஷ்டம்போல் வெளியிடங்களுக்கும் போய்வரச்சொல்லலாம்". என்று சொல்லி மந்திரியிடம் கொஞ்சம் ஏதோ சிலவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு அந்தப்புறத்தை நோக்கிச்சென்றார். இதுவரை வயித்திய அறையில் இளவரசி படுத்திருந்த மஞ்சத்தின் பின்புறத்தில் கட்டியுள்ள திரையின்மறைவில் நின்றுகொண்டிருந்த அரசி இப்பொழுது அரசர் அந்தப்புறத்தை நோக்கிச்சென்றதும் தானும் வைத்திய அறையிலிருந்து அந்தப்புறத்துக்குப்போகும் வழியாய் அங்குவந்துசேர்ந்தனள். இளவரசியினுடைய முகம் ஒருமடங்கு வெளிறியிருந்தால் அரசியின்முகம் அதிலும் பத்துமடங்கு அதிகமாய் வெளிறியிருந்தது. அவள் முகத்தைப் பார்த்த ஒவ்வொருவரும் ஏது இனி நம்முடைய இளவரசிக்கு உடம்பு குணமாகிறவரை, நம்முடைய அரசியின் உடம்பும் இம்மாதிரியாகத்தான் வருந்தப்பட்டுக்கொண்டிருக்கும் என்று திண்ணமாய் நினைப்பார்கள். இன்னும் சூக்ஷமாய்ப்பார்ப்பவர் இவளுடைய மனம் எதினாலோ கலக்கமடைந்திருக்கிறதென்பதை அவளுடைய வெருண்ட முழிகளினாலும் கோர்வையற்ற பேச்சுக்களினாலுமறிந்துகொள்வார்கள். அரசன் அந்தப்புறத்துட்சென்று தன்னுடைய உடைகளைக்கழட்டி ஸ்நான அறைக்குட்சென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வேறு உடை தரித்து ஜபதபங்களை முடித்து போஜனத்துக்குட்கார்ந்தான். போஜனமானதுமறுபடியும் அந்தப்புறத்துட்சென்று தூங்கப்போகுமளவில் தன்னுடைய ஆகாரதிகளை முடித்துக்கொண்டு அரசியும் வருவாளாயினள். உடனே அவர்களிரு

வருக்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது.

அரசன்:— கண்மணி தற்சமயம் நமது கனகாவளியின் நிமித்தம் நீ படுந்துயரத்தை அறிந்துகொண்டேன். நாமென்ன செய்வது. இங்கிருந்துவந்த கடிதத்தைக்கண்டபிறகு இங்குவந்து கனகாவளியைப்பார்க்கும்வரை ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு ஒவ்வொரு யுகமாகத்தோன்றியது. நான் இதுவரை போர்க்களத்திலிருப்பேனேயாகில் இதற்குள் எதிரியின் நகர் நம்மைவசமாயிருக்கும். கனகாவளியின் தேக அசௌக்கியத்தைக் கேட்டவளவில் அவைகளொன்றும் எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இனிமேலுந்தானென்ன? அவளுக்கு வந்திருக்கும் வியாதி பூரணமாய் குணமாகுமென்று தெரிந்தாலொழிய நான் இனிமேல் போர்க்களத்துக்குச் செல்லப்போவதில்லை.

அரசி:— நான் வருத்தப்படுவது வேறொன்றுமில்லை. தாங்கள் அனுப்பிய முதல்செய்தி 12மணிக்கு வந்தது. அதில் கண்டிருந்த சமாச்சாரத்தைக்கேட்டு சந்தோஷப்பட்டவளாகவே தோன்றினாள். பிறகு மாலை 3 மணிக்கு இடைவேளை ஆகாரத்துட்காரும்பொழுது இரண்டாவது அனுப்பிய செய்திவந்தது அதில் அநேகமாய் எதிரிகள் தோற்கடிக்கப் பட்டுவிட்டார்கள். இன்னுங் கொஞ்சநேரத்தில் பின்வாங்கிவிடுவார்கள். எதிரிபாசரின் குமாரர் தன்னுடைய உயிரைக்கூடப்பெரிதாகக் கருதாது வெகு தீரத்தோடு சண்டைசெய்து வருகிறார். ஆயினும் அத்தீரம் பயனற்றதாய் முடிவதோடுங்கூட அவருடையஉயிருக்கு ஆபத்தை விளைக்கவுங்கூடும்" என்று எழுதியிருந்த கடிதத்தைப் பலமுறை திரும்பத் திரும்ப வாசித்துப்பார்த்தாள்.

அரசர்:— அது இருக்கட்டும், அப்பொழுது அவள் ஏதாவது சாப்பிட்டாளா?

இன்னும் வரும்

S. Kasthuri Iyengar
Schoolmaster.

# ஸமாசாரக் குறிப்பு.

## ஸ்ரீராமநவமி உற்சவம்.

திருநெல்வேலி ஜில்லா பெருங்குளத்தில் நாளது பைங்குனிமீ 30உ (11—4—16) முதல் 15—4—16 வரையிலும் ஸங்கீத வித்வான் ஸ்ரீனிவாச அய்யங்காரின் முயற்சியாலும் இன்னும் அவிடத்திலுள்ள பல பிரபுக்களின் உதவியாலும் ஸ்ரீராமநவமி உஸ்ஸவம் வெகு சிலாக்கியமாக கீழேகண்ட விவரப்படி நடந்தேறியது. இவ்வருஷம் நடந்தேறிய வைபவத்தினின்றும் இவ்வாறு நடக்குமென்று எதிர்பாராத சில பிரபுக்களின் மனதில் இனிமேலும் வருஷாவருஷம் இதைக்காட்டிலும் விசேஷமாக நடைபெறும்படி செய்யவேண்டுமென்று மிகுந்த ஆவலுண்டாகியிருப்பதாகத் தெரியவருகிறது. அவ்வாறு அவர்களின் மனோபாவம் நிலைநிற்குமாறு ஸ்ரீராமன் க்ருபை செய்வாராக. பிரதிதினம் காலையிலும் உஞ்சவிர்த்தி பஜனையும், பிறகு பாகவதர்களுள் சுமார் 50 பேருக்குக் குறைவன்னியில் போஜனமும் நடைபெற்று வந்தன. முதல்நாள் ஸ்ரீராம ஜெனனத்தன்று ஸ்ரீராமாயணத்தில் அவதாரக்கட்டம் படனமும் விதிப்படி பிஜதானம், பலதானம், தாம்பூல சந்தனாதிகளும் எல்லோருக்கும் வழங்கப்பட்டதுடன் அன்றிரவும் 4-ம் நாளிரவும், ஸங்கீத வித்வான் Mr. ஸ்ரீனிவாஸய்யங்காருடைய ஹார்மோனியமும், பழனியிலிருந்து வந்திருந்த Mr. ராமஸ்வாமி அப்பருடைய பிடிலும், ஷையூர் Mr. முத்தய்யாவுடைய மிருதங்கமுஞ்சேர்ந்த ஸங்கீதக்கச்சேரி நடந்தேறியது. 2-ம் நாள் இரவு திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி ப்ரும்மஸ்ரீ ராமஸ்வாமி பாகவதாவர்களின் கதாகாலக்ஷேபமும் 3-ம் நாள் இரவு திருநெல்வேலி டவுண் Mr. சாமனாம் அப்பர் அவர்கள் பிடிலும், Mr. அப்பாசாமி அய்யாவர்கள் பில்லாங்குழலும், Mr. பைரவனுடைய மிருதங்கமுஞ்சேர்ந்த ஸங்கீதக் கச்சேரி நடைபெற்றது 5-ம் உஸ்ஸவத்தன்று பகலில் வைதீகவிதிப்படி ஸாக்ஷாத் ஸ்ரீராமனுக்கும் ஸீதாதேவிக்கும் திருக்கலியாண மஹோத்ஸவம் நடந்தேறியதுடன் ஸ்ரீராமாயணத்தில் விவாஹகட்டமும் படனம் செய்யப்பட்டது. அன்றிரவு ஸ்ரீராமபட்டாபிஷேக படத்தை அதற்காகத் தயார்செய்திருந்த ரதத்தில் வெகு அலங்காரத்துடனும் மேளவாத்தியங்களுடனும் பாகவத கோஷ்டிகளுடனும் திருவீதி கொண்டருளச்செய்த

தரிசனம் ஒவ்வொருவரையும் பரவசமாக்கியது. இவ்வுற்சவத்தில் அபிமானித்துவந்த ஸங்கீத வித்வான்களுடைய கச்சேரிகள் ஒவ்வொன்றும் பலாபேக்ஷையின்றி ஸ்ரீராமனுடைய அனுக்ரஹத்தைப் பெறக்கருதி நடைபெற்றதால் கேட்போரை பரவசப்படுத்திவிட்டது. இம்மஹோத்ஸவம் இன்னும் வருஷாவருஷம் விருத்தியடையும்படி ஸ்ரீராமன் கிருபை செய்வாராக.

கண்டுகளித்தோன்

## நமது சந்தா நேயருக்கு

### ஓர் விஞ்ஞாபனம்.

இம்மாதம் 11வ முதல் 15வ வரையிலும் நமது கிரஹத்தில் ஸ்ரீராமநவமி உத்ஸவம் நடந்தேறியதில் அதுவிஷயமாக ஜாஸ்தி வேலை யிருந்ததினிமித்தம் 15வ வாய்தாவில் நம்முடைய பத்திரிகை வெளிவர மார்க்கமன்னியில் தாமதித்துவிட்டது. ஸ்ரீராமனுடைய கைங்கரியமாத லால் நம் நேயர்கள் தாமதத்தை மன்னிப்பார்களென நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## ஜாதக ப்ரகாசிகை.

### இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப் போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பாராசரஹோரா, ப்ருஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக் சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-வக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ காந வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

## உங்கள் ஜாதகபலனைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷமாதம் தேய்தி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவறாமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வொரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சொல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சொல்லுவது அனாவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

### சார்ஜின் விவரம்.

| | | |
|---|---|---|
| புத்திரபாவத்திற்கு | ... | ரூ. 5–0–0 |
| களத்திரபாவத்திற்கு | ... | ரூ. 3–0–0 |
| தொழில் அல்லது யோகபாவத்திற்கு | | ரூ. 5–0–0 |
| ஆயுர்பாவத்திற்கு | | ரூ. 5–0–0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கொடுக்கவேண்டில் | | ரூ. 25–0–0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கொடுக்கில் | | ரூ. 2–0–0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கொடுக்கில் | | ரூ. 3–0–0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கொடுக்க | | ரூ. 4–0–0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

---

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.





## பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை

### பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)
(தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகேம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும். மனோஉற்சாகத்தைத்தரும். 1–சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வப்படை சம்ஹாரன்:—** மேகப்படை, சொரியானைப்படை, தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முதன்மையான அவுஷதம்.
விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வதந்தரோக நிவாரண பரிமளப்பற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சுரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.
விலை சீசா 1.க்கு அணா 2 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுப்பராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம், இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்குமிகவும் அற்புதமான சஞ்சீவி
விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள தேவகாந்திதைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேறி ஓங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.
விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. சிலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் பொடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கரப்பான், வெடிப்பு, சரீரவாக்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

விலாசம்:— ☞ பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை தென்னார்க்காடு ஜில்லா.

# நம்பிக்கையுள்ளது.

ஒன்றை நம்புவதென்றால் தகுந்த ஆதாரம் வேண்டும். எங்கள் வைத்தியசாலை 35 வருஷத்துக்கு முன் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அங்கே பிரபலமாய் செய்யப்படுகிற மருந்து ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள். இம்மருந்தின் குணமகத்துவத்தால் இந்தியாவில் உள்ள முக்கிய பட்டணங்களிலெல்லாம் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வைத்தியசாலையில் சாஸ்திர சம்பன்னர்களும், வித்தியா பட்டம் பெற்றவர்களும், அநேக குமாஸ்தாக்களும் வேலைக்காரர்களுமாக நூற்றுக்கணக்காக அமர்ந்திருக்கிறார்கள். 18 பாஷையில் வியாபாரம் நடைபெறுகிறது. விலாசத்தைத் தெரிவிப்போருக்கு கிராட்டிஸாக இனாம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே, மதராஸ்.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 MAY 1916
MADRAS

உ

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

VOL. 1. } 1916-ஆம் மேமீ { NO. 11.

## இந்து ஸங்கீதம்

43. "இராகவிபோத விவேகம்". "ஸோமநாதர் மதம்:— (1-வது ச்ருதி ஸ்வரவிவேகம், ஆர்யா வ்ருத்தம்).

"ஆத்மேச்சயவிவக்ஷா, க்ஷிப்தம்தத்தேஹவன்ஹிமாஹந்தி
ஸப்ரேரயதேதீப்த்யா, ப்ரும்ஹக்ரந்திஸ்திதம்மருதம் =
ஊர்த்வம்விச்சரன்க்ரமத:,நாபிஹ்ருதயகண்டமூர்த்தவக்த்ரே
[ஸஹ:
அதிஸூக்ஷ்மாதிசஸம்க்ஞான், நாதாப்ஸ்தனுதேக்ருதார்ஹ: =

(வ்யா). முன் சொல்லியபடி ஓசையை வெளியிட எண்ணமுடையவர்களின் மனதினுடைய ஏவலால் தேகத்திலிருக்கும் "ஔதார்யவஹ்நி" என்ற நெருப்பில் தாக்குகிறது. அந்த நெருப்பானது "ப்ரும்மக்ரந்தி" என்று பெயருடைய ஆதார சக்கிரத்திலிருக்கிற வாயுவில் அடிபடுகிறது. அந்த வாயுவானது ஆகாய மார்க்கத்திலே வெளிக்கிளம்பி மேல்நோக்கி ஸஞ்சாரஞ்செய்து, 1. நாபி, 2. ஹ்ருதயம், 3. கண்டம், 4. சிரஸ், 5. வாய் ஆகிய ஐந்து இடத்திலும் அதிஸூக்ஷ்மமான பாகத்தினால் ஓசையை உண்டாக்குகிறது. இந்த அதிஸூக்ஷ்மமென்றது பரமாணுக்களென்று மதங்கர் அபிப்பிராயப்படுகிறார்.

"ஸூக்ஷ்மஸ்சைவாதிஸூக்ஷ்மாஸ்ச
வ்யக்தோவ்யக்தஸ்சக்ரித்ரிம:
ஸூக்ஷ்மநாதோகுஹாவாஸீ
ஹ்ருதயேச்சாதிஸூக்ஷ்மக:"

(இ—ள்). சூக்ஷ்மங்களுள் அதிசூக்ஷ்மமாகவும், வெளிப்படையில் மிகுவும் துலக்கமாகவும், கடடத்துடனுங்கூடிய பரமாணுக்கள் ஹிருதயமாகிற குகைக்குள் வெகு சூக்ஷ்மமாக வாசஞ்செய்துகொண்டிருக்கின்றன. இந்த ஐந்திடங்கள் தவிர்த்து மற்ற இடங்களில் அந்த வாயுவின் ஸம்மந்தப்படுதலுமுண்டு. அங்கிருந்து ஓசையுண்டாவதுமுண்டு. ஆனால் அந்த ஓசையானது கீதத்திற்கு தகுதியற்றதாகயிருக்கிறது. ஆகலின் அதைப்பற்றிப் பேசவில்லை. முன்சொல்லிய ஐந்திடத்திலிருந்துண்டாகும் ஓசைதான் ஸங்கீதத்திற்கு உபயோகப்படுகிறது.

ஹ்ருத்கண்டமூர்தனாநாதா:, க்ரமாதமீமந்திரமத்யதாராக்யா:
த்விகுணயதோக்தாஞ்ச, ச்ருதிதாம்ஸ்வராதாஞ்சவச்மிச்சை
[தேஷாம்

(வ்யா). ஹ்ருதயத்திலிருந்தும், கண்டத்திலிருந்தும், சிரஸிலிருந்தும் உண்டாகின்ற நாதங்கள் முறையே மந்திரமென்றும், மத்யமமென்றும், தாரமென்றும், பெயருடையதாகின்றன. மந்த்ர ஓசையைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமுடைய ஓசைதாரமென்று சொல்லப்படும். இனி இந்த ஓசைகளுக்கேற்ற ச்ருதிகளையும், ஸ்வரங்களையும் சொல்லுகிறேன்.

ஹ்ருத்தூர்த்வநாடிகாஸ்தக், த்வாவிம்சத்யணுதிரோஜநைஷூ,
தாவந்த:ச்ருதிஸம்க்ஞா:, ஸ்யுர்நாதா: பரபரோஸ்சோச்சா:

(வ்யா). ஹ்ருதயத்திலிருந்து ஸுஷும்னை வழியாக இடபிங்கலையில் ஸம்மந்தப்படுகிற இருபத்திரெண்டு நாடிகளிருக்கின்றன. அவைகளில் ஒன்றுனொன்று சில பெரிதும், சிறியதுமாக யிருக்கின்றன. அவைகளில் அக்கினியினாலும், காற்றினாலும் அனுப்பப்படுகிற பரமாணுக்கள் படும் நாதத்தைத்தான் ச்ருதியென்று சொல்லப்படுகிறது. இந்தச்ருதியானது ஒன்றிக்கொன்று உயர்ந்திருக்கின்றது. அதாவது $1+1=2$ மடங்கு அதிகம்; 3வது ஒன்றிக்கொன்று உயர்ந்ததாதலின் $3+1=4$ மடங்கு அதிகம். அதாவது படிக்கட்டேறி மெத்தைமேற் போகவேண்டுமென்றால் 1 உயர்வு, 2 உயர்வினுயர்வின் இரண்டு மடங்கு அதிகம் இதுபோலவே இருபத்திரெண்டு ச்ருதிகளையும் கணக்கிட்டுக்கொள்க.



ஏவம்க்ளேச்சசிர்வேஷாதாப்ய:
ஸப்தஸ்வரா:ச்ருதிப்யஸ்யு:
ஸ்வராதாதேஷூநிருக்தா,
மந:ஸ்வதோரஞ்சயந்தீதி

இவ்வாறு அந்த இருபத்திரெண்டு ச்ருதிகளிலிருந்தும் எழுஸ்வரங்களுண்டாகின்றன. அவைகள்தான் முறையே ஹ்ருதயத்திலும் கழுத்திலும், சிரஸிலுமாக உண்டாகின்றன. இங்கு ச்ருதியென்றால் "ச்ரூயந்த—இதி—ச்ருதி:, என்ற தொகை மொழியினால் கேழ்க்க இனிமையுள்ளதுயென்று பொருள். "ஸ்வரம்" என்றால் "ஸ்வத:" ரஞ்சயதீதீ—ஸ்வரா: என்ற வித்பத்தியினால் தானாகவே ரஞ்சனமுடையது யென்று பொருள். அதாவது தனக்குத்தானே ரமிக்கத்தக்கதென்றும், கேழ்க்கிறவர்களை ரமிக்கச்செய்கிறதென்றும் பொருள்.

ஷட்ஜர்ஷபகாந்தாரா:, மத்யமபஞ்சகதைவதநிஷாதா:
இத்யாபிதாஸ்தேமீஷாம், ஸரிகமபதநீதிஸம்க்ஞாந்யா:

(வ்யா). முன் சொல்லிப ச்ருதிகளிலிருந்தும் உண்டாகிற ஸ்வரங்களுக்கு கிரமமாக ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், என்று பெயர். பஞ்சமம் என்றதைத்தான் அதன் பொருளை ஆபேக்ஷித்து, பஞ்சகமென்று சொல்லப்பட்டது. நிற்க, இவைகட்கு முறையே ஸ—ரி—க—ம—ப—த—நி யென்று ஸமிக்ஞா நாமம் சொல்லவேண்டும். ஸமிக்ஞாநாமமென்றால் குழூஉக்குறியான பெயர் அதாவது அடையாளப்பெயர். உலகத்தில் வர்த்தகர்கள் தங்களுக்குள் ஸங்கேதப்பெயர் வைத்துக்கொண்டிருப்பது போலும், மற்றையவர்களும் தங்கள் தங்களுக்கேற்ற ஸங்கேதம்வைத்துக்கொண்டிருப்பதுபோலும், "காந்தர்வ" யார்க்கத்தில் ஸ—இது ஷட்ஜம் இதைப்போல் மற்றுமறிக.

தேஷாம்ச்ருதய:க்ரமச:, வேதாராமாத்ரசோததாய்புசய;
நிகமாத ஹநா; பசஷா:, ஏவம்த்வாவிம்சதி: ஸர்வா;

(வ்யா). அந்த ஸப்த ஸ்வரங்களுக்கும் முறையே ஸ–4, ரி–3, க–2, ம–4, ப–4, த–3, நி–2 ச்ருதிகளென்று அறியவும். இங்கு கோகிலர் மதங்கர் முதலியவர்கள் சொல்லிய ஒன்பது முதலிய பல ச்ருதிகளையும் தள்ளிவிட்டு இருபத்திரெண்டு ச்ருதிகளே உயர்வென்று சொன்ன "ஸ்ரீசாரங்கதேவ" ருடைய மதத்தை அனுசரித்து இப்பொழுது 22 ச்ருதியையே பற்றிப்பேசினேம். பிறகு இதையும் நிஷேதிப்பாம். அதை அங்கே காண்க.

தூர்யாயாம்ஸப்தாயாம்தாஸ—நவம்பாம்,
ச்ருதோத்ரயோதச்யாம், ஸப்ததசீவிம்சக்,
த்வாவிம்சீஷ—ச்ச, தேஸ்புட்டா: க்ரமத:

(வ்யா). நான்காவதுச்ருதியிலும், ஏழாவது ச்ருதியிலும், ஒன்பதாவது ச்ருதியிலும், பதின்மூன்றாவது ச்ருதியிலும், பதினேழாவது ச்ருதியிலும், முன் சொல்லிய ஸப்த ஸ்வரங்களும் தனித்தனி விளங்குகின்றன. ச்ருதிகளில் ஸ்வரம் விளங்குவதைக் குறித்து ஐந்துவிதமான நியாயங்கள் உண்டாகின்றன. 1-வது ஒரு வஸ்துவினுடைய ஜாதியையும், வெளிப்படையையும்போல, ஸ்வரஜாதிகளில் ஸ்வரங்கள் வெளிப்படுகின்றன. 2-வது கண்ணாடியில் முகம்போல் ச்ருதிகளில் ஸ்வரங்கள் பிரகாசிக்கின்றன. 3-வது பானைக்கு மண்ணும், தடியும், சக்கரமும்போல, ச்ருதிகட்கு ஸ்வரமாகிறது. 4-வது பால் தயிரினுருவாக மாறுவதுபோல்ச் ச்ருதிகள் ஸ்வரங்களாகின்றன. 5-வது விளக்கிருந்தால் இருட்டறையிலிருக்கும் கடபடாதிகள் கண்ணுக்குத் தெரிவதுபோல ச்ருதிகளினால் ஸ்வரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவ்வைந்து மதத்தில் முதல் மூன்றும் விஸ்தார பயத்தினால் தள்ளிவிட்டு 4-வது 5-வது மதத்தை அனுஸரித்து முன்னோர் கூறியவாறே சொன்னேம். இனி அந்த 4-வது மதத்தையும் தள்ளிவிட்டு 5-வது மதத்தை நிலைநிறுத்துவாம். அவை பிறகு வரும்.



## இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அனுபல்லவி.
3. சர = சரணம்.
4. ∿∿∿ = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.

7. O = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளத்தின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.
    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.
    சா = சாதாரண காந்தாரம்.
    பி = பிரதிமத்திமம்.
    ஷ = ஷட்சுருதிரிஷபம், ஷட்சுருதிதைவதம்.
    கை = கைசகிநிஷாதம்.
    அ = அந்தரகாந்தாரம்.
    கா = காகலிநிஷாதம்.
11. ஆ = ஆரோஹணம்.
    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இராகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்த்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை
   ப
   ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரிதகாலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



## பல்லவிக்கு கற்பனஸ்வரம்

| | O | \| |
|---|---|---|
| | = என் | னுடு — தய |
| (1) | ரீ** | மாகாசா** = என் |
| (2) | மாரீ | மாகாசா** = என் |
| (3) | மாபா | ரீமாகாசா = என் |
| (4) | தாச்ா | தாபாநீதா |
| | பாமா | ரீமாகாசா = என் |
| (5) | ரீ ச்ா | தாபாநீதா |
| | பாமா | ரீமாகாசா = என் |
| (6) | தச்நித | பமபமரிமகச = என் |
| (7) | தபமத | பமபமரிமகச = என் |
| (8) | பதாத | பமரிமாமகச = என் |
| (9) | தச்ரிம் | ச்ச்நீதபமப |
| | தச்நித | பமரிமாமகச = என் |
| (10) | தா*த | பமபமரிபமரி |
| | ரீ * ச | ரிமசரிமகசநி |
| | தா*த | சரிசரிமபதச் |
| | ரிம் ச் ச் | *நிதபரிமகச = என் |

(பத) ப = என்னுடு = எந்நாள்

தயவச்சுனோ = தயவு வருமோ?

இனகுலதிலகா = சூரிய வம்சத்திற்கு திலகம் போன்றவனே.

அ = பன்னகசயன = நாகணைமேற்பள்ளி கொண்டவா!

நாது = என்னுடைய

பரிதாபமுலனு = பரிதாபங்களை

தீர்ச்சுட்ட = தீர்க்க

ச = கரி = யானை

மொரவிடகனி = முறையிடுவதைக்கண்டு

வச்சி = வந்து

கனிகாமுதோ = தயையோடு

ப்ரோவலேதா = காப்பாற்றவில்லையா?

தாபடிஹரியனி = உலகத்தையளந்த ஹரியே யென்று

பிலுச்சின = அழைத்த

த்ரௌபதியனி = திரௌபதியை

ப்ரோவலேதா = காப்பாற்றவில்லையா?
சிரஜீவித்வாதி = சிரஞ்சீவி முதலான
வரமுலொஸகு = வரங்களைக் கொடுக்கும்
வாடனுச்சு = அவனல்லவா?
சரணமுலனு = (உன்னுடைய) பாதங்களை
நெரநம்மிதி = முற்றிலும் நம்பினேன்
வரதவெங்கடேச்வரநீ = வரத்தைக் கொடுக்கும் வெங்கடேச்
[வரனே!

(பொழி) சூரிய வம்சத்திற்குத் திலகம் போன்றவனே! நாகணை மேற்பள்ளி கொண்டவனே! வரத்தைக்கொடுக்கும் வெங்கடேச்வரனே! யானை முறையிடுவதைக்கண்டு தயவுடன் வந்து காப்பாற்றவில்லையா? உலகத்தையளந்த ஹரியேயென்று கூவி அழைத்த திரௌபதியைக் காப்பாற்றவில்லையா? சிரஞ்சீவி முதலான வரங்களைக் கொடுக்குமவனல்லவா? உன்னுடைய பாதங்களையே முற்றிலும் நம்பியிருக்கிறேன். என்னுடைய பரிதாபங்களைத் தீர்க்க என்னுள் உனக்கு தயவு வருமோ?

ஸஹாநராகம்—சதுர்சர ரூபகதாளம்—கால்க்களைச்சவுக்கம்

த்ருதம் அரையிடத்தில் எடுப்பு.

ஆ = ச, ச—ரி, அ—க, சு—ம, ச—த, கை—நி,

அவ = ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப = ராமாஇகநன்னுப்ரோவராதா
தயலேதா ஸ்ரீ =

அ = தாமஸம்புசேஸிதிஇக
தாளனு பருலனு வேடனு

சர = ஆநசத்ருவுலனுபெட்டி.
ஹதமுசேஸிபூர்வார்ஜித
கோரபாபமுலனு
கொட்டிநாஜேஸிநாட்ட
நேரமுலனு மன்னிஞ்சி



OFFICE OF THE REGISTRAR OF JOINT STOCK COMPANIES
REGISTERED
18 MAY 1916
MADRAS.

நீவேகாவலேகா
வேரெவருன்னாரு ஸ்ரீ
வெங்கடேச்வராபிகரா

| | O | \| |
|---|---|---|
| ப = | **ரீ | ரீ**ரீகா |
| | **ரா | மா**இக்க |
| | மா** | பாகா**மா |
| | ந ** | ன்னுப்ரோ**வ |
| | ரீகரி | சா**நீதா |
| | ரா— | தா**தய |
| | நீ ** | சா**பமகம |
| | லே** | தா**ஸ்ரீ—— |
| (1) | ரிச =ரீ | ரீ**ரிகமப |
| | இ——=ரா | மா**இ—க-- |
| | ரிகமப | மபகா**மா |
| | நன்— | னு-ப்ரோ**வ |
| (2) | ரிச =ரீ | ரீ**ரிகமப |
| | இ——=ரா | மா**இ—க— |
| | நிததப | மாபமகமரீ |
| | நன்— | னுப்ரோ—வ |
| | சநிசரி | ரீகரிசா--நிசநித |
| | ரா—— | தா——த—ய— |
| | நிசரிக | மபாம—-கமரிச |
| | லே— | த——ஸ்ரீ— |
| (3) | நிச =ரீ | ரீ**ரிகமப |
| | இ——=ரா | மா**இ—க— |
| | ரிகமப | தாபமதநிச்ரா |
| | நன்—— | னுப்ரோ—வ |
| | நிச்ரீக்ரீ | ச்ரா*நி—நிச்தா |
| | ரா—— | தா*—த—ய |
| | நிச்நித | பமபமகமரிச |
| | லே—— | ——த——ஸ்ரீ |
| (4) | நிச =ரீ | ரீ**ரிகமப— |
| | இ——=ரா | மா**இ—க— |
| | ரிகமப | தாபமதநிச்ரீ |
| | ந——ன் | னுப்ரோவ--—— |
| | நிச்த்ரா | பாதநிச்ரீச்ரா |
| | த—— | ய லே—— |
| | ரிகமப | தநீதபமகம |
| | த—— | ——ஸ்ரீ—— |

| | O | \| |
|---|---|---|
| (5) | ரிச =ரீ | ரீ ** ரிகமப |
| | இ—=ரா | மா** இ—க— |
| | நீ ** | தபமாகாமா |
| | நன்** | ஞ—ப்ரோவ |
| | ரீகரி | சா** நிசநித |
| | ரா— | தா ** த—ய— |
| | நீ ** | சா ** = |
| | லே** | தா ** = |
| அ= | **நீ | தாபா**மா |
| | **தா | மஸம்** பு |
| | தா** | நீச்ா ரீச்ா |
| | சே** | லிதிஇக |
| (1) | **நிச் | நிதபதபதபம |
| | **தா— | ம—ஸம்—பு— |
| | தா** | நீச்ாரீச்ா |
| | சே ** | வீதிஇக |
| | நீ ** | நிச்தாநிதபா |
| | நா ** | ள—ஞ ப—ரு |
| | தபமா | ககாரீசா |
| | | க |
| | வ—ஞ | வே—டஞ |
| (1) | பமதப | நிதபமகமரிச |
| | வ—ஞ— | வே—ட—ஞ— |
| | நிச=ரீ | ரீ **= |
| | உ—=ரா | மா**= |
| சா= | **தா | பாபமபாதபமா** |
| | **ஆ | ரு ச——த்ரு** |
| | க கா | கரி—கமபாபா |
| | க | |
| | வு ல | ஞ—பெ—ட்டி |
| | ரீகா | மாபதநீதா |
| | ஹ த | முசே—வி |
| | பாதபமா | ககாரீசா |
| | | க |
| | பூ—ர் | வா—ர்ஜித |
| | நீ நீ | சாதாநீதபா |
| | கோ— | ரபா——ப |
| | பாமா | தாரீசாரீ |
| | மு ல | ஞ—— |
| | ரீகா | மாபாதபம |
| | கொ— | ட்டிஞ— |



| O | \| |
|---|---|
| காகா | காரீகரிசா |
| சே— | விநா—ட்ட |
| **சா | பாமாதாதா |
| **நே | ரமுலஞ |
| நீ ** | ச்நிச்ரச்ா ** |
| மன்** | ணி—ஞ்சி** |
| ச்நிச்ரி | நீநிச்தாநித |
| நீ— | வே—கா— |
| பாமா | தாநீச்ா** |
| வ— | லே—கா** |
| **நிச் | ரீ ** ரீரீ |
| **வே— | ரெ**வ்வரு |
| ரிக்மா | க்ாம்ாரீச்ா |
| ன்ஞ— | ரு—ஸ்ரீ— |
| ரிச்நீ | நிச்தாநிதபா |
| வெம்— | க—டேச்வ— |
| பமதப | நிதபமகமரிச |
| ரா— | பி—க—ரா— |
| நிச =ரீ | ரீ**= |
| அ—=ரா | மா**= |

## பல்லவிக்கு கற்பனஸ்வரம்

| | | |
|---|---|---|
| | **ரா | மாஇக |
| (1) | **பா | மாகாமாரீ |
| | சா=ரா | மாஇக |
| (2) | ** நீ | சாரீகாரீ |
| | சா=ரா | மாஇக |
| (3) | ** நீ | **தபமகாம |
| | ரிச=ரா | மாஇக |
| (4) | **பம | தபநிதபமகம |
| | ரிச=ரா | மாஇக |
| (5) | ** த நி | சரிகமபமகம |
| | ரிச=ரா | மாஇக |
| (6) | ** பா | *மகா*மரிக |
| | ரிச=ரா | மாஇக |
| (7) | ததபப | மகாமரிகரிச |
| | நிச=ரா | மாஇக |
| (8) | பமதத | * நிச்ரிக்மாக் |
| | ரிச்நிநி | *தபமகமரிச |
| | நிச=ரா | மாஇக |

| O | \| |
|---|---|
| (9) பாமத | பமபமகமரிச |
| நீசரி | சரிபமநிதபம |
| தாநிச் | ரிச்ம்க்ாம்ரிச் |
| நிநீத | பமககாமரிச |
| நிச = ரா | மாஇக |
| (10) தா*நி | ததபமததநிநி |
| ச்ா*ரி | நிச்ரிச்ரிரிம் |
| க்ம்ரி | ரிக்ச்ரச்ரிநீ |
| நிச்தநி | பமநிதபமகம |
| ரிச = ரா | மாஇக |

(பத) ப = ராமா இக = ராமா! இன்னும்

நன்னு = என்னை

ப்ரோவராதா = காப்பாற்றப் படாதா?

தயலேதா ஸ்ரீ = தயவில்லையா? ஸ்ரீ

அ = தாமஸம்பு = தாமதம்

சேஸிதி = செய்கிறாய்

இக = இன்னும்

தாளனு = பொறுமையாக

பருலனு = உரத்த குரலுடன்

வேடனு = வேண்டுகிறேன்

ச = ஆருசத்ருவுலனு = ஆறுவித *விகாரங்களான சத்துருக்களா [லுண்டாகும்

பெட்டி = கஷ்டத்தை

ஹதமுசேஸி = நிர்மூலஞ்செய்து

பூர்வார்ஜித = முன் தேடின

கோரபாபமுலனு = பயங்கரமான பாவங்களை

கொட்டி = அடித்துத் துரத்தி

நாசேஸின = நான் செய்த

ஆட்டநேரமுலனு = விளையாட்டான குற்றங்களை

மன்னிஞ்சி = மன்னித்து

*ஆறுவிதவிகாரங்கள் = காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம் மாத்சரியம்.

# இராக லக்ஷணம்.

160-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## 26. பூர்ணசந்திரிகாராகம்–29–வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ = ச, ச–ரி, அ–க, சு–ம, ப, ச–த,

அவ = ச, கா–நி, ப, சு–ம, அ–க, ச–ரி,

### இலக்கணம்.

"ஸம்பூர்ணஸ்ஸக்ரஹோபேதோ
ராகோயம்பூர்ணசந்திரிகா
அவரோஹேதவர்ஜ்யஸ்யாத்
கவக்ரஸ்ஸார்வகாலிக:"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) பூர்ண சந்திரிகாராகம் ஸம்பூர்ணம், ஷட்ஜக்ரஹம் அவரோவ ணத்தில் த– யென்ற ஸ்வரம் வர்ஜம், க– யென்ற ஸ்வரத்தை வக்ரமாகப்பாட வேண்டும். இந்த ராகம் எக்காலத்திலும் பாடத்தகுந்தது.

குறிப்பு:—முற்கூறிய ச்லோகத்தின் கருத்திற்கிணங்க அவரோஹகணத்தி யட்டிலும் சநிபமகமரிசா–யென்றும் ஆரோஹணத்தில் நிஷாதம் சேர்த்தும் பாட வேண்டுமென்ருகிறது. ஆனல் ஆன்ேறார் பாடியிருக்கும் கீர்த்தனைகளில்லவாறி லாமல் ஆரோஹணத்தில் சரிகமபதபசா– யென்றும் அவரோஹணத்தி சநிபமகமரிசா– யென்றும் ஸ்வரஸஞ்சாரஞ் செய்திருப்பதாகத் தெரியவருகிறது

### இராக ஸஞ்சாரம்

(1) சரிகமபதபச்ா****ச்நிபமகமரி**சா****–

(2) ரிகமபதா**தபச்ா****ச்நிபா**–ரிச்நிபமாபமகமரி****கமபகாரிசா****–

(3) பமதபச்ா****தபச்நிரி****–க்ம்ரிச்நிப–தரிச்நிப–நிபமகமரி****–பமதபச்நி–பமகமரி****கமபகமரிசநிபரி****சா****–

(4) பா**பாநிபபமம****–பமகமரிகமபா****–ரிகமபா**மதா****தபச்ா****–

தபச்நிரி****–க்ம்ரீச்நிபா****–ரீரி*ச்நிப–தரீச்நிப–நிபமகம–ரிகமபகமரி–
சா****–

(5) மகமரீ*கமப–ரிகமதா**தபச்நிரி****க்ம்ரீச்நிப்ரீரீச்நி–பநிபா*–
மகமரிகமபா****–சரிகமபரிகமபத–கமபதபச்நிபமகமரீ****–கமபகமரி
சநிபா****ரீ****சா******–

## 27. பூபாலம்–15–வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ=ச, சு–ரி, அ–க, ப, சு–த,

அவ=ச, சு–த, ப, அ–க, சு–ரி,

### இலக்கணம்.

“பூபாலஸ்ஸக்ரஹோபேத
ஔடவோமநிவர்ஜித:
ப்ராத: காலேககாதவ்ய
ஸ்ஸர்வஸம்பத்ப்ரதாயக:”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) பூபால ராகம் ஷட்ஜக்ரஹம், ஔடவராகம், ம–நி–இந்த ஸ்வரங்களை வர்ஜிக்கவேண்டும். இந்த ராகத்தை அதிகாலையில் பாடுகிறவர்களுக்கு ஸர்வஸம்பத்துக்களையும் கொடுக்கிறது.

குறிப்பு:—இந்த ராகம் 8 அல்லது 9-வது மேளகர்த்தாவில் ஜன்யமென்று சாஸ்திர ஸம்மதம். அனுபவத்திலவ்வாறில்லை. அதாவது ஸாதாரண காந்தார மன்னியில் அந்தர காந்தாரத்தைச் சேர்த்துப்பாடிவருவதால் 15-வது மேளகர்த்தாவில் ஜன்யமென்று எழுதப்பட்டது.

### இராகஸஞ்சாரம்.

(1) சரிகபா**தச்ா****–ச்தா****ப–கதபகபகா**ரிசா******–

(2) கரிகா**கா**–காபககரிரீ**–ரீகரிரிசசா****–சதா****–சரிகரிகபா****–
பா**–பாதபாதபகா**–பதபச்ா****–ச்தபகதபகா****ரிசா******–

(3) பகபா****பா**–பாதபாதபகா**ப–ரிகபா****பகபதா**ப–கபதபதச்தா**–
ப–ககதபா*த–ரிகபா**த–சரிகபா*த–தசரிகபா*த்–பகதபகரிசா****–
தச்ரிகபதா*ப–கபதச்ா****–தச்ரீச்ரீக்ா**ரீ–



ச்ாரீக்ரீக்ச்ா****–ச்தா****கபதச்ா****ச்தா**பகபதபதச்தா**ப–கதபகா***–
ரி–ரிகபகரிசா******–

(4) சரிகரிகா****கா****–கபகா**கா**–கபதபகபகா****ரி–
சரிகரிகபா****பா****–பாதபபககா****–கபதபா**தபதச்தா****ப–
கபதபதச்ா****ச்தா****ப–கபதச்ரீக்ா****ரீ–ச்தரீச்ா****ரீச்ச்தா****ப–
பகதபச்தா****ப–கரிபகதபச்தா****ப–ரிசகரிபகதபச்தா****ப–
கபதா****ப–கதபககபகா****ரி–சரிகரிகபகா****ரிசா******–

(5) பா**கரிச–தா****பகரிச–ச்ா****ச்தபகரிச–ரீ****ரீச்தபகரிச–
ரிகரிகபகபசப–தச்த–ச்ரீச்–ரீக்ரீக்ப்க்ா****ரீ–
ச்ாரீக்ரீக்ச்ா****ச்தா****–பாதச்தச்தா****பகரி–கபதச்ா****–
ரிகபதச்ா****–சரிகபதச்ா****–தசரிகபதச்ா****–தரீச்தக்ரீ–ப்க்ரீச்
தப–கபதரீரீ****ச்தப–கதபதா****பகரி–கப
ரீகபகப–கா****ரி–சா******–

## 28. வேகவாஹினி–16–வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ=ச, சு–ரி, அ–க, சு–ம, ப, ச–த, கை–நி,

அவ=ச, கை–நி, ச–த, ப, சு–ம, அ–க, சுரி,

### இலக்கணம்.

“கேபாஷட்ஜக்ரஹோபேத
“ஸம்பூர்ணவேகவாஹினீ”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்). வேகவாஹினியென்ற ராகம், ஷட்ஜக்ரஹத்தைச் சேர்ந்தது, ஸம்பூர்ண ராகம்.

குறிப்பு:—சில கிரந்தங்களில் ஆரோஹணத்தில் சரிகமபதநிதசா–யென்று ஸ்வரமெழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்கள் பாடியிருக்கிற “வீணாபுஸ்தகதாரிணி” என்ற கீர்த்தனையில் ஆரோஹணத்திலெல்லாம் சமகம்–பதநிச்ா–யென்று ஸ்வரஸஞ்சாரஞ் செய்யப்பட்டிருக்கிறதேயன்றி சரிகமபதநிச்ா–

யென்று ஒரு இடத்திலாவது ஸஞ்சரித்ததாகயில்லை ஆனுல் ச்லோகத்தில் மட்டிலும் "வெங்கட்டமுகி" ஸம்பூர்ண ராகமென்று சொல்லுகிருர். ஸம்பூர்ணமாகயிருக்கும் விஷயத்தில் மேளகர்த்தாவான "சக்கரவாக" ராகத்திற்கும் இதற்கும் யாதொரு பேதமுமில்லை. சதுர்தண்டிப்ரகாசிகையில் "வேகவாஹினி" ராகத்தையே மேளகர்த்தா ராகமாகச் சொல்லப்படுகிறது. இந்த ராகத்தைப்பற்றிப் பல அபிப்பிராய பேதங்கள் காணப்படுவதால் இங்கு ஆசிரியர் பாடிய கீர்த்தனையின் ஸஞ்சாரக்கிரமத்தை அனுஸரித்து ஸ்வரமெழுதப்பட்டது.

## ஸ்வரஸஞ்சாரம்

(1) சமகமபதநிதாநிச்ா****—ச்நீ**தபமகரீ****ச—

(2) மகமபா****—பாதநிதா**நி—தநிச்ா****—ச்நிச்ரீ****ச்நிச்நிதபமா****—
கமபதா**பமக—பமகமகரீ****ச—

(3) சமகமபா*ம—பதபதநீ*த—தநிதநிச்ா*நி—ச்ரீச்ம்ா**க்—ரீக்ரீச்நித—
நிச்ரீநிரிச்ா****ச்நித—பதநிச்ா**ச்நித—மபதநிச்ா**ச்நித—மகமபதநிச்ா**—
ச்நித—சமகமபதநிச்ா**ச்நித—பமபதநிதாப—மகமபாமகமகரி—கமா**—
கரிகரிசா****—

(4) கமபதா*நிபதபநீ*தபம—கமபாதபாதபமகா*ரி—கமா****கரிசநிதா****—
நிசமகாமபதமபா****—மபதநீ*தபமகமபதா*நி—பதநிச்ா****—ச்நிச்ம்ா**க்—
ரீக்ரீச்நிதா**—நிச்ரீரீ*ச்நித—நிச்ா****—பதநிச்ா****மபதநிச்ா****—
மகமபதநீ*ச்ரீச்—நிதநீ****தபம—கமபதா**பமக—பமகமா**கரீ****—
கமகரிசா****—நிதநீ****சா******—

(5) மாபா பமகா*மபா—மாநீநிதநா*நிச்ா—நிச்நிக்ா**ரீச்நி—தநிச்ரீ**ச்—
ம்க்ம்ாபம்க்ா**ரீ—ச்ம்க்ரீச்—க்ரீச்நீத—ரீச்நிதாப—தநிச்பதநி—மபதகமப—
சமகமபதநீ**தபப—கமகமபத—மதபா**மகரிகமகா**மரிகசரீ****ச—
நிதநீ****கரிசா******—

இன்னும்வரும்

பத்திராதிபர்

# நீதி

## ச்ருங்காரசதகம்

### 28-வது பக்கத்தின் தொடர்ச்சி.

ஸபரப்ரதாரகோஸௌநிந்ததிபோளீகபண்டிதோயுவதீ:
யஸ்மாத்தபஸோபிபலம்ஸ்வர்க்க: ஸ்வர்க்கேபிசாப்ஸரஸ: (72)

(இ—ள்) மாதர்களை யிகழும் போலிப்பண்டிதன், பிறரை ஏமாற்றுகிருன்; ஏனெனில் சாந்திராயணம் முதலிய தவத்திற்கும் பலன் ஸுவர்க்கமே; அங்கும் ஊர்வசீ முதலிய தேவதாஸிகளின் சேர்க்கையே ஏற்படுகிறது.

மத்தேபகும்பதளநேபுவிஸந்திசூரா:
கேசித்ப்ரசண்டம்ருகராஜவதேபிதக்ஷா:
கிந்துப்ரவீமிபலிநாம்புரத: ப்ரஸஹ்ய
கந்தர்ப்பதர்ப்பதளநேவிரளாமநுஷ்யா: (73)

(இ—ள்) பூலோகத்தில் மதம்பிடித்த யானைகளின் கும்பத்தைப் பிளப்பதில் வல்லமையுள்ள தீரர்களிருக்கின்றனர்; வேறு சிலர் கடுங் கோபமுள்ள மிருகேந்திரனைக் கொல்வதி ஸமர்த்தர்களாயிருக்கின்றனர்; ஆனுல் பலமுள்ளவர்களின் முன்பு கையையுயர்த்தி "கைகளின் பலத்தினுலாவது, புத்தியின் பலத்தினுலாவது, மன்மதன் கொழுப்பையடக்குவதில் ஸாமர்த்தியமுள்ள மனிதர்கள் பெரும்பாலுமில்லை" எனக்கூறுவேன்.

ஸன்மார்க்கேதாவதாஸ்தே ப்ரபவதிரநரஸ்தாவதேவேந்த்ரி [யாணாம்
லஜ்ஜாம்தாவத்விதத்தேவிநயமபிஸமாலம்பதேதாவதேவ
ப்ருசாபாக்ருஷ்டமுக்தாச்ரவணபதகதாநீலபக்ஷ்மாணஏதே
யாவல்லீலாவதீநாம் ஹ்ருதித்ருதிமுஷோ த்ருஷ்டிபாணா:

(இ—ள்) அறிவாளியாயிருப்பினும் மனிதன், புருவமென்னும் வில்லாலிழுத்து விடப்பட்டவைகளும், செவிகளையடையந்தவைகளும் கருத்த இமைகளையுடையவைகளும், தைரியத்தைப் போக்குபவைகளுமான நங்கையர்களின் கண்களென்னும் பாணங்கள் ஹ்ருதயத்தில் விழும்வரைதான் மறைகள், மறைகள் கருத்தை மறையாதுரைக்கும் ஸ்மிருதிகள் இவைகள் கூறிய வழியில் நடக்கிறான்; இந்திரியங்களை அடக்குவதில் சமர்த்தனாகிறான்; செய்யத்தகாத காரியங்களைச் செய்ததமையால் மனவருத்தமடைதலாகிய லஜ்ஜையையடைகிறான்; வணக்கத்தை மேற் கொள்ளுகிறான்.

> உன்மத்தப்ரேமஸம்ரம்பாதாரபந்தேயதங்கநா:
> தத்ரப்ரத்யூஹமாதாதும்ப்ரஹ்மாபிகலுகாதர: (75)

(இ—ள்) மங்கையர்கள் தீராவிருப்பத்தின் வேகத்தால் தொடங்கிய காரியத்தைத் தடுக்க ப்ரும்மனும் சமர்த்தனன்று.

> தாவந்மஹத்வம்பாண்டித்யம்குலீநத்வம்விவேகிதா
> யாவஜ்ஜ்வலதிநாங்கேஷுஹத: பஞ்சேஷுபாவக: (76)

(இ—ள்) தீயோனான மன்மதனென்னுந் தீ, உடலில் பற்றுமுன் தான் பெருமையும், பண்டிதனாயிருக்குமையும், நற்குலத்திலுண்டானமையும், அறிவுடைமையும் உண்டாம். (அதன்பின் அவ்வாறிருப்பது கூடாமை)

> சாஸ்த்ரஞ்ஞோபிப்ரகுணிதநயோப்யாத்தபோதோபிபாடம்
> ஸம்ஸாரேஸ்மிந்பவதிவிரலோபாஜநம்ஸத்கதீநாம்
> யேனைதஸ்மிந்நிரயநகரத்வாரமுத்காடயந்தி
> வாமாக்ஷீணாம்பவதிகுடிலாப்ரூலதாகுஞ்சிகேவ (77)

(இ—ள்) இப்பிறவிக்கடலில் சாஸ்த்ரங்களைக் கசடறக்கற்றுணர்ந்தவனாயினும், நீதி சாஸ்திரங்களை நன்கு சோதனை செய்தவனாயினும், நன்கு ஞானமுள்ளவனாயினும் நற்கதியையடைவது அருமை; ஏனெனில் இந்த ஸம்ஸாரத்தில் அழகான விழிகளையுடைய நங்கைகளின் கோணலான, கொடிபோன்ற புருவம் நாடகமேடையில் வேஷம் வருவதைத் தெரிவிக்குங் குஞ்சிகைபோல நரகலோகத்தின் வாசற் கதவைத் திறந்து விடுகிறதே!



> க்ருச: காண: கஞ்ஜ: ச்ரவணரஹித: புச்சவிகலோ
> வ்ரணீபூயக்லிந்ந:க்ரிமிகுலசதைராவ்ருததநு:
> க்ஷுதாக்ஷாமோஜீர்ண:பிடரககபாலார்ப்பிதகள:
> சுநீமந்வேதிச்வாஹதமபிசஹந்தேவமதந: (78)

(இ—ள்) உணவின்மையால் சதைப்பற்றுச் சிறிதுமின்றி எலும்புகளால் மட்டும் எஞ்சியதும், பொட்டையானதும், நொண்டியானதும், காதறுபட்டதும், வாலிழந்ததும், எங்கும் காயமுள்ளதும், ஊந்தண்ணியால் நனைந்ததும், புழுக்களின் கூட்டத்தால் நிறைந்த சரீரத்தையுடையதும், பசியினால் இளைத்ததும், மூப்பினால் தளர்ந்த எலும்புப் பூட்டுகளையுடையதும், கழுத்தில் ஓட்டைச் சட்டியையுடையதுமான நாயும், பெண்ணைப் பின்தொடருகிறது; ஏனெனில் மன்மதன் நஷ்டமான பிராணியையும் பீடிக்கிறான்.

> ஸ்திரீமுத்ராம்குஸுமாயுதஸ்யஜயிநீம்ஸர்வார்த்தஸம்பத்கரீம்
> யேமூடாப்ரவிஹாயயாந்திகுதியோமித்யாபலாந்வேஷிண:
> தேதேநைவநிஹத்யநிர்த்தயதரம்நக்நீக்ருதாமுண்டிதா:
> கேசித்பஞ்சிகீக்ருதாச்சஜடிலா:காபாலிகாச்சாபரே (79)

(இ—ள்) அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களுக்குக் காரணமாயும், மன்மதனுக்கு வெற்றியைக் கொடுப்பதுமான ஸ்திரீ முத்திரையைத் தள்ளிவிட்டுப் பெரும்பாலும் பொய்யான மோக்ஷத்தை விரும்பிச் செல்லும் மூடர்களை மன்மதன், தனது முத்திரையை அவமதித்த கோபத்தால் தயையின்றிக் கெடுத்துச் சிலரை உடையற்றவர்களாயும், சிலபேரை குடுமியற்றவர்களாயும், சிலபேரை ஐந்து குடுமியுள்ளவர்களாயும், சிலபேரை சடைதரித்தவர்களாயும், சிலரை கையில் கபாலமெடுத்துப் பிச்சைவாங்குபவர்களாயும், செய்துவிடுகிறான். (லோகத்தில் கடுமையான ஆஞ்ஞையையுடைய மன்னவர்கள், தனது கட்டளையை மீறியவர்களில் சிலரை பொருளனைத்தையும் பறிமுதல் செய்து கட்டத் துணிபற்றவர்களாயும், சிலரை மொட்டையாக

ளாயும், சிலபேரை பாதி கத்தரித்த குடுமியுடையவர்களாயும், சிலபேரை ஜடாதாரிகளாயும், சிலபேரை பிச்சையெடுப்பவர்களாயும், செய்வதுபோல் மன்மதன் தனதாஞ்ஞாரூபமான ஸ்திரீகளை அவமதித்தவர்களைப் பலவாறு தண்டிக்கிறுனென்பது கருத்து.)

விச்வாமித்ரபராசரப்ரப்ருதயோவாதாம்புபர்ணாசநா:
தேபிஸ்திரீமுகபங்கஜம் ஸுலலிதம்த்ருஷ்ட்வைவ மோஹம் [கதா:

சால்யந்நம்ஸக்ருதம்பயோததியுதம்யேபுஞ்ஜதேமாநவா
ஸ்தேஷாமிந்திரிய நிக்ரஹோயதிபவேத்விந்த்ய: ப்லவேத்ஸா [கரே (80)

(இ—ள்) காற்று, நீர், சருகுகள் இவைகளையே உண்வாகவுடைய விச்வாமித்திரர், வியாஸர் முதலிய பெருமை பொருந்திய முனிவர்களும் மாதர்களின் மனோகரமான தாமரை மலர்போன்ற முகத்தைப் பார்த்தே மோஹத்தையடைந்தனர்; சம்பா அரிசிச் சாதத்தை நெய்யுடனும், பாலுடனும், தயிருடனும் புசிக்கும் மனிதர்கள் இந்திரியங்களை அடக்கிவிட்டால் கற்பாறைகளாகிய விந்திய பர்வதம் ஏன் கடலில் மிதக்காது?

## 5. ருதுவை வர்ணித்தல்

பரிமளப்ருதோவாதா: சாகா நவாங்குரகோடயோ
மதுரவிருதோத்கண்டாவாஜர்ப்ரியா: பிகபக்ஷிணாம்
விரளவிரளஸ்வேதோத்காராவதூவதநேந்தவ:
ப்ரஸரதிமதௌ தாத்ரயாம்ஜாதோநகஸ்யகுணோதய: (81)

(இ—ள்) காற்று, தோட்டத்திலுள்ள ரோஜா, மல்லிகை சண்பகம் நந்தியாவட்டை, பாதிரி முதலிய புஷ்பங்களின் ஸம்பந்தத்தால் சுகந்தமாய் வீசுகின்றது; மா, பலா முதலிய விருக்ஷங்களில் தளிர் கிளம்பியிருக்கிறது; கோகிலப்பேடுகள் மாந்துளிரைத் தின்று மதம்பிடித்தவைகளாயும், காகங் கூவுவதைக்கேட்டு வருத்தமடைந்தவைகளாயும், கூவுவதில் களிப்படைந்தவைகளாயுமிருக்கின்றன; ஸ்திரீகளின் மதிபோன்ற முகங்களில் வேர்



வைத்திவலைகள் அற்பமாயிருக்கின்றன; ஏனெனில், பூமியில் வஸந்தகாலம் வந்துவிட்டால் எந்த வஸ்துவுக்குத்தான் குணமுண்டாவதில்லை; (எல்லாவற்றிற்கும் குணமுண்டாகுமென்பது கருத்து).

மதுரயம்மதுரைரபிகோகிலா
கலரவைர்மலயஸ்யசவாயுபி:
விரஹிண:ப்ரஹிணஸ்திசரீரிணோ
விபதிஹந்த! ஸுதாபிவிஷாயதே (82)

(இ—ள்) இவ்வஸந்தகாலமானது மதுரமான கோகிலப்பேடுகளின் சப்தங்களாலும், மலய பர்வதத்தின் காற்று மனைவியை விட்டுப் பிரிந்தவர்களைப் பீடிக்கின்றது; அந்தோ! ஆபத்காலத்தில் அம்ருதமும் விஷமாகிறது.

ஆவாஸ: கிலகிஞ்சிதஸ்யதயிதா: பார்ச்வேவிலாஸாலஸா:
கர்ணேகோகிலகாமிநீகலரவ: ஸ்மேரோலதாமண்டப:
கோஷ்டீஸத்கவிபி: ஸமம்சதிபயைர்முக்தா: ஸிதாம்சோ: கரா:
கேஷாம்சித்ஸுகயந்தி சாத்ரஹ்ருதயம் சைத்ரேவிசித்ரா : [ஸ்ரஜ: (83)

இ—ள்) ஸமீபத்தில் ச்ருங்கார சேஷ்டைகளுக்கு இருப்பிடமானவர்களும், விலாஸத்தால் சோம்பலுள்ளவர்களுமான மனைவிகளும், செவிகளில் கோகிலப்பேடுகளின் இன்பமான குரலும், சற்று மலர்ந்த மலர்களையுடைய லதாமண்டபமும், சில சிறந்த புலவர்களுடன் சேர்ந்து பிரஸங்கஞ் செய்வதும், மனோஹரங்களான மதியின் கிரணங்களும், பற்பலவிதமான மாலைகளும் வஸந்த காலத்தில் சில ஜனங்களின் மனதைக் களிக்கச்செய்கின்றன.

பாந்தஸ்திரீவிரஹாநலாஹுதிகலாமாதந்வதீமஞ்சரீ
மாகந்தேஷுபிகாங்கநாபிரதுநாஸோத்கண்டமாலோக்யதே
அல்பாஸ்தேநவபாடலாபரிமளப்ராக்பாரபாடச்சரா
வாந்திக்லாந்திவிதாநதாநவக்ருத: ச்ரீகண்டசைலாநிலா: (84)

(இ—ள்) இவ்வஸந்த காலத்தில் வழி நடக்கும் நாயகனை விட்டுப்

பிரிந்த மாதர்களின் விரஹாக்னியை வ்ருத்திசெய்வதும் மாமரத்திலிருப்பதுமான பூங்கொத்தானது கோகிலப்பேடுகளால் ஆசையுடன் பிரக்கப்படுகிறது; புதிய பாதிரிப்பூக்களின் மணத்தைக் கவர்ந்துவருவதும், சிரமத்தைக் கவர்ந்துவருவதும், சிரமத்தைப்போக்குகின்றதுமான மலயமாருதம் வீசுகின்றது.

ப்ரதித: ப்ரணயவதீநாம் தாவத்பதமாதநோது ஹ்ருதி மாந:
பவதி ந யாவச்சந்தநதருஸுரபிர்மலயபவமாந: (85)

(இ—ள்) சந்தன விருக்ஷங்களின் வாஸனையைக் கொண்டுவரும் மந்தமாருதம் வீசும் வரையில், மனைவிகளின் தீராத கோபமானது மனதில் குடிகொள்ளட்டும் (இவ்வஸந்த காலத்தில் மந்தமான காற்று வீசும் பொழுது ஸ்திரீகள் தனது கணவன் பரஸ்திரீயிடஞ்சென்றமையாலுண்டாகிய கோபத்தையும் விட்டுவிட்டுத்தானே கணவனை அழைக்கின்றன ரென்பது கருத்து).

ஸஹகாரகுஸுமகேஸரநிகரபராமோதமூர்ச்சிததிகந்தே
மதுரமதுவிதுரமதுபே மதௌ பவேத்கஸ்ய நோத்கண்டா (86)

(இ—ள்). மாம்பூக்களின் தூளீபாரத்தின் வாசனையில் திசைகளின் முடிவையடைந்ததும், மதுரமான மதுவால் மதம்பிடித்த வண்டுகளையுடையதுமான வஸந்தகாலத்தில் யாருக்குத்தான் ஸம்போகத்தில் விருப்பமுண்டாகாது.

அச்சாச்சசந்தநரஸார்த்ரதராம்ருகாக்ஷ்யோ
தாராக்ருஹாணி குஸுமாநி ச கௌமுதீ ச
மந்தோ மருத்ஸுமநஸ: சுசி ஹர்ம்யப்ருஷ்டம்
க்ரீஷ்மே மதம் ச மதநம் ச விவர்த்தயந்தி (87)

(இ—ள்). மிகவும் நிர்மலமான சந்தனக்குழம்பால் நனைந்த மான் விழியர்களும், பம்புகள் நிறைந்த மாளிகைகளும், மல்லிகை முதலிய மலர்களும், நிலவும், நறுமணங்கமழும் மந்தமாருதமும், வெளுப்பான மாடமாளிகையும், கிரீஷ்மகாலத்தில் கொழுப்பையும், சிற்றின்பத்தையும் வ்ருத்திசெய்கின்றன.



ஸ்ரஜோ ஹ்ருத்யாமோதா வ்யஜநபவநச்சந்த்ரகிரணா:
பராக: காஸாரோ மலயஜரஜ: சீதுவிசதம்
சுசி: ஸௌதோத்ஸங்க: ப்ரதநு வஸநம் பங்கஜத்ருசோ
நிதாகர்த்தாவேதத்விலஸதி லபந்தே ஸுக்ருதிந: (88)

(இ—ள்). நறுமணங்கமழும் மாலைகளும், விசிறிக்காற்றும், சந்திரகிரணங்களும், மலர்களின் தூளிகளும், விளையாட்டுத்தடாகமும், சந்தனக்குழம்பும், சிறந்தமதுவும், க்ரீடைக்குத்தக்க மாடமாளிகையும், மெல்லிய உடையும், தாமரைமலர்போல் விசாலமான கண்களையுடைய மங்கைகளுமாகிய போகஸாதனத்தைப் புண்யவான்கள் க்ரீஷ்மருதுவில் அடைகிறார்கள்.

ஸுதாசுப்ரம் தாம ஸ்புரதமலரச்மி: சசதர:
ப்ரியாவக்த்ராம்போஜம் மலயஜரஜச்சாதிஸுரபி
ஸ்ரஜோ ஹ்ருத்யாமோதாஸ்ததிதமகிலம் ராகிணிஜநே
கரோத்யந்த: க்ஷோபம் ந து விஷயஸம்ஸர்க்கவிமுகே (89)

(இ—ள்) சுண்ணாம்பினால் சுண்ணப்பூபோல் வெளுப்பான மாடமாளிகையும் வெளுப்பான காந்தியையுடைய சந்திரனும், மனைவியின் தாமரை மலர்போன்ற முகமும், மிகுந்த நற்கந்தமுள்ள சந்தனத்தூளும் நறுமணங்கமழும் மாலைகளுமாகிய போக ஸாதனம் யாவும், சிற்றின்பத்தில் விருப்பமுள்ளவர்களிடம் துன்பத்தைச் செய்கின்றன; வைராக்கியத்தையடைந்தவனிடம் செய்வதில்லை.

தருணீவேஷோத்தீபிதகாமா
விகஸஜ்ஜாதீபுஷ்பஸுகந்தி:
உந்நதபீநபயோதரபாரா
ப்ராவ்ருட் தநுதே கஸ்ய ந ஹர்ஷம் (90)

(இ—ள்) மன்மதனை (ஸம்போகத்தில் விருப்பத்தை) உண்டாக்குவதாயும், மலர்ந்த ஜாதி மல்லிகைப்பூவா (மாலையினா)ல் வாசனையுள்ளதாயும், உன்னதமாயும் அதிகமாயுமுள்ள மேகக்கூட்டத்தை (நன்கு பருத்த கொங்கைகளின் பாரத்தை) உடையதாயும், தருணியின் வேஷம்போன்ற வேஷத்தையுடையதுமான மாரிகாலம் அனைவருக்கும் ஸம்போக விருப்பத்தையுண்டாக்குகின்றது.

வியதுபசிதமேகம்பூமய: கந்தளிக்யோ
நவகுடஜகதம்பாமோதிநோகந்தவாஹா:
சிகிகுலகலகேகாராவரம்யாவநாந்தா:
ஸுகிநமஸுகிநம்வாஸர்வமுத்கண்டயந்தி (91)

(இ—ள்) மேகங்கள் நிறைந்த ஆகாசமும், புற்பூண்டுகள் நிறைந்த பூப்பிரதேசங்களும், புதிதான குடமல்லிகை, கதம்பபுஷ்பமிவைகளின் வாஸனையைக் கவர்ந்துவரும் உத்யானவனக்காற்றும், மயில்க்கூட்டத்தின் மதுரமான கேகாசப்தங்களால் மனோகரமான காட்டுப் பிரதேசங்களும், இன்பமுள்ளவர்களுக்கும் துன்பமுள்ளவர்களுக்கும் ஸம்போகத்தில் விருப்பத்தையுண்டாக்குகின்றன

உபரிகநம்கநபடலமதிர்யக்கிரயோபிநர்த்திதமயூரா:
க்ஷிதிரபிகந்தளதவளாத்ருஷ்டிம்பதிக: க்வபாதயதி (92)

(இ—ள்) மேலே மேகக்கூட்டம் மிகுதியாயிருக்கிறது; திசைகளில் கூத்தாடும் மயில்களையுடைய மலைகளிருக்கின்றன; பூமியும் பஸவிதமான புற்பூண்டுகளால் நிர்மலமாயிருக்கிறது; ஆதலின் வழி நடப்பவன் எங்கு யிரக்கப்போகிறான். (மனைவியை விட்டுப் பிரிந்தவர்களுக்குத் துன்பமாம்).

இதோவித்யுத்வல்லீவிலஸிதமித: கேதகிதரோ:
ஸ்புரந்கந்த: ப்ரோத்யஜ்ஜலதநிநதஸ்பூர்ஜிதமித:
இத: கேகிக்ரீடாகலகலரவ: பக்ஷ்மலத்ருசாம்
கதம்யாஸ்யந்த்யேதேவிரஹதிவஸா: ஸம்ப்ருதரஸா: (93)

(இ—ள்) இம்மாரிகாலத்தில் இங்கு ஓரிடம் மின்னற்கொடி தோன்றுகிறது; மற்றோரிடம் கேதகி மலரின் கந்தம் பரவுகின்றது; இங்கோரிடம் மேக கர்ச்சனை மிகுந்திருக்கிறது; மற்றோரிடம் மயில்கள் கூவி விளையாடும் சத்தம் விர்த்தியடைகின்றது; நல்ல விழிகளையுடைய நங்கையருக்குச் சிற்றின்பத்தை மூட்டிவிடும் இந்நாட்கள் எவ்வாறு கழியப்போகின்றன.

தொடரும்

Pandit, M. M. Narayanasamy Iyer,
Mudikondan.

# கனகாவளி

32-வது பக்கத்தின் தொடர்ச்சி

அரசி:— அவள் எனக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது ஒன்றும் வேண்டாமென்றுதான் சொன்னாள். இருந்தாலும் நான்தான் அவளைக் கட்டாயப்படுத்தி, மாதலம்பழஷர்ப்பத்தும் பாலுங்கலந்துவைத்திருந்ததில் கொஞ்சம் சாப்பிடச்சொன்னேன் அப்பொழுது சுமார் $3\frac{1}{4}$ மணியிருக்கலாம். உடனே தன்னுடைய அறையில்போய்ப் படுத்துக்கொண்டு "என்னுடைய வயிற்றைக் குமட்டுகிறது. ஒருவிதமான மயக்கமுமுண்டாயிருக்கிறது. நான்தான் அப்பொழுதே சொன்னேனே" என்றுசொல்லி படுக்கையில் படுத்ததும் ரத்தம் ரத்தமாய்க்கக்க ஆரம்பித்தாள். உடனே நம்முடைய வயித்தியருக்குச் சொல்லியனுப்பி அவர் வந்ததும், அவளை வைத்திய அறைக்குக்கொண்டுவரும்படிசொல்லி வேண்டிய சிகிச்சைகளைச்செய்து அவ்விரத்தங்கக்குதலை மட்டுப்படுத்தினார். உடனே அவள் அயர்ந்து நித்திரைபோய்விட்டாள். பிறகு உங்களுக்கு மந்திரியின் மூலமாய் ஆள் அனுப்பி நீங்கள் வந்தபிறகுதான் மறுபடியொருமுறை ரத்தங்கக்க ஆரம்பித்தாள்.

அரசன்:— ஆகாரம் வேண்டாமென்று சொல்லும்பொழுது கட்டாயப்படுத்துவது எப்பொழுதும் மிகவுந்தப்பான காரியம். வயித்தியரிடத்தில் இதற்குக்காரணம் யாதாயிருக்கலாமென்று கேட்டாயா?

அரசி:— வைத்தியர்தான் இன்றைக்கு என்னிடத்தில் அவள் சாப்பிட்ட ஆகாரம் என்னவென்று கேட்டார். நான் அதற்குப்பதில் விபரமாய்ச்சொன்னேன். பிறகு அவர் கக்கிய ரத்தங்களை ஓர் புட்டியில் சேகரித்து வைத்து அதைப்பரிசோதனைசெய்து அவ்வாறு கக்குதற்குக் காரணம் இன்னவென்று கண்டுபிடிக்கப் போவதாகச்சொன்னார்.

அரசன்:— அவர் உன்னிடத்தில் கேட்ட கேள்வியிலிருந்து ஆகாரத்தில் தான் ஏதோ தவறுதல் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று அவர்

அபிப்பிராயப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. இன்றைக்குச் சமையல் செய்தது யார்? அவைகளெல்லாவற்றையும் சோதித்துப்பார்த்த பிறகல்லவா அவளுக்கு உன்னுடைய பார்வையில் ஆகாரங்கொடுக்கும்படி கட்டளையிட்டிருந்தேன். அவ்வாறு இன்றைக்கும் நீ செய்தாயா இல்லையா?

அரசி:— ஆகாரத்தில் ஒருவிதமான தோஷமுமில்லையென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஏனென்றால் மீதியிருந்ததை நான்தான் சாப்பிட்டேன்.

அரசர்:— எப்படியிருந்தாலுஞ் சரி. நம்முடைய கனகாவளி எல்லோருக்குங் கவலையையுண்டுபண்ணத்தக்க நோய்க்கு ஆளாகிவிட்டாள் படுத்துறங்குமுன் ஒருமுறை அவளைப்பார்த்து வருகிறேன் என்று சொல்லி வைத்திய அரையை நோக்கிச்சென்று அங்கு இன்னும் தூங்கிக் கொண்டிருக்கும் புதல்வியின் முகத்தைப்பார்த்ததும் "ஆபத்பாந்தவா, ஒன்றுமறியாத என் குழந்தைக்கு இப்பொழுது வந்துள்ள கஷ்டத்தை நீதான் தீர்க்கவேண்டும்" என்று சொல்லி அங்குள்ள தாதிகளையும் வைத்தியரையும் சிப்பாய்களையுங்கண்டு ஜாக்கிரதையாயிருக்கும்படி சொல்லிவிட்டு அந்தப்புரத்திற் சென்று நித்திரை போயினர். இப்பொழுது மணி சுமார் 10 இருக்கும்.

தாதிகளையும் சிப்பாய்களையும் ஒருவர் மாற்றி ஒருவர் தயாராய் விழித்துக்கொண்டிருக்கும்படிக்கும் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனே தன்னை எழுப்பும்படிக்கும் உத்தரவு செய்துவிட்டுத் தன்னுடைய அரைக்குள் போய் வைத்தியர் படுத்துக்கொண்டனர். அங்குமிங்குமுலவிப்பாராக்கொடுத்துக்கொண்டிருக்கும் சிப்பாய்களின் மெல்லிய காலடிச் சத்தத்தைத்தவிர அரண்மனையில் எங்கும் நிசப்தமாயிருந்தது. பற்பலவிடங்களிலும் விளக்குகள் பிரகாசமாயெரிந்துகொண்டிருந்தன. அரசர் போர்க்களத்தினின்றும் அதிவிரைவாய்ச் சவாரிசெய்துவந்த அலுப்பினால் அயர்ந்து நித்திரைபோய்விட்டனர். அரசியின் மனமோ ஒரு நிலையில் நில்லாது அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டிருந்தமையால் அவளால் தூங்கமுடியவில்லை. இச்சமயத்தில் தான்மட்டுந் தன்னைச்சுற்றியுமுள்ளவைகளைப் பார்ப்பதற்கான இரண்டு துவாரங்களையுடைய ஓர் மஞ்சள் நிறமுள்ள போர்வையினால், தன்னைப்பிறர் இன்னாரென்று அறியாவண்ணம்



போர்த்துக்கொண்டு வந்திருப்பதுபோல், வைத்திய அரையில் கனகாவளி படுத்துறங்கும் சப்ரமஞ்சத்தின் பக்கத்தில் ஓர் உருவந்தோன்றிற்று. அங்கே தன் முகமெல்லாம் வெளுத்துத் தலைவிரிகோலமாய்ப் பரப்பிய கைகளுடன் தன் பிரக்ஞையில்லாது நித்திரை செய்துகொண்டிருக்கும் ராஜகுமாரியைக் கண்டதும் அவ்வுருவந் திடுக்கிட்டுப் பின்வாங்கியது போல்த் தோன்றிற்று. அச்சமயம் சப்ரமஞ்சத்தைச் சுற்றித் தாதிகளெல்லோரும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவள்மட்டும் ஏதோ ஒரு புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அங்கு பிரகாசமாய் எரிந்துகொண்டிருக்கும் ஓர் விளக்கின் வெளிச்சத்தில் வாசித்துக்கொண்டிருந்தாள். அவ்வெளிச்சத்தினால் கனகாவளியின் தூக்கத்துக்கு ஒருவிதமான இடைஞ்சலும் ஏற்படக்கூடாதென்று அவள் படுத்துறங்குஞ் சப்ரமஞ்சத்திற்கும் அவ்வெளிச்சத்துக்கும் நடுவே ஒரு திரை கட்டப்பட்டிருந்தது. இவ்வாறு வாசித்துக்கொண்டிருந்த பெண் அடிக்கடி அத்திரையை நீக்கி இளவரசியின் முகத்தைப் பார்த்தவண்ணமாகவேயிருந்தாள். அப்படி ஒரு சமயம் பார்க்கும்பொழுது அச்சப்ரமஞ்சத்தினருகில் யாரோ நிற்பதுபோலத் தோன்றியது. அப்பொழுது அப்பெண்ணின் மனதில் அதைப்பற்றிப் பலவித எண்ணங்கள் தோன்றிப் பீதியை உண்டாக்கியபோதிலும் கடைசியாகத் தன் மனதை ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு அம்மஞ்சத்தை நெருங்கவே அவ்வுருவமும் இவள் எவ்வளவு முன் சென்றனளோ அவ்வளவு பின்போக ஆரம்பித்தது. இதேமாதிரியாக அவள் மஞ்சத்தைவிட்டுப் பின்னால் வரும்பொழுது அவ்வுருவம் அதை நோக்கி முன் சென்றது. அவள் தன் கையைத் தூக்கினால் அவ்வுருவமும் தன் கையைத் தூக்கியது. இவ்வாறு தான் செய்ததையெல்லாம் அவ்வுருவஞ் செய்ததைக்கண்டு அது கட்டாயம் தன்னுடைய நிழலாய்த்தானிருக்கவேண்டுமென்று நிச்சயித்தாள். பிறகு மறுபடியும் அவ்விளக்கடியில் உட்கார்ந்துகொண்டு தன் கையிலிருக்கும் புஸ்தகத்தை வாசிக்க ஆரம்பித்தாள்.

அவ்வரைக்கடுத்த அரையில் படுத்துக் கொண்டிருக்கும் வைத்தியரின் உத்திரவின்படி இடையிடையே அவருடைய அரையில் அவ்வச்சமயம் பாராக்கொடுத்துக் கொண்டிருக்குஞ் சிப்பாய் வைத்திய அரை வாசலில் வந்து எச்சரிக்கை செய்து கொண்டிருந்தான். இப்பொழுது

அரண்மனையிலுள்ள கடியாரத்தில் மணி 2 அடித்தது. ஆங்காங்குள்ள சிப்பாய்கள் தங்கள் காவல் நேரங்கழிந்து விட்டது கண்டு அடுத்தவர்களிடத்தில் பாராவை ஒப்புவித்து விட்டு அவரவர்களிடத்தில் போய்ப் படுத்துறங்கப்போனார்கள். அச்சமயத்தில் வைத்தியரும் தன்னுடைய அரையிலிருந்து கிளம்பி ராஜகுமாரியைப் பார்க்கும் பொருட்டு வைத்திய அரைக்குட் சென்றதும் ஆங்கு விளக்கடியில் வாசித்துக் கொண்டிருக்குந் தாதி ஒருவள் வந்தது யாரென்று திரும்பிப்பார்க்கவே அவர் "பெண்ணே நம்முடைய இளவரசி நீ பார்த்துவந்தவரையில் சௌக்கியமாய்த்தானே தூங்கிக்கொண்டு வந்தாள்?"

தாதி:— ஆம் ஐயா அவள் சௌக்கியமாய்த்தான் தூங்கிக்கொண்டு வந்தாள். ஆனால் அடிக்கடி அவள் படுக்கையில் புரண்டு கொடுப்பது போல் மட்டும் ஒருசப்தங்கேட்கிறது. மற்றப்படி கை காலடிப்பு வாய்ப் புலப்பம் இவைகளொன்றுமில்லை.

வைத்தியர்:— அப்படி புரண்டு கொடுக்கும்பொழுது நீ எப்பொழுதாவது பார்த்தாயா?

தாதி:— அந்த சப்தங்கேட்டவுடன் நான் பார்த்துக் கொண்டுவந்த ஒவ்வொரு தடவையிலும் அவள் அயர்ந்து தூங்குவதைப் பார்க்கும் பொழுது இவள் புரண்டு கொடுத்து வருஷம் இரண்டாயிருக்கும்போல் தோன்றுகிறது.

வைத்தியர்:— வேறு யாராவது இங்கே வந்து போனார்களா?

இப்பொழுதுதான் கண்டு சந்தேகங் கொண்டதையும், பிற்பாடு நிழலைத் தீர்மானித்ததையும் விபரமாய் அவள் வைத்தியரிடத்து சொல்லவே அவர் சற்று ஆலோசித்து "நல்லது இன்னும் சுமார் ஒரு மணி நேரஞ் சென்றதும் அதாவது 3¼ மணிக்கு இந்த மருந்தை அவளுக்குக் கொடுத்துவிடு. இம்மருந்து மிகவும் விலையுயர்ந்தது ஆகையால் இதைக் கீழே எங்கும் வைக்காமல் சப்ரமஞ்சத்துக் கருகிலிருக்கும் அந்த அலமாரியில் வை" என்று ஏதோ ஒரு திராவகமடங்கிய ஒரு புட்டியை அவள் கையில் கொடுத்தார்.



தாதி:— ஐயா, வைத்தியரே, இம்மருந்தின் நிறத்தைப் பார்க்கும் பொழுதும், அதன் வாசனையை முகரும்பொழுதும், இதைச் சாப்பிட்டால் ரொம்ப இனிப்பாயிருக்கும்போல் தோன்றுகிறது. தற்சமயம் என்னுடைய உடம்பில் வலி அசாத்தியமாயிருக்கிறது. அந்த வலியையும் அது தீர்த்துவிடும் போலிருக்கிறது. உண்மையில் அப்படித்தானா?

வைத்தியர்:— ஏனம்மா தோன்றாது. நீ என்ன ராஜ வைத்தியமென்று கேள்விப் பட்டதில்லையோ? ராஜாக்களுக்குக் கொடுக்கும் மருந்துகளெல்லாம் விலையுயர்ந்ததாயும் விசேஷ குணத்தைக் கொடுக்கக் கூடியதாயிருப்பதோடுங்கூட ஐம்புலன்களுக்கும் இன்பத்தைத் தரக்கூடிய தாயுமிருக்கும். அரண்மனையில் சேவகம் பண்ணும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருப்பதினால், இது போன்ற மருந்துகளிருக்கிறதென்று கேள்விப்படுகிறதற்கும் அவைகள் இன்னமாதிரியென்று கண்ணால் பார்ப்பதற்கும் ஏதுவிருக்கிறது. இல்லாவிட்டால் அதுவுங்கிடையாது.

தாதி:— ஆமாம், உமக்குந்தானென்ன? அரண்மனையில் வைத்தியஞ் செய்யும் பாக்கியங் கிடைத்திருப்பதினால் தானே உம்மிடத்திலும் இம்மாதிரி மருந்துகள் உலாவுகின்றது. இந்நகரில் இருக்கும் வைத்தியர்களிடத்திலுமா இம்மாதிரி மருந்திருக்கிறது. ஆனால் உமக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமுண்டு எனக்கு இங்கு சேவகமில்லாவிட்டால் இம்மருந்துகள் பூலோகத்திலிருக்கிறதென்பதுகூட யெனக்குத் தெரியாது. உமக்கு இங்கு வைத்தியமில்லாதுபோனாலுங்கூட வைத்தியசாஸ்திரப் புஸ்தகங்களிலிருந்து தெரிந்தெடுத்து அவைகளின் முழுவிபரத்தையுமறிந்து கொள்வீர். நீர் எழுத்திலாவது கண்ணால் பார்ப்பீர். அவைகள் இருக்கிறதென்று காதால்கூட என்னால் கேட்கமுடியாது.

வைத்தியர்:— நீங்களெல்லாம் அரண்மனை வாயாடிகள். பெரிய மனுஷர்களோடு சக்கியம் பண்ணுகிறவர்களிடத்தில், அவர்களிடத்திலுள்ள விசேஷபுத்தி சாதுரியத்தோடு விஷம புத்தியுஞ்சேர்ந்தே இருக்கிறது. அவர்களுடைய சக்கிய பலத்தைக்கொண்டு, இவர்களும் அவர்களைப்போலவே நடக்கிறார்கள். அப்படி நடப்பதினால் அவர்களுக்கு ஒருவிதமான பாதகமும் ஏற்படுகிறதில்லை.

தாதி :— வைத்தியரே அதெல்லாமிருக்கட்டும் நான் உம்மிடத்தில் ஏதாவது முறைதப்பிப் பேசியிருந்தால் அதை மன்னித்துக்கொள்ளும், தயவுசெய்து இம்மருந்து உம்மிடத்தில் ஏராளமாயிருக்கும் பக்ஷத்தில் அதை நான் சாப்பிடலாமானால் அதில் கொஞ்சம் எனக்குக் கொடும்.

வைத்தியர்:—'உன் யோகமே, யோகம், உன் சாமர்த்தியமே சாமர்த்தியம், இந்தா யிதில் கொஞ்சஞ்சாப்பிடு' (என்று சொல்லிக் கொஞ்சம் எடுத்துக்கொடுத்தார்.)

தாதி:—(அவள் அதைச் சாப்பிட்டதும்) ஆஹா! என்ன இனிப்பு! என்ன வாசனை!! என்ன ஆனந்தம்!!! வைத்தியரே உமக்கு அநேக நமஸ்காரம் (என்று தன்னிருகைகளையும் கூப்பி நமஸ்கரித்தாள்).

வைத்தியர்:— (மறுபடியும் அவளை நோக்கி) அதைப் பத்திரமாய் அலமாரில் வைத்துவிடு. நான் சொன்னது ஞாபகம் (என்று சொல்லித் தன்னுடைய அரைக்குட்போய்ப் படுத்துறங்கப்போனார்).

படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டாரேயொழிய அவருக்குத் தூக்கம் வரவில்லை. கொஞ்சநேரம் புரண்டுகொடுத்துத் தூக்கம் வராதது கண்டு தனக்குள் பின்வருமாறு ஆலோசனைபண்ணலானார்” ஆஹா!, அஹங்காரமும், பொறாமையும், யாரைத்தான்விட்டது. இவைகள் உயர் பதவியிலுள்ளவரிடத்தமையும்போது, மிருகேந்திரன் கைக்கொண்ட கொடுவாளாகும். இக்கொடிய குணங்கள் தரித்திரரிடத்திலும் தாழ்ந்த ஜாதியாரிடத்திலுங் காண்டற்கரிது. இவைகள் இருந்து வாழுமிடம் உயர்பதவியிலிருப்பவர்களின் மனமேயாகும். இவைகள் ஒருவன் மனதில் தோன்றி அவனால் வளர்க்கப்பட்டு வேரூன்றிவிடுமாயின் அவன் இன்ன தொழிலைத்தான் செய்வானென்று ஒருவராலும் நிர்ணயிக்கமுடியாது. ஆகையால் நாம் கைக்கொண்டதைமுற்றிலும் நிறைவேற்றவேண்டுமானால் வைத்தியனோடு தந்திரியாயுமிருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆட்டுத் தோல் போர்த்த ஓநாயைப் பொறுக்கியெடுக்கக்கூடும். அவ்வாறெடுத்தாலொழிய தற்சமயம் ஆடுகளுக்கு எதிர்பாராத வண்ணம் நேரிடும் ஆபத்துக்களைத் தலைகாட்டாதொழியும்படி விரட்டமுடியாது. இவ்வாறு இவர் யோசித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அங்கு ஒருவன் வந்து “ஐயா,



ஐயா என்று கூப்பிட்டான். அவன் குரலிலிருந்து அவன் மிக்க துன்பத்தையடைந்திருக்கிறானென்று தெரிந்தது. வைத்தியர் உடனே “யார்” என்று கேட்டதும் அவன் அவரை நெருங்கி ஐயா, நான்தான் சிப்பாய் பொழுது புலரும் வரை நான்தான் பாராக்கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும். இப்பொழுது எனக்கு அரைமணிக்கூறாக வயிற்றுவலி உபத்திரவம் அதிகரித்துக்கொண்டுவருகிறது. எனக்கு முன் பாராக்கொடுத்துவந்த சிப்பாய் வழக்கம்போல் வீட்டுக்குப்போய்விட்டான். தற்சமயம் இங்கு என்னைத்தவிர வேறொருவருமில்லை என்னால் நிற்கக்கூட முடியவில்லை சுவாமி நான் என்னசெய்யப்போகிறேன், என்னைக் காப்பாற்றுங்கள்” என்று சொல்லிக்கொண்டு தான் நின்றவிடத்திலேயே விழுந்துவிட்டான். இதைக்கண்டதும் வைத்தியர் “இதென்ன புதுமையாயிருக்கிறது. இன்றிரவு முழுதும், நான் தூங்கக்கூடாதென்பது கடவுளின் ஆக்ஞைபோலும் நல்லது கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததாக நினைத்துக்கொண்டு, நம்முடைய சந்தேகத்தெளிச்சலுக்குண்டான கோரிக்கைகளைச் செய்வதிலும் அதிலிருந்து நம்முடைய காரியசித்திக்கு ஹேதுவான சாதனங்களை நாடுவதிலும் இன்று நாம் விழித்துக்கொண்டிருக்கும் இராப்பொழுதைச் செலவிடவேண்டும். நமக்கு நல்ல தருணம் வாய்த்தது. இதை நழுவவிடக்கூடாது. இவனுக்கு ஏதாவது மருந்தைக்கொடுத்து வயிற்றுவலியைக் குணப்படுத்துவதோடுங்கூட சற்றுநேரம் அயர்ந்து நித்திரைபோகும்படி செய்யவேண்டும். பிறகு இவனுடைய உடையைமாட்டிக்கொண்டு இவனுக்குப்பதிலாகப் பாராக்கொடுக்கவேண்டும். இதற்குள் அத்தாதியும் தூங்கியிருப்பாள் அதற்குச் சந்தேகமேயில்லை” என்று தீர்மானித்து ஏதோ ஒரு திராபகத்தில் கொஞ்சம் எடுத்து அதில் சிறிது ஜலஞ்சேர்த்து, அதை அச்சிப்பாய்க்குக் கொடுத்துச்சாப்பிடும்படி செய்துவிட்டுக் கொஞ்சநேரங்காத்திருந்தார். அம்மருந்தைக் குடித்த சிப்பாய் அயர்ந்து நித்திரைபோனதும் அவனுடைகளெல்லாவற்றையுங் களைந்து தானணிந்துகொண்டு அவனுக்குப்பதிலாக அவ்வரையில் தானே காவல் காத்துக்கொண்டு வந்தார்.

இப்பொழுது மணி சமார் $2\frac{3}{4}$ இருக்கலாம். இவர் இவ்வாறு அங்குமிங்குமுலாவிக்கொண்டிருக்கும்பொழுது அடிக்கடி வைத்திய அரையின் வாசலில் வந்து உள்ளே ஏதோ ஒன்றைக்கவனிப்பதுபோல் எட்டிப்பார்த்த

வண்ணமாயிருந்தார். அவர் இன்னாரென்று அவரணிந்திருந்த உடையால் கண்டுபிடிக்கமுடியவில்லை. கடைசியாக மணி 3 அடிக்குஞ்சமயத்தில் வைத்திய அரைக்குள் ஒருவருமறியாமல் வந்து அங்கு சற்று முன் தன்னுடன் பேசிக்கொண்டிருந்த தாதியும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக்கண்டு ஒருவாறு சந்தோஷமடைந்தார். இதுதான் தனக்குச் சரியான தருணமென்று கருதி ஒருவருமறியாமல் மஞ்சத்தினடியில் போய்ப் படுத்துத்தூங்குவதுபோல்ப் பாவனைபண்ணினார். சற்றுநேரம் அந்நித்திரையிலிருந்ததும் தனக்குண்டான சந்தேகந்தானே ஒருவாறு ஒழிந்ததுகண்டு அவ்விடத்தைவிட்டுக் கிளம்பித் தன்னரைக்குச் சென்று, அங்கே தன்னுடைய நூதன உடையைக்களைந்து வழக்கம்போலுண்டான உடையைத் தரித்துக்கொண்டு தன்னிடமிருந்த கைக்குட்டையை ஏதோ ஒரு திராபகத்தில் லேசாய்த்துவைத்து அதை அங்கேயே தூங்கிக்கொண்டிருந்த சிப்பாயின் முகத்திலும், வைத்திய அரையில் தூங்கிக்கொண்டிருந்த தாதியின் முகத்திலும் வீசிவிட்டு, அரசன் படுத்திருக்குமிடத்தை நோக்கிச்சென்று அங்கு காத்துக்கொண்டிருந்த சிப்பாயினிடத்து அரசரைத் தான் அக்ஷணமே அவசியம் பார்க்கவேண்டியதிருப்பதாக அரசருக்குத் தெரிவிக்கும்படி கட்டளையிட்டார். அவன் அதை அரசருக்குத் தெரிவித்ததும் அவர் உடனே எழுந்து வைத்தியரை வெளிமண்டபத்திற்கு வரும்படி சொல்லிவிட்டுத்தானும் அங்கு சென்றார். அங்கு சென்றதும் வைத்தியர் அரசரை வணங்கி "மகாராஜா தங்களை நித்திரையிலிருந்து எழுப்பியதற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இருப்பினும் நான் ஒரு அவசரகாரியநிமித்தந்தான் வந்திருக்கிறேன்" என்றதும் அரசர் "அவசரகாரியங்களுக்கு இம்மாதிரியான பீடிகை போடுதல் எப்பொழுதும் தவறு. ஆகையால் சமாச்சாரத்தை உடனே சொல்லும்" என்றார். அதற்கு வைத்தியர் "தங்களுடைய புத்திரிக்கு மேலே போர்த்துக்கொள்ள ஓர் நல்ல போர்வை அவசியம் வேண்டியதிருப்பதால் அதைத்தற்சமயம் தங்களிடத்தில் நேரே வந்து கேட்டால் மட்டுந்தான் உடனே கிடைக்குமென்று தங்களிடம்வந்தேன்.

இன்னும்வரும்

S. Kasthuri Iyengar
Schoolmaster.

## Review of Books.

## புத்தக வரவு.

"பெற்றோரும் பிள்ளைகளும்" "Parents and children" என்ற ஓர் அருமையான புஸ்தகம் வரப்பெற்றோம். இந்நூல் "விவேகசிந்தாமணி" "வித்தியாபானு" "சக்கரவர்த்தினி" "லோகோபகாரி" "செந்தமிழ்" "பாரதி" "கான வித்யா ப்ரகாசினி" முதலிய பத்திரிகைகளுக்கு விஷயதான கர்த்தாவும், தமிழ், வடமொழி இரண்டிலும் பாண்டித்யமுள்ளவருமான முடிகொண்டான் பண்டிட் Mr. M. M. நாராயணஸாமி ஐயரவர்களால் இனிய தமிழில் வசன நடையாக ஆங்காங்கு ஆன்றோரின் பல மேற்கோள் செய்யுள்களை உதாரணமாக எடுத்துக்காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் சிறிதாயினும் அதிலடங்கியுள்ள அருமையான விஷயங்கள் நமது தமிழ் நாட்டார் அனைவருக்கும் இன்றியமையாததாகுமென்று தடையறச்சொல்லலாம். மேலும் இப்புத்தகம் பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையினும் ஒவ்வொருவருக்கும் உபயோகமுள்ளதென்பது அதின் பெயரினாலேயே எளிதில் விளங்கும். இப்புத்தகம் சென்னை திருவல்லிக்கேணி மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ பாலசுப்பிரமணியம் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 1.

பத்திராதிபர்.

# Sri Gana Vidya Press,

**PERUNGULAM.**

## ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம்.

1. இந்த ஆபீஸில் இங்கிலிஷ், தமிழ், தெலுங்கு, இந்த 3 பாஷைகளில் எல்லாவித ஜாப் அதாவது போஸ்ட் கார்டு, கவர், லெட்டர்பேப்பர் இவைகளில் அலங்காரமான அட்ரஸ்கள், விளம்பரங்கள், கல்யாண பத்திரிகைகள், வவுச்சர், ரசீதுகள் முதலான மற்றும் வக்கீல்களுக்கும், கோர்ட்டுகளுக்கும் வேண்டிய ஸ்டேட்மெண்டு பாரங்கள், பற்று வரவு கணக்கு முதலான எல்லாவித பிரிண்டிங் வேலைகளும் பையிண்டு வேலைகளும் நேர்த்தியாக வாயிதாப்படி தவறாமல் செய்து கொடுக்கப்படும்.

2. ஆர்டர்கள் போஸ்ட் மூலமாக அனுப்பினாலும் உடனே கவனித்து நடத்தப்படும், ஆனால் சார்ஜு இவ்வளவு யென்று தெரிந்து கொண்ட பின்பு ஆர்டருடன் பாதித்தொகை முன்பணம் அனுப்பாவிடில் ஆர்டர்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தபால் சார்ஜ் வகயரா செலவும் அவரவர்கள் சொந்தத்தில்ப் பொறுத்துக்கொள்ளவேண்டும். தயவுசெய்து ஒருமுறை பரீக்ஷித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

V. ஸ்ரீநிவாஸய்யங்கார்,

ப்ரோப்ரைட்டர்.

# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப் போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. இதை எழுதுவதில் பாராசரஹோரா, ப்ருஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக் கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறாமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.

2. இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.

கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது

விலை ரூ 1—8—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

# உங்கள் ஜாதகபலவுனத் தெரிந்துகொள் ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலனை விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தைபெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷமாதம் தேதி இத்தனைமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவறாமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வோரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சோல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சோல்லுவது அனவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

## சார்ஜின் விவரம்.

| | | |
|---|---|---|
| புத்திரபாவத்திற்கு ... | ரூ | 5-0-0 |
| களத்திரபாவத்திற்கு ... | ரூ | 3-0-0 |
| தொழில் அல்லது யோகபாவத்திற்கு | ரூ | 5-0-0 |
| ஆயுர்பாவத்திற்கு | ரூ | 5-0-0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கோடுக்கவேண்டில் | ரூ | 25-0-0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கோடுக்கில் | ரூ | 2-0-0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கோடுக்கில் | ரூ | 3-0-0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கோடுக்க | ரூ | 4-0-0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கோள்ளலாம்.

---

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.



# பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை

## பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)

(தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகேம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும். மனோ உற்சாகத்தைத்தரும். 1-சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**சர்வபுண் சம்ஹாரன்:—** மேகப்புண், சொரியாணைப்புண், தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முகன்மையான அவுஷதம்,

விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. சிலவு பிரத்தியேகம்,

**சர்வதந்தரோக நிவாரண பரிமளபற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சுரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.

விலை சீசா 1-க்கு அணா 2 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுப்ராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம். இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்கு மிகவும் அற்புதமான சஞ்சீவி

விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள கேசவர்த்தினி தைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேரி ஒங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.

விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. சிலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் போடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கரப்பான், வெடிப்பு, சரீரவர்க்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. சிலவு பிரத்தியேகம்.

விலாசம்:— ☞ பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை, தென்னார்க்காடு ஜில்லா.

# நம்பிக்கையுள்ளது.

ஒன்றை நம்புவதென்றால் தகுந்த ஆதாரம் வேண்டும். எங்கள் வைத்தியசாலை 35 வருஷத்துக்கு முன் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அங்கே பிரபலமாய் செய்யப்படுகிற மருந்து ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள். இம்மருந்தின் குணமகத்துவத்தால் இந்தியாவில் உள்ள முக்கிய பட்டணங்களிலெல்லாம் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வைத்தியசாலையில் சாஸ்திர சம்பன்னர்களும், வித்தியா பட்டம் பெற்றவர்களும், அநேக குமாஸ்தாக்களும் வேலைக்காரர்களுமாக நூற்றுக்கணக்காக அமர்ந்திருக்கிறார்கள். 18 பாஷையில் வியாபாரம் நடைபெறுகிறது. விலாசத்தைத் தெரிவிப்போருக்கு கியாடலாக் இனாம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே மதராஸ்.


... OF THE REGISTRAR OF BOOKS
26 JUN 1916
MADRAS.

உ

பரமகுருப்யோநம:

# கான வித்யா ப்ரகாசினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

VOL. 1. } 1916-ஹு ஜூன்மீ { NO. 12.

## இந்து ஸங்கீதம்

ப்ராதுவசத்யாமாணவீணைா, மேரோஸ்தாப்பாஸ்ச்ச
தஸ்ரஇதிதந்த்ரியம்ந்த்ரதமத்வனிராத்யா
த்ரயம்க்ரமோச்சஸ்வரம் கிம்சித்

(வ்யா) இந்த ச்ருதி ஸ்வரங்களை நிதர்சனமாக காட்டுவதற்கு இந்தக் கிரந்தத்தில் இரண்டாவது விவேகத்தில் சொல்லியிருக்கிற லக்ஷணத்தோடு கூடிய நான்கு லோஹமயமான தந்தியும் கட்டுப்பாடுமுடைய வீணை ஒன்று வேண்டும். இந்த வீணைக்கு ருத்ரவீணை யென்று பெயர். இந்த வீணையில் வாசிப்பவர்க்கு இடதுபுறமயுள்ள ஒன்றாவது தந்தியின் ஸாரணை வெகு ஸ்திரீகரணம் செய்துகொண்டு அதன் இரண்டு மடங்கு ஓசை அதன் நாலு மடங்கு ஓசை, அதன் எட்டு மடங்கு ஜாஸ்தியாகவாவது அல்லது ஒரு தந்திக்கொரு தந்தி கொஞ்சம் உயர்தரமான ஓசை குறிப்பினால் செய்துகொள்ளவேண்டும்.

நிஸ்யா:ஸூக்ஷ்மா:ஸார்யை: அதத்வாவிம்சதி
ரதஸ்ச்சரமதந்த்ரா:,தந்த்ரீயதேயமூர்சேர்சர
ரவாமிமபிதாஸூஸ்யாத்

(வ்யா). நாலாவது தந்தியின்கீழ் ஸூக்ஷ்மமான இருபத்திரண்டு ஸாரிணிகள் செய்துகொள்ளவும். அப்பொழுது,தந்திகள் ஒன்றுக்கொன்று உச்சம், உச்சதரமான ஓசையுடையதாகின்றன ஒன்றாவது ஸாரைக்கு இரண்டாவது ஸாரை உச்சம் மூன்றாவது ஸாரை உச்சதரம் இதைப் போல் மற்றும் கண்டுகொள்க.

த்யம்தர்கஷ்டோம்பரவ:, ச்ருதயஇதிரவா
இஹாம்த்பைதந்த்ராம்ஸ:, ரிஷப:ஸ்திரிதீய்ப
ஸார்ய:க:பஞ்சப் யாம்கவய்யாம்ப:

(வ்யா) முன்சொல்லிய முறையே தந்தி, மேரு, ஸாரி, ஸம்ஸேஷாதி தொனிகளுடன்கூடிய வீணையிலுண்டாகும் நாதங்களுக்கு ச்ருதிகளென்று பெயர் இனி இந்த தந்திகளில் ஸாரிகளில் தொனிகளின் இடையில் கடைசித்தந்தியின் மேருவிருக்கிற நாலாவது தந்தியின் ஓசை 1-வது தான் ச, 3-வது ஸாரியில் ரி, 5-வதில் க, 9-வது ம.

பஸ்துத்ரயோதசீஸ்த:ஷோடச்யஷ்டாதசீஸ்தி
தௌச்சதீ, த்வாவிம்சதி: ஸட்ஜோ, த்விகுண
ஸட:பூர்வஷட்ஜோ =

(வ்யா) 13-வது ஸாரியில் ப, 16, 18-வது ஸாரைகளில் த-நி இவைகள், 22-வதில் ச. அந்த ச—வானது முன் சொல்லிய மந்த்ர ஷட்ஜமத்தை இருமடியாகச்செய்த ஷட்ஜம் இதை கீழ் ச—வுக்கு இருமடியென்று சொல்லலாமென்றாலோ சங்கின் ஓசையானது கடலிலிருந்து உண்டானாலும், தரையிலிருந்து உண்டானாலும் ஒரே வகையான ஓசைதான். ஆனால் ஸ்தல பேதமுண்டு. இங்கும் அப்படியேதான். கீழ்ஸ்தாயி ஓசையானதால், கீழ்



ஸ—யென்றும், மேல்ஸ்தாயி ஓசையாதலின் மேல் ஸ—யென்றும் சொல்லப்படும்.

த்வநிசுத்திநிஸ்ச்சயார்த்தம், விக்ருதநிர்த்தம்ச
ஸச்ருதிச்ருதிக:, புநருக்தஇதிமதம்மே, ச்ருதிஸ்வ
ராவகமநாயலகு =

(வ்யா) தொனிகளினுடைய சுத்தத்திற்காகவும் ஸ்வர ஸ்தானங்களுடைய நிதானத்திற்காகவும், தேகத்தின் தத்துவத்தை அனுசரித்துக் கூறிய இருபத்திரண்டு ச்ருதிகளையும் நான் ஒப்புக்கொள்கிறேன் ஆனாலும் அந்த ச்ருதிகள் அதிக விஸ்தாரமாயிருக்கிறதென்ற பயத்தினாலும், காலத்தை அனுசரித்தும், தற்காலம் வழங்கிவரும் இந்தக் கிரந்தத்தில் 2-வது விவேகத்தில் சொல்லப்போகிற வீணை நி வாத்தியத்தைக் குறித்தும் முன் சொல்லிய 22 ச்ருதிகளையும் மாற்றுகிறேன். ஏனெனில் அவர் கூறிய ச்ருதிகள் புனருக்தியென்று பெனதபிப்பிராயம். அஃதெப்படி புனருக்தியாகுமெனில் ஸூக்ஷ்மத்தைச் சொல்லாமல் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வதினால்தான் இனி எனது மதத்தை நிலைநிறுத்துகிறேன்.

இதிஸப்தோக்தா: சுத்தா:, விக்ருதாஸ்ஸைப
தவாச்மிஸஹநாம்மா, ஸாதாரணோந்தரஸ்ச்ச
ச்ருதிம்ச்ருதிசைக்யகௌமஸ்யா: =

(வ்யா) அதாவது சுத்தஸ்வரங்கள் 7. விக்ருதிஸ்வரங்கள் 7 அவைகட்கு பெயராவன:— (1) சுத்தஷட்ஜம், (2) சுத்தரிஷபம், இம்மாதிரியே சுத்தங்கள் ஏழிற்கும் பெயர். விக்ருதிகளின் பெயராவன:— (1) காந்தாரம், இது இருவகை பேதப்படும் அதாவது, மத்யமத்தின் 1-வது ச்ருதியில் பேசுங் காந்தாரம், சாதாரண காந்தாரமென்றும், மத்யமத்தின் 2-வது ச்ருதியில் பேசும் காந்தாரம் அந்தரகாந்தாரமென்றும் சொல்லப்படும்.

நி: கைசிகீச்சகாகல்ய தஸ்ஸைகாடஜும்ஸ்ச்ச
தாட்தேத்வே, நிகமா: ம்ருதுபாஸய்யா:, ஸமட
த்ரிதீய்பச்ருதிஸ்திக்யா =

(வ்யா) நிஷாதம் இருவகைப்படும் அவையாவன:— ஷட்ஜத்தினி யின் 1-வது ச்ருதியிலுள்ள நிஷாதத்தை கைசிகி நிஷாதமென்றும் ஷட்ஜத்தின் 2-வது ச்ருதியிலுள்ள நிஷாதத்தை காக்கலி நிஷாதமென்றும் இனி—ரி—க—ம—இவைகளின் மூன்றாவது ச்ருதி எந்த ஸ்வரத்திற்கு 1-வது ச்ருதியோ அந்த ஸ்வரத்தை விக்ருதி யென்கிறேன். அதாவது நி—யின் 2-வது ச்ருதியைவிட்டு, ஸ—வின், 3-வது ச்ருதியிலிருக்கிற ஷட்ஜத்திற்கு ம்ருதுஷட்ஜமென்று பெயர். காந்தாரத்தின் 2-வது ச்ருதியை விட்டு மத்யமத்தின் 3-வது ச்ருதியிலிருக்கிற மத்யமத்திற்கு ம்ருதுமத்யமமென்று பெயர். மத்யமத்தின் 4-வது ச்ருதியைவிட்டு பஞ்சமத்தின் 3-வது ச்ருதியிலிருக்கும் பஞ்சமத்திற்கு ம்ருதுபஞ்சமமென்று பெயர். ஆக சுத்த ஸ்வரம் 7 விக்ருத ஸ்வரம் 7. அவையாவன:—

ஸ——சுத்தம்——ம்ருது——o——ஒருபேதம்.
ரி——சுத்தம்——o——o——பேதமில்லை.
க——சுத்தம்—ஸாதாரணம்—அந்தரம்—இருபேதம்
ம——சுத்தம்——ம்ருது——o——ஒருபேதம்
ப——சுத்தம்——ம்ருது——o——ஒருபேதம்
த——சுத்தம்——o——o——பேதமில்லை.
நி——சுத்தம்——கைசிகி—காகலி——இருபேதம்.

இனி இன்னும் ஓர் வகையான பேதம் சொல்வோம் அவற்றைப் பின்னால் காண்க.

பழமையாக ஏற்பட்ட மதத்திற்கு விரோதமாக இவ்வாறு சொல்வது நியாயமோவெனில் மேற்சொல்லுவோம்.



# இதில் கீர்த்தனங்கள், இராகங்கள் இவைகளுக்கு

## உபயோகப்படுத்தியிருக்கும் அடையாளங்களின் விவரம்:—

1. ப = பல்லவி.
2. அ = அநுபல்லவி.
3. சர = சரணம்.
4. 〰〰 = துரிதகாலத்தில் பாடவேண்டிய ஸ்வரங்கள்.
5. * = ஒவ்வொன்றும் ஒரு துரிதகால மாத்திரை (கால அளவு)
6. ஒவ்வொரு ஸ்வரத்திலும் கீழே . புள்ளி போடப்பட்டிருந்தால் கீழ்ஸ்தாயி. மேலே புள்ளி போடப்பட்டிருந்தால் மேல்ஸ்தாயி. புள்ளி போடாத ஸ்வரங்கள் மத்தியஸ்தாயி.
7. O = தாளத்தின் த்ருத அடையாளம்.
8. | = தாளதின் லகு அடையாளம்.
9. ⌒ = கமகம் அதாவது வளைவாகப்பாடுதல்.
10. சு = சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்த தைவதம், சுத்தநிஷாதம்.

    ச = சதுர்ச்ருதிரிஷபம், சதுர்ச்ருதிதைவதம்.

    சா = சாதாரண காந்தாரம்.

    பி = பிரதிமத்திமம்.

    ஷ = ஷட்ச்ருதிரிஷபம், ஷட்ச்ருதிதைவதம்.

    கை = கைசிகி நிஷாதம்.

    அ = அந்தரகாந்தாரம்.

    கா = காகலி நிஷாதம்.

11. ஆ = ஆரோஹணம்.

    அவ = அவரோஹணம்.

12. — இந்த அடையாளங்களை கீர்த்தனங்களின் ஸ்வரத்திற்கு கீழ்வரும்பொழுது முன் ஸாஹித்தியத்தின் அகார, இகார, உகாரங்களாகவும், இரகஸஞ்சார ஸ்வரங்களில் வரும்பொழுது அந்த இடங்களில் ஸ்வரக்கோர்வைகளின் முடிவாகவும் பொருள்படுத்தவும்.

## ஸங்கீத சாஸ்திர விஷயமாக உபயோகித்துவருகிற அரும்பதங்களுக்குப் பொருள்.

1. கீழ்ஸ்தாயி = தாழ்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
2. மேல்ஸ்தாயி = உயர்ந்த நாதத்துடன்கூடின ஸ்வரத்தொகுதி.
3. ஆரோஹணம் = ஏறுதல் அல்லது மேல்நோக்குதல்.
4. அவரோஹணம் = இறங்குதல் அல்லது கீழ்நோக்குதல்.
5. ஸஞ்சாரம் = ஏற்றி யிறக்கிப்பாடுதல்.
6. வர்ணமெட்டு = இராகம், தாளம் இவை இரண்டுஞ்சேர்ந்து அமைக்கப்பெற்ற ஓர் பாட்டு
7. ஒருகளைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 32 துரிதகால மாத்திரைகள் அடங்கிநிற்கும். நெட்டெழுத்து ஒவ்வொன்றையும் ப இவைபோன்ற இரட்டை
   ப
   ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும இரண்டு மாத்திரைகளாகக் கணக்கிடவேண்டும் குற்றெழுத்துகள் ஒவ்வொன்றும் ஒருமாத்திரையாகும். த்ருதக்கலத்தில் முற்கூறியபடி 16 மாத்திரைகள் அடங்கிநிற்கும்.
8. அரைக்களைச்சவுக்கம் = (சதுச்ர) லகுக்கலத்தில் 16 துரிதகால மாத்திரைகளும், த்ருதக்கலத்தில் 8 துரிதகாலமாத்திரைகளுமடங்கி நிற்கும் மற்றவை ஒருகளைச்சவுக்கத்திற்குச் சொல்லியிருக்கிறபடி கணக்கிட்டுக்கொள்ளவும்.



23

நீவே = நீயே

காவலேக = காப்பாற்ற வேண்டியதல்லாமல்

வேரெவருன்னாரு = வேறுயாரிருக்கிறார்கள்!

ஸ்ரீ வெங்கடேச்வரா = ஸ்ரீ வெங்கடேச்வரனென்ற

அபிகரா = கீர்த்திபெற்ற நாமமுடையவனே!

(பொழி) ஸ்ரீ வெங்கடேச்வரனென்ற கீர்த்திபெற்ற நாமமுடையவனே! ஸ்ரீ ராமா! ஆறுவித விகாரங்களாகிற சத்துருக்களை நிர்மூலஞ் செய்து முன்தேடின பயங்கரமான பாவங்களை அடித்துத் துறத்தி நான் விளையாட்டாகச் செய்த குற்றங்களை மன்னித்து நீயே காப்பாற்றவேண்டியதல்லாமல் வேறு யாரிருக்கிறார்கள்? தயவில்லையா? இன்னும் என்னைக் காப்பாற்றப்படாதா? என் தாமதஞ் செய்கிறாய்? இன்னும் பொறுமையாக உறத்த குரலுடன் உன்னையே வேண்டுகிறேன்

## மாளவிராகம்—ஆதிதாளம்—அரைக்களைச்சவுக்கம்

லகு 2-வது அக்ஷரத்திற்குப்பின்னுள்ள அரையிடத்தில் எடுப்பு.

ஆ=ச, ச—ரி, அ—க, சு—ம, ப, ச—த, கை—நி,

அவ=ச, கை—நி, ச—த, ப, சு—ம, அ—க, ச—ரி,

ப=இதிநியாயமா—ஸ்ரீராமச்சந்த்ரா
இம்சுகைனதனவாடனிலேதா

அ=ஸதயுடநீஸ்ஸாலநம்மிதினி
ஸமயமிதேநாபைதயலேதேமி=

சர=அலயேனுகநீகேமிதாத்தனு
கோதிலருடுநீதோகூடபுட்டெனு
பாலுராயிநீகேமியத்தனு
பாகநெல்பவய்யா ஸ்ரீவெங்கடேசா=

---



| | லகு. | திருதம். | திருதம். |
|---|---|---|---|
| ப= | ******காமாபா**மா | பா****பா | **பமகாமா |
| | ******இதிநியாய**ய | மா****ஸ்ரீ | **ரா—ம |
| (1) | ரீ ** ரீ= ஷை | கமபா**ரீ | **கமபாபா |
| | சந்**த்ர= ஷை | மா—**ஸ்ரீ | **ரா—ம |
| (2) | பமகமரீ=காமாபா **பா | பமகமபாசரி | கமபமகமரீ |
| | சந்--த்ர=இதிநியா**ய | மா—**ஸ்ரீ | —ரா—ம |
| (3) | பமகமரிச=காமாப**நீ | மாதா**நீ | **ச்நிதநிபா |
| | சந்—த்ர=இதிநியா**ய | மா—**ஸ்ரீ | **ரா——ம |
| (4) | பமகமரீ= ஷை | மாதநிச்ாச்நி | தநிபமகாமா |
| | சந்—த்ரா= ஷை | மா——ஸ்ரீ | —ரா—ம |
| (5) | பமகமரீ =சரிகமபமபாநீ | மாதநிச்ாரீக் | ம்ரீச்நிதநிபா |
| | சந்—த்ரா=இ——தி—நியா—ய | மா——ஸ்ரீ— | —ரா——ம |
| | பமகமரீ =சா**நீதாநீ | மாதா**—தநி | சரிகா*மரீ |
| | சந்—த்ரா=இம்**ஸுகைன | தன **—வ— | ——*டனி |
| | பமகமரீ =காமாபா = | | |
| | லே—தா=இதிநியா= | | |
| அ= | ******தாநீச்ா**நீ | ச்ா****ச்ா | நீதா**நீ |
| | ******ஸதயு **ட | ணீ****ஸா | லந**ம்மி |
| (1) | பாமபாம= ஷை | தநிச்ா**தநி | ச்ாச்நிதநிபா |
| | தினி-—= ஷை | னி—**ஸ— | லந——ம்மி |
| (2) | ச்நிதநிபம= ஷை | மேற்படி | ச்ரிகா*ம்ரீ |
| | தி—னி--= ஷை | மேற்படி | ல—ந*ம்மி |
| (3) | ச்நிதநிபம= ஷை | ச்ா****தா | நீச்ா**ரீ |
| | தி—னி--= ஷை | னி****ஸ | லந**ம்மி |
| | க்க்ா**ம்ாரீச்ா**நீ | தாநீ**ரீ | **ச்நிதநிபா |
| | க தினி**ஸமய**மி | தேனு**பை | **த—ய—லே |

| லகு | திருதம் | திருதம் |
|---|---|---|
| (4) பம்கமரீ = ஷை | தாநீ**மநி | தநிச்நி தநிபா |
| தே—மி = ஷை | தேஞே**பை— | —த—ய—லே |
| (2) பமகமரீ = ஷை | தநிச்ரீச்ாமநி | மேற்படி |
| தே—மி = ஷை | தே—ஞை— | மேற்படி |
| ஷை = காமாபா = | | |
| ஷை = இதிநியா = | | |
| சா = ******சாரீகா **மா | ரீகா**கம | பாபமகமரீ |
| ******அலயே**ஞ | கநீ **கே | மிதா—த்த |
| சா****சாநீதாபாதா | மாதா*ந்சரி | கமபமகமரீ |
| ஞ****கோதிலருடு | நீதோ*–கூ | ட–பு—ட்டெ |
| சா****(அனுபல்லவி யாதரி) பாஹுராயி | நீ கே | மியத்த |
| ஞ**** | | |
| ஞ—பாகதெல்ப | வய்யாஸ்ரீ | வெங்க |
| டேச = இதி = | | |

# பல்லவிக்கு கற்பனஸ்வரம்

| லகு | திருதம் | திருதம் |
|---|---|---|
| (1) இதிநியாய | மா****மா | **கா**மா |
| (2) **ரீ** = ஷை | மா****மா | நீதாபாமா |
| (3) காமாரீ = ஷை | மா****நீ | பாமாபாமா |
| (4) காமாரீ = ஷை | மா****ரீ | காமாபாமா |
| (5) காமாரீ = ஷை | மா****மநி | தநிச்நி தநிபா |
| (6) பமகபரீ = ஷை | மா****மப | கமரிசரிகமப |
| (7) மகாமரீ = மேற்படி | மா****தநி | ச்தநிபமகமப |
| (8) பமகமரீ = மேற்படி | மா*ரிகமபம | பாநிமதநிச்நி |
| (9) பமகமரீ = மேற்படி | பாபமகமரிச | ரிகமபமபாநி |
| மாதநிச்ாரிக்ம்ரிச்நிதநிரீ | **ச்ா**ச்நி | தநிபா**மா |
| (10) **கமரீ = இதிநியாய | தநிபாபமகா | கமரீகமரிச |
| நிசதாநிசரிகமபாமகமரீ | கமபமபாநிம | தநிச்ரீக்ம்ரீ |
| ச்நிதநிபம = இதிநியாய = | | |

—❧❧—

(பத) ப = இதிநியாயமா = இதுநியாயமா?
ஸ்ரீராமசந்திரா = ஸ்ரீராமசந்திரா!
இஞ்சுகைன = கொஞ்சமாவது
தனவாடனி = தன்னவனென்று
லேதா = இல்லையா?

அ = ஸதயுடனி = தயையுள்ளவனென்று
ஸால = மிகவும்
நம்மிதினி = நம்பினேன் (உன்னை)
ஸமயமிதே = ஸமயம் இதுவே
நாபை = என்மீது
தயலேகேமி = தயவில்லாமிருப்பதேன்?

சர = அல = சிறந்த
எனுக = யானை
நீகேமி = உனக்கேன்
தாத்தனா = தாத்தாவா?
கோதிலருநி = குரங்குகள்
நீதோ = உன்னுடன்
கூடபுட்டெனா = கூடப்பிறந்தவர்களா?
பாஷாணி = இளம்பாறை (அகல்யை என்னும் பெண்)
நீகேமி = உனக்கேன்
அத்தனா = அத்தையா?
பாகதெல்பவய்யா = செவ்வையாக தெரியப்படுத்தய்யா!
ஸ்ரீவெங்கடேசா = ஸ்ரீவெங்கடேசனே!

(பொழி) ஸ்ரீராமசந்திரா! ஸ்ரீவெங்கடேசனே! மிகவும் தயையுள்ளவனென்று உன்னை நான் மிகவும் நம்பியிருக்க கொஞ்சமாவது தன்னவனென்பதில்லையா! கெஜேந்திரன் என்ற யானை உனக்கு தாத்தாவா! சுக்கிரீவன் முதலான வானரர்கள் உனக்கு சகோதரர்களா? பாறையாக இருந்த அகல்யை பெண்ணும் பெண் உனக்கு அத்தையா? என்மீதுமட்டிலும தயவில்லாமலிருப்பதேன்? இது நியாயமாகுமா? இதுவே ஸமயம் இதன் விவரத்தை செவ்வையாக எனக்குத் தெரியப்படுத்தய்யா!

# இராக லக்ஷணம்

சென்னை-600 008

176-வது பக்கத்தின் தொடர்ச்சி

## 29. மணிரங்கு-22-வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ = ச, ச-ரி, சு-ம, ப, கை-நி,

அவ = ச, கை-நி, ப, சு-ம, சா-க, ச-ரி,

### இலச்சணம்.

"மணிரங்குஸ்ஸக்ரஹாதஷ்
ஷாடவோயம்தவர்ஜித:
கவர்ஜிதஸ்யாதாரோஹே
ஸர்வகாலேஷுகீயதே"

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) மணிரங்குராகம் ஷட்ஜகிரஹத்தைச் சேர்ந்தது. ஷாடவராகம், த- யென்ற ஸ்வரத்தை முற்றிலும் க- என்ற ஸ்வரத்தை ஆரோஹணத்தில் மட்டிலும் தள்ளுபடி செய்யவேண்டியது. இந்த ராகம் எக்காலத்திலும் பாடத்தக்கது.

### இராகஸஞ்சாரம்

[1] சா******ரிமபநிச்ரா****-ச்நீ****பமகா****ரிசா****–

[2] ரிமபநீ**ப-மபநிச்ரா****பநிச்ரிச்நீ****நிபம-கா****ரிசா******–

[3] பமபாநிமா****ப-ரிமபா****-பமநிபா****நிமப-ரிமநீ****-பமபநிச்ரா****–
ச்நிரிச்ா**ரி-ச்நிச்ரிச்நீ****ப-மபநிச்ரி****ச்-ச்நிச்ா****நி-மபநிச்ா**–
நிமகா****ரிசா******–

[4] ரிமா****ப-ரிமபா**மகா**ரிரி****ரிசரிமா****ம-மரிமபா****ப-பமபநீ****–

நி–நிபநிச்ரா****ச்–ச்ராரிச்நிச்பா**நிமபநிச்ரி*****பநிச்ரி****–நிச்ரி****–

ச்ரிம்க்ரா****–ரிரி****–ரிச்நிச்ரிக்ரிச்ரா****ரி–நிரிச்நிப–மபநிச்ரா****நிப–

பமபநீ****பமபம்கா****ரிசா******–

[5] நிசரிசாரி–சரிமரிம–ரிமபமாப–மபநிபாநி–பநிச்நீச்–நிச்ரிச்ராரிநீச்–பாநிமாப–
ரிம–பநிச்ரி****–ச்ரிச்ரிப்ம்க்ரா*ரி–ச்ரிநிச்ரநிபம–பநிச்ரி****–மபநிச்ரி****–

ரிமபநிச்ரி****ச்நிபம–மபநிச்ரநிபம–பநீ**நிபம-பமகா**ரி–சரிமகா**ரி

நிசரிகரிசா****ரிநிச–பநீ****ச்ரா******–

## 30. சுத்ததன்யாசிராகம்–22–வது மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ= ச, சா–க, சு–ம, ப, கை–நி,

அவ= ச, கை–நி, ப, சு–ம, சா–க,

### இலக்கணம்.

“ப்ராதர்கேயாரிதத்யக்தா
சுத்ததன்யாசிகாஸ்ம்ருதா
ஷட்ஜக்ரஹஸமாயுக்தா
ஔடவீதிநிகத்யதே”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்) சுத்ததன்யாசிராகம் காலைவேளையில் பாடத்தக்கது ஷட்ஜக்ரஹத்தைச் சேர்ந்தது. ஔடவராகம், ரி–த, இந்த இரண்டு ஸ்வரங்களையும் தள்ளுபடி செய்யவேண்டும்.

### இராகஸஞ்சாரம்.

[1] சகா**மபநி–பநிச்ரா****ச்நிபா****மகமபமகா****சா******–

[2] கமபாநிபமா*ப–கமபநீ**நி–மபநிச்ரா****–பநிச்க்ரா****ம்க்ச்ரா****நி–
நிச்க்ரம்க்ச்க்–ச்நீ****நிச்பா****நி–மபநிநீ**பமகா**–கமபமகமா**கசா****–

[3] மகசகமா****மபா****பநீ****நிப–மபநிபா**நிபம–கமபநீ**நி–பநிநிச்ரா****–
ச்ரா****–ச்நிச்க்ச்க்ரா****க்ச்நீ**நிச்க்பநிச்க்ரா****–மபநிச்க்ரா****ச்நிச்நிப–
மபநிச்ரா**நிபமகா****–கமபமகமகசா******–



[4] பமகச–நிபமகச–ச்நிபமகச–க்ரா**ச்நிபமகச–கமகமபமபநிபநிச்நி–
ச்க்ச்க்ம்ரா****–ம்க்ச்நிச்க்ரா****ச்நீ****ச்நிபமபநிநீபம–கமபநி–
மாபநிபநி–மா**ப–காமகாமபாமகா-மகசா****–

[5] மாபநிபாநிமபகாமபா****–பாநிபாநிமா–மாபமாபகா–காமகாமசா****–
சாகசாகநீ****நீசநிசகமா****–கமமபபநீ**நி–மபநீச்நிநீநிச்ரா****ச்ரா****–
ச்நீச்நிச்க்ரா****–ச்க்ம்ரப்ம்க்ரா**ம்–ச்க்ம்க்ச்ரா*நி–ச்ரா*க்ச்க்–நீ*ச்நிச்–பா*நிபநி–
மா*பமப–கமபநிபநிநீ**பமகா**–கமபநிபமபமகா**–பமகமகசா******–

## 31. மத்யமாவதிராகம்–22வது–மேளகர்த்தாவில் ஜன்யம்.

ஆ=ச, ச–ரி, சு–ம, ப, கை–நி,

அவ=ச, கை–நி, ப, சு–ம, ச–ரி,

### இலக்கணம்.

“மத்யமாதிஸாராகோயம்
மத்யமக்ரஹஸம்யுத:
கதலோபாதௌடவஸ்யாத்
ஸாயங்காலேப்ரகீயதே”

(சதுர்தண்டிப்ரகாசிகா)

(இ—ள்). மத்யமாதிஸாராகம் மத்யமக்ரஹத்தைச்சேர்ந்தது. க–த இந்த இரண்டு ஸ்வரங்களையும் தள்ளுபடி செய்யவேண்டியது. ஔடவராகம் ஸாயங்காலத்தில் பாடத்தக்கது.

(கருத்து). ச்லோகத்தில் மத்யமாதியென்றும் ஸாயங்காலத்தில் பாடத்தக்கதென்றும் சொல்லப்பட்டிருப்பதையே தற்கால அனுபவத்தில் மத்யமாவதியென்றும் மத்யானகாலத்திலப் பாடத்தகுந்ததென்றும் பாடிவருகிறார்கள். மேலும் ச்லோகத்தில் ஸாராகமென்று சொல்லப்படுவதினால் எக்காலத்தும் கடைசியில் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதாக நினைத்து எல்லோரும் இந்த ராகத்தையே முடிவில் பாடியும் வருகிறார்கள்.

## இராகஸஞ்சாரம்.

[1] மபநீ****ச்ரா****–ச்நிபா****ம–பமரீ****சா******–

[2] ரிமபாநிபமா**ப–ரிமபா****–மபநீ**ப–மபமரீ**–சரிமரீ**சநீ**–ரிசா****–

[3] சரிமா**மா**–மாபமரீ**–ரீமரீமபாமரீ**-சாரிமரீ*மரீ**ச–நிசரிசா**ரி–
சநிபா****–நிசரீ****–சரிமபா****–நிமப–ரிமபநீ**ச்ரா****–ச்நிரீ****ச்நிப–
மபநிச்ரா**ரீநிச்–பநிமபரிமபநிச்ர**நிபமரீ****சா****–

[4] மரீச–பமரிச–நிபமரிச–ச்நிபமரிச–ரீச்நிபமரிச–ரீம்ரா****ம்ரீச்நிமபரிச–
ரிமபநிமா**பநிச்–பாநிச்ரீச்ரீம்ரீ**ச்–நிச்ரீச்ரா**ரீச்நி–பநிமபநிச்ரா****–
ரிமபநிச்ரா****–சரிமபநிச்ரா****–நிசரிமபநிச்ரா****–ரீநிச்பநிமப–
ரிமபநிநீ****பம–ரீபமரீ****– சரிமரீ****சா******–

[5] சரிசமாம–ரிமரிபமப–மபமநீநி–பநிபச்ரச்–நிச்நிரீரீ–ச்ரீம்ரீச்–நிச்ரீச்ரநி–
பநிச்நீப–மபநிச்ரீ–பநிச்ரீ****–நிரீம்–ரீம்பாம் ரீ**–ச்ரீம்ரீம்ரீ****ச்–
நிச்ரீச்ரா****நிப–மபரீரீச்நிப–மபநிச்ரா*நிபம–பநிநீ****பம–
ரீமபமா**பரீமபாமரீ****–சாரீமரீம–ரீ****ச–நீ****ரிசா******—

இன்னும் வரும்

**பத்திராதிபர்.**

# நீதி

## ச்ருங்காரசதகம்.

36–வது பக்கத்தின் தொடர்ச்சி.

அஸூசிஸஞ்சாரே தமஸிநபஸிப்ரௌடஜலத
தவநிப்ராஞ்ஞம்மந்யேபதிப்ருஷதாநாம்சநிசயே
இதம்ஸௌதாமிந்யா:கநககமநீயம்விலஸிதம்
முதம்சம்லாநிம்சப்ரதயதிபதிஸ்வைரஸுத்ருசாம் (94)

(இ—ள்) மாரிகாலத்தில் ஊசிநுழைவதற்குக்கூட இடமில்லாமல் இருட்டுப் பரவியிருக்கும் பொழுதும், ஆகாயத்தில் மேகங்கள்விடாது கர்ஜித்துக் கொண்டிருக்கும் பொழுதும், தூத்தல் மெல்லியதாய் விழுந்துகொண்டிருக்கும்பொழுதும், பத்தரைமாற்றுத் தங்கம்போல் பளபளப்பாய்ப் பிரகாசிக்கும் மின்னல், நாயகனைக் குறித்து வெளியிற்செல்லும் வியபிசாரிணிகளுக்கு (வழிகாட்டுகின்றமையால்) ஸந்தோஷத்தையும் (தன்னைப்பிறர் தெரிந்துகொள்ளும்படி செய்வதனால்) வருத்தத்தையும் உண்டாக்குகிறது.

ஆஸாரேஷுநஹர்ம்யதப்ரியதமைர்யாதும்யதி:சக்யதே
சீதோத்கம்பநிமித்தமாயதத்ருசாகாடம்ஸமாலிங்க்யதே
ஜாதா:சீகரிசளாச்சமருதோராத்யந்ததேதச்சிதோ
தந்யாநாம்பத!துர்திநம்ஸுதிநதாம்யாதிப்ரியாஸங்கமே (95)

(இ—ள்) மழை ஓயாது பெய்கின்றமையால் கணவர் வெளிச்செல்லக்கூடவில்லை; நீண்டவிழிகளையுடைய நாயகி, குளிராலுண்டாகிய நடுக்கத்தைத்தீர்ப்பதற்காக இறுகத் தழுவிக்கொள்ளுகிறாள்; குளிர்ந்த நீர்த்தி

வலைகளால் குளிர்ந்ததும், கலவியினிறுதியிலுண்டான சிரமத்தைப் போக்குகின்றதுமான காற்றுவீசத் தொடங்கியது; ஆனதால் புண்யவான்களுக்கு மனைவியுடன் சேர்க்கை யேற்பட்டிருக்கும் பொழுது, ராத்திரியும் (மேகத்தால் மறைக்கப்பட்ட நாளும்) ஸுதினமா (நல்லநாளா)கின்றது: ஆச்சரியம்!

அர்த்தம்ஸுப்த்வா நிசாயா: ஸரபஸஸுரதாயாஸஸந்நச்லதாங்க:
ப்ரோத்பூதாஸஹ்யத்ருஷ்ணோமதுமதநிரதோ ஹர்ம்ய ப்ருஷ்
[டேவிவிக்தே

ஸம்போகக்லாந்தகாந்தாசிதிலபுஜலதாவர்ஜிதம் கர்கரீதோ
ஜ்யோத்ஸ்நாபிச்சந்நதாராம்நபிபதிஸலிலம்சாரதம் மந்தபுண்ய: 36

(இ—ள்) நிறை செல்வமற்ற புருஷன், பாதிராத்திரிவரை தூங்கிவிட்டு, விழித்துக்கொண்டவுடன் பரபரப்புடன் செய்த ஸம்போகத்திலுண்டான சிரமத்தால் சோர்வடைந்து தளர்ந்த அவயவங்களையுடையவனும், மிகுந்த தாகமுள்ளவனும், மதுவின் மதத்தினால் பரவசனும், நிர்ஜ்ஜநமான மாளிகையில் களத்திகையென்னும் பாத்திரத்தினின்றும் ஸம்போகத்தினால் சிரமமடைந்த நாயகியின் ஸஹாயமற்றதும் கொடிபோன்றதுமான கையால் கொடுக்கப்பட்டதென்று நினைத்து, ஹம்ஸோதகத்தை நிலவால் மறைக்கப்பட்ட தாரைகளையுடைத்தாயிருக்கும்படி பருகுவதில்லை. (பாக்யமுள்ளவன் தான ஹம்ஸோதகத்தைச் சாப்பிடும் பெருமையுடையவனென்பது கருத்து).

ஹேமந்தே ததிதுக்தஸர்ப்பிரசநாமாஞ்ஜிஷ்டவாஸோப்ருத:
காச்மீரத்ரவஸாந்த்ரதிக்தவபுஷச்சின்னாவிசித்ரைரதை:
வ்ருத்தோருஸ்தநகாமிநீஜநக்ருதாச்லேஷாக்ருஹாப்யந்தரே
தாம்பூலீதலபூகபூரிதமுகா தந்யா:ஸுகம்சேரதே (97)

(இ—ள்) ஹேமந்தருதுவென்னும் பனி காலத்தில் தயிர், பால், நெய் இவைகளை உணவாகவுடையவர்களும், சிவப்பு உடையைத் தரித்



தவர்களும், குங்குமப்பூவின் குழம்பால் பூசப்பட்ட சரீரங்களையுடையவர்களும், பலவிதமான கேளிகளால் சிரமமடைந்தவர்களும், வர்த்துலமான தொடைகள், கொங்கைகள் இவைகளையுடைய ஸ்திரீகளால் தழுவிக் கொள்ளப்பட்டவர்களும், வெற்றிலை பாக்குகளால் நிறைந்த முகமுடையவர்களுமான புண்பவான்கள் வீட்டு மத்தியில் இன்பமாய்த் தூங்குகின்றனர்.

ப்ரோத்யத்ப்ரௌடப்ரியங்குத்யுதிப்ருதி விகஸத்குந்தமாத்யத்
[விரேபே
காலேப்ராலேயவாதப்ரசலவிலஸிதோதாரமந்தாரதாம்நி
யேஷாம்நோகண்டலக் நாக்ஷணமபிதுஹி நக்ஷோததக்ஷாம்
[ருகாக்ஷீ
தேஷாமாயாதயாமாயமஸதநஸமாயாமிநீயாதியூநாம் (98)

(இ—ள்) வெளிக்கிளம்பியதும், விருத்தியடைந்ததுமான விருக்ஷங்களால் காந்தியுள்ளதாயும், மலர்ந்த குந்த புஷ்பங்களால் மதம்பிடித்த வண்டுகளையுடையதும், பனிக்காற்றால் அசைகின்றதும், பிரகாசிக்கின்றதும், அழகானதுமான மந்தார மரங்களினிருப்பையுடையதுமான பனிகாலத்தில் குளிரை (கொங்கைகளாலும் கைகளாலும் இறுகத் தழுவிக் கொள்வதால் உஷ்ணமுண்டாகி) நீக்குவதில் சாமர்த்தியமுள்ள மான்விழியாளை கணப்பொழுதேனும் கழுத்தைத் தழுவிக்கொள்ளப் பாக்கியம் பெறாதவர்களுக்கு மிகவும் வளர்ந்த யாமங்களையுடைய இரவானது யமலோகம்போல் அளவற்ற துன்பத்தைக் கொண்டே கழிகின்றது.

சும்பந்தோகண்டபித்தீரலகவதிமுகேஸீத்க்ருதாந்யாததாநா
வக்ஷஸ்ஸுத்கஞ்சுகேஷுஸ்தநபரபுளகோத்பேதமாபாத
[யந்த:
ஊரூநாகம்பயந்த:ப்ருதுஜகநதடாஸ்ரம் ஸயந்தோம்சுகாநி
வ்யக்தம் காந்தாஜநாநாம் விடசரிதப்ருத: சைசிராவாந்தி
வாதா: (99)

(இ—ள்) மனைவிகளின் சுவர்போன்ற கன்னப்பிரதேசத்தை முத்தமிடுகின்றதும், கூந்தலால் மறைபட்ட முகத்தில் ஸீத்காரத்தையுண்டு பண்ணுகின்றதும், மார்பினில் இரவிக்கை கட்டப்படாமலிருந்தும் கொங்கைகளில் மயிர்க் கூச்சலையுண்டு பண்ணுகின்றதும், தொடையை அசக்குகின்றதும், பெரியஜகன வஸ்திரத்தின் முடிச்சை யவிழ்க்கின்றதும், விடர்களின் தொழிலை மேற்கொண்டதும் சிசிருதுவிலுண்டானதுமான காற்றுவீசுகின்றது.

கேசாநாகுலயந்த்ருசோமுகுலயந்வாஸோபலாதாக்ஷிபந்
நாதந்வந்புலகோத்கமம்ப்ரகடயந்நாவேசகல்பம்சநை:
வாரம்வாரமுதாரஸீத்க்ருக்ருதோதந்தச்சதாந்பீடய
ந்ப்ராய:சைசிரஎஷஸம்ப்ரதிமருத்காந்தாஸுகாந்தாயதே (100)

(இ—ள்) கூந்தலைப் பிரிக்கின்றதும், கண்களைமூடச் செய்வதும் ஆகிய முயற்சியினலிழுப்பதும், மயிர்க்கூச்சலையுண்டாக்குவதும், பரபரப்பால் நடுக்கலை மெதுவாயுண்டாக்குவதும், மனோஞ்ஞமான ஸீத்காரசப்தங்களைச் செய்யும், உதடுகளை அடிக்கடி பீடிக்கின்றதும், சிசிருதுவிலுண்டானதுமான இக்காற்றானது, இம்மாசி பங்குனி மாதங்களில் மனைவிகளிடம் கணவன்போல் நடக்கின்றது.

ச்ருங்காரசதகம் முற்றிற்று.

# நீதி

## பர்த்ருஹரி வைராக்கியசதகம்.

### 1 ஆசையையிகழ்தல்.

சூடோத்தம்ஸிதசந்த்ரசாரு
கலிகாசஞ்சச்சிகாபாஸ்வரோ,
லீலாதக்தவிலோலகாமசலப:
ச்ரோதசாக்ரேஸ்புரந்
அந்தஸ்பூர்ஜ்ஜதபாரமோஹ
திமிரப்ராக்பாரமுச்சாடயம்
ச்சேத:ஸ்தமநியோகிநாம்
விஜயதேஞாநப்ரதீபோஹர: (1)

(பொருள்). தலையணியாகச்செய்யப்பட்ட சந்திரனின் அழகான மொக்குப்போன்று விளங்கும் நுனியால் பிரகாசிப்பவரும், நிலையற்ற மன்மதனென்னும் விளக்கு வெட்டுப்பூச்சியை விளையாட்டாகவே எரித்தவரும் சுபதசைகளில் எதிரில் விளங்குகின்றவரும், மனத்துள் விருத்தியடைந்ததும், முடிவற்றதுமான மோகாந்தகாரத்தின் முதற்கட்டை ஒழிப்பவரும், அறிவை விளங்கச்செய்பவரும், ஞானத்தாலும் அஞ்ஞானத்தாலும் மனதாலும் சொல்லாலும் உடலாலும் செய்யப்பட்ட தீவினைகளைத் தொலைப்பவருமாகிய சிவபெருமான், ஸநகர் முதலிய யோகிகளின் மனவீட்டில் எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குகிறார்.

ப்ராந்தம்தேசமநேகதுர்க்கவிஷமம்ப்ராப்தம்நகிஞ்சித்பலம்
த்யக்த்வாஜாதிகுலாபிமானமுசிதம்ஸேவாக்ருதாநிஷ்பலா
புக்தம்மாநவிவர்ஜ்ஜிதம்பரக்ருஹேஷ்வாசங்கயாகாகவ
த்த்ருஷ்ணேஜ்ரும்பஸிபாபகர்மபிசுநேநாத்யாபிஸந்துஷ்யஸி(2

(இ—ள்). மலைகள், மரங்கள், கோட்டைகள், அகழுகள் முதலிய துர்க்கங்களால் பிரவேசிக்கமுடியாத தேசம் ஸஞ்சரிக்கப்பட்டது; ஆயினும்

சொற்பப்பொருளாயினும் கிடைக்கவில்லை. நமக்கு ஒத்ததான பிராமணன் என்னும் ஜாதி, நல்லகுலம் இவைகளில் அபிமானத்தையும் விட்டுவிட்டு, செல்வவான்களுக்குத் தொண்டு செய்ததும் வீணாயிற்று. அபிமானத்தை விட்டு, ஆசையினால் பிறர் வீடுகளில் காகம்போலப் புசிக்கப்பட்டது; அதுவும் வீணே! தீய செயல்களைச் செய்வதற்குத் தூண்டிவிடுகின்ற பேராசையே! இத்தகைய இன்னல்களை அநுபவித்தும் ஒழிவடையாது விருத்தியடைகின்றனையே! இப்பொழுதும் நீ சந்தோஷமடையவில்லையே!

உத்காதம்நிதிசங்கயாக்ஷிதலமத்மாதாகிரேர்தாதவோ,
நிஸ்தீரண:ஸரிதாம்பதிர்ந்ருபதயோயத்நேநஸந்தோஷிதா:
மந்த்ராராதனதத்பரேணமநஸாநீதா:சமசாநேநிசா:
ப்ராப்த:காணவராடகோபிநமயாத்ருஷ்ணேஸகாமாபவ (3)

(இ—ள்). இங்கு புதையல் இருக்கவேண்டுமென்றும் பிரமத்தால் பூதலம் கல்லப்பட்டது; மலையிலிருக்கும் நச்சங்குப்பொடிகள் (நெருப்பில் குகையில் மூலிகை ரஸத்தைச்சேர்த்து வைத்துத் தங்கப்பொடிகளாக மாறிவிடுமென்றும் எண்ணத்தால்) ஊதப்பட்டன; (தீவாந்தரத்துக்குச் சென்று வியாபாரஞ்செய்து பெருஞ்செல்வம் ஸம்பாதிக்கலாமென்று) கடலும் தாண்டப்பட்டது; மன்னவர்களும் பிரயாசைப்பட்டுத் திருப்திசெய்விக்கப்பட்டனர்; இரவுகளில் சுடலையில் (நாம் இம்மந்திரத்தைவிடாது ஜபஞ்செய்தால் தேவதை பிரஸன்னமாகி புதையலிருக்குமிடத்தைக் காட்டிவிடுமென்னுமாசையால்) இரவுகள் கழிக்கப்பட்டன; ஆயினும் எனக்கு ஒரு பொட்டைச் சோழிகூடக் கிடைக்கவில்லை. ஆதலின் ஏ ஆசையே! நீ போதுமென்று ஒழிவையடைவாய்!

கலாலாபா:ஸோடா:கதமபிததாராதநபரை
நிக்ருஹ்யாந்தர்பாஷ்பம்ஹஸிதமபிசூந்யேநமநஸா
க்ருதோவித்தஸ்தம்பப்ரதிஹததியாமஞ்சலிரபி
த்வமாசே!மோகாசே!கிமபரமதோநர்த்தயஸிமாம் (4)

(இ—ள்). தீயோர்க்குத் தொண்டுசெய்வதில் முயற்சியுள்ள நாங்கள் அவர்களுடைய துர்ப்பாஷணைகளையும் பிரயாசைப்பட்டுப் பொறுத்துக் கொண்டோம். அவர்கள் கூறிய தீயசொற்களாலுண்டாகிய கண்ணீரையும் உள்ளேயே அடக்கிக்கொண்டு உற்சாகமற்றமனதுடன் கூடின நாங்கள் அவர்களுடைய பிரீதி நிமித்தம் சிரிக்கவும் சிரித்தோம் தனமென்னும் துர்மதத்தால் மதிமயங்கியவர்களுக்கும் வந்தனஞ்செய்தோம் ஆயினும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆதலின் வீண் முயற்சியுள்ள ஆசையே! நீ என்னை இன்னும் என்னென்ன காரியங்களைச் செய்யச்செய்வாயோ?



அமீஷாம்ப்ராணாநாம்துலிதபிஸிநீபத்ரபயஸாம்
க்ருதேகிம்நாஸ்மாபிர்விகளிதவிவேகைர்வ்யவஸிதம்
யதாட்யாநாமக்ரேத்ரவிணமதநி:ஸம்ஞ்ஞமநஸாம்
க்ருதம்மாநவ்ரீடைர்நிஜகுணகதாபாதகமபி (5

(இ—ள்). தாமரையிலையினிடையிலிருக்கும் நீர்த்திவலைபோல் நிலையற்றனவும் விசுவாசம் பாராட்டத்தகாதவைகளுமான பிராணன்களைக் காப்பதற்காக விவேகமற்ற நாங்கள் எந்தத் தீயகாரியங்களைச் செய்வதற்குத்தான் முயற்சிக்கவில்லை; ஏனெனில் நாங்கள் தனமதத்தால் சூன்யமான மனதையுடைய செல்வவான்களின் முன்னிலையில் மானத்தைவிட்டு எங்கள் குணங்களைப் புகழ்ந்துகொள்வதாலுண்டாகிய பாவத்தையும் செய்தோமே! (அவ்வாறு தற்புகழ்ச்சி செய்தும் ஒன்றும் கிடைக்கவில்லை).

க்ஷாந்தம்நக்ஷமயாக்ருஹோசிதஸுகம்த்யக்தம்நஸந்தோஷத:
ஸோடாதுஸ்ஸஹசீதவாததபநக்லேசாநதப்தம்தப:
த்யாதம்வித்தமஹர்நிசம்நியமிதப்ராணைர்நசம்போ:பதம்
தத்தத்கர்மக்ருதம்யதேவமுநிபிர்ஸ்தைஸ்தை:
[பலைர்வஞ்சிதா: (6)

(இ—ள்). நாங்கள் அவமானமுதலியவற்றைப் பொறுமையால் சகிக்காது (சாமர்த்தியமில்லாமையாலே) ஸஹித்தோம்; இல்லறத்திற்குரிய அறுசுவையுண்டி, மனைவியுடன் சேரல் முதலியவற்றாலுண்டாகிய சுகத்தை (அது நிலைபற்றது என்று அறிந்து) நீக்காது (ஸம்பவிக்காமையாலே) நீக்கிவிட்டோம்; ஸகிக்கமுடியாத குளிர், வெப்பம் கதிரவன் முதலியவற்றாலுண்டாகிய துக்கங்களைப் பொறுத்தோம்; சாந்திராயண முதலிய தவத்தையோ செய்யவில்லை; பிராணனையடக்கிய நாங்கள் இராப்பகலாகப் பணத்தையே தியானஞ்செய்தோம்; சிவபெருமானின் பாதத்தைத் தியானிக்க

வில்லை. ஆதலால் முனிவர்கள் செய்யப்படும் கர்மாவை நாங்கள் செய்தும் அந்தந்த கர்மபலன்களால் ஏமாற்றப்பட்டோம். (கர்மாக்களை முறைப்படி அநுஷ்டிக்காது மாறி அநுஷ்டித்தமையால் அவற்றின் பலன்களைப் பெற வில்லையென்பது கருத்து).

போகாநபுக்தாவயமேவபுக்தாஸ்தபோநதப்தம்வயமேவதப்தா:
காலோநயாதோவயமேவயாதாஸ்திருஷ்ணாநஜீர்ணாவயமேவ
(ஜீர்ணா: (7)

(இ—ள்). நறுமணங்கமழும் மாலை, வாசனைச் சந்தனம், மான்விழி யாள் முதலிய விஷயங்கள் அநுபவிக்கப்படவில்லை; நாங்களே முடிவற்ற சிந்தையால் சிரகிக்கப்பட்டோம். சாந்திராயணம் முதலிய விரதத்தையும் அநுஷ்டிக்கவில்லை. நாங்கள் தான் தன்னைப்பற்றி வருவனவும் பிறவுயிர் களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப்பற்றி வருவனவுமான மூவகைத் துன்பத்தால் தபிக்கிறோம். இவைகளையே வடநூலார் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பர். காலம் கழியவில்லை நாங்களோ செல்லுகிறோம்; ஆசை குறைவடையவில்லை; நாங்களே குறைவடைகிறோம் (ஆனதால் இனிவிரைவில் கட்வாங்கர்போல் ஆசையையொழித்து தர்மம் ஸம்பாதிப்பதில் முயற்சிக்கவேண்டுமென்பது கருத்து).

வலீபிர்முகமாக்ராந்தம் பலிதேநாங்கிதம்சிர:
காத்ராணிசிதிலாயந்தேத்ருஷ்ணைகா தருணாயதே (8)

(இ—ள்). முகமானது மூப்பினால் சுருங்கிய தோலால் நிறைந்திருக் கிறது; கூந்தல்கள் வெளுப்பாயிருக்கின்றன; கை, கால் முதலிய அவயவங் கள் தளர்ந்த எலும்புப்பூட்டுகளை உடைத்தாயிருக்கின்றமையால் காரியங் களைச் செய்வதில் சாமர்த்தியமற்றவைகளாயிருக்கின்றன; ஆனால் ஆசை ஒன்றுமட்டும் காளைபோல் கொழுத்திருக்கின்றது.

தொடரும்

Pandit, M. M. Narayanasamy Iyer,
Mudikondan.

# கனகாவலி

## 40-வது பக்கத்தின் தொடர்ச்சி

அரசர் இதோ என்று சொல்லிவிட்டு அந்தப் புரத்துட்சென்று ஓர் சிறந்த போர்வையை யெடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். குழந் தை சௌக்கியமாயிருக்கிறாளாவென்று கேட்டதும் அதற்கு வைத்தியர் "ஸ்வாமி அதைப் பற்றி உங்களுக்கு இனிமேல்க் கவலையே வேண்டாம். நீங்கள் போய்ச் சற்றுஞ்சஞ்சலமில்லாமற் றூங்கலாம். இது விஷயத்தை மகாராணியவர்களிடமுந் தெரிவியுங்கள். அவர்கள் இன்று இளவரசியின் பொருட்டுப்பட்ட துயரத்தை அளவிட முடியாது. கருணாநிதியின் கிருபை யால் சந்தேகமில்லாமல் தங்கள் புத்திரி குணமடைவாள்" என்றுசொல்லி அரசரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு போனார்.

இதற்குள்ளாக வைத்திய அறையில் தாதியும் வைத்தியர் அறையில் சிப்பாயும் தூக்கந்தெளிந்தெழுந்து அவரவர்களுடைய ஜோலியைச் சரி வரச்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். வைத்தியர் தன்னறைக்கு நேராக வந்ததும் அச்சிப்பாய் "பிரபு தங்களுடைய கிருபையால் எனக்கு வயிற் றுவலி முற்றிலுங் குணமானதுமன்றி தங்களுடைய மேன்மையான ஔ ஷதத்தின் விசேஷ குணத்திற்கு அறிகுறியாக எனக்கு ஒரு விதமான மனக்கிளர்ச்சியுமுண்டாயிருப்பதுபோலத் தோன்றுகிறது. எனக்குத் தானே வயிற்றுவலி வந்ததென்று சந்தேகிக்கும்படியாயிருக்கிறது அதற்காக உங்களை மிக்க அன்போடும் வணக்கத்தோடும் நமஸ்கரிக்கி றேன்" என்று சொல்லி அவரை நமஸ்கரித்ததும் "இவ்வயிற்றுவலி இன் றோடே உன்னை விட்டொழிந்ததென்று நினைத்துக் கொள்" என்று இவ னுக்கு இனிமையாய்ப்பதில் சொல்லிவிட்டு வைத்திய அறைக்குட் புகுந் ததும அங்கே நாம் முன்கூறிய தாதி அங்குள்ள கடியாரத்தில் மணி சரியாய் 3¼ ஆயிருந்ததால் தன்னிடம் வைத்தியர் கொடுத்திருந்த மருந் தை யெடுத்து ராஜகுமாரிக்குக் கொடுக்க எத்தனிக்கையில் வைத்தியர் அவ்விடத்தில் சென்று "பெண்ணே அம்மருந்தை நீ இப்பொழுது அவ

ளுக்குக் கொடுக்கவேண்டாம் அதை என்னிடம் கொண்டுவா" என்று சொன்னார். உடனே அத்தாதி அதைத் தன்னிடம் கொண்டுவந்ததும் அதைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பி அப்புட்டியைப் பார்த்துக் கடைசியாக அதை முகர்ந்துவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு கீழே வைத்தார். பிறகு கொஞ்சநேரம் ஆலோசனையிலிருந்துவிட்டு அத்தாதியை நோக்கி "பெண்ணே உன் பெயரென்ன" என்று கேட்க "அவள் என் பெயர் செண்பகமென்று சொல்வார்கள்" என்று மறுமொழி கூற மறுபடியும் பின் வருமாறு அவளுடன் சம்பாஷிக்கலானார்.

வைத்தியர்:—'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். உன் முகத்தைப் பார்க்கும்பொழுதும், உன் பெயர் இதுவரை எனக்குத் தெரியாமற்போனாலும் உன்னைப்பற்றி நான் அரண்மனையில் கேட்டிருப்பதிலிருந்தும் நீ உத்தமஜாதி ஸ்திரீயாயிருப்பாயென்றே நம்புகிறேன். அந்நம்பிக்கையை மேற்கொண்டு உன்னிடத்தில் நான் இப்பொழுது சில ரகஸ்யங்களைத் தெரிவிக்கப்போகிறேன். அவ்வரிய ரகஸ்யங்களை என்னுடைய நம்பிக்கைக்குப் பங்கம் வராமலும் நான் சொல்லப்போகும் விஷயங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அகாரணமாயாவது அல்லது அகாலமாயாவது ஒருவிதமான துன்பங்களும் நேரிடாமலுமிருக்கும்பொருட்டு, நீ ஒருவருக்கும் நான் சொல்லுபவைகளை வெளியிடக்கூடாது. அவ்வாறு நீ எனக்கு வாக்களிக்கவேண்டும்.

செண்பகம்:—நீர் சொல்லப்போகும் விஷயம் சரியானதாயிருப்பின் அதை நிறைவேற்ற என்னாலியன்ற உதவியை நான் உமக்குச் செய்யத் தயாராயிருக்கிறேன். அன்றி நீர் சொல்வது என் மனதுக்குச் சரியானதாய்த் தோன்றாவிட்டால் அதை என் மனதில் புதைத்துவிடுவேனேயொழிய என்னாலொருக்காலும் வெளியிடமாட்டேன். இது திண்ணம், நீர் சொல்வதைச் சற்றுஞ் சந்தேகமில்லாமலும் பயமில்லாமலுஞ் சொல்லலாம்.

வைத்தியர்:—நான் உன்னை அடிக்கடி இளவரசியின் கூட்டத்தில் பார்த்திருக்கிறேன். இளவரசி தனதந்தரங்க தோழியாய் வைத்திருக்கும் செண்பகம் நீதான் என்று இதுவரை நான் அறியமாட்டேன். இப்பொழுது



நீ இன்னாரென்று உன்வாயினாலே எனக்குத்தெரிவித்தபிறகு என்மனதில் உன் பெயர் கேட்கிறதற்கு முன்னிருந்த சந்தேகங்களெல்லாம் போய்விட்டது. நான் தற்சமயம் உன்னிடத்தில் விரும்புவது என்னவென்றால், உன்னிடத்தில் கேட்கப்போகும் கேள்விகளுக்கெல்லாம் பதில்சொல்லிவரவேண்டும். இரண்டாவது இப்பொழுது நமக்குள் நடக்கப்போகும் சம்பாஷணையின் ஒவ்வொருவிஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதை எச்சமயத்தில் உன்னை வெளியிடச்சொல்லுகிறேனோ அப்பொழுது வெளியிடத் தயாராயிருக்கவேண்டும் நான் உன்னிடத்தில் சொல்லப்போகும் விஷயங்களின் நேர்மையைப்பற்றி உனக்குச் சற்றுஞ் சஞ்சலம் வேண்டாம்.

செண்பகம்:—"இவர் சொல்லப்போகும் விஷயம் சரியாயிருப்பின் அதைப்பற்றி நமக்குச் சஞ்சலமே வேண்டாம். அன்றி அது சரித்தப்பாயிருப்பின், கேட்டதோஷம் ஒன்றுதான் நமக்கு ஏற்படுமேதவிர இவருக்கு உதவியாயிருந்த குற்றமாவது அல்லது உட்கையாயிருந்த குற்றமாவது நம்மைத் தொடராவண்ணம் நாம் செய்துகொள்ளலாம்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு 'நீர் சொல்லவேண்டியதைச் சொல்லலாம். நான் நீர் சொல்லியபடி நடக்கத் தயாராயிருக்கிறேன்' இருப்பினும் நீர் சொல்லப்போகும் விஷயங்களின் சாதக பாதகங்களை முன்னரே யோசித்துக்கொண்டு என்னிடம் தெரிவிப்பது நலம்.

வைத்தியர்:—அதைப்பற்றி இப்பொழுதுதானே உன்னிடத்தில் சொன்னேன். நான் சொன்னதின் உண்மை இச்சம்பாஷணையின் முடிவில் தானே துலங்கும்.

செண்பகம்:—அப்படியானால் உம்முடைய கேள்விகளைக் கேட்கலாம்

வைத்தியர்:—நான் உன்னிடத்தில் இம்மருந்தைக்கொடுத்தபொழுது நீ வேண்டிக்கொண்டதற்கிணங்கி அதில் கொஞ்சம் உன்னைச் சாப்பிடச் சொன்னபொழுது அது உன் நாவுக்கு எவ்வாறிருந்தது?

செண்பகம்:—அதைத்தான் அந்த நிமிஷமே உம்மிடத்தில் அவிருந்த அன்போடு தெரிவித்தேனே. அது தேவாமிர்தத்தோடொன்ற

சந்தேகம் என் மனதில் எப்பொழுதுமிருந்துகொண்டேயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

வைத்தியர்:—அதற்குமுன் ஏதோ சப்தங்கேட்டதென்றும், திரும்பிப் பார்க்கும்பொழுது அங்கு தோன்றிய வடிவத்தை முதலில் யாரோவென்று சந்தேகித்துப்பிறகு என்ன காரணத்தினால் உன்னுடைய நிழல்தான் என்று தீர்மானித்தாயென்றும், நீ என்னிடத்தில் சொன்னது ஞாபகமிருக்கிறதா?

செண்பகம்:—ஆம் ஞாபகமிருக்கிறது. அதை என்னால் ஒருநாளும் மறக்கமுடியாது பிறகு மேலே சொல்லும்.

வைத்தியர்:—இப்பொழுது சொல்லப்போவது தான் மிகவும் முக்கியமானது. அதென்னவென்றால் இம்மருந்தைப் பரிசோதனை செய்து அது அப்படியேயிருக்கிறதா அல்லது ஏதாவது மாறுதலையடைந்திருக்கிறதாவென்று பார்க்கவேண்டியதுதான்.

செண்பகம்:—அதென்ன மாறுதலையடைந்திருக்கக்கூடும் நான் இங்கேதானேயிருந்திருக்கிறேன். அதற்குத்தானே மாறுமியற்கையிருந்தாலொழிய அது வேறு எந்த விதத்திலும் மாறுபடுகிறதற்குக் காரணமேயிராது இது எந்த இடத்தில் யாருக்காக வைத்திருக்கிறது. அதையும் நீர் கவனித்துப் பார்க்கவேண்டும்.

வைத்தியர்:—இம்மருந்து இங்கேயிருக்கிறதென்று உனக்கும் நமக்குந்தான் தெரியுமென்று நாமிருவரும் நினைக்கிறோம். அதை நாம் தீர்மானமாய்ச் சொல்ல முடியாது. இன்னுங் கொஞ்சம் எட்டியோசித்துப் பார்த்தால் நான் சொல்வதின் உண்மையையறியக்கூடும்.

செண்பகம்:—நீர் சொல்வதைக் கவனிக்கும்பொழுது என்னையறியாமலே என் மனதில் ஒரு விதமான திகிலுண்டாகிறது. மாறுதலடைந்திருக்கிறதா இல்லையாயென்று கண்டுபிடிப்பதற்கு நீர் இப்பொழுது என்ன செய்யப்போகிறீர்.

வைத்தியர்:—(உடனே அங்கிருந்த ஓர் ரோஜாப் புஷ்பத்தையெடுத்து அதன் மத்தியில் அம்மருந்தில் ஒரு துளி யெடுத்து விட்டதும் அது தன்நிறமிழந்து வாடியுலர்ந்து நெடு நாளைக்குமுன் கொய்து



உலர்த்தி வைக்கப்பட்ட புஷ்பம்போல் ஆய்விட்டது) பார்த்தாயா! செண்பகம் ரோஜாவை இப்பாடுபடுத்தியது செண்பகத்தைச் சும்மாவிட்டிருக்குமா?

செண்பகம்:—நீர் சொல்வதையறிந்து கொண்டேன். இது கொடிய மாறுதலை அடைந்திருக்கிறதென்பது தெளிவாய்த் துலங்குகிறது. ஐயோ, ரோஜாவிலும் மெல்லிய தேகத்தையுடைய நமது இளவரசி இதையுட்கொண்டால் அவள் படும்பாடு சொல்லவுங்கூடுமோ. இன்று உம்முடைய சாமர்த்தியமும் முன் யோசனையுமே அவளுடைய அகால மரணத்தைத் தடுத்தது.

வைத்தியர்.—இன்னொரு சோதனை காட்டுகிறேன் பார் என்று சொல்லி அங்குள்ள ஓர் வாழைப் பழத்தில் பதிக்கப்பட்டு எறிந்துகொண்டிருந்த சாம்பிராணிவத்திகளில் இரண்டையெடுத்து அவைகளை யணைத்து அத்திராபகத்தில் கொஞ்சம் தோய்த்து மறுபடியுங் கொளுத்தி அங்கு பாராக்கொடுத்துக் கொண்டிருந்த சிப்பாயினிடங்கொடுத்து அதை குதிரை லாயத்தில் கொண்டு ஓர் இடத்தில் பத்திரமாய் அணையாது எரிந்து கொண்டிருக்கும்படி வைத்து வரும்படி சொன்னார். செண்பகம் அச்சிப்பாய் இங்கு திரும்பி வருவதற்குள் நீ பார்க்கப்போகும் ஆச்சரியத்தைப்பார்.

செண்பகம்:—ஐயா, உம்மைப் பார்த்தால் வைத்தியரைப்போலக் காணவில்லை. ஜெகஜால வித்தையில் தேர்ச்சிபெற்றவரைப்போலத் தோன்றுகிறது. நீர் தற்சமயம் நம்முடைய இளவரசியின் உயிரைக்காத்த விஷயம் அரசருக்குத் தெரியுமாகில் உமக்குத் தகுந்த பரிசளிப்பார்.

வைத்தியர்:—பெண்ணே என்ன சொன்னாய்? நான் சொன்னதையெல்லாம் மறந்துவிட்டாய் போலும். இப்பொழுது நடப்பது ஒருவருக்குந் தெரியக்கூடாது. (இதற்குள் சிப்பாய் குதிரை லாயத்திலிருந்து திரும்பிவந்து வைத்தியரிடத்தில் ஆஜரானதும், அவன் வருவதற்கு முன்னமே அத்திராபகத்தில் கொஞ்சம் விட்டிருந்த அவ்வாழைப் பழத்தை அவன் கையில் கொடுத்து அதை அரண்மனை உப்பரிகையின்மேல் மாளிகைவெளியில் போட்டு வரும்படி உத்தரவு செய்தார்.) செண்பகம்

நாளைபதினம் காலை அரண்மனை உப்பரிக்கைக்குச் சென்று அங்கு பார்த்ததை யெனக்கு விபரமாய் வந்து சொல்லவேண்டும்.

சேண்பகம்:—ஆகட்டும் ஸ்வாமி அப்படியே செய்கிறேன்.

வைததியர்:—நமக்குள் இப்பொழுது நடந்த விருத்தாந்தங்கள் நமது இளவரசிக்குக்கூடத் தெரியக்கூடாது.

சேண்பகம்:—இவ்விஷயம் உமக்குச் சொந்தமென்று நினைத்துக் கொள்ளும். நீராக வெளியிடச் சொல்லும்வரை இது என்னிடத்தில் ரகஸ்யமாகவேயிருக்குமென்று நம்பும்.

வைத்தியர்:—இப்போது மணி $4\frac{1}{4}$ ஆகிறது. நான் போய்வருகிறேன்.

இவ்வாறு இவர் சொல்லி அவ்வறையைவிட்டு வெளிக்கிளம்பினதும் அரண்மனை லாயத்திலுள்ள குதிரைகளெல்லாம் ஒன்றுபோல் கனைக்க ஆரம்பித்துவிட்டது, ஏகத்துக்கு எங்கு கேட்டாலும் அச்சப்தத்தின் கோஷமாகவேயிருந்தது. இதின் ரகஸ்யம் செண்பகத்துக்கு மட்டுந் தெரியவரும். தன்னறைக்குட் சென்று படுத்துறங்கப்போகுஞ் சமயத்தில் அங்கிருந்த சிப்பாய் அவர் படுக்கையைபண்டி. "ஸ்வாமி தங்களிடத்தில் சில விஷயங்களைத் தெரியப்படுத்தவேண்டும் அதற்குத் தாங்கள் அனுமதி கொடுப்பீர்களாகில் தங்களை ஒருபொழுதும் மறக்காது என்றும் தங்களுடைய ஊழியனுயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறேனென்பதை அறிந்துகொள்வீர்கள். அப்பாக்கியத்தை நீங்கள் எனக்குத் தந்தருளவேண்டும்" என்றான். அதற்கு வைத்தியர் "நீ என்னப்பா, சொல்லப்போகிறாய் உனக்கு இரவில் ஒருபாதி விழித்திருந்தால்போதும், எனக்கோ தற்சமயம் இரவும் பகலும் இடைவிடாது ராஜகுமாரியின் சிகிச்சையில் கண்ணுயிருக்கவேண்டியிருக்கிறது. மற்றநாளிலோ, இன்னவேளையில்தான் நம்மை அழைத்துவரும்படி சொல்வார்கள் என்ற நிச்சயமில்லாமலே அரைகுறைத்தூக்கத்திலிருந்துகொண்டிருப்பேன். கடவுள் நமக்கெல்லோருக்கும் கண்ணிரண்டு கொடுத்தும் ஒரு கண் விழித்திருக்க ஒரு கண் உறங்காது இரண்டும் ஒன்றுபோல் உறங்கிவிடுகிறது. நான் ஜென்மமெடுத்து இதுவரையிலும் தொடர்ச்சியாய் 5 மணி நேரம் தூங்கினேனென்பது



கிடையாது. எந்த ஜென்மத்தில் யாருடைய தூக்கத்துக்குப் பங்கமாயிருந்தேனோ அதற்குச் சிக்ஷையாக இந்த ஜென்மத்தில் அரண்மனை வைத்தியனுக்கியிருக்கிறார் நேற்றிரவெல்லாம் விழித்திருந்துவிட்டு இப்பொழுது சற்று கண்ணயர்வோமென்றிருக்குந் தருணத்தில் நீ ஏதோ விஷயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்கிறாய் நீ சொல்வதைச் சீக்கிரமாயுஞ் சுருக்கமாயுஞ்சொல்லு" என்றார். உடனே அச்சிப்பாய் "ஸ்வாமி வேறொன்றுமில்லை தாங்கள் எனக்குச் செய்த உதவிக்கு நான் எவ்வாறு கைம்மாறு அளிக்கப்போகிறேன். நான் என்னவோ உங்களிடத்தில் வந்து பாசாங்கு செய்கிறேனென்று நினைத்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில் என்னுடைய வம்சத்தில் இக்கொடிய நோயால் அதிபால்யத்திலேயே தங்களுடைய வாழ்நாள் முடிவடையப் பெற்றவர் அநேகர். அதன் நிமித்தம் எங்கள் குடும்பமடைந்திருக்கிற துன்பத்தை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ எனக்கு நேற்று வயிற்றுவலி வந்ததும் நான் தங்களிடத்து வந்து வேரற்றமரம்போல் விழுந்தபிறகு நான் முற்றிலும் சௌக்கியமாய் எழுந்தது தான் தெரியும். என்றால் ஏற்ற பிரதியுபகாரம் தங்களுக்குச் செய்ய முடியாமற்போனாலும் தாங்கள் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தவர்களாவீர்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தது. அதைத் தெரிவித்தேன். தங்களுக்குதவுமாறு என் உடல், பொருள் ஆவி இம்மூன்றையும் தியாஜ்ஜியஞ்செய்யத் தயாராயிருக்கிறேன். தங்களுடைய தூக்கத்தைத் தடைபண்ணியதற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" இவை நிற்க.

நாமெல்லோரும் "கோழி கூவினால் பொழுது புலரும் கழுதை கத்தினாலென்னாகும்" என்று பெரியோர் கூறக் கேட்டிருக்கிறோம். நம்முடைய வீரவர்மன் தலைநகரில் அக்கழுதை யினத்தைச் சேர்ந்த் குதிரைகளின் கனைப்பினால் பொழுது புலர்ந்தது. ஏனெனில் பொழுது புலரப்புலர அக்குதிரைகளின் கனைப்பும் அதிகரித்துக்கொண்டே வந்தது. அக்குதிரைகளைப்போஷித்துவரும் வேலைக்காரர்கள் அவைகளை நெருங்கி சமாதானப்படுத்துவோமென்று நினைப்பதற்குக்கூட இடமில்லாமல் அவைகள் நிலைப்பில்லாமல் துள்ளிக் குதித்துக்கொண்டும், கனைத்துக்கொண்டும் பார்ப்பதற்குப் பயங்கரமான வெருண்ட விழிகளோடும் விளங்கின. இவையெல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருந்த வைத்தியர் அச்சிப்பாயை

நோக்கி "நீ நேற்றிரவு நடந்த விஷயங்களொன்றையும் வெளியிடாமலிருக்க வேண்டும் மேலும் அவைகளைப்பற்றி ஏதாவது கேள்விகள் வரும்பொழுது உனக்கு வயிற்றுவலி வந்ததென்றாவது அதை நான் குணப்படுத்தினேனென்றாவது சொல்லாமல் உன்னுடைய நாழிகை முழுதும் எப்பொழுதும்போல் பாராக்கொடுத்துக்கொண்டிருந்ததைத்தவிர வேறு விசேஷமொன்றும் எனக்குத் தெரிந்ததாகவில்லையென்றும் சொல்லவேண்டும். அப்படிச்செய்யும் பக்ஷத்தில் நீ சொல்லுகிறபடி எனக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்கும் யாவுஞ் செய்தவனாவாய் என்றார்.

இவ்வாறு அச்சிப்பாயினிடஞ் சொல்லிவிட்டு தன் படுக்கையை விட்டெழுந்து குதிரை லாயத்தை நோக்கிச்சென்றார். அங்கு அரசரும் வந்து நின்றுகொண்டு வைத்தியருக்கு ஆள் அனுப்பப்போகுஞ் சமயத்தில் வைத்தியரே அங்குபோய்ச் சேர்ந்தார். அவரைக்கண்டதும் மிக்க ஆவலோடு தன் குமாரத்தியின் தேகஸ்திதியை விசாரித்துவிட்டு என்ன வைத்தியரே இப்பொழுது சண்டை நடக்கும் மும்முரம இங்கு குதிரைகள் வெருண்டு கனைப்பதும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயில்லையே. பைத்தியம் பிடித்ததுபோல் கனைக்கும் இக்குதிரைகளின் மீதேறி போர்க்களத்தில் யுத்தம்புரிந்தால் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியதுபோலும் தன் கழுத்துக்கே கத்திவைத்துக்கொண்டதுபோலுமாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. நீர் சொல்வதைப் பார்த்தால் நானுங்கூட இன்று போர்க்களத்தை நோக்கிச் செல்லலாம்போலிருக்கிறது. இக்கனைப்பிற்குக் காரணம் என்னவென்று பாரும்" என்று அரசர் சொல்லவே அதன் குறிப்பையறிந்துகொண்டு அரசர் ஏறிச்செல்லும் குதிரை இருக்குமிடத்தை நோக்கிச்சென்று அங்கு பார்க்கையில், எப்பொழுதும் தன் எஜமானனைக் கண்டால் மிக்க ஆனந்தத்துடன் வரவேற்பதுபோல் தன் முகத்தை நீட்டி, வாலையாட்டிக்கொண்டமைதியாயிருக்கும் அக்குதிரை அரசரையும் வைத்தியரையுங்கண்டதும், பைத்தியம்பிடித்தபெண் தன் புருஷனையும் மாந்திரீகனையுங் காணுமிடத்து எவ்வாறு ஆர்ப்பாட்டஞ் செய்வாளோ அவ்வாறு மாறிமாறித் தன் கால்களைத் தூக்கியெறிந்துகொண்டு வயிற்றுவலிக்காரன் துடிப்பதுபோல துடித்துக்கொண்டிருந்தது.

இன்னும்வரும்.

S. Kasthuri Iyengar,
Schoolmaster.



# Music.

## INDEX VOL—I.

## ஸங்கீதம்

## முதலாவது தொகுதியின் அட்டவணை.


| விவரம். | | | பக்கம். |
|---|---|---|---|
| I. இந்து ஸங்கீதம் | ... | ... | 1—4, 17—20, 33—36, 49—52, 65—68, 81—84, 97—100, 113—116, 129—132, 145—148, 161—164, 177—180, |

II. கீர்த்தனைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீஸுப்ரமண்யாய | ... | ... | 6—10 |
| 2 | சேதுலார | ... | ... | 23—27 |
| 3 | மனஸாவிஷய | ... | ... | 39—42 |
| 4 | ஸ்ரீரெகுவர | ... | ... | 43—44, 55—56 |
| 5 | சக்கனிராஜமார்க்கமு | ... | ... | 57—60, 71—72 |
| 6 | மருகேலரா | ... | ... | 73—76 |
| 7 | கொனியாடினநாபை | ... | ... | 87—92, 103—104 |
| 8 | துளஸீபில்வ | ... | ... | 105—108 |
| 9 | மரச்சேவாடனு | ... | ... | 119—122 |
| 10 | தல்லிதண்ட்ருலு | ... | ... | 123—124, 135—136 |
| 11 | எவருன்னாரு | ... | ... | 137—140 |
| 12 | எப்புடுக்ருபா | ... | ... | 151—154 |
| 13 | என்னாடு தயவச்சுனோ | ... | ... | 155—156, 167 |
| 14 | ராமாஇக | ... | ... | 168—172 |
| 15 | இதிபோயமா | ... | ... | 184—188 |

## III. இராகலக்ஷணம்.


| | | |
|---|---|---|
| 1 | நாட்டை | 12 |
| 2 | கௌளை | 13 |
| 3 | வராளி | 14 |
| 4 | ஆரபி | 15—16 |
| 5 | ஸ்ரீராகம் | 28 |
| 6 | சங்கராபரணம் | 29 |
| 7 | பைரவி | 31—32, 43 |
| 8 | தோடி | 46—47 |
| 9 | காம்போஜி | 48—61, 62 |
| 10 | நாட்டக்குரஞ்சி | 63—64 |
| 11 | ஸஹானா | 77 |
| 12 | முகாரி | 78—79 |
| 13 | மாயாமாளவகௌளை | 80 |
| 14 | பிலஹரி | 93—94 |
| 15 | கேதாரம் | 95—96 |
| 16 | ஆனந்தபைரவி | 109—110 |
| 17 | ஸ்ரீரஞ்சனி | 111 |
| 18 | தன்யாசி | 112, 125 |
| 19 | மாளவஸ்ரீ | 126 |
| 20 | ஸாவேரி | 127—128 |
| 21 | கேதாரகௌளை | 141—142 |
| 22 | ஸாம | 143—144 |
| 23 | பேகட | 157 |
| 24 | எருகலகாம்போஜி | 158 |
| 25 | மோஹனம் | 159—160 |
| 26 | பூர்ணசந்திரிகா | 173 |
| 27 | பூபாலம் | 174 |
| 28 | வேகவாஹினி | 175—176 |
| 29 | மணிரங்கு | 189 |
| 30 | சுத்ததன்யாசி | 190 |
| 31 | மத்யமாவதி | 191—192 |


# நமது சந்தா நேயர்களுக்கு

## ஓர் விக்ஞாபனம்.

சென்ற ஜூலை மீ முதல் நமது பத்திரிகைக்கு சேர்ந்திருக்கிற சந்தாதார்களுக்கு நாளது ஜூன் மீ த்தோடு ஒரு வருஷம் முடிவாகின்றமையால் அடுத்த வருஷ சந்தாக்காலமான ஜூலை மீ முதல் பத்திரிகை அனுப்ப வேண்டியதற்காக அதன் சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பவாவது, அல்லது பத்திரிகையை வி. பி. யிலனுப்பும்படிக்கு ஒரு ஆர்டர் அனுப்பும்படிக்காவது கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஏனெனில் சில சந்தா நேயர்களின் முன் ஆர்டரை நம்பி வி. பி. யில் அனுப்பிய பத்திரிகைகளை தேவையில்லையென்று மறுதலித்துவிட்டதினிமித்தம் அனாவசியமான தபால் செலவு வகையறா நஷ்டத்திற்கு உட்படவேண்டியதாயிற்று. ஆகலின் இப்பத்திரிகை நீடித்தகாலம் நடைபெறுமாறு அபிமானிக்கும் நமது சங்கீத நேயர்களை முன்கூட்டித் தெரிவிக்கும்படி வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

N.B.—வரும் ஜூலை மீ முதல் சமஸ்கிருத சுலோகங்களுக்கும் கீர்த்தனைகளுக்கும் உண்மையான உச்சாரணத்தை தெரிந்துகொள்ளுமாறு தெளிவான அடையாளங்களுடன் வெளியிடப்படும்.

# Sri Gana Vidya Press,

**PERUNGULAM.**

## ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம்.

1. இந்த ஆபீஸில் இங்கிலிஷ், தமிழ், தெலுங்கு, இந்த 3 பாஷைகளில் எல்லாவித ஜாப் அதாவது போஸ்ட் கார்டு, கவர், லெட்டர்பேப்பர் இவைகளில் அலங்காரமான அட்ரஸ்கள், விளம்பரங்கள், கல்யாண பத்திரிகைகள், வவுச்சர், ரசீதுகள் முதலான மற்றும் வக்கீல்களுக்கும், கோர்ட்டுகளுக்கும் வேண்டிய ஸ்டேட்மெண்டு பாரங்கள், பற்று வரவு கணக்கு முதலான எல்லாவித பிரிண்டிங் வேலைகளும் பைபிண்டு வேலைகளும் நேர்த்தியாக வாயிதாப்படி தவறாமல் செய்து கொடுக்கப்படும்.

2. ஆர்டர்கள் போஸ்ட் மூலமாக அனுப்பினாலும் உடனே கவனித்து நடத்தப்படும், ஆனால் சார்ஜு இவ்வளவு யென்று தெரிந்து கொண்ட பின்பு ஆர்டருடன் பாதித்தொகை முன்பணம் அனுப்பாவிடில் ஆர்டர்களை அங்கீகரிக்கப்படமாட்டாது. தபால் சார்ஜ் வகையரா செலவும் அவரவர்கள் சொந்தத்தில் பொறுத்துக்கொள்ளவேண்டும். தயவுசெய்து ஒருமுறை பரீக்ஷித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,

ப்ரோப்ரைட்டர்.



# பி. வரதராஜ் ஆயுர்வேத ஔஷதசாலை

## பரங்கிப்பேட்டை.

(அநேக மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றது.)
(தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.)

**மதனகெம்பீரலேகியம்:—** தாதுவிருத்திக்கு சிறந்த மருந்து. இரத்தத்தை அதிகரிக்கச்செய்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி நீற்றிருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கச்செய்யும் மனோ உற்சாகத்தைத்தரும். 1—சேர் டப்பியின் விலை ரூ. 1—8—0 அரைச்சேர் டப்பியின் விலை அணா 12 வி. பி. செலவு பிரத்தியேகம்.

**லெக்ஷ்மிவிலாச கஸ்தூரிமாத்திரைகள்:—** இது தாம்பூலம் தரிப்பவர்களுக்கு மிகவும் அவசியமான வஸ்துக்களில் ஒன்று. இதை என் கியாட்லாக்கில் சொல்லிய அனுபானப்படி சிறு குழந்தைகளுக்கு சளி, இருமல், காசம், காலரா, இன்னும் பற்பலவியாதிகளுக்கு உபயோகப்படுத்த இன்றியமையாத வஸ்து. பெரியவர்களுக்கு அஜீரணம், மாந்தம், பித்தவாய்வு, வயற்றுவலி, வாய்நாற்றம், சுரம், காலரா, பிளேக், முதலிய வியாதிகளுக்கு கைகண்டது. விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. செலவு பிரத்தியேகம்.

**சர்வபடை சம்ஹாரன்:—** மேகப்படை, சொரியானைப்படை, தடிப்பு, வண்டுகடி, ஓயாத நமச்சலைத்தந்து எவ்விடத்திலும் படரும் சகல படைகள் முதலியவற்றை குணப்படுத்த முதன்மையான அவுஷதம்.
விலை சீசா 1-க்கு அணா 4 வி. பி. செலவு பிரத்தியேகம்.

**சர்வதந்தரோக நிவாரண பரிமளப்பற்பொடி:—** இது பல் சொத்தை பல் அசைதல், ஈர்சரப்பு, பல்கூசுதல், சைத்தியம், வாய்நாற்றம், இவைகளை நீக்கி பற்களை கெட்டிப்படுத்தி, பல் கருக்காமலும் தேயாமலும் காக்கும்.
விலை சீசா 1-க்கு அணா 2 வி. பி. செலவு பிரத்தியேகம்.

**விஷ்ணுபராக்கிரமதிலா:—** இது தலைவலிக்கு சிறந்த மருந்து அநேக வைத்தியர்களால் பரிசோதிக்கப்பெற்று உலகமெங்கும் புகழ்ச்சி பெற்ற சியந்த சஞ்சீவி, தலைவலி, ஒற்றைத்தலைவலி, இடுப்புநோய், சூலை, பிடிப்பு, வீக்கம். இவைகளை குணப்படுத்தும். தேள், பூரான், கடிக்கும்மிகவும் அற்புதமான சஞ்சீவி
விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. செலவு பிரத்தியேகம்.

**கூந்தல்வளரும் பரிமள தேவகாந்திதைலம்:—** அனுதினமும் இத்தயிலத்தைதடவி கூந்தலைவாரி வந்தால், தலைமயிர் உதிர்தல் தீர்ந்து, அதிதீவிரமாய் முளைத்து, கருத்து குழண்டு, நீண்டு, தழைத்து மினுமினுப்பேறி ஓங்கிவளரும் கண் எரிச்சல், கண் சிவப்பு, முதலிய கண்நோய்கள் தீரும்.
விலை சீசா 1-க்கு அணா 6 வி. வி. செலவு பிரத்தியேகம்.

**ஜெகன் மோகன சுகந்த ஸ்நானப் பொடி:—** இப்பரிமள மிகுந்த பொடியை தினமும் ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுவதினால் தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழைநாற்றம், கறப்பான், வெடிப்பு, சரீரவரக்ஷி இவைகளைப்போக்கி நல்ல வாசனையும், காந்தியும், லக்ஷ்மிகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். விலை டப்பி 1-க்கு அணா 6 வி. பி. செலவு பிரத்தியேகம்.

விலாசம்:— பி. வரதராஜ்,
பரங்கிப்பேட்டை தென்னார்க்காடு ஜில்லா.

# நம்பிக்கையுள்ளது.

ஒன்றை நம்புவதென்றால் தகுந்த ஆதாரம் வேண்டும். எங்கள் வைத்தியசாலை 35 வருஷத்துக்கு முன் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அங்கே பிரபலமாய் செய்யப்படுகிற மருந்து ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள். இம்மருந்தின் குணமகத்துவத்தால் இந்தியாவில் உள்ள முக்கிய பட்டணங்களிலெல்லாம் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வைத்தியசாலையில் சாஸ்திர சம்பன்னர்களும், வித்தியா பட்டம் பெற்றவர்களும், அநேக குமாஸ்தாக்களும் வேலைக்காரர்களுமாக நூற்றுக்கணக்காக அமர்ந்திருக்கிறார்கள். 18 பாஷையில் வியாபாரம் நடைபெறுகிறது. விலாசத்தைத் தெரிவிப்போருக்கு கியாட்லாக் இனம்.

வைத்திய சாஸ்திரி,
**மணிசங்கர் கோவிந்தஜி**
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே மதராஸ்.

# ஜாதக ப்ரகாசிகை.

## இதுவரை வெளிவராத ஓர் அருமையான ஜோதிட நூல்

ஜோதிட சாஸ்திரிகளின் உதவியை விரும்பாமலே ஜோதிடத்தில் சிறிதும் பழக்கமில்லாத ஒவ்வொருவரும் தங்கள் ஜாதகத்தின்படிக்கு நடக்கப்போகிற நன்மை தீமைப்பலன்களை தெளிவாகவும், சுலுவாகவும் சுதாவில் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளது.

1. *இதை எழுதுவதில் பாராசரஹோரா, ப்ரஹத்ஜாதகம் முதலிய பல முக்கியமான ஹிந்துசாஸ்திரங்களையும், பல ஆங்கிலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளை ஆதாரமாகக்கொண்டும், கிரந்தகர்த்தாவின் ஸ்வானுபவத்தைக்கொண்டும் எழுதப்பட்டிருப்பதால் அதிற்கண்டபடி பலன்கள் தவறுமல் நடக்குமென்று திட்டமாகச்சொல்லலாம்.*

2. *இந்நூல் இரண்டு பாகங்களாகவும், ஒவ்வொன்றிலும் பல அத்தியாயங்களாகவும் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய முக்கிய விஷயங்களாவன:— (1) இராசிகளின் குணங்கள் (2) கிரகங்களின் குணங்கள் (3) கிரகங்கள் ஒன்றுக்கொன்று பார்ப்பதினாலுண்டாகும் பலன்கள் (4) லக்ன முதலாக 12 பாவங்களிலும் தனித்தனியே கிரகங்கள் நின்ற பலன் (5) ஜாதகம் கணிக்கும் விதம் (6) தசாபகாரம் பிரித்துப் பலன் சொல்லவேண்டியதற்கு உதாரணமாக சில ஜாதக சக்கரங்கள் (7) ஆங்கிலேய சாஸ்திரப்படிக்கு டைரக்ஷன், டிரான்ஸிட் இவைகளைக்கொண்டு பலன் சொல்லவேண்டியதற்காக உதாரணமாக சில ஜாதக சக்கரங்களும், பலன்களும் (8) ஜாதகபலனுக்கு அவசியமான உலகத்தின் பலான இடங்களுக்குரிய அக்ஷாம்சம், ரேகாம்சம், கிராந்திமண்டலம் இவைகளடங்கியுள்ள அட்டவணைகளும், முன் 60 வருஷங்களுக்கு தமிழ்மாதம் 1-உக்குச்சரியான இங்கிலிஷ் வருஷம் மாதம் தெய்திகளடங்கிய அட்டவணைகள் முதலியனவும் அடங்கியுள்ளன.*

*கிளேஸ்காகிதத்தில் ப்ரிண்டுசெய்து பூராகாலிகோ பைண்டுள்ளது*

விலை ரூ. 1—8—0.

*தபால் சார்ஜ் பிரத்தியேகம்*

*அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.*

ஸ்ரீ கான வித்யா பிரஸ், பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

# உங்கள் ஜாதகபலஃனத் தெரிந்துகொள்ளவிரும்புகிறீர்களா?

விருப்பமுண்டாகில் இதனடியிற்கண்ட சார்ஜை முன்பணமாக அனுப்பி பலஃன விவரமாகத்தெரிந்துகொண்டு திருப்தியடையுங்கள்! விஷயங்களை மிகவும் சிரத்தையெடுத்துக் கண்டுபிடித்துப் பலன்கள் எழுதியனுப்பப்படும். ஆர்டருடன் ஜாதகன் ஆண் அல்லது பெண், பிறந்த இடம், வருஷமாதம் தேய்தி இத்தஃனமணி அல்லது பகல் இரவு நாழிகையும் தவறுமல் எழுதியனுப்பவேண்டும். ஜாதகமில்லையாகில் ப்ரச்னத்தின்பேரிலும் பலன் எழுதியனுப்பலாகும், ஒவ்வோரு ஜாதகத்திற்கும் கிரகஸ்புடம், பாவஸ்புடஞ்செய்தும் ஹிந்து, ஆங்கலேய சாஸ்திரங்களையனுசரித்தும் பலன் சொல்லப்படுவதால் பலன்கள் அனுபவத்திற்கு சரியாகவருமென்று சொல்லுவது அனுவசியம். தயவுசெய்து ஓர் முறை பரீக்ஷித்துப்பாருங்கள்.

*சார்ஜின் விவரம்.*

| | | |
|---|---|---|
| புத்திரபாவத்திற்கு | ... | ரூ 5–0–0 |
| களத்திரபாவத்திற்கு | ... | ரூ 3–0–0 |
| தொழில் அல்லது யோகபாவத்திற்கு | | ரூ 5–0–0 |
| ஆயுர்பாவத்திற்கு | | ரூ 5–0–0 |
| ஓர் ஜாதகத்தின் ஆயுள்க்காலம் முழுமைக்கும் வருஷ, மாதபலன்கள் எழுதிக்கொடுக்கவேண்டில் | | ரூ 25–0–0 |
| ஒரு ஜாதகத்திற்கு நவகிரகஸ்புடஞ்செய்து எழுதிக்கொடுக்கில் | | ரூ 2–0–0 |
| 12 பாவஸ்புடங்கள் செய்து எழுதிக்கொடுக்கில் | | ரூ 3–0–0 |
| கிரகஸ்புடமும் பாவஸ்புடங்களும் செய்து ஜாதகமெழுதிக்கொடுக்க | | ரூ 4–0–0 |

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

---

V. ஸ்ரீனிவாஸய்யங்கார்,
பெருங்குளம், திருநெல்வேலி ஜில்லா.

161294
NRm211,N12